# தாய்வீடு

236

ISSN 2369-3657

THAIVEEDU | NOVEMBER | 2026

தாய்வீடு | நவம்பர் | 2026

## திருகோணமலை மாநாடும் ஈழத்தமிழரின் அறவழிப் போராட்டக் கவிதைகளும்

- சி. ரமேஸ்

## பில் காஸ்பி: பெருங்கலைஞனின் வீழ்ச்சி

- வே. தினகரன்

## சர்வதேச நீதியின் கம்பீரக் குரல்: நவநீதம் 'நவி' பிள்ளை

- குமார் புனிதவேல்

ISSN 2369-3657

9 772369 365007


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com

Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770

Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**தொழினுட்ப உதவி**
சாம் டானியல்

**நிர்வாக ஒருங்கிணைப்பு**
சாம்பவி நிரோஷன்

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

## ஒரு தலைமுறையின் குமுறல்!

பிரான்ஸ் நாட்டில் வெடித்துள்ள மாணவர்களின் போராட்டம், ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் உலுக்கியுள்ளது. பாரீஸ் நகரின் தென்கிழக்கேயுள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடமொன்றில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையையும், நிதிப் பற்றாக்குறையையும் சுட்டிக்காட்டி, அந்தப் பள்ளிக்கூட மாணவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள், ஒரு மாதத்துக்குள், பாரீஸ் பெருநகரின் ஏனைய பகுதிகளுக்கும் காட்டுத்தீபோல் பரவி, இப்பொழுது நாடெங்கும் பரந்து வியாபித்து நிற்கிறது.

பொதுப்பள்ளிக்கூடங்களில் நிலவும் உட்கட்டமைப்பு வசதியின்மையையும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினங்களையும் எதிர்த்து பிரான்ஸ் நாட்டின் முக்கிய நகரங்களின் வீதிகளில் இறங்கியுள்ள இளையோரின் இந்த எழுச்சி, இன்று பிரான்சின் எல்லைகளைக் கடந்து பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியுள்ளது. இங்கிலாந்து, ஜேர்மனி, அவுஸ்திரியா, இத்தாலி, போர்த்துக்கல், அல்பேனியா, பெல்ஜியம், ஸ்பெயின், கிரேக்கம், சேர்பியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இதேபோன்ற இளைஞர்களின் தொடர்போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

இதேவேளையில், ஐரோப்பாவுக்கு வெளியே இந்தியாவின் தலைநகரான புது தில்லியிலும் தேர்தல் சீர்கேடுகளைக் கண்டித்தும் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தியும் இளையோர் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அரசு இந்தப் போராட்டங்களை தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், பொதுப் போக்குவரத்து நிலையங்களை மூடியும், இணையச் சேவைகளை முடக்கியும் கடுமையான நடவடிக்கைகளையெடுத்து ஜனநாயகக் குரல்களை நசுக்க முற்படுகிறது. இருந்தபோதும், இந்தப் போராட்டம் தெற்கே கொச்சி நகருக்கும், வடக்கே ஹரியானா மாநிலத்துக்கும் பரவுவதை அரசால் தடுக்க முடியவில்லை. மும்பாய் நகரிலும் இப்போது கணிசமான எண்ணிக்கையிலான மாணவர்கள், ஒருங்கிணைந்த வகையிலே போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இந்தப் போராட்டங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவ அதிக நாட்களெடுக்காது.

உலகளாவிய ரீதியில் வெடித்துள்ள இந்தக் குமுறல், தற்காலச் சமூக அமைப்பில் இளையோர் எதிர்கொள்ளும் கடுமையான உரிமை இழப்பையும், ஏமாற்றத்தையும், தமது எதிர்காலம் பற்றி அவர்கள் கொண்டுள்ள அச்சத்தையுமே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இன்றைய பொருள்முதல்வாத உலகம், ஏற்கனவே பொருளுடையோராக உள்ளவர்களை மட்டுமே மேன்மேலும் வளப்படுத்திக் கொள்வதிலும், அவர்களுக்கான பொருளாதார இலாபங்களிலும் மட்டுமே கண்ணாக இருக்கிறது. பெருந்தனவான்களும், அவர்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளுமே உலகை உரிமை கொண்டாட முடியும் என்ற ஆபத்தான நிலையை நோக்கி உலகம் உருண்டுகொண்டிருக்கிறது. இதனால், சமுதாயத்தின் நாளைய தூண்களாக உருவாகவேண்டிய இளையோர் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டுப் பின்தள்ளப்படுகிறார்கள். தங்களின் எதிர்காலம் குறித்த எந்தவொரு நம்பிக்கையும் இல்லாத சூழலில், அவர்களின் கோபமும் விரக்தியும் தெருக்களில் போராட்டமாக வெடிப்பதில் வியப்பொன்றுமில்லை.

இருந்தபோதும், இந்தப் போராட்டங்களின் விளிம்புகளில் நிகழும் வன்முறைகளும், பொதுச்சொத்துக்களைச் சூறையாடும் சம்பவங்களும், தாம் வாழும் நகரங்களின் வரலாற்றுப் பெருமைமிக்க அடையாளங்களைத் தீக்கிரையாக்கும் ஓர்மமும் ஒரு பேராபத்தை நமக்கு உணர்த்துகின்றன. இளைஞர்களின் நியாயமான கோபத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள, சில தீய சக்திகளும் சுயநல அரசியல் குழுக்களும் இந்த இயக்கங்களுக்குள் ஊடுருவியுள்ளன என்பதை உணர முடிகிறது. இது பேராபத்தானது. ஏனெனில், சமூக மாற்றத்துக்காகத் தூய்மையான எண்ணத்துடன் களமிறங்கியுள்ள அப்பாவி இளையோர், தங்களையும் அறியாமல் இந்த வன்முறைச் சுழலுக்குள் இழுக்கப்படும் அவலம் நிதர்சனமாகியுள்ளது. வன்முறையில் நேரடியாக ஈடுபடாவிட்டாலுங்கூட, அவர்களுக்குப் பாடங்கற்பிக்க விளையும் அரசுகளால் அவர்கள் குற்றவாளிகளாக முத்திரை குத்தப்பட்டு, எதிர்காலமே சூனியமாகும் மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொண்டு நிற்கின்றனர் இந்த இளையோர்.

உலகின் அரசியல் தலைமைகள் இந்த நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும். அடக்குமுறைகள் மூலமாகவோ, மழுப்பலான வாக்குறுதிகள் மூலமாகவோ கிளர்ந்தெழுந்துள்ள இளையோரின் குரல்களை நிரந்தரமாக ஒடுக்கிவிட முடியாது.

அடுத்த தலைமுறைக்கு இந்தச் சமூகத்திலும், அதன் எதிர்காலத்திலும் சமமான பங்கும், உரிமையும் இருப்பதை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசுகள் முதன்மைப்படுத்த வேண்டும். தவறினால், இளையோரின் எதிர்காலம் பற்றிய அச்சமும் அவர்களின் போராட்டமும் தொடரும். அந்தப் போராட்டத்தை வன்முறையாக மடைமாற்றுவதற்கான சமூக விரோதிகளின் முயற்சியும் தொடரும்.

தாய்வீடு

# இம்மாதத் தாய்வீட்டில்...


கனடிய இறையாண்மையைப் பாதுகாக்க டொனால்ட் டிரம்புடன் மோதும் மார்க் கார்னி 5
- ரதன்

திலீபனின் சிலையும் தமிழர் அரசியலும் 12
- வீரகத்தி தனபாலசிங்கம்

மொழியின் அரசியல் 4 – II
தனிச்சிங்களச் சட்டத்தின் 70 ஆண்டுகள் 15
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஆபிரிக்க வழித்தோன்றல்களின் தேசமாக எழுந்து நிற்கும் ஜமேக்கா 22
- சிவா முருகுப்பிள்ளை

விமானப் போக்குவரத்தில் ஜி.பி.எஸ்–இனால் ஏற்படும் சவால்கள் 30
- சுப்ரமணியம் ஜெயசீலன்

சமகால வாழ்வில் மருத்துவிச்சி முறையினை மீளளித்தல் 35
- சி. ஜெயசங்கர்

பதின்மவயதினருக்கும் உங்களுக்கும் இடையே மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும் 40
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

பிள்ளைகளின் கல்வியும் காப்புறுதியும் 44
- செந்தூரன் புனிதவேல்

பாவனையும் பராமரிப்பும் 47
- வேலா சுப்பிரமணியம்

சகிப்புத்தன்மையே மானுடத்தின் மேன்மை
சர்வதேச சகிப்புத்தன்மை நாள் 49
- சி. நற்குணலிங்கம்

குடும்ப வரைபடங்களை உருவாக்கிப் பேணுதல் 52
- நடராசா சிறிரஞ்சன்

2026 இலக்கிய நோபல் பரிசு பெற்ற ஆன் கார்சன் 55
- குரு அரவிந்தன்

சர்வதேச நீதியின் கம்பீரக் குரல்: நவநீதம் ‘நவி’ பிள்ளை 58
- குமார் புனிதவேல்

‘அகதிகளின் கதை’ நாடகத்தின் ஒரு விரிவான பார்வை 64
- கேசிகா வரதராசா

ஆணாகி பெண்ணாகி நின்றானவன்... 68
- ஓவியர் ஜீவா

விலகிய பார்வையும் விடுபடும் வெளியும் கார்ல் தியோடோர் டிரேயரின் வசப்படாத சினிமா 71
- சொர்ணவேல்

வண்ணங்களிலும் எழுத்திலும் தடம்பதிக்கும் ஓவியர் ஜீவா 78

ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு இயல் விருது 80
- பொன்னையா விவேகானந்தன்

பில் காஸ்பி:
பெருங்கலைஞனின் வீழ்ச்சி 83
- வே. தினகரன்

சட்டம், ஊடகம், ராஜதந்திரத் தளங்களில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர் 89
- இக்பால் அலி

மறக்க முடியாத ஆளுமை:
சமூக, அரசியற் செயற்பாட்டாளர் சி.அ. யோதிலிங்கம் 94
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை:
காலத்தின் சாட்சியாக வாழ்ந்த ஆளுமை 97
- மா. சித்திவினாயகம்

முதலாம் உலகப் போரில் வீரமரணம் அடைந்த ஈழத்தமிழ் மகன் ரிச்சர்ட் ஐயாத்துரை 98
- வே. விவேகானந்தன்

குடிசை வீட்டில் கம்யூனிஸ்ட் MLA 100
- நெல்லை ஜெயசிங்

மா சேதுங் 50 – 2
மாவோவை உருவாக்கிய சீனா 103
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

மழைக்கண் 110
- பொ. கருணாகரமூர்த்தி

‘மாயோள்’ –
நான்கு தலைமுறைப் பெண்களின் நூற்றாண்டு கால வரலாற்று ஆவணம் 114
- தாமரைச்செல்வி

‘சரசோதிமாலை மூலமும் உரையும்’ நூலாய்வு 117
- சுபாஷினி துவராஜ்

மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு முப்பது ஆண்டுகள் நிறைவும் முன்னோக்கிய நகர்வும் 120
- மல்லியப்புசந்தி திலகர்

தமிழில் மருத்துவ நூல்களின் தோற்றத்துக்கு வழிவகுத்த ஈழத் தமிழ் ஆயுள்வேத நூல்கள் 124
- பால. சிவகடாட்சம்

போருக்குப் பிந்தைய ‘தேசப்பற்று’ இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல் – III
நடைமுறையில் தேசியப் பழமரபு: போட்டிகளும் கருத்து வேறுபாடுகளும் 127
- நீரா விக்கிரமசிங்க
தழுவல் தமிழாக்கம்: ச. சத்யதேவன்

ஊருக்கு ஊர் அபின் கடை
1908 அபின் சட்டமூலமும் காலனித்துவ வருமானத்தின் போதை அரசியலும் 134
- என். சரவணன்

அகத்தின் காலனித்துவமயமாக்கலும் ‘மற்றமை’யின் அரசியலும் 141
- ஈழக்கவி

திருகோணமலை மாநாடும் ஈழத்தமிழரின் அறவழிப் போராட்டக் கவிதைகளும் 143
- சி. ரமேஸ்

குவளைக்கண்ணன் கூட்டுவித்த அருளுறவு 148
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 151
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

குறையொன்றும் இல்லை 156
- பஞ்சகல்யாணி

முலையறுகாதை!
பெண்துயரப் பெருங்கதை – 20 158
- மா. சித்திவினாயகம்

அருங்காட்சியகம் 162
- லெய்லா அபூலேலா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

ரதன்

# கனடிய இறையாண்மையை பாதுகாக்க டொனால்ட் ரம்புடன் மோதும் மார்க் கார்னி

ஜனவரி 2025-இல் ஜஸ்ரின் ரூடோ தனது கனடியப் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். இதற்கு முன்னதாகவே, கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ், ஜஸ்ரின் ரூடோவை உடனடியாகப் பதவி விலகுமாறு தொடர்ச்சியாகக் கடுமையான அரசியல் அழுத்தங்களை வழங்கி வந்தார். ஆளுமைகொண்ட லிபரல் கட்சி யின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள் கட்சி எதிர்ப்புகள் மற்றும் அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் கனடாவைத் தனது '51-வது மாநிலம்' எனக் கேலி செய்து வெளியிட்ட கருத்துக்கள் ஆகியவை, பதவி விலகத் தயங்கிய ஜஸ்டின் ட்ரூடோவை இறுதியாக இராஜினாமா செய்ய வைத்த பிரதான காரணிகளாக அமைந்தன. அக்காலப்பகுதியில், கொன்சர்வேட்டிவ் கட்சிப் பக்கமே மக்கள் அபிப்பிராய வாக்கு வீதம் மிக அதிகமாகக் காணப்பட்டது.

லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கு உதவிப் பிரதமர் உள்ளிட்ட பலர் போட்டியிட்டனர். எனினும் ஒருவர் பெயர் கொன்சவேற்றிவ் கட்சிக்கு அச்சத்தைக் கொடுத்தது. முன்னாள் கனடிய மத்திய வங்கி ஆளுநரும், இங்கிலாந்து மத்திய வங்கியின் ஆளுநருமான மார்க் கார்னி தலைவர் களத்தில் இறங்குகின்றார் என்பதே. அதன் பின்னர் லிபரல் கட்சியின் புதிய தலைவராக அவர் வந்தது மட்டுமல்லாமல் அடுத்த தேர்தலிலும் வெற்றி பெற்றார்.

## மார்க் கார்னியின் பொருளாதாரக் கொள்கைகள்:

மார்க் கார்னி தனது தேர்தல் பிரசாரத்தின்போது முன் வைத்த விடயங்களில் உற்பத்தி விநியோகம், மூலதன உள்வாங்கல், உற்பத்தி திறன் அதிகரிப்பு, மாகாணங்களுக்கிடையிலான சீரான உறவு போன்றவை முக்கியமானவை. மூலதன அதிகரிப்பை மையப்படுத்தி, வளங்கள் குறிப்பாக எண்ணெய், எரிவாயு, அணு சக்தி போன்ற திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதை விரைவுபடுத்தியது.

## மூலதன அதிகரிப்பு:

கனடாவின் முன்னாள் பிரதமர்களான காப்பர், ரூடோஆகியோரது ஆட்சிக்காலங்களுடன் ஒப்பிடும்போது, தற்போதைய பிரதமர் மார்க் காணி தலைமையிலான அரசு மூலதன அதிகரிப்புக்கான முயற்சிகளையும் புதிய பொருளாதாரத் திட்டங்களையும் தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளது. இதன் முதன்மை மைல்கல்லாக, கனடாவின் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்த கனடிய இறையாண்மை செல்வ நிதி (Canadian Sovereign Wealth Fund Model) மாதிரியை மார்க் கார்னி அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, கடந்த செப்டம்பர் மாதம் றொறன் ரோவில் மார்க் காரணி அரசினால் 'கனடா முதலீட்டு உச்சி மாநாடு' (Canada Investment Summit) வெற்றிகரமாக

prasadbatti@gmail.com

நடாத்தப்பட்டது. இம்மாநாட்டில் 30-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற துடன், கனடாவிற்குப் பெருமளவிலான முதலீடுகளை ஈர்த்துத் தருவ தற்கும் இது வழி வகுத்தது. இம்மாநாட்டிற்கு முன்னதாக, ஐக்கிய அரசுக் குடியரசுடன் ஆற்றல்/எரிசக்தித் துறையில் சுமார் 70 பில்லியன் டொலர் களை முதலீடு செய்வதற்கான இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. அத்துடன் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய பிராந்தியங்களுடன் கனடா பரந்த அளவிலான முதலீட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், பன் னாட்டுச் சந்தைகளில் கனடிய நிறுவனங்கள் நேரடியாகத் தொழிற்சா லைகளை நிறுவித் தொழில்துறையை விரிவாக்குவதற்கும் பல்வேறு இருத ரப்பு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

முந்தைய அரசுகளின் அணுகுமுறைகளுடன் ஒப்பிடுகையில், பன்னாட்டு மூலதன ஈர்ப்பிலும் கனடிய தொழில் விரிவாக்கத்திலும் மார்க் கார்னி அரசு மிக தீவிரமாகச் செயற்பட்டுள்ளது. மேலும், கனடாவின் நீண்டகால மூலதனச் சரிவிற்கான அடிப்படை மூலக் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைச் சீரமைக்கும் நோக்கில் மூலதன உபகரணங்கள், மென் பொருள் நுட்பங்கள் மற்றும் நவீன ஆராய்ச்சி-மேம்பாட்டுத் துறைகளில் அரசாங்கத்தின் முதலீடுகளை மார்க் கார்னி அதிகரித்துள்ளார். இத்துடன், கனடாவின் பல்வேறு மாகாணங்களுக்கு இடையே நிலவும் வர்த்தகச் சிக் கல்கள், கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை நீக்கி, ஒருமைப்படுத்தப்பட்ட உள்நாட்டுச் சந்தையை உருவாக்கும் பொருட்டு மாகாண அரசுகளுடன் இணைந்து தீவிர நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்து வருகின்றார்

கனடாவின் Canada Strong Fund திட்டத்தை, 'மேப்பிள் 8' (Maple 8) என்று அழைக்கப்படும் நாட்டின் முதன்மை நிதி கட்டுப்பாட்டு நிறுவனங்களின் கூட்டமைப்புடன் இணைத்து பிரதமர் மார்க் காரணி அரசு செயல்படுத்தி வருகின்றது. ஒன்ராறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேட்டா ஆகிய மாகாணங்களின் ஓய்வூதிய நிதிகள் மற்றும் கனடிய ஓய்வூதியத் திட்ட நிதி (CPP) உள்ளிட்ட நாட்டின் எட்டு மிகப்பெரிய ஓய்வூதிய வைப்பு நிதிகளின் கூட்டமைப்பே 'மேப்பிள் 8' எனப்படுகின்றது. மொத்தமாக 2.7 டிரில்லியன் கனடிய டொலர்கள் பெறுமதியான வைப்பு நிதியை நிர்வகிக்கும் இக்கூட்ட மைப்பை இணைப்பதன் மூலம், கனடிய மத்திய அரசின் கடன் சுமையைக் கணிசமாகக் குறைக்க முடியும் என நம்பப்படுகின்றது.

## பழமைவாத தாராளவாதம்:

மார்க் கார்னியின் பொருளாதாரக் கொள்கையானது Blue Grit என அழைக்கப்படுகின்றது. இதனை பழமைவாத தாராளவாதம் Conservative Liberalism எனக் குறிப்பிடலாம். அரச செலவீனங்களைக் கட்டுப்படுத்தல், வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தல், பொதுச் செலவுகளைக் கட்டுப்படுத்தல், தனியார் சந்தைப்படுத்தல் மற்றும் சந்தையில் அரச தலையீட்டைக் குறைத்தல், சர்வதேச வணிகத்தில் அதிக அக்கறை செலு த்தல், சர்வதேச, உள்நாட்டு வணிகச் சூழலை ஏற்படுத்தல் போன்றவை இக் கொள்கையில் முக்கியமானவை. நிதி நிலைமையில் கவனத்துடன், பொருளாதார தாராளவாதத்தை ஏற்படுத்துவதே இக் கொள்கையின் முக்கியமாகும். தடையற்ற வணிகக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் பெரும் நிறுவனங்களுக்கு உதவி செய்தல் இங்கு முக்கியம். இதனை சாத்தியப்படுத்த மார்க் கார்னி அரசு நிதி நிலைமையை கட்டுக்குள் வைத்திருத்தல், நிதி திட்டமிடல், திட்டமிட்ட தொழில்துறை மாற்றங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகம் போன்றவற்றினூடாக செயல்படுத்திவருகின்றது. இதன் ஒரு பகுதியாக, மார்க் கார்னியின் அரசு இயற்கை வாயு ஏற்றுமதியைக் கணிசமாக அதிகரித்துள்ளதுடன், அதற்கான புதிய பன்னாட்டுச் சந்தைகளையும் உருவாக்கியுள்ளது. இதன் மூலம் கனடாவின் தேசிய வருமானம் அதிகரிப்பதுடன், மூலதனப் பெருக் கமும் சாத்தியமாகின்றது.

> “ பன்னாட்டு மூலதன ஈர்ப்பிலும் கனடிய தொழில் விரிவாக்கத்திலும் மார்க் கானி அரசு மிக தீவிரமாகச் செயற் பட்டுள்ளது. மேலும், கனடாவின் நீண்டகால மூலதனச் சரிவிற்கான அடிப்படை மூலக் காரணி களைக் கண்டறிந்து அவற்றைச் சீரமைக்கும் நோக்கில் மூலதன உபகரணங்கள், மென்பொருள் நுட்பங்கள் மற்றும் நவீன ஆராய்ச்சி-மேம்பாட்டுத் துறைகளில் அரசாங்கத்தின் முதலீடுகளை மார்க் கானி அதிகரித்துள்ளார். ”

## நிதி–பணவியல் மோதல்:

டொனால்ட் டிரம்ப் பெரும் நிறுவனங்களுக்கான வரியைக் குறைத்துள்ளார். மார்க் கார்னி வரிக்குறைப்புக்கு பதிலாக மூலதனக் கொடுப் பனவுகளை நிறுவனங்களுக்கு வழங்குகின்றார். மார்க் கார்னியின் இந்த முறையால் உற்பத்தி அதிகரிப்பு மாற்றங்கள் ஏற்பட நீண்ட காலங்கள் எடுக்கும். ஆனால் ஓர் உறுதியான மாற்றமாகவிருக்கும். அதே சமயம் மார்க் கார்னியின் மத்திய வங்கி அனுபவம் மற்றும் அறிவு ஒரு நிதி-பணவியல் (fiscal-monetary conflict) மோதலைத் தவிர்க்க விரும்புகின்றார். கனடாவின் நிதி நிலைமையை மார்க் கார்னி கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார். இந்த நிலைமை டொனால்ட் டிரம்ப்பின் அமெரிக்காவில் இல்லை.

## வணிக யுத்தம்:

மார்க் கார்னியின் முக்கிய பிரச்சினையாக விருந்த விடயம் கனடா-அமெரிக்கா-மெக்சி க்கோ ஆகிய நாடுகளுக்கிடையிலான வணிக ஒப்பந்தம். அமெரிக்க அதிபர் தொடர்ச்சியாக கனடா அமெரிக்காவை பயன்படுத்துகின்றது. ஏமாற்றுகின்றது போன்ற கடினமான சொற் பிரயோகங்களைப் பாவித்துவந்தார். ஒரு வகை யில் அமெரிக்க மக்களை மட்டுமல்லாமல், உலக மக்களையும் ஒரு மூளைச் சலவை செய்து வந்தார்.

> சர்வதேசரீதியாக டொனால்ட் ரம்ப்யை ஓர் எதிரியாகப் பார்க்கும் எண்ணம் அதிக ரித்துள்ளது. அமெரிக்காவின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கைகள் சர்வதேச நாடுகளுக்கு பயத்தை ஏற்ப டுத்தியுள்ளன. கிறீன்லான்ட் அமெரிக்காவிற்குரியது என வாதிட்ட டொனால்ட் ரம்ப் டென்மார்க்குடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அமெரிக்காவிற்கு வடக்கே கனடாவுடனும், தெற்கே மெக்சிக்கோவுடனும் பகையை வளர்த்துள்ளார்.

2026 ஜனவரி 20-ஆம் நாள் உலக பொருளாதார மையத்தில் மார்க் கார்னி ஆற்றிய உரை அவரை உலகின் ஒரு முக்கிய தலைவராக மாற்றியது. அமெரிக்காவிற்கு மாற்றீடான உலகிற்கு தலைமைவகிக்கக்கூடிய தலைவராக இவரை மாற்றியது. ஏற்கனவே பிரித்தானியா மத்திய வங்கி ஆளுநராகவிருந்தபோது உலக நாடுகளுடன் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் தொடர்பிலிருந்தார். இது மார்க் கார்னிக்கு கனடாவை ஐரோப்பாவை நோக்கி நகரவைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் ஓர் இணை உறுப்பினராக கனடாவை இணைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் பிரேரித்துள்ளார்.

மார்க் கார்னி தன்னை அமெரிக்காவை எதிர்க்கும் ஒரு துணிச்சலானவராக மாற்றிக் கொண்டார். இது அவருக்கும் சர்வதேசத்தில் மட்டுமல்லாமல், கனடாவிலும் அவரது செல்வாக்கு அதிகரித்துள்ளது. பிரிவினை கோரும் குயுபெக், அல்பேட்டா மாகாணங்களின் மக்கள் மத்தியிலும் மார்க் கார்னியின் செல்வாக்கு அதிகமாகவேயுள்ளது. கனடாவின் இறையாண்மையை பாதுகாக்க கூடிய தலைவராக கனடிய மக்கள் மார்க் கார்னியைப் பார்க்கின்றனர்.

மறுபுறத்தில் கனடாவையும், கனடிய மக்களையும் எதிர்க்கும் டொனால்ட் டிரம்ப் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் முயற்சியில் சற்றும் தளராது தொடர்கின்றார். கனடாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடாமல், கனடிய பொருட்களுக்கான சுங்க வரியை அதிகரித்துள்ளார். குறிப்பாக அலுமினியம், இரும்பு போன்றவற்றிக்கான சுங்க வரிகளை அதிகரித்துள்ளார். இதனை விட கனடா-அமெரிக்க வணிகப் போர் பல பொருட்கள் மீதும் சுங்கவரி அதிகரிப்பு, விற்பனைத் தடை எனத் தொடர்கின்றது.

## டொனால்ட் டிரம்பின் பொருளாதாரக் கொள்கை:

டொனால்ட் டிரம்ப் தனது இரண்டாவது ஆட்சியின் பொருளாதாரக் கொள்கையாக முன்வைத்த முக்கிய விடயம் சுங்க வரி அதிகரிப்பு. இதன் மூலம் அவர் இரண்டு விடயங்களைக் கட்டுப்படுத்த முயற்சித்தார். முதலாவது அமெரிக்க நிறுவனங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம், இறக்குமதியாகும் பொருட்களின் உற்பத்தியை அமெரிக்காவினுள்ளே தயாரிக்கச் செய்வதாகும். இது அமெரிக்காவின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும். ஆனால் அமெரிக்க நிறுவனங்கள் பல மூலப்பொருட்கள் மற்றும் கனிமங்களை இறக்குமதி செய்கின்றன என்பதை அவர் கவனிக்கத் தவறினார். இம் மூலப்பொருட்களை அமெரிக்காவில் தயாரிக்கமுடியாது. அடுத்து சிறு தொழில் நிறுவனங்கள் அதிகரித்த சுங்கவரியால் மூடப்படும் நிலைக்கு தள்ளப்படுகின்றது.

இரண்டாவது சுங்க வரி அதிகரிப்பால் உடனடி வருமானம் கிடைக்கின்றது. ஆனால் இந்த வரி அதிகரிப்பால் பாதிக்கப்படும் நாடுகளின் நாணய பெறுமதி குறைகின்றது. இதனால் இறக்குமதிக்கான பெறுமதி குறைகின்றது. அமெரிக்க நிறுவனங்களுக்கு இது லாபகரமானது. முன்னர் 100 டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள், நாணய பெறுமதி இறக்கத்தால் 70 டொலராக குறைகின்றது. எனவே சுங்க வரியை கட்டினாலும் அமெரிக்க நிறுவனங்கள் பாதிப்படைவதில்லை.

சுங்க வரி அதிகரிப்பால் உலக நாடுகளுடன் பகையை டொனால்ட் டிரம்ப் ஏற்படுத்தியுள்ளார். ஈரானுடனான யுத்தத்தில் நேட்டோ நாடுகள் பங்கு பற்ற மறுத்தமை இதற்கான ஒரு உதாரணமாகும். சர்வதேசரீதியாக டொனால்ட் டிரம்ப்யை ஓர் எதிரியாகப் பார்க்கும் எண்ணம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கைகள் சர்வதேச நாடுகளுக்கு பயத்தை ஏற்படுத்தியுள்ளன. கிறீன்லான்ட் அமெரிக்காவிற்குரியது என வாதிட்ட டொனால்ட் டிரம்ப் டென்மார்க்குடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அமெரிக்காவிற்கு வடக்கே கனடாவுடனும், தெற்கே மெக்சிக்கோவுடனும் பகையை வளர்த்துள்ளார். சீனாவின் விநியோகச் சந்தையையும் சங்கிலியையும் உடைக்கும் முயற்சியில் தோல்வியடைந்துள்ளார். ஈரான் யுத்தம் மற்றொரு வியட்நாமாக மாறிவருகின்றது.

## டொனால்ட் டிரம்ப் முன்னால் உள்ள சவால்கள்:

250 வருடங்களுக்கு முன்பாக ஐரோப்பிய தலைவர்கள்-அரசர்கள் செல்வத்தை அதிகாரத்தின் மூலம் அடையலாம் எனக் கருதினர். அவர்களது அப்போதைய பொருளியல் அறிஞர்கள் மானியம், கட்டணங்கள், கப்பம் போன்றவற்றை அறிமுகப்படுத்தினார்கள். இவை முன்பும் இருந்தவை. இன்று டொனால்ட் டிரம்ப்பின் அமெரிக்கா சுங்கவரி அதிகரிப்பு, பொருளாதாரத் தடை, உளவியல் தாக்கங்கள் மூலம் உலகை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. கனடாவை 51-வது மாநிலமாக டொனால்ட் டிரம்ப் குறிப்பிட்டதன் பின்னர் பெரும்பாலான அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள், சமூக வலைத் தளங்கள் போன்றவையும் டொனால்ட் டிரம்ப்பின் கருத்தை பரப்புரை செய்தன. ஒரு சில ஊடகங்கள் ஒரு புறத்தில் டொனால்ட்




டிரம்ப் ஐ எதிர்த்தாலும் மறுபுறத்தில் கனடாவை அமெரிக்காவின் ஓர் அங்கம் என்றே கருதினர்.

மத்திய கிழக்கில் ஈரான் மீதான மோதல்கள் உள்ளிட்ட அமெரிக்காவின் சர்வதேசப் போர்கள், அந்நாட்டின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கடுமையான எதிரொலிகளை ஏற்படுத்தியுள்ளன. வரலாற்று ரீதியாக, சோவியத் யூனியன் காலம் முதலே அமெரிக்க அரசுகளால் முதன்மை எதிரியாகக் கட்டமைக்கப்பட்ட ரஷ்யா மீது கடுமையான சர்வதேசப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டு வந்தன. குறிப்பாக, இந்தியா உள்ளிட்ட நாடுகள் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் மற்றும் டீசல் கொள்முதல் செய்வதைக் கடுமையாகக் கண்டித்து வந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தற்போதைய மத்திய கிழக்கு யுத்த நெருக்கடியினால் தனது கடுமையான வெளியுறவுக் கொள்கை நிலைப்பாட்டிலிருந்து விலகி நிற்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளார். அமெரிக்காவின் தற்போதைய முதன்மை எதிரியான ஈரானின் முக்கிய சர்வதேச கூட்டாளியாக ரஷ்யா திகழும் நிலையிலும், அமெரிக்கா இன்று ரஷ்யாவிடமிருந்து சுமார் 35.8 மில்லியன் பரல் (பீப்பாய்) அளவுக்கு எண்ணெயைக் கொள்முதல் செய்யும் நிலைக்கு வந்துள்ளது. ஜோ பைடனின் ஆட்சிக்காலத்தில் ஒரு கலன் டீசலின் சராசரி விலை 3.50 டொலர்களாக இருந்த நிலையில், தற்போதைய சந்தை நெருக்கடிகளால் அது 6.53 டொலர்கள் வரை கடுமையாக உயர்ந்துள்ளமையே இதற்குக் காரணமாகும். சர்வதேச சந்தையில் எரிபொருள் விலையேற்றம் நிமிடத்திற்கு நிமிடம் ஏற்ற இறக்கங்களைக் கண்டு வரும் சூழலில், ஈரானியப் போரின் பொருளாதாரத் தாக்கம் டொனால்ட் டிரம்பின் கொள்கை நிலைப்பாட்டில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அமெரிக்க அரசாங்கக் கட்டமைப்பு ரஷ்யாவை எதிரியாகக் கருதி வந்தபோதிலும், டொனால்ட் டிரம்ப் தனிப்பட்ட முறையில் விளாடிமிர் புட்டினைத் தனது நண்பராகவே கருதி வந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க அரசியல் கூர்மையாகும்..

ஈரானின் முக்கிய தளமான ஹோர்மஸ் நீரிணை ஒரு சில காலம் மூடப்பட்டிருந்தது. கப்பல்கள் நகர முடியாமல் நங்கூரமிட்டிருந்தன. ஆனால் இன்று முன்னரை விட அதிக எளவு எண்ணெய் நகர்கின்றது. சவூதியில் உள்ள எண்ணெய் குழாய்கள் மூலமும், சிறிய கப்பல்களில் எண்ணெய் ஏற்றப்பட்ட பின்னர் பெரிய கப்பல்களுக்கு மாற்றப்பட்டும் இது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அத்துடன், பல்வேறு நாடுகளுக்கு ஈரானிய முகவர்கள் ஊடாகப் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டு, கப்பல்கள் பாதுகாப்பாக நகர்வதற்கான வழிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இதற்கான செலவு 400 வீதத்துக் அதிகமாகவுள்ளது. எனவே எண்ணெய் விலைக் குறைப்பு என்பது உலகளவில் தற்பொழுது சாத்தியமற்றுள்ளது. அமெரிக்கா ருசியாவிடமிருந்து டீசலைப் பெற்றாலும் இதே நிலைதான் ஏற்படும். இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு டொனால்ட் டிரம்ப் அரசு நிதிவழங்கி கட்டாய விலைக் குறைப்பை ஏற்படுத்தலாம். இன்னமும் சில வாரங்களில் இடைக்கால தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் டொனால்ட் டிரம்ப்பின் குடியரசுக் கட்சி அதிகமான ஆசனங்களைப் பெற்று அமெரிக்க மக்கள் சபையையும், செனட்டையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும். இல்லையேல் அது டொனால்ட் டிரம்ப்-க்கு தனிப்பட்ட ரீதியில் பிரச்சினைகளைக் கொண்டு வரும். அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனநாயகக் கட்சி முயலும். அமெரிக்கா ரஷ்யாவிடமிருந்து டீசலைக் கொள்முதல் செய்தபோதிலும், இக் கூடுதல் செலவீனம் காரணமாகப் பொருளாதார நிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. இந்நிலையினைக் கட்டுப்படுத்த, இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு மானிய நிதி உதவி வழங்கி, கட்டாய விலைக் குறைப்பைச் செய்ய டொனால்ட் டிரம்ப் அரசு முனையலாம். ஏனெனில், இன்னும் சில வாரங்களில் அமெரிக்காவில் முக்கியமான இடைக்காலத் தேர்தல் (Midterm Elections) நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் டொனால்ட் டிரம்பின் குடியரசுக் கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றி, பிரதிநிதிகள் சபையையும் (House of

Representatives) செனட் சபையையும் (Senate) தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது அவசிய மாகும். அவ்வாறு நிகழாவிடின், அது டொனால்ட் டிரம்பிற்குத் தனிப்பட்ட ரீதியில் பாரிய அரசியல் நெருக்கடிகளை உருவாக்கும் என்பதுடன், அவரைக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கான குற்றவியல் தீர்மானங்களை (Impeachment) ஜனநாயகக் கட்சி தீவிரமாக முன்னெடுக்கக் கூடும்

## மார்க் கார்னிக்கான சவால்கள்:

இதே சிக்கல் மார்க் கார்னிக்-குமுண்டு. முதலாவதாக அவர் கியுபெக் மாகாண தேர்தலை எதிர்நோக்கினார். ஆனால் கியுபெக் தேர்தலில் பிரிவினைவாதக் கட்சி பார்ட்டி கியுபெக் 28.02 வீத வாக்குகளுடன் 59 ஆசனங்களைப் பெற்று சிறுபான்மை அரசை அமைக்கின்றது. லிபரல் மற்றும் கொன்சவேற்றிவ் கட்சிகள் 44.89 வீத வாக்குகளைப் பெற்று அதே 59 ஆசனங்களைப் பெற்றுள்ளன. 57.31 வீத வாக்குகள் பிரிவினைக்கு எதிரான கட்சிகள் பெற்றுள்ளன. பிரிவினைக் கட்சி மிகக் குறைவான வாக்குகளைப் பெற்றமைக்கு மார்க் கார்னியின் செல்வாக்கும் ஒரு காரணம். சிறுபான்மை அரசு என்பதனால் பார்ட்டி கியுபெக்கால் உடனடியாக சர்வசனவாக்கெடுப்பை நடத்த முடியாமல் போகும். இது மார்க் கார்னிக்கு கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும்.

ஒக்டோபர் 19 அன்று நடைபெற்ற அல்பேர்ட்டா மாகாணத்தின் பிரிவினை தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சர்வசன வாக்கெடுப்பில், 76 சதவீதமான அல்பேர்ட்டா மக்கள் கனடாவுடன் தொடர்ந்து ஒரு மாகாணமாகவே இணைந்திருப்பதற்குத் தீர்க்கமான ஆதரவை வழங்கிப் பிரிவினையை முற்றாக நிராகரித்துள்ளனர். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் வர்த்தகப் போர்கள், அரசியல் அச்சுறுத்தல்கள் மற்றும் அவர்தம் குடியரசுக் கட்சியினர் இப்பிரிவினைவாதத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து மறைமுக உதவிகளை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும் நாட்டின் ஒருமைப்பாட்டை வெற்றிகரமாகப் பாதுகாத்ததன் மூலம், பிரதமர் மார்க் கார்னி கனடாவின் ஓர் அசைக்க முடியாத, வலிமைமிக்க தேசியத் தலைவராகத் தன் நிலையைத் திண்ணமாகப் பதிவுசெய்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோவோ அல்லது வேறு எவரோ கனடியப் பிரதமராக இருந்திருந்தால் அல்பேர்ட்டா மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்திருக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் நிலவிய சூழலில், இத்தீர்ப்பு மார்க் கார்னியின் ‘ப்ளூ க்ரிட்’ பொருளாதார நல்வழிகாட்டலுக்கும் கனடிய ஐக்கியத்தைக் காக்கும் அவரது ராஜதந்திர நகர்வுகளுக்கும் கிடைத்த பிரமாண்ட அங்கீகாரமாகவே பார்க்கப்படுகின்றது.

எனினும், இவ்வாக்கெடுப்பில் ஒட்டுமொத்தமாகக் கேட்கப்பட்ட பத்து கேள்விகளில் எட்டு கேள்விகளுக்கு 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் 'ஆம்' என ஆதரவாக வாக்களித்துள்ளனர். கனடிய அரசியல் சாசன மாற்றம் பற்றிய உரையாடல்கள், குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்துதல், அவர்களுக்கான நலன்புரிச் சலுகைகளைக் குறைத்தல் மற்றும் ஏனைய மாகாணங்களுடனான உறவுகளில் அல்பேர்ட்டா மாகாண அரசிற்கு அதிக அதிகாரங்களை வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளுக்கே மக்கள் இவ்வாறு ஆதரவு தெரிவித்துள்ளனர். எனவே, பிரிவினைக்கு ஆதரவான 24 சதவீத வாக்காளர்களை வெறும் சிறுபான்மையினராக மட்டும் கருதி எளிதில் கடந்துசென்றுவிட முடியாது; ஏனெனில், வரவிருக்கும் பத்தாண்டுகளில் இச்சதவீதம் 50 சதவீதமாகவோ அல்லது அதற்கும் அதிகமாகவோ உருவெடுக்கும் அபாயம் உண்டு.

கியூபெக் மாகாணத்தைத் தொடர்ந்து, தற்போது அல்பேர்ட்டாவையும் மையப்படுத்தி கனடா ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குமாயின், அது கனடாவிற்கு மட்டுமல்லாது சர்வதேச நாடுகளுக்கும் அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையக்கூடும். அதாவது, மத்திய அரசிற்கும் மாகாண அரசுகளுக்குமான தெளிவான அதிகாரப் பகிர்வினை இது கொண்டிருக்கும். மாகாண அரசுகள் கிட்டத்தட்டத் தனித்துவமான சுயஆட்சி அமைப்புகளாக இயங்கவும்; பொது நிதி, வெளியுறவுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு போன்ற பிரதான விடயங்களை மத்திய அரசு நிர்வகிக்க, உள்நாட்டுப் பாதுகாப்பு, வரி நிர்ணயம் மற்றும் வரி நிர்வாகம் உள்ளிட்ட மற்றைய அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் மாகாண அரசுகளே கையாளும் நிலைக்கு இது மாறக்கூடும். இத்தகைய கட்டமைப்பு நீண்டகால நோக்கில் ஆரோக்கியமானதாகவும் அமையலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில், அல்பேர்ட்டா மக்களின் இத்தீர்ப்பு டொனால்ட் டிரம்பிற்குப் பாரிய பின்னடைவாகவும், மார்க் கார்னிக்கு ராஜதந்திர வெற்றியாகவும் தென்பட்டாலும், எந்தவித ஆயுதப் போராட்டங்களோ இரத்தக் களரிகளோ இன்றி அல்பேர்ட்டா பிரிவினைவாதிகள் தங்கள் அரசியல் சாசன இலக்குகளில் பெருமளவு வெற்றிபெற்றுவிட்டார்கள்; கனடிய மத்திய அரசு தற்காலிகமாகத் தோற்றுவிட்டது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

மார்க் கார்னி அரசியல் ரீதியாக சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் ஒரு சிறந்த தலைவராக கருதப்பட்டாலும், கனடிய பொருளாதாரம் இறங்குமுகமாவேயுள்ளது. இதே நிலைதான் டொனால்ட் டிரம்ப்க்கும் உள்ளது. ஒக்ரோபர் முதல் வாரம் ஸ்ரெல்கோ நிறுவனம் 500 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. ஓகஸ்ட்

2019-இல் ஸ்ரெல்கோ கனடிய மத்திய அரசிடமிருந்து 49.9 மில்லியன் டொலர்களை நிதியாக பெற்றுக் கொண்டது. இது கடனல்ல. எனவே கனடிய மத்திய அரசு இந்த வேலை நீக்கத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இதற்கு பதிலளித்த ஸ்ரெல்க்கோ நிறுவனத்தின் தலைவர் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளார். இங்கு இரண்டு விடயங்கள் முக்கியம் முதலாவது ஸ்ரெல்க்கோவிற்கும் கனடிய மத்திய அரசுக்குமான ஒப்பந்தத்தில் வேலை நீக்கம் செய்ய முடியாது என்ற சரத்து அல்லது விடயம் உள்ளடக்கப்படவில்லை. இரண்டாவது டொனால்ட் டிரம்ப்னால் கனடா மீது ஏற்படுத்தப்பட்டுள்ள இரும்பு பொருட்கள் மீதான அதிக சுங்கவரியின் விளைவு. அதே சமயம் கனடாவில் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் மீது டொனால்ட் டிரம்ப், கனடிய தொழிற்சாலைகளை மூடிவிட்டு அமெரிக்காவிற்கு நகருமாறு கொடுக்கப்படும் அதிக அழுத்தம் மற்றொரு நுண் காரணியாகும்.

அமெரிக்காவிடம் கனடா தஞ்சமடையும் என டொனால்ட் டிரம்ப் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றார். மார்க் கார்னியின் நகர்வுகளால் இன்னமும் சில வருடங்களில் கனடா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதி குறைவடையும். அதே சமயம் கனடிய கனிமங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கும் டொனால்ட் டிரம்ப்ன் முயற்சி தோல்வியடையும். கனடிய கனிமங்கள் சர்வதேச சந்தையை நோக்கி நகரத் தொடங்கிவிட்டது. டொனால்ட் டிரம்ப் கனடாவின் மூலதனத்தை தெற்கு நோக்கி நகர்த்தும் பொழுது, சர்வதேச மூலதனம் கனடாவை நோக்கி நகர்கின்றது.

ஆனால் மார்க் கார்னி, டொனால்ட் டிரம்ப்னால் ஏற்படுத்தப்பட்டுள்ள சுங்க வரி அதிகரிப்பினால் ஏற்படும் வேலை இழப்புக்கள், அமெரிக்காவை நோக்கி நகரும் தொழிற்சாலைகள் போன்றவற்றை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளார். கனடாவின் 75 வீதமான ஏற்றுமதி அமெரிக்காவிற்கே செல்கின்றது. இதற்கான புதிய சந்தைக்கு மாற்றுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். இதனால் அமெரிக்க கனடாவுடனான வர்த்தக ஒப்பந்தங்களை தனக்குச் சாதகமாக்கவே முயலும். இதனை மார்க் கார்னியால் உடனடியாகத் தீர்க்க முடியாது. டொனால்ட் டிரம்பினால் உருவாக்கப்பட்ட யுத்தங்களால் ஏற்படும் எரிபொருள் விலையுர்வு கனடாவில் பணவீக்கத்தை அதிகரித்துள்ளது. ஒரு சாதாரண கனடிய பிரசையின் அன்றாட வாழ்வு பல இன்னல்களை எதிர் நோக்குகின்றது. எரிபொருள் விலையுயர்வின் தாக்கம் உலகெங்கும் எதிரொலிக்கின்றது. குறிப்பாக டொனால்ட் டிரம்ப் இன் அமெரிக்கா தடுமாறுகின்றது.

டொனால்ட் டிரம்பின் நிபந்தனையற்ற இஸ்ரேல் ஆதரவு, வெனிசூலா மீதான ஆக்கிரமிப்பு நிலைப்பாடுகள், ஈரானுடனான போர் என அவரது வெளியுறவுக் கொள்கைகளே அவரது எதிரிகளாக உருவாகியுள்ளன. நோபல் பரிசை நோக்கிய அவரது தவமிருத்தலும் அவரது மதிப்பைக் குறைத்துள்ளது. இன்று அமெரிக்காவின் சில ஊடகங்கள் கனடா உத்தியோகபூர்வமாக ஓர் அணுஆயுத நாடல்ல; எனினும், அணுஆயுதத்தை உற்பத்தி செய்வதற்கான தொழில்முறை, தொழில்நுட்ப மற்றும் மூலப்பொருள் சாத்தியக்கூறுகள் அனைத்தும் கனடாவிடம் நிறைந்துள்ளன என கருத்து வெளியிட்டுள்ளன. இதன் பின்னால் நுண் அரசியல் டொனால்ட் டிரம்பை நோக்கியதாகும்.

### மார்க் கார்னிக்கும் டொனால்ட் டிரம்ப்க்குமான எதிர்காலம்:

கனடியப் பிரதமர் மார்க் கார்னிக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்குமான அரசியல் எதிர்காலத் தீர்மானத்தில் அல்பேர்ட்டா மாகாணச் சர்வசன வாக்கெடுப்பு ஒரு முக்கிய மையப் புள்ளியாக அமைந்தது. இதில் பிரிவினைக்கு எதிராக அல்பேர்ட்டா மக்கள் தீர்ப்பளித்தமையானது, சர்வதேச ரீதியில் மார்க் கார்னிக்கு மிகப்பெரிய ராஜதந்திரப் பெயரையும் செல்வாக்கையும் ஈட்டித் தந்துள்ளது. கடந்த சில நாட்களாக இச்சர்வசன வாக்கெடுப்பில் அமெரிக்காவின் தலையீடுகள் நிலவுவது குறித்துக் கனடியப் பெரும்பான்மை ஊடகங்கள் தங்களது தீவிரக் கவலைகளை வெளியிட்டு வந்தன. அத்துடன், கனடிய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்த முறிவு குறித்துக் கருத்துரைத்த 'நியூஸ்வீக்' சஞ்சிகை, பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய 'பிரெக்சிட்' (Brexit) சம்பவத்துடன் இதனை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்துள்ளது. அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் பலவும் கனடா-அமெரிக்க இணைப்பை அமெரிக்காவிற்கே சாதகமான ஒன்றாகப் பார்க்கும் போக்கு, அல்பேர்ட்டா சர்வசன வாக்கெடுப்பிலும் எதிரொலித்ததைக் காண முடிந்தது.

அல்பேர்ட்டா சர்வசன வாக்கெடுப்பு நிறைவடைந்து இரு வாரங்களில் அமெரிக்காவின் இடைக்காலத் தேர்தல்கள் (Midterm Elections) நடைபெறவுள்ளன. 2024 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்பின் வெற்றி எத்துணை முக்கியமாக இருந்ததோ, அதே போன்று இவ்விடைக்காலத் தேர்தலிலும் டொனால்ட் டிரம்பின் குடியரசுக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் (Senate & House of Representatives) பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது; தவறினால், வரவிருக்கும் இரண்டு ஆண்டுகளில் அவரது அதிபர் பதவிக்கே தீவிர

**அமெரிக்காவிடம் கனடா தஞ்சமடையும் என டொனால்ட் ரம்ப் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றார். மார்க் கானியின் நகர்வுகளால் இன்னமும் சில வருடங்களில் கனடா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பெறுமதி குறைவடையும். அதே சமயம் கனடிய கனிமங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கும் டொனால்ட் ரம்ப்ன் முயற்சி தோல்வியடையும்.**

அரசியல் மற்றும் நாடாளுமன்றச் சிக்கல்கள் உருவாகக் கூடும்.

இன்றைய சூழலில் டொனால்ட் டிரம்ப் ஒரு சர்வதேசத் தலைவர் என்ற நிலையிலிருந்து இறங்கி, ஒரு சண்டியத் தனமான' அரசியல் அணுகுமுறையைக் கொண்டவராகவே சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படுகின்றார். மாறாக, மார்க் கார்னி மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் என்ற தொழில்முறை நிதித்துறை நிபுணத்துவத்திலிருந்து, உலகை ஆரோக்கியமான திசைவழிக்கு மாற்றக்கூடிய கௌரவமிக்க சர்வதேசத் தலைவராகத் தன் பிம்பத்தை உயர்த்தியுள்ளார். மார்க் கார்னி எழுதிய ‘Value(s): Building a Better World for All’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ள கருத்து இங்கு மிகவும் உற்றுநோக்கத்தக்கது: ‘சந்தைகள் இயல்பிலேயே அறமற்றவை; ஆனால், அறநெறிகள் மனிதர்களிடமே உள்ளன. காலப்போக்கில் சமூகங்கள் முக்கியமான பொது நன்மைகளைச் குறைந்த மதிப்பீடும், குறுகிய கால நிதி வருவாய் தரும் தனியார் பொருட்களுக்கு அதிக மதிப்பீடும் அளிக்கும் தவறான போக்கைக் கொண்டுள்ளன’. இன்றைய சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தத்தை இது மிகத் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது.

rathan@thaiveedu.com



வீரகத்தி தனபாலசிங்கம்

# திலீபனின் சிலையும் தமிழர் அரசியலும்

எந்த நேரத்திலும் உயிரைத் துறக்கத் தயாராக ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்திருந்த திலீபன் (இராசையா பார்த்தீபன்) அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் தனதுயிரைத் தியாகம் செய்ததற்காகவே அவருக்கு நினைவேந்தல் செய்யப்படுகிறது. அது அவரது அரசியல் வாழ்வில் ஒரு முரண் நகையாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபன், இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து ஒன்றரை மாதத்துக்கு பிறகு, நேரடியாக இந்திய அரசாங்கத்திடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15-ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். முன்னெடுத்த திலீபன் அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், பதினோராவது நாள் (செப்ரெம்பர் 26) மரணமடைந்தார். இந்த ஆயுதப் போராளி முன்னெடுத்த அறப் போராட்டமும் அவரது தியாகமும் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமான உணர்வுபூர்வமான இடத்தைப் பெற்றுள்ளன. நல்லூரில் அமைந்திருக்கும் திலீபன் நினைவிடத்தில் வருடாந்தம் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வருடத்தைய நினைவேந்தல் நிகழ்வுக்குப் பின்னரான சம்பவங்கள் தமிழ்ப் பகுதிகளில் ஒருவித கொந்தளிப்பான சூழ்நிலையை தோற்றுவித்திருக்கின்றன. செப்ரெம்பர் 15-ஆம் திகதி முதல் 26-ஆம் திகதி வரை நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு மத்தியில் திலீபனின் உருவச்சிலை ஒன்று கொண்டுவந்து வைக்கப்பட்டது.

நினைவேந்தல் நிறைவடைந்த மறுநாளான செப்ரெம்பர் 27 அன்று காலை, யாழ்ப்பாணம் பொலிசார் திலீபனின் சிலையை அங்கிருந்து எடுத்துச் சென்றதை கண்டித்தும் அதை மீண்டும் அந்த இடத்தில் கொண்டு வந்து வைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

> **இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் ஜனநாயக வழிமுறைகளிலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறி உள்நாட்டுப் போரில் பேரழிவுகளைச் சந்தித்த ஒரு நீண்ட சிக்கலான வரலாற்றைக் கொண்டது. இந்த வரலாற்றையும் அதனுடன் பிணைந்திருக்கும் தமிழ் மக்களின் நினைவுகளையும் வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்லாமல், அந்த மக்களின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு விமர்சன ரீதியாகவும் நிதானமாகவும் அணுக வேண்டும்.**

திலீபனின் சிலை அகற்றப்பட்ட சம்பவம் தமிழ் அரசியல் பரப்பில் குறிப்பாக, இலங்கை தமிழரசு கட்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் பெரும் வாதப் பிரதிவாதங்களை மூளவைத்தது. இவ்விரு தரப்பினரும் தங்களது நிலைப்பாடுகளையும் செயற்பாடுகளையும் நியாயப்படுத்துவதற்கு ஏட்டிக்குப் போட்டியாக முன்வைக்கும் கருத்துகளும் குற்றச்சாட்டுகளும் தமிழ் மக்கள் மத்தியில் எந்தவிதமான ஆரோக்கியமான கருத்தாடல்களுக்கும் உதவப்போவதில்லை என்பதால், அவற்றை ஆராய்வதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. மாறாக, சிலை அகற்றப்பட்டதற்கு பின்னர் தமிழ்ப் பகுதிகளில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளிலிருந்து தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டிய சில விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவது முக்கியமானது.

இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் ஜனநாயக வழிமுறைகளிலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறி உள்நாட்டுப் போரில் பேரழிவுகளைச் சந்தித்த ஒரு நீண்ட சிக்கலான வரலாற்றைக் கொண்டது. இந்த வரலாற்றையும் அதனுடன் பிணைந்திருக்கும் தமிழ் மக்களின் நினைவுகளையும் வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்லாமல், அந்த மக்களின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு விமர்சன ரீதியாகவும் நிதானமாகவும் அணுக வேண்டும்.

சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களினால் முன்னெடுக்கப்பட்ட அமைதி வழிப் போராட்டங்கள் (சத்தியாக்கிரகம், ஒப்பந்தங்கள் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறைகள்) தொடர்ச்சியாக முறியடிக்கப்பட்டதன் விளைவாகவும் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத வன்செயல்கள் மற்றும் பாகுபாடான கொள்கைகள் காரணமாகவும் தமிழ் இளைஞர்கள் ஜனநாயக வழிமுறைகள் மீதான நம்பிக்கையை இழந்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு வன்முறைப் போராட்டமே ஒரே வழி என்ற சிந்தனையுடன் 1970-களின் பிற்பகுதியில் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவாகத் தொடங்கின. 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு அத்தகைய இயக்கங்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இலங்கை அரசாங்கங்களும் தென்னிலங்கை சமுதாயமும் இவ்வாயுதப் போராட்டத்தை நாட்டின் சுயாதிபத்தியத்துக்கும் பாதுகாப்புக்கும் எதிரான 'பயங்கரவாதமா'கவே வகைப்படுத்தின. இதனால் அரசுக்கும் ஆயுத இயக்கங்களுக்கும் இடையிலான மோதல் மூன்று தசாப்தகாலப் போராக நீடித்தது. ஆயுதப் போராட்டம் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் அவலங்கள் நிறைந்த ஒரு அத்தியாயம்.

இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தங்களது உயிர்களைத் தியாகம் செய்தனர். எனவே, அவர்களை நினைவுகூருவது என்பது தமிழ் மக்களுக்கு ஒரு தவிர்க்க முடியாத மனிதக் கடமையாகவும் உளவியல் ரீதியான ஆறுதலாகவும் இருக்கிறது.

போராளி இயக்கங்களின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் மீது பல்வேறு வகையான விமர்சனங்கள் இருந்தாலும், அவற்றின் போராட்டங்களில் பங்கேற்று இறந்துபோன சொந்தங்களை நினைவுகூரும் உரிமை என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகவே சர்வதேச அளவில் பார்க்கப்படுகிறது.

ஆனால், நினைவேந்தல் குறித்து இனப்பிளவின் இருமருங்கிலும் இருக்கும் சமூகங்களுக்கு இடையில் நிலவும் இரு வேறுபட்ட கண்ணோட்டங்கள் இலங்கை அரசியலில் பெரிய சவாலாக இருந்து வருகின்றன.

தங்களின் உரிமைகளுக்காகவும் பாதுகாப்புக்காகவும் உயிரைக் கொடுத்த தியாகிகளாக போராளிகளை தமிழ்ச் சமுதாயம் பார்க்கின்ற அதேவேளை, நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்க முயன்ற பயங்கரவாதிகள் என்று அவர்களை தென்னிலங்கைச் சமுதாயம் பார்க்கிறது.

இழப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் கூட்டுத் துக்கத்தை வெளிப்படுத்துவதற்கும் ஒரு வழிமுறையாக நினைவேந்தலை தமிழ்ச் சமுதாயம் பார்க்கின்ற அதேவேளை, தென்னிலங்கைச் சமுதாயம் அதை ஆயுதப் போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கும், தாங்கள் பயங்கரவாதிகளாக நோக்குபவர்களைப் போற்றுவதற்கும் முன்னெடுக்கப்படும் முயற்சியாகப் பார்க்கிறது.

இந்த கண்ணோட்ட வேறுபாடே, போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரிய தடையாக இருந்துவருகிறது. இறந்தவர்களுக்கு நினைவேந்தல் செய்வதை அரசும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையினரும் தடையின்றி அனுமதிப்பது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதாக அமையும்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், அதற்கு வித்திட்ட அடிப்படை அரசியல் பிரச்சினைகளும் உரிமைகள் சார்ந்த கோரிக்கைகளும் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன

என்பதை, அரசும் தென்னிலங்கைச் சமுதாயமும் நிதான மாக உணர வேண்டும். ஆனால், அதற்கான அறிகுறிகளை போர் முடிவுக்கு வந்து 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும்கூட, காணமுடியவில்லை.

சுருக்கமாகக் கூறுவதானால், ஆயுதப் போராட்டத்தின் போக் கையும் அதன் வன்முறையையும் அரசியல் ரீதியாகவும் வர லாற்று ரீதியாகவும் பல்வேறு கோணங்களில் மதிப்பிட முடிந் தாலும், அதில் உயிரிழந்த தங்களின் சொந்தங்களை நினைவு கூருவதற்கான தமிழ் மக்களின் உரிமை என்பது அரசிய லுக்கு அப்பாற்பட்ட ஒரு மானுடத் தேவையாகும். அதனைப் புரிந்து கொண்டு மதிப்பளிப்பதன் மூலமே, இலங்கையில் உண்மையான பரஸ்பர நம்பிக்கையையும் நிலையான சமா தானத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

ஆனால், நினைவேந்தல் மாத்திரம் தமிழ் மக்களுக்கு ஒரு போதும் அரசியல் விமோசனத்தையோ முழுமையான அரசியல் தீர்வையோ தரப்போவதில்லை. நினைவேந்தல் என்பது ஒரு சமூகத்தின் போராட்ட வரலாற்று அடையாளத்தையும் நீதிக் கான தாகத்தையும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஒரு 'கருவி' மாத்திரமே தவிர, அதுவே இறுதி இலக்கோ அரசியல் முடிவோ அல்ல.

கடந்த கால இழப்புக்களை நினைவுகூருவது எவ்வளவு முக் கியமோ எதிர்காலத்துக்கான அரசியல் இலக்குகளை வகுப் பதும் அதேயளவுக்கு முக்கியமானதாகும். உணர்ச்சிபூர்வ மான நிகழ்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை, சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழலுக்கு பொருத்தமான முறை யில் நடைமுறைச் சாத்தியமான தந்திரோபாயங்களை வகுப் பதிலும் தமிழர்கள் காட்டவேண்டும்.

நினைவேந்தல் அரசியலைத் தாண்டி தமிழர்கள் தங்களின் விமோசனத்தை நோக்கி நகர்வதில் அக்கறை காட்ட வேண் டும். பழைய நினைவுகளில் மாத்திரம் மூழ்கியிருக்கும் ஒரு சமூகம் வரலாற்றைப் போற்றலாமே தவிர, புதிய வரலாற் றைப் படைக்கமுடியாது. இறந்தவர்களை நினைவுகூருவதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமை ஒரு அடிப்படை மனித உரி மையாகும். ஆனால், தமிழர்களின் ஒட்டுமொத்த அரசியல் போராட்டமும் வெறும் நினைவேந்தல் அடையாள அரசிய லுக்குள் மாத்திரம் முடங்கி விடாமல், நடைமுறைச் சாத்தி யமான கொள்கை சார்ந்த அரசியல் நகர்வுகளுடன் இணைக் கப்பட வேண்டியது அவசியமாகும்.

போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய காலப்பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை புதிய சூழ்நிலைகளுக்கு பொருத்தமான முறையிலும் கடந்தகாலப் போராட்டங்களின் அனுபவங்களின் மூலமாகப் பெற்ற படிப் பினைகளின் அடிப்படையிலும் அடுத்த கட்டத்துக்கு நகர்த் துவதற்கான அரசியல் முதிர்ச்சியும் விவேகமும் இல்லாத தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடந்த காலப் போராட்டங்களின் தியாகங்களினதும் அழிவுகளினதும் நினைவு களுடன் மாத்திரம் தமிழ் மக்களைப் பிணைத்து வைத்திருப் பதில் கவனத்தைச் செலுத்தி தங்களது இயலாமையை மறைக்க முயற்சிக்கிறார்கள்.

திலீபனின் சிலை அகற்றப்பட்டதை தொடர்ந்து வடக்கு, கிழக் கில் இடம்பெற்றுவரும் போராட்டங்களும் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான பரஸ்பர குற்றச்சாட்டுகளும் தற்போதைய தமிழர் அரசியலின் ஆழமான கட்டமைப்பு நெருக்கடிகளைப் பிரதி பலிக்கின்றன.

போரின் முடிவுக்கு பிறகு தமிழ் மக்களுக்கு தீர்க்கமான அர சியல் வழிகாட்டலை வழங்கத் தவறிய தமிழ்க் கட்சிகள் நினைவுகூரல் நிகழ்வுகளைத் தங்களின் பிரதானமான அரசி யல் நிகழ்ச்சித் திட்டமாகவும் மக்களை உணர்ச்சிவசப்படுத்தி வாக்குகளைப் பெறுவதற்கான வழிமுறையாகவும் மாற்றியி ருக்கின்றன. தாங்கள் போற்றுகின்ற திலீபனின் தியாகத் தையே தங்களது செயற்பாடுகள் கொச்சைப்படுத்துகின்றன என்பதை இந்த கட்சிகள் உணர்வதாக இல்லை.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மத்தியிலான தன்னகம் பாவப் போட்டியின் விளைவாக தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக, 'வந்தவர் போன வர்' எல்லாம் தமிழ் மக்களின் குரலாக தங்களை தான்தோன் றித்தனமாக அடையாளப்படுத்துகின்ற மிகவும் கவலைக் குரிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திலீபனின் சிலை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மூண்டிருக் கும் சர்ச்சை தமிழர்களின் அரசியல் அல்லது சமூக நகர்வுக ளுக்கு எந்தவிதமான நேர்மறையான பங்களிப்பையும் வழங் கப்போவதில்லை.

நினைவேந்தல் என்ற நிகழ்வின் புனிதமும் தூய்மையும் வெறும் அரசியல் நாடகமாக மாற்றப்பட்டிருக்கிறது. இத்தகைய வெற்றுச் சர்ச்சைகளும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளும் தமி ழர்களின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கோ வாழ் வாதார மேம்பாட்டுக்கோ எந்தவிதமான பயனையும் தரப்போவ தில்லை.

தமிழ்ச் சமூகத்தைக் கடந்த கால உணர்ச்சிகளுக்குள் முடக் கிவைத்து நிகழ்கால உரிமைகளுக்கான முறையான போராட் டப் பாதையிலிருந்து திசைதிருப்பும் ஒரு பயனற்ற வேலை யாகவே இது எஞ்சுகிறது. தலைமைத்துவ வெற்றிடத்தையும் உண்மையான மக்கள் நலன் சார்ந்த கொள்கைகள் மற்றும் செயற்றிட்டங்கள் இன்மையையும் மறைப்பதற்காகவே இத் தகைய உணர்ச்சிபூர்வமான சர்ச்சைகள் முன்னிலைப்படுத் தப்படுகின்றன. இது தமிழர்களின் இன்றைய அரசியல் வறு மையையே வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

தமிழர்களின் அரசியல் எதிர்ப்பியக்கம் நினைவேந்தல் மற் றும் குறியீட்டு அரசியல் சார்ந்ததாக மாத்திரமே சுருங்கு மானால், முக்கியமான அரசியல் இலக்குகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு நினைவேந்தல் உரிமையை மீட்டெடுப்பதே ஒரே அரசியலாக மாறும் ஆபத்து இருக்கிறது.

ஒரு அரசியல் இயக்கம் வெறும் உணர்ச்சிகளை மாத்திரமே நம்பி இயங்கும்போது அது நீண்டகால மூலோபாய ரீதியி லான அரசியல் நகர்வுகளைச் செய்ய முடியாமல் முடங்கிவிடும்.

Thanabalasingham.V@thaiveedu.com

## மொழியின் அரசியல் : 4 – *ii*

# தனிச்சிங்களச் சட்டத்தின்

# ஆண்டுகள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

tg.theeban@gmail.com

**“செல்வநாயகத்தின் மொழிக் கோரிக்கைகளும், தமிழ் எதிர்ப்பு என்பது வெறும் சிங்கள எதிர்ப்புதான் என்ற கூற்றைச் சிக்கலாக்கு கின்றன. தமிழரசுக் கட்சி சிங்களத்தின் உயர்வை ஏற்றுக்கொண்டது, ஆனால் தமிழுக்கு சமமான அங்கீகாரத்தையும் பேச்சு வார்த்தைகளின் மூலம் கணிசமான அங்கீகாரத்தையும் நிர்வாகப் பயன்பாட்டையும் கோரியது. இந்த வேறுபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. எதிர்ப்பு, சிங்களம் அரசாங்கத்தின் மொழியாக இருப்பதை நோக்கியதாக இல்லாமல், தனிமொழி அந்தஸ்தை நோக்கியதாகவே இருந்தது.”**

### தமிழ் அரசியல் எதிர்ப்பின் வடிவமாக அகிம்சை:

காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கையின் அரசியல் வரலாற்றில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார். ஏனெனில், அரசியல மைப்புச் சிறுபான்மை அரசியலின் சாத்தியக்கூறுகளையும் அதன் பலவீனங்களை யும் அவரது அரசியல் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. பயிற்சிபெற்ற ஒரு வழக்கறி ஞராகவும், புகழ்பெற்ற ஒரு கண்டிப்பான அரசியல்வாதியாகவும் இருந்த அவர், ஆரம்பத்தில் தமிழ் வாக்காளர்களுக்கு அரசிலிருந்து வெளியேறும் வழியை வழங்க வில்லை. மாறாக, அதன் கட்டமைப்பை மாற்றுவதற்கான ஒரு திட்டத்தையே அவர் களுக்கு வழங்கினார். செல்வநாயகம் குறித்த வில்சனின் ஆய்வுகள், கூட்டாட்சி, நாடாளுமன்ற நடவடிக்கை, பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் அகிம்சை வழியிலான அணிதிரட்டல் ஆகியவற்றில் அவரது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வலியுறுத்துகின்றன (வில்சன், 1988, 2000). 1950-களின் பிற்பகு தியைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள, இந்த அரசியலமைப்பு வாதத்தை, பிற் காலப் பிரிவினைவாத அரசியலுக்கான ஒரு மறைப்பாகக் கருதாமல், தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

செல்வநாயகத்தின் கூட்டாட்சிவாதத்தின் தர்க்கம், மக்கள்தொகை நிலைத்தன்மை யிலிருந்து தொடங்கியது. தமிழ் பிரதிநிதிகள் வடக்கு மற்றும் கிழக்கில் தொகுதி களை வெல்ல முடியும், ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவார் கள் என்று எதிர்பார்க்க முடியாது. சிறுபான்மையினர் பாதுகாப்பு என்பது மையத் தைக் கட்டுப்படுத்தும் கட்சியின் தாராள மனப்பான்மையை மட்டுமே சார்ந்திருந் தால், சமத்துவம் என்பது நிபந்தனைக்குட்பட்டதாகவே இருக்கும். கூட்டாட்சியானது நல்லெண்ணத்திற்குப் பதிலாக கட்டமைப்பை நிறுவமுயன்றது. அது தேசிய அளவில் பகிரப்பட்ட நிறுவனங்களைப் பாதுகாக்கும் அதேவேளையில், தமிழர்கள் செறிந் துள்ள பகுதிகளில் பிராந்திய சுய-ஆட்சியை அனுமதிக்கும். கோட்பாட்டுரீதியாக, அது சுய-ஆட்சியையும் பகிரப்பட்ட ஆட்சியையும் இணைத்தது.

இந்த வேறுபாடுதான் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை, ஏன் ஒரேநேரத்தில் எதிர்ப்பா கவும் ஒருங்கிணைப்பதாகவும் இருந்தது என்பதை விளக்குகிறது. தமிழ் குடிமக்கள் நிரந்தர சார்புநிலையின்றி இருக்கக்கூடிய ஓர் அரசியலமைப்பு ஏற்பாட்டை அது விரும்பியதாலேயே, அந்தக் கட்சி மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசை எதிர்த்

தது. இவ்வாறு, கூட்டாட்சியானது மையப்படுத்தலில் இருந்து அந்நியப்பட்டதற்கான சான்றாக இருந்தது. இலங்கையிலிருந்து அந்நியப்பட்டதற்கான சான்றாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒற்றுமை என்பது சீரான தன்மையைக் குறிக்க வேண்டியதில்லை என்பதே அதன் உள்ளார்ந்த கூற்றாக இருந்தது.

செல்வநாயகம் சத்தியாகிரகத்தைப் பயன்படுத்தியது இந்த நோக்குநிலையை மேலும் வெளிப்படுத்தியது. வன்முறையற்ற ஒத்துழையாமை, அரசியல் சமூகத்தின் மீதான ஒருதார்மீக உரிமையைத் தக்கவைத்துக் கொண்டே, அநீதியை நாடகமயமாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. அது அரசை அழிக்கப்பட வேண்டிய ஓர் எதிரியாகக் கருதாமல், அதன் சொந்த ஜனநாயக முரண்பாடுகளை அங்கீகரிக்கக் கட்டாயப்படுத்தப் படவேண்டிய ஒரு நிறுவனமாகக் கருதியது. இந்தவகையில், அரசு பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது என்ற அனுமானத்தின் மீது சத்தியாகிரகம் சார்ந்திருந்தது. சட்டத்திற்கும் சட்டபூர்வத் தன்மைக்கும் இடையிலான இடைவெளியை அம்பலப்படுத்துவதற்காக, போராட்டக்காரர்கள் தங்கள் பலவீனத்தை ஏற்றுக் கொண்டனர்.

இந்த உத்தியானது நாடாளுமன்ற சிறுபான்மையினரின் கட்டமைப்பு பலவீனத்தையும் கையாண்டது. அடிப்படைக் கேள்விகளில் வாக்கு எண்ணிக்கை தொடர்ச்சியான தோல்விக்கு உத்தரவாதம் அளித்தால், அரசியலமைப்பு அரசியலைக் கைவிடாமல் அரசியல் ரீதியான இழப்புகளை உருவாக்குவதற்கான ஒரு வழியை நாடாளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட வன்முறையின்மை வழங்கியது. எனவே, தமிழரசுக் கட்சியால் நாடாளுமன்றம், தேர்தல்கள், பேச்சுவார்த்தைகள் மற்றும் சத்தியாகிரகம் ஆகியவற்றை ஒன்றையொன்று பூர்த்திசெய்யும் கருவிகளாகப் பயன்படுத்த முடிந்தது. இது ஓர் அழுத்த அரசியல், ஆனால் அது ஒரு பொதுவான சட்ட மற்றும் அரசியல் ஒழுங்கிற்குள் இருந்த அழுத்தமாகவே நீடித்தது.

செல்வநாயகத்தின் மொழிக் கோரிக்கைகளும், தமிழ் எதிர்ப்பு என்பது வெறும் சிங்கள எதிர்ப்புதான் என்ற கூற்றைச் சிக்கலாக்குகின்றன. தமிழரசுக் கட்சி சிங்களத்தின் உயர்வை ஏற்றுக்கொண்டது, ஆனால் தமிழுக்கு சமமான அங்கீகாரத்தையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் கணிசமான அங்கீகாரத்தையும் நிர்வாகப் பயன்பாட்டையும் கோரியது. இந்த வேறுபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. எதிர்ப்பு, சிங்களம் அரசாங்கத்தின் மொழியாக இருப்பதை நோக்கியதாக இல்லாமல், தனிமொழி அந்தஸ்தை நோக்கியதாகவே இருந்தது. தாய் மொழியின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு ஒரு படிநிலையைத் திணிக்கக் கூடாது என்பதே அரசியலமைப்பு கோட்பாடாக இருந்தது.

கூட்டாட்சியும் மொழியும் ஒன்றையொன்று வலுப்படுத்தின. மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசில், தேசிய மொழி விதிகள் பிராந்திய வாழ்வில் ஆழமாக ஊடுருவின. மத்திய அரசு சிங்கள முதன்மையைத் தக்கவைத்துக் கொண்டாலும், பிராந்திய சுயாட்சி தமிழ் நிர்வாகப் பயன்பாட்டைப் பாதுகாக்க முடியும். இதற்கு மாறாக, அர்த்தமுள்ள மொழி உரிமைகள் பிராந்திய சுயாட்சியை ஒரு நில எல்லைக்கு அப்பாற்பட்டதாக மாற்றின. பிற்கால பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், ஒரு தனி அரசை நிறுவாமல் மொழி மற்றும் பிராந்திய நிறுவனங்களை இணைக்கும் இந்த முயற்சியையே துல்லியமாக உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், இந்த உத்தி ஓர் அரசியல் பொறிக்கு ஆளாகக்கூடியதாக இருந்தது. சிங்கள தேசியவாத எதிர்ப்பாளர்கள் கூட்டாட்சியைப் பிரிவினைக்கான முதல் படியாகச் சித்தரிக்க முடிந்தது. தமிழ் தலைவர்கள் பாதுகாப்புகளை எவ்வளவு வலுவாகக் கோரினார்களோ, அவ்வளவு எளிதாக அவர்களை விசுவாசமற்றவர்களாகச் சித்தரிக்க முடிந்தது. இது ஒரு தொடர் அரசியல் இயக்கத்தை உருவாக்கியது. சுயாட்சி என்பது தமிழர்களை நம்பமுடியாது என்பதற்கான சான்றாகக் கருதப்பட்டது, அதேநேரத்தில் விசுவாசமின்மை என்ற குற்றச்சாட்டு, வலுவான அரசியலமைப்பு உத்தரவாதங்கள் அவசியம் என்ற தமிழ் நம்பிக்கையை வலுப்படுத்தியது. இவ்வாறு, சகவாழ்வைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கோரிக்கை, சகவாழ்வு ஏற்கனவே தோல்வியடைந்துவிட்டது என்பதற்கான சான்றாகப் பொருள் கொள்ளப்பட்டது.

தமிழ் அரசியலமைப்பு அரசியலுக்குள்ளும் வரம்புகள் இருந்தன. கூட்டாட்சிக் கோரிக்கைகள் ஒரு தேசிய சிறுபான்மையினரின் நலன்களை வெளிப்படுத்தின, ஆனால் அவை தமிழ் சமூகத்திற்குள் நிலவும் வர்க்க, சாதி, பாலின அல்லது பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைத் தானாகவே தீர்த்துவிடவில்லை. அதேபோல், கிழக்கில் உள்ள தமிழ் பேசும் முஸ்லிம்கள் அதே தேசிய செயற்றிட்டத்தை அப்படியே பகிர்ந்துகொள்வார்கள் என்று ஒரு தமிழ் தலைமையிலான பிராந்தியத் திட்டமும் கருதிவிட முடியாது. ஒரு சீரான ஜனநாயகக் கூட்டாட்சிக்கு, அதிகாரப் பகிர்வுசெய்யப்பட்ட பிராந்தியங்களுக்குள் உள்ள சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகளும், இன அடிப்படையில் மட்டும் சுருக்கமுடியாத பின்தங்கிய குழுக்களைச் சென்றடையக்கூடிய சமூகக் கொள்கைகளும் தேவைப்படும். இந்தக்

> ***ஒரு சீரான ஜனநாயகக் கூட்டாட்சிக்கு, அதிகாரப் பகிர்வுசெய்யப்பட்ட பிராந்தியங்களுக்குள் உள்ள சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகளும், இன அடிப்படையில் மட்டும் சுருக்க முடியாத பின்தங்கிய குழுக்களைச் சென்றடையக்கூடிய சமூகக் கொள்கைகளும் தேவைப்படும். இந்தக் கேள்விகள் கூட்டாட்சித் திட்டத்தைச் செல்லாததாக்குவதில்லை. மாறாக, அவை தேசிய சமத்துவத்திற்கும் சமூகமாற்றத்திற்கும் இடையிலான வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றன.***

கேள்விகள் கூட்டாட்சித் திட்டத்தைச் செல்லாததாக்குவதில்லை. மாறாக, அவை தேசிய சமத்துவத்திற்கும் சமூகமாற்றத்திற்கும் இடையிலான வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றன.

அரசியலமைப்பு எதிர்ப்பின் தலைவிதியானது, தமிழ் அரசியல் வியூகத்தை மட்டுமல்ல, அரசின் எதிர்வினையையும் சார்ந்திருந்தது. அகிம்சைக்கு பரஸ்பர கட்டுப்பாடு தேவை. பேச்சுவார்த்தைக்கு செயல்படுத்தக்கூடிய ஒப்பந்தங்கள் தேவை. கூட்டாட்சிக்கு, அதிகாரப் பரவலாக்கத்தையும் சிதைவையும் பெரும்பான்மையினர் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டாலோ, ஒப்பந்தங்கள் கைவிடப்பட்டாலோ, அல்லது சிறுபான்மையினரின் கோரிக்கைகள் வழக்கமாக தேசத்துரோகமாகப் பொருள் கொள்ளப்பட்டாலோ, அரசியலமைப்பு வியூகங்கள் அவற்றின் தலைவர்கள் உறுதியுடன் இருந்தாலும் நம்பகத்தன்மையை இழக்கின்றன. 1956-இல் செல்வநாயகம் எதிர்கொண்ட ஆபத்து இதுவே. காலிமுகத்திடல் சத்தியாகிரகம் இதன் முதல் சோதனைக்களமாக அமைந்தது. தமிழ் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கு அருகிலுள்ள ஒரு குறியீட்டு இடத்தையும், அகிம்சை தார்மீகப் போராட்டத்துடன் வெளிப்படையாக தொடர்புடைய ஒரு முறையையும் தேர்ந்தெடுத்தனர். சட்டமன்றத்திற்கு அருகில் அவர்களின் இருப்பு, அவர்கள் இலங்கையிலிருந்து விலகவில்லை, மாறாக அதன் அரசியல் மையத்தில் அங்கீகாரம் கோருகிறார்கள் என்பதை வலியுறுத்தியது. அங்கு நடந்தவை, மொழி பற்றிய ஒரு விவாதத்தை, சிறுபான்மையினரின் எதிர்ப்பையே பாதுகாப்பாக வெளிப்படுத்த முடியுமா என்ற கேள்வியாக மாற்றியது.

### காலிமுகத்திடல் சத்தியாகிரகம்:

5 ஜூன் 1956 அன்று, நாடாளுமன்றம் அலுவல் மொழி மசோதா மீது விவாதித்துக் கொண்டிருந்தபோது, தமிழரசுக் கட்சி அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் கொழும்பில் உள்ள நாடாளுமன்ற வளாகத்திற்கு அருகிலுள்ள காலி முகத்துவாரப் பொதுவெளியில் ஒரு சத்தியாகிரகத்தை நடத்தினர். அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது அரசின் எல்லைப்புறங்களில் நடத்தப்பட்ட ஒரு போராட்டம் அல்ல. தமிழ் பிரதிநிதிகள் தலைநகருக்குப் பயணம் செய்து, தேசிய சட்டமன்றம் பார்வையில் படும் தூரத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். இந்தச் செயல், பொதுவான குடியுரிமைக்கான தங்கள் உரிமையை நிலைநாட்டியது. அதாவது, அங்கே தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அளவிற்கு அந்த மையம் தங்களுக்குச் சொந்தமானது என்பதை உணர்த்தியது.

போராட்டக்காரர்கள் வன்முறையற்ற முறைகளைக் கையாண்டனர். சமகாலக் குறிப்புகள், அவர்கள் போராட்டத்தில் அமர்ந்திருந்தபோது, விரோதமான கூட்டங்கள் கூடி, இறுதியில் பங்கேற்பாளர்களைத் தாக்கியதாக விவரிக்கின்றன. தமிழ் அரசியல்வாதிகள் தாக்கப்பட்டனர், அவமானப்படுத்தப்பட்டனர். இந்தக் காட்சி விரைவில் தமிழ் அரசியல் நினைவின் ஒரு பகுதியாக மாறியது. சமகால, பிற்கால ஆதாரங்களில் துல்லியமான விவரங்கள் வேறுபடுகின்றன. மேலும் பொறுப்பான வரலாற்று எழுத்துக்கள் ஆதாரமற்ற எண்களைக் கொண்டு இந்த நிகழ்வை மிகைப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இருப்பினும், அதன் மைய முக்கியத்துவம் தெளிவாக உள்ளது. பெரும்பான்மைச் சட்டத்திற்கு எதிரான ஓர் அமைதியான சிறுபான்மையினரின் போராட்டம், அரசாங்கத்தின் தலைமையிடத்திற்கு அருகில் உடல் ரீதியாகப் பாதிக்கப்படக்கூடியதாக மாறியது (ரிகின்ஸ் 1960, வில்சன் 1988, டிவோட்டா 2004).

இந்தச் சம்பவத்தை, பெரிய அரசியலமைப்பு ரீதியான தாக்கங்களைக் கொண்ட ஒரு சிறிய அரசியல் கதையாகப் படிக்கலாம். அந்தப் போராட்டம் எதை உணர்த்த முயன்றது என்பதைக் கவனியுங்கள். தமிழரசுக் கட்சியிடம் வாக்குகள் இல்லாததால், அது நாடாளுமன்றவாதத்தில் தோற்றிருந்தது. சத்தியாகிரகம் மற்றொரு ஜனநாயக மொழியை வழங்கியது. பொதுவெளியை ஆக்கிரமிக்கும் அமைப்புகள், வன்முறையை மறுப்பது, மற்றும் சிறுபான்மையினரின் ஒப்புதல் இல்லாமல் எண்ணிக்கை பலத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தார்மீக விலையை எதிர்கொள்ளுமாறு பெரும்பான்மையினரைக் கேட்பது. இந்த உத்தி, விரோதமான கூட்டத்திற்கும் அரசுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சார்ந்திருந்தது. பொது நிறுவனங்கள் கருத்து வேறுபாடு தெரிவிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் திறனைக் கொண்டிருந்தால், போராட்டக்காரர்கள் எதிர்ப்பாளர்களின் நிந்தனைகளைத் தாங்கிக்கொள்ள முடியும். அந்தப் பாதுகாப்பு பலவீனமாக நிரூபிக்கப்பட்டபோது, போராட்டத்தின் அர்த்தம் மாறியது.



அரசின் பங்கு கவனமாக விவரிக்கப்பட வேண்டும். ஜனநாயகப் பாதுகாப்பில் ஒரு

கடுமையான தோல்வியைக் காண்பதற்காக, அரசு இந்தத் தாக்குதலை ஏற்பாடு செய்தது என்று கூற வேண்டிய அவசிய மில்லை. இயலாமை, தாமதமான பதில் நடவடிக்கை, பாரபட் சமான அமலாக்கம் அல்லது அரசியல் செல்வாக்குமிக்க சக்திகளை எதிர்கொள்ள விருப்பமின்மை ஆகியவற்றால் அரசின் பொறுப்பு எழக்கூடும். சிறுபான்மைக் குடிமக்களுக் கான முக்கியமான கேள்வி தத்துவார்த்தமானது அல்ல, நடை முறை சார்ந்தது. பெரும்பான்மையினரின் விருப்பங்களுக்கு எதிராக அவர்கள் அரசியலமைப்பு உரிமைகளைப் பயன்படுத் தும் போது, பொது அதிகாரம் அவர்களைப் பாது காக்குமா? காலிமுகத்திடல் வன்முறை அந்தக் கேள்வியைத் தவிர்க்க முடியாததாக ஆக்கியது.

இந்த வன்முறை, நாடாளுமன்றத்திற்கும் தெருப் பெரும் பான்மை வாதத்திற்கும் இடை யிலான இடைவினையையும் எடுத்துக்காட்டியது. நாடாளுமன் றப் பெரும்பான்மையினரால் ஏற்கனவே மொழிச் சட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. நாடாளு மன்றத்திற்கு வெளியே நடந்த விரோதமான அணிதிரட்டல், சிறுபான்மை எதிர்க்கட்சி அரசி யல் ரீதியாகத் தோற்பது மட் டுமல்லாமல் சமூக ரீதியாகவும் தண்டிக்கப்படலாம் என்று உணர்த்துவதன் மூலம், நிர்ப்பந்தத்தின் மற்றொரு அடுக் கைச் சேர்த்தது. எனவே, நாடாளுமன்றக் கணக்கீட்டின் செய்தி யைத் தெரு வலுப்படுத்தியது. பெரும்பான்மையினரிடம் வாக் குகளும் பொதுசக்தியும் இருந்தன. ஒரு நிரந்தர சிறுபான்மை யினருக்கு, இது மிகவும் கலக்கமூட்டும் ஒரு கலவையாக இருந்தது.

அவமானமும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தேசியவாதமோதல் கொள்கை முடிவுகளால் மட் டும் உருவாக்கப்படுவதில்லை. பொதுவெளியில் சமூகங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்ற நினைவுகளாலும் அது வடிவமைக்கப்படுகிறது. மதிக்கப்படும் பிரதிநிதிகள் தாக்கப் பட்டதன் படங்களும் கதைகளும், நேரடியாக சம்பந்தப்பட்ட வர்களைத் தாண்டி வெகுதூரம் பரவி, ஒரு கூட்டு அந்தஸ்தின் சான்றாக மாறக்கூடும். தமிழ் அரசியல் நினைவில், கட்டுக் கோப்பான அகிம்சை கூட பகைமையைத் தூண்டியது என்ப தற்கு காலிமுகத்திடல் நிகழ்வு ஒரு சான்றாக விவரிக்கப்பட லாம். இத்தகைய நினைவுகள் உத்திகளின் நம்பகத்தன் மையை மாற்றுகின்றன. ஒரு மூத்தவர் அந்த நிகழ்வை விவ ரிப்பதைக் கேட்கும் ஒரு இளம் செயற்பாட்டாளர், அரசியல மைப்பு ரீதியான கட்டுப்பாடு திருப்பிக் கடைப்பிடிக்கப்பட் டதா என்று கேட்கத் தொடங்குவதற்கு, உடனடியாகப் போர்க் குணத்தை ஏற்கவேண்டிய அவசியமில்லை.

இந்த நிகழ்வுகள், பொறுப்புகளை ஆபத்தான முறையில் கூட்டாக்குவதையும் ஊக்குவித்தன. ஒரு தமிழ் சத்தியாகிர கியை, அரசியலமைப்பு உரிமை கோரும் ஒரு தனிப்பட்ட பிர ஜையாகக் கருதாமல், தமிழ் எதிர்ப்பின் ஒரு வடிவமாகவே கருதமுடிந்தது. அரசியல் அடையாளம் கூட்டாக்கப்பட்ட வுடன், போராட்டத்தில் ஒருபோதும் கலந்துகொள்ளாத சாதா ரண மக்கள்கூட இலக்காகிறார்கள். ஏனெனில், அவர்களும் அதே அரசியல் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கற்பனை செய்யப்படுகிறார்கள். மேட்டுக்குடியினரின் மோதல் எவ்வாறு இன வன்முறையாகப் பரவக்கூடும் என்பதை இந்த வழிமுறை விளக்க உதவுகிறது.

அந்தப் பரவல் 1956-இல் மற்ற இடங்களிலும், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் உள்ள கல் ஓயா குடியேற்றப் பகுதி யிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்பட்டது. அங்கு நடந்த வன்முறையை மொழியால் மட்டும் விளக்க முடியாது. அது குடியேற்றம், நிலம், உழைப்பு, மக்கள் தொகை குறித்த கவலை, பலவீனமான உள்ளூர் பாதுகாப்பு, வதந்திகள் மற் றும் தேசிய அரசியலால் உருவாக்கப்பட்ட பரந்த துருவமய மாக்கல் ஆகியவற்றின் சந்திப்பில் உருவானது. கல் ஓயா ஒரு வளர்ச்சித் திட்டமாகவும், அதே சமயம் ஒரு மத எல்லை யாகவும் இருந்தது. நிலத்திற்காக ஏங்கிய குடியேறிகளுக்கு, அந்தத் திட்டம் ஒருவாய்ப்பாக அமைந்தது. தமிழ் பார்வையா ளர்களைப் பொறுத்தவரை, அரசின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்படும் மக்கள் தொகைமாற்றம், பிராந்திய ரீதியான தாக் கங்களைக் கொண்டிருக்கக்கூடும். அத்தகைய சூழலில் வன் முறை நுழைந்தபோது, பொருளாதார மற்றும் இனப் பாதுகாப் பின்மை ஒன்றுக்கொன்று வலுவூட்டின (ரிகின்ஸ் 1960, தம்பையா 1986).

காலிமுகத்திடலுக்கும் கல் ஓயாவிற்கும் இடையேயான தொடர்பை ஓர் எளிய கட்டளைத் தொடராகக் கட்டமைக்கக் கூடாது. அவை இரண்டும் ஒரே அரசியல் காலகட்டத்தைச் சேர்ந்தவை, ஏனெனில் மொழி அரசியல் எவ்வாறு பௌதிகப் பாதுகாப்பு மற்றும் நிலப்பரப்பு தொடர்பான கேள்விகளுடன் பிணைக்கப்பட்டது என்பதை இரண்டுமே வெளிப்படுத்து கின்றன. அமைதியான எதிர்ப்பு பாதிக்கப்படக் கூடியது என் பதை மையம் காட்டியது. வளர்ச்சி இடங்கள் சமூகப் போர்க் களங்களாக மாறக்கூடும் என்பதை விளிம்புப் பகுதி காட்டி யது. இரண்டு நிகழ்வுகளிலும், அரசின் திறனும் பாரபட்சமின் மையும் மையமாகின.

‘கலவரம்’ என்ற வகைப்பாட்டிற்கு ஏன் பகுப்பாய்வு ரீதியான எச்சரிக்கை தேவை என்பதையும் இந்த நிகழ்வுகள் விளக்கு

> ***கல் ஓயா ஒரு வளர்ச்சித் திட்டமாகவும், அதே சமயம் ஒரு மத எல்லையாகவும் இருந்தது. நிலத்திற்காக ஏங்கிய குடியேறிகளுக்கு, அந்தத் திட்டம் ஒருவாய்ப்பாக அமைந்தது. தமிழ் பார்வையாளர்களைப் பொறுத்தவரை, அரசின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்படும் மக்கள் தொகைமாற்றம், பிராந்திய ரீதியான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும்.***

கின்றன. இது சமமான கும்பல்களுக்கு இடையேயான தன்னிச்சையான சீர்குலைவைக் குறிக்கலாம், அதன் மூலம் அமைப்பு, சமச்சீரற்ற தன்மை, உள்ளூர் அதிகாரம் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கு வைத்தல் ஆகியவற்றை மறைக்கக்கூடும். இதற்கு மாறாக, சான்றுகளை ஆராயாமல் ஒரு வலுவான சொல்லைப் பயன்படுத்துவது, வெவ்வேறு இடங்களில் நிகழ்வுகளின் மாறுபாட்டைச் சமப்படுத்திவிடும். யார் அணி திரட்டினார்கள், யார் இலக்கு வைக்கப்பட்டார்கள், என்ன பொருள்சார் நலன்கள் இருந்தன, வதந்திகள் எவ்வாறு பரவின, மற்றும் பொது அதிகாரம் எப்போது தலையிட்டது என்று கேட்பது ஒரு சிறந்த அணுகுமுறையாகும். வித்தாச்சியின் 1958-ஆம் ஆண்டு குறித்த பிற்காலப் பதிவும், வகுப்புவாத வன்முறையானது திட்டமிட்ட தூண்டுதல், சந்தர்ப்பவாதம், அச்சம், பழிவாங்குதல் மற்றும் ஒழுங்கின்மைகள் ஆகியவற்றை எவ்வாறு ஒன்றிணைத்தது என்பதை இதேபோல் காட்டும் (வித்தாச்சி, 1958).

காலிமுகத்திடல் வன்முறையின் மிக முக்கியமான விளைவு, ஓர் உடனடி சித்தாந்த மாற்றமாக இருக்கவில்லை. மாறாக, தமிழ் அரசியல் எழுப்ப வேண்டிய கேள்விகளில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகவே இருந்தது. முதல் கேள்வி மொழி சார்ந்ததாக இருந்தது. தமிழுக்கு சமமான அங்கீகாரம் கிடைக்குமா? காலிமுக நிகழ்வு ஒரு ஜனநாயகக் கேள்வியைச் சேர்த்தது. தமிழ் எதிர்ப்பைப் பாதுகாப்பாக வெளிப்படுத்த முடியுமா? கால் ஓயா ஒரு பிராந்திய மற்றும் பாதுகாப்பு சார்ந்த கேள்வியைச் சேர்த்தது. வகுப்புவாத மோதல் மற்றும் மக்கள் தொகை மாற்றங்களுக்கு மத்தியில் தமிழ் குடிமக்கள் அரசை நம்பியிருக்க முடியுமா? ஒவ்வொரு கேள்வியும் அரசியலமைப்புப் பாதுகாப்புகளை மேலும் அவசியமானதாகத் தோன்றச் செய்தது.

ஆயினும், அரசியல் களம் திறந்தே இருந்தது. 1956-க்குப் பிறகும் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தையைக் கைவிடவில்லை. பண்டாரநாயக்கவே விரைவில் செல்வநாயக்கத்துடன் ஓர் இணக்கத்தை நாடினார். இது முக்கியமானது, ஏனெனில் காலிமுகத்திடல் நிகழ்வை, பேச்சுவார்த்தை சாத்தியமற்றதாகிவிட்ட ஒரு புள்ளியாகப் புரிந்துகொள்வதை இது தடுக்கிறது. மாறாக, அது பேச்சுவார்த்தையை மேலும் அவசரமாக்கியது. வன்முறையின் படிப்பினைகளை நிறுவனரீதியான சமரசமாக மாற்றமுடியுமா என்பதே காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசின் சோதனையாக இருந்தது. 1957-ஆம் ஆண்டின் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் அவ்வாறு செய்வதற்கான மிக முக்கியமான முயற்சியாக அமைந்தது.

## அரசியல் மோதலில் இருந்து இன வன்முறைக்கு:

அரசியல் கருத்து வேறுபாட்டிலிருந்து இன வன்முறைக்கான நகர்வு, இனப் பகைமை வெடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தது போல அடிக்கடி விவரிக்கப்படுகிறது. இத்தகைய விளக்கங்கள் பகுப்பாய்வு ரீதியாக பலவீனமானவை. ஏனெனில் அவை வன்முறையை உண்மையில் ஒழுங்கமைத்த நிறுவனங்கள் மற்றும் மோதல்களை விடப் பழைமையானதாகத் தோன்றச் செய்கின்றன. 1950-களின் பிற்பகுதியில் ஏற்பட்ட வன்முறையானது, மொழிக் கொள்கை, தேர்தல் அணிதிரட்டல், வதந்திகள், நிலப் பங்கீடு, வேலைவாய்ப்பு குறித்த கவலைகள், உள்ளூர் தகராறுகள் மற்றும் பொதுப் பாதுகாப்பின் தோல்விகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பால் உருவாக்கப்பட்டது. தம்பையாவின் இலங்கை இனமோதல் குறித்த பிற்காலப் பகுப்பாய்வு குறிப்பாக முக்கியமானது, ஏனெனில் அது 'பழங்கால வெறுப்பு' என்ற விளக்கங்களை நிராகரித்து, அதற்குப் பதிலாக வன்முறையை நவீன சமூக அழுத்தங்களான கல்வி விரிவாக்கம், வேலையின்மை, சீரற்ற வளர்ச்சி, மக்கள் இடம்பெயர்வுகள், வரலாற்

> *1956-க்குப் பிறகும் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தையைக் கைவிடவில்லை. பண்டாரநாயக்கவே விரைவில் செல்வநாயக்கத்துடன் ஓர் இணக்கத்தை நாடினார். இது முக்கியமானது, ஏனெனில் காலிமுகத்திடல் நிகழ்வை, பேச்சுவார்த்தை சாத்தியமற்றதாகிவிட்ட ஒரு புள்ளியாகப் புரிந்துகொள்வதை இது தடுக்கிறது. மாறாக, அது பேச்சுவார்த்தையை மேலும் அவசரமாக்கியது. வன்முறையின் படிப்பினைகளை நிறுவனரீதியான சமரசமாக மாற்றமுடியுமா என்பதே காலனித்துவத்திற்குப் பிந் தைய அரசின் சோதனையாக இருந்தது.*

றின் அரசியல் பயன்பாடுகள் மற்றும் நிறுவன மாற்றம் ஆகியவற்றில் நிலைநிறுத்துகிறது (தம்பையா 1986). இன வன்முறையானது அரசியல் பிரிவுகளை சமூக அடையாளங்களாக மாற்றுவதன் மூலம் செயற்படுகிறது. தமிழரசுக்கட்சிக் கூட்டத்தில் ஒருபோதும் கலந்துகொள்ளாத ஒரு தமிழ் கடைக்காரர், ஒரு தமிழ் அரசியல் கூட்டமைப்பின் பகுதியாகக் கருதப்படுவதால் இலக்காக மாறக்கூடும். மொழி அமைப்புகளில் ஒருபோதும் சேராத சிங்களத் தொழிலாளி, சிங்களப் பெரும்பான்மையினரின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதால், பழிவாங்கும் விதமாகத் தாக்கப்படலாம். இவ்வாறு, அரசியல் பொறுப்பானது தனி நபர்கள் செய்த செயல்களிலிருந்து, சமூகங்கள் எதைக் குறிப்பதாகக் கற்பனை செய்யப்படுகின்றனவோ அதற்கு மாறுகிறது. இந்தத் தர்க்கம் நிலைபெற்றவுடன், இனம் என்பது எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டாக மாறிவிடுகிறது.

இந்த மாற்றம் நிகழ்வதற்கான மிக முக்கியமான உட்கட்டமைப்புகளில் ஒன்று வதந்தியாகும். நிச்சயமற்ற காலங்களில், அட்டூழியங்களைப் பற்றிய கதைகள் சரிபார்ப்பை விட வேகமாகப் பரவக்கூடும். அவை புவியியல் தூரத்தைக் கரைத்துவிடுகின்றன. ஒரு பகுதியில் கூறப்படும் ஒரு நிகழ்வு, வேறொரு இடத்தில் அச்சத்தையும் பழிவாங்கும் நடவடிக்கையையும் உருவாக்கக்கூடும். வதந்திகள் முன்கூட்டியே வன்முறையை உருவாக்கும் தன்மையையும் அளிக்கின்றன. தங்கள் சொந்த சமூகம் தாக்கப்படப் போகிறது என்று நம்புவதால் மக்கள் தாக்குதல் நடத்துகிறார்கள். இதன் விளைவாக, அச்சமே உருவாக்க உதவும் நடத்தைக்கு அச்சமே சான்றாக மாறும் ஒரு சுய-வலுவூட்டும் சுழற்சி உருவாகிறது.

சமூகத்தின் இடஞ்சார்ந்த அமைப்பும் மாறுகிறது. சாலைகள், தொடர்வண்டிப் பாதைகள், சந்தைகள், சுற்றுப்புறங்கள் மற்றும் பணியிடங்கள் இனரீதியாகக் குறியிடப்படலாம். பயணிகள் தங்கள் பெயர், மொழி, உடைஅல்லது சேருமிடம் ஆகியவற்றின் மூலம் தங்களை அடையாளம் காண எதிர்பார்ப்பதால், முன்பு சாதாரணமாக இருந்த ஒரு பாதை திடீரென ஆபத்தானதாகத் தோன்றக்கூடும். இவ்வகையில், வன்முறை மக்கள் தங்கள் மனதில் கொண்டுள்ள வரைபடத்தை மாற்றுகிறது. ஒருவரின் சொந்த சமூகம் எண்ணிக்கையில் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளுடன் பாதுகாப்பு தொடர்புபடுத்தப்படுகிறது. அதேநேரத்தில் கலப்பு இடங்கள் மிகவும் அபாயகரமானதாக மாறுகின்றன.

பொருளாதார நோக்கங்கள் கருத்தியல் விரோதத்துடன் இணைந்து இருக்க முடியும். ஒரு கடையைக் கொள்ளையடிப்பது ஒரு இனச் செயலாகவும், பொருள் ஆதாயத்திற்கான ஒரு வாய்ப்பாகவும் இருக்கலாம். வணிகப் போட்டி, கடன் அல்லது உள்ளூர் போட்டி ஆகியவை வகுப்பு வாதப் பிரிவுகளின் மூலம் மறு வடிவமைக்கப்படலாம். கொள்ளைச் சம்பவங்கள் நடப்பதால் அரசியல் பொருத்தமற்றது என்று ஆகிவிடாது. அரசியல் சொல்லாடல்கள் பொருள்சார் நோக்கங்கள் மறைந்துவிடுகின்றன என்றும் ஆகிவிடாது. வகுப்புவாத வன்முறை சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம், அது கருத்தியல் அனுமதியைத் தனிப்பட்ட ஊக்கங்களுடன் இணைக்க முடியும் என்பதே.

நிலக் குடியேற்றம் இந்தத் தொடர்பைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அரசின் நீர்ப்பாசனம் மற்றும் குடியேற்றத் திட்டங்கள் நிலமின்மை மற்றும் கிராமப்புற மேம்பாடு போன்ற உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டன. சிங்கள விவசாயிகளுக்கு, குடியேற்றம் என்பது பொருள்ரீதியாக விடுதலை அளிப்பதாக அமையக்கூடும். தமிழ் தலைவர்களுக்கு, குறிப்பாக கிழக்கத்திய நாடுகளில், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஏற்படும் மக்கள்தொகை மாற்றம் பிராந்தியப் பாதுகாப்பிற்கு ஓர் அச்சுறுத்தலாகத் தோன்றக்கூடும். எனவே, ஓர் ஏழ்மையான சிங்களக் குடியேறியவரும் ஓர் ஏழை தமிழ் விவசாயியும், ஒரே நிலத்தைப் பற்றிய போட்டி இனக் கதையாடல்களுக்குள் இழுக்கப்படும் அதேவேளையில், கட்டமைப்புரீதியாக ஒத்த வர்க்கநிலைகளில் இருக்கக்கூடும். இந்த மோதல் சமூகங்களுக்கு இடையே கிடைமட்டமாக இருந்தாலும், பற்றாக்குறையான உற்பத்தி வளங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட ஒதுக்கீடு ஆகிய செங்குத்துப் பிரச்சினையில் ஓரளவு வேரூன்றியிருந்தது.

வன்முறை, அது வெளிப்படுத்துவதாகத் தோன்றும் அடையாளங்களையும் உருவாக்குகிறது. ஒரு சிங்கள அண்டை வீட்டாரால் பாதுகாக்கப்படும் ஒரு தமிழ் குடும்பம், இனத்துவ எல்லைகள் முழுமையானவை அல்ல என்பதற்கான சான்றைப் பெறுகிறது. இத்தகைய மீட்புச் செயல்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் வன்முறை ஒருபோதும் வேறுபாடற்ற இனத்துவ விருப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதை அவை நிரூபிக்கின்றன. அதே நேரத்தில், இனரீதியான இலக்குவைப்பால் இடம்பெயர்ந்த ஒரு குடும்பம், அந்தப் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை தலைமுறை தலைமுறையாக நினைவில் வைத்திருக்கக்கூடும். இந்த இரண்டு அனுபவங்களும் முக்கியமானவை. ஒன்று, அறநெறி ஒற்றுமையின் தொடர்ச்சியான சாத்தியத்தை வெளிப்படுத்துகிறது. மற்றொன்று, இனத்துவப் பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றிய உணர்வை ஆழப்படுத்தக்கூடும்.

> ஒரு கொள்கைக் கருத்துவேறுபாடு பகிர்வு மோதலாக மாறியது. பகிர்வு மோதல் பிராந்திய மோதலாக மாறியது. பிராந்திய மோதல் பௌதீகப் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் எதுவும் தவிர்க்க முடியாதவை அல்ல. அவை அரசியல் தேர்வுகள் மற்றும் நிறுவனத் தோல்விகள் மூலமாகவே நிகழ்ந்தன.

இதனால்தான் கல்விசார் வரலாற்றில் தனிப்பட்ட கதைகளைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு கொடூரச் சம்பவம், ஒட்டுமொத்த நிகழ்வுகளின் தொகுப்பாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம். அதேசமயம், மீட்புக் கதைகள் மிகைப் படுத்தப்பட்டு, நிறுவனங்கள் முக்கியத்துவம் பெறவில்லை என்பதற்கான சான்றாக மாற்றப்படலாம். வாழ்ந்த அனுப வத்தை அமைப்புடன் இணைப்பதே இதன் நோக்கம். இவ்வா றான பல்சமூகச்சூழலில் வன்முறையில் இருந்து தப்பி ஓடும் ஒரு சிறுபான்மையின இளைஞனின் கதை, அந்த இடப்பெ யர்வு, காவல் துறை, வதந்திகள், போக்குவரத்து, அரசியல் சொல்லாடல்கள் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கையின் சரிவு ஆகியவற்றைப் பற்றி நமக்குச் சொல்கிறது. வன்முறை என்பது ஒரு நிகழ்வும் சமூகச் செயல்முறையும் ஆகும்.

அரசு இந்தச் செயல்முறைக்கு மையமானது. ஏனெனில் அது பொருளாதார வளங்களையும் பாதுகாப்பையும் விநியோகிக் கிறது. அது நிலத்தை ஒதுக்குகிறது, மொழிகளை அங்கீகரிக் கிறது, அதிகாரிகளை நியமிக்கிறது, கல்வியை ஒழுங்கமைக் கிறது, மேலும் காவல்துறை மற்றும் இராணுவ சக்தியைப் பயன்படுத்துகிறது. அரசு இனரீதியாகச் சார்புடையதாகக் கருதப்படும்போது, ஒவ்வொரு விநியோக முடிவும் ஒரு சமூகப் பொருளைப் பெறக்கூடும். ஓர் அபிவிருத்தித் திட்டத்தை மக் கள்தொகைப் பொறியியலாகவும் ஓர் ஆட்சேர்ப்பு விதியை இனப் பாரபட்சமாகவும் தாமதமான காவல்துறை நடவடிக் கையை அரசியல் சார்பாகவும் வாசிக்கலாம். அவநம்பிக்கை, நிர்வாகத்தில் உள்ள தெளிவின்மையை ஒரு சமூகநோக்கத் திற்கான சான்றாக மாற்றுகிறது.

எனவே, 1950-களின் பிற்பகுதியில் மொழி மோதலின் பொருள் தீவிரமடைந்தது. ஒரு கொள்கைக் கருத்துவேறுபாடு பகிர்வு மோதலாக மாறியது. பகிர்வு மோதல் பிராந்திய மோதலாக மாறியது. பிராந்திய மோதல் பௌதீகப் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் எதுவும் தவிர்க்க முடியாதவை அல்ல. அவை அரசியல் தேர்வுகள் மற்றும் நிறு வனத் தோல்விகள் மூலமாகவே நிகழ்ந்தன. ஆனால், வன் முறை இந்தத் தொடரில் நுழைந்தவுடன், சமரசத்தின் உணர்ச் சிபூர்வமான மற்றும் அரசியல்ரீதியான விலை அதிகரித்தது. ஏனெனில், சமூகங்கள் இனி எதிர்காலக் கொள்கைகளைப் பற்றி மட்டும் விவாதிக்கவில்லை. அவர்கள் காயங்களின் நினைவுகளைப் பேச்சுவார்த்தைக்குள் கொண்டுசென்றனர்.

இதன் விளைவாக, அடுத்த பகுப்பாய்வுக் கேள்வி பாதுகாப் புப் பிரச்சினையாகும். ஓர் அரசு, தங்களைப் பாரபட்சமின்றிப் பாதுகாக்குமா என்று சந்தேகிக்கும் குடிமக்களிடையே தனது சட்டபூர்வத் தன்மையை இழக்கும் அதேவேளையில், சட்டங் கள், தேர்தல்கள் மற்றும் ஓர் அதிகாரத்துவத்தைக் கொண்டி ருக்க முடியும். வன்முறையைத் தடுக்கும் திறன் என்பது அர சியலமைப்பு அரசியலிலிருந்து பிரிக்கப்பட்ட ஓர் இரண்டாம் நிலை விஷயம் அல்ல. அது குடியுரிமையின் நடைமுறை அடித்தளங்களில் ஒன்றாகும்.

(தொடரும்...)



meenilankco@thaiveedu.com

# ஆபிரிக்க வழித்தோன்றல்களின் தேசமாக எழுந்து நிற்கும் ஜமேக்கா

சிவா முருகுப்பிள்ளை

மகிழ்ச்சியாக வாழ்வதற்கான வாய்ப்புகளும் சுற்றுலா அம்சங்களும் நிறைந்த ஒரு வளமான நாடாகவே ஜமேக்கா பார்க்கப்படுகிறது. எனினும், பொருளாதார உற்பத்தி, தனிநபர் வருமானம் மற்றும் நாணய மாற்று விகிதம் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் நோக்கும் போது, இந்தியாவுடன் ஒப்பிடுகையில் சில பொருளாதாரக் குறைபாடுகளையும், இலங்கையுடன் ஒப்பிடுகையில் சில மேம்பட்ட பொருளாதார வசதிகளையும் கொண்ட நாடாக ஜமேக்கா விளங்குகின்றது.

ஜமேக்கா, அரசு மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் இரண்டும் இணைந்தான ஒரு கலப்புப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. விவசாயம், சுரங்கத் தொழில், உற்பத்தி, சுற்றுலா, பெட்ரோலிய சுத்திகரிப்பு, நிதி மற்றும் காப்பீட்டு சேவைகள் ஆகியவை ஜமேக்காவின் முக்கிய பொருளாதாரத் துறைகளாகும். சுற்றுலா மற்றும் சுரங்கத் தொழில் ஆகியவை அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் முக்கியத் துறைகளாக உள்ளன. ஜமேக்காவின் பொருளாதாரம் பெருமளவில் சேவைத் துறையைச் சார்ந்துள்ளது.

மத்திய தர கீழ்தட்டு வருமானத்தை உடைய பல ஜமேக்கர்கள் பிற நாடுகளுக்கு, குறிப்பாக ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். அமெரிக்காவைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் சுமார் 20,000 ஜமைக்கர்களுக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படுகிறது. போட்டோ ரிக்கோ, கயானா மற்றும் பஹாமாஸ் போன்ற பிற கரீபியன் நாடுகளுக்கும் ஜமேக்கர்கள் குடிபெயர்ந்துள்ளனர்.

கியூபாவின் உற்ற நண்பராகப் பொதுவுடைமைச் சிந்தாந்தத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் தன்னகத்தே கொண்ட தீவு நாடாகவும் ஜமேக்கா விளங்குகிறது. கரீபியன் கடலில் எமக்கெல்லாம் அதிகம் தெரிந்த பெயராக இருப்பது மேற்கிந்தியத் தீவுகள். ஒரு தீவுக் கூட்ட நாடுகளை இணைத்துத்தான் நாம் இவ்வாறு அழைக்கின்றோம். இதில் ஒரு முக்கிய தீவு நாடுதான் ஜமேக்கா. இது அதிகம் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் போட்டிகளின் மூலம் அறியப்பட்டது.

1895-ஆம் ஆண்டு பிரித்தானிய காலனி ஆதிக்க காலத்தில் அமைக்கப்பட்ட பிரசித்தி பெற்ற சபினா பார்க் கிரிக்கட் மைதானம் (Sabina Park Cricket Ground) ஜமேக்காவின் தலைநகர் கிங்ஸ்ரன்-இல் அமைந்துள்ளது. கிரிக்கெட் விளையாட்டின் ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மைதானங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. மிகவும் அழகிய மலைச்சாரலைப் பின்புலம் கொண்டிருப்பது இதன் மிகச் சிறப்பு. கூடவே கிரிக்கட் இரசிகர்களால் அதிகம் கொண்டாடப்படும் அதிரடி ஆட்டக்

காரர் கிறிஸ் கெயிலின் தாயகமும் இதுதான். ஒலிம்பிக் போட்டியில் நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் உலக சாதனையை ஏற்படுத்தி உலகம் முழுவதும் அறியப்பட்ட உசைன் போல்டும் ஜமேக்காவை தனது தாயகமாக கொண்டவரே. இப்படியான பல வலிமைகளை... திறமைகளை தன்னகத்தே கொண்ட தேசமாக ஜமேக்கா அடையாளப்படுகின்றது.

இசை மற்றும் நடனத் துறைகளைப் பொறுத்தவரை, பாப் மார்லி (Bob Marley) உலகளவில் பரவலாக அறியப்பட்ட ஒரு மகத்தான ஆளுமை யாவார். மேற்கத்திய, கரீபியன் மற்றும் ஆபிரிக்க இசை வடிவங்களின் உலகளாவிய அடையாளமாகக் கொண்டாடப்படும், நீண்ட பின்னல் கூந்தலைத் (Dreadlocks) தாங்கிய அக்கலைஞனின் தாயகமும், ரெகே (Reggae) உள்ளிட்ட உலகப் புகழ்பெற்ற இசை மற்றும் நடன வடிவங்களின் பிறப்பிடமும் ஜமேக்காவே ஆகும். கிட்டத்தட்ட முழுமையாக என்று கூறும் அளவிற்கு ஆபிரிக்க வழித்தோன்றல்களான கறுப்பின மக்களைத் தன்னகத்தே கொண்டு, தனக்கே உரித்தான தனித்துவமான பண்பாட்டு அடையாளத்துடன் மிளிரும் வளமான தேசமாக ஜமேக்கா திகழ்கின்றது.

ஜமேக்கா ஒரு இருமொழிக் கொள்கை நாடாகக் இருந்து வருகிறது, இங்கு மக்கள் இரண்டு முக்கிய மொழிகளைப் பயன்படுத்துகின்றனர். அதிகாரபூர்வ மொழி ஜமேக்கப் பன்னாட்டு ஆங்கிலம் (Jamaican Standard English) ஆகும், இது அரசாங்கம், சட்ட அமைப்பு, ஊடகம் மற்றும் கல்வி உட்பட 'பொது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது'. அதேவேளை, மக்களின் அன்றாட முதன்மைப் பேச்சு மொழியாக ஜமேக்கன் படோயிஸ் அல்லது பட்வா (Jamaican Patois or Patwa) எனப்படும் ஆங்கிலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கிரியோல் மொழி விளங்குகிறது. இவ்விரண்டும் ஒரு வட்டார மொழி மாற்றங்களுடன் உள்ளன. அது பேசுபவர்கள் சூழலைப் பொறுத்தும், யாரிடம் பேசுகிறார்கள் என்பதைப் பொறுத்தும் வெவ்வேறு பேச்சு நடையைக் கொண்டிருக்கின்றன. 'தூய' படோயிஸ், சில நேரங்களில் ஆங்கிலத்தின் ஒரு வட்டார வழக்காகக் கருதப்பட்டாலும், அது நிலையான ஆங்கிலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட, பரஸ்பரம் புரிந்துகொள்ள முடியாத (Mutually unintelligible) தனித்துவமான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இதன் பெரும்பான்மையான சொற்கள் ஆங்கிலத்திலிருந்து பெறப்பட்டவை எனினும், மொழியியலாளர்கள் இதையொரு தனித்துவமான சுயாதீன மொழியாகவே கருதுகின்றனர்.

ஜமேக்காவில் கத்தோலிக்கக் கிறீஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். ஆபிரிக்க வழித்தோன்றல்களான கறுப்பின மக்கள் நாட்டின் பெரும்பான்மைச் சமூகமாக விளங்கும் அதேவேளை, காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்ட இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த மக்களின் வழித்தோன்றல்களும் கணிசமாக வாழ்கின்றனர். இவர்களுடன் ஐரோப்பிய வெள்ளையின மக்களும், பல்வேறு இனங்களின் கலப்பின மக்களும் இணைந்து ஜமேக்காவின் பன்னாட்டுச் சமூகம் மற்றும் பண்பாட்டுப் பல்வகைமையை உருவாக்குகின்றனர்.

சுமார் 50 கிலோமீற்றர் அகலமும் 150 கிலோமீற்றர் நீளமும் கொண்ட இந்நாடு, நான்கு புறமும் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது. நாட்டின் மத்திய பகுதிகள் பெரும்பாலும் மலைப் பிரதேசங்களாகவும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகள் தாழ்நிலங்களாகவும் அமைந்துள்ளன. சுண்ணாம்புக் கற்பாறைகளும் செம்மண்ணும் காணப்படும் இந்நாட்டின் தாழ்நிலப் பகுதிகள் வெப்ப வலயத்துக்குரிய கால நிலையைக் கொண்டுள்ளன. எனினும், மலைப் பகுதிகளில் நிலவும் தட்பவெப்பநிலை இலங்கையின் கண்டிப் பிரதேசத்தை ஒத்துக் காணப்படுகிறது.

பல ஆறுகளையும் எழில்மிக்க நீர்வீழ்ச்சிகளையும் வளமான நிலப்பரப்பையும் கொண்ட தேசமாக ஜமேக்கா விளங்குகிறது. விவசாய நிலங்களில் அதிக சிரமமின்றி இயல்பாகவும் எளிதாகவும் விளையும் வேளாண் பொருட்களைக் கொண்டு வாழும் சாதாரண மக்களின் வாழ்வியல் முறை இங்கு பொதுவாகக் காணப்படுகின்றது. இயற்கை அளித்த வளமான சூழல் காரணமாக, மக்களின் அன்றாடக் கிராமிய வாழ்வில் கடின உழைப்பிற்கான தேவை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது என்பதை அங்குள்ள உள்ளூர்வாசிகளின் வாழ்வியல் அனுபவங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொது ஆண்டுக்கு முன்னரே மனிதர்கள் வாழ்ந்திராத நிலப்பரப்பாக இருந்த ஜமேக்கா, பொது ஆண்டின் ஆறாம் நூற்றாண்டளவில் தென் அமெரிக்காவிலிருந்து கடல் வழியாக வந்த மக்கள் குடியேறியதைத் தொடர்ந்து மனிதக் குடியிருப்பைக் கொண்ட தீவாக மாறியது. ஜமேக்கா தீவின் தோற்றமும் வரலாறும் அதன் பூர்வகுடி மக்களின் பண்பாடு, ஐரோப்பியர்களின் படையெடுப்புகள், காலனித்துவ ஆட்சி, அடிமைத் தனத்திற்கு எதிரான போராட்டங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை. ஜமேக்காவின் பூர்வகுடிகளாகக் கருதப்படும் அரவாக் (Arawak) மற்றும் டைனோ (Taíno) மக்கள் இத்தீவைத் தமது மொழியில் சைமேக்கா (Xaymaca) என அழைத்தனர். இப்பெயர் பொதுவாக 'மரமும் நீரும் நிறைந்த நிலம்' அல்லது 'நீரூற்றுகள் நிறைந்த நிலம்' எனப் பொருள்படுத்தப்படுகிறது. இது 'மரங்களும் ஊற்றுகளும் நிறைந்த நாடு' என்று அர்த்தத்தைக் கொடுக்கின்றது.

**"மேற்கத்திய, கரீபியன் மற்றும் ஆபிரிக்க இசை வடிவங்களின் உலகளாவிய அடையாளமாகக் கொண்டாடப்படும், நீண்ட பின்னல் கூந்தலைத் (Dreadlocks) தாங்கிய அக்கலைஞனின் தாயகமும், ரெகே (Reggae) உள்ளிட்ட உலகப் புகழ்பெற்ற இசை மற்றும் நடன வடிவங்களின் பிறப்பிடமும் ஜமேக்காவே ஆகும்."**

பொது ஆண்டிற்கு பின் 600-650 காலகட்டத்தில் ரெட்வேர் (Redware) எனப்படும் மக்கள் இங்கு முதலில் குடியேறினர். அதன் பிறகு பொ.ஆ.பி. 800 அளவில் தென் அமெரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த டைனோ பழங்குடியினர் இங்கு கிராமங்களை அமைத்து, விவசாயம் மற்றும் மீன்பிடித்தொழில் செய்து அமைதியாக வாழ்ந்து வந்தனர். பொ.ஆ.பி. 1494-இல் நாடுகளைக் கைப்பற்றி வளங்களைச் சுரண்டும் கடற்பயணி கிறிஸ்டோபர் கொலம்பஸ் இந்தத் தீவைக் கண்டறிந்தார். இதனைத் தொடர்ந்து பொ.ஆ.பி. 1509-ஆம் ஆண்டு முதல் ஸ்பானியர்கள் இங்கு குடியேறத் தொடங்கினர்.

பூர்வீகக் குடிகள் மீதான ஸ்பானிய மேலாதிக்கவாதிகள் மேற்கொண்ட கடுமையான அடிமை வேலைகள், சித்திரவதைகள் மற்றும் ஐரோப்பாவிலிருந்து பரவிய புதிய நோய்களை எதிர்கொள்ளும் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாததால், 60,000-க்கும் அதிகமாக இருந்த டைனோ பழங்குடியினர் முற்றிலும் அழிந்துபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் அன்று. பொ.ஆ.பி. 1655-இல் பிரித்தானிய ஆங்கிலேய காலனி ஆதிக்கவாதிகள் ஸ்பானியர்களிடமிருந்து இந்தத் தீவைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் வந்தபோது, ஸ்பானியர்களின் அடிமைகளாக இருந்த ஆபிரிக்கர்கள் தப்பித்து மலைப் பகுதிகளுக்குச் சென்று 'மரூன்கள்' (Maroons) என்ற சுதந்திரக் குழுக்களை உருவாக்கினர்.

பிரித்தானியர் ஜமேக்காவைத் தமது பேரரசின் பிரதான கரும்புத் தோட்டமாக மாற்றினர். இதற்காக ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து லட்சக்கணக்கான கறுப்பின மக்களைக் கட்டாயப்படுத்தி அடிமைகளாகக் கொண்டுவந்து கொடூரமான உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுத்தினர். இவர்களுடன் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையில் இந்தியா மற்றும் சீனாவிலிருந்தும் ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டுவந்து குடியேற்றினர். பிரித்தானிய அடிமைத்தனத்திற்கு எதிராக டாகி (Tacky), சார்ப் (Sharpe) போன்ற தலைவர்களின் தலைமையில் பல கிளர்ச்சிகள் வெடித்தன. இதன் விளைவாக, 1834-இல் அடிமை முறை ஒழிக்கப்பட்டு, 1838-இல் கறுப்பின மக்கள் ஓரளவிற்கு அடிமைத்தளையில் இருந்து விடுதலை பெற்றனர்.

20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மார்கஸ் கார்வி (Marcus Garvey) போன்ற தலைவர்களின் எழுச்சியாலும், 1930-களில் ஏற்பட்ட தொழிலாளர் புரட்சிகளாலும் பிரித்தானியாவிடம் இருந்து நாட்டு விடுதலைக் கோரிக்கை வலுப்பெறத் தொடங்கியது. இறுதியாக, 1962 ஒகஸ்ட் 6 அன்று ஜமேக்கா பிரிட்டிஸ் ஆட்சியிலிருந்து முழு விடுதலை பெற்று, சுதந்திர நாடாக உருவெடுத்தது. ஜமேக்காவின் மரூன்கள் (Jamaican Maroons) என்பது ஐரோப்பிய அடிமைத்தளையிலிருந்து தப்பித்து, ஜமேக்காவின் அடர்ந்த மலைப்பகுதிகளில் தங்களுக்கு என்று சுதந்திரமான சமூகங்களை உருவாக்கி, ஆங்கிலேயப் படைக்கு எதிராகப் பல தசாப்தங்களாகக் கொரில்லா போர் நடத்திய தீரமிக்க கறுப்பினப் பழங்குடியின மக்கள் ஆவர். அவர்களின் வியக்கத்தக்க வரலாறு, போர் உத்திகள் மற்றும் தற்போதைய நிலை குறித்த விரிவான விவரங்கள் ஜமேக்கா வரலாற்றில் மிகவும் முக்கியமானவை. 'மரூன்' என்ற வார்த்தை ஸ்பானிய மொழிச் சொல்லான 'சிமரோன்' (Cimarron) என்பதிலிருந்து உருவானது. இதற்கு 'விட்டுக் கொடுக்காத வீரம்' அல்லது 'தப்பியோடிய சுதந்திர விலங்கு / அடிமை' என்று பொருள்.

1655-இல் ஆங்கிலேயர்கள் ஜமேக்காவைத் தாக்கியபோது, அங்கு ஸ்பானியர்களின் கீழ் அடிமைகளாக இருந்த ஆபிரிக்கர்கள் மற்றும் எஞ்சியிருந்த டைனோ பழங்குடியினர் தப்பித்து ஜமேக்காவின் உட்புற மலைப்பகுதிகளுக்குச் சென்றனர். அவர்களே முதல் மரூன்கள். காலப்போக்கில் இவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்தனர். ஜமேக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள ப்ளூ மற்றும் ஜான் க்ரோ மலைகளில் குடியேறியவர்கள் மற்றும் ஜமேக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள கரடுமுரடான 'காக்பிட் நாடு' (Cockpit Country) என்ற மலைப்பகுதியில் குடியேறியவர்கள் என்றாக இரு குழுக்கள் உருவாகின.

மரூன்கள் தங்களின் தனித்துவமான உத்திகளான மறைந்திருந்து தாக்குதல் என்றான கெரில்லா தாக்குதல் முறைகளை கையாண்டு நவீன ஆயுதங்களுடன் இருந்த பிரித்தானிய இராணுவத்தை திணறடித்தனர். இதற்கு மலைகளின் கரடுமுரடான நிலப்பரப்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஆங்கிலேயப் படைகளை ஒழித்திருந்து வழிமறித்துத் தாக்கினர். கூடவே மரங்களின் இலைகள், தழைகள் மற்றும் கொடிகளைத் தங்கள் உடலில் சுற்றிக் கொண்டு காடுகளோடு காடாக மறைந்திருப்பர். ஆங்கிலேயப் வீரர்கள் மிக அருகில் வரும் வரை அவர்களால் மரூன்களைக் கண்டறிய முடியாது மறைந்து இருந்து தாக்குதல்களைத் தொடுத்தனர்.

மாட்டின் கொம்புகளால் செய்யப்பட்ட 'அபெங்' என்ற விசித்திரமான ஊதுகுழலை இவர்கள் பயன்படுத்தினர். இதன் மூலம் காடுகளுக்குள் பல மைல் தூரத்திற்குத் தங்களுக்குள் இரகசிய குறியீட்டுச் செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர். இராணி நேனி என்பவர் வின்ட்வர்ட் மரூன் பிரிவின் மிகச் சிறந்த பெண் தளபதி மற்றும் ஆன்மீகத் தலைவி. ஆங்கிலேயர்களின் தோட்டங்களைத் தாக்கி நூற்றுக்கணக்கான அடிமைகளை விடுவித்தவர். இராணுவ உத்திகளில் சிறந்து விளங்கிய இவர், இன்று ஜமேக்காவின் ஒரே பெண் தேசிய மாவீரராக போற்றப்படுகிறார். கேப்டன் குஜோ என்பவர் லீவர்ட் மரூன் பிரிவின் வலிமையான தலைவர். ஆங்கிலேயர்களுக்குப் பெரும் சிம்மசொப்பனமாக விளங்கி, அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வருவதற்கான ஆயுதப் போராட்டத்தை நடத்தியவர். போராட்டங்களில் ஏற்பட்ட தொடர் தோல்விகளால் சோர்வடைந்த ஆங்கிலேய அரசாங்கம், மரூன்களைப் போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்து அவர்களுடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி மரூன்களுக்கு மலைப் பகுதிகளில் சொந்தமாக நிலங்கள் வழங்கப்பட்டு, அவர்களின் சுயாதீன ஆட்சி மற்றும் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. பிரித்தானியர்கள் ஏற்படுத்திய தந்திரோபயமான நிபந்தனை ஒன்று கறுப்பின மக்களைப் பிரித்தாளுவதற்கு வழி வகை செய்தது. இந்த பிரித்தாளும் தந்திரோபாயம் பிரித்தானியாவின் காலனி ஆதிகத்தின் போது பல்வேறு நாட்களில் அவர்கள் கையாண்ட மிக மோசமான குழிபறிப்பு வேலையாகும். இந்த ஒப்பந்தத்தில் பிரித்தானியா முன்வைத்த நிபந்தனை இனி புதிய அடிமைகள் யாராவது தோட்டங்களில் இருந்து தப்பித்து மரூன்கள் பகுதிக்கு வந்தால், மரூன்கள் அவர்களைப் பிரித்தானியாவிடம் ஒப்படைக்க வேண்டும். இது பிற்காலத்தில் கறுப்பின மக்களிடையே சில பிரிவினைகளை ஏற்படுத்தியது. இன்றும் ஜமேக்காவில் மரூன்களின் வம்சாவளியினர் தங்களுக்கென்று தனித்துவமான கலாசாரத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

> **“பிரித்தானியர் ஜமேக்காவைத் தமது பேரரசின் பிரதான கரும்புத் தோட்டமாக மாற்றினர். இதற்காக ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து லட்சக் கணக்கான கறுப்பின மக்களைக் கட்டாயப்படுத்தி அடிமைகளாகக் கொண்டுவந்து கொடூரமான உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுத்தினர்.”**

இன்றும் ஜமேக்காவில் அகாம்பாங் (Accompong), மூர் டவுன் (Moore Town), சார்லஸ் டவுன் (Charles Town), ஸ்காட்ஸ் ஹால் (Scott's Hall) ஆகிய நான்கு முக்கிய மரூன் தன்னாட்சி கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தலைவர்களும் (Colonels), உள்ளூர் நிர்வாகக் குழுக்களும் உள்ளன. மூர் டவுன் மரூன்களின் பாரம்பரிய இசை, டிரம்ஸ் கலாசாரம் மற்றும் ஆன்மீகச் சடங்குகளை யுனெஸ்கோ தனது 'மனிதகுலத்தின் அழியாத கலாசார பாரம்பரியமாக' அங்கீகரித்துள்ளது. ஆனாலும் தமது மூத்த குடியினர் என்ற முதன்மையை இழந்து இரண்டாம் தர குடிகளாக தாம் ஆக்கப்பட்ட சமத்துவமற்ற நிலையை அவர்கள் தற்போதும் உணர்வதாக தற்போதைய கள நிலவரங்கள் சொல்கின்றன.

இந்த பூமியில் ஜமேக்கா என்ற தீவு எவ்வாறு உருவானது என்பதை புவியல் விஞ்ஞானத்தின் அடிப்படையில் நோக்கினால்... ஜமேக்கா தீவு பூமித்தட்டுகள் (Tectonic Plates) மற்றும் எரிமலைச் சீற்றங்களின் தொடர் நகர்வுகளால் கடலுக்கு அடியிலிருந்து மேலே எழும்பி உருவான ஒரு தீவாகும். இந்த எரிமலை வெடிப்புகள் 7.5 - 10 கோடி ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாக புவியியல் விஞ்ஞானம் கூறுகின்றது. நீர்மூழ்கி எரிமலைகளிலிருந்து வெளிவந்த லாவா பாறைகள் (Igneous rocks) ஒன்றுசேர்ந்து, கடலுக்கு அடியில் ஒரு பெரிய எரிமலை மலைத்தொடராக Igneous rocks உருவெடுத்தன. இதுவே ஜமேக்காவின் புவியியல் முதுகெலும்பாக அமைந்தது. காலப்போக்கில் இந்த எரிமலைகள் குளிர்ந்து, ஜமேக்கா நிலப்பரப்பு சில கோடி ஆண்டுகள் முழுமையாகக் கடலுக்கு அடியில் மூழ்கியிருந்தது. இந்த நீண்ட காலகட்டத்தில், கடலில் இருந்த பவளப்பாறைகள், கடல் வாழ் உயிரினங்களின் படிவுகள் ஆகியவை அந்த எரிமலைப் பாறைகளின் மீது அடுக்கு அடுக்காகப் படிந்தன. இவை பல மில்லியன் ஆண்டுகளில் அழுத்தப்பட்டு வெள்ளை சுண்ணாம்புப் பாறைகளாக Igneous rocks மாறின.

ஜமேக்கா தீவு தற்போதைய கரிபியன் தட்டு (Caribbean Plate) மற்றும் கோனாவ் நுண்தட்டு

(Gonâve Microplate) ஆகிய இரு தட்டுகள் சந்திக்கும் எல்லையில் சரியாக அமைந்திருக்கிறது. இந்த இரு தட்டுகளும் பக்கவாட்டில் ஒன்றோடொன்று உரசிக்கொண்டு மோதிய போது ஏற்பட்ட பிரம்மாண்ட அழுத்தத்தால், பக்கவாட்டில் நகர முடியாமல் பாறை அடுக்குகள் மேல்நோக்கித் தள்ளப்பட்டன. கடலுக்கு அடியில் இருந்த அந்தப் பிரம்மாண்ட மலைத்தொடர் மேலே எழுந்து இன்றைய ஜமேக்கா தீவாக உருவெடுத்தது. பூமித்தட்டுகள் மோதிக்கொண்ட இந்த நகர்வு இன்னும் நிற்கவில்லை. இந்தத் தட்டுகள் ஆண்டுக்குச் சுமார் 1 சென்டிமீட்டர் வேகத்தில் நகர்வதால், ஜமேக்காவின் புகழ்பெற்ற ப்ளூ மலைத்தொடர் (Blue Mountains) இன்றும் மிக மெதுவாக வளரந்து கொண்டே இருக்கிறது. இந்த வளருதல் என்பது இமய மலையை ஒத்த செயற்பாடு ஆகும்.

இன்று ஜமேக்காவின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பு இந்தச் சுண்ணாம்புப் பாறைகளால் ஆனது ஆக இருப்பதன் தரை விஞ்ஞானம் இதுதான். ஜமேக்காவின் பாக்சைட் தாதுக்கள், பூமித்தட்டுகள் உருவாக்கிய வெள்ளைச் சுண்ணாம்புப் பாறை மற்றும் எரிமலைச் சாம்பல் ஆகியவற்றின் தனித்துவமான வேதிவினையால்தான் உருவாயின. இந்தத் தீவின் நிலப்பரப்பில் சுமார் 20% பகுதி பாக்சைட் தாதுக்களால் மூடப்பட்டுள்ளது. இதுவே ஜமேக்காவை உலகின் முன்னணி அலுமினியத் தயாரிப்பு நாடுகளில் ஒன்றாக மாற்றியது. ஜமேக்காவின் பாக்சைட் மண் அடர்ந்த சிவப்பு நிறத்தில் இருப்பதற்குக் காரணம், அதில் கலந்துள்ள இரும்புத் தாதுக்களின் இருப்பு ஆகும். ஜமேக்காவில் பாக்சைட் தாது முதன்முதலில் 1869-இல் கண்டறியப்பட்டாலும், 1940 - 1950 கால கட்டத்தில்தான் இதன் வணிகரீதியான அகழ்வாராய்ச்சி தொடங்கியது.

அமெரிக்கா மற்றும் கனடா நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளால், ஜமேக்கா மிக வேகமாக வளர்ந்து 1957-ஆம் ஆண்டிற்குள் உலகின் மிகப்பெரிய பாக்சைட் உற்பத்தி நாடாக உருவெடுத்தது. பாக்சைட் சுரங்கங்கள் ஜமேக்காவிற்குப் பெரும் பொருளாதார வருவாயைத் தந்தாலும், அவை தற்காலத்தில் பெரும் சுற்றுச்சூழல் சவால்களையும் ஏற்படுத்தி வருகின்றன. மேற்பரப்புச் சுரங்கங்களுக்காகப் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பசுமையான காடுகளும் விவசாய நிலங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. சுருக்கமாகக் கூறின், நாம் இன்று பார்க்கும் ஜமேக்கா என்பது கடலுக்கு அடியில் தொடங்கி, பூமித்தட்டுகளின் மோதலால் மேலே தூக்கி நிறுத்தப்பட்ட ஒரு பிரம்மாண்ட மலையின் உச்சிப் பகுதி ஆகும்.

ஜமேக்காவின் 'காக்பிட் நாடு' (Cockpit Country) மற்றும் அங்குள்ள குகைகள் பூமித்தட்டுகளின் நகர்வாலும், மில்லியன் கணக்கான ஆண்டுகால மழைநீர் அரிப்பாலும் உருவான உலகப் புகழ்பெற்ற ஒரு விசித்திரமான புவியியல் அதிசயமாய் திகழ்கிறது. காலப்போக்கில், இந்த நீர் சுண்ணாம்புப் பாறைகளைக் கரைத்து, கூம்பு வடிவ மலைகளையும், அவற்றுக்கு இடையே ஆழமான கிண்ணம் போன்ற பள்ளத்தாக்குகளையும் உருவாக்கியது. மேற்பரப்பில் நீர் கரைந்து கீழே செல்லச் செல்ல, பூமிக்கு அடியில் பிரம்மாண்டமான ஒரு உலகமே உருவானது. காக்பிட் நாட்டின் அடியில் மட்டும் 1,200-க்கும் மேற்பட்ட நிலத்தடி குகைகள் மற்றும் பாதைகள் உருவாகி இருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளன.

காக்பிட் நாட்டின் மேற்பரப்பில் ஆறுகளோ, ஏரிகளோ கிடையாது. விழும் மழைநீர் அனைத்தும் குகைகளுக்குள் இறங்கி, பிரம்மாண்டமான நிலத்தடி நதிகளாக ஓடுகின்றன. ஜமேக்காவின் ஒட்டுமொத்த நிலத்தடி நன்னீர் தேவையில் சுமார் 40% தண்ணீரை இந்த குகை அமைப்புகள் தான் சேமித்து வழங்குகின்றன. இந்தக் குகைகள் வெறும் பாறைகள் மட்டுமல்ல, அவை ஜமேக்காவின் வரலாற்றையும், பல்லுயிர் பெருக்கத்தையும் தாங்கி நிற்கின்றன. இந்த குகைகள்தான் ஜமேக்காவின் பழங்குடியினரின் வீரம் செறிந்து போராட்டத்திற்கு அரணாக நின்று உதவிகளைப் புரிந்தன.

இக்காரணிகளே ஜமேக்காவின் வரலாற்றை வீரம் செறிந்ததாக மாற்றுவதற்கான முதன்மை ஆதாரங்களாக அமைந்தன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஸ்பானிய ஆதிக்கவாதிகளிடமிருந்து பிரித்தானியர்கள் ஜமேக்காவைக் கைப்பற்றிய பின்னர், பிரித்தானியக் காலனித்துவவாதிகளுக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போர்களில் இம்மத்திய மலைப் பகுதிகளில் அமைந்த குகைகளையே போராளிகள் தமது பாதுகாப்புப் பதுங்கு குழிகளாகவும் மறைவிடங்களாகவும் பயன்படுத்தினர். அந்த வகையில், ஜமேக்காவின் புவியியல் நில அமைப்பானது அதன் விடுதலை வரலாற்றில் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. குறிப்பாக, லீவர்ட் மரூன் (Leeward Maroons) சமூகத்தைச் சேர்ந்த மக்கள், பிரித்தானியக் காலனித்துவ இராணுவத்தின் தாக்குதல்களிலிருந்து தப்பவும் எதிர்த்துப் போராடவும் அடர்ந்த காக்பிட் (Cockpit Country) காடுகளையும், அதன் சிக்கலான குகைப் பாதைகளையுமே தங்களின் இரகசியப் பதுங்குமிடங்களாகப் பயன்படுத்தினர். ஆங்கிலேயப் படைகளால் இக்குகை வழிகளைக் கண்டறியவே முடியவில்லை.

வின்ட்சர் குகை (Windsor Cave) போன்ற சில முக்கியக் குகைகளில், ஜமேக்காவின் பூர்வகுடிகளான டைனோ மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வரைந்த பாறை ஓவியங்கள் மற்றும் செதுக்கல்கள் (Cave paintings) இன்றும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலத்தடி குகைகள் பல அரிய வகை வௌவால்களின் இருப்பிடமாக உள்ளன.

மாலை நேரத்தில் ஆயிரக்கணக்கான வௌவால்கள் குகை முகப்பிலிருந்து ஒரே நேரத்தில் வெளியேறும் காட்சி ஒரு இயற்கை அதிசயமாகப் பார்க்கப்படுகிறது. இதனைக் காணும் போது உடல் சிலிர்த்துப் போகும் உணர்வலைகளும் ஏற்படுகின்றன.

ராஸ்தாஃபாரியன் இயக்கம் (Rastafari movement) என்பது 1930-களில் ஜமேக்காவின் ஏழ்மையான கறுப்பின மக்களிடையே உருவான ஒரு ஆன்மீக மற்றும் சமூக-அரசியல் இயக்கமாகும். இது வெறும் மதமாக மட்டுமில்லாமல், காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு சுதந்திர வாழ்க்கை முறையாக உலகளவில் பரவியது.

ஜமேக்காவின் புகழ்பெற்ற கறுப்பின தேசியவாதத் தலைவர் மார்கஸ் கார்வி (Marcus Garvey), 1920-களில் கறுப்பின மக்களின் விடிவிற்காக ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறினார். அது 'ஆபிரிக்காவை நோக்கிப் பாருங்கள், அங்கே ஒரு கறுப்பின அரசர் முடிசூட்டப்படுவார், அவரே உங்களின் மீட்பர்'. மார்கஸ் கார்வி இந்த இயக்கத்தை நேரடியாகத் தொடங்கவில்லை என்றாலும், ராஸ்தாஃபாரிகள் இவரை ஒரு தீர்க்கதரிசியாகக் கருதுகின்றனர். கார்வி கூறியதற்கு இணங்க, 1930 நவம்பர் 2-ஆம் திகதி, எத்தியோப்பியாவின் அரசராக ராஸ் தஃபாரி மகோனென் (Ras Tafari Makonnen) முடிசூட்டப்பட்டு, முதலாம் ஹெய்லி செலாசி (Haile Selassie I) என்ற பெயரைப் பெற்றார்..

ஜமேக்காவின் கறுப்பின மக்களில் ஒரு பகுதியினர் ஹெய்லி செலாசியைத் தங்களின் 'கருப்பு மெசியா' (Black Messiah) என்றும் வாழும் கடவுள் என்றும் கருதினர். 'ராஸ் தஃபாரி' என்ற அவரது பெயரிலிருந்தே 'ராஸ்தாஃபாரி' (Rastafari) என்ற பெயர் தோன்றியது. லியோனார்ட் ஹோவெல் (Leonard Howell) போன்ற ஆரம்பகாலச் செயற்பாட்டாளர்கள் இவ்வியக்கத்தை ஜமேக்காவில் ஒழுங்கமைத்து, மக்களிடையே பரப்பினர்.

ஜமேக்காவின் ராஸ்தாஃபாரிகள் மேற்கத்திய முதலாளித்துவச் சமூகம், ஒடுக்குமுறை, காலனித்துவ ஆதிக்கம் ஆகியவற்றை 'பாபிலோன்' (Babylon) எனக் குறிப்பிட்டு எதிர்க்கின்றனர். தங்களின் மூதாதையர் தாயகமான ஆபிரிக்காவை, குறிப்பாக எத்தியோப்பியாவை, 'சீயோன்' (Zion) எனக் கருதி, அங்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும் என்று நம்புகின்றனர். பைபிள் போதனைகளின் அடிப்படையில், தலைமுடியைக் கத்தரிக்காமல் இயற்கையாக வளர்த்து ஜடாமுடியாக வைத்துக்கொள்கின்றனர். இது அவர்களின் ஆன்மீக அடையாளமாகவும், 'யூதாவின் சிங்கம்' (Lion of Judah) என்னும் குறியீட்டுடனும் தொடர்புபடுத்தப்படுகிறது. இவர்களில் பலர் இயற்கையான, பதப்படுத்தப்படாத சைவ உணவுகளை உட்கொண்டு, உப்பு, செயற்கைச் சேர்மங்கள், மதுபானங்கள் ஆகியவற்றைத் தவிர்க்கின்றனர். எனினும், உணவுப் பழக்கங்களில் அனைவரும் ஒரே முறையைப் பின்பற்றுவதில்லை. ராஸ்தாஃபாரிகளில் சிலர் கஞ்சாவைச் சாதாரண போதைப்பொருளாகக் கருதாமல், ஆன்மீக விழிப்புணர்வுக்கும் தியானத்துக்கும் உதவும் புனித மூலிகையாகக் கருதி, வழிபாட்டுச் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர்.

"ரெகே இசை என்பது வெறும் பொழுதுபோக்கிற்கான இசை வடிவம் அல்ல. மாறாக அது ஜமேக்காவின் ஏழ்மை, ஒடுக்குமுறை, காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டம் மற்றும் அரசியல் எழுச்சியின் பின்னணியில் உருவான ஒரு புரட்சிகரமான இசை வடிவமாகும். 1962-இல் ஜமேக்கா பிரித்தானியா ஆட்சியிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலகட்டத்தை ஒட்டி உருவான இந்த இசை, மிகக் குறுகிய காலத்தில் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியது."

இப்பண்பாட்டு இயக்கத்தின் அடிப்படையில்தான் தற்போதைய ஜமேக்காவின் தேசியக் கொடி வடிவமைக்கப்பட்டு விளங்குகின்றது. இருப்பினும், ராஸ்தாஃபாரிய இயக்கத்தின் அடையாள வண்ணங்களில் ஒன்றான சிவப்பு நிறம் ஜமேக்காவின் தேசியக் கொடியில் இணைக்கப்படவில்லை.

ராஸ்தாஃபாரிய இயக்கத்தைப் பின்பற்றுபவர்கள், எத்தியோப்பியக் கொடியின் வண்ணங்களான சிவப்பு (விடுதலைப் போராட்டத்தில் சிந்திய ரத்தம்), பச்சை (ஆபிரிக்காவின் இயற்கை வளம்), தங்கம் / மஞ்சள் (நாட்டின் செல்வம்) மற்றும் ஆபிரிக்க வழித்தோன்றல்களான கறுப்பின மக்களைக் குறிக்கும் கறுப்பு ஆகிய வண்ணங்களையே தங்களின் முதன்மைப் பண்பாட்டு அடையாளமாகப் பயன்படுத்துகின்றன.

1960 மற்றும் 70-களில் இந்த இயக்கம் உலகளவில் பரவியதற்கு முக்கியக் காரணமாக ஜமேக்காவின் ரெகே இசை இருந்தது. ரெகே (Reggae) இசை என்பது வெறும் பொழுதுபோக்கிற்கான இசை வடிவம் அல்ல. மாறாக அது ஜமேக்காவின் ஏழ்மை, ஒடுக்குமுறை, காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டம் மற்றும் அரசியல் எழுச்சியின் பின்னணியில் உருவான ஒரு புரட்சிகரமான இசை வடிவமாகும். 1962-இல் ஜமேக்கா பிரித்தானியா ஆட்சியிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலகட்டத்தை ஒட்டி உருவான இந்த இசை, மிகக் குறுகிய காலத்தில் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகப் புகழ்பெற்ற இசைக்கலைஞர் பொப் மார்லி ராஸ்தாஃபாரி தத்துவத்தை ஏற்றுக்கொண்டு, தன் பாடல்களின் மூலம் அமைதி, அன்பு, சமத்துவம் மற்றும் பாபிலோனுக்கு எதிரான புரட்சிக் கருத்துகளை உலகம் முழுவதும் கொண்டு சேர்த்தார்.

பர்னிங் ஸ்பியர் (Burning Spear) போன்ற பிற இசைக் கலைஞர்களும் இந்த ஆன்மீகக் கொள்கைகளை உலக அரங்கில் பிரபலமாக்கினர். இன்று ராஸ்தாஃபாரியன் இயக்கம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் சுமார் 10 இலட்சம் உலகளாவிய பின்பற்றுபவர்களுடன் ஒரு அமைதியான தத்துவ இயக்கமாகத் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது.

1962 ஓகஸ்ட் 6-ஆம் திகதி ஜமேக்கா சுதந்திரம் பெற்றபோதிலும், அங்கு நிலவிய வறுமை, வேலையின்மை, வர்க்கப் பாகுபாடு ஆகியவை தொடர்ந்தன. கிங்ஸ்டன் (Kingston) நகரின் ட்ரென்ச் டவுன் (Trench Town) போன்ற பகுதிகளில் வாழ்ந்த ஏழைக் கறுப்பின இளைஞர்களின் ஆதங்கம் இசையாக வெளிப்பட்டது. ஜமேக்காவின் பூர்வீக இசை வடிவங்களான ஸ்கா (Ska), ராக்ஸ்டெடி (Rocksteady) ஆகியவற்றிலிருந்து, அவற்றைவிட மெதுவான தாள அமைப்பைக் கொண்ட ரெகே (Reggae) இசை 1960-களின் இறுதியில் உருவானது. பாஸ் கிட்டாரின் (Bass Guitar) அழுத்தமான இசையும், வழக்கமான தாளத்தின் இடைவெளிகளில் ஒலிக்கும் 'ஆஃப்-பீட்' (Off-beat) தாள அமைப்பும் இதன் தனித்துவமான கூறுகளாக அமைந்தன. ஜமேக்காவின் ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஊடகமாக ரெகே இசை வளர்ந்தது. இந்த இசையை உலகளவில் பிரபலப்படுத்தி, சமூக அநீதிக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான குரலாக மாற்றியதில் பொப் மார்லியின் (Bob Marley) பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரத்தை பெற்ற பின்னரான தேர்தல் அரசியலில் ஈடுபட்ட 1978-இல் ஜமேக்காவின் இரு பெரும் அரசியல் கட்சிகளுக்கிடையே (இடதுசாரி கட்சி PNP மற்றும் வலதுசாரிக் கட்சி JLP) உள்நாட்டுப் போர் போன்ற வன்முறை வெடித்த தருணத்தில், பாப் மார்லி துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பிப் பிழைத்தார். 1978-இல் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கச்சேரியான 'ஒன் லவ் அமைதி கச்சேரி' (One Love Peace Concert) பாப் மார்லி மேடையில் வைத்து இரு எதிரெதிர் அரசியல் கட்சித் தலைவர்களையும் கைகளைக் கோர்க்கச் செய்து அமைதியை நிலைநாட்டினார். இது ரெகே இசையின் அமைதிக்கான ஆற்றலை உலகிற்கு நிரூபித்தது. ரெகே இசை ஜமேக்காவின் எல்லைகளைத் தாண்டி உலக வரலாற்றில் பல முக்கியத் தாக்கங்களை ஏற்படுத்தியது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு எதிராக நிலவிய நிறவெறிக்கு (Apartheid) எதிரான போராட்டத்திலும் ரெகே இசை முக்கிய பங்கு வகித்தது. பாப் மார்லியின் War, Redemption Song போன்ற பாடல்கள் ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்களாகவும், விடுதலைப் போராட்டங்களுக்கு உத்வேகம் அளிப்பவையாகவும் அமைந்தன. 1980-ஆம் ஆண்டு ஜிம்பாப்வே சுதந்திரம் பெற்றபோது நடைபெற்ற அதிகார பூர்வக் கொண்டாட்டத்தில் பாப் மார்லி நேரடியாகப் பங்கேற்றுப் பாடினார்.

> ***1978-இல் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கச்சேரியான 'ஒன் லவ் அமைதி கச்சேரி' (One Love Peace Concert) பாப் மார்லி மேடையில் வைத்து இரு எதிரெதிர் அரசியல் கட்சித் தலைவர்களையும் கைகளைக் கோர்க்கச் செய்து அமைதியை நிலை நாட்டினார். இது ரெகே இசையின் அமைதிக்கான ஆற்றலை உலகிற்கு நிரூபித்தது. ரெகே இசை ஜமேக்காவின் எல்லைகளைத் தாண்டி உலக வரலாற்றில் பல முக்கியத் தாக்கங்களை ஏற்படுத்தியது.***

1970-களில் இங்கிலாந்துக்கு இடம்பெயர்ந்த ஜமேக்கா மக்களின் வழியாக ரெகே இசை அங்கு பரவலடைந்தது. பிரித்தானியச் சமூகத்தில் நிலவிய இனப் பாகுபாட்டுக்கு எதிராகக் குரலெழுப்பிய இளைஞர்களிடமும் இந்த இசை செல்வாக்குப் பெற்றது. ரெகே இசை, பங்க் ராக் (Punk Rock) உள்ளிட்ட பிற இசை வடிவங்களுடனான உரையாடலுக்கும் கலப்புக்கும் வழிவகுத்தது. குறிப்பாக, தி கிளாஷ் (The Clash), யு2 (U2) போன்ற இசைக்குழுக்களின் படைப்புகளில் ரெகே இசையின் தாக்கத்தைக் காண முடிகிறது.ரெகே இசை ஹிப்-ஹாப் (Hip-hop), ராப் (Rap) உள்ளிட்ட இசை வடிவங்களின் வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு, ஜமேக்காவின் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் அனுபவங்களிலிருந்து உருவான ரெகே இசை, சமூக அநீதிக்கும் இனப் பாகுபாட்டுக்கும் எதிரான குரலாக உலகளாவிய இசைப் பரப்பில் தனித்துவமான இடத்தைப் பெற்றது.

ஜமேக்காவில் பிறந்து அமெரிக்காவின் நியூயார்க் நகருக்குக் குடிபெயர்ந்த டிஜே கூல் ஹெர்க் (DJ Kool Herc), ஜமேக்காவின் 'டோஸ்டிங்' (Toasting) எனப்படும் இசையின் இடையே பேசும் பாணியிலிருந்தும், ரெகே இசை மரபிலிருந்தும் தாக்கம் பெற்றார். 1970-களில் நியூயார்க்கில் ஹிப்-ஹாப் கலாசாரம் உருவாகவும் வளரவும் அவர் முக்கிய பங்களிப்புச் செய்தார். ராஸ்தாஃபாரி இயக்கத்தின் அமைதி, அன்பு, உலகளாவிய சகோதரத்துவம் (One Love), ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனை ஆகியவற்றையும் ரெகே இசை உலகெங்கிலும் உள்ள விளிம்புநிலை மக்களிடம் கொண்டு சேர்த்தது.

ஜமேக்காவின் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வனுபவங்களிலிருந்து வெளிப்பட்ட ரெகே இசை, இன்று உலகெங்கும் உள்ள மனித உரிமைப் போராளிகள், சமூக மாற்றத்தை விரும்புவோர், இசைப் பிரியர்கள் ஆகியோரின் உணர்வுகளை இணைக்கும் உலகளாவிய மொழியாகத் திகழ்கிறது. ஈழத்துத் தமிழ் நாட்டுக்கூத்துகளும் மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் சமூக முரண்பாடுகளையும் வெளிப்படுத்திய கலை வடிவங்களாகும். அவற்றில் பறை உள்ளிட்ட இசைக்கருவிகளின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. ஜமேக்காவின் வரலாற்றையும் பண்பாட்டையும் பேசும்போது, அதன் இசை மரபைப் போலவே, ஆபிரிக்க வேர்களையும் பூர்வீகச் சமையல் மரபுகளையும் இணைத்துப் புகழ்பெற்ற 'ஜெர்க் சிக்கன்' (Jerk Chicken) உணவுப் பாரம்பரியத்தையும் தவிர்க்க முடியாது. இசையும் உணவும் ஒரு மக்களின் வரலாறு, அடையாளம், எதிர்ப்பு, வாழ்வியல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.

உலகப் புகழ்பெற்ற ஜமேக்காவின் 'ஜெர்க் சிக்கன்' (Jerk Chicken) சமையல் மரபு, மரூன் மக்களின் உணவுப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. ஜமேக்காவின் 'ஜெர்க்' (Jerk) சமையல் முறை என்பது வெறும் உணவு தயாரிக்கும் முறையன்று.

அடிமைத்தனத்திலிருந்து தப்பி, மலைப்பகுதிகளில் வாழ்ந்து போராடிய மரூன் மக்கள், உணவைப் பதப்படுத்திப் புகையில் வேகவைக்கும் முறைகளைக் கையாண்டு தமது வாழ்வாதாரத்தைப் பேணினர். இவ்வகையில், ஜெர்க் சமையல் மரபு அவர்களின் உயிர்வாழ்வுத் தந்திரங்களையும் பண்பாட்டு அடையாளத்தையும் சுதந்திர வேட்கையையும் பிரதிபலிக்கும் மரபாகக் கருதப்படுகிறது. காடுகளில் தங்கியிருந்தபோது புகையின்றி, மறைமுகமாக நிலத்தடி அடுப்புகளில் இறைச்சியைச் சமைப்பதற்காக இந்த காரசாரமான மசாலா முறையை அவர்கள் கண்டுபிடித்தனர்.

ஜெர்க் சமையலின் தனித்துவமான கூறுகளில் முக்கியமானது, ஜமேக்காவில் வளரும் பிமெண்டோ (Pimento) எனப்படும் ஆல்ஸ்பைஸ் மரத்தின் பயன்பாடாகும். மரூன் மக்கள் நிலத்தடிக் குழிகளில் இறைச்சியை வேகவைக்கும்போது, சாதாரண விறகுகளுக்குப் பதிலாகப் பிமெண்டோ மரக்கட்டைகளையும் அதன் இலைகளையும் பயன்படுத்தினர். இம்மரத்திலிருந்து வெளிப்படும் புகை, இறைச்சிக்குக் கிராம்பு, இலவங்கப்பட்டை ஆகியவற்றை நினைவூட்டும் நறுமணத்தையும் தனித்துவமான சுவையையும் வழங்கியது. மேலும், புகை இறைச்சியைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கவும் உதவி யது. 'ஜெர்க்' (Jerk) என்ற சொல், உலர்த்தப்பட்ட இறைச்சியைக் குறிக்கும் ஸ்பானியச் சொல்லான 'Charqui' என்பதிலிருந்து மருவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஜமேக்காவின் பாரம்பரிய ஜெர்க் மசாலாவின் (Jamaican Jerk Marinade) முக்கியக் கூறாக ஸ்காட்ச் பொனெட் மிளகாய் (Scotch Bonnet Pepper) விளங்குகிறது. இது உணவுக்குக் காரத்தை வழங்குவதுடன், கரீபியன் உணவுகளுக்கே உரிய தனித்துவமான நறுமணத்தையும் அளிக்கிறது. பாரம்பரிய ஜெர்க் மசாலா ஆல்ஸ்பைஸ், ஸ்காட்ச் பொனெட் மிளகாய், வெங்காயம், பச்சை வெங்காயத்தாள் (Scallions) ஆகிய நான்கு முக்கியக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுடன் இஞ்சி, பூண்டு, தைம் போன்ற பொருட்களும் சேர்க்கப்படுகின்றன. ஜமேக்காவின் பாரம்பரிய முறையில், இந்த மசாலாக் கலவை முற்றிலும் நைசாக அரைக்கப்படாமல், சற்றுக் கொரகொரப்பான பதத்தில் தயாரிக்கப்படுகிறது.

மரூன்கள் மலைப்பகுதிகளில் பயன்படுத்திய பாரம்பரிய ஜெர்க் சமையல் முறை, 20-ஆம் நூற்றாண்டில் ஜமேக்காவின் கடற்கரைப் பகுதிகளுக்கும் பரவியது. குறிப்பாக, போஸ்டன் கடற்கரை (Boston Beach) இச்சமையல் மரபின் முக்கிய மையமாக விளங்கியது. இன்று ஜமேக்காவின் வீதியோர உணவகங்களில் இரும்பு எண்ணெய்ப் பேரல்களைப் பாதியாக வெட்டி, அவற்றில் பிமெண்டோ மரக்கட்டைகளை எரியவிட்டுத் தயாரிக்கப்படும் ஜெர்க் சிக்கன் (Jerk Chicken), ஜெர்க் போர்க் (Jerk Pork) ஆகியவை உலகப் புகழ்பெற்ற உணவுகளாக விளங்குகின்றன. ஜெர்க் சிக்கன் உலகளவில் பிரபலமான உணவாக இருந்தாலும், அதன் பின்னணியில் ஜமேக்காவின் வரலாறும் மரூன் மக்களின் வாழ்வியல் அனுபவங்களும் அடங்கியுள்ளன. எனினும், ஜமேக்காவின் தேசிய உணவாகக் கருதப்படுவது 'அக்கீ அண்ட் சால்ட்ஃபிஷ்' (Ackee and Saltfish) ஆகும். அக்கீ எனப்படும் பழத்தையும் உப்பிட்டு உலர்த்திய மீனையும் சேர்த்துத் தயாரிக்கப்படும் இவ்வுணவு, வெங்காயம், தக்காளி, மிளகாய் போன்றவற்றுடன் சமைக்கப்படுகிறது. எளிமையான தயாரிப்பு முறையைக் கொண்ட இவ்வுணவு, ஜமேக்காவின் உணவுப் பண்பாட்டில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

ஜமேக்காவின் வரலாற்றை, அதன் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டங்களையும், அந்தப் போராட்டங்களுக்குத் தனது நாட்டின் இயற்கையாக அமைந்த காடுகளையும் குகைகளையும் பயன்படுத்திய விதத்தையும் தவிர்த்துப் பேச முடியாது. சுதந்திரத்திற்குப் பின்னரும் சம உரிமையுடனும் சமத்துவத்துடனும் வாழ்வதற்காக மக்கள் முன்னெடுத்த போராட்டங்களையும், உலகளாவியரீதியில் ஒடுக்கப்படும் கறுப்பின மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவாக ஒலித்த ரெகே இசையையும், இவற்றின் பின்னணியில் விளங்கிய அடித்தட்டு மக்களின் ஆன்மீக நம்பிக்கைகளையும் இணைத்தே ஜமேக்காவின் வரலாற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று, ஜமேக்காவின் தனித்துவமான உணவுப் பண்பாட்டையும் தனித்துப் பார்க்க முடியாது. அதன் உணவு மரபுகளுக்குள் பொதிந்துள்ள இயற்கையோடு இயைந்த வாழ்வியல் அனுபவங்களையும், இயற்கைச் சூழலைத் தமது உயிர்வாழ்வுக்கும் விடுதலைப் போராட்டங்களுக்கும் பயன்படுத்திய வரலாற்றையும் இணைத்தே ஆராய வேண்டும். இவற்றை வெறும் வரலாற்றுச் செய்திகளாகக் கருதாமல், ஒடுக்குமுறைக்கு உள்ளாகித் தமது உரிமைகளுக்காகப் போராடும் உலக மக்களுக்கு அவை வழங்கும் வரலாற்றுப் பாடங்களாகப் புரிந்துகொள்வது அவசியம். குறிப்பாக, இலங்கையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் சமூகங்களாக வாழும் நாம், ஜமேக்காவின் வரலாற்றையும் அதன் போராட்ட அனுபவங்களையும் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போராட்டங்களின் படிப்பினைகளை எமது தேசத்தின் சமூக, அரசியல் சூழலுக்கு ஏற்பத் தகவமைத்துக்கொள்வதன் மூலமே சமத்துவமும் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படும் வாழ்வை நோக்கி முன்னேற முடியும்.

James@thaiveedu.com

சுப்ரமணியம் ஜெயசீலன்

# விமானப் போக்குவரத்தில் ஜி.பி.எஸ்-இனால் ஏற்படும் சவால்கள்

உலகின் மிகவும் பாதுகாப்பான போக்குவரத்து சாதனங்களில் ஒன்றாக விமானங்கள் பொதுவாகக் கருதப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் பயன்படுத்தப்படும் தொழினுட்பங்கள், ஆளணிவளம் உள்ளிட்ட பல்வேறு ஏதுக்களினால் விமானப் பயணங்கள் பொதுவாக மிகவும் பாதுகாப்பானவை எனக் கருதப்படுகின்றது. எனினும், அண்மைய நாட்களில் உலகில் நிலவிவரும் போர்ச் சூழல் மற்றும் தொழினுட்ப வளர்ச்சி போன்ற காரணிகளினால் விமானப் போக்குவரத்திற்கு பல்வேறு சவால்கள் ஏற்பட்டு ள்ளதாக நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

குறிப்பாக, விமானப் போக்குவரத்து நிபுணர்களும் விமானிகளும் இது தொடர்பான எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளனர். நாம் பொதுவாக அலைபேசிகளிலும் படகுகள், கப்பல்கள் உள்ளிட்ட பல்வேறு சாதனங்களில் பயன்படுத்தும் ஜி.பி.எஸ் (GPS) என்ற தொழினுட்பத்தின் கோளாறுகள் காரணமாக விமானப் போக்குவரத்து சவால்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜி.பி.எஸ் தொழினுட்பம் எவ்வாறு செயற்படுகின்றது?

பூமியில் ஒருவர் அல்லது ஒரு சாதனம் இருக்கும் இடத்தையும் நேரத்தையும் துல்லியமாகக் கண்டறிய இந்த ஜி.பி.எஸ் அல்லது குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (Global Positioning System) என்ற செயற்கைக்கோள் வழித்தட அமைப்பைப் பயன்படுத்துகின்றோம். எமது பூமியைச் சுற்றி சுமார் 30-க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்கள் சுமார் 20,000 கிலோமீட்டர் உயரத்தில் சஞ்சரிக்கின்றன. இவை தங்களின் துல்லியமான நேரம் மற்றும் இருப்பிடத் தகவல்களை வானொலி அலைகள் ஊடாக பூமிக்குத் தொடர்ச்சியாக அனுப்பி வைக்கின்றன. ஒருவர் அல்லது ஒரு பொருளின் துல்லியமான இடம், அதன் நேரம் என்பனவற்றைக் கண்டறிவதற்காக பொதுவாக சுமார் நான்கு செயற்கைக் கோள்களின் சமிக்ஞைகள் ஒருசேர பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக ஒரு செயற்கைக்கோளிலிருந்து கிடைக்கும் சமிக்ஞைகள் மூலம் அண்ணளவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இரண்டு செயற்கைக்கோள்களில் கிடைக்கும் சமிக்ஞைகள் ஊடாக அதைவிட ஓரளவு வலுவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மூன்றாவது செயற்கைக்கோளைக் கொண்டு கிடைக்கும் சமிக்ஞை தகவல்களை ஆய்வு செய்வதன் மூலம் ஒரு பொருளின் துல்லியமான புள்ளியைக் கண்டறிய முடியும். அதாவது அகலாங்கு மற்றும் உயரம் என்பனவற்றின் அடிப்படையில் ஒரு பொருள் அல்லது நபரின் இருப்பிட த்தைக் கண்டறிந்து கொள்ள முடியும். மேலும் 4 செயற்கைக்கோள்களில் சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள் வதன் மூலம் கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்திலும், எவ்வளவு நேரத்திலும் இருக்கின்றனர் போன்ற மிகத் துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஜி.பி.எஸ் பயன்பாடும் தற்போதைய சவால்களும்:

இந்த ஜி.பி.எஸ் தொழினுட்பமானது வழிசெலுத்துதல் (Navigation) அல்லது தேடுதல் போன்றவற்றுக்குப் பயன் படுத்தப்படுகின்றது. குறிப்பாக, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கும், போக்குவரத்து நெரிசல்களைக் கண்டறிந்து கொள்வதற்கும், வாகனங்கள் செல்லும் பாதையைக் கண்காணிப்பதற்கும், விமானம் அல்லது கப்பல் போக்குவரத்தின்போது கடல் மற்றும் வான் வழியின் பாதுகாப்பான பாதைகளை அறிந்து கொள்வதற்கும், அவசரகால மீட்புப் பணிகளின்போது பாதிக்கப்பட்ட நபர்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிந்து உதவுவதற்கும் இந்த ஜி.பி.எஸ் தொழினுட்பம் வழியமைக்கின்றது.

எனினும், அண்மைய நாட்களாக ஜி.பி.எஸ் அல்லது குளோபல் பொசிஷனிங் செயற்கைக்கோள்களில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் பிழையானவையாக இருப்பதாகவும், அவை விமானிகளின் கட்டுப்பாட்டு அறைகளில்

prasadbatti@gmail.com

பிழையான தகவல்களை வழங்குவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது விமானப் போக்குவரத்தின் போது பெரும் அச்சத்தையும் பாதுகாப்பற்ற தன்மையையும் உருவாக்கும் என விமானப் போக்குவரத்து துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## போர்ச் சூழலும் சமிக்ஞை இடையூறுகளும்:

போர் நிலவும் சூழலில் இந்த ஜி.பி.எஸ் சமிக்ஞைகளின் இடையூறானது நீண்டகால சிக்கலாக உருவாகியுள்ளது. மத்திய கிழக்கு, பால்டிக் கடல் மற்றும் கருங்கடல் போன்ற பகுதிகளில் தற்பொழுது இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் விமானங்களில் ஜி.பி.எஸ் சமிக்ஞை குறியீடுகளில் குளறுபடிகள் பதிவாகியுள்ளன.

ஜி.பி.எஸ் சமிக்ஞைகளில் ஏற்படுத்தப்படும் இடையூறானது, விமானம் மெய்யாகவே பறக்கும் உயரம் பாதுகாப்பான நிலையில் காணப்பட்டாலும், இந்த சமிக்ஞை இடையூறுகளினால் ஆபத்தான நிலைமைகள் எனக் காண்பிக்கக்கூடிய மாயத்தோற்ற நிலை காணப்படுகிறது. இதனால் சில வேளைகளில் வழமைக்கு மாறான அடிப்படையில் எச்சரிக்கைகள் விடுக்கப்படக்கூடிய அபாயங்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது, விமானங்கள் சரியான உயரத்தில் பறந்தாலும் ஜி.பி.எஸ் சமிக்ஞைகளில் ஏற்படக்கூடிய குளறுபடிகளினால் அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்படலாம் எனவும், இது தேவையற்ற பதற்றத்தையும் அவசர நடவடிக்கைகளையும் எடுக்க விமானங்களை உந்தக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சர்வதேச விமானிகள் சங்கத்தின் எச்சரிக்கை:

அண்மைய நாட்களாக ஜி.பி.எஸ் சமிக்ஞைக் கோளாறுகள் அதிக அளவில் பதிவாகின்றன எனவும், தற்பொழுது இது ஒரு சாதாரண நிகழ்வாக உருவாகி வருவதாகவும் சர்வதேச விமானிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் (IFALPA) தலைவர் கேப்டன் ரொன் ஹே (Ron Hay) குறிப்பிடுகின்றார். இந்தச் சங்கங்களின் கூட்டமைப்பின்கீழ் 70-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 160,000 விமானிகள் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் டெல்டா விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றி வரும் ரொன் ஹே, இந்த எச்சரிக்கைகள் சாதாரணமாகப் பழகிப்போவதால் உண்மையான சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறும் அபாய எச்சரிக்கைகள் குறித்து விமானிகள் நம்பிக்கை இழந்துவிடக்கூடும் எனவும், இது ஓர் ஆபத்தான நிலைமை எனவும் அவர் அச்சம் வெளியிடுகின்றார்.

இந்த ஜி.பி.எஸ் சமிக்ஞை இடையூறுகள் ஒழுங்கற்ற தகவல்களை வழங்குவதனால் பல நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ள நேரிடுவதாக அவர் குறிப்பிடுகின்றார். விமானங்களின் கட்டுப்பாட்டு அறையின் திரையில் காண்பிக்கப்படும் விமானத்தின் பறக்கும் பாதை சில நேரங்களில் பல மயில்கள் தூரத்தில் மாறுவது அல்லது விமானம் ஓடு பாதையில் புறப்படத் தயாராக இருக்கும் நிலையில் விமானம் வேறு எங்கோ இருப்பதாகக் காண்பிப்பது போன்ற நிகழ்வுகள் பதிவாகியுள்ளதாக அமெரிக்க அரச விமானப் போக்குவரத்து நிர்வாக நிறுவனம் (FAA) எச்சரிக்கிறது.

## விமானப் போக்குவரத்தில் தினசரி பாதிப்புகள்:

உலகளாவிய ரீதியில் நாள்தோறும் சுமார் 900 விமானங்கள் ஜி.பி.எஸ் சமிக்ஞைக் குளறுபடிகளினால் பாதிக்கப்படுவதாக சுவிட்சர்லாந்தின் சூரிச் பிரயோக விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இணைப்பாளர் பெனாய்ட் பிகுயட் தெரிவிக்கின்றார். கடந்த 2024-ஆம் ஆண்டு முதல் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பிகுயட் கண்காணித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விமானங்கள் உயரத்தில் பறக்கும்போது அருகாமையில் ஏதேனும் தரைப்பகுதிகள் அல்லது இடையூறுகள் தென்பட்டால் அதனை முன்கூட்டியே எச்சரிப்பதற்கு சில ஆண்டுகளாக ஜி.பி.எஸ் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. விமானிகளின் கட்டுப்பாட்டு அறையில் காணப்படும் வழிசெலுத்தல் திரைகள் 'ஒரு கற்பனைக் கதையாக மாறி வருவதாக' பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு விமானி குறிப்பிடுகின்றார்.

தரைப்பகுதி அருகாமை எச்சரிக்கை அமைப்புகளின் அலாரங்களை அமைதிப்படுத்த விமானிகள் சில நேரங்களில் 'டெரைன் இன்ஹிபிட் ஸ்விட்சை' (Terrain Inhibit Switch) அணைக்க வேண்டியிருப்பதாகவும், கடிகாரங்களை ஜி.பி.எஸ்-லிருந்து கைமுறையாகப் பிரிக்க வேண்டியிருப்

பதாகவும், '1970-களில் இருந்ததுபோல' தரையை அடிப் படையாகக் கொண்ட அமைப்புகளைச் சார்ந்திருக்க வேண்டியிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

ஜி.பி.எஸ் சமிக்ஞைகள் செயலிழக்கும் போதோ அல்லது நம்பகத்தன்மையற்றதாக மாறும் போதோ, விமானிகள் ரேடார், மின்னியக்க வழிசெலுத்தல் கருவிகள் (Radio Navigation Equipment) மற்றும் தரையடி டிரான்ஸ்மிட்டர்கள் (Ground-Based Transmitters) வாயிலாக மாற்று வழிகளைக் கண்டறிய முடியும். எனினும், இக்குளோபல் பொசிஷனிங் அமைப்பானது விமானத்தின் பல முதன்மைத் தொகுதிக ளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், போலிச் சமிக் ஞைகள் (Spoofing Signals) பரவும் போது விமானத்தின் கடி காரங்கள், வானிலை ரேடார் மற்றும் பயணிகளுக்கான வைஃபை (Wi-Fi) சேவை உள்ளிட்ட பலவகை சாதனங்கள் பாதிப்பிற்குள்ளாகும் அபாயம் காணப்படுகின்றது. இறுதி யாக, இவை விமானத்தின் பிரதான கட்டுப்பாட்டறையில் (Cockpit) குழப்பங்களை உருவாக்குவதுடன், விமானச் செயற்பாடுகளில் தடங்கல்களையும் கணிசமான காலதாம தங்களையும் ஏற்படுத்துகின்றன.

## GNSS குறுக்கீடும் அதன் காரணங்களும்:

அதிகளவில் பயன்படுத்தப்படும் அமெரிக்காவின் செயற் கைக்கோள் அடிப்படையிலான ஜி.பி.எஸ் உள்ளிட்ட உலக ளாவிய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்புகள் (GNSS), நவீன உலகின் ஓர் உள்ளார்ந்த, ஆனால் கண்ணு க்குத் தெரியாத முக்கிய அங்கமாகும். ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம், நாம் எங்கிருந்தாலும் துல்லியமான இருப்பிடத்தையும் நேரத்தையும் ஜிஎன்எஸ்எஸ் தொழினுட்பம் வழியாக உடனடியாக அறிந்து கொள்ள முடியும்.

எனினும், இந்த செயற்கைக்கோள்களிலிருந்து தகவல் களைக் கடத்தக்கூடிய சமிக்ஞைகள் நாம் பயன் படுத்தக்கூடிய மின் விளக்குகளின் ஆற்றலுக்கு நிகரான குறைந்த வலுவைக் கொண்டவையாகவே காணப்படு கின்றன. அதாவது விண்வெளியில் சஞ்சரிக்கும் செயற்கைக் கோள்களிலிருந்து சமிக்ஞை பூமியை வந்தடைய 20,000 கிலோமீட்டர்களுக்கும் அதிகமான தூரம் பயணிப்பதால் பூமியை அடையும் போது அவை பலவீனமடைகின்றன. எனவே இச்சமிக்ஞைகளை எளிதில் முடக்கிவிடவோ இடையூறு ஏற்படுத்தவோ முடியும்.

இந்த சமிக்ஞை பலவீனம் நீண்டகாலமாக அறியப்பட்ட ஒன்று என்றாலும், உக்ரைன் - ரஷ்ய போர் காலத்தில் இந்த விடயம் பூதாகாரமாக வெளிப்படத் தொடங்கியது. கடந்த 2022-ஆம் ஆண்டில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கத் தொடங்கியதன் பின்னர் போர்க்களத்தில் அதிக எண்ணிக் கையில் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. இது அந்தப் பகுதியை அண்டிப் பயணங்களை மேற்கொண்ட விமான ங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்திற்கு பெரும் சவால்களை ஏற்படுத்தியது.

வழிசெலுத்தல் சாதனங்கள் பயன்படுத்தப்படும் அதே அலைவரிசைகளில் அதிக அதிர்வெண்ணைக் கொண்ட வானொலி சமிக்ஞைகளைச் செலுத்துவது ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீடு என அழைக்கப்படுகின்றது. இராணுவத்தினரும் அவர்களுடன் தொடர்புடைய குழுக்களும் ஒரே அதிர் வெண்ணில் இந்த சமிக்ஞைகளை செலுத்துகின்றனர். ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை இலக்கு வைத்து இராணுவத் தரப்பினர் இந்த சமிக்ஞைகளைப் பாய்ச்சுகின்ற போதிலும், இதன் பக்கவிளைவாக விமானங்களின் செயற்பாடுகளிலும் தாக்கத்தைக் காண முடிகிறது.

ஜாமிங் (Jamming - சமிக்ஞைத் தடுப்பு) செயற்கைக்கோள் அடிப்படையிலான இருப்பிடத்தைக் கண்டறிவதைத் தடுக் கிறது என்பதுடன், அதே நேரத்தில் ஸ்பூஃபிங் (Spoofing - போலி சமிக்ஞை) வழிசெலுத்தல் அமைப்புகள் தவறான இருப்பிடத்தைக் காட்ட வழிவகுக்கிறது. இந்த சமிக்ஞை இடையூறுகளினால் 'விமானம் தான் முற்றிலும் வேறு இடத்தில் இருப்பதாக நினைக்கத் தொடங்குகிறது,' என்று ஹே குறிப்பிடுகின்றார்.

## விமானிகள் எதிர்கொள்ளும் சவால்களும் நடைமுறைச் சிக்கல்களும்:

இவ்வாறான குறுக்கீடுகளின்போது விமானத்தின் நேரம், வரைபடம் என்பன பொருந்தாமல் போகும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதனை கண்டறிந்து கொள்வதற்கான அறிகுறிகளை நாம் அவதானிக்க முடியும். எனினும் சமிக்ஞைகள் பிழையானவை என்பதை அதாவது போலியான தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன என்பதை கண்டறிய முடியும் என்ற போதிலும் எவ்வாறு எங்கு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை கண்டறிந்து கொள்ள முடியாது என்பதே இங்கு சவாலான விடயமாகும் என அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

அண்மையில் இஸ்தான்புல்லில் நடைபெற்ற IFALPA-வின் வருடாந்த மாநாட்டில் தான் தலைமை தாங்கிய ஒரு குழு விவாதத்தில் இந்தத் தலைப்பு விவாதிக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார். முக்கியமாக பசிபிக் பிராந்திய வான் பாதைகளில் பறக்கும் ஹே, தான் தனிப்பட்ட முறையில் ஜி.பி.எஸ் ஸ்பூஃபிங் அல்லது ஜாமிங்கை எதிர்கொண்டது கிடையாது என தெரிவிக்கின்றார்.

தற்போதைக்கு இந்த சமிக்ஞை இடையூறுகளினால் விமானப் பயணிகளின் பாதுகாப்புக்கு எவ்வித நேரடி அச்சுறுத்தல்களும் ஏற்படாது என்ற போதிலும், இது விமானிகள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் விமான நிறுவனங்கள் என்பனவற்றுக்குத் தலைவலியை ஏற்படுத்தக்கூடும் என குறிப்பிடுகின்றார்.

உதாரணமாக, கருங்கடலுக்கு அருகில் ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீட்டை எதிர்கொண்டு அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து செல்லும் விமானங்களுக்கு, வழிசெலுத்தல் நம்பகத் தன்மை பாதிக்கப்பட்டால் பாதுகாப்பிற்காக விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு அவற்றிற்கிடையே அதிக இடைவெளியை உறுதி செய்யும் என்று ஹே குறிப் பிடுகின்றார். அதாவது, சமிக்ஞை இடையூறு அல்லது போலி சமிக்ஞைகளினால் விமானங்களால் அட்லாண்டிக் டிராக் சிஸ்டத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம்.

இந்த டிராக் சிஸ்டமானது, அதிக விமானங்கள் பயணம் செய்வதற்கான இடமளிக்கும் கட்டமைக்கப்பட்ட பாதைகளின் தொகுப்பாகும். இதனால் விமானங்களின் பயண நேரங்கள் அதிகரிக்கக் கூடிய அதேவேளை, எரிபொருள் விரயமும் அதிகமாகக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

## பிராந்திய நிலவரங்களும் விமான விபத்துகளும்:

அநேகமான சமிக்ஞை இடையூறுகள் மத்திய கிழக்கு, கருங்கடல் மற்றும் பால்டிக் பகுதிகளில் ஏற்படுவதனால், அப்பாதைகளில் செல்லும் விமானிகள் ஏற்படக்கூடிய சாத்தியமான பிரச்சினைகளை முன்னரே கணிக்க முடிகிறது. எனினும், இந்தியா-பாகிஸ்தான் எல்லை, வட கொரியா-தென் கொரியாவைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் மியான்மர் உட்பட ஆசியாவிலும் இத்தகைய பாதிப்புகளை 'SkAI டேட்டா சர்வீசஸ்' கண்டறிந்துள்ளதாக பிகுயட் கூறினார்.

'ஆபத்து உள்ளதாகவும் ஆனால் அது சமாளிக்கக்கூடிய ஆபத்து என தாம் கருதுவதாகவும், தேவையில்லாத பீதியை உருவாக்க தாம் விரும்பவில்லை,' எனவும், 'இது சரிசெய்யப்பட வேண்டும்,' எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

விமானிகளுக்கு ஏற்படும் கூடுதல் பணிச்சுமை மற்றும் தாமதங்கள் அல்லது பிற தளவாடப் பிரச்சினைகளுடனேயே இந்தக் கவலைகள் பெரும்பாலும் தொடர்புடையவை என்று பிகுயட் தெரிவிக்கின்றார்.

எனினும் ஜி.பி.எஸ் குறுக்கீடு ஒரு பெரிய விமான விபத்துக்குப் பங்களித்துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த 2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ஆம் திகதி, அஜர்பைஜானின் பாகுவிலிருந்து ரஷ்யாவின் குரோஸ்னிக்குச் சென்ற அஜர்பைஜான் ஏர்லைன்ஸ் விமானம் கசகஸ்தானில் விபத்துக்குள்ளானது. குரல் பதிவுகளை உள்ளடக்கிய, கசகஸ்தான் போக்குவரத்து அமைச்சின் அறிக்கையில் விமான விபத்து பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

விமானிகள் மின்னணு குறுக்கீட்டை எதிர்கொண்டனர். அவர்கள் ஜி.பி.எஸ் தொடர்பை இழந்தனர். மற்றும் குரோஸ்னிக்கு அருகில் 'புல் அப்' எச்சரிக்கைகளைப் பதிவு செய்தனர்; அங்கு நிலவிய அடர்ந்த மூடுபனி காரணமாக பேகன்களைப் (விமானப் போக்குவரத்தில் Beacons - வழிகாட்டிச் சமிக்ஞை நிலையங்கள் என்பது விமானங்கள் தமது இருப்பிடம், திசை மற்றும் விமான நிலையத்தை அணுகும் பாதை ஆகியவற்றைக் கண்டறிய உதவும் வானொலி சமிக்ஞைகளை அனுப்பும் கருவிகள் அல்லது நிலையங்களைக் குறிக்கிறது) பயன்படுத்தி தரையிறங்குவது கடினமாக இருந்தது.

குரோஸ்னி விமான நிலையத்தில் இருமுறை தரையிறங்க முயன்று தோல்வியடைந்த பின்னர், விமானிகள் பாகுவுக்குத் திரும்பத் தீர்மானித்தனர். திரும்புதலின்போது ஒரு கட்டத்தில், விமானம் அதன் முதன்மைக் கட்டுப்பாட்டு அமைப்புகளை இழந்தது, மேலும் பணியாளர்கள் அவசரத் தரையிறக்கத்திற்கு முயன்றனர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விமானத்தில் இருந்த 67 பேரில் குறைந்தது 38 பேர் இந்த சம்பவத்தில் உயிரிழந்தனர்.

உக்ரேனிய ட்ரோனைக் குறிவைத்து ரஷ்ய வான் பாதுகாப்புப் படைகள் செலுத்திய ஏவுகணைகள் விமானத்தின் அருகே வெடித்ததே விமான விபத்திற்குக் காரணம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்திருந்தார்.

'ஜி.பி.எஸ் குறுக்கீடு விபத்திற்கு முதன்மைக் காரணம் அல்ல. ஆனால் ஜி.பி.எஸ் குறுக்கீடு காரணமாக, அவர்களால் திட்டமிட்ட இடத்தில் தரையிறங்க முடியவில்லை,' என்று பிகுயட் குறிப்பிடுகின்றார். அஜர்பைஜான் ஏர்லைன்ஸ் விமானத்தைப் பற்றி அவர் கூறுகையில், 'அதன் ஜிஎன்எஸ்எஸ் அமைப்பில் சிக்கல்கள் இல்லையென்றால், அது ஒரு மணி நேரத்திற்கு முன்பே பாதுகாப்பாகத் தரையிறங்கியிருக்கும்,' என லண்டனில் உள்ள ராயல் இன்ஸ்டிடியூட் ஆஃப் நேவிகேஷனின் தலைமை நிர்வாகி ராம்சே ஃபாரகர் தெரிவிக்கின்றார்.

## விமானிகளின் பயிற்சியும் நிறுவனங்களின் நிலைப்பாடும்:

ஜிஎன்எஸ்எஸ் சமிக்ஞை குறுக்கீட்டை நிர்வகிக்க விமானிகளுக்கு நன்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. சமிக்ஞை குறுக்கீடுகள் நாள்தோறும் ஏற்படக்கூடிய தொல்லை என ஃபின்எயார் (Finnair) நிறுவனத்தின் தலைமை விமானப் பயிற்றுநரும் கேப்டனுமான அலெக்ஸி குவோஸ்மேனன் குறிப்பிடுகின்றார். ஹெல்சின்கியிலிருந்து தெற்கு நோக்கிப் புறப்படும் பெரும்பாலான விமானங்கள் சமிக்ஞை இடையூறுகள் அல்லது ஜி.பி.எஸ் ஸ்பூஃபிங் மற்றும் ஜாமிங்கை எதிர்கொள்கின்றன என்று குவோஸ்மேனன் கூறுகின்றார்.

அண்மையில் நோர்வேயின் வடக்குப் பகுதியில் ரஷ்ய எல்லைக்கு அருகில் உள்ள கிர்ஃபெனஸ் நகருக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ஃபின்எயார் விமானம், முதல் முயற்சியில் ஜி.பி.எஸ் குறுக்கீட்டை எதிர்கொண்டதை அடுத்து, இரண்டாவது முறை தரையிறங்க முயல வேண்டியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஜாமிங் அல்லது ஸ்பூஃபிங் எதுவாக இருந்தாலும், விமானிகளுக்கு இதனால் விமானக் கட்டுப்பாட்டு அறையில் பணிச்சுமை அதிகரிக்கிறது என்பதுடன், இதனால் விமானிகளுக்கு கடுமையான அழுத்தங்கள் ஏற்படுவதாக குவோஸ்மேனன் குறிப்பிடுகின்றார்.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் பின்லாந்தில் ஜி.பி.எஸ் சமிக்ஞை குறுக்கீடு குறித்த 421 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், கடந்த ஆண்டு மொத்தம் 1,704 முறைப்பாடுகளைப் பெற்றதாகவும் அந்நாட்டின் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முகவர் நிறுவனமான 'டிராஃபிகாம்' (Traficom) தெரிவித்துள்ளது.

ஆண்டுக்கு சுமார் 100,000 விமானங்களை இயக்கும் ஃபின்எயார் நிறுவனம், 2024-இல் எஸ்டோனியாவில் உள்ள டார்ட்டுவுக்கான (Tartu) விமான சேவைகளை ஒரு மாதத் திற்கு நிறுத்தி வைத்தது. அங்குள்ள விமான நிலையம், ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீடு ஏற்படும்போது விமானிகள் நம்பியி ருக்கும் தரைவழித் தரையிறங்கும் அமைப்புகளில் மேம்பாடு களைச் செய்தது.

‘சூழ்நிலையைச் சமாளிக்கும் நிலையில் நாங்கள் இருக்கிறோம், விமானிகளும் இதற்குப் பழகிவிட்டனர். ஆனால் இதை ஒரு புதிய இயல்புநிலை எனப் பார்ப்பதை நான் விரும்பவில்லை; இன்னும் பல ஆண்டுகள் இத்தகைய சூழ்நிலை தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே எங்கள் நிலைப்பாடு,’ என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## விமானப் பாதுகாப்பு அமைப்புகளின் எதிர்கால நடவடிக்கைகள்:

ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீடு மிகவும் பொதுவானதாக மாறும்போது, நிறுவனங்களும் விமானிகளும் ஆபத்துக்கான சகிப்புத்தன்மையை அதிகமாக வளர்த்துக்கொள்ளக்கூடும் என்று அமெரிக்காவின் மத்திய விமானப் போக்குவரத்து நிர்வாக அமைப்பு (FAA) தனது அறிக்கையில் தெரிவித்தது.

‘தொழினுட்பத்தின் செல்லுபடியாகும் தன்மை, நம்பகத்தன்மை அல்லது வலிமை பாதிக்கப்படும்போது, ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீடு விமான அமைப்புகளின் மீதான அவநம்பிக்கைக்கு வழிவகுக்கும்,’ என்று FAA அறிக்கை சுட்டிக்காட்டுள்ளது.

இப்பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த ஆண்டு ஜுன் மாதம் பகிரங்கக் கடிதம் எழுதிய 13 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுள் பின்லாந்தும் ஒன்றாகும். இதன் விளைவாக மார்ச் மாதம் ஐரோப்பிய விமானப் போக்குவரத்து செயற்றிட்டம் (European Aviation Action Plan) வெளியிடப்பட்டது.

## தொழினுட்ப மேம்பாடுகளும் எதிர்கால தீர்வுகளும்:

ஒரே தீர்வு என்று எதுவும் இல்லை. ஸ்கை டேட்டா சர்வீசஸ் வழங்கும் நேரலை ஜாமிங் மற்றும் ஸ்பூஃபிங் விழிப்புணர்வு வரைபடங்கள், விமானப் பணியாளர்கள் பயன்படுத்தும் டிஜிட்டல் தகவல் முகாமை அமைப்பான ‘எலக்ட்ரானிக் ஃபிலைட் பேக்ஸ்’ (Electronic Flight Bags) என்பதில் ஏற்கனவே ஒருங்கிணைக்கப்படலாம் என்று ஃபாரகர் கூறினார். இந்த மென்பொருள் எங்கு குறுக்கீட்டை எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய தெளிவான குறிப்பை விமானிகளுக்கு வழங்கி, அதைத் தவிர்க்க உதவுவதோடு எளிதாக்குகிறது. ஜிஎன்எஸ்எஸ் குறுக்கீட்டால் பாதிக்கப் பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒவ்வொரு விமானத்திற்குப் பின்னரும், அனைத்து அமைப்புகளிலிருந்தும் சிதைந்த ஜிஎன்எஸ்எஸ் சமிக்ஞைகளை அழிக்க தரைவழி மறுசீரமை ப்பை (Ground Reset) IFALPA பரிந்துரைக்கிறது.

இந்த முதல் படிகளுக்கு அப்பால், இருப்பிடம் மற்றும் நேரத்தில் ஏற்படும் பெரிய மாற்றங்களைக் கண்டறியும் மென்பொருள் வடிகட்டிகளை (Software Filters) மேம்படுத் துவதன் மூலமும், தரைப்பகுதி இருப்பிட எச்சரிக்கை அமைப்புகள் போலித் தகவல்களைத் தக்கவைத்துக் கொள்ளாமல் இருப்பதை உறுதிசெய்வதன் மூலமும், விமானி அறை மின்னணுவியலில் (Avionics) மாற்றங்களைச் செய்வது சிக்கலை சிறப்பாக நிர்வகிக்க உதவும் என்று ஃபாரகர் கூறினார்.

நீண்ட காலத்தில், ஜி.பி.எஸ் பெறுசியை (GPS Receiver) மற்ற அனைத்து விமான அமைப்புகளிலிருந்தும் தனிமைப் படுத்த அனுமதிக்கும் வகையில் விமான அமைப்பின் வடிவமைப்பில் மாற்றங்களைச் செய்வதும் உதவும் என்றும் அவர் மேலும் கூறினார்.

‘வன்பொருள் உற்பத்தியாளர்கள் இதுவரை இந்தப் பிரச்சினைகளில் சிலவற்றைச் சரிசெய்யாதது ஏமாற்ற மளிக்கிறது,’ என்று ஃபாரகர் கூறினார். ‘சரியான தூண்டுதல் கொடுக்கப்பட்டால், காரியங்கள் மிக விரைவாக நடக்கும்; அத்தகைய சரியான தூண்டுதலை எவ்வாறு உருவாக்குவது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.’ 9/11 தாக்குதலின்போது பயங்கரவாதிகள் விமானி அறைகளு க்குள் புகுந்தபோது, ‘சில வாரங்களுக்குள்’ கதவுகளில் பூட்டுகள் பொருத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

போலி சமிக்ஞைகளை வடிகட்டும் திறன் கொண்ட ‘கண்ட்ரோல்டு ரிசெப்ஷன் பேட்டர்ன் ஆண்டெனா’-வை (Controlled Reception Pattern Antenna - CRPA) நிறுவுவது குறித்தும் விமான நிறுவனங்கள் ஆராய்ந்து வருவதாகவும், ஐரோப்பாவின் ஜிஎன்எஸ்எஸ் அமைப்பான கலிலியோ (Galileo), பயனர்கள் தாங்கள் பெறும் தரவை அங்கீகரிக்க (Authenticate) அனுமதிக்கும் அம்சத்தைக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தொழினுட்பத்தின் வளர்ச்சி காரணமாக இந்த ஜீபிஎஸ் சமிக்ஞைகளை துல்லியமாக பெற்றுக்கொள்ளவோ மாற்று வழிமுறைகளை கண்டறியவோ நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

விமானப் பயணங்களை மேற்கொள்ளும்போது விமான சேவை நிறுவனங்கள், விமானிகள் உள்ளிட்ட விமானப் பணியாளர்கள் குழாம் இந்த சமிக்ஞை பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள நேரிட்டாலும் அது விமானப் பயணிகளுக்கு பெரும் பாதிப்பினையோ சுமையையோ ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

jeyaseelan.s@thaiveedu.com

சி.ஜெயசங்கர்

# சமகால வாழ்வில்
# மருத்துவிச்சி முறையினை மீளளித்தல்

மனித வாழ்வியல் நம்பிக்கை, சடங்குகள், நிகழ்த்து கலைகள், மருத்துவம் போன்ற பண்பாட்டு நிகழ்த்துதல்களால் உயிர்ப்புடன் இயங்கிவருகின்றது. மனித இயக்கத்தில் பண்பாட்டு மரபுகளின் வகிபங்கு என்பது முக்கியமானது. மனிதர்கள் வாழ்தலிருந்து கண்டுபிடித்த அறிவு மரபுகளின் தொகுப்பாக இவை உள்ளன. ஒவ்வொரு பண்பாட்டு நடத்தைக்கும் மனிதர் சேர்ந்து இயங்குவதன் வழி முழுமை அடைகின்றது. தனக்குரிய பண்பாட்டு அறிவு மரபுகளுடன் இணைந்து இயங்குவதன் வழி சமூகம் பாரம்பரிய அறிவு முறைகளை சேமிக்கிறது, கடத்துகிறது, பாதுகாக்கிறது. இத்தகைய சமூகச்செயற்பாட்டில் பண்பாட்டு முழுமையில் ஏற்படுத்தப்படும் அதிகார அழுத்தங்கங்களும் மாற்றங்களும் பண்பாட்டு நடத்தையிலும் மனித வாழ்வியலிலும் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

காலனியம் அறிமுகப்படுத்திய நவீனம் பாரம்பரியத்தை பாமர மக்களுடையதாக வாழ்வியலுக்கு ஏற்புடையதற்றதாக பொதுத்தளத்திலும் ஆய்வுப்புலத்திலும் பரப்புரை செய்கின்றது. தர்க்கரீதியான விமர்சனங்கள் அற்றதாய் நிறுவப்பட்ட உண்மையாய் இத்தகைய காலனியக் கருத்தியல்கள் நவீனமாதல் என ஏற்றுக்கொள்ளப்பட்டன. பலதசாப்த அனுபவ அறிவின் வழி உலகம் தழுவிய பன்மைத்தன்மை கொண்டு இயங்கி வரும் பாரம்பரிய அறிவியல் முறைகளை வாழ்வியலுக்கு உகந்தவை அல்லாதவைகளாகக் காலனிய மதிப்பீடு மற்றும் பெறுமானங்கள் நிறுவின. இதற்கான ஊடகமாக நவீன கல்வி முறை செயற்பட்டு வருகின்றது.

வேளாண்மை. மருத்துவம், சட்டம், நீதி, பொருளாதாரம், நிகழ்த்துகலைகள் போன்றவை சார் உள்ளூர் அறிவு மரபுகள் வாழ்விலிருந்து அகற்றப்பட்டன. இத்தகைய திட்டமிடப்பட்ட அழிப்பினால் முற்றாக வாழ்வியலிருந்து நீங்கிய அறிவு மரபாக மருத்துவிச்சி மரபுள்ளது. இன்றைய சூழலில் மருத்துவிச்சி மரபு என்பது வீடுகளில் பார்க்கமுடியாததாகவும் பயன்படுத்த தகுதியற்றதாகவும்; பரப்புரை செய்யப்பட்டு தகுந்த மருத்துவ முறையாக வாழ்வியலுக்கு ஏற்றது, உண்மைத்தன்மை வாய்ந்தது என காலனியம் நவீன மருத்துவ முறையை வரவலாக்கம் செய்துள்ளது. இவற்றுக்கு மாற்றாக இன்றைய காலனிய நீக்கச்செயற்பாட்டில் உள்ளூர் அறிவு முறைகள் பற்றிய தேடலும் வாசிப்பும் சமூகத்துடன் இணைந்த மீளுவாக்கச் செயற்பாடும் முக்கியமானதாக உணரப்பட்டு முன்னெடுக்கப்படும் சூழலை அவதானிக்கலாம்.

இதற்கமைவாக இன்றைய சமூகச் சூழலில் பாரம்பரிய அறிவுமுறைகள் மற்றும் நவீன அறிவுமுறையின் அதிகார கட்டமைப்புக்கள் தொடர்பான மறுவாசிப்பும் தர்க்கரீதியான விவாதங்களும் மீளமைத்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்வைப்பதற்கான தேவையை உணர்த்தியுள்ளன. இதன் முதற்கட்டமாக பாரம்பரிய அறிவுமுறையும் நவீன வாழ்விய

லும் இணைந்து செல்லும் சமகால வாழ்தலின் தேவையை உணர்த்தும் உரையாடல்கள்கள் தொடக்கப்பட்டுள்ளன. மருத்துவிச்சி மரபினை வாழ்தலில் இணைத்தல் அங்கீகரித்தல் தொடர்பாய் யுனெஸ்கோவினால் மகப்பேறுகால மருத்துவச்சி மரபினை உலகம் தழுவியதாய் மீளவும் வாழ்வியலில் இணைப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யுனெஸ்கோவின் அருவக் கலாச்சாரப் பாரம்பரியச் சாசனத்தின்படி, உலகில் வாழும் மக்களின் அறிவியல் மற்றும் மருத்துவ மரபுகள் பல்தன்மை வாய்ந்தவை. அவற்றுள் மகப்பேறுகால மருத்துவச்சி முறைமையானது, பண்பாட்டுச் சடங்குகள் மற்றும் சமூகப் பிணைப்புகளுடன் இணைந்து தகவமைக்கப்பட்ட ஒரு தொன்மையான வாழ்வியல் மரபாகும். இப் பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதும், நடைமுறையில் பரவலாக்குவதும் இன்றியமையாத தேவைகளாகும். இது சமாதானமான, ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு வழிவகுப்பதுடன், இம் மருத்துவ முறைமையை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது புதிய வாழ்வியல் செயல்பாடுகளுக்கு வித்திடுகின்றது. இப் பாரம்பரிய அறிவின் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் உணர்த்துவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே இச் சாசனத்தின் முதன்மை நோக்கமாகும்

## மகப்பேறுகால மருத்துவச்சி மரபு

இலங்கையில் தமிழர் பண்பாட்டில் பாரம்பரிய மகப்பேறுகால மருத்துவ முறைமை என்பது மாந்திரிகம், நம்பிக்கை சடங்குகளுடன் இணைந்து செயற்படும் மருத்துவமுறையாகக் காணப்படுகின்றது. இது பரம்பரை பரம்பரையாகவும் சுயவிருப்பிலும் பயிலப்படுகிறது. நாட்டு வைத்தியர் மருத்துவிச்சிகளாக செயற்படுதல் என்பதற்கும் அப்பால் பிள்ளைப்பேறு பார்க்கும் பேறுகால மருத்துவிச்சி அம்மாக்கள் கைவைத்தியர்களாக குடல் ஏற்றம், நாட்டு வைத்தியம், செய்பவர்களாக உள்ளனர். ஆண்களும் பிள்ளைப்பேறு பார்த்ததற்கான சான்றுகள் உள.

பெண் கருத்தரித்தலிருந்து தாயின் பாதுகாப்பு, குழந்தை வளர்ச்சி, குழந்தைப் பிறப்பு, பால்குடி, பால்குடி மறப்பு, வரையான காலப்பகுதி வரை தாய் சேய் பாதுகாப்பினை உறுதி செய்வதாக பேறுகால மருத்துவ முறைமை காணப்படுகின்றது. தாய் கருத்தரித்தலின் பின் குழந்தை வளர்ச்சிக்கான தாயின் பாதுகாப்பிற்கான உணவு, பழக்கவழக்கம் தொடர்பான ஆலோசனைகளை மருத்துவிச்சி அம்மாக்கள் கருத்தரித்த குடும்பத்திற்கும் பெண்ணுக்கும் வழங்குகின்றனர். ஒரு பெண் கருத்தரித்தலின் பின் அச் சூழலை குடும்பம் முழுவதும் கையாள்கின்றது. கூட்டுப்பாதுகாப்பு என்பது சாத்தியமாகின்றது. வீடு அப்பெண்ணின் பிரசவத்திற்கு தயார் ஆகின்றது. அதனை ஒழுங்கு செய்வதற்கான அறிவும் திறனும் கொண்டவர்களாக மருத்துவிச்சி மற்றும் மூத்த பெண்கள் காணப்படுகின்றனர்.

இத் தயார்படுத்தல் குழந்தையை ஆரோக்கியமாக தாய் பெற்றெடுப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. குழந்தை வளர்ச்சியில் தாய், குழந்தை இருவருக்கும் ஒவ்வாமையை உண்டாக்காத உணவு முறை மற்றும் கசாயங்கள் வழங்கப்படுகின்றன. குழந்தையின் உறுப்புக்கள் வளர்தல், முடி வளர்தல் என ஒவ்வொரு மாதமும் வரையறை செய்யப்பட்டு அதற்குரிய உணவுகள் தாய்க்கு வழங்கப்படுகின்றன. வயிற்றினை தொட்டுப் பார்த்தல், நாடி பிடித்து பார்த்தல் மூலம் குழந்தையின் வளர்ச்சிநிலை, பிள்ளைப்பேறுக்காலம் போன்றவற்றை உணர்ந்து கொள்கின்றனர். இதன் பின்பே நோவை அதிகரிப்பதற்காகாவும் நோவை தரம்பிரித்தல் (பிள்ளைப்பேற்று நோ, வாயு நோ) என்பதற்கமைவாக கசாயங்கள் தாய்க்கு வழங்கப்படுகின்றது. அத்துடன் குழந்தை குறுக்காகக் கிடத்தல், குப்புற கிடத்தல், மாக்கொடி சுற்றினால் அதற்கான முறையியல், இரண்டு, மூன்று குழந்தைகளை எடுப்பதற்ககான முறை, இரணியப்பிள்ளையை (மரித்தபிள்ளை) தாயை பிரசவிக்க வைத்தல் தொடர்பான அறிவு என பிரசவம் சார்ந்த அறிவு கொண்டவர்களாக மருத்துவிச்சிகள் விளங்குகின்றனர்.

மருத்துவிச்சியின் செயற்பாட்டினை பின்வரும் பிரிவுகளாகப் பார்க்கலாம். அவை: ஒரு பெண் கருத்தரித்த பின்னராக குழந்தையின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செயற்பாடு, தாய் சேய் சுகப்பிரசவத்திற்கான தயார்ப்படுத்தல். பிரசவம் நடைபெறும்போது ஏற்படும் சிக்கல்களை கையாளுதல், குழந்தை பிறந்த பின்னரான குழந்தை தாய் பராமரிப்பு.

பிள்ளைப்பேற்றுக்குப் பின்னர் தாயின் பாதுகாப்பு, சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவை முக்கியமானவை. தாய்க்கு பத்திய (காயம்) உணவுகள் வழங்கப்படுகின்றன. இதனை தயாரிப்பதற்கான பொருட்கள் நல்ல நாள் பார்த்து வாங்குதல், தாயார் செய்தல் போன்றவை மருத்துவிச்சியினால் தயார் செய்யப்படுகின்றது. குழந்தை பெற்ற தாயின் உடலின் வலியைப் போக்கவும் இடுப்பு, கர்ப்பப்பை போன்ற பகுதிகளை பலப்படுத்தவும், தொற்று நீக்கி முறையாகவும் மீண்டும் தாயை சாதாரண வாழ்வியல் முறையில் இணைக்கவும் வேதுவார்க்கப்படுகின்றது. வேது வார்த்தல், குழந்தை பெற்று மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழாம் நாட்களின் பின் தொடங்குவார்கள். படிப்படியாக ஒவ்வொரு வேதும் வார்த்து மூன்று நாட்களின் பின் அடுத்த வேது வார்க்கப்படுகின்றது. முதல் வேது பட்டைகளும் குழைகளும் சேர்ந்தது வேப்பம்பட்டை, ஒதியம்பட்டை, வேப்பம் இலை, ஒதியம் இலை, நொச்சி இலை, ஆமணக்கு இலை, ஆடாதோடை இலை போன்றவை சேர்த்து வார்க்கப்படுகின்றது. பட்டைகளான வேப்பம் பட்டை, ஒதியம் பட்டை சேர்த்து பட்டை வேது வார்க்கப்படுகின்றது. பட்டை வேது, இறுதியாக உப்பு மஞ்சள் வேது, உப்பையும் மஞ்சளையும் நீருடன் கலந்து கொதிக்க வைத்து வார்த்தல் என வேது வார்க்கப்படுகின்றது. இவ் முறைமை பிரதேசத்திற்கு பிரதேசம் வித்தியாசங்களைக் கொண்டவை. வேது வார்த்த பின்னரே குழந்தை பெற்ற தாய் சாதாரன நீரினை அழையலாம். (நீரினால் குளிக்க மற்றைய தேவைகளுக்கு பயன்படுத்த தொடங்குதல்) வேது வார்க்கும் வரை சுடுநீர் மட்டுமே பாவிக்க முடியும். குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து வெயிலில் போடுதல், தொப்புள் கொடி விழாமல் இருந்தால் அதற்கான மருந்துகள் செய்தல் என குழந்தைப் பராமரிப்பும் மருத்துவிச்சிப் பெண்களால் பார்க்கப்படுகின்றது.

வீட்டிலுள்ள பெண்களும் ஆண்களும் பராமரிப்பு மற்றும் சடங்கு முறைகளை நன்கு அறிந்தவராக இயங்குகின்றனர். இங்கு அறிவு என்பது பெண்கள் சார்ந்ததாகவும் ஆண்களை இணைப்பதாகவும் உள்ளது. தாய், குழந்தை ஆரோக்கியத்தினைப் பேணல், பயில்வில், வாழ்வியலில் கொண்டுவருதல்

என்னும் அடிப்படையில் இத்தகைய சடங்குகளும் மரபுமுறைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

## இன்றைய வாழ்தலில் பேறுகால மருத்துவ முறைமை

நவீன அறிவியல் என்பது விஞ்ஞானரீதியாக காரணகாரிய ரீதியாக ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு நிருபிக்கப்பட்டவற்றை ஒரே பொதுவான மாற்ற முடியாத உண்மையாக ஏற்றுக்கொண்டது. இவ்வாறாய் உருவாக்கப்பட்டவை கருத்தியல்கள், கோட்பாடுகள் கண்டுபிடிப்புகளாக முடிந்த முடிவாய் கல்விப்புலங்களில் பரவலாக்கம் செய்யப்பட்டன. பாரம்பரிய அறிவு முறை என்பது பலநூறு வருடங்கள் வாழ்ந்த மனிதர்கள், வாழ்தலில் பெற்ற அனுபவ அறிவினை தலைமுறை தலைமுறையாக கையளித்து வருவதாகும். இது முடிந்த முடிவாக இருப்பதன்று. வாழும்சூழல் காலநிலை சார்ந்து சமூகத்திற்கு சமூகம் வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும் கொண்டவை. வாழ்தல் மூலம் பெற்ற அனுபவவழி சேகரித்த பாரம்பரிய அறிவு முறைகளை கற்பனையான உண்மைத் தன்மை அற்ற அறிவுமுறையாக நவீன அறிவியல் கருத்தாக்கம் செய்தது.

நீண்ட தொடர்ச்சியும் அனுபவ விஞ்ஞானத்தன்மை கொண்டு விளங்கிய உள்ளூர் நிர்வாகம், அரசியல், பொருளாதாhரம், மொழி, தொட்டுணராப்பண்பாட்டு வடிவங்கள், இயற்கை வேளாண்மை. கட்டுமான தொழில்நுட்ப அறிவு, உணவு முறையியல், வைத்திய முறைகள் போன்ற பாரம்பரிய அறிவுமுறைகளை காலனித்துவம் நவீனம் அளவையியல் வழி பொய்பித்தது. மறுபக்கம் நவீனப்படுத்தவும் செம்மையாக்கவும் தலைப்பட்டது. நவீன கண்டுபிடிப்புக்களை அறிவியலை பழக்கப்படுத்துவதன் வாயிலாக மரபுகளையும் அதனைப் பின்பற்றும் மக்களையும் ஒடுக்குவதும் அதிகாரப்படுத்துவதுமே இதன் நோக்காக இருந்தது. மனிதரின் வாழ்வியலிருந்து பாரம்பரிய நம்பிக்கைகள் விடுவிப்பதற்கான கருவியாக நவீன கல்விமுறை பரவலாக்கப்பட்டது.

> **"மகப்பேறுகால மருத்துவ முறைமையில் மருத்துவிச்சி அம்மாக்கள் நூற்றுக்கு மேற்பட்ட பிரசவங்களைப் பார்த்துள்ளனர். முப்பது தொடக்கம் நாற்பத்தைந்து வருட கால அனுபவத் தினைக் கொண்டுள்ளனர். மருத்துவிச்சி அம்மாக்கள் பிரசவம் பார்த்து ஆரோக்கியமான பிள்ளைகளாகவே எடுத்துள்ளனர் அவ்வாறு பிறந்த பிள்ளைகள் நோய்களின்றி இன்றுவரை ஆரோக்கியமாக வாழ்கின்றனர்."**

நமது பண்பாட்டடையாளம் என்பது ஒவ்வொரு இனமும் சமூகமும் மூத்தகுடியாய் நம்மை நிருபிப்பதற்கு மாத்திரமானது மட்டுமல்ல. அது எம் வாழ்வியலின் இணைந்து பயணிப்பது. எமது வரலாற்றை தொன்மையை முன்வைப்பதற்கானதாய் பாரம்பரியம், பண்பாடு எனப் பேசுகின்றோமே தவிர இன்றைய வாழ்வியலை நேர் செய்ய காலனிய நீக்கத்திற்கான சுயமான வாழ்தலுக்கான அடிப்படைகளை இடுவதற்கான, செயற்பாடுகள் அரிதாகவே இடம்பெறுகின்றன.

மகப்பேறுகால மருத்துவ முறைமையில் மருத்துவிச்சி அம்மாக்கள் நூற்றுக்குமேற்பட்ட பிரசவங்களைப் பார்த்துள்ளனர். முப்பது தொடக்கம் நாற்பத்தைந்து வருட கால அனுபவத்தினைக் கொண்டுள்ளனர். மருத்துவிச்சி அம்மாக்கள் பிரசவம் பார்த்து ஆரோக்கியமான பிள்ளைகளாகவே எடுத்துள்ளனர் அவ்வாறு பிறந்த பிள்ளைகள் நோய்களின்றி இன்றுவரை ஆரோக்கியமாக வாழ்கின்றனர். சுகப் பிரசவத்தில் ஒவ்வொரு குழந்தையும் வெளியில்வர போராடுகின்றது. சுற்றம் சூழ உலகிற்கு வருகின்றது. வயிற்றை தடவி குழந்தையின் இருப்பினை அறிந்து அதற்கான தயார்படுத்தலை செய்வதன் ஊடாக மருத்துவிச்சி அக் குழந்தை வெளிவர உதவுகின்றாள்.

இத்தகைய அறிவினை, மருத்துவிச்சிகளது அனுபவங்களை அறிவாய் பகிர்வதற்கும் கற்ப தற்குமான முறைமை நமது கல்வி முறையில் இல்லை. எமது கல்வி நடவடிக்கைகள், எம் சூழல் சார்ந்த கற்றல், எமது பாரம்பரிய அறிவுப் பொறிமுறைகளை கற்பது, என்பதனை விலக்கி அவற்றினை மூடநம்பிக்கைகளாக பாமரமக் களுடையதாய் கற்பித்தது. சிறந்த அறிவிய லாக வாழ்வியலாக ஐரோப்பிய வாழ்தலை அறிவியலை பண்பாட்டை ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது. ஐரோப்பியர் அல்லாத பிற பண்பாட்டை வாழ்வியலை ஐரோப்பிய மையவாதம் எந்தவித தர்க்கவியல் விமர்சனமுமின்றி அறிவற்றதாய் வாழ்வியலி ருந்து இல்லாமல் செய்துள்ளது. செய்தும் வரு கின்றது.

காலனித்துவம் காலனிய நாடுகளில் பண்பாடு. அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், சார்ந்த அபிவிருத்தி மூலமான நாகரிகப்படுத்தல் என அடையாளப்படுத்திக் கொண்டது. ஆசிய ஆபி ரிக்க இலத்தீன் அமேரிக்க நாடுகளை வளங்க ளைச் சுரண்டவும் தனக்கான உற்பத்திகளை செய்யவும் உரிய இடமாக அதிகாரப்படுத் தியது. தன் சுரண்டலுக்கும் விற்பனைக்குமான முகவர்களை காலனிய நாடுகளில் உருவாக் கியது. அதற்கான சட்டரீதியான ஒழுங்குகளைச் செய்ததோடு போக்குவரத்து வசதி, பெருந்தெருக் கள் அமைத்தல் மூலமான அபிவிருத்தி என நியாயப்படுத்தியது. உலக வளங்களை ஒரே இடத்தில் குவிப்பதே இதன் நோக்கமாக இருந் தது. இதன் வாயிலாக காலனிய ஒடுக்குதலுக் குட்பட்ட நாடுகளின் வளங்களை சுரண்டுவதன் மூலம் உலக முதலாளியம் உருப்பெற்றது.

> **“ *மகப்பேற்றுக்கால மருத்துவ முறைமையில் பிரசவம் என்பது பிள்ளையைப் பெற்றெடுக்கும் மாத்திரமல்ல. சடங்குகளுடன் இணைந்தது. ஆரோக்கியமான சமாதானமான இளம் தலைமுறைகளை உலகிற்கு கொண்டு வருவது. இனப் பெருக்கம் சார்ந்த ஆரோக்கியத் தன்மையையும் பேணுவது. ஆனால் நவீன காலனிய அறிவில் வைத்தியம் ஒற்றைத் தன்மை கொண்டதாகவே உடல்களைக் கணிக்கின்றது.* ”**

முதலாளியத்தின் நோக்கு உற்பத்திகளை விற்பதற்கான சந் தைகளை உருவாக்குவதும் கண்டுபிடிப்பதுமே ஆகும். இவ் முதலாளியம் அதி உற்பத்திகளைச் செய்யத் தொடங்கியது. பாரம்பரிய உற்பத்தி என்பது தேவைக்கேற்ற உற்பத்தி. உற் பத்தி செய்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்குமான உறவு இதில் காணப்படும். மட்பாண்டம் போன்ற சிறு உற்பத்திகள் பண்பாட்டுப் பொருண்மை கொண்டவைகளாகவும் இயங்கு கின்றன. முதலாளியப் பாரிய உற்பத்திகள் சிறு உற்பத்தி களுக்குரிய சந்தைகளையும் தனக்கான பெரும் உற்பத்தி களுக்கான சந்தைகளாக மாற்றியுள்ளது. அத்தோடு மருத்து வமும் மனித உடலும் பெரும் முதலீட்டு உற்பத்தியாக முத லாளியத்தால் மாற்றப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் கால னித்துவத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட வைத்தியம் என்பது இலாபமீட்டும் தொழிலாக சமூகப்பரப்பில் இயங்குவதனைக் காணலாம்.

உணவும் மருத்தும் பாரம்பரிய அறிவு முறையில் பண்பாட் டில் ஒரு பகுதியாகும். நோய்களுக்கேற்ற உணவு, சடங்கிற்கு ஏற்ற உணவு. உணவு விலக்கல், உணவு சேர்த்தல் என உணவுப் பாரம்பரியம் பல்தன்மை கொண்டதாய் விளங் கியது. காலனியத்தின் பின்னான நவீன அறிவு மகப்பேறுகால மருத்துவ முறைமை மற்றும் உணவு, மருந்து அனைத்தினையும் விற்பனைக்கானதாக இலாப மீட்டலுக்கானதாக மாற்றியது. நாட்டின் பிர தேசத்தின் தட்பவெப்பம் உடலின் தட்பவெப் பம் என்பன கடந்து உலகப்பரப்பில் எல்லாம் எங்கும் எப்போதும் எல்லோருக்கும் பொது வானது என்ற அடிப்படையில் ஒரே உணவு, ஒரே உடல் என்னும் பொதுமைக்குள் தன் பெருஞ்சந்தையை கருத்திற் கொண்டு உணவு, வைத்தியம் மருந்து போன்றவற்றை பரவ லாக்கியுள்ளது.

மகப்பேற்றுக்கால மருத்துவ முறைமையில் பிரசவம் என்பது பிள்ளையைப் பெற்றெடுக் கும் மாத்திரமல்ல. சடங்குகளுடன் இணைந் தது. ஆரோக்கியமான சமாதானமான இளம் தலைமுறைகளை உலகிற்கு கொண்டுவரு வது. இனப்பெருக்கம் சார்ந்த ஆரோக்கியத் தன்மையையும் பேணுவது. ஆனால் நவீன காலனிய அறிவில் வைத்தியம் ஒற்றைத் தன்மை கொண்டதாகவே உடல்களைக் கணிக் கின்றது.

மகப்பேற்றுக்கால மருத்துவிச்சிகள் நீண்ட அனுபவத்தினையும் முதிர்ச்சியையும் கொண்ட வர்களாக காணப்படுகின்றனர். ஆனால் மகப் பேற்றில் மருத்துவிச்சிகளுக்கு இருந்த அறிவு அனுபவம் போன்றவை கருத்தில் கொள்ளப் படாமலும் பொதுத்தளத்தில் விவாதிக்கப்படா மலும் நவீன வைத்திய அறிவியல் முறை குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான (Mid wife) பயிற்சிகளையும் கத்தரிக்கோல், துடிப்பு பார்க்கும் கருவி, மகப்பேறு பார்க்க உதவும் கையேடு, பிளைட் போன்ற கருவிகளையும் வழங்கியது.

தூய்மையான, அன்பான, ஆதரவான கைகளைக் கொண்டு பிள்ளைப்பேறு பார்த்தவர்களுக்கு கைகளை விட கருவிகள் சுகாதாரமானவை என கருவிகளை பயன்படுத்த பயிற்று விக்கப்பட்டனர். வீட்டில் பார்க்கப்படும் பேறுகால மருத்துவ முறைமை சுகாதாரமற்றவை, பாதுகாப்பற்றவை தாய் சேய் இறப்புவீதத்தினை அதிகரிக்கச் செய்பவை போன்ற பரப்புரை கள் அறிவுப்புலங்களில் வாதிடப்பட்டு பேறுகால மருத்துவ முறைமை என்பது சட்டரீதியான அங்கீகாரம் இழக்கப்பட்டு தண்டணைக்குரிய குற்றமாக்கப்பட்டது. இன்றைய சட்டஒழுங் கின் பிரகாரம் வீட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கு பிறப்பு அத் தாட்சி பத்திரம் பதிவு செய்ய முடியாத சட்ட வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சட்ட நடவடிக்கைகளும் பயிற்சிகளும் மகப்பேற்றுக் கால மருத்துவிச்சி முறைமைகளை வாழ்விலிருந்து விலக்கு வதற்கான கருத்தியலை கட்டமைத்தது. இதன் பின்னான காலங்களில் மக்களுக்கும் மருத்துவிச்சிகளுக்கும் மகப்பேறு என்பது அச்சம் தருவதாக வீட்டுச் சூழலில் கையாளப்பட முடியாத ஒன்றாக நவீனகல்வி பதிவு செய்தது. இதன் தொடர்ச்சியாய் குடும்பநல உத்தியோகத்தர்கள் என்னும்

முறை உருவாக்கப்பட்டதுடன் பிணி ஆய்வு நிலையங்களும் (Health care center) உருவாக்கப்பட்டன.

குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான கடமைகளாகக் குறிப்பாக சமுகத்திலுள்ள பெண்கள் திருமணம் முடித்ததிலிருந்து ஆரம்பிக்கின்றது. திருமணம் முடித்தவுடனே குறித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் கர்ப்பத்திற்கு முன்னான ஆயத்த நிலைகளை மேற்கொள்வதற்கான உடல் உள தயார்படுத்தல்கள் பரிந்துரை செய்யப்படும். இதனை கர்ப்பத்திற்கு முன்னான பிணி ஆய்வு கல்வி எனக் கூறுவர். பின்னர் குறித்த பெண்ணுக்கு போலிக் அசிட் மாத்திரை வழங்கப்படும். கர்ப்பந்தரித்தலிருந்து தாய்மார்களுக்கான கல்சியம், அயன், போன்ற மாத்திரைகள் வழங்கல். அத்துடன் மாதாந்த பிள்ளைவளர்ச்சியை அறிவதற்கான பரிசோதனைகள், தாயின் ஆரோக்கியத்தைக் கணிப்பிடல், உணவுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல். குழந்தைகளுக்கான தடுப்பூசி என பிணி ஆய்வு நிலையங்கள்மூலம் குடும்பநல உத்தியோகத்தர்கள் இயங்கி வருகின்றனர்.

பாரம்பரிய மகப்பேற்று மருத்துவிச்சி முறைமை என்பது உணவினை மருந்தாக்கியது. பல்தன்மையான உடல்களும் அதற்கான மருத்துவமும் உருவாக்கப்பட்டன. நவீன மருத்துவத்தில் எல்லா உடல்களும் ஒற்றைத் தன்மையானவை. உலகப்பொதுமையில் ஒரே மருந்து என்பதனை நடைமுறைப்படுத்தியதுடன் மூன்றாம் உலக நாடுகளின் உடல்கள் பரிசோதனைக் கூடங்களா கவும் மாற்றப்பட்டுள்ளது.

மருத்துவிச்சிகளுக்குப் பதிலாக குழந்தைப் பேற்று வைத்தியர் முன்னுரிமை பெறத் தொடங்கினார். குடும்பமும் மருத்துவிச்சியும் அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்த பேறுகால மருத்துவ முறைமை நிறுவகமயப்பட்டு வியாபார மாக்கப்பட்டது. காலனித்துவத்தின் வெற்றியாய் மருத்துவிச்சிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் அவர்களே அவர்களின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளதுடன் பேறுகால மருத்துவ முறைமை மீது அச்சத்தினை ஏற்படுத்தியமை தெளிவாகின்றது.

தங்களது நீண்ட கால அனுபவத்தினை சமூகத்தளத்தில் பயன்படுத்தமுடியாதவர்களாக நவீன வைத்தியத்தினை விமர்சிக்கவோ தங்களது அனுபவங்களை அறிவினை சட்டரீதியாக பதிவு செய்ய முடியாதவர்களாக மகப்பேற்று மருத்துவிச்சிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். தங்களது பாரம்பரிய அறிவினை நினைவிற்கொண்டு பேசுபவர்களாகவே மாத்திரமே அவர்களை அதிநவீன வைத்திய முறை மாற்றியுள்ளது.

எங்களுக்கான வைத்தியமுறை எது ? என்னும் எந்தவித தர்க்க விவாதங்கள் இல்லாமல் காலனியம் அறிமுகம் செய்த நவீன மருத்துவத்தினை ஏற்றுக்கொண்டுள்ளோம். இதற்கான மூளைச் சலவையை காலனிய கல்விமுறை செய்துள்ளது. செய்தும்வருகிறது. காலனித்துவத்திற்கு மாற்றாகக் காலனியத்திலிருந்து விடுபடுவதற்கான வழிமுறையாக மரபினை தேடுதல், மரபிற்கு திரும்புதல் போன்ற உரையாடல்களை நிகழ்த்தப்படும் சூழலில் இத்தகைய உரையாடல்களை செயற்பாடுகளை எங்கிருந்து உருவாக்கப் போகின்றோம். என்னும் கேள்வியும் கருத்துரைப் பகிர்வுகளும் இன்றைய சூழலில் மிக முக்கியமான தேவையாக உணரப்பட வேண்டியது.

**“*வீட்டில் பார்க்கப்படும் பேறுகால மருத்துவ முறைமை சுகாதார மற்றவை, பாதுகாப்பற்றவை தாய் சேய் இறப்புவீதத்தினை அதிகரிக்கச் செய்பவை போன்ற பரப்புரைகள் அறிவுப்புலங்களில் வாதிடப்பட்டு பேறுகால மருத்துவ முறைமை என்பது சட்டரீதியான அங்கீகாரம் இழக்கப்பட்டு தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டது. இன்றைய சட்ட ஒழுங்கின் பிரகாரம் வீட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரம் பதிவு செய்ய முடியாத சட்ட வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.*”**

*மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம் சார்பில்*
***சி.ஜெயசங்கர்***

Jeyasankar.S@thaiveedu.com

15

# பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

## மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும் 3

எஸ்.கே.விக்னேஸ்வரன்

### பாத்திரங்களை மறுவரையறை செய்தல்:

- பகுதி ஒன்று:

ஒரு தாய், தன் இரு ஆண் பிள்ளைகள் மீதும் தான் கொண்டிருக்கும் 'எத்தகைய பயனுமற்ற மனப்பான்மை'யைத் தானாகவே உணர்ந்து கொண்டாள். மிகுந்த கவலை அளிக்கின்ற ஒரு புரிதல் அது. இந்தக் கதையில், தன்னை மாற்றிக்கொள்ள அவள் படும் போராட்டத்தை அந்தத் தாய் இப்படி விவரிக்கிறாள்:

'நான் என் இரண்டு மகன்களுடனுமான எனது உறவுகளை மறு பரிசீலனை செய்து வருகிறேன். இதனால் நான் அவர்கள் இருவரும் வெவ்வேறு இரண்டு பாத்திரங்கள் என்று கருதியே நடந்து வந்திருக்கிறேன் என்பதை இப்போது உணர்கிறேன்: பதின்மூன்று வயது வாரனை அவன் ஒரு 'பெரிய முரடன்' என்றும், ஒன்பது வயதுப் பில்லியை அவன் ஒரு 'சின்ன நோஞ்சான்' என்றும், அவர்கள் இருவரும் தங்களுக்குள் சண்டையிடும்போது நான் பாரபட்சமின்றி நடந்துகொள்ளவும் முயல்கிறேன். என்றாலும் என் குரலில் பில்லியின் மீது அக்கறையும் வாரன் மீது கண்டிக்கும் தொனியும் வெளிப்படுகின்றன. நான் எனக்குள்ளேயே இப்படி நினைத்துக்கொள்கிறேன்: இந்தப் பெரிய முரடனுக்கு, தன் தம்பியைத் தான் துன்புறுத்தக் கூடாது என்று தெரிந்திருக்க வேண்டாமா?

'அறிவுபூர்வமாக, வாரன் ஏன் சண்டையிடுகிறான் என்று எனக்குத் தெரியும். அவன் மூத்த மகன் என்பதால், அவனுக்குப் போதுமான செல்லம் கொடுக்கப்படவில்லை. ஆனால் என் இதயத்தில் நான் அவனை ஒரு முரடன் என்று முத்திரை குத்தி விட்டேன். நான் அவனுக்காக வகுத்த பாத்திரத்தில் அவன் வாழ்ந்து வருகிறான். இப்போது நான் அவனுடைய பாத்திரத்தை மறுவரையறை செய்ய விரும்புகிறேன், அவனை வித்தியாசமாகப் பார்க்க விரும்புகிறேன், மேலும் அவன் எப்படி மாற வேண்டும் என்று நான் உண்மையாக விரும்புகிறேனோ, அப்படியே அவனை நடத்த விரும்புகிறேன்.

முதல் எண்ணம்: என் குழந்தைகளிடமிருந்து எனக்கு ஒரு இடைவெளி தேவை. என் நண்பரின் குழந்தைகளை நான் கவனித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் போது, அவர்கள் தங்களுக்குள் சண்டையிடும்போது நான் கோபத்தில் வெடிப்பதில்லை. நான் அதைத் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்வதில்லை.

இரண்டாவது எண்ணம்: நான் அவர்களின் பெற்றோர் அல்ல என்று கற்பனை செய்து கொள்கிறேன். நான், பையன்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்பதை அறிந்த, வயதான மற்றும் ஞானமுள்ள ஒரு குழந்தைக் காப்பாளர் என்று என்னைக் கருதிக் கொள்கிறேன்.

நான் கண்டறிந்த இந்த விஷயத்தால் என் மனம் வலித்தது. அடுத்த சண்டைக்காக என்னால் காத்திருக்க முடிய

tg.theeban@gmail.com

வில்லை. ஆனால், அது விரைவிலேயே வந்தது. அதனுடன் என்னிடமிருந்து ஒரு புதிய எதிர்வினையும் வந்தது.

என் இளைய மகன் பில்லிக்கு நான் பின்வரும் செய்தியைத் தெரிவிக்க முயன்றேன்: 'தாக்கப்படும்போது உன்னை நீயே தற்காத்துக் கொள்ளும் திறன் உனக்கு உள்ளது. உன் அண்ணனுடன் உன் பலத்தைச் சோதிக்கும்போது, நீ உடைந்து போகாமல் அடியைக் கொடுக்கவும் வாங்கவும் கூடிய திறன் உனக்கு உள்ளது. நீ வளர்ந்து வருகிறாய், அவனது கேலிக்கு நீ அவ்வளவாக ஆட்படுவதில்லை. சில நேரங்களில் வாரன் உனக்குச் சவாலாக இருக்கிறான். ஆனால் நீ எப்போதும் மீண்டு வருகிறாய். நீ ஒரு வலிமையானவன் மட்டுமல்ல, மீண்டு எழும் ஆற்றல் கொண்டவனும் கூட.'

என் மூத்த மகனுக்கு நான் பின்வரும் செய்தியை தெரிவிக்க முயன்றேன்: அண்ணன் என்ற முறையில் நான் உனக்கு மரியாதை கொடுக்கிறேன். உனது அதிகாரத்தை கெட்டித்தனமாகப் பயன்படுத்துகின்ற, வலிமையும் திறமையும் கொண்ட ஒருவனாக, நான் உன்னைப் பார்க்கிறேன். நீ ஒரு செல்லப்பிராணியை எவ்வளவு மென்மையாகப் பிடித்துக்கொள்கிறாய் அல்லது ஒரு நண்பனுக்கு எவ்வளவு மென்மையாக உதவுகிறாய் என்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் உன் சகோதரனிடம் அன்பாக நடந்துகொள்வது உனக்குக் கடினமாக இருக்கிறது. அவன் அடிக்கடி உன்னை எரிச்சலூட்டுகிறான். சில சமயங்களில், உனக்கு ஒரு தம்பி இல்லாமலேயே இருந்திருக்கலாம் என்று கூட நீ நினைக்கிறாய். உன் உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் அவனிடம் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.'

- **பகுதி இரண்டு:**

இரண்டு வாரங்களுக்கு முன்பு, என் மகன்களின் பாத்திரங்களை வெவ்வேறாக நான் மாற்றியமைத்த என்னுடைய கதையைச் சொன்னேன். அதன் முடிவுகள் நம்ப முடியாத அளவுக்கு நன்றாக இருந்தன. முன்பிருந்த, என் மனப்பான்மைகள் அவர்கள் ஒருவரையொருவர் விரும்புவதையும் மகிழ்வதையும் தடுத்தன. ஆனால் சமீப காலமாக, அவர்கள் உற்சாகமாக ஒன்றாக விளையாடுகிறார்கள்; தம்முள் குத்துப்படுகிறார்கள், மல்யுத்தம் செய்கிறார்கள், சிரிக்கிறார்கள்.

'வாரன்' ஒருமுறை தன் கையால், 'பில்லியை' மிகவும் பலமாகக் குத்தியபோது, அவன் பெரிதாகக் கூச்சலிட்டான். நான் அசையாமல் இருந்தேன். வாரன் சொன்னான்: 'மன்னித்துவிடு பில்லி' என்று. பிறகு பில்லியை மீண்டும் சிரிக்க வைப்பதற்காக அவன் வேடிக்கையான முகபாவனைகளைக் காட்டினான். மற்றொரு சண்டையில், பதிலடியாக பில்லி தன்னைக் குத்துவதற்கு அவன் அனுமதித்தான். பிறகு அவனைப் பாராட்டினான், 'உனக்கு நன்றாகக் குத்தக்கூடிய கெட்டித்தனம் இருக்கிறது, தம்பி!' என்று. ஆயினும் எப்போதாவது, அவர்கள் ஒருவரையொருவர் திட்டிக்கொள்ளத் தொடங்குவார்கள். அப்போதெல்லாம் நான் கரட்டை நறுக்கிக்கொண்டோ ஒரு மெட்டை முணுமுணுத்துக் கொண்டோ அவற்றில் தலையிடாது இருந்தேன். சில நாட்கள் கடந்த போது அந்தத் திட்டுக்கள் மெல்ல மெல்ல அடங்கிப் போயின.

இந்த முழு மாற்றமும் நம்ப முடியாததாக இருந்தது. நான் ஒருவித அமைதியையும் சக்தியையும் உணர்ந்தேன். பில்லி தன் அண்ணனால் தனக்கு ஏற்பட்ட ஏழு கறுப்புத் தழும்புகளுடன் தன் கையை எனக்குப் பெருமையுடன் காட்டியபோது, நான் அவற்றை எண்ணிவிட்டு வியப்புடன் சொன்னேன்: 'உன்னால் நிச்சயமாக இவ்வளவு முரட்டு விளையாட்டுகளைத் தாங்க முடியுமா ?'.

ஆனால், அவன் பதில் சொல்லவில்லை. அவனது முகபாவம் காட்டியது, அந்தக் கறுப்புத் தழும்புகள், அவனுக்குத் தனது கௌரவச் சின்னமாக மாறியிருந்தன என்பதை!.

ஒருமுறை வாரன், பில்லியை அளவுக்குமீறிய விதத்தில் சண்டைக்கு இழுத்த போது, அவன் தன் சகோதரன் மீது வீசுவதற்காக ஒரு பெரிய சுரைக்காயைத் தூக்கினான். நான் உடனே அதில் குறுக்கிட்டேன்: 'பில்லி, உன்னை இதைச் செய்ய நான் விடமாட்டேன். அது உன் அண்ணாவை நொறுக்கி விடும். உன் பலமான கையால், இதனால் அடித்தே அவனை மயக்கமடையச் செய்துவிடலாம். ஆனால் அது நல்லதல்ல. வாரன், தம்பி பில்லி மிகவும் கோபமாக இருக்கிறான் (அது உனக்குப் புரிகிறதல்லவா ?), உனக்கு அது (உண்மையில்) பாதுகாப்பானது அல்ல. இந்த அறையை விட்டு நீ உடனே வெளியேறுவது நல்லது என்று நான் உனக்கு அறிவுரையாகச் சொல்லுகிறேன். பில்லி, உன் கோபம் தணியும் வரை என்னுடன் வருகிறாயா ?'.

வாரன் நகர்ந்து வெளியேற, (தனக்கேற்பட்ட பெருமிதத்தில்) பில்லி மூன்று அங்குலம் உயரமாகத் தெரிந்தான்.

'ஒருநாள் பில்லி என்னிடம் வந்து, தனது நண்பன் ரோஜர், தன் மூக்கில் குத்தப்போவதாகத் தன்னை மிரட்டியதாகக் கூறினான்.

நான் கேட்டேன்: 'ஓ.. அவன் உன்னைக் குத்துவானா ?, அந்தளவு தைரியம் அவனுக்கு இருக்குமா ?'

அவனிடமிருந்து ஒருவகைக் குழப்பத்துடனான பார்வை, என் மீது பதிந்திருந்தது.

பிறகு நான் மென்மையாக, 'ஆம்... குத்தலாம் தான். ஏன் இருக்காது ?' என்று கூறிவிட்டு, அவனிடம் நான் கேட்டேன்: 'ஏன் பில்லி அவனுக்கு உன்னைப் பற்றித் தெரியாதா ?'

பில்லி: என்ன தெரியாது ?

நான்: அவன் தாக்கினால், நீ அவனை அறையைச் சுற்றித் தூக்கி எறிந்துவிடலாம் என்பது அவனுக்குத் தெரியாதா ?

பில்லி சிரித்துக்கொண்டே சொன்னான்: ஆமாம். என்னை வம்புக்கு அழைத்தால் அவன் ஒரு முட்டாளாகத் தான் இருப்பான்.

வாழ்க்கை நன்றாக இருந்தது. நாங்கள் அனைவரும் இயல்பாக இருப்பது போல உணர்ந்தேன். பிள்ளைகள் இருவரும் ஒருவரோடொருவர் நன்றாக விளையாடினார்கள். அவர்களுக்குள் சிறு சண்டைகளும், நீண்ட சமரசங்களும் ஏற்பட்டன. அவர்கள் இருவரையும் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அந்த அற்புதத்தைப் பற்றி முழு உலகிற்கும் சொல்ல விரும்பினேன். சகோதரப் போட்டிக்கு இதோ ஒரு தீர்வு என்று பகிர்ந்து உரக்கக் கூற விரும்பினேன். ஆனால் நான் பயந்தேன். நான் அதைப் பற்றிப் பேசினால், ஒருவேளை எல்லாம்

மறைந்துவிடுமோ என்ற பயம். ஆனால், அமைதி என்றென்றும் நிலைக்க முடியும் என்பதற்கான ஆதாரம் என் கண் முன்னே நிகழ்ந்தது.

‘நேற்றுக் காலை எனக்கு அதற்கேற்ற தண்டனை கிடைத்தது. பில்லி தனக்குப் பிடித்த தோடம்பழச் சாற்றை ஊற்றிவிட்டான். கவலையில் அவன் முனகியபோது, வாரன் அவனது முனகலைப் போலவே தானும் செய்துகாட்டி நெளித்தான். கோபமடைந்த பில்லி அழத் தொடங்கினான். வாரனும் அதே போலவே தானும் அழுதுகாட்டி நெளிப்புச் செய்தான். என் மனதிலெழுந்த கொதிப்பை அடக்கியபடி எனக்கு நானே சொன்னேன்: ‘இப்போது நிதானமாக இரு. உன் புதிய வழியை நினைவில் கொள். விலகி இரு. வாரன் ஒரு கொடுமைக்காரன் அல்ல. அவனை நம்பு. அவன் சமாதானம் ஆக ஒரு வழியைக் கண்டுபிடிப்பான்.’ வாரன் தன் பாவனையை வேகப்படுத்தினான். பில்லி அவன் மீது ஒரு கரண்டியை எறிந்தான். ஆத்திரத்தில், வாரன் சொன்னான்: ‘ஓ, உன்னால் மற்றவர்களைத் திட்ட முடியும், ஆனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது.’ அவன் தன் தம்பியை நோக்கி முன்னேறினான். நான் அவனைத் தடுக்கும் விதமாக என் கையை நீட்டி, பயனற்ற முறையில்; ‘வாரன்,கொஞ்சம் பொறு. இதை நீயே சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று உனக்குத் தெரியும்.’ என்று சொன்னேன். வாரன் என்னை விலக்கிவிட்டு, பில்லியை ஓங்கிக் குத்திவிட்டுச் சொன்னான்: ‘அவன் அதைத் தாங்கிக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்.’ நான் அவர்கள் இருவரையும் பிரித்து, பில்லியைச் சமாதானப் படுத்தி, வாரனிடம் கத்தி, அவர்கள் இருவரையும் ஒருவாறு பாடசாலைக்கு அனுப்பி வைத்தேன்.

அந்தச் சம்பவத்தை நான் சாதாரணமாகக் கடந்து செல்ல முயன்றேன். எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்: ‘நீ என்ன எதிர்பார்த்தாய் - என்றென்றைக்குமான நல்லிணக்கமா? அல்லது திங்கட்கிழமை காலைகளுக்கான ஒரு விதிவிலக்கு என்று இதைச் சேர்த்துக்கொள்வதா?

ஆனால் நான் மீண்டும் என் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டதாக உணர்ந்தேன்: ‘கோபம், உதவியற்ற நிலை, சிக்கிக் கொண்டது போன்ற உணர்வு...’

நான் இவ்வாறான நிலைமைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு நண்பரிடம் பேசி, என் பார்வையை மீட்டெடுத்தேன்.

நிச்சயமாக, வாரன் எப்போதாவதுதான் தன் சகோதரனைக் கிண்டல் செய்வான். ஆனால் அது அவனை ஒரு கொடுமைக்காரனாக ஆக்கிவிடாது. குழந்தைகள் கிண்டல் செய்வது இயல்புதான். அமைதியான சகவாழ்விற்கான முழுப் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைப்பது யதார்த்தமற்றது. ஒரு கட்டத்தில், ஒரு பெற்றோர் உரத்த தொனியுடனும், தெளிவான கொள்கை சார்ந்த அறிக்கையுடனும் தலையிட வேண்டும்:

அனுசரித்துப் பேசுவதை அனுமதிக்கப்படாது.

காயப்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் சித்திரவதை இருக்காது.

யாரும் வேண்டுமென்றே மற்றொருவரை அழும் வரை கிண்டல் செய்யக்கூடாது.

மனிதர்கள் காயப்படுத்துவதற்காக இல்லை.

மனிதர்கள் மதிப்பதற்காக இருக்கிறார்கள்.

திங்கட்கிழமை காலை என் உறவு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புமோ என்ற என் அச்சங்கள் மிகைப்படுத்தப்பட்டவை. என் மகன்கள் தங்கள் புதிய உறவுக்குத் திரும்பியிருந்தனர். வாரன் சொல்வதைக் கேட்டேன்: ‘பில்லி, நீ மிகவும் பலசாலி. நான் உன் வயதில் இருந்தபோது அவ்வளவு பலசாலியாக இல்லை. சண்டையிடக் கற்றுக்கொடுக்க எனக்கு ஒரு அண்ணன் இல்லை. நான் உனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். ஒருவனை எப்படி அடக்கிப் பிடிப்பது என்று நான் உனக்குக் காட்டுகிறேன்.’

நான் புன்னகைத்தபடியே கேட்டேன். ஆனால் நான் மூச்சைப் பிடித்துக்கொள்ளவில்லை. அது நீடிக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால் அடுத்த சண்டையில் நான் என்ன செய்வேன் என்பதும் எனக்குத் தெரியும். எங்கள் உறவுகள் ஒருபோதும் பழையபடி தவறான நிலைக்குத் திரும்ப முடியாது.

## வீட்டுப்பாடம் பற்றிய உரையாடல்:

ரொனால்ட் (பன்னிரண்டு வயது): அம்மா... அம்மா, நீங்கள் கையெழுத்திடுவதற்கான ஒரு குறிப்பு என்னிடம் உள்ளது. அது எனது ஆசிரியரிடமிருந்து வந்தது.

அம்மா: இரண்டு குறிப்புகள் இருப்பதுபோல் தெரிகிறதே...

ரொனால்ட்: ஓம், ஓமோம், அதை உங்களிடம் காட்ட மறந்துவிட்டேன்.

அம்மா: (முதல் குறிப்பைப் படிக்கிறார்.) அன்புள்ள திருமதி. ஏ., ரொனால்ட் இந்தத் தவணைக்காலம் முழுவதும் தனது ‘சமூக அறிவியல்’ வீட்டுப்பாடத்தைச் செய்யவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

(அம்மா இரண்டாவது குறிப்பைப் படிக்கிறார்.)

அன்புள்ள திருமதி. ஏ.

ரொனால்ட் ஆங்கில இலக்கியத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யவில்லை. அவன் தனது சமூக அறிவியலுடன் வாசிப்பையும் செய்ய வேண்டும். உங்களிடமிருந்தான பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

அம்மா (நீண்ட இடைவெளிக்குப் பிறகு): இது மிகவும் தீவிரமான விஷயம்!

ரொனால்ட்: எனக்குத் தெரியும். ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனால் பிரயோசனம் இல்லை அம்மா. பாருங்கோ, எனக்கு வீட்டுவேலை செய்யும் பழக்கமே இல்லை. ஒன்றாம் வகுப்பிலிருந்து எனக்கு அது ஒருகாலமும் இப்படி வீட்டு வேலைகள் இருந்ததே இல்லை. இப்போது என்னால் அப்படி மாறவும் முடியாது.

அம்மா: ம்ம்ம் (அந்தக் குறிப்பை எடுத்து மீண்டும் உற்றுப் பார்க்கிறாள்). ஆனால் இது மிகவும் முக்கியமான விஷயம்!

ரொனால்ட்: சரி, ஒருவேளை நான் என் மேசையில் ஒரு அறிவிப்புப் பலகையை வைக்கலாம்: வீட்டுப்பாடப் புத்தகங்களை மறந்துவிடாதே.

அம்மா: அப்படியான ஒரு அறிவிப்புப் பலகை உனக்கு நினைவூட்ட உதவும் என்று நினைக்கிறாயா?

ரொனால்ட்: ஒருவேளை உதவலாம். ஆனால் அது மட்டுமல்ல. எனக்கு என்னதான் பிரச்சினையோ தெரியவில்லை. என்னைத் தவிர மற்ற எல்லோரும் தங்கள் வீட்டுப்பாடத்தைச் செய்கிறார்கள்.

அம்மா: (கவலையுடன் அமைதியாக அமர்ந்திருக்கிறார். அந்த அமைதி கனமாக இருக்கிறது.)

ரொனால்ட்: அப்படியானால் நீயென்றால் என்ன செய்வாய்?

அம்மா: ரொனால்ட், கேள்வி இதுதான்: நீ என்ன செய்யப் போகிறாய்? நீ ஒன்றைச் செய்ய விரும்பினால், அது கடினமாக இருந்தாலும், நீ அதைச் செய்வாய் என்று எனக்குத் தெரியும். உன் கிற்றாரைப் போல. அந்தப் பெரிய இசைக்கருவியை உன்னால் வாசிக்க முடியும் என்று யாரும் நம்பவில்லை. ஆனால் உன்னால் முடியும் என்று நீ முடிவு செய்தாய். ஒவ்வொரு இரவும் அதற்காகப் பயிற்சி செய்து, வாசிக்கக் கற்றுக்கொண்டாய்.

ரொனால்ட்: ஓம். ஆனால் அதுதான் முக்கியமான விஷயம்! நான் உண்மையில் கிற்றார் வாசிக்க விரும்பினேன், ஆனால் வீட்டுப்பாடம் செய்ய நான் விரும்பவில்லை!

அம்மா: எனக்கு நீ சொல்வது புரிகிறது. அதைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை உனக்குள் வரவைப்பதுதான் இப்போது இருக்கின்ற பிரச்சினை.

ரொனால்ட்: ஆமாம். அதைவிட என்னிடம் இன்னொரு விஷயமும் இருக்கிறது. நான் நேரத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதில்லை. அதாவது, ஒரு பக்கத்தை முடித்தவுடன் நாம் அடுத்த பக்கத்திற்குச் செல்ல வேண்டும். நான் அப்படிச் செய்வதில்லை. நான் என் பென்சிலைக் கடித்துக் கொண்டு, அப்படியே சும்மா வெறுமனே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

அம்மா: ஓ, அப்படியென்றால் நீ கட்டாயம் நேரத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ரோனால்ட்: ஆம். உண்மைதான்... (நீண்ட மௌனம்.) சரி, இப்ப இதற்கு என்ன பதில் எழுதப் போகிறீர்கள்?

அம்மா: சரி, கடிதத்தை எப்படித் தொடங்குவது என்று எனக்குத் தெரியும்.

இந்தப் பிரச்சினையை நீ எப்படிச் சமாளிக்கப் போகிறாய் என்று நீ எனக்குச் சொல். நான் எழுதும்போது சத்தமாகப் படித்துக் காட்டுகிறேன். அது உனக்கு ஏற்புடையதா என்று சொல்: அன்புள்ள ஆசிரியைக்கு, ரோனால்ட் உங்களுடைய இரண்டு குறிப்புகளையும் எனக்குக் காட்டினான்.

இது மிகவும் முக்கியமான விஷயம். இதை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. நான் இந்தப் பிரச்சினையை ரோனால்டிடம் விவாதித்தேன். அவன்... (அம்மா: என்ன எழுதுவது? என்று கேட்கிறான்)

ரோனால்ட்: இனிமேல் நான் என் சமூக அறிவியல் புத்தகத்தை வீட்டிற்குக் கொண்டு வருவேன் என்று அவரிடம் சொல்.

அம்மா: ரோனால்ட் தன் சமூக அறிவியல் பயிற்சிப் புத்தகத்தை வீட்டிற்குக் கொண்டு வரப் போவதாகச் சொல்கிறான்.

அம்மா: வேறு ஏதாவது?

ரொனால்ட்: அடுத்த திங்கட் கிழமைக்குள் நான் வீட்டுப் பாடத்தைத் தயார் செய்துவிடுவேன் என்று அவரிடம் சொல்.

அம்மா: ரொனால்ட், திங்கட்கிழமையன்று தனது பாடங்களைப் படித்துவிட்டு, வீட்டுப்பாடத்தைச் சமர்ப்பித்து விடுவதாகவும் சொல்கிறான்.

ரொனால்ட்: சரி. மேலும், நான் நேரத்தை வீணடிப்பதை நிறுத்தப் போகிறேன் என்றும் அவரிடம் சொல்.

அம்மா: அவன் தனது நேரத்தை இன்னும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப் போவதாகச் சொல்கிறான். (சரியா?)

ரொனால்ட்: (நிம்மதியான குரலில்): அட, அம்மா, நீ கத்தவோ அல்லது அதை ஒரு பெரிய விஷயமாக ஆக்கவோ இல்லை.

அம்மா: அது ஒரு மிகப் பெரிய விஷயம்தான். ஆனால், நீ இந்தப் பிரச்சினையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டாயென்றால், அது தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் தான் நான் கத்தவில்லை. ஆனால், இந்தத் தவறை இனிமேலும் நீ செய்ய கூடாது. ஏனென்றால் இது மிகவும் முக்கியமான ஒரு விஷயம்.

vickneaswaran.sk@thaiveedu.com

tg.theeban@gmail.com

# பிள்ளைகளின் கல்வியும் காப்புறுதியும்

## செந்தூரன் புனிதவேல்

வாழ்க்கையில் மாற்றங்கள் ஒன்றுதான் மாறாதது. பிறந்த நாள்முதல் உங்களுடன் கூடவே வளர்ந்த பிள்ளை, ஒருநாள் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்காக வீட்டைவிட்டுப் புறப்படும் நாள் வரலாம். அது பெற்றோருக்கு மகிழ்ச்சியும் பெருமையும் நிறைந்த தருணம். பெட்டி, படுக்கைகளுடன் புறப்படத் தயாராகும் அந்த வேளையில், பெற்றோரின் மனத்தில் ஒரு நியாயமான சந்தேகம் தோன்றலாம். பிள்ளையைப் பற்றியதல்ல; அவன் எடுத்துச் செல்லும் பெட்டி, படுக்கைகள் பற்றியதுதான். அவை அனைத்துக்கும் காப்புறுதி செய்திருக்கிறோமா என்பதே அந்தச் சந்தேகம்!

இதில் மகிழ்ச்சியான செய்தி என்னவெனில், பெரும்பாலான காப்புறுதித் திட்டங்கள், ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கான நட்டஈட்டை வழங்குகின்றன. ஆனால், இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் ஒன்றுண்டு. நீங்கள் எந்த வகையான காப்புறுதியை, எந்தக் காப்புறுதி நிறுவனத்தினூடாகப் பெற்றுள்ளீர்கள் என்பதுடன், உங்கள் பிள்ளை எத்தகைய வதிவிடத்தில் தங்கியிருக்கிறார் என்பதும் முக்கியமானதாகும். அவர் பல்கலைக்கழக விடுதியில் தங்குகிறாரா, வாடகை விடுதியில் வசிக்கிறாரா, அல்லது ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கிறாரா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி, வேறு நகரத்திலோ, வேறு மாகாணத்திலோ, சில சந்தர்ப்பங்களில் வேறு நாட்டிலோ கல்வி கற்கச் செல்லக்கூடும். இவ்வாறு வீட்டைவிட்டுப் புறப்படும் ஒரு பிள்ளையுடன் செல்லும் உடைமைகளும் குறைவானவை அல்ல; மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி, ஆடைகள், தளபாடங்கள், சைக்கிள், புத்தகங்கள் எனப் பலவகையான பொருட்கள் அவருடன் செல்லக்கூடும். எனவே, ‘பிள்ளை பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறார்’ என்ற மகிழ்ச்சியோடு, ‘அவருடைய உடைமைகளுக்குக் காப்புறுதி இருக்கிறதா?’ என்ற கேள்வியையும் பெற்றோர் ஒருமுறை எழுப்பிப் பார்ப்பது நல்லது.

பொதுவாக, பிரச்சினை ஏதும் தோன்றுவதற்கு முன்பே காப்புறுதி நிறுவனத்தைத் தொடர்புகொண்டு, ‘என்னென்ன காப்புறுதி செய்யப்பட்டுள்ளது? எதற்கெல்லாம் இழப்பீடு கிடைக்கும்? பல்கலைக்கழக விடுதியில் தங்கினால் என்ன நிலை?’ என்று கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டால், அவர்களும் மிகுந்த அனுசரணையுடன் பதிலளிப்பார்கள். ஆனால், இவற்றையெல்லாம் முன்கூட்டியே கேட்டுத் தெரிந்துகொள்ளாமல், ஒரு நாள் இரவு 11.47 மணிக்கு தொலைபேசியில் அழைத்து, ‘அப்படியானால், எனது மடிக்கணினியின் நிலை என்ன?’ என்று கேட்டால், மறுமுனையில் இருப்பவரும் சற்று யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்!

பொதுவாக, பிள்ளைகள் தங்களுடன் எடுத்துச் செல்லும் பொருட்களின் பெறுமதியை நாம் சற்று குறைவாகவே மதிப்பிடுவது வழக்கம். ஆனால், அவற்றின் மொத்தப் பெறுமதி பல்லாயிரம் டொலர்களை எட்டும் என்று சொன்னால் வியப்பாக இருக்கிறதல்லவா! உதாரணத்திற்கு, ஒரு மடிக்கணினி $2,000, தொலைபேசி $1,500, தலையணி (Headphone) $500, மிதிவண்டி $1,000, ஆடைகள் $2,000, தளபாடங்கள் $1,000 எனக் கணக்கிட்டுப் பாருங்கள். அற்பமானவை என்று நாம் நினைத்த பொருட்களின் பெறுமதியே மொத்தமாக $8,000 ஆகிவிடுகிறது. எனவே, விலையுயர்ந்த பொருட்களைப் புகைப்படம் எடுத்து வைத்திருப்பதுடன், அவற்றுக்கான பற்றுச்சீட்டுகள் மற்றும் வாங்கியதற்கான பிற ஆதாரங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பது நல்லது. எதிர்பாராத இழப்பு ஏதும் ஏற்பட்டால், இவ்வாறு முறையாகப் பதிவு செய்து வைத்திருக்கும் விவரங்கள் காப்புறுதிக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும், அதற்கான நட்டஈட்டை விரைவாகப் பெறுவதற்கும் பெரிதும் உதவும்.

### மாணவர்கள் வசிக்கும் சூழலில் பொருட்களின் பாதுகாப்பும் விழிப்புணர்வும்:

பல்கலைக்கழக மாணவர்களைச் சுற்றி எப்போதும் பலர் இருப்பார்கள். அவர்கள் தங்கியிருக்கும் இடத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் நாள்தோறும் ஒன்றுகூடுவதால், நண்பர்கள் மற்றும் விருந்தினர்களின் வருகை இயல்பானதொன்றாகக் காணப்படுகின்றது. அத்துடன், பல மாணவர்கள் இணைந்து வாழும் சூழலில் பொருட்களின் பகிர்வும் இயல்பாகவே இடம்பெறுகின்றது. இத்தகைய சூழலில், பொருட்களின் பாதுகாப்புத் தொடர்பில் பெற்றோர் மற்றும் மாண

வர்கள் முன்கூட்டியே விழிப்புணர்வுடன் இருப்பதுடன், எதிர்பாராதவிதமாகப் பொருட்கள் காணாமல் போவதைத் தவிர்க்கவும், அவ்வாறு நிகழும் பட்சத்தில் அவற்றை விரைவாகக் கண்டறிவதற்கும் உரிய பாதுகாப்பு வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் அறிந்துகொள்வது அவசியமாகின்றது.

## வாகனத்தையும் மறந்துவிடாதீர்கள்!

உங்கள் வாகனத்தைப் பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்காக எடுத்துச் சென்றால், உங்கள் வாகனக் காப்புறுதி முகவரைத் தொடர்புகொண்டு அதுபற்றித் தெரிவிப்பது நல்லது. வாகனம் எத்தகைய தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதும் காப்புறுதிக் கட்டணத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகும். உதாரணமாக, ரொறன்ரோவில் வசிக்கும் ஒரு மாணவர் வாகனத்தை எடுத்துக்கொண்டு வேறு நகரத்திற்கோ அல்லது வேறு மாகாணத்திற்கோ சென்று கல்வி கற்கும்போது, அதன் பயன்பாடு வீட்டில் வாகனத்தை வைத்துவிட்டு கல்வி கற்பதிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். அதேபோல், உங்கள் பிள்ளை தேவைக்காக மற்றொருவரின் வாகனத்தைப் பயன்படுத்தினால், அது தொடர்பான காப்புறுதி நிலைமையையும் முகவரிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

காப்புறுதி என்பது ஒருமுறை பெற்றுவிட்டு மறந்துவிடக் கூடிய ஒன்றல்ல. உங்கள் பிள்ளையின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும் ஒவ்வொரு கட்டத்திலும், அவருடைய வதிவிடம், உடைமைகள், வாகனப் பயன்பாடு போன்றவற்றுக்கு ஏற்ப காப்புறுதியும் மாற்றமடைய வேண்டியிருக்கலாம். ஆகவே, வாழ்க்கை மாறும்போது காப்புறுதியையும் ஒருமுறை மீள்பார்ப்பது நல்லது.

## பிள்ளைகளின் பயணங்கள்:

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிள்ளைகள் பல்வேறு வகையான பயணங்களை மேற்கொள்ளலாம். விடுமுறைக் காலங்களில் பொழுதுபோக்குக்காகப் பயணம் செல்லலாம்; வீட்டிற்கு வந்து செல்லலாம்; அல்லது வெளிநாட்டு மாணவர்களுடன் மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் கலந்து கொண்டு ஒரு தவணைக்காலம் வேறொரு நாட்டில் கல்வி கற்கவும் செல்லலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் காப்புறுதி தொடர்பான விதிமுறைகளையும் முன்கூட்டியே அறிந்துகொள்வது அவசியம்.

குறிப்பாக, ஒரு மாணவர் வெளிநாட்டில் ஒரு தவணைக் காலம் கல்வி கற்கச் சென்றால், அதற்கென விசேடமான காப்புறுதி தேவைப்படலாம். ஏற்கனவே, தங்களிடம் உள்ள பயணக் காப்புறுதி அனைத்துவிதமான இழப்புகளையும் ஈடு செய்யும் என்று நம்புவது சரியானதல்ல. பயணத்தைத் தொடங்குவதற்கு முன் காப்புறுதி முகவருடன் மேற்கொள்ளும் ஐந்து நிமிடத் தொலைபேசி உரையாடலே, பின்னர் ஏற்படக்கூடிய பல சிக்கல்களைத் தவிர்க்க உதவும்.

பிள்ளையைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவது கல்விக்காக மட்டுமல்ல; வளர்ந்த பிள்ளை தன்னுடைய வாழ்க்கையில் தனித்து உலகை எதிர்கொள்ளத் தொடங்கும் முதல் படியாகவும் அமைகிறது. எனவே, அந்த மாற்றத்துடன் பெற்றோர் தங்களுடைய வீட்டு காப்புறுதியையும் ஒருமுறை மீளாய்வு செய்வது சிறந்தது. உதாரணமாக, பிள்ளையின் பொருட்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அது காப்புறுதியின் கீழ் வருமா? பொருட்கள் களவுபோனால், அந்தக் காப்புறுதி எப்போது, எங்கே, எத்தகைய சூழ்நிலையில் ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்யும்? எவ்வளவு கழிவுத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்? போன்ற விடயங்களை முன்கூட்டியே தெரிந்துகொள்வது அவசியம்.

பொதுவாக, மிதிவண்டி களவுபோகும் வரையில் அதைப் பற்றிப் பெற்றோர் அதிகம் சிந்திப்பதில்லை. ஆனால், ஒரு மிதிவண்டியின் விலை $1,000 முதல் $4,000 வரை இருக்கக் கூடும். பெரும்பாலும், மிதிவண்டி வீட்டுக் காப்புறுதியின் கீழ் உள்ளடக்கப்படலாம். இருப்பினும், அது எங்கு வைக்கப்பட்டிருந்தது, எங்கு களவுபோனது, எவ்வாறு களவுபோனது என்பன போன்ற பல கேள்விகள் எழலாம். மிதிவண்டியின் பெறுமதி வழக்கமான அளவைவிட அதிகமாக இருந்தால், அதைப் பற்றி முன்கூட்டியே காப்புறுதி முகவருக்குத் தெரி

விப்பது நல்லது.

அடுத்ததாகக் கவனிக்க வேண்டியது பொறுப்புக்கூறல் (Liability). உங்கள் பிள்ளையின் தவறினால் மற்றொருவருக்குக் காயம் ஏற்பட்டாலோ, அவருடைய உடைமைக்குச் சேதம் அல்லது வேறு ஏதேனும் இழப்பு ஏற்பட்டாலோ, அதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டிய நிலை ஏற்படலாம். அதேபோல், பிள்ளை வாடகைக்கு வசிக்கும் வீட்டில் அவருடைய தவறினால் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டாலும், அதற்கான இழப்பீட்டுப் பொறுப்பு ஏற்படக்கூடும். எனவே, பிள்ளை வீட்டைவிட்டு வெளியேறி பல்கலைக்கழக வாழ்க்கையைத் தொடங்கும்போது, உடைமைகளுக்கான பாதுகாப்பை மட்டுமன்றி, எதிர்பாராத பொறுப்புக்கூறல்களுக்கான காப்புறுதி பாதுகாப்பையும் முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம்.

எது எப்படி இருப்பினும், இறுதியில் அனைத்தும் காப்புறுதி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையே பொறுத்திருக்கும். உங்கள் பிள்ளை வாடகைக்கு ஒரு வீட்டிலோ அல்லது அறையிலோ வசிக்கிறார் எனக் கொள்ளுங்கள். அவர் தனியாக ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்துத் தங்குகிறாரா அல்லது நண்பர்களுடன் இணைந்து வாடகைக்கு எடுத்துத் தங்குகிறாரா என்பதிலும் வேறுபாடுகள் இருக்கலாம். வாடகை இடத்தின் உரிமையாளர் பெற்றிருக்கும் காப்புறுதி, பொதுவாகக் கட்டடத்திற்கான பாதுகாப்பை வழங்கக்கூடும்; ஆனால், அதில் வசிக்கும் உங்கள் பிள்ளையின் தனிப்பட்ட உடைமைகளுக்கு அது பாதுகாப்பளிக்கும் என்று கருதிவிட முடியாது. எனவே, யாருடைய காப்புறுதி எதனை உள்ளடக்குகிறது, உங்கள் பிள்ளையின் உடைமைகளுக்கும் பொறுப்புக்கூறலுக்கும் எத்தகைய பாதுகாப்பு உள்ளது என்பன போன்ற விடயங்களை முன்கூட்டியே தெளிவுபடுத்திக் கொள்வது மிகவும் அவசியம்.

## இறுதியாக ஒரு சிறு வேண்டுகோள்:

உங்கள் பிள்ளை பல்கலைக்கழகக் கல்விக்காகப் புறப்படுகிறார் என்றால், முதலில் எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்! அது பிள்ளையின் வாழ்க்கையில் மட்டுமல்ல, பெற்றோரின் வாழ்க்கையிலும் ஒரு முக்கியமான புதிய அத்தியாயத்தின் தொடக்கம். எனவே, உங்கள் காப்புறுதி முகவருடன் ஒரு முறை கலந்துரையாடி, உங்கள் பிள்ளையின் புதிய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ற காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். எதிர்பாராத இழப்புகள் பற்றிய கவலைகளைக் குறைத்து, நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் உங்கள் பிள்ளையின் எதிர்காலப் பயணத்தை வாழ்த்தி வழியனுப்புங்கள். வாழ்வில் சிறந்து விளங்க எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்!

senthuran.p@thaiveedu.com

# பாவனையும் பராமரிப்பும்

tg.theeban@gmail.com

வேலா சுப்ரமணியம்

ஒரு வீட்டில் முக்கிய அம்சமாக இருக்கும் சமையறையில் இருக்கக்கூடிய இயந்திர சாதனங்கள் பற்றியும் இதர கூறு களின் பாவனை பற்றியும் தொடர்ந்து குறிப்பிட வேண்டியது பொருத்தமானது.

### பாத்திரம் கழுவும் இயந்திரம் (Dish Washer):

தற்போது கட்டப்படும் வீடுகளிலும் சரி, தொடர் மாடிக் குடி யிருப்புகளிலும் சரி Dish Washer பொருத்தப்படுவது ஒரு இயல்பான அம்சமாகக் காணப்படுகிறது. இயந்திரமயமாக்கப் பட்டிருக்கும் வாழ்க்கை எனும் வட்டத்தில் சுழன்று கொண்டி ருப்பவர்களுக்கு இது மிக அவசியமான தொன்றாகவே காணப் படுகிறது. குறிப்பாக இளைஞர்களது வாழ்வில் இது அதி முக் கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. மறுபுறம் வயதானவர்களுக்கும் வேறு சிலருக்கும் Dish Washer என்பது பாத்திரங்களைக் களஞ்சியப்படுத்தும் ஒரு பெட்டகமாகக் காணப்படுகின்றது. புதிய வீடுகள் சிலவற்றில் ஒன்றிற்கு மேற் பட்ட Dish Washers பொருத்தப் பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போதய சந்தையில் சாதாரண அம்சங்கள் தொடக்கம் பல உச்சமான அம்சங்கள் வரை உள்ளடக்கிய பலவித Dish Washer-கள் பலவித நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப் பட்டு சந்தைப் படுத்தப்படுகின்றன. சுமார் $500 டொலர்கள் தொடக்கம் $5,000 டொலர்கள் வரை அதன் தன்மையைப் பொறுத்து விலை வேறுபட்டிருப்பதை அவதானிக்கலாம்.

பாவனை என்று வரும்போது ஒரு தடவை முழுஅளவில் நிரப் பப்பட்ட பாத்திரங்களைக் கழுவி, உலர்த்தி எடுக்க 2 தொடக் கம் 2:30 மணித்தியாலங்கள் தேவைப்படும். தொடர்ச்சியாக ஓர் இயந்திரத்தை நீண்ட நேரம் இயங்க வைக்கின்றபோது மின்சாரச் செலவு அதிகமாக இருக்கும் என்பது தவிர்க்க முடியாதது. எனவே மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்த பின் வரும் சில யுக்திகளைப் பாவிக்கலாம்.

பாத்திரங்களை அடிக்கடி கழுவுதைத் தவிர்த்து அவற்றைச் சேகரித்து நாள் முடிவில் கழுவவைப்பது சிறந்தது.

மின்சாரக் கட்டணம் குறைவாக இருக்கும் காலப்பகுதியாகிய Off Peak வேளைகளில் இவ் இயந்திரங்களைப் பாவிப்பது உசிதமானது.

குறிப்பாக இரவு 7 மணிக்குப் பின்னர் இவற்றை இயங்கும் விதத்தில், பொருத்தப்பட்டிருக்கும் Delay Start ஐ பாவித்து இயக்குவது மேலும் புத்திசாலித்தனமானது.

வேண்டத்தகாத இடர்களைத் தவிர்க்க வேண்டுமானால் மனித நடமாட்டம் உள்ள காலப்பகுதியில், அதாவது இரவு நித்திரைக் குச் செல்ல முன் இவற்றைப் பாவிப்பது சிறந்தது.

மேலதிக மின்சாரச் செலவைக் குறைக்க வேண்டுமானால் இந்த இயந்திரங்களின் இயக்கத்தில் ஓர் அம்சமாக இருக்கும் உலர்த்தியைப் பாவிக்காது கழுவுவதற்கான தெரிவுகளும் உண்டு என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

நீண்டகாலம் இந்த இயந்திரத்தைப் பாவிக்காது பூட்டி வைப்ப தாலும் சில இடர்களைச் சந்திக்க வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். அதாவது பொருத்தப்பட்டிருக்கும் 'Rubber Seals' பலகாலம் இயங்காது இருந்தால் வரட்சியாகி கடினமானதாகவோ அல்லது அவற்றில் வெடிப்புகள் ஏற்படு வதற்கோ வாய்ப்புகள் உள்ளது. அதனால் தண்ணீர்க் கசிவு கள் ஏற்படுவதும் இறுதியில் அவற்றைப் பிரதியீடு செய்ய வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படலாம் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். எனவே 6 மாதத்திற்கு ஒரு முறையாவது இவற் றைப் பாவிப்பது சிபாரிசு செய்யப்பட வேண்டியதொன்று.

### குளிர்சாதனப் பெட்டி (Fridge):

வெளிநாட்டு வாழ்க்கையில் குளிர்சாதனப் பெட்டி என்பது மிக இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது என்பதில்

மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சமையல் அறை இல்லாது வாழலாம் ஆனால் ஒரு குளிர்சாதனப் பெட்டியில்லாது வாழ முடியாது என்ற ஒரு நிலையே காணப்படுகிறது.

கிழமைக்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ சமைப்பது தான் சாதாரண நடைமுறை. ஒரு சில விதி விலக்குகள் இருக்கலாம். சில உயிரினங்களின் வாழ்வுக் காலத்தை விட அவை குளிர்சாதனப் பெட்டியில் உறங்கிக் கொண்டிருக்கும் காலம் தான் அதிகமானது.

குளிர்சாதனப் பெட்டியின் முக்கியத்துவம் கருதி அதன் உற்பத்தியாளர்களும் பலவித அளவுகளிலும் வடிவத்திலும் பலவித புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி புதிய குளிர்சாதனப் பெட்டிகளை அறிமுகம் செய்த வண்ணமே இருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் குளிர்சாதனப் பெட்டிகளில் உறைந்து விடும் பனிக்கட்டிகளை (ICE) சுத்தம் செய்வது என்பது சராசரியாக மாதமொருமுறை ஒரு பாரிய வேலையாக இருந்தது. ஆனால் தற்போதவை ICE கட்டிகள் உருவாகாத விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக Internet, TV Screen உள்ளிட்ட குளிர்சாதனப் பெட்டிகள் கூட பாவனைக்கு வந்துவிட்டன. YouTube, AI என்பனவற்றை தேடி வேறு இடம் போகத் தேவையில்லை. Samsung நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Refrigerator with Family Hub and AI Vision என்ற குளிர்சாதனப்பெட்டி இதற்கு ஒரு சிறந்த உதாரணம். YouTube ஐயும் Internet ஐயும், நம்பி சமையலில் குதிக்கும் இளைஞர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம்.

தொழில் நுட்பம் அதிகரிக்க அதிகரிக்க அவற்றால் ஏற்படும் சிக்கல்களும் அதிகரிப்பது தவிர்க்க முடியாதது. எனவே இவற்றைப் பராமரிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.

நவீன குளிர்சாதனப் பெட்டிகளில், பார்ப்போர் கண்ணுக்குத் தெரியாத மறைவான இடத்தில் Heating Elements பொருத்தப்பட்டிருக்கும். தொடர்ந்து குளிரூட்டப்படுவதால் உறைநிலை அடைந்து பனிக்கட்டியாகும் படலத்தை உருகவைப்பது இதனுடைய தொடர்ச்சியான தொழிற்பாடு. உருகிவிடும் நீர், குழாய்கள் மூலம் Compressor-ன் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் Evaprator தட்டில் சேகரிக்கப்பட்டு ஆவியாக்கப்படுவது திரை மறைவில் நடைபெறும் தொழிற்பாடு. ஆனால்

இனிப்புப் பதார்த்தங்களை குளிர்சாதனப் பெட்டிகளில் திறந்தபடி வைப்பதும் ஒரு தரம் சொண்டில் வைத்த பின்னர் Coke, Sprite போன்ற can களை இதனுள்ளே உறங்க வைப்பதும் அரைகுறையான நிலையில் இருக்கும் ICE Cream Corn போன்றவற்றை வீண் விரயத்தைக் கருத்திற் கொண்டு குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதும் நாம் நடைமுறையில் பல வீடுகளில் காணும் அவலங்கள். குறிப்பாக சிறுவர்கள் இருக்கும் வீடுகளில் இது சர்வசாதாரணம்.

இங்கு கவனிக்க வேண்டியதென்னவென்றால் இனிப்புப் பதார்த்தங்கள் சிந்தப்படும்போது பசைத் தன்மை கொண்ட அவை வழிந்தோடி சாதாரண இயக்கத்திற்காகப் பொருத்தப்பட்டிருக்கும் குழாய்களையும் துவாரத்தையும் அடைத்துவிடும். இதனால் Defrost and Evapration Process தடைப்படுகின்றது. இதன் விளைவாக குளிர்சாதனப் பெட்டியில் ICE உறைந்திருப்பதையும், தண்ணீர் வழிந்தோடுவதையும் காணமுடியும். அத்துடன் வைக்கப்படும் பொருட்கள் பழுதாகி விரயமாக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது. முதலில் பால் பழுதாவதைப் பார்க்கலாம். படிப்படியாக ஏனைய பொருட்கள்.

இத்தகைய பழுதுகளைத் திருத்த ஒரு தொழில் நுட்ப வல்லுநரை அழைக்க வேண்டியதும் வருபவர்கள் அதை இதைச் சொல்லி தங்கள் பைகளை நிரப்புவதையும் சந்தித்தே ஆக வேண்டும். எனவே குளிர்சாதனப் பெட்டிகளை சுத்தமாகவும் கவனமாகவும் பாவிப்பது பல ஆயிரம் டொலர்களை சேமிக்க உதவியாக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

குறைந்தது 1 - 3 மாதத்திற்கு ஒரு முறையாது சுவருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் குளிர் சாதனப் பெட்டிகளை வெளியே இழுத்து பிற்பகுதியில் இருக்கும் Air Filter தட்டுகளை சுத்தம் செய்வது அல்லது Vaccum செய்வது மிக அவசிய மானது. குளிர்சாதனப் பெட்டிகளின் இயக்கத்தை உச்ச நிலையில் வைத்திருக்கவும் அவற்றின் ஆயுட் காலத்தை நீடிக்கவும் இவை வழிவகுக்கும்.

(தொடரும்...)

velasubramaniam@thaiveedu.com

சி. நற்குணலிங்கம்

# சகிப்புத்தன்மையே மானுடத்தின் மேன்மை

## சர்வதேச சகிப்புத்தன்மை நாள்

சகிப்புத்தன்மை (Tolerance) என்பது, ஒருவரது மனமுதிர்ச்சியை வெளிப்படுத்தும் மிகவுயர்ந்த ஆளுமைப் பண்பாகும். நமக்கு உடன்பாடில்லாத, பிடிக்காத அல்லது மாறுபட்ட கருத்துகள், நம்பிக்கைகள் மற்றும் மனிதர்களைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, அமைதியையும் உரையாடலையும் பேணும் மனநிலையே சகிப்புத்தன்மையாகும். அதாவது, தான் ஏற்காத ஒரு செயல், பொருள் அல்லது நபருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமோ வாய்ப்போ இருந்தபோதிலும், அவ்வாறு செய்யாது தவிர்ப்பதும், பிறர் இழைத்த தீங்கைப் பெரிதுபடுத்தாது பொறுத்துக்கொள்வதுமே இதன் அடிப்படைப் பண்பாக அமைகின்றது.

மேலும், நன்மைகளைத் தக்கவைத்துக்கொள்வது மட்டுமன்றி, தீங்கிழைப்பவரையும் மன்னித்துப் பொறுத்துக்கொள்வதன் மூலம் மேலதிக வன்முறைகளோ தீமைகளோ தொடராதவாறு பாதுகாப்பதும், வெறுப்பைக் கைவிட்டு இரக்கத்தோடும் அனுசரணையோடும் ஆதரவளிப்பதுமே இதன் சாராம்சமாகும். தமக்கு நேர்ந்த கெடுதல்களை உலகப் பொதுநலன் மற்றும் சமூக இணக்கப்பாடு கருதிப் பொறுத்துக்கொள்ளும் இத்தகைய மனநிலையே சகிப்புத்தன்மை ஆகும்.

துன்பங்கள், மன அழுத்தங்கள் மற்றும் எதிர்பாராத சவால்களை எதிர்கொண்டு, அவற்றைத் தாங்கி, நேர்மறையாக மாற்றியமைத்து மீண்டெழும் திறனே தனிப்பட்ட மனவுறுதியாகும் (Personal Resilience). மனவுறுதி, நெகிழ்வுத்தன்மை மற்றும் நேர்மறையான கண்ணோட்டம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடான இது, மனிதர்கள் சவால்களை வென்று மேலும் வலிமையுடன் மீண்டெழ வழிவகுக்கின்றது.

இன்றைய நுகர்வுச் சூழலில் நமது தேவைகளைப் பட்டியலிட்டால், அப்பட்டியல் முடிவின்றி நீண்டுகொண்டே செல்லும். எனினும், மனிதகுல அமைதியான சகவாழ்விற்கு உடனடியாகத் தேவைப்படுவது பரஸ்பர மரியாதையும் சகிப்புத்தன்மையுமே ஆகும். சாதி, மத, இன மற்றும் பால்நிலை சார்ந்த பாகுபாடுகளைக் கடந்து, சமூகத்தின் பண்பாட்டுப் பன்முகத்தன்மைகளை வெறுமனே சகித்துக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், மனிதச் சமத்துவத்தையும் அவர்களின் தனித்துவமான அனுபவங்களையும் அங்கீகரித்துப் போற்றுவதே உண்மையான சமூக நீதியாகும்.

நாம் ஒவ்வொருவரும் நமது இயல்பான ஆளுமையோடு வாழும் அதேவேளையில், பிறரின் தனித்துவத்தையும் மதித்து மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதே சகிப்புத்தன்மையின் மிக அழகிய வடிவமாகும். மக்களின் பன்முகத்தன்மையை அன்போடு ஏற்றுக்கொள்வது என்பது, நமது ஜனநாயக மதிப்புகளுக்கும் சர்வதேச மனித உரிமைகளுக்கும் வழங்கும் மிகவுயர்ந்த கௌரவமாகும். ‘ஒற்றைப் பண்பாட்டை மட்டுமே வலியுறுத்துவது வன்முறைக்கே வழிவகுக்கும்’ என்ற

> **“பிறரைக் கனிவோடு ஏற்றுக்கொள்ளும் பண்பு அற்றவர்களால், எவரையும் எளிதில் உள்வாங்க முடிவதில்லை. இந்த மனநிலை இன, மத மற்றும் மொழி பேசும் மக்களிடையே மோதல்களை உருவாக்கி, நாடுகளுக்கு இடையேயான போர்களுக்கும் வழிவகுக்கின்றது. சகிப்புத் தன்மையை மறந்த பல தேசங்கள், எல்லை மற்றும் அதிகார ஆசைகளால் ஆயுதம் ஏந்தி, தங்களுக்கான அமைதியைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றன.”**

tg.theeban@gmail.com

நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென்னின் வரிகள், சமூகப் புரிதலின் அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றன. சகிப்புத்தன்மை என்பது பிறருக்கு விட்டுக் கொடுக்கும் பலவீனமன்று; மாறாக, அது நம் அகத்தின் முதிர்ச்சியையும் பரந்த மனப்பான்மையையும் காட்டும் அடையாளமாகும். சக மனிதர்களுடன் அமைதியாகக் கூடி வாழ்வதற்கும், நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட மனவளர்ச்சிக்கும் இந்த உணர்வு மிகவும் அவசியமானது. உலகெங்குமுள்ள பல்வேறு சமூக-பண்பாட்டு விழுமியங்களைப் பரிவோடு தெரிந்துகொள்ளும்போது, மனித குலம் மீதான நமது அன்பும் பார்வையோட்டமும் மேலும் ஆழமடையும்.

நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு இயல்போடும் பார்வைகளோடும் பிறந்தவர்கள். இந்த மனிதப் பன்முகத்தன்மையை மதித்து, அனைவரும் கூடி வாழும் அமைதியான உலகை உறுதிசெய்வது நம் ஒவ்வொருவரின் தார்மீகக் கடமையாகும். சமத்துவமும் வாய்ப்புகளும் நிறைந்த சமூகக் கட்டமைப்பிற்கு சகிப்புத்தன்மையே அடித்தளம். மக்கள் அனைவரும் இணைந்து மகிழ்ச்சியாக வாழ்வதற்கும், பிறரையும் தடையின்றி வாழ விடுவதற்கும் இந்த மனநிலை அத்தியாவசியமானது. 'நாமும் வாழலாம், பிறரையும் வாழவிடலாம்' என்னும் அன்பான வாழ்வியல் நெறியே இதனுள் மிளிர்கின்றது. சகிப்புத்தன்மை என்னும் அகப் பண்பாடு நம்மிடம் இருந்தால், நம்மை எதிர்க்கும் நபரைக்கூட நமது வாழ்வின் உயரிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக மாற்றிக்கொள்ள முடியும்.

வாழ்க்கையின் இன்பத்திலும் துன்பத்திலும் சகிப்புத்தன்மையைப் பேணினால், நம் அன்றாட வாழ்வு அர்த்தமுள்ளதாகவும் அழகாகவும் மாறும். உலகச் சிந்தனையாளர்களும் தத்துவஞானிகளும் இதனைப் பல்வேறு கோணங்களில் உணர்த்தியுள்ளனர். 'அமைதியும் சகிப்புத்தன்மையுமே உலகை வெல்லும் மிகச் சிறந்த ஆயுதங்கள்' என்கிறார் மகாத்மா காந்தி. 'பிறரின் மனித இயல்பான தவறுகளைப் புரிந்து மன்னிக்கும் பரந்த மனப்பான்மை இல்லாத இடத்தில், உண்மையான நட்பு மலர்வதில்லை' என அரிஸ்டாட்டிலும், 'சகிப்புத்தன்மை என்பது பிறரை வெறுமனே பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல; அவர்களின் தனித்துவமான வேறுபாடுகளை நெஞ்சார மதிப்பதாகும்' என வோல்டேரும் இதனை வரையறுக்கின்றனர். மேலும், 'கோபத்தையும் வெறுப்பையும் சகிப்புத்தன்மையால் வெல்பவனே தன் அகத்தை வென்ற உண்மையான வீரன்' எனப் புத்தரும், 'சகிப்புத்தன்மையின் தொடக்கம் கசப்பானதுதான்; ஆனால், அது தரும் அமைதி என்னும் கனி மிகவும் இனிப்பானது' என ரூசோவும், 'ஒரு நொடி கோபத்தைக் கட்டுப்படுத்தும் நெகிழ்வுத்தன்மை இருந்தால், நூறு நாட்களின் துயரத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்' என்ற சீனப் பழமொழியும், 'நமது அக வலிமையின் உச்சக்கட்டம் சகிப்புத்தன்மை; பலவீனத்தின் உச்சக்கட்டம் அவசரப்படுவதாகும்' என்னும் லாவோட்சுவின் தத்துவமும் மனித சமூகத்திற்கான இப்பண்பாட்டின் ஆழமான அவசியத்தை உறுதிசெய்கின்றன.

இன்றைய உலகின் பல சமூக, அரசியல் சிக்கல்களுக்கு அடிப்படையாக அமைவது சகிப்புத்தன்மையின்மையே ஆகும். இப்பண்பாடற்ற சூழலினால் மொழி, மத மற்றும் இனச் சிறுபான்மையினர், இடம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்த குடியேறிகள் என விளிம்புநிலை மக்கள் தொடர்ந்து பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாவதை நாம் காண்கிறோம். சகிப்பின்மை என்பது அமைதிக்கும் மக்களாட்சிக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதுடன், சமூக மேம்பாட்டிற்கும் தேசத்தின் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக அமைகின்றது. மேலும், அது மனித மனப்போக்கைக் குறுகிய எல்லைக்குள் முடக்கிவிடுகின்றது.

பிறரைக் கனிவோடு ஏற்றுக்கொள்ளும் பண்பு அற்றவர்களால், எவரையும் எளிதில் உள்வாங்க முடிவதில்லை. இந்த மனநிலை இன, மத மற்றும் மொழி பேசும் மக்களிடையே மோதல்களை உருவாக்கி, நாடுகளுக்கு இடையேயான போர்களுக்கும் வழிவகுக்கின்றது. சகிப்புத்தன்மையை மறந்த பல தேசங்கள், எல்லை மற்றும் அதிகார ஆசைகளால் ஆயுதம் ஏந்தி, தங்களுக்கான அமைதியைத் தொலைத்துக்கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, எண்ணற்ற உயிர்கள் பலியாவதும், மக்கள் அகதிகளாக்கப்பட்டு ஒடுக்கப்படுவதும் இன்றும்

> **சகிப்புத்தன்மை என்பது செயலற்ற முறையில் எதையும் சும்மா அனுமதிப்பதோ அல்லது அலட்சியமாக இருப்பதோ அல்ல என்பதை யுனெஸ்கோ பிரகடனம் மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது; மாறாக, உலகின் பல்வேறு கலாசாரங்கள், கலை வெளிப்பாட்டு வடிவங்கள் மற்றும் மானிட வாழ்வியல் முறைகள் ஆகியவற்றின் செழுமையான பன்முகத்தன்மையை மதித்தல், ஏற்றுக்கொள்வது மற்றும் போற்றிப் பாராட்டுவதே இதன் உண்மையான பொருளாகும்.**

தொடர்கின்றன. இத்தகைய மனித உரிமை மீறல்களையும் ஒதுக்குதல்களையும் தவிர்க்கவேண்டுமாயின், சகிப்புத்தன்மைக்கான சர்வதேச நாளின் பன்னாட்டு விழிப்புணர்வு மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

சர்வதேசச் சகிப்புத்தன்மை நாள் உருவாக்கத்திற்கு வித்திடும் வகையில், 1995-ஆம் ஆண்டை 'சகிப்புத்தன்மை ஆண்டாக' (United Nations Year for Tolerance) ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது. அமைதி மற்றும் அகிம்சையின் உலகளாவிய தூதரான மகாத்மா காந்தியின் 125-ஆவது பிறந்தநாளைச் சிறப்பிப்பதுடன், யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் 50-ஆவது ஆண்டு நிறைவை நினைவுறுத்தும் நோக்கிலும் அதே ஆண்டில் ஐ.நா. பொதுச்சபையில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 1995 நவம்பர் 16 அன்று யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து 'சகிப்புத்தன்மையின் கொள்கைகள் பற்றிய பிரகடனத்தை' (Declaration of Principles on Tolerance) முறைப்படி ஏற்றுக்கொண்டன.

சகிப்புத்தன்மை என்பது செயலற்ற முறையில் எதையும் சும்மா அனுமதிப்பதோ அல்லது அலட்சியமாக இருப்பதோ அல்ல என்பதை யுனெஸ்கோ பிரகடனம் மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது; மாறாக, உலகின் பல்வேறு கலாசாரங்கள், கலை வெளிப்பாட்டு வடிவங்கள் மற்றும் மானிட வாழ்வியல் முறைகள் ஆகியவற்றின் செழுமையான பன்முகத்தன்மையை மதித்தல், ஏற்றுக்கொள்வது மற்றும் போற்றிப் பாராட்டுவதே இதன் உண்மையான பொருளாகும். இப்பண்பாடானது பிற மனிதர்களின் உலகளாவிய மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் முறைப்படி அங்கீகரிப்பதுடன் பரந்த அறிவு, திறந்த மனப்பான்மை, வெளிப்படையான உரையாடல் மற்றும் சிந்தனை, மனசாட்சி, நம்பிக்கை ஆகியவற்றிற்கான சுதந்திரம் வாயிலாகவே சமூகத்தில் உறுதியாக வளர்த்தெடுக்கப்படுகின்றது.

உண்மையில், சகிப்புத்தன்மை என்பது வேற்றுமைகளுக்கு இடையிலான நல்லிணக்கமாகும் (Harmony in Diversity). மனிதர்கள் இயல்பாகவே பன்முகத்தன்மை கொண்டவர்கள் என்பதால், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட சமூகங்கள் இணைந்து வாழ்வதை இப்பண்பாடால் மட்டுமே உறுதிசெய்ய முடியும். இது வெறும் தார்மீகக் கடமை மட்டுமல்ல; மாறாக, ஜனநாயகச் சமூகத்தின் அரசியல் மற்றும் சட்டரீதியான தேவையும் கூட. அமை தியைச் சாத்தியமாக்கும் உன்னதமான நற்பண்பான சகிப்புத்தன்மை, வன்முறை மற்றும் போர் கலாசாரத்திற்குப் பதிலாக அமைதி கலாசாரம் மலர்வதற்குப் பெரும் பங்காற்றுகின்றது.

> ***சகிப்புத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்காத வகையில், அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் கொள்கைகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். சகிப்புத்தன்மை என்பது வெளிப்படையான வெறும் அறிவிப்பன்று; அது ஒவ்வொருவரது மனதிலிருந்தும் எழும் அடிப்படை வாழ்வியல் நெறி என்பதை நாம் மறந்துவிடலாகாது.***

யுனெஸ்கோவின் பிரகடனத்தைத் தொடர்ந்து 1996-ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச்சபை நிறைவேற்றிய 51/95 தீர்மானத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16-ஆம் திகதி 'சர்வதேசச் சகிப்புத்தன்மை நாளாக' (International Day for Tolerance) அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்நாள் தனிமனித, சமூக, கலாசாரப் பன்முகத்தன்மையை சகிக்கும், ஏற்கும், மதிக்கும் மற்றும் போற்றிப் பாராட்டும் நாளாக உலகெங்கும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மானிடச் சமூகம் அமைதியுடன் வாழ்வதற்கு அடிப்படையாகச் சகிப்புத்தன்மை நிலவ வேண்டும் என்பதையும், அது அற்றுப்போவதால் ஏற்படும் பேரழிவு விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையுமே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையின் உன்னத உணர்வை உலகளவில் ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பு சிறப்பு விருது ஒன்றையும் தோற்றுவித்தது. இதன்படி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நவம்பர் 16 அன்று, அமைதி மற்றும் சகிப்புத்தன்மைக்காக மிகச் சிறந்த முறையில் பங்காற்றும் நபர்கள், அமைப்புகள் அல்லது நிறுவனங்களுக்கு 'சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சை மேம்பாட்டிற்கான யுனெஸ்கோ-மதன்கீத் சிங் பரிசு' (UNESCO-Madanjeet Singh Prize) அதிகாரபூர்வமாக வழங்கி கௌரவிக்கப்படுகின்றது. சமூக நல்லிணக்கம் மற்றும் அமைதிக்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்புடன் வழங்கிய மதன்ஜீத் சிங் அவர்களின் உன்னதமான பணிகளைப் போற்றும் வகையில், யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதரும், சிறந்த இந்தியக் கலைஞரும், எழுத்தாளரும், தூதருமான அவரது பெயரே இப் புகழ்பெற்ற விருதுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

தற்போதைய பாகிஸ்தானிலுள்ள லாகூரில் 1924-ஆம் ஆண்டு ஏப்பிரல் 16 அன்று பிறந்த மதன்ஜீத் சிங், சர்வதேச அளவில் புகழ்பெற்ற எழுத்தாளரும், கலை மற்றும் பண்பாட்டுத் துறைகளில் முன்னணி ஆய்வாளருமாவார். கலை, கலாசாரம் மற்றும் மனிதநேய பாடங்கள் குறித்த இவரது நூல்கள் யுனெஸ்கோ அமைப்பின் கொள்கைகள் மற்றும் இலட்சியங்களுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்தவையாகும். மேலும், இவர் ஆசியா, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பியக் கண்டங்களில் இந்தியாவின் தூதராகவும் சிறப்புறப் பணியாற்றியுள்ளார். யுனெஸ்கோவின் உன்னத மனிதநேய நோக்கங்களை முன்னெடுப்பதில் இவர் காட்டிய அளப்பரிய தாராள குணத்தையும் அயராத அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்கும் முகமாக, 2000-ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று யுனெஸ்கோவின் நல்லெண்ணத் தூதராக மதன்ஜீத் சிங் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டார்.

இரு ஆண்டுகளுக்கொருமுறை வழங்கப்படும் இப்பரிசளிப்பு நிகழ்வில், தெரிவு செய்யப்படும் வெற்றியாளருக்கு 1,00,000 அமெரிக்க டாலர் (USD 100,000) பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கிப் பெருமைப்படுத்தப்படுகின்றது. அமைதி மற்றும் சகிப்புத்தன்மைக்காக மிகச் சிறந்த முறையில் பங்காற்றிவரும் அமைப்புகள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படும் இப்பரிசின் 2026-ஆம் ஆண்டிற்கான வெற்றியாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அதேவேளை, 2024-ஆம் ஆண்டிற்கான இப் புகழ்பெற்ற பரிசானது, மெக்ஸிகோவைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பண்பாட்டிடை ஒருங்கிணைப்பாளர்களின் (Intercultural Promoters) அமைப்பான 'Red de Intérpretes y Promotores Interculturales' (REDIN) அமைப்பிற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. 2019-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, மெக்ஸிகோவின் ஒக்ஸாகா (Oaxaca) மாகாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பழங்குடிச் சமூகங்களைச் சேர்ந்த மனிதர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் மொழிபெயர்ப்புச் சேவைகளைத் தடையின்றி வழங்கி வருகின்றது.

இந்நாளுக்கான கருப்பொருளைத் தெரிவு செய்வதில் இவ்வமைப்புகள் ஆண்டுதோறும் புதிய அதிகாரபூர்வத் தலைப்புகளை மாற்றுவதில்லை. மாறாக, 1995-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ‘சகிப்புத்தன்மை கொள்கைப் பிரகடனத்தின்’ முதன்மை இலக்கான ‘உலகளவில் பரஸ்பர மரியாதையையும் புரிதலையும் ஊக்குவித்தல்’ (Promoting Respect and Understanding Worldwide) என்பதையே வழிகாட்டும் முதன்மைக் கருப்பொருளாகத் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன. அதேவேளை, காலத்தின் தேவைக்கேற்பவும் நவீன டிஜிட்டல் யுகத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலும்; பன்முகத்தன்மை, சமூக உரையாடல், மற்றும் இணையவழி வெறுப்புப் பேச்சுக்களை எதிர்கொள்ளுதல் போன்ற சிறப்புப் பிரசார மையப் புள்ளிகளையும் (Campaign Focus Areas) இவ்வமைப்புகளும் பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களும் ஆண்டுதோறும் உலகளவில் முன்னெடுத்து வருகின்றன. இவை, கல்வி மற்றும் பச்சாதாபத்தின் வழியே சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதல், வெறுப்புணர்வையும் பிளவுகளையும் ஒழித்தல் ஆகிய இந்நாளின் அடிப்படை நோக்கங்களோடு இயைந்து நிற்பதாகும். பல்வேறு பண்பாடுகள் மற்றும் சமூகங்களிடையே சகிப்புத்தன்மையையும் ஏற்புடைமையையும் வளர்ப்பதன் மூலம் உலகளாவிய ஒற்றுமையை இது மேலோங்கச் செய்கின்றது.

வன்செயல், பாரபட்சம் காட்டுதல், அச்சத்தை உருவாக்குதல் மற்றும் சமூகப் புறந்தள்ளல் போன்ற எதிர்மறைப் போக்குகளைத் தவிர்த்து, சகிப்புத்தன்மையை நமது அன்றாட வாழ்வில் வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது பாரம்பரியமிக்க உயரிய கொள்கைகள், முன்னோர்களின் வாழ்வியல் நெறிகள் மற்றும் வரலாற்று ரீதியான கடமைகளை நமக்கு நாமே நினைவூட்டி இப்பண்பினை மேம்படுத்துவது இன்றியமையாததாகும்.

சகிப்புத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்காத வகையில், அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் கொள்கைகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். சகிப்புத்தன்மை என்பது வெளிப்படையான வெறும் அறிவிப்பன்று; அது ஒவ்வொருவரது மனதிலிருந்தும் எழும் அடிப்படை வாழ்வியல் நெறி என்பதை நாம் மறந்துவிடலாகாது.

யுனெஸ்கோ-மாதன்ஜீத் சிங் பரிசை நிறுவிய தூதுவர் மாதன் ஜீத் சிங் குறிப்பிடுவது போல:

‘வரலாறு என்பது வெறும் தற்செயல் நிகழ்வுகளின் தொடர் மட்டுமல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். அது, பிறருடன் இணைந்து அமைதியாக வாழ வேண்டும் என்ற கனவை நனவாக்கப் பாடுபடும் மக்களுக்கும் - பகுத்தறிவை நேசித்து, வெறுப்பு மற்றும் வன்முறையை வெறுத்து, இருளை விலக்கி ஒளியை நோக்கித் திரும்பி, நற்பண்புகளைப் போற்றும் மனமும், தாராள குணமும், சுதந்திரமான ஆன்மாவும் கொண்ட மக்களுக்கும் - பிற்போக்குத்தனமான, பிளவுகளை உண்டாக்கும் போர்வெறி பிடித்தவர்களுக்கும் இடையிலான ஒரு முடிவற்ற போராட்டமாகும்.’

வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளான அன்பு, நட்பு, ஈதல் மற்றும் சான்றாண்மை உள்ளிட்ட மானுட விழுமியங்களுடன் கல்வியறிவையும் பெறும்போது, சகிப்புத்தன்மையுடன் கூடிய நிறைவான வாழ்வை நம்மால் முன்னெடுக்க முடியும். எப்போது சகிப்புத்தன்மையை நாம் முழுமையாக மேற்கொள்கிறோமோ, அப்போதே ஒரு மகத்தான வாழ்வியலை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிவிடுகின்றோம். ஏனெனில், சகிப்புத்தன்மையே மானுடத்தின் மிகவுயர்ந்த மேன்மையாகும்.

natkunalingam@thaiveedu.com

நடராசா சிறிரஞ்சன்

# குடும்ப வரைபடங்களை உருவாக்கிப் பேணுதல்

எமது முன்னேற்றம் தொடர்பில் நாம் எடுத்த அக்கறை மற்றும் முயற்சியிலும் பார்க்க எமது மூதாதையர்கள் எடுத்த முயற்சி அதிகமானது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. அவர்களது தன்னலமற்ற வாழ்க்கையினால்தான் நாம் இன்று நல்ல நிலையில் இருக்கிறோம். அவ்வாறான எமது மூதாதையினர்களது பெயர்களை என்றாலும் ஞாபகத்தில் வைத்திருக்கிறோமா என்று பார்த்தால் ஒரு சிலரது பெயர்கள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. ஒன்றில் பலரது பெயர்களை நாம் மறந்துவிட்டோம் அல்லது அவர்களது பெயர்கள் எமக்குத் தெரியவே தெரியாது.

பலருக்கு தமது பேரன் பேத்திகளின் பெயர்கள்கூடச் சரியாகத் தெரியவில்லை. அவர்களது வீட்டுப்பெயர் மற்றும் பட்டப்பெயர் தெரிந்தளவுக்கு அவர்களின் இடாப்புப் பெயர் தெரியவில்லை. பிறப்பு அத்தாட்சிப் படிவத்தில் உள்ளவாறு பாடசாலைப் பதிவேட்டில் உள்ள பெயரை இடாப்புப் பெயர் என்பர். எம்மில் பலர், முன்னோர்களுக்கு திவசம் போன்ற கிரிகைளில் ஈடுபடும்போது மற்றும் திருமணத்தின் போதும் மூன்று தலைமுறையினர்களது பெயர்களைக் கேட்டறிந்து, அவற்றைத் துண்டு காகிதத்தில் எழுதிவைத்து ஐயர் கேட்கும்போது அப்பெயர்களைக் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

நாம் எமது தந்தைவழிப் பெயர்களை ஞாபகம் வைத்துள்ள அளவிற்கு தாய்வழி மூதாதையர்களின் பெயர்களை ஞாபகம் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. சிலருக்கு முதல் மனைவி இறந்து அவர்கள் இரண்டாவதாக வேறொரு பெண்ணைத் திருமணம் செய்திருப்பர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களில் ஒருவரது பெயர் ஞாபகம் இருக்க மற்றவரது பெயர் ஞாபகத்தில் இல்லாது போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. அத்துடன் திருமணத்தின்போது தந்தை வழியில் மூன்று பரம்பரையினரின் பெயர்களை மட்டும்தான் கூறுவர், தாய்வழிப் பெயர்களைக் குறிப்பிடுவதில்லை.

இந்தவகையில் ஒவ்வொரு குடும்பத்தவரும் தத்தமது குடும்ப வரைபடங்களைத் தயாரித்து அதைக் கவனமாகப் பேணுதல் அவசியமாகும். இறந்தவர்களுக்குக் கல்வெட்டுத் தயாரிக்கும்போது அதில் ஒரு பக்கத்தில்; குடும்ப வரைபடத்தையும் இணைத்து வெளியிடும் வழக்கம் சிலரிடையே உள்ளது. எவ்வாறாயினும் சிலர் அக்கல்வெட்டை ஒருசில தடவைகள் பார்த்துப் படித்துவிட்டு, அதை ஒரு பக்கத்தில் அதை வைத்துவிடுவர். மிகச் சிலர்தான் அதைக் கவனமாகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

ஒவ்வொரு குடும்பத்தவரும் குடும்ப வரைபடத்தைத் தயாரிப்பதுடன் நின்று விடாது அதைத் தொடர்ந்து இற்றைப்படுத்துதல் வேண்டும், அதாவது குடும்ப வரைபடத்தில் உள்ளவர்களுக்குப் பிள்ளை பிறக்கும்போது அந்தப் பிள்ளையின் பெயர் விபரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். குடும்ப வரைபடத்தைப் பெரியதொரு தடித்த அட்டைத்தாளில் பெரிய எழுத்துக்களில் தயாரித்து வீட்டு வரவேற்பறையில் தொங்க விடுதல் வேண்டும். அப்போதுதான் அடிக்கடி அதிலுள்ள முன்னோர்கள் மற்றும் புதிதாகப் பிறந்த பிள்ளைகள் முதலியோரின் பெயர்களை ஞாபகத்தில் கொள்ள வசதியாக அமையும்.

tg.theeban@gmail.com

அத்துடன் வீட்டுக்காரர் மட்டுமின்றி வீட்டுக்கு வரும் உறவினர்களும் தங்களின் பெயர்கள் மற்றும் தங்கள் குடும்ப அங்கத்தவர்களின் பெயர்களையும் அதில் பார்த்து மகிழ்ச்சியடைவர்.

சிறிய அளவிலான குடும்ப வரைபடங்களையும் தயாரித்து அவற்றைக் குடும்பத்தில் உள்ள சிறு பிள்ளைகளின் அப்பியாசப்கொப்பி மட்டையின் உட்பக்கத்தில் ஒட்டிவிட வேண்டும். அத்துடன் இடைக்கிடை அந்தப் பிள்ளைகளிடம் உங்களது அம்மம்மாவின் பெயர் என்ன? தாத்தாவின் பெயர் என்ன? குடும்ப வரைபடத்தில் உள்ள குறிப்பிட்டதொருவருக்கும் அப்பிள்ளைக்கும் இடையிலான உறவுமுறை யாது? போன்ற வெவ்வேறு உறவு முறையானவர்களின் பெயர்களைக் கேட்டு அதற்குச் சரியான பதிலை அளிக்கும் போது அப்பிள்ளைக்குப் பாராட்டுக்களையும் பரிசுகளையும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளின் மனதில் முன்னோர்களது பெயர்கள் மாத்திரமின்றி மற்றைய உறவினர்களின் பெயர்கள், அவர்கள் அப்பிள்ளைக்கு எந்த வகையில் உறவினராவார், போன்ற விபரங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவதற்கு ஏதுவாகும்.

தற்காலத்தில் குடும்ப வரைபடங்களைத் தயாரித்துப் பேணுவதற்கு கணினிச் செயலிகள் உள்ளன. அவற்றிலும் குடும்ப வரைபடங்களைத் தயாரித்துத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்திப் பேணலாம். இவ்வாறு எந்தெந்த வழிகளில் மூதாதையினர் மற்றும் இரத்த உறவினர்களது பெயர்கள் உறவு முறைகள் என்பவை மறந்து போகாமல் பாதுகாக்க முடியுமோ அந்தந்த வழிகளில் அவற்றைப் பேணிப்பாதுகாத்தல் சிறப்பாகும்.

முன்னைய காலத்தில் எம்வர்கள் பெருமளவுக்கு ஊருக்குள்ளும் உறவுக்குள்ளும் திருமணம் செய்து வாழ்ந்தார்கள். காலம் போகப்போக வெளியூர்கள், வெளிமாவட்டங்கள் என்று திருமண பந்தங்கள் ஏற்பட்டது. இன்று புலம்பெயர்ந்து நம்மில் கணிசமானவர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறோம். இதனால் எமது உறவும் தொடர்பும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகின்றன. இவ்வாறான தொரு பின்னணியில் உறவுகளின் பெயர்கள், வாழுமிடங்கள், அவர்களது புகைப்படங்கள் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளவும் குடும்ப வரைபடங்கள் உதவும்.

மெய்யியலாளர் கொன்பியூசிஸ் அவர்களது எண்பது தலைமுறைக்கான குடும்ப வரைபடங்கள் மற்றும் விபரங்கள் உள்ளதாம். எட்டுத் தலைமுறையினர்களது விபரங்களைக் கொண்ட குடும்ப வரைபடத்தையாவது நாம் உருவாக்கிப் பாதுகாத்து அதை எம் எதிர்காலச் சந்ததியினரும் தொடர்ந்து பேணுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

நன்றி மறத்தல் நன்றன்று. தமது எதிர்காலச் சந்ததியினர் முன்னேற்றகரமான வாழ்வை வாழ்வதற்காக அக்காலத்தில் இருந்த வரையறுக்கப்பட்ட வசதிகளைக் கொண்டு, பல்வேறு வகைகளில் உழைத்துத் தமது தேவைகளைச் சுருக்கி எம்மை உருவாக்கிய எம் முன்னோரைப் பற்றி நாம் அறிந்து கொள்வதுடன் அவர்களை நன்றியுடன் நினைவில் கொள்வதும் எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

Nadarasa.sriranjan@thaiveedu.com


# ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

## இணையவழிக் கலந்துரையாடல்

நாள் : 20 நவம்பர் வெள்ளிக்கிழமை 2026

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 21 நவம்பர் சனிக்கிழமை 2026

நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 6:30 - 8:30 மணி (இலங்கை, இந்திய)
காலை 12:00 - 2:00 மணி (அவுஸ்திரேலியா, சிட்னி)

"கனடாவில் ஈழத் தமிழர் சமூகம் :
வரலாற்று மாற்றங்களும் அவை தொடர்பான பார்வைகளும்"

உரை நிகழ்த்துபவர்: 'கனடா'மூர்த்தி

Zoom ID: 84777257162 Passcode: 554268

குரு அரவிந்தன்

# 2026 இலக்கிய நோபல் பரிசு பெற்ற ஆன் கார்சன்

tg.theeban@gmail.com

2026-ஆம் ஆண்டுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசை ரொறன்ரோவில் பிறந்த புகழ்பெற்ற எழுத்தாளர் ஆன் கார்சன் (Anne Carson) வென்றுள்ளார். இதற்கு முன்னர் 2013-ஆம் ஆண்டில் கனடாவில் பிறந்த ஆலிஸ் மன்ரோ (Alice Munro) இலக்கிய நோபல் பரிசைப் பெற்றிருந்தார். இதன்மூலம், இலக்கியத் துறையின் மிக உயரிய இக்கௌரவத்தைப் பெறும் இரண்டாவது கனடியப் பெண் என்ற வரலாற்றுப் பெருமையை ஆன் கார்சன் அடைந்துள்ளார். 76 வயதான ஆன் கார்சன், கவிஞர், கட்டுரையாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். கவிதை, இயல்பு உரைநடை மற்றும் செவ்வியல் மொழிபெயர்ப்பு ஆகியவற்றை நுட்பமாக ஒன்றிணைத்து, பண்டைய கிரேக்க-ரோமானியக் கதைகளையும் புராணங்களையும் நவீன மனித வாழ்வியலோடு தொடர்புபடுத்திப் படைப்பதில் தனது இலக்கியப் பயணத்தை வெற்றிகரமாகக் கட்டமைத்துள்ளார்.

கனடிய இலக்கிய வரலாற்றில் 2026-ஆம் ஆண்டு ஒரு சிறப்பான ஆண்டாக அமைந்துள்ளது. இலக்கியத்திற்கான நோபல் பரிசை ஆன் கார்சன் வென்ற அதே ஆண்டில், உலகின் மிக உயரிய சிறுவர் இலக்கிய விருதான ஆஸ்ட்ரிட் லிண்ட்கிரென் நினைவு விருதை (Astrid Lindgren Memorial Award) கனடிய எழுத்தாளரும் சித்திரக் கலைஞருமான ஜான் கிளாசென் (Jon Klassen) தட்டிச் சென்றுள்ளார். ஜான் கிளாசென் படைப்பில் புகழ்பெற்ற 'தொப்பி முத்தொகுப்பு' (Hat Trilogy) தொடரின் முதல் நூலான 'ஐ வான்ட் மை ஹேட் பேக்' (I Want My Hat Back) எனும் சிறார் கதைக்காக இச்சர்வதேச கௌரவம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கதையானது, தான் மிகவும் நேசித்த சிறிய தொப்பியைத் தொலைத்துவிட்டுத் தேடி அலையும் ஒரு கரடியைப் பற்றிய சுவையான கதைக் களத்தைக் கொண்டது. அந்தச் சிறிய, தொப்பி கரடிக்குச் சரியாகப் பொருந்தவில்லை என்றாலும், அதனை அளவற்று நேசிக்கும் அக்கரடி, வனத்திலுள்ள ஒவ்வொரு விலங்கிடமும் சென்று 'எனது தொப்பியைப் பார்த்தீர்களா ?' என வினவுகின்றது. விலங்குகள் அனைவரும் 'இல்லை' என மறுக்கின் றன. அங்குள்ள ஒரு முயலும் அவ்வாறே பதிலளித்த போதிலும், உண்மையில் அந்தத் தொப்பியைத் திருடியது அந்த முயலே என்பது நுட்பமாக வெளிப்படுகின்றது. இவ்வாறு நகைச்சுவையும் சுவாரசியமும் நிறைந்த கதைக்களத்தைக் கொண்டே இப்பரிசு பெற்ற நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு எழுத்தாளர்களும் தத்தமது இலக்கிய வகைகளுக்குப் புதிய பரிமாணங்களை அறிமுகப்படுத்தியதற்காக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர். ஜான் கிளாசன் கனடாவின் வின்னிபெக்கில் பிறந்தவர். நோபல் பரிசு பெறும் ஆன் கார்சன் ரொறன்ரோவில் பிறந்தவர்கள்.

நாங்கள் முதலில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு என்றால் என்னவென்று பார்ப்போம். நோபல் பரிசு என்பது நோபல் அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படும் விருதாகும். இது 'மனித குலத்திற்கு மிகப்பெரிய நன்மையை விளைவித்த' பணிகளுக்காக வழங்கப்படுகின்றது. ஆல்ஃபிரட் நோபல் மறைந்த

ஐந்தாம் ஆண்டு நினைவு தினமான 1901-ஆம் ஆண்டில் முதன் முதலில் இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆல்ஃபிரட் நோபலின் உயிலின்படி, இயற்பியல், வேதியியல், உடலியங் கியல் அல்லது மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதி ஆகிய ஐந்து துறைகளில் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன. ஆறா வது பரிசாக, பொருளாதார அறிவியலுக்கான பரிசு, ஆல்ஃ பிரட் நோபலின் நினைவாக ஸ்வீடனின் மத்திய வங்கியான 'ஸ்வெரிகெஸ் ரிக்ஸ்பேங்க்' மூலம் 1968-ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்டது. நோபல் பரிசுகள் அந்தந்தத் துறைகளில் மிக உயரிய மற்றும் மதிப்புமிக்க விருதுகளாகக் கருதப்படுகின்றன.

நோபல் திட்டத்தின்படி இந்த ஆறு பரிசுகளும் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் 'நோபல் பரிசு வெற்றியாளர்' laureate என்று அழைக்கப்படுகிறார். இவர் களுக்கு 24 காரட் தங்க முலாம் பூசப்பட்ட பதக்கம், சான்றிதழ் மற்றும் பண வெகுமதி ஆகியவை வழங்கப்படுகின்றன. பணப்பரிசு சுவீடிஸ் பணப் பெறுமதியிலேயே வழங்கப்படு கின்றது. இம்முறை இலக்கியப் பரிசு பெற்ற ஆன் கார்சன் அமெரிக்க டொலர் பெறுமதியில் சுமார் 1.2 மில்லியன் பணப் பரிசைப் பெறுகின்றார். ஒரு பரிசை அதிகபட்சம் மூன்று சாத னையாளர் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடியும். இதற்கு விதி விலக்காக அமைதிக்கான நோபல் பரிசை மூன்றுக்கும் மேற் பட்ட நபர்களைக் கொண்ட அமைப்புகளுக்கும் வழங்க முடி யும். நோபல் பரிசுகள் மறைந்தவர்களுக்கு வழங்கப்படு வதில்லை ஆனால், ஒருவருக்குப் பரிசு அறிவிக்கப்பட்ட பிறகு, அவர் அதைப் பெறுவதற்கு முன்பே மறைந்துவிட்டால், அந் தப் பரிசு அவருக்கு வழங்கப்படுகிறது.

நோபல் பரிசின் வரலாற்றில் 1901-ஆம் ஆண்டு முதல் 2026-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், இந்த ஐந்து வகை யான நோபல் பரிசுகளும், 1969-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட பொருளாதார அறிவியலுக்கான பரிசும் மொத்தம் 633 முறை வழங்கப்பட்டுள்ளன. இதைப் பெற்றவர்கள் மற்றும் அமைப்புகளின் எண்ணிக்கை 1,018 ஆகும். இதுவரை ஐந்து நபர்களும் இரண்டு அமைப்புகளும் ஒன்றுக்கும் மேற்பட்ட நோபல் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

இந்த நோபல் பரிசுகளுக்குக் காரணமானவர் ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபல் என்பவராகும். 1833-ஆம் ஆண்டு சுவீடன் நாட்டில் பிறந்தவர். இவர் வேதியியலாளர், கண்டுபிடிப்பாளர், பொறியியாளர் மற்றும் தொழிலதிபராக இருந்தார். இவர் முக் கிய வெடி பொருளான டைனமைட்டைக் கண்டுபிடித்ததற் காகவும், தனது சொத்துகளைக் கொண்டு நோபல் பரிசு களை நிறுவியதற்காகவும் பரவலாக அறியப்படுகிறார். ஸ்டாக் ஹோமில் புகழ்பெற்ற நோபல் குடும்பத்தில் பிறந்த இவர், சிறுவயதிலேயே அறிவியல் மற்றும் கல்வியில், குறிப்பாக வேதியியல் மற்றும் மொழிகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி நிறுவனமாக இருந்த 'போஃ போர்ஸ்' நிறுவனத்தை, பிற்காலத்தில் பீரங்கிகள் மற்றும் பிற ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஒரு பெரும் நிறுவனமாக மாற்றினார்.

இவரது மிக முக்கியமான கண்டுபிடிப்பான டைனமைட், நைட் ரோகிளிசரின் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு வெடிபொருளா கும். நோபல் தமது மறைவுக்குப் பிறகு, தனது சொத்துகளை ஒரு அறக்கட்டளைக்கு வழங்கினார். இந்த அறக்கட்டளை மூலம் தான் 'மனிதகுலத்திற்கு மிகப்பெரிய நன்மைகளைச் செய்தவர்களுக்கு' ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங் கப்படுகின்றன. இவரது உயிலின்படி, இயற்பியல் மற்றும் வேதியியல் துறைகளுக்கான நோபல் பரிசு பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு 'ரோயல் சுவீடிஸ் அறிவியல் அகா டமி' என்ற இந்த அகாடமியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்முறை நோபல் பரிசு பெற்ற ஆன் கார்சனின் படைப்பு களில் ஆன் கார்சனின் படைப்புகளில் 'ஈரோஸ் தி பிட்டர்ஸ் வீட்' (Eros the Bittersweet) மற்றும் 'ஆட்டோபயோகிராஃபி ஆஃப் ரெட்' (Autobiography of Red) ஆகியவை மிக முக்கி யமான படைப்புகளாகக் கருதப்படுகின்றன. இதில் 'ஆட்டோ பயோகிராஃபி ஆஃப் ரெட்' எனும் படைப்பானது, ஒரு பண் டைய கிரேக்கப் புராணக்கதையை நவீன காலப் பருவ மாற் றக் கதையாக (Coming-of-age story) மறுவுருவாக்கம் செய்து எழுதப்பட்ட ஒரு புகழ்பெற்ற நாவலாகும். இவர் போர்ட் ஹோப்பில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்கும் போது இவருக்கு கிரேக்க மொழி மீது ஆர்வம் ஏற்பட்டது. அங்கு அவரது இலத்தீன் ஆசிரியர் கிரேக்க வரலாற்றில் ஆர் வத்தை ஏற்படுத்தினார். பின்னர், அவர் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இணைந்து மூன்று பட்டங்களைப் பெற்றார். 1974-ஆம் ஆண்டு இளங்கலை, 1975-ஆம் ஆண்டு முதுகலை மற்றும் 1981-ஆம் ஆண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றார். இப்போது, பல ஆண்டுகளாக அவர் மேற்கொண்ட இலக்கிய ஆய்வுகள், உலகின் மிக உயர்ந்த கௌரவங்களில் ஒன்றான நோபல் பரிசை அவருக்குப் பெற்றுத் தந்துள்ளன.

ஆன் கார்சன் ஐஸ்லாந்தில் விடுமுறைப் பொழுதைக் கழித் துக் கொண்டிருந்தவேளையில், சுவீடனின் ஸ்டாக்ஹோம் நக ரிலிருந்து அவர் இலக்கிய நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட அதிகாரபூர்வச் செய்தி அறிவிக்கப்பட்டது. பண் டைய கிரேக்க செவ்வியல் இலக்கியப் படைப்புகளை அடிப் படையாகக் கொண்டு, உலகம் இதுவரை வாசித்திராத ஒரு புதிய வடிவத்தில் அவற்றை அற்புதமாக மாற்றியமைத்த அவரது 'துணிச்சலான மற்றும் புதுமையான' படைப்பாற் றலையே முதன்மைப்படுத்தி இம்முறை அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதாகச் ஸ்வீடிஷ் அகாடமி தனது உத்தி யோகபூர்வ அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தது.

1901-ஆம் ஆண்டு முதல் இந்தப் பரிசை வென்ற 19-வது பெண்மணியாகவும் இவர் இருக்கின்றார். 1950-ஆம் ஆண்டு ரொறன்ரோவில் பிறந்த ஆன் கார்சன், பல தசாப்தங்களாகப் பண்டைய கிரேக்க மொழியைக் கற்பித்ததோடு, அது சார்ந்து தனித்துவமான பல நூல்களையும் எழுதியுள்ளார். ஆங்கிலத் தில் எழுதும் கவிஞர்களிலேயே மிகவும் ஈர்க்கக்கூடிய கவிஞர் என்று மைக்கேல் ஒண்டாச்ஜி ஒருமுறை இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். டிசம்பர் 10-ஆம் திகதி ஸ்டாக்ஹோமில் நடைபெறவுள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் ஆன்

“76 வயதான கார்சன், அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் கற்பித்த நீண்ட அனுபவம் கொண்ட ஒரு சிறந்த செவ்வியல் அறிஞர் ஆவார். இவரது இலக்கியப் படைப்புகளில் ‘The Beauty of the Husband’, ‘An Autobiography of Red: A Novel in Verse’ மற்றும் ‘Nox’ போன்ற படைப்புகள் உலகளவில் மிகவும் புகழ்பெற்றவை.”

கார்சன் கௌரவிக்கப்படவுள்ளார்.

76 வயதான கார்சன், அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள பல்வேறு கல்லூரி களில் கற்பித்த நீண்ட அனுபவம் கொண்ட ஒரு சிறந்த செவ்வியல் அறிஞர் ஆவார். இவரது இலக்கியப் படைப்புகளில் ‘The Beauty of the Husband’, ‘An Autobiography of Red: A Novel in Verse’ மற்றும் ‘Nox’ போன்ற படைப்புகள் உல களவில் மிகவும் புகழ்பெற்றவை. பழைமையும் நவீனமும் ஒன்றிணைந்து பயணிக் கும் இவரது தனித்துவமான கட்டுரைகள், உரைநடை மற்றும் கவிதைகள் விமர் சகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. ‘செவ்வியல் மரபுடனான கார்சனின் விளை யாட்டுத்தனமான உரையாடல் சமகால இலக்கியத்திற்குப் புதிய வடிவங்களை உருவாக்கியுள்ளது’ என்று நோபல் குழு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பல்வேறு கருத்துகள், இலக்கிய வகைகள் மற்றும் வடிவங்களை மிக நுட்பமாகச் சமநிலைப்படுத்தும் கலப்பு பாணிக்கு (Hybrid style) ஆன் கார்சன் பரவலாக அறியப்படுகிறார். ‘அவரது ஏறக்குறைய அனைத்து இலக்கியப் படைப்புகளும், சொற்களின் மீதான மொழியியல் அறிஞரின் தீவிர ஈடுபாட்டிற்கும், புதிய அர்த் தங்களுக்கான கவிஞரின் தேடலுக்கும் இடையிலான அழகிய சங்கமத்தை மையமாகக் கொண்டவை’ என்று இலக்கியத்திற்கான நோபல் குழுவின் தலைவர் ஆண்டர்ஸ் ஓல்சன் சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணமாக, அவருக்குப் பெரும் புகழைத் தேடித்தந்த ‘Autobiography of Red என்ற படைப்பில், அவரது நீண்ட கதைக்கவிதை, அவருக்கு உத்வேகம் அளித்த பண்டைய கிரேக்கக் கவிஞர் ஸ்டெசிகோரஸ் (Stesichoros) குறித்த ஆழ்ந்த மற்றும் புதிரான விவாதத்தின் பின் னணியில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது.

கார்சனின் ஆரம்பகாலப் பணி வாழ்க்கை பெரும்பாலும் செவ்வியல் (classics) சார்ந்ததாகவே இருந்தது. அவர் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்றார், அத்துடன் ஸ்காட்லாந்தின் செயின்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் செவ்வியல் துறையில் ஒரு பட்டப் படிப்பையும் முடித்தார். தனது முப்பதுகளிலேயே ஒரு கட்டுரையையும் தனது முனைவர் பட்ட ஆய்வேட்டையும் வெளியிட்டிருந்தார். அவரது 42 வயதில் அவரது முதல் கவிதை நூலான Short Talks வெளிவந்தது. அதைத் தொடர்ந்து மேலும் மூன்று படைப்புகள் வெளிவந்தன. பின்னர் வெளியான ‘ஆட்டோபயோகிராபி ஆஃப் ரெட்’ அவரை விமர்சகர்களால் பெரிதும் பாராட்டப்படும் ஒரு படைப்பாளி யாக அடையாளப்படுத்தியது.

பெயரிடப்படாத இரண்டு கதாபாத்திரங்களுக்கு இடையிலான திருமண உறவு முறிவை விவரிக்கும் இவரது ‘The Beauty of the Husband: A Fictional Essay in 29 Tangos’ என்ற படைப்பு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வெளியானது. அந்தப் படைப்பிற்காக, 2001-ஆம் ஆண்டு; மதிப்புமிக்க டி.எஸ். எலியட் பரிசை (T.S. Eliot Prize) வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையை ஆன் கார்சன் பெற்றார்.

இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற கனடியரான ஆன் கார்சனின் புத்தகங்கள், இலண்டனில் உள்ள சில புத்தகக் கடைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நோபல் பரிசு பெற்றதால் இனி கனடிய புத்தகக் கடைகளி லும் காட்சிப்படுத்தப்படலாம்.

kuruaravindan@thaiveedu.com

குமார் புனிதவேல்

# சர்வதேச நீதியின் கம்பீரக் குரல்: நவநீதம் ‘நவி’ பிள்ளை

tg.theeban@gmail.com

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும், சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் (ICC) நீதிபதியுமான தென்னாபிரிக்காவின் நவநீதம் ‘நவி’ பிள்ளை அவர்களுக்கு 2026-ஆம் ஆண்டிற்கான நோபல் அமைதிப் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அமைதிக்கான நோபல் பரிசைப் பெறும் ஐந்தாவது தென்னாபிரிக்க ஆளுமை எனும் வரலாற்றுச் சிறப்பை அவர் பெறுகின்றார்.

வெள்ளிக்கிழமையன்று இக்கௌரவத்தை அறிவித்த நார்வே நோபல் குழு, உலகளாவிய ரீதியில் இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் தண்டனை உறுதிசெய்யப்படுவதற்கும் பல தசாப்தங்களாக அவர் ஆற்றிய அர்ப்பணிப்பு மிக்கப் பணிகளைப் பாராட்டியுள்ளது. அவரது இச்சாதனைகள் ‘நீதித்துறை சார்ந்த நுட்பமான துல்லியம், தனிப்பட்ட நேர்மை மற்றும் அளப்பரிய துணிச்சல்’ ஆகியவற்றின் வெளிப்பாடு என்றும் அக்குழு புகழாரம் சூட்டியுள்ளது.

### சர்வதேசச் சட்ட ஒழுங்கின் மீதான நம்பிக்கை:

நவநீதம் பிள்ளை அவர்களுக்கு இப் பரிசு வழங்கப்பட்டிருப்பது, உலகளாவிய நீதிக்கான போராட்டத்தில் ஒரு தனித்துவமான ஆளுமைக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் என்பதையும் தாண்டி மிக ஆழமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இக்கௌரவமானது, இன்றைய உலகளாவிய அரசியல் சூழலின் மிக முக்கியமானதொரு பரிமாணத்தைப் பிரதிபலிக்கிறது. சர்வதேசச் சட்ட ஒழுங்கும் நீதித்துறை அமைப்புகளும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அழுத்தங்களுக்கும் கடுமையான வினாக்களுக்கும் உட்படுத்தப்பட்டு வரும் ஒரு நெருக்கடியான காலகட்டத்திலேயே இப்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. நவநீதம் பிள்ளை அவர்களின் இச்சாதனைக்கான அங்கீகாரம், சர்வதேசச் சட்டம் - நடைமுறையில் எத்துணை முரண்பாடுகளுடனும் குறைபாடுகளுடனும் தொழிற்பட்ட போதிலும் - அமைதியான உலகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மனித உரிமைகளைப் பேணுவதற்கும் தவிர்க்க முடியாத இன்றியமையாத தூண் என்ற அடிப்படை நம்பிக்கையை உலகிற்கு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

### வரலாற்று மாற்றம்: முதல் தென்னாபிரிக்கப் பெண்:

அமைதிக்கான நோபல் பரிசைப் பெறும் முதல் தென்னாபிரிக்கப் பெண் எனும் கௌரவத்தையும் நவநீதம் பிள்ளை பெறுகின்றார். இச்சான்றாண்மை, வரலாற்று ரீதியாக ‘ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த உயர் வர்க்கப் பிரிவைச் சேர்ந்த வெள்ளையின ஆண்களையே’ பெரும்பாலும் முன்னிறுத்தி வந்த நோபல் தேர்வுக்குழுவின் பாரம்பரியப் போக்கில் ஏற்பட்ட ஒரு முக்கியமான முற்போக்கு மாற்றத்தைக் குறிக்கிறது.

தமக்கு முன்னைய தென்னாபிரிக்க அமைதி விருதாளர்களைப் போலவே, இன ஒதுக்கல் (Apartheid) கொடுங்கோன்மைக்கும் வெள்ளையின சிறுபான்மை ஆட்சிக்கும் எதிரான மக்கள் போராட்டமே நவநீதம் பிள்ளையின்

வாழ்நாள் பங்களிப்பின் முதன்மை ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. இருப்பினும், அதில் ஒரு காத்திரமான வேறுபாடு உள்ளது. நெல்சன் மண்டேலா உலகளாவிய நல்லிணக்கத்தின் சாந்தமான குறியீடாக உருவெடுத்த வேளையில், நவநீதம் பிள்ளை தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கலுக்கு எதிரான விடுதலையனுபவங்களையும் சட்டப் போராட்டங்களையும் பன்னாட்டு அரங்கிற்கு எடுத்துச் சென்றார். உலகளாவிய ரீதியில் அமைதிக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் குரல்கொடுக்கும் தனித்துவமான தலைமைத்துவப் பண்புகொண்ட ஆளுமையாகவும், சர்வதேச நீதித்துறை நிறுவனங்களைக் கட்டமைத்த முன்னோடியாகவும் அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

## சர்வதேச நீதித் தீர்ப்பாயங்களின் உருவாக்கமும் முன்னோடிப் பணிகளும்:

மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் பொறுப்புக்கூற வைக்கப்படுவதை உறுதிசெய்யும் பன்னாட்டு அமைப்புகளைக் கட்டியெழுப்பும் வரலாற்றுச் சிறப்புமிக்க பணியில், தொடக்ககாலப் பன்னாட்டு நீதிபதிகளில் ஒருவராகச் செயற்படும் உயரிய பொறுப்பு அவரிடம் இருந்தது.

1994-ஆம் ஆண்டு ருவாண்டாவில் இடம்பெற்ற மனிதப் பேரவலத்திற்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்பட்ட 'ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின்' (ICTR) தொடக்ககால நீதிபதியாகவும், அதனைத் தொடர்ந்து 2003 முதல் 2008 வரை தி ஹேக்கில் (The Hague) செயற்பட்ட 'சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்' (ICC) முதலாவது நீதிபதிகள் அமர்வின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார்.

அவரது ஆழ்ந்த சட்ட அறிவு, நீதித்துறைச் சார்பற்ற நடுநிலைமை மற்றும் ஆளுமைப் பண்புகள் ஆகியவை புதிதாக உருப்பெற்ற இப்பன்னாட்டு நீதி நிறுவனங்களுக்கு உலகளாவிய மதிப்பையும் சட்டபூர்வத்தன்மையையும் (Legitimacy) பெற்றுத் தந்தன. இத்தகைய முன்னோடிப் பங்களிப்புகளின் மூலம், உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளுக்காகவும் குற்றவாளிகள் பொறுப்புக்கூற வைக்கப்படுவதற்காகவும் முன்னெடுக்கப்படும் பன்னாட்டு நீதிப் போராட்டத்தின் அடையாளமாகவே அவர் விளங்குகின்றார்.

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பிள்ளை, 1941-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23-ஆம் திகதி, தென்னாபிரிக்க ஒன்றியத்தின் டர்பன் நகரில் நாராயணசாமி, சாந்தம்மா தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். அவருடைய தாத்தாவும் பாட்டியும் தமிழ்நாட்டிலிருந்து கரும்புத் தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காக ஒப்பந்தத் தொழிலாளர்களாக (Indentured Labourers) தென்னாபிரிக்காவுக்குச் சென்றவர்கள். 1890-களில் குடியேறிய தமிழ்த் தொழிலாளர் குடும்பப் பின்னணியைக் கொண்ட நவி பிள்ளையின் தந்தை, பேருந்து ஓட்டுநராகப் பணியாற்றினார். தனது எட்டுப் பிள்ளைகளையும் பராமரிப்பதற்காக, ஓய்வு நேரங்களில் மீன்பிடித்தும் தனது வருமானத்தைப் பெருக்கிக்கொண்டார். புலம்பெயர்ந்து வாழ்ந்த நாட்டில் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டபோதிலும், நவி பிள்ளையின் பெற்றோர் தமது தமிழ்க் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தியதுடன், தமது சமய நம்பிக்கைகளையும் அவர்களுக்குக் கற்பித்தனர். அக்காலகட்டத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளை இளம் வயதிலேயே திருமணம் செய்து வைத்தனர். ஆனால், நாராயணசாமியும் சாந்தம்மாவும் தமது மூன்று பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளுடன் தொடர்ந்து கல்வி கற்கச் செய்தனர். அக்காலத்தில் தென்னாபிரிக்காவில் உள்ள பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப் போதிய இடவசதி இருக்கவில்லை. தாயார் சாந்தம்மா, பள்ளியில் இடம்பெறுவதற்காக நீண்ட வரிசையில் நெடுநேரம் காத்திருந்து, தமது பிள்ளைகளுக்குப் பாடசாலையில் இடம் பெற்றுக்கொடுத்தார். புத்தகங்கள் வாங்குவதற்குப் பணப்பற்றாக்குறை நிலவியதால், மூத்த பிள்ளைகளின் புத்தகங்களில் பயன்படுத்தப்படாத பக்கங்களைத் தைத்துப் புத்தகங்களாக்கி இளைய பிள்ளைகளுக்கு வழங்கினார். இவ்வாறு, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமது பிள்ளைகளின் கல்வியில் சாந்தம்மா கொண்டிருந்த அக்கறையும் அர்ப்பணிப்பும் வெளிப்பட்டன.

இளம் வயதிலேயே நவி பிள்ளை தமது எழுத்துகளுக்காகப் பெரும் பாராட்டுகளைப் பெற்றார். அவருக்குப் பத்து வயதாக இருந்தபோது, வகுப்பில் கறுப்பினத்தவர்கள் வெள்ளையினத்தவர்களை விடக் கடுமையான தண்டனைகளைப் பெற்றதைப் பற்றி எழுதியுள்ளார். பதினான்கு வயதில், டர்பன் வர்த்தக சபை நடத்திய கட்டுரைப் போட்டியில், தென்னாபிரிக்க மக்கள் தென்னாபிரிக்கப் பொருட்களையே வாங்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துக் கட்டுரை எழுதி, அதற்காக வெண்கலப் பதக்கத்தையும் பரிசாகப் பெற்றார். பதினைந்து வயதில், பெண்கள் தமது குழந்தைகளுக்குப் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பது பற்றிய அவரது எழுத்தைப் பாராட்டி, யூதப் பெண்கள் சங்கம் அவரைக் கௌரவித்ததுடன், புத்தகங்களையும் பரிசாக வழங்கியது.

உள்ளூர் இந்தியச் சமூகத்தின் நிதி அனுசரணையுடன், நவநீதம் 'நவி' பிள்ளை 1963-ஆம் ஆண்டு நேட்டால் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் (B.A.) பட்டத்தையும், 1965-ஆம் ஆண்டு சட்டமாணிப் (LL.B.) பட்டத்தையும் பெற்றார். அக்காலகட்டத்தில் பல்கலைக்கழகக் கல்வி இன அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்ததுடன், வகுப்புகளும் பட்டமளிப்பு நிகழ்வுகளும் பிரத்யேகமாக வேறுபடுத்தப்பட்டிருந்தன. இன ஒதுக்கல் (Apartheid) பாகுபாட்டின் காரணமாக, வெள்ளையர் அல்லாத மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குறைந்தளவிலான வளங்களையே அவர் பயன்படுத்த வேண்டியிருந்தது. பாடப்புத்தகங்களைக்கூட இருபது மாணவர்களுடன் பகிர்ந்து படிக்க வேண்டிய நிலை காணப்பட்டது. 1959-ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அரசு நிறைவேற்றிய 'பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கச் சட்டம்', இன அடிப்படையிலான கல்விப் பிரிவினையை மேலும் வலுப்படுத்தியது. இதன் விளைவாக, இந்திய மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சலிஸ்பரி தீவிலுள்ள (Salisbury Island) பல்கலைக்கழகக் கல்லூரிக்கு அவர் மாற்றப்பட்டார். எனினும், அங்குச் சட்டக் கல்விப் பாடத்திட்டம் இல்லாததால், மீண்டும் நேட்டால் பல்கலைக்கழகத்திலேயே தனது சட்டக் கல்வியைத் தொடர்ந்து, 1965-ஆம் ஆண்டு சட்டமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்தார்.

அக்காலகட்டத்தில், தென்னாபிரிக்கச் சட்ட அமைப்பின் கீழ் நவநீதம் 'நவி' பிள்ளை அட்வகேட் (Advocate - நீதிமன்ற வழக்குரைஞர்) ஆகவோ அல்லது அட்டர்னி (Attorney - சட்

டத்தரணி) ஆகவோ தகுதி பெறக்கூடிய நிலை காணப்பட்டது. அவர் நேரடிச் சமூகப் பணியாற்ற ஏதுவாகச் சட்டத்தரணியாகச் (Attorney) செயற்படத் தீர்மானித்தார். இதற்காக, இரண்டு ஆண்டுகள் அனுபவமிக்க சட்டத்தரணி ஒருவரிடம் தொழிற்பயிற்சி பெற வேண்டியிருந்தது. அதன்படி, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) முன்னணி உறுப்பினரான என்.டி. நாய்கரிடம் (N.T. Naicker) தமது சட்டப் பயிற்சியை மேற்கொண்டார். 1967-ஆம் ஆண்டு நேட்டால் மாகாணத்தில் சொந்தமாகச் சட்ட நிறுவனமொன்றை (Law Firm) அவர் தொடங்கினார். இதன் மூலம், அம்மாநிலத்தில் சொந்தமாகச் சட்ட நிறுவனம் ஒன்றை நிறுவிய முதலாவது பெண் சட்டத்தரணி எனும் வரலாற்றுச் சிறப்பை அவர் பெற்றார். அதனைத் தொடர்ந்து, சர்வதேசச் சட்டத்துறையில் தமது உயர் கல்வியைத் தொடர்ந்த அவர், 1981-ஆம் ஆண்டு அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சட்ட முது மாணிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர், 1988-ஆம் ஆண்டு ஹார்வர்ட் சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் கலாநிதி பட்டத்தையும் நிறைவுசெய்தார். இதன் மூலம், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற முதலாவது தென்னாபிரிக்கர் எனும் பெருமையையும் அவர் எய்தினார்.

நவநீதம் ‘நவி’ பிள்ளை தனது வாழ்க்கைத்துணையான பரஞ்சோதி ‘கபி’ அந்தோனி பிள்ளையை (Gaby Pillay) 1962-ஆம் ஆண்டு சந்தித்தார். அவர்கள் 1965-ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர், இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இன ஒதுக்கல் ஆட்சிக் காலத்தில் வெள்ளையினத்தவர் அல்லாத பெண் சட்டத்தரணி ஒருவரைத் தமது நிறுவனங்களில் பணியமர்த்த வெள்ளையினச் சட்ட அமைப்புகள் மறுத்தமையானது, சமூகப் பாகுபாடுகளை எதிர்கொண்டு அவர் சொந்தமாகச் சட்ட நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான முதன்மைத் தூண்டுதலாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து, தென்னாபிரிக்காவின் ஜனநாயக அரசியலமைப்பில் பாலினச் சமத்துவ விதிகளை உள்ளடக்குவதற்காகப் போராடிய மகளிர் தேசியக் கூட்டணியிலும் (National Women's Coalition) அவர் தீவிரமாகப் பங்காற்றினார். இப்போராட்டத்தின் விளைவாக உருவான வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியலமைப்பு விதிகளானது இனம், பாலினம், பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை (Sexual Orientation) உள்ளிட்ட எந்தவொரு காரணியின் அடிப்படையிலும் மனித பாகுபாடு காட்டப்படுவதை முற்றாகத் தடைசெய்கின்றன.

1995-ஆம் ஆண்டு தென்னாபிரிக்க நீதித்துறைப் பணியகத்தின் (Judicial Service Commission) உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நவநீதம் ‘நவி’ பிள்ளையை, அதே ஆண்டில் அன்றைய அதிபர் நெல்சன் மண்டேலாவும் நீதித்துறை அமைச்சர் டுல்லி ஓமரும் (Dullah Omar) இணைந்து தென்னாபிரிக்க உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமித்தனர். இதன் மூலம், தென்னாபிரிக்க உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றிய முதலாவது வெள்ளையினத்தைச் சாராத பெண் நீதிபதி எனும் வரலாற்றுச் சிறப்பை அவர் பெற்றார்.


> “1981–ஆம் ஆண்டு அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் சட்ட முது மாணிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர், 1988–ஆம் ஆண்டு ஹார்வர்ட் சட்டக் கல்லூரியில் சட்டத் துறையில் கலாநிதி பட்டத்தையும் நிறைவுசெய்தார். இதன் மூலம், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற முதலாவது தென்னாபிரிக்கர் எனும் பெருமையையும் அவர் எய்தினார்.”

அதனைத் தொடர்ந்து 1995-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் அமைக்கப்பட்ட 'ருவாண்டாவிற்கான பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தின்' (ICTR) நீதிபதியாக அதிபர் நெல்சன் மண்டேலாவினால் அவர் பரிந்துரைக்கப்பட்டார். 1999 முதல் 2003 வரையிலான காலப்பகுதியில் அத்தீர்ப்பாயத்தின் தலைமை நீதிபதியாக உயர்வு பெற்றுப் பணியாற்றிய அவர், மனித உரிமை வரலாற்றில் அழியாத பல மைல்கற்களை நிறுவினார்.

### மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகப் பாலியல் வன்கொடுமை:

ருவாண்டாவிற்கான பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தின் (ICTR) நீதிபதியாகத் தான்சானியாவின் அருஷா (Arusha)

நகரில் நவநீதம் 'நவி' பிள்ளை பொறுப்பேற்ற பின்னரே, பன்னாட்டுச் சட்ட வரலாற்றில் அவரது மிகவும் நீடித்த மற்றும் புரட்சிகரமான உலகளாவிய பங்களிப்பு வெளிப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களின் படுகொலைகளுக்குக் காரணமான தபா (Taba) கம்யூனின் முன்னாள் மேயர் ஜீன்-பால் அகாயேசு (Jean-Paul Akayesu) மீதான விசாரணையின் போது, நவநீதம் பிள்ளையும் சக நீதிபதிகளும் சாட்சிகளிடம் பாலியல் வன்முறைகள் குறித்து ஆழமாகக் கேள்விகளை எழுப்பினர். பெண்களின் இத்துயர அனுபவங்களை உலகறிய வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த அவர்கள், பாலியல் வன்கொடுமையையும் முதன்மை குற்றப்பத்திரிகையில் அதிகாரபூர்வமாகச் சேர்க்கும் வகையில் அதில் திருத்தங்களை மேற்கொண்டனர்.

1998-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அவ்வரலாற்றுத் தீர்ப்பின் மூலம், பாலியல் வன்கொடுமையானது மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகவும் (Crime Against Humanity), அத்துடன் இனப்படுகொலைச் செயலின் ஒரு அங்கமாகவும் (Act of Genocide) பன்னாட்டுச் சட்ட அமைப்பில் முதன்முதலாக அங்கீகரிக்கப்பட்டது.

இத்தீர்ப்பின் வரலாற்று முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி நவநீதம் நவி பிள்ளை உரையாற்றுகையில்:

'தொன்றுதொட்டு, பாலியல் வன்கொடுமை என்பது போரில் வெற்றிபெற்றவர்கள் அடையும் கொள்ளைப் பொருளாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இனிமேல் அது ஒரு போர்க்குற்றமாகவும், மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகவும் கருதப்பட்டுத் தண்டிக்கப்படும்.'

எனக் குறிப்பிட்டார். இத்தீர்ப்பானது, ஒரு பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தினால் இனப்படுகொலை குற்றத்திற்காக வழங்கப்பட்ட முதலாவது தண்டனையாகவும், பாலியல் வன்கொடுமையை மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகக் கருதி ஒரு தனிநபருக்குத் தண்டனை விதித்த முதலாவது பன் னாட்டு நீதித்துறைத் தீர்ப்பாகவும் அமைந்தது. இதன் மூலம், போர்க் காலங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடூரமான குற்றங்களுக்குப் பன்னாட்டு அளவில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு இத்தீர்ப்பு ஒரு புதிய சகாப்தத்தைத் திறந்துவைத்தது

> **2003-ஆம் ஆண்டு 'ரோம் ஒப்பந்தத்தின்' (Rome Statute) கீழ் தி ஹேக்கில் இயங்கும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நவநீதம் 'நவி' பிள்ளை, 2008-ஆம் ஆண்டு வரை அப்பதவியில் பணியாற்றினார். தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பரிந்துரையின் பேரில், பொதுச் சபையினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்.**

2003-ஆம் ஆண்டு 'ரோம் ஒப்பந்தத்தின்' (Rome Statute) கீழ் தி ஹேக்கில் இயங்கும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நவநீதம் 'நவி' பிள்ளை, 2008-ஆம் ஆண்டு வரை அப்பதவியில் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பரிந்துரையின் பேரில், பொதுச் சபையினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக (UN High Commissioner for Human Rights) நியமிக்கப்பட்டார்.

## இலங்கையின் இறுதியுத்தமும் நவிப்பிள்ளையும்:

நவி பிள்ளை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராகப் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்திலேயே, இலங்கையில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றது. 2009-ஆம் ஆண்டு மே 26-ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியது. அக்கூட்டத்தில் உரையாற்றிய நவி பிள்ளை, இரு தரப்பினரும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியிருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டியதுடன், இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் சுதந்திரமானதும் நம்பகமானதுமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எனினும், 2009-ஆம் ஆண்டு மே 27-ஆம் திகதி பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், அவர் முன்வைத்த பன்னாட்டு விசாரணைக்கான கோரிக்கை சேர்க்கப்படவில்லை; மாறாக, இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஆதரவான தீர்மானமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு (Darusman Panel) 2011-ஆம் ஆண்டு வெளியிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையில், இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டதுடன், பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகள் மீது நடத்தப்பட்ட அரச படையினரின் எறிகணைத் தாக்குதல்கள் உள்ளிட்ட கடுமையான சம்பவங்கள் தொடர்பிலும் ஆழமான கவலையை வெளியிட்டது.

2009-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய நவநீதம்

'நவி' பிள்ளை, போதுமான ஆதாரபூர்வமான சான்றுகள் திரட்டப்படும் வரை உடனடி விசாரணைக்கான அழைப்பை விடுக்க முடியாது என்றும், அக்கணத்தில் தம்மிடம் முழுமையான ஆய்வறிக்கை எதுவும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். அதனைத் தொடர்ந்து, 2013-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், இறுதிக்கட்டப் போருக்குப் பின்னர் இலங்கைக்கு நேரில் விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக நவி பிள்ளை திகழ்ந்தார். அவர் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வட பகுதிக்கு நேரில் சென்று, அங்கு வாழ்ந்த தமிழ் மக்களின் இழப்புகளையும் துயர அனுபவங்களையும் கேட்டறிந்தார். கொழும்பில் இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அங்கு நிலவிய அநீதிகளை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டிய அவர்:

'ஆயிரக்கணக்கான தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர். நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்திருக்கலாம்; ஆனால் மக்களின் வேதனைகளும் துயரங்களும் இன்னும் ஓயவில்லை.'

என்று குறிப்பிட்டார். மேலும், தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இராணுவம் அளவுக்கு அதிகமாகத் தலையிடுவதையும், நில ஆக்கிரமிப்புகளையும், தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதையும் சுட்டிக்காட்டிய அவர், கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

2013-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அவர் சமர்ப்பித்த அறிக்கையில், வடக்கில் தாம் பயணித்த பாதைகளில் தற்காலிகமாக அகற்றப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடிகள், தாம் கொழும்பு திரும்பிய பின்னர் மீண்டும் அமைக்கப்பட்டதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அம்பலப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, 2014-ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் அவரது அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக உண்மைகளைக் கண்டறிவதற்குச் சுயாதீனமான சர்வதேச விசாரணைப் பொறிமுறையை (Independent International Investigation Mechanism - OISL) ஏற்படுத்த வேண்டிய வரலாற்றுப் பொறுப்பும் கடப்பாடும் பன்னாட்டுச் சமூகத்திற்கு உண்டு எனத் தெரிவித்தார்.

நவநீதம் 'நவி' பிள்ளை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராகப் பணியாற்றிய காலகட்டம், உலகளாவிய மனித உரிமை வரலாற்றில் பல புரட்சிகரமான மாற்றங்களும் முன்னேற்றங்களும் இடம்பெற்ற ஒரு காலகட்டமாக அமைந்தது. பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகங்களின் குரலாக இயங்கிய அவர், பாலியல் நோக்குநிலை (Sexual Orientation) மற்றும் பாலின அடையாளம் (Gender Identity) ஆகியவற்றின் அடிப்படையிலான சமத்துவ உரிமைகள், பாகுபாடு எதிர்ப்புச் சட்டங்கள் இயற்றப்படுதல் மற்றும் வெறுப்புக் குற்றங்களை (Hate Crimes) முறையான பன்னாட்டுத்தரத்தரவுகளுடன் பதிவுசெய்தல் ஆகியவற்றுக்காகத் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்த முதன்மை சர்வதேசத் தலைவராகத் திகழ்ந்தார்.

குறிப்பாக, தவிர்க்கக்கூடிய தாய்மார்களின் மரணங்களை (Preventable Maternal Mortality) வெறும் மருத்துவ மற்றும் பொது சுகாதாரப் பிரச்சினையாகக் கருதாமல், அது அரசுகளின் அலட்சியத்தால் நிகழும் அடிப்படை மனித உரிமை மீறல் என உலகளவில் அங்கீகரிக்கப் போராடியமை, பெண்களின் உரிமைகளுக்கான அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பாகக் கருதப்படுகிறது. அவரது வழிகாட்டுதலின் கீழ், ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் (OHCHR) 2012-ஆம் ஆண்டு முன்னோடியான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கியது. தாய்மார்களின் சுகாதாரப் பராமரிப்பில் நிலவும் பாகுபாடுகளைக் களைவதற்கும், தவிர்க்கக்கூடிய தாய்மார்களின் மரணங்களுக்கு அரசாங்கங்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும் உறுதியான மனித உரிமைச் சட்டக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என அக்கொள்கை வழிகாட்டல் உலக நாடுகளைக் கோரியது.

## பாலஸ்தீன காசா இனப்படுகொலையும் நவிப்பிள்ளையும்:

நவநீதம் 'நவி' பிள்ளை ஐக்கிய நாடுகள் சபையில் மேற்கொண்ட இறுதி முக்கிய அதிகாரபூர்வப் பணியாக, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதி மற்றும் இஸ்ரேல் தொடர்பான ஐ.நா. சுதந்திர சர்வதேச விசாரணை ஆணையத்தின் (Inde-

pendent International Commission of Inquiry on the Occupied Palestinian Territory, including East Jerusalem, and Israel) தலைவராகப் பணியாற்றியமை அமைகிறது.

காசா போர் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைச் செயல்கள் தொடர்பாக இக்குழு மேற்கொண்ட தீவிர விசாரணைகளும் அதன் கண்டுபிடிப்புகளும் உலகளவில் பெரும் கவனத்தைப் பெற்றன. அதேவேளை, இக்குழுவின் அறிக்கைகள் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்து கடுமையான அரசியல் விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் எதிர்கொண்டன.

இப்பணியின் போது நவி பிள்ளை காட்டிய தளராத அர்ப்பணிப்பு, அவரது சட்டப் போராட்டத்தின் முதன்மை அம்சத்தை உலகிற்கு வெளிப்படுத்தியது: அரசியல் ரீதியாகப் பலம் வாய்ந்த வல்லரசுகள் தங்களின் அநீதியான செயல்பாடுகள் விசாரிக்கப்படுவதை எத்துணை கடுமையாக எதிர்த்தபோதிலும், சர்வதேசச் சட்டக் கோட்பாடுகளையும் மனித உரிமை நெறிமுறைகளையும் தளராது நடைமுறைப்படுத்துவது மிகவும் சவாலானது; அதேசமயம் அது உலகளாவிய நீதிக்கு மிகவும் அவசியமானது.

## நம்பிக்கை தேவைப்படும் தருணத்தில் வழங்கப்பட்ட நோபல் பரிசு:

இந்நோபல் அமைதிப் பரிசு வழங்கப்பட்ட காலகட்டம், சர்வதேச நீதித்துறை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்புமுனையாகும். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் (Donald Trump), சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) கடுமையாக விமர்சித்து, அதன் அனைத்து உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்திய சூழலிலேயே இப்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது அமெரிக்கா தடைகளையும் விதித்தது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான நவி பிள்ளையைக் கௌரவிப்பதன் மூலம், கடுமையான அரசியல் அழுத்தங்களுக்கும் தடைகளுக்கும் உள்ளாகியுள்ள பன்னாட்டு நீதித்துறை அமைப்புகளின் சுயாதீனத்தைப் பாதுகாக்கும் வலுவான செய்தியை நோபல் குழு உலகுக்கு உணர்த்தியுள்ளது.

இஸ்ரேல் சர்வதேச அரங்கில் மேலும் தனிமைப்படுத்தப்பட்டு வரும் சூழலிலேயே இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையை (Genocide) இழைத்து வருவதாக நவி பிள்ளையும் அவரது தலைமையிலான ஐ.நா. பன்னாட்டு விசாரணைக் குழுவும் கண்டறிந்திருந்தன. இக்குழுவின் கண்டுபிடிப்புகள் நேரடிச் சட்டபூர்வத் தீர்ப்பாக மாறாவிட்டாலும், கடுமையான அரசியல் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இழைக்கப்பட்ட கொடூரங்களை ஆவணப்படுத்துவதிலும், பன்னாட்டுப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதிலும் இது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பங்களிப்பாகும்.

சமீபத்தில் தனது 85-வது பிறந்தநாளைக் கொண்டாடிய நவி பிள்ளை, இனப்படுகொலை தொடர்பான மற்றொரு சர்வதேச விவகாரத்திலும் முதன்மைப் பங்காற்றி வருகிறார். 2019-ஆம் ஆண்டு முதல், மியான்மருக்கு எதிராக காம்பியா தொடர்ந்த வழக்கில், ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் மீதான இனப்படுகொலை குற்றச்சாட்டு குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் (International Court of Justice - ICJ) அவர் தற்காலிக நீதிபதியாக (Judge ad hoc) பணியாற்றி வருகிறார். இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு விரைவிலேயே எதிர்பார்க்கப்படுகிறது.

நவநீதம் ‘நவி’ பிள்ளைக்கு வழங்கப்பட்டுள்ள இச்சிறப்புமிக்க நோபல் பரிசு, சர்வதேச நீதி முழுமையாக வெற்றி பெற்றுவிட்டது என்பதற்கான அடையாளம் அல்ல; மாறாக, மனித உரிமைகளையும் நீதியையும் நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்புகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை உலகிற்கு நினைவூட்டும் ஒரு வரலாற்று அறிவிப்பாகும். நவி பிள்ளையைக் கௌரவிப்பது என்பது, இதுவரை எட்டப்பட்ட மனித உரிமைச் சாதனைகளை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், சர்வதேச நீதித்துறை அமைப்புகள் கைநழுவிச் செல்லக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவது மாகும்.

kumar.punithavel@thaiveedu.com

tg.theeban@gmail.com

# 'அகதிகளின்' கதை

## நாடகத்தின் ஒரு விரிவான பார்வை

கேசிகா வரதராசா

அகதிகளின் வாழ்க்கை என்பது தாயகம், அடையாளம், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ள ஒரு முக்கியமான சர்வதேச சமூகப் பிரச்சினையாகும். போர், இனமோதல், அரசியல் அடக்குமுறை, இயற்கை அனர்த்தம் போன்ற காரணங்களால் தங்கள் சொந்த வாழ்விடத்தை விட்டு இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் மக்களின் அனுபவங்களையும், உணர்வுகளையும் பல இலக்கியப் படைப்புகளும், நாடகங்களும் வெளிப்படுத்துகின்றன. இவ்வரிசையில், 'அகதிகளின் கதை' என்ற நாடக எழுத்துருவானது அகதிகளின் வாழ்வியல் சூழல், உளவியல் நிலை, சமூக எதிர்கொள்ளல்கள் மற்றும் மானுடநேயப் பார்வை ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆராயத்தக்கதொரு படைப்பாகும். இந்நாடகத்தின் கருப்பொருள், அமைப்பியல், பாத்திரப் படைப்புகள் மற்றும் சமூகச் செய்தி ஆகியவை இக்கட்டுரையில் புறநிலை நோக்கப்படுகின்றன.

### அகதிகளின் கதை:

இந்நாடகத்தில், அகதிகளின் பன்முகச் சமூகப் பின்னணிகளையும் வாழ்வியல் அனுபவங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தந்தை, தாய், சிறுமி, மூத்த பெண்கள் மூவர், நடுத்தர வயதுடைய இரு தம்பதியர், ஒரு தனியான் மற்றும் ஒரு முதியவள் ஆகிய கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன.

நாடக எழுத்துருவில் கவிஞர் சு. வில்வரத்தினம் எழுதிய வாழ்த்துக் கவிதை அருமையான ஒரு தொடக்கமாக அமைகிறது. 'உண்டென்ற வாசலுக்கு ஒளிவிளக்கே...' எனத் தொடங்கும் அக்கவிதை நல்வாழ்க்கை, ஒளி மற்றும் நன்மையின் நிலைபேற்றை வலியுறுத்தும் முகமாக அமையப் பெற்றுள்ளது.

நாடகத்தின் தொடக்கம் மேடையின் பின்புறம் எழும் குழப்பமான கூச்சலுடன் அமைகிறது. கதாபாத்திரங்கள் மேடைக்குள் இழுத்து வரப்பட அக்கூச்சலையும் மீறிச் சில குரல்கள் மெலிதாக ஒலிக்கின்றன. நாடகம் தொடங்குவதற்கு முன் கேட்கும் பல்வேறு குரல்களின் கூச்சல்கள், சமூகத்தில் நிலவும் குழப்பம், பதற்றம் மற்றும் மக்களின் துயரமான சூழலை உணர்த்துகின்றன. இதன் மூலம் நாடகத்தின் மையக் கருத்திற்கான முன்னோட்டம் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 'ஆச்சி, அம்மா' எனத் தங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தேடி பதற்றத்துடன் கூக்குரலிடுவதும், உடைமைகள் எதையும் எடுத்துச் செல்ல முடியாமல் அவசரமாக உயிர் தப்பி ஓடிவந்த நிலையையும் இக்குரல்கள் வெளிப்படுத்துகின்றன. திடீரென குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்க, கதாபாத்திரங்கள் தரையில் பதுங்குகின்றனர். அந்நிலையிலேயே, தாயையும் உறவினர்களையும் தேடி ஏங்கும் குரல்கள் வெளிப்பட, பதுங்கியிருந்த கதாபாத்திரங்கள் மெல்ல எழுந்து நிற்கின்றனர். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பாத்திரமும் அனுபவங்களையும் உணர்வுகளையும் உரையாடல்களின் மூலம் வெளிப்படுத்தத் தொடங்குகின்றனர். கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மூலம் பாலம் உடைந்ததால் மக்கள் தப்பிச் செல்ல முடியாமல் தவிப்பதும், ஊர் எரிவதும், உறவினர்களின் நிலை தெரியாததால் அனைவரும் அச்சமும் பதற்றமும் கலந்த நிலையில் இருப்பதும் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும் மனைவி, கணவன், தனியான ஒரு ஆண், தாய் ஆகியோர் போரால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமை இழப்புகளால் ஆழ்ந்த துயரத்தையும் அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

தங்களது உறவினர்களையும் வாழ்விடத்தையும் இழந்த வேதனை கதாபாத்திரங்களின் உரையாடல்களில் உணர்ச்சிபூர்வமாக எதிரொலிக்கிறது. தொடர்ந்து, இயேசுநாதரின் சிலுவைப்பாடுகளை நினைவுகூர்ந்து கத்தோலிக்கர்களால் பாடப்படும் 'பசாம் இசை' மெட்டை அடிப்படையாகக் கொண்டு பாடல் ஒன்று பாடப்படுகிறது. 'முற்றுகையிடப்பட்டவர்கள் நாங்கள்...' எனத் தொடங்கும் இப்பாடல், போரும் அடக்குமுறையும் காரணமாகத் தாயகத்தையும் வாழ்வாதாரத்தையும் உரிமைகளையும் இழந்த மக்களின் ஆழ்ந்த வேதனையையும் நிராதரவான நிலையையும் வெளிப்படுத்துகிறது. முறிக்கப்பட்ட வாக்குறுதிகள், துரோகம் மற்றும் இடம்பெயர்வால் மக்கள் அனுபவிக்கும் அவமானம், தனிமை, இழப்பு ஆகிய உணர்வுகள் இதில் வலிமையாகக் கூறப்பட்டுள்ளன. அடக்குமுறைக்கு உள்ளான மக்களின் துயரத்தையும் நீதிக்கான ஏக்கத்தையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

இசைக்கப்படும் இசையானது உச்சத்தை அடைந்து திடீரென நின்றுவிட, தந்தை தனது குரலை படிப்படியாக உயர்த்திய வாறே எழுகிறார். தொடர்ந்து, தந்தை கதாபாத்திரத்தின் உரையாடல் வழியே 'நிவாரணம்... நிவாரணம்... நிவாரணம்...' என மூன்று கட்டங்களாக உலர் உணவு, மண்ணெண்ணெய், பால்மா போன்றவை வழங்கப்படுவது சுட்டப்படுகிறது. அவற்றை முறையே பெறுவதற்காக மக்கள் மீண்டும் மீண் டும் வரிசையில் நிற்கின்றனர். ஒவ்வொரு முறையும் நிவாரணத் தைப் பெற்ற பின் தங்கள் பழைய இடங்களுக்கே திரும்பு கின்றனர். இறுதியில், இந்த முடிவில்லாத நிவாரண வாழ்க்கை அவர்களைத் தள்ளாட்டத்துடனும் தடுமாற்றத்துடனும் கூடிய அவல நிலைக்குத் தள்ளுகிறது.

தொடர்ந்து 'ஏலேலோ ஐலசா ஏலேலோ...' என்ற பாடல் இசைக்கப்படுகிறது. அப்பாடல் வரிகளானது கப்பல் மூலம் மக்களுக்குத் தேவையான பொருட்கள் வந்து சேரும் மகிழ்ச் சியையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகிறது. அரிசி, சீனி, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வருவ தால் மக்களின் வாழ்க்கை வளம் பெறுகிறது. 'ஏலேலோ, ஐலசா' என்ற ஓசை உழைப்பின் உற்சாகத்தையும் நாட்டுப் புறப் பாடலின் இனிமையையும் எடுத்துக்காட்டுகிறது.

தொடர்ந்து இரவு நேரத்தில் தாய் மற்றும் பிள்ளையின் உரை யாடல் மூலம் நாடகம் நகர்த்தப்படுகின்றது. 'பிள்ளை: அம்மா பயமாயிருக்கு... தாய்: விடியட்டும் பொறு...' அவர்களின் உரையாடல் பின்வரும் அர்த்தத்தை தருவதாக அமை கின்றது. வறுமையில் வாழும் ஒரு தாயும் பிள்ளையும் அனுப விக்கும் துன்பங்களையும் எதிர்பார்ப்பையும் சித்தரிக்கிறது. பசி, குளிர், பயம் ஆகியவற்றைத் தாய் பொறுமையுடன் தாங் கச் சொல்லி ஆறுதல் அளிக்கிறாள். குடும்பத்தின் கஷ்ட மும், குழந்தை தந்தையின் வருகையை எதிர்நோக்கும் ஏக்க மும் இதில் வெளிப்படுகின்றன.

தொடர்ந்து பாடல் ஒன்று இசைக்கப்படுகின்றது. 'சின்ன சின்ன வண்டி கட்டி, சிவத்த மாடு ரெண்டு பூட்டி...' அந்தப் பாடலின் போது பாடலுடன் இணைந்து இருவர் சைக்கிளில் செல்வது போல பாவனை செய்து உரையாடுகின்றனர். நாட்டுப்புறப் பாடல் கிராமிய வாழ்க்கையின் எளிமையையும் மகிழ்ச்சியை யும் வெளிப்படுத்துகிறது. பாடலும் உரையாடலும் இணைந்து கதையின் இயல்பான சூழலையும் நிகழ்வின் ஓட்டத்தையும் வலுப்படுத்துகின்றன.

அதனைத் தொடர்ந்து, தந்தையும் மற்றொரு ஆணும் சைக் கிளில் பயணித்தவாறே உரையாடுகின்றனர். 'தந்தை: சொந்த இடம் ?, தனியான்: திருகோணமலை, நீங்கள் ?, தந்தை: தீவுப் பகுதி...' எனக் கூறும் அவர்கள், தங்களின் சொந்த ஊர், தொழில் மற்றும் வாழ்க்கைச் சுமைகளைப் பற்றிப் பேசுகின் றனர். அப்போது ஒலிக்கும் நாட்டுப்புறப் பாடல் அவர்களின் உழைப்பையும் கிராமிய வாழ்வியலையும் பிரதிபலிக்கிறது. பின்னர், அவர்கள் மேடையை விட்டு நகர, விடியற்கா லையின் ஒலிகள் புதிய நாளின் தொடக்கத்தையும் உழைப் புமிக்க வாழ்க்கையின் தொடர்ச்சியையும் உணர்த்துகின்றன.

இதனைத் தொடர்ந்து, தாய் மற்றும் ஏனைய பெண் கதாபாத் திரங்களினூடான உரையாடல்கள் வழியே அகதிகள் தாய கத்தில் இழந்த வீடு, காணி, வயல், கடல்சார் வாழ்வாதா ரங்கள் மற்றும் வாழ்வியல் நினைவுகள் ஏக்கத்துடன் வெளிப் படுத்தப்படுகின்றன. இடம்பெயர்வின் வலியையும் இழப்பின் ஆழமான வேதனையையும் வெளிப்படுத்தும் இந்நினைவு களால் ஏற்படும் மனமுடைவும் அதற்கான ஆறுதல்களும் மேடையில் சித்தரிக்கப்படுகின்றன.

அடுத்ததாக, கணவன் மற்றும் மனைவியிடையிலான உரை யாடலானது, அகதிகளாக மாறிய மக்களின் புதிய அடையா ளத்தையும், தங்களது வாழ்க்கையை மீண்டும் முதலிலிருந்து தொடங்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உணர்த்துகின்றது. 'அகதி' என்பது ஒரு புதிய சமூக வகைமை (சாதி / வகுப்பு) என்ற உருவகத்தின் ஊடாக அவர்களின் புதிய சமூக நிலை சுட்டப்படுகின்றது. பின்னணியில் ஒலிக்கும் பாடல் அவர் களின் துயரத்தையும் எதிர்கால நம்பிக்கையையும் பிரதிப லித்து நாடகத்திற்குரிய ஆழத்தை வழங்குகின்றது.

தொடர்ந்து தாய் தந்தை பிள்ளையின் உரையாடல் நிகழ் கின்றது. அதற்கிடையில் பிள்ளை ஒரு பாடல் ஒன்றை படிக் கின்றது, 'ஆக்காண்டி ஆக்காண்டி...'அனைத்து பாடல் வரி களும் பின்வரும் செய்திகளை, அகதி குடும்பத்தின் வறுமை, பசி மற்றும் அன்றாட வாழ்வாதாரப் போராட்டத்தை உருக் கமாக வெளிப்படுத்துகின்றன. தந்தையின் வேலையின்மை யும் குடும்பத்தின் துயரமும் பிள்ளையின் கல்விக்குத் தேவை யான அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையையும் உரையாடல்கள் உணர்த்துகின்றன. பிள்ளை வாசிக்கும் பாடல் அவர்களின் வாழ்க்கை வேதனைக்கு ஒரு குறியீடாய் அமைந்து. இறுதியில் வெளிச்சமும் கல்வி உபகரணங்களும் இல்லாத அவலநிலையை வெளிப்படுத்துகிறது.

தொடர்ந்து, கவிஞர் மு. பொன்னம்பலத்தின் 'வானமெங்கும் வெள்ளிப் பூக்கள்...' என்ற சிறுவர் பாடல் வழியே, அகதிச் சிறுவர்களின் உரிமைகளும் கல்வியும் மறுக்கப்பட்ட அவல நிலை சுட்டப்படுகின்றது. பாடல் முடிவில் தபால்காரனின் மணியோசையைத் தொடர்ந்து நிகழும் உரையாடல்கள், போர் மற்றும் இடம்பெயர்வால் சிதறிப்போன குடும்பங்களின் துயரத்தைப் புலப்படுத்துகின்றன. வெளிநாட்டிலிருந்து வரும் கடிதம் மூலம், மகனின் பாதுகாப்பற்ற அகதி வாழ்க்கையும், பேரப்பிள்ளைகளைக் காண இயலாத ஏக்கம் மற்றும் முதுமை யின் தனிமை என்பனவும் வெளிப்படுகின்றன.

அடுத்ததாக, நோயுற்ற முதிய அகதிப் பாத்திரத்தின் 'மூன்று நாளா ஒரே தலைஇடி...' என்ற உரையாடலும், அதனைத் தொடரும் 'நோயுற்ற தாயே முதியவளே...' எனும் பாடலும் மருத்துவ உதவியற்ற சூழலையும், தொற்றுநோய் குறித்த அச்சத்தையும், ஆதரவற்ற முதியவர்களின் வேதனையையும் மேடையில் நிறுவுகின்றன.

இறுதியில், 'நிலவொளியில் உன் வீடு எரிகின்ற போது...' என்ற பாடலும், 'கடவுளே! கடவுளே! நான் தனிச்சுப் போனேன்...' என்ற முதியவளின் புலம்பலும், தாயகத்தில் தமக்கிருந்த வீடு, காணி மற்றும் உறவுகளை இழந்து அனாதரவாக்கப் பட்ட ஒரு தாயின் எல்லையற்ற துயரத்தை உணர்த்தி நாட கத்தின் இப்பகுதியை நிறைவு செய்கின்றன.

நாடகத்தின் இறுதிக்காட்சியில், அனைத்துக் கதாபாத்திரங் களும் ஒன்றிணைந்து மேடையின் மையத்திற்கு வருகை தரு கின்றனர். இக்காட்சி அகதிகளின் துயரங்களைச் சமூகத்தின் முன் வலியுறுத்தும் குறியீடாகவும், மானுடநேயத்தின் அவசி யத்தை உணர்த்தும் நிறைவாகவும் அமைகின்றது.

பார்வையாளர்களை நோக்கியபடி நிகழ்த்தப்படும் உரையா டல்களில், அச்சமின்றித் தமது சொந்த வீடுகளுக்கும் ஊர்க

ளுக்கும் திரும்பும் ஏக்கம், சிதைந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேர்வதற்கான விருப்பம், மற்றும் பாழடைந்த வீடுகள், வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றை மீண்டும் கட்டியெழுப்பும் நம்பிக்கை என்பன வெளிப்படுகின்றன. மேலும், காணாமல் போன உறவினர்களைத் தேடும் வேதனையும் சொந்த மண்ணின் மீதான பற்றும் உருக்கமாகப் புலப்படுகின்றன.

இறுதியில், அனைத்துக் கதாபாத்திரங்களும் ‘வாழ்வின் பொருளே மங்கலம்...’ எனத் தொடங்கும் மங்கலப் பாடலைப் பாடி, அமைதி, ஒற்றுமை மற்றும் நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை வேண்டி நாடகத்தை நிறைவு செய்கின்றனர்.

## போர்க்கால சூழலுடன் அகதிகளின் கதை நாடக அணுகுமுறை:

இலங்கை வரலாற்றில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வன்முறைமிக்க காலகட்டமாக ஆயுத மோதல் நிலவிய காலத்தினைக் குறிப்பிடலாம். 1986 முதல் 1991 வரையிலான காலப் பகுதியில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இலங்கை அரசுப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கும் இடையே கடுமையான போர்கள் நடைபெற்றன. இதனால், பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, அகதிகளாகவும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

கிராமங்கள் தாக்கப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்டன; சொத்துகள் அழிக்கப்பட்டு குடும்பங்கள் பிரிந்தன. கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படுதல், சட்டவிரோதக் கைதுகள், சித்திரவதைகள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள் நிகழ்ந்ததாக மனித உரிமை அமைப்புகளும் பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளனர்.

1990-ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் பலர் உயிரழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அதே போல வடக்கிலிருந்த முஸ்லிம் மக்கள் பெருமளவில் வெளியேற்றப்பட்ட சம்பவமும் அந்தக் காலகட்டத்தில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அகதிகளாகக் கடல் வழியாகவும் பிற வழிகளிலாலும் தப்பிச் சென்றனர். பள்ளிகள், மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொதுமக்கள் பயன்படுத்தும் இடங்களும் போரால் பாதிக்கப்பட்டன. குழந்தைகள் கல்வியை இழந்தனர். பலர் பெற்றோரையோ உறவினரையோ இழந்து மன உளைச்சலுடன் வாழ நேரிட்டது. இந்தப் போர் பல இன மக்களையும் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என வெவ்வேறு காலகட்டங்களில் யாவரையும் துயரத்திற்கு உள்ளாக்கியது. மனித உயிரிழப்புகள், இடம்பெயர்வுகள், மற்றும் நீண்டகால மனரீதியான பாதிப்புகள் இந்த மோதலின் மிகப் பெரிய விளைவுகளாகும்.

‘அகதிகளின் கதை’ என்ற நாடகத்தின் வழியே போர்க்கால வரலாற்றுப் பின்னணியையும் அகதிகளின் வாழ்க்கையனுபவங்களையும் ஒப்பிட்டு விளக்க முடியும்.

போர் மக்களின் உடமைகளை மட்டுமல்ல, அவர்களின் மன அமைதியையும் பறித்துவிட்டது. உறவுகளை இழந்த துயரம், உயிர் பிழைப்பதற்கான போராட்டம், நாளை என்ன நடக்கும் என்ற எதிர்காலம் குறித்த அச்சம் ஆகியன அகதிகளின் வாழ்வில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்நாடகத்தின் கதாபாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல்கள் இந்த உளவியல் வேதனையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

போர்க் காலத்தில் மக்களின் வாழ்வு பெரும்பாலும் நிவாரணப் பொருட்களையே சார்ந்திருந்தது. அரிசி, சீனி, மருந்துகள் மற்றும் கூடாரங்கள் போன்ற உதவிகளே அவர்கள் உயிர்வாழ்வதற்கான அடிப்படை ஆதாரங்களாக இருந்தன. 'அகதிகளின் கதை' நாடகத்தில், கப்பல் மூலம் வரும் நிவாரணப் பொருட்களுக்காக ஏங்கிக் காத்திருக்கும் மக்களின் வாழ்க்கை, அவர்களின் நம்பிக்கை மற்றும் இயலாமை ஆகியன உணர்வுபூர்வமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எத்தனை துயரங்கள் சூழ்ந்திருந்தாலும், அகதிகள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை. ஒருவருக்கொருவர் துணையாக நிற்பது, எதிர்காலத்தில் மீண்டும் தாயகம் திரும்ப வேண்டும் என்ற கனவு மற்றும் மனிதநேயம் ஆகியவையே இந்நாடகத்தின் முதன்மைச் செய்திகளாக அமைகின்றன. இதன் மூலம், போர் பேரழிவை மட்டும் தரவில்லை; மாறாக, மனித மனதின் அசைக்க முடியாத உறுதியையும் வெளிப்படுத்துகிறது என்பதை இந்நாடகம் வலியுறுத்துகிறது.

இந்நாடகத்தில் குறிப்பிடப்படும் அம்சங்கள் அனைத்தும், 1980-களின் இறுதியிலிருந்து 1990-கள் வரையிலான இலங்கையின் உள்நாட்டுப் போர்க்காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பிரதிபலிக்கும் பண்பாட்டு அடையாளங்களாகப் பார்க்கப்படுகின்றன. 'அகதிகளின் கதை' நாடகத்தில் இடம்பெறும் பாடல்கள், உரையாடல்கள், கடிதப் பரிமாற்றங்கள், நிவாரணக் காட்சிகள் மற்றும் மங்கள நிறைவு போன்ற பகுதிகள் அக்கால மக்களின் உண்மை வாழ்க்கையோடு நெருங்கிய ஒற்றுமையைக் கொண்டுள்ளன. குறிப்பாக, பாடல்கள் மக்களின் அக உணர்வுகளின் குரலாக விளங்குகின்றன. அதாவது, நாடகத்தில் இடம்பெறும் பாடல்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்புகளையும், துயரங்களையும், தாயக நினைவுகளையும் ஆழமாகப் பதிவு செய்வதோடு, அவர்களின் வலிகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் ஒரு கலைவடிவமாகவும் திகழ்கின்றன.

‘ஏலேலோ ஐலசா’ போன்ற கூட்டுப் பாடல்கள் வெறும் இசையாக இல்லாமல் மக்களின் துயரம், காத்திருப்பு, நம்பிக்கை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. போர்காலத்தில் மக்கள் தங்களின் வேதனைகளை நாட்டுப்புறப் பாடல்கள், ஒப்பாரி, கூட்டுப்பாடல்கள் வழியாகப் பகிர்ந்தனர். இதனால், நாடகத்தின் பாடல்கள் அக்கால சமூகத்தின் உணர்ச்சிச் சான்றுகளாக அமைகின்றன.

கடிதம் உயிருடன் இருப்பதற்கான அடையாளமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. 1980 - 1990-களில் தொலைபேசி வசதி அனைவருக்கும் கிடைக்காத சூழலில் கடிதமே உறவுகளை இணைக்கும் முக்கியமான தொடர்பு வழியாக இருந்தது. ‘கடிதம் வருது’ என்ற செய்தி வெறும் தகவல் அல்ல உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா?, எங்கே இருக்கிறார்கள்?, மீண்டும் சந்திக்க முடியுமா? என்ற ஏக்கத்தின் அடையாளமாகும். நாடகத்தில் கடிதம் வருவது நம்பிக்கையையும் சில சமயங்களில் துயரச் செய்தியையும் தாங்கி வருகிறது.

நிவாரணப் பொருட்களின் வருகை மிக முக்கியமான ஒரு அம்சமாக அந்தக் காலத்தில் காணப்பட்டதுடன் அவ்விட

யத்தை நாடக எழுத்துரு மிகவும் விழிப்புடன் எடுத்துரைக்கிறது. ‘கப்பல் வருது’, ‘அரிசி வருது’, ‘சீனி வருது’, ‘மருந்து வருது’ போன்ற வரிகள் போரின்போது நிவாரண உதவிகளை எதிர்பார்த்து வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை நினைவூட்டுகின்றன. அன்றாட வாழ்வின் மையமாகவே இந்த நிவாரணப் பொருட்கள் இருந்தன. அவை கிடைக்கும் நாளே பல குடும்பங்களுக்கு வாழ்வின் தொடர்ச்சியை உறுதி செய்த நாளாக இருந்தது.

உரையாடல்கள் மக்களின் அன்றாட வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன. நாடகத்தில் இடம்பெறும் உரையாடல்கள் எந்தவொரு வீரக்கதையையும் பேசவில்லை; மாறாக, அவை சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களையே வெளிப்படுத்துகின்றன. ‘உறவுகள் எங்கே?’, ‘இன்று என்ன சாப்பிடுவோம்?’, ‘எப்போது வீடு திரும்புவோம்?’ போன்ற கேள்விகள் அக்கால அகதிகளின் நிதர்சனமான உண்மைகளைப் பிரதிபலிக்கின்றன. இதன்மூலம், இந்நாடகம் வரலாற்றை அதிகார வர்க்கத்தின் பார்வையில் அல்லாமல், சாதாரண மக்களின் பார்வையில் பதிவு செய்கிறது.

எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைத் தாண்டி மீண்டும் எங்களால் வாழ முடியும் என்ற மனநிலையை, போர்க்காலச் சூழலில் இருந்தே மக்கள் கற்றுக்கொண்டனர் என்பதே உண்மையாகும். இறுதியில் மங்களப் பாடலுடன் நாடகம் முடிவடைவது, துயரங்களுக்கு மத்தியிலும் நம்பிக்கை ஒளி வீசும் அவர்களின் மீண்டெழும் மனவலியையும் எதிர்காலம் குறித்த நேர்மறையான எதிர்பார்ப்பையும் உணர்த்தும் அடையாளமாக அமைகிறது.

இந்நாடகம், எல்லாத் துயரங்களுக்கும் மத்தியிலும் வாழ்க்கை தொடர வேண்டும் என்ற ஆழமான எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இது துன்பங்களை மறுப்பதல்ல; மாறாக, வீழ்ந்த மனிதர்கள் மீண்டும் எழுந்து நிற்கும் மனவலிமையை வலியுறுத்தும் குறியீடாகும். போரால் சிதைந்த சமூகத்திற்கும் அவர்களின் எதிர்கால நம்பிக்கைகளுக்கும் இடையே ஒரு பாலமாகவே இந்த நிறைவுப் பகுதி அமைகிறது.

1986 முதல் 1990-கள் வரை இடம்பெற்ற வன்முறைகள், அலை அலையான இடப்பெயர்வுகள், அகதி முகாம்களின் உருவாக்கம், நிவாரணப் பொருட்களைச் சார்ந்த வாழ்க்கை மற்றும் குடும்பப் பிரிவுகள் ஆகியவை தமிழர் சமூகத்தின் கூட்டு நினைவில் ஆழமாகப் பதிந்துவிட்டன. 'அகதிகளின் கதை' போன்ற நாடகங்கள் இந்தத் துயர அனுபவங்களைக் கலைவடிவில் பதிவு செய்து, ஒரு தலைமுறையின் கூட்டு நினைவுகளையும் சமூக வரலாற்றையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்கின்றன. எனவே, இந்நாடகம் வெறும் பொழுதுபோக்கு சார்ந்த படைப்பு மட்டுமல்ல; போரின் மனிதாபிமானச் சீரழிவுகளையும் அதன் விளைவுகளையும் காலத்திற்கும் நினைவூட்டும் ஒரு முக்கிய பண்பாட்டு ஆவணமாகவும் கருதப்படுகிறது.

kesika.v@thaiveedu.com

■ ஓவியர் ஜீவா

# ஆணாகி பெண்ணாகி நின்றானவன்...

tg.theeban@gmail.com

மனிதர்களின் உடல், மனம், உணர்வு மற்றும் பாலின அடையாளம் ஆகியவை அனைத்தும் ஒரே தன்மையாக அமைவதில்லை. இயற்கையின் இப் பன்முகத்தன்மை வேறுபாடுகளில் ஒன்றுதான் திருநங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்ட பாலினப் பன்மைத்தன்மை (Gender Diversity) கொண்ட மனிதர்களின் வாழ்வியலாகும்.

ஒருவர் ஆண் உடலுடன் பிறந்து பின்னர் பெண் அடையாளத்தை உணர்வது எப்படி?', 'ஒருவர் பெண் உடலுடன் பிறந்து ஆண் அடையாளத்தை உணர்வது ஏன்?', 'இஃது இயல்பான பிறப்பு நிலையா அல்லது சமூக வளர்ப்பினால் ஏற்படுவதா?' என்ற வினாக்கள் சமூக மத்தியில் பரவலாக எழுகின்றன.

பொதுவாகக் குழந்தை பிறக்கும்போது, அதன் வெளிப்புற உடலமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆண் அல்லது பெண் என வகைப்படுத்தப்படுகின்றது. எனினும், சிலரிடம் பிறப்பில் குறிக்கப்பட்ட பாலினத்திற்கும், பின்னர் அவர்களுக்குள் இயல்பாக உருவாகும் அகப் பாலின அடையாளத்திற்கும் (Gender Identity) இடையே வேறுபாடு நிலவக்கூடும். உதாரணமாக, ஆண் உடலுடன் பிறந்த ஒருவர் தன்னைப் பெண்ணாகவே ஆழமாக உணரலாம்; பெண் உடலுடன் பிறந்த ஒருவர் தன்னை ஆணாக உணரலாம். இவர்களில் சிலர் தங்களை முறையே திருநங்கை, திருநம்பி எனத் தமக்கான சுயமரியாதை அடையாளங்களுடன் வெளிப்படுத்துகின்றனர். பாலின அடையாளம் உருவாவதற்கு ஒரேயொரு காரணம் மட்டுமே இருப்பதாக அறிவியல் உலகம் இதுவரை வரையறுக்கவில்லை. மாறாக, மரபியல் காரணிகள், கருப்பைக் காலத்தில் ஏற்படும் உயிரியல் மற்றும் ஹோர்மோன் செயற்பாடுகள், மூளையின் வளர்ச்சி நிலைகள் மற்றும் பல்வேறு உளவியல்-சமூகக் காரணிகள் ஒன்றோடொன்று பிணைந்து இயங்குவதையே ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஒரு குழந்தை சிறுவயதில் குறிப்பிட்ட பொம்மைகளுடன் விளையாடுவதோ, குறிப்பிட்ட உடைகளை விரும்புவதோ அல்லது பாரம்பரியமாக எதிர் பாலினத்திற்குரியதாகக் கருதப்படும் விளையாட்டுகளில் ஈடுபடுவதோ மட்டுமே அக்குழந்தையின் பாலின அடையாளத்தை உறுதிப்படுத்திவிடாது. உடை, விளையாட்டு மற்றும் வெளிப்பாட்டு நடத்தைகளைக் கொண்டு ஒரு குழந்தையின் எதிர்காலப் பாலின அடையாளத்தைத் தீர்மானிக்க முடியாது என்பதே அறிவியலின் முடிவாகும்.

சிலரிடம் இப்பாலின அடையாளம் சிறுவயதிலிருந்தே உறைந்திருக்கக்கூடும்; எனினும், அதனைச் சுயமரியாதையுடன் வெளிப்படுத்துவதற்கான பாதுகாப்பான சூழலும் துணிவும் அவர்களுக்குப் பின்னரே கிடைக்கப் பெறுகின்றன.

குடும்பம், சமூகம், மதம், கல்விக்கூடம், வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சூழல் மற்றும் சமூக அவமதிப்புகள் போன்ற பல்வகை நெருக்கடிகள் காரணமாக, ஒருவர் தனது உண்மையான அகப் பாலின அடையாளத்தை நீண்ட காலம் மறைத்துக்கொண்டு வாழும் நிலை ஏற்படலாம். பின்னர், தனக்கான பாதுகாப்பான சூழலும் சமூக ஆதரவும் கிடைக்கப்பெறும்போது அதனை வெளிப்

படுத்துகின்றனர். இங்குத் திருநங்கை அல்லது திருநம்பியாக வாழ்வது என்பது மனநோயோ அல்லது மருத்துவக் கோளாறோ அல்ல. உலகின் முதன்மையான மருத்துவ மற்றும் மனநல ஆராய்ச்சி அமைப்புகள் பாலின அடையாளப் பன்மைத்தன்மையை நோயாகக் கருதுவதில்லை என்பதைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்தியுள்ளன. அதேவேளை, திருநங்கைகள் மற்றும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்கள் சமூகத்தில் புதிதாக உருவான ஒரு குழுவினர் அல்லர். மனித சமூகத்தின் பல்வேறு காலகட்டங்களிலும், வெவ்வேறு பண்பாடுகளிலும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்கள் இயல்பாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை வரலாற்றுச் சான்றுகளும் இலக்கியங்களும் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக: சிதம்பரம் கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவிலையெல்லாம் கொள்ளையடித்து மதுரை கோவிலை கொளுத்திய அலாவுதீன் கில்ஜியின் தளபதியாக இருந்த மாலிக்காபூர் வரலாற்று ரீதியாகப் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட ஒரு ஆளுமையாகவே அடையாளப்படுத்தப்படுகின்றார். அக்காலகட்டங்களில் அரச அந்தப்புரங்களிலும் பாதுகாப்புப் பணிகளிலும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்கள் முதன்மைப் பங்காற்றியுள்ளனர் என்பதையும் வரலாறு பதிவு செய்துள்ளது.

தமிழ் இலக்கிய உலகில் கி. ராஜநாராயணன், சு. சமுத்திரம் போன்ற முன்னோடி எழுத்தாளர்கள் தமது படைப்புகளில் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்களின் வாழ்வியலை ஆழமாகப் பதிவு செய்துள்ளனர். வாழ்வியல் யதார்த்தத்தில், சமூகப் பின்னடைவுகள் மற்றும் பொருளாதாரச் சவால்கள் இருந்தபோதிலும், அன்புடைமையையும் நற்பண்புகளையும் கொண்ட பல பெற்றோர்கள் இவர்களைக் கைவிடாது அரவணைத்து வளர்க்கின்றனர். கல்வியிலும் திறன்களிலும் சிறந்து விளங்கி; வழக்கறிஞர்களாக, காவற்றுறை அதிகாரிகளாக, பேருந்து நடத்துநர்களாக, செய்தி வாசிப்பாளர்களாக, கலைத்துறை வல்லுநர்களாக எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்துச் சமூகத்தில் சுயமரியாதையுடன் வாழும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட பல ஆளுமைகள் இதற்குச் சிறந்த சான்றுகளாவர். அதுமட்டுமன்றி, முறையான கல்வி வாய்ப்புகள் கிட்டாத சூழலிலும் சுயதொழில்கள் மற்றும் வணிகங்களில் ஈடுபட்டுத் தன்னம்பிக்கையுடன் வாழ்வோரும் ஏராளமாவர். அதேவேளை, முறையான குடும்ப ஆதரவின்மை, சமூகப் புறக்கணிப்பு மற்றும் வேலைவாய்ப்பு மறுப்பு போன்ற சமூகக் கட்டமைப்பு ரீதியான நெருக்கடிகள் காரணமாக, சிலர் விளிம்புநிலைத் தொழில்களிலும் அல்லது பொது இடங்களில் உரிமைகோரல் நடத்தைகளிலும் ஈடுபடும் நிலை ஏற்படுகின்றது. இத்தகைய சூழல்கள் தவறான புரிதல்களையும் விலகல் மனப்பான்மையையும் சிலருக்குத் தோற்றுவிக்கின்றன. எனினும், இஃது அவர்களின் தனிப்பட்ட விருப்பமன்று; மாறாக, சமூகம் அவர்களைப் புறந்தள்ளுவதன் விளைவாக ஏற்படும் வாழ்வாதார நெருக்கடியே என்பதைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். பண்பாட்டு ரீதியாக நோக்குகையில், வடஇந்தியச் சமூகங்களில் திருநங்கைகள் மற்றும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்களின் ஆசிகளுக்குச் சிறப்பு மரியாதை அளிக்கப்படும் பாரம்பரியம் காணப்படுகின்றது. மங்கல நிகழ்வுகள் மற்றும் குழந்தைப்பேறு தருணங்களில் இவர்களின் வாழ்த்துகளைப் பெறுவது சுபநிகழ்வாகக் கருதப்படுகின்றது. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டுப் பழக்கம் பெருமளவில் பரவலாக்கப்படவில்லை எனினும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கூவாகம் கூத்தாண்டவர் கோவில் திருவிழா இவர்களின் முதன்மையான ஆன்மிக மற்றும் பண்பாட்டுச் சங்கம நிகழ்வாக விளங்குகின்றது. உலகம் முழுவதிலுமிருந்து திரளான பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்கள் ஒன்று கூடும் இந்நிகழ்வை, முதன்மைப் புகைப்படக் கலைஞர்களும் ஊடகவியலாளர்களும் ஆண்டுதோறும் ஆவணப்படுத்தி வருகின்றனர்.

திரைப்படத் துறையிலும் திரைக்கலை வடிவங்களிலும் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்களின் பங்களிப்பையும் சித்தரிப்புகளையும் நோக்குகையில், வரலாற்று ரீதியாகப் பல்வேறு திரைப்படங்களில் திருநங்கைகள், திருநம்பிகள் மற்றும் பால்புதுமையினர் (Queer / LGBTQIA+) கதாபாத்திரங்களாக இடம்பெற்று வந்துள்ளனர். எனினும், கடந்த காலங்களில் பெரும்பாலான திரைப்படங்கள் இக்கதாபாத்திரங்களைக் கேலிக்கூத்தான நகைச்சுவை வேடங்களாகவோ அல்லது எதிர்மறையான வில்லன் பாத்திரங்களாகவோ மட்டுமே சித்தரிக்கும் போக்கினைக் கொண்டிருந்தன. மிக அரிதாகவே சில திரைப்படங்களில் கண்ணியமான மற்றும் முதன்மையான வேடங்களில் இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றன. ஹிந்தித் திரையுலகில் அசுதோஷ் ராணா, சதாசிவ் அம்ரபுர்க்கர், சுஷ்மிதா சென், நவாஸுத்தின் சித்திக் போன்றோர் இந்த வேடங்களில் பிரமாதப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக சதாசிவ் அம்ரபுர்க்கர் எதிர்மறை வேடத்தில் நடித்த ‘சடக்’ மிகவும் பேசப்பட்டது. இது தமிழில் ‘அப்பு’ என்ற பெயரில் வெளியானபோது இதே வேடத்தை பிரகாஷ் ராஜ் ஏற்று நடித்தார். தமிழில் ‘தூக்கு தூக்கி’ என்ற பழைய படத்தில் சிவாஜி ஒரு காட்சியில் சேலை வியாபாரியாக பெரிய மீசையுடன், ஆனால் பெண்மைக்கேயுரிய நளினத்துடன் திருநங்கை சாயலில் நடித்திருப்பார். ‘பில்லா’வில் ரஜினி இப்படி ஒரு தோற்றத்தில் அறிமுகமாகி பின்னர் அவருக்கேயுரிய பாணியில் நடிப்பார். ‘வீர அபிமன்யு’ படத்தில்

பாலாஜி வனவாசத்தில் இருக்கும் அர்ஜுனனாக நளினத்துடன் நடிப்பார். லாரன்ஸ் இயக்கிய முனி படங்களில் ஒன்றில் சரத்குமார் புடவையை கட்டிக்கொண்டு ஒரு முரட்டு திருநங்கையாக தோன்றி பலரை சிதறடிப்பார். சூப்பர் டீலக்ஸ் படத்தில் விஜய் சேதுபதிக்கு இந்த வேடம்தான். தொலைக்காட்சி தொடரான 'பாவக்கதைகளில்' காளிதாஸ் ஜெயராம் ஓர் இளம் பால்மாற்று இளைஞனாக சிறப்பாக நடித்திருப்பார். பழைய படங்களில் சுருளிராஜன் இந்த வேடத்தில் தோன்றினால் வெடிச்சிரிப்பு நிச்சயம். முரட்டுக்காளை புதிய பதிப்பில் விவேக்குக்கு இதே வேடம்தான்! திரைப்படங்களில் பாலினப் பன்மைத்தன்மை கொண்ட மனிதர்களின் மற்றும் பால்புதுமையினரின் கதாபாத்திரச் சித்தரிப்புகள் தொடர்பில் நோக்குகையில், ஷபானா ஆஸ்மி மற்றும் நந்திதா தாஸ் முதன்மைப் பாத்திரங்களில் நடித்த 'ஃபயர்' (Fire) போன்ற சர்வதேச ரீதியில் கவனம் பெற்ற திரைப்படங்கள் தமிழ்நாட்டிலும் பரவலான வரவேற்பைப் பெற்றன. அதேபோன்று, மலையாளத் திரைத்துறையின் முன்னணி நடிகரான மம்மூட்டி போன்ற மூத்த ஆளுமைகளும் கூட இத்தகைய பாலின உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கதாபாத்திரங்களில் நடித்துத் திரைப்படங்களில் புதிய உரையாடல்களுக்கான களத்தைத் திறந்துவிட்டுள்ளனர்.

ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன் 2005-இல் 'நவரசா' என்ற பெயரில் ஒரு திரைப்படம் இயக்கினார். பால் மாற்றத்திற்காக ஏங்கும் ஒருவரை முக்கிய கதாபாத்திரத்தில் பொருத்தியிருந்தார். இதை கோவையில் உள்ள திருநங்கைகளை அழைத்து வந்து திரையிட்டோம். அதற்கு பிறகு நான் காணும், இந்த கருவைக் கொண்டிருக்கும் ஒரு திரைப்படம் 'டோரதி'. இதில், ஆண் உடலுடன் பிறந்த ஒருவர் தனது அகப் பாலின அடையாளத்தை உணர்ந்து திருநங்கையாக வெளிப்படும்போது, அதனைத் தமது குடும்பத்தின் கௌரவப் பிரச்சினையாகக் கருதி, அவரைக் கொலை செய்யத் துணியும் அளவுக்குத் தீவிரமான வன்முறைப் போக்குடன் கதை நகர்கின்றது. இங்கு வேடிக்கை என்னவெனில், சுயநலமும் ஒழுக்கயீனங்களும் நிறைந்த குடும்பச் சூழலைக் கொண்ட பாத்திரங்களே, இத்தகைய இயல்பான பாலின அடையாள வெளிப்பாட்டின் போது மட்டும் 'குடும்பக் கௌரவத்தைப்' பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு இக்கொடூரக் குற்றங்களை நியாயப்படுத்த முற்படுவதாகக் காட்டப்படுகின்றது.

இந்த திரைப்படம் வெளியானதிலிருந்து சமூக வலைத்தளங்களில் இந்த படத்திற்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் அனைவரும் மோதிக்கொண்டிருக்கின்றனர். கதையை சுருக்கமாக சொன்னால், இரண்டு வெவ்வேறு சாதியை சேர்ந்த சிறுவர்கள் ஆரம்பப் பள்ளி நாட்களிலிருந்தே நெருங்கிய நண்பர்களாக இருக்கிறார்கள். இவர்களில் ஒருவன் ப்ரூஸ் லீ ஆராதகன். குருவைப் போலவே அலறிக்கொண்டு பாய்ந்து பாய்ந்து எதிரிகளைத் தாக்கக்கூடிய திராணி படைத்தவன். பெயர் சுப்பு. வட்டித் தொழில் செய்யும் ஒரு முரட்டு ரவுடியின் மகன். இன்னொருவன் கொஞ்சம் பொறுமையானவன். பணியாரம் சுட்டு விற்கும் ஓர் தனித்து வாழும் ஏழை தாயின் மகன். இவன் கார்த்தி. சுப்புவுக்கு பெரிய வயது இடைவெளி கொண்ட இரண்டு அண்ணன்கள். முரடர்கள். குடிகாரர்கள். பெண்களே இல்லாத வீடு.

சிறுவர்கள் வளர்ந்து சுப்புவின் தந்தை விசில் வீரய்யாவின் அடியாட்களாக மாறி அடிதடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இளம் வயதில் ஆவேசமாக இருந்த சுப்பு இப்போது கொஞ்சம் நிதானமாக இருக்கிறான். நிதானமாக இருந்த கார்த்தி இப்போது மிகவும் வேகமான சண்டைக்காரனாகி விடுகிறான். சுப்புவின் அண்ணன்களில் ஒருவன் திடீரென்று கேரளாவிலிருந்து ஓர் அழகிய மலையாளப்பெண்ணை மணந்து வீட்டுக்கு அழைத்து வந்து விடுகிறான். வீட்டில் பெண்மணம் வீசுகிறது. இந்துப்பெண்ணாக இருந்தாலும் அவளுடைய பெயர் டோரதி. அவள் தந்தை வெளிநாட்டில் பணி புரிந்து தாயகம் திரும்பியதால் இப்படி பெயர் வைத்ததாக ஒரு காரணத்தையும் சொல்கிறாள். இளைஞர்கள் இருவரும் அவளுடன் நெருங்கிப் பழகுகின்றனர். சுப்பு மிகவும் நெருங்கி அவளுடன் சேர்ந்து வீட்டு வேலைகளை செய்ய ஆரம்பிக்கிறான், பாத்திரங்கள் துலக்குகிறான். வீரய்யாவுக்கு இதெல்லாம் சுத்தமாக பிடிப்பதில்லை.

ஒரு நாள் திடீரென்று டோரதி அவர்கள் வீட்டு முற்றத்தில் தூக்கில் தொங்குகிறாள். வீரய்யா மீது ரத்தக்கறைகள் இருந்தாலும் தற்கொலை என்று முடிவு செய்துவிடுகிறார்கள். இதை தொடர்ந்த சம்பவங்களால் ஊருக்குள் ஒரு கொலை நிகழ்ந்து, கார்த்தி தலைமறைவாக வடநாட்டுக்கு அனுப்பப்படுகிறான். இத்தனை நாள் சுப்புவின் உள்ளே மறைந்திருந்த பெண்மையின் சாயல் இப்போது வெளிப்படுகிறது. முகத்தை மழித்து பெண்களின் உடையை அணிந்துகொள்கிறான். டோரதியின் மரணமே இவனை இப்படி தூண்டிவிட்டிருக்கிறது என்று நமக்கு விளக்கப்படுகிறது. டோரதியிடமும் தன் இன்னொரு ஸ்நேகிதியிடமும்தான் தன் நிலையை சொல்லியிருக்கிறான். தன் பெயரையும் டோரதி என்று மாற்றிக்கொண்டு வீட்டை விட்டே ஓடிப்போகிறான்.

குடும்ப மானம் காக்க அவனைத் தீர்த்துக்கட்ட கார்த்தியையே பணிக்கிறார்கள். படம் நீண்ட வடநாட்டுப் பயணங்களூடே இரு நண்பர்களையும் ஒருவரை ஒருவர் உணர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது. படத்தின் இறுதியில் முழுப்பெண் அலங்காரங்களோடு வரும் சுப்புவை உதடுகளில் முத்தமிட்டு தழுவிக் கொள்கிறான் கார்த்தி.

இளையராஜாவின் இசையும் திருவின் ஒளிப்பதிவும் இந்தத் திரைப்படத்தை வேறு உயரங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. படம் பார்ப்பவர்களுக்கு பல கேள்விகள் எழலாம். சிறுவயதிலிருந்தே தோழமையோடு ஒன்றாக வளர்ந்தவர்களில் ஒருவன் பெண் கோலத்தில் அலங்காரமாக வரும்போது, இன்னொருவன் உதட்டோடு உதடு சேர்ந்து முத்தம் தருவது அவசியமா என்பது அவற்றில் ஒன்று. அப்படியென்றால் நட்பைவிட காமம் அங்கு கோலோச்சுகிறது என்று எடுத்துக்கொள்ளலாமா என்ற கேள்வியும் எழுகிறது.

ரத்தக்களரி மிகுந்த வன்முறைக்காடாக திரியும் இந்தப் படம், திருநங்கைகளின் மீது பரிவான பார்வை கொண்டிருப்பதால், நியாயமான விமர்சனங்களை முன்வைப்போரும் இரக்கமற்றவர்களாகச் சித்தரிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது.

மதுரை என்றாலே வீச்சரிவாள், வெட்டு, கொலை என்று திரைப்படங்களில் இருந்தது போக இந்தப் படத்தில் அதிக காட்சிகளில் இடம்பெறுவது பரோட்டாவும் சால்னாவும்தான். இதற்கு இயக்குநர் ஏதேனும் குறியீடு வைத்திருக்கிறாரா தெரியவில்லை!

jeeva@thaiveedu.com

சொர்ணவேல்

# விலகிய பார்வையும் விடுபடும் வெளியும் : கார்ல் தியோடோர் டிரேயரின் வசப்படாத சினிமா

## இயல்புமீறிய முரண்:

திரைப்பட வரலாற்றின் பக்கங்களில் கார்ல் தியோடோர் டிரேயர் (Carl Theodor Dreyer) என்ற பெயரை உச்சரிக்கும்போதெல்லாம் ஒரு விசித்திரமான தயக்கமும் தடுமாற்றமும் உடன் படர்கிறது. இக்கலையின் மிக உன்னதமான கலைஞர்களில் ஒருவராக உலகளாவிய ரீதியில் அவர் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், திரைப்பட வரலாற்றுப் பெருங்கதையாடல்களின் பிரதான நீரோட்டப் பாதைகளில் அவருக்குரிய ஓரிடம் வகுக்கப்படுவதே இல்லை. அவர் எந்தவொரு இயக்கத்தையும் சார்ந்தவர் அல்லர்; எவ்வித அழகியல் மரபுவழிப் பள்ளியையும் (school of thought) நிறுவியவரும் அல்லர். 1912 - 1913 காலகட்டத்தில் திரைத்துறையில் நுழைந்து, இடைத் தலைப்புகள் (intertitles) எழுதுபவராகவும், திரைக்கதைச் செப்பனிடுபவராகவும் தன் பயணத்தைத் தொடங்கி, 1918 முதல் 1964 வரை (1918-இல் உருவாக்கப்பட்டு 1919-இல் வெளியான பிரசிடெண்டன் [Præsidenten] தொடங்கி) பதினான்கு முழுநீளத் திரைப்படங்களை இயக்கியவர். அவர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்தான்; ஆனால் டேனிஷ் திரைப்பட வரலாற்றால் அவரைத் தனக்குள் முழுமையாகப் பொருத்திக் கொள்ள முடிவதில்லை. சுவீடன், நார்வே, ஜேர்மனி, பிரான்ஸ் எனப் பல தேசங்களில் அவர் படங்களை உருவாக்கினார்; எனினும் அந்தத் தேசியத் திரை மரபுகளில் எதிலும் அவர் ஐக்கியமாகிவிடவில்லை. திரைப்படக் கலையின் மாபெரும் ஆன்மிகப் படைப்பாளியாக அவர் போற்றப்படுகிறார்; ஆனால் எஞ்சியுள்ள அவரது நேர்காணல் களிலோ, கட்டுரைகளிலோ தன் தனிப்பட்ட மதநம்பிக்கை குறித்தோ திருச்சபைக் கோட்பாட்டுப் பிணைப்புகள் குறித்தோ வெளிப்படையான வாக்குமூலங்களை அவர் முன்வைத்ததாகத் தெரியவில்லை. மானுட முகத்தின் ஒப்பற்ற தீர்க்கதரிசி என்று அவர் கொண்டாடப்படுகிறார்; ஆனால் அவரது இறுதித் திரைப்படமோ மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்க்க மறுத்து விலகும் காட்சிகளாலேயே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. டிரேயரை ஒரு தர்க்க பூர்வ, தொடர்ச்சியான முழுமையாகக் கட்டமைக்க முயலும் ஒவ்வொரு வரலாற்று வரைவும், திரையில் தோன்றும் காட்சிகளின் பெரும் பகுதியை ஏதோவொரு சமரச சமாதானத்தின் மூலம் ஒதுக்கித் தள்ள வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறது.

இங்கு எழும் முரண்பாடுகளும் ஒத்திசைவின்மையுமே அவரது கலையின் மையப்புள்ளி என்பதே இக்கட்டுரையின் வாதம். டிரேயரின் தனித்துவம் என்பது எந்தவொரு கோட்பாட்டுக்குள்ளும் அவர் தன்வயப்பட்டு அடங்கிவிடாத கட்டமைப்புரீதியான தனித் தன்மையிலேயே (structural unassimilability) குடிகொண்டுள்ளது. அவரை வாசிப்புக்கு உகந்தவராக, எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவராக மாற்ற முயன்ற விமர்சன மரபின் நீண்டகால உழைப்பு என்பது, உண்மையில் திரைப் படங்களின் ஆன்மாவையே காவுகொடுத்துவிட்டு அவரை மெல்லப் பழக் கப்படுத்தி வீட்டுக்குள் அடக்க முயன்ற

prasadbatti@gmail.com

ஒரு போலி முயற்சியேயாகும் (labour of domestication). டேவிட் போர்ட்வெல் (David Bordwell) இச்சிந்தனையை எவராலும் எளிதில் மறுக்க முடியாத கூர்மையோடு முன்வைத்தார்: 'கார்ல்-தியோடோர் டிரேயரின் திரைப் படங்களின் உள்ளார்ந்த ஈர்ப்பு என்பது அவற்றின் கருத்தியல் ஒருமையிலோ ஒரு தனித்துவமான சுய தரிசனத்தின் சாட்சியத்திலோ பொதிந்திருக்கவில்லை'. போர்ட்வெல் இப்புதிய பார்வையை முன்வைத்த காலகட்டத்தில் செல்வாக்கு செலுத்திய மூன்று பிரதான வாசிப்பு முறைகள் - டாம் மில்னேவின் (Tom Milne) தி சினிமா ஆஃப் கார்ல் டிரேயர் (1971) தொடங்கி, பின்னர் ரேமண்ட் கார்னியின் (Raymond Carney) ஸ்பீக்கிங் தி லாங்குவேஜ் ஆஃப் டிசையர் (1989) வரை நீண்ட மானுடவாதப் பார்வை, இறையியல் பார்வை, மற்றும் அழகியல்வாதம் ஆகிய மூன்றும் - 'உட்கட்டமைப்பு ஒருமை மற்றும் தொடர்ச்சியான இசைவு என்னும் அனுமானத்தின் மீதே வேரூன்றியிருந்தன; மேலும் அவை ஒவ்வொன்றும் டிரேயரின் படைப்புகளின் அப்பட்டமான விசித்திரத்தை ஒன்று புறக்கணித்தன, அல்லது சமாதானம் கூறி விலக்கின'. அவரது இறுதித் தீர்ப்பு விமர்சன இலக்கியத்திலேயே மிகத் துல்லியமான வாக்கியமாக இன்றும் நிலைத்து நிற்கிறது: 'செல்வாக்குமிக்க விளக்கங்கள் மிக அதிகமாக விளக்குகின்றன; ஆனால் மிகக் குறைவாகவே பகுத்தாய்கின்றன. திரைப்பட விமர்சனத்தின் தேய்ந்துபோன பொதுப்படைச் சொற்களைப் பயன்படுத்தி, நாம் டிரேயரின் திரைப் படங்களை எந்தவிதக் குடைச்சலுமின்றிச் சௌகரியமாக வீட்டுக்குள் பழக்கப்படுத்திவிட்டோம்'.

போர்ட்வெல் பயணிக்க மறுத்த மூன்று திசைகளில் அவரது வாதத்தை நான் முன்னெடுத்துச் செல்கிறேன்; அதே வேளையில் ஒரு புள்ளியில் அவரோடு முரண்பட்டும் நிற்கிறேன். திரைப்பட ஆசிரியத்துவத்தைப் (authorship) பொறுத்தவரை, டிரேயர் அக்கோட்பாட்டின் மிக ஆழமான எல்லையோரப் புள்ளி (limit case) என்று வாதிடுகிறேன். அவர் அக்கோட்பாட்டை உறுதிப்படுத்துகிறார் என்பதற்காக அல்ல; மாறாக, ஆசிரியர் கோட்பாடு எவற்றை எல்லாம் மூடி மறைப்பதற்காக உருவாக்கப் பட்டதோ, அவற்றையெல்லாம் அவரது திரைப் படங்கள் அம்பலப்படுத்தி விடுகின்றன என்பதற்காகவே. மதம் மற்றும் ஆன்மீகம் குறித்த தளத்தில் - மெலானி ரைட் (Melanie Wright), ஸ்டீவ் நோலன் (Steve Nolan) ஆகியோரின் பார்வைகளைத் துணைக் கொண்டும், பால் ஷ்ரேடர் (Paul Schrader) கட்டமைத்த 'அனுபவ எல்லையைக் கடந்த பாணி' (transcendental style) என்னும் மரபுக்கு எதிராகவும் - டிரேயரின் திரைப்படங்களின் ஆன்மிக முக்கியத்துவம் என்பது அவற்றின் உள்ளடக்கத்தில் இல்லை, மாறாக மதம் என்பது அவற்றின் வடிவத்திற்கு என்ன செய்கிறது என்பதிலேயே அடங்கியுள்ளது என்று வாதிடுகிறேன்: எந்தவொரு வழக்கமான உலகியல் அல்லது சமூகக் காரணங்களாலும் தாங்கிப் பிடிக்க முடியாத ஒரு தீவிர வடிவ ஒழுங்கைத் திரைமொழியில் சாத்தியமாக் குவதற்கான ஒரு கதையாடல் மற்றும் நிறுவனப் போலிச்சாக்காகவே (narrative and institutional alibi) மதம் அங்கு இயங்குகிறது. இறுதியாக, அவரது வரலாற்றுத் தாக்கம் குறித்து வாதிடும்போது, டிரேயரின் செல்வாக்கு என்பது மரபான நேர்மறைப் பின்பற்றுதல் என்ற வடிவில் அமையாமல், ஒருவித எதிர்நிலைச் சவாலாகவே (negative influence) வெளிப்படுகிறது; இங்மார் பெர்க்மென்னுடன் (Ingmar Bergman) வழக்கமாக அவரை இணைத்து நிகழ்த்தப்படும் ஒப்புநோக்குதல் என்பது, அவ்விருவரின் வடிவவியல் வேறுபாடுகளை வெளிக்கொணர்வதாலேயே மிக முக்கியமானதாக மாறுகிறது.

போர்ட்வெல்லின் அழகியல் சிக்கனம் /கண்டிப்புடனான(formalist austerity) எனது முரண்பாடு என்பது அடுத்த கட்டமாக எழுகிறது. அவரது வடிவவாத முறை யானது ஓர்டெட் (Ordet) திரைப் படத்தின் அற்புதத்தை வெறும் சேர்மான உத்தியாகவும் (compositional device), மூனின் கண்ணீரை ஒரு கதையாடல் செயல்பாடாகவும் (narrative function) மட்டுமே அணுகக் கோருகிறது; அக்கோட்பாட்டிற்கு அத்தகைய அணுகுமுறைக்கான வலிமை இருக்கிறது என்பதே அதன் தனிச் சிறப்பு. ஆயினும்,

நான் மைய உதாரணங்களாக எடுத்துக்கொள்ளும் இரண்டு திரைப்படங்கள் - லா பாசியோன் து ழான் தாக் (தி பேஷன் ஆஃப் ஜோன் ஆஃப் ஆர்க் - ஜோன் ஆஃப் ஆர்க்கின் பேரார்வப் பாடுகள் / La Passion de Jeanne d'Arc / The Passion of Joan of Arc, 1928) மற்றும் கெர்ட்ரூட் (Gertrud, 1964) - செவ்வியல் திரை ஒழுங்கி லிருந்து பிறழ்ந்து நிற்கும் பகிரப்பட்ட விலகலால் மட்டுமல்லாமல், இன்னும் ஆழமான வேறொரு இழை யாலும் பிணைக்கப்பட்டுள்ளன. இவ்விரு திரைப்படங் களுமே முற்றிலும் அறுதியான (ab- solute) ஒரு பேருண் மையை உரைக்கும், ஆனால் எவராலும் நம்பப்படாத, அதே சமயம் அவர்தம் அறுதிநிலையைத் திரைப்படம் நியாயப்படுத்தவோ விளக்கவோ செய்யாத பெண்களைப் பற்றிய படைப்புகள். அங்குதான் டிரேயரின் வாழ்க்கை வரலாற்றுத் தொன்மமும், அவரது சமய உந்துதலும், வடிவவாதத் தீவிரமும் எவ்வித முரண்பாடுகளுமின்றி ஒரு முகமாகக் கைகோர்க்கின்றன.




## வரையறைகளுக்கு உட்படாத திரைவாழ்க்கை:

டிரேயர் 1889 பெப்பிரவரி 3 அன்று கோபன்ஹேகனில், திருமணத்திற்கு வெளியே பிறந்த ஒரு சுவீடியப் பணிப்பெண்ணின் மகனாகப் பிறந்தார். இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு அவரது தாய் மறைந்த சூழலில், அவர் தத்தெடுக்கப்பட்ட குடும்பச் சூழலை அதன் கடுமையான உணர்ச்சியற்ற குளிர்ச்சிக்காகவே அவர் நினைவுகூர்ந்தார். நீதிமன்றச் செய்தியாளர், வானூர்திப் போக்குவரத்து ஆய்வாளர், நாடக விமர்சகர் எனப் பத்திரிகைத்துறையின் வழியே பக்கவாட்டு வாயிலாகத் திரைப்படத்துறைக்குள் நுழைந்த அவர், 1912 வாக்கில் திரைக்கதை எழுதத் தொடங்கி, 1913-இல் நோர்டிஸ்க் ஃபிலிம்ஸ் கொம்பானி (Nordisk Films Kompagni) நிறுவனத்தில் இடைத் தலைப்புகள் எழுதுபவராகவும், பின்னர் தொகுப்பா ளராகவும், திரைக்கதை ஆசிரியராகவும் சேர்ந்தார். தன் வாழ்நாள் முழுவதும் சொல்லையும் காட்சியையும் பரஸ்பர எதிரிகளாகக் கருதி நடத்திய ஒரு படைப்பாளிக்கு இதுவே ஆகச்சிறந்த களப்பயிற்சியாக அமை ந்தது.

அவர் காலடி எடுத்துவைத்த அந்தத் தயாரிப்புத் துறை, மிகக் குறுகிய காலத்திற்குள் உலகின் மாபெரும் தொழில் சாம்ராஜ்யங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது: ஓலே ஓல்சன் (Ole Olsen) தலைமையிலான நோர்டிஸ்க் நிறுவனம் 1913-ஆம் ஆண்டின் உச்சத்தில் சுமார் 1,400 ஊழியர்களைக் கொண்டி ருந்தது; 1912-இல் டென்மார்க்கில் தயாரிக்கப்பட்ட 160 படங்களில் 103 படங்களை அந்நிறுவனமே உருவாக் கியது. ஆனால் டிரேயர் இயக்கு நராகக் களம் இறங்கிய தருணத்தில், அந்நிறுவனத்தின் வீழ்ச்சி தொடங்கி விட்டது: 'டிரேயர் தன் பங்கிற்கு நோர்டிஸ்க் நிறுவனத்திற்காக இரண்டு படங்களை மட்டுமே இயக்கினார்; அதுவும் அந்நிறுவனத்தின் சரிவு தொடங்கிய பின்னரே நிகழ்ந்தது'. அவரது முதன்மையான முடிவுரை இவ்வாறு தொடர்கிறது:

'அக்காலகட்டத்தில் சர்வதேசத் திரைப்பட வரலாற்றுப் பெருவரிசையில் (canon) இணைக்கப்பட்ட இரு இயக்குநர் களான பென்யமின் கிறிஸ்டென்சென் (Benjamin Chris- tensen) மற்றும் கார்ல் தியோடோர் டிரேயர் ஆகிய இருவரும், வியக்கத்தக்க வகையில், அந்தப் பெரும் தயாரிப்பு அரக்கனோடு ஒப்பிடும்போது ஓரங்கட்டப்பட்ட தனித்துவ நிகழ்வுகளாகவே (marginal phenomena) விளங்கினர்.'

இக்கட்டுரை பின்தொடரவிருக்கும் ஒப்பீட்டுக்கு முற்றிலும் தீர்க்கமான ஒரு வரியை அவர் மேலும் சேர்க்கிறார்: 'ஒரு அசைக்க முடியாத மைய ஆளுமையாக பெர்க்மென் வகித்த இடத்தைப் போன்றதொரு இடத்தை டிரேயர் ஒருபோதும் எட்டவே இல்லை'. டென்மார்க்கின் பொற்காலம் 1910-களின் முதல் பாதியிலேயே நிகழ்ந்து முடிந்துவிட்டது; டிரேயர் அதில் பங் கெடுக்கவே இல்லை. பிற்காலத்தில் மதிப்பிற்குரிய நோர்டிக் சினிமாவின் அடையாளமாக உருவெடுத்த இலக் கியத் தழுவல் உத்தி என்பது சுவீடனின் கொள்கையாகவே இருந்தது; எனவே டிரேயரின் பயணப் பாதை என்பது 'சுவீடனில் நிகழ்ந்ததற்கு முற்றிலும் நேர் எதிர்திசையிலேயே பயணித் தது'. அவர் உடனடியாகத் தேசங்களை விட்டு வெளியேற நேர்ந்தது- சுவீடனில் பிரேஸ்தென்கான் (Präs- tänkan, 1920), ஜேர்மனியில் டீ

கெஸைக்னெட்டன் (Die Gezeichneten) மற்றும் மைக்கேல் (Michael), நார்வேயில் குளோம்டால்ஸ்ப்ரூடன் (Glomdalsbruden, 1926). பாரிஸில் து ஸ்கால் எரே தின் ஹுஸ்ட்ரு (Du skal ære din hustru) பெற்ற பெரும் வெற்றியே, லா பாசியோன் து ழான் தாக் திரைப்படத்திற்குப் பின்னால் இருந்த சொசைட்டி ஜெனரல் டெ ஃபிலிம்ஸ் (Société Générale de Films) நிறுவனத்தின் அழைப்பை அவருக்குப் பெற்றுத் தந்தது.

டிரேயரின் சமகாலத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட அனைத்து முக்கிய ஐரோப்பிய இயக்குநர்களும் ஹாலிவுட்டை நோக்கிப் புலம்பெயர்ந்த ஒரு வரலாற்றுப் பரப்பை டிரேயரின் திரைவாழ்க்கை தழுவி நிற்கிறது என்பதை போர்ட்வெல் சுட்டிக்காட்டுகிறார் - 'முர்னாவ் (Murnau), லாங் (Lang), கிறிஸ்டென்சென், விக்தொர் ஷோஸ்ட்ரோம் (Victor Sjöström), மோரிட்ஸ் ஸ்டில்லர் (Mauritz Stiller), ஓஃபுல்ஸ் (Ophüls), ழான் ரனுவா (Jean Renoir), லூயி புனுவல் (Luis Buñuel) என அனைவரும் சென்றனர்'. இதனைத் தொடர்ந்து, 'அவரது அசாதாரணமான தனிமைக்காக வேனும், டிரேயர் வரலாற்று ரீதியாக முதன்மை பெறுகிறார்' என்று போர்ட்வெல் முடிவு செய்கிறார். அந்தத் தனிமை வெறும் புவியியல் சார்ந்தது மட்டுமல்ல. சுயாதீனப் படத்தயாரிப்பு என்பது சாத்தியமே இல்லா திருந்த ஒரு காலகட்ட த்தில் டிரேயர் தனித்து நின்று இயங்கினார்; அதனால் தான் 1932 முதல் 1954 வரையிலான இருபத்திரண்டு ஆண்டுகளில் அவரால் இர ண்டு படங்களை மட்டுமே இயக்க முடிந்தது. இது அவரை 'ஒரு வகையில், ப்ரெஸ்ஸான் (Robert Bresson), தாத்தி (Jacques Tati), ஃபெலினி (Federico Fellini), அந்தோனியோனி (Michelangelo Antonioni) ஆகியோ ரின் தலைமுறையை முன்கூட்டியே உணர்ந்து, தன் காலத்திற்கு இருபது ஆண்டுகள் முன்னோடியாக நிற்க வைத்தது' என்ற போதிலும், அந்த நீண்ட மௌனம் அவரது சொந்த விருப்பத்தால் உருவானதல்ல, மாறாகச் சூழலால் வற்புறுத்தப்பட்டது என்ற உண்மையை நாம் மறைத்துவிட முடியாது. 1930-களை அவர் நீதிமன்றச் செய்திகளை எழுதியே கழித்தார். 1943-இல் மீண்டும் முழுநீளப் படங்களுக்குத் திரும்பியதற்குக் காரணம், அவரது சொந்த வார்த்தைகளில் சொல்வதானால், 'நீர்வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு, எல்லைகள் அனைத்தும் முடக்கப்பட்டிருந்த சூழலில், நான் எவ்வாறு மீண்டும் திரைப்படங்களுக்குள் இயங்க முடியும் என்று யோசித்தேன்' என்பதே.

அவரது விசித்திரத்தின் மறுபாதி, அறிவுசார் தளத்தில் பொதிந்துள்ளது. எல்லாக் கோட்பாட்டு அளவீடுக ளின்படியும் டிரேயர் ஒரு பழமைவாதியாகவே விளங் கினார். திரைப்படம் என்பது 'படங்களின் வடிவத்தில் நாவலும் நாடகமும் சங்கமிக்கும் ஒரு கலவையாக' அமைய வேண்டும் என்று அவர் விரும்பினார்; 'கலை என்பது புற வாழ்க்கையை அல்ல, அக வாழ்க்கையையே பிரதிபலிக்க வேண்டும்' என்று திடமாக நம்பினார்; 1920-களின் மகத்தான கோட்பாட்டுத் திட்டங்களான தூய சினிமா (pure cinema), ஃபோட்டோஜெனீ (photogénie), கலை களின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கு எதிராக, 'சினிமா என்பது இக்கலைகளின் ஒரு நீட்சி மட்டுமே' என்று பிடிவாதமாக வாதிட்டார். போர்ட்வெல்லின் முழு நூலையும் கட்டமைக்கும் முடிவுரையே இக்கட்டுரையின் ஆதாரத் தளமாகவும் விளங்குகிறது: 'கண்டிப்பாகப் பேசப்போனால், டிரேயர் தன் சமகாலத்தவர்களோடு கூடச் சமகாலத்தவராக வாழவில்லை; ஏனெனில் அவரது சிந்தனை அவரை மௌனத் திரைப்படக் கோட்பாட்டின் பிரதான மரபிலிருந்து முற்றிலும் அந்நியப்படுத்தித் தனியே நிறுத்தியது'; மேலும், 'ஒரு பழமைவாத அழகியலோடும், கலைஞரைப் பற்றிய ஒரு ரோமாண்டிசிசக் கருத்தாக்கத்தை முன்மாதிரியாகக் கொண்ட தயாரிப்பு முறையோடும் இயங்கி, டிரேயர் தனது காலகட்டத்தின் ஆகச்சிறந்த தீவிர நவீனத்துவப் படங் களை உருவாக்கினார்'. அவர் ஷாட்டின் புதிய இயக்க வியல் தத்துவங்களை உருவாக்கவில்லை; புனைகதைத் திரைப்படங்களைத் தாக்கவில்லை; அல்லது திரைப்பட வடிவத்தை அரசியல் பிரசாரத்திற்கு அடிபணிய வைக்கவும் இல்லை. 'நான் புரட்சிகளை நம்புவ தில்லை; சிறிய அளவி லான நகர்வுகளைக் கொண்ட பரிணாம வளர்ச் சியையே நான் அதிகம் நம்புகிறேன்' என்றார் அவர். ஆயினும், அவர் தொடர்ந்து உருவா க்கிய திரைப்படங்கள் அவரது சமகாலத்தவர்

களால் திரையில் சற்றும் பார்த்துத் தாங்க முடியாத அளவுக்கு அதிர்ச்சியூட்டுபவையாகவே அமைந்தன.

டிரேயரைத் தேசிய அடையாளத்திற்குள் அடக்கி - அவரை ஒரு 'நோர்டிக்' கலைஞனாக முத்திரை குத்தி, அவரது திரைப்படங்களின் தீவிர அமைதியை லூத்தரன் மரபு, வடபுலத்து ஒளி மற்றும் பைன் காடுகளின் தனிமைத் துயரத்தின் வழியாக விளக்கிவிடலாம் என்றொரு கவர்ச்சியான தூண்டுதல் விமர்சகர்களிடம் உண்டு. நோர்டிக் நேஷனல் சினிமாஸ் நூலின் ஆசிரியர்கள் அத்தகைய குறுக்கீட்டை மறுப்பதற்கான வலுவான காரணங்களை வழங்குகிறார்கள். இந்த அடைமொழிகளை அவர்கள் ஓர் ஆங்கிலோ-அமெரிக்கக் கற்பிதமாகவே கருதுகின்றனர் - 'இயற்கையின் சித்திரம்,' 'தனிமைத் துயரம்,' மற்றும் 'சமூக வாழ்க்கையை விடுத்து, தனிமனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவை மட்டுமே மையமாகக் கொண்ட உள்முகமான, உலகை மறுக்கும் லூத்தரனியக் கடுந்துறவு' ஆகிய இக்கூறுகளுக்கு அவர்களது முதன்மை உதாரணங்கள் பெர்க்மென்னின் வின்டர் லைட் (Winter Light) அல்லது காபிரியேல் ஆக்செலின் (Gabriel Axel) பாபெட்ஸ் ஃபீஸ்ட் (Babette's Feast) ஆகியவையே அன்றி, டிரேயரின் ஓர்டெட் அல்லது விரேடன்ஸ் டாக் (Vredens dag) அல்ல (Soila, Söderbergh Widding, and Iversen 1998, 227). நிலப்பரப்பு சார்ந்த உருவகமும் கூட இங்கு பொருந்தாது: டென்மார்க்கைப் பொறுத்தவரை 'அங்கு எவ்விதக் கானகப் பெருவெளியும் இல்லை, பண்படுத்தப்பட்ட விவசாய நிலப்பரப்பு மட்டுமே உண்டு'. அந்நூலின் தொடக்க அத்தியாயம் இப்பிரச்சினையை நேரடியாகவே எதிர்கொள்கிறது: 'நோர்டிக் தேசியத் திரைப்படம் குறித்த முந்தைய வரையறைகள் அனைத்தும் விதிவிலக்குகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை - அதாவது பெர்க்மென் அல்லது டிரேயர் போன்றோரின் திரைப்படங்களை அடிப்படையாகக் கொண்டவை; முரண்பாடாக, இவர்களது படங்களே நோர்டிக் நாடுகளிலேயே மிகவும் சர்வதேசத் தன்மை கொண்ட திரைப்படங்களாகவும் விளங்குகின்றன'. டிரேயரின் நோர்டிக் அடையாளம் என்பது திரைப்படப் பெருவரிசை உருவாக்கிய ஒரு மாய விளைவு (canon-effect). காஃப்கா எந்த வகையில் ஒரு செக் நாட்டவரோ, அதே வகையில்தான் டிரேயரும் நோர்டிக் ஆளுமை: அந்த அடைமொழி அவரது கடவுச்சீட்டை மட்டுமே அடையாளப்படுத்துகிறது, அவரது கவிதையியலை (poetics) அல்ல. டேனிஷ் சூழல் அவருக்கு உண்மையாக வழங்கியது ஒரு காட்சி நடையை அல்ல; மாறாக ஒரு மத இலக்கணத்தையே. அதற்கு நாம் பின்னர் திரும்புவோம்.

## ஆசிரியரும் வரலாற்றுத் தொன்மமும்:

டிரேயர் எந்தவொரு தேசியத் திரைப்பட மரபுக்கோ கலை இயக்கத்திற்கோ உட்படாதவர் என்றால், அவரை அடைத்து வைப்பதற்குக் கைவசம் எஞ்சியிருக்கும் ஒரே கொள்கலன் 'திரைப்பட ஆசிரியத்துவம்' (authorship) மட்டுமே. அக்கோட்பாட்டின் நிறுவன சாட்சியங்களில் ஒருவராகவே அவர் நீண்டகாலம் கையாளப்பட்டு வந்திருக்கிறார். 'ஆசிரியர் கொள்கை' (politique des auteurs) முன்வைத்த ஒவ்வொரு நிபந்தனையையும் அவரது படைப்புகள் முழுமையாகப் பூர்த்தி செய்கின்றன: நான்கு பத்தாண்டுகள் மற்றும் ஐந்து தேசங்களைக் கடந்து அடையாளம் காணத்தக்க தனித்துவமான காட்சி நடை; தொடர்ச்சியான கருப்பொருள்கள் (துன்புறுத்தப்படும் பெண், மூடிய அறை, விசாரணை, அற்புதம்); திரைக்கதை, நடிகர் தேர்வு, அரங்கு மற்றும் படத்தொகுப்பு ஆகியவற்றின் மீதான அசைக்க முடியாத கட்டுப்பாடு. இப் போண்டெபியெர்க் (Ib Bondebjerg) முன்வைக்கும் வரையறை, தயக்கமின்றி இந்த மரபுவழிப் பார்வையை உள்வாங்குகிறது: டிரேயர் என்பவர் 'செவ்வியல் டேனிஷ் சினிமாவின் சர்வதேசத் திரைப்பட ஆசிரியர்'; அவரது 'தீவிர உணர்ச்சிகளின் சினிமா' (cinema of passion) என்பது 'வெளிப்பாட்டுத் தன்மை கொண்ட அக யதார்த்தவாதத்தின்' (expressive inner realism) மீது நிலை நிறுத்தப்பட்டு, 'சமூகம், குடும்பம் அல்லது மதத்தின் வழக்கங்களால் சிறை பிடிக்கப்பட்ட பெண் கதாபாத்திரங்களை' மையமாகக் கொண்டு இயங்குகிறது. இந்த விளக்கம் துல்லியமானதுதான்; ஆனால் இது பிரச்சினைக் கான விடை அல்ல, தொடக்கப் புள்ளி மட்டுமே.

சிக்கல் என்னவென்றால், டிரேயரே தனக்கான அந்த ஆசிரியர் கோட்பாட்டு வாசிப்பைத் தானே கட்டமைத்துக் கொண்டார் - ஆனால் அதன் மீது ஏற்றப்படும் பாரத்தைத் தாங்க முடியாத பலவீனமான மூலப்பொருட்களைக் கொண்டே அவர் அதை உருவாக்கினார். போரிஸ் தொமாஷெவ்ஸ்கியின் (Boris Tomashevsky) 'வாழ்க்கை வரலாற்றுத் தொன்மம்' (biographical legend) என்னும் கருத்தாக்கத்தை போர்ட்வெல் இங்கு இறக்குமதி செய்வதே அவரது ஆகச்சிறந்த முன்னெடுப்பாகும்: 'அப்படியாயின், ஆசிரியர் என்பது வெறும் திரைப்படங்களின் தொகுப்பு மட்டுமல்ல, மாறாக ஒரு கற்பனாவாத இலட்சிய உருவமும் கூட; டிரேயரின் வரலாற்று அந்தஸ்து என்பது அவரது படங்களை மட்டுமல்லாமல், 'டிரேயரியத்தன்மை' (the Dreyerian) என்பதையும் உள்ளடக்கியுள்ளது'. தயாரிப்பு முறைகள் மற்றும் வெளியிடப்பட்ட கருத்துரைகளிலிருந்து கட்டமைக்கப்பட்ட இந்தத் தொன்மம், ஒரு குறிப்பிட்ட வேலையைச் செவ்வனே ஆற்றியது: அது அவரது இயக்க மந்தநிலையைச் சமரசமற்ற நேர்மையாகவும், வணிக ரீதியான தோல்வியைத் தார்மீகக் கொள்கையாகவும் ('நான் பொதுமக்களை 'மகிழ்விப் பதற்காக' விழிப்புணர்வோடு எதையும் செய்வதில்லை'), அழகியலை உள்ளுணர்வு ஆன்மிகமாகவும் ('இயக்குநர் உண்மையில் உள்ள பொருட்களின் மீது ஆர்வம் காட்டக்கூடாது, மாறாகப் பொருட்களுக்குள்ளும் அவற்றிற்குப் பின்னாலும் உறையும் ஆன்மாவின் மீதே நாட்டம் கொள்ள வேண்டும்')

உருமாற்றியது. போர்ட்வெல் சற்றே காரத்தன்மையோடு குறிப்பிடுவதைப்போல: 'டிரேயரின் அழகியலின் இந்த மறைபொருள் தன்மை மிகவும் நேர்த்தியாகச் செயல்பட்டு, ஒரு குறிப்பிட்ட சிக்கலைத் தீர்த்துவைக்கிறது. ஏனெனில், விவரிக்க முடியாததை (the ineffable) ஒரு போதும் பெருமளவில் உற்பத்தி செய்துவிட முடியாது'. இந்தத் தொன்மமானது, 'திரைப்படத் துறையின் எதிர்பாராத ஏற்றத்தாழ்வுகளால் தீண்டப்படாத, ஒரு ஒருங்கிணைந்த தனிப்பட்ட சுய தரிசனத்தைத் தேடி நாம் அவரது திரைப்படங்களை அணுக வேண்டும் என்று நம்மைத் தூண்டுகிறது'.

இதிலிருந்து இரண்டு முக்கிய விளைவுகள் பிறக்கின்றன. முதலாவதாக, டிரேயரின் அறிக்கைகள் என்பது அவரது தொன்மத்தைப் பற்றிய சான்றுகளேயன்றி, அவரது திரைப்படங்களைப் பற்றியவை அல்ல - இது செயல்பாட்டைப் பற்றிய விவகாரமே தவிர, அவரது நேர்மையைப் பற்றிய கேள்வி அல்ல. லா பாசியோன் து ழான் தாக் குறித்துப் பேசும்போது, தான் 'வாழ்க்கையின் மீது ஆன்மா அடையும் வெற்றிக்கான ஒரு கீதத்தை வடிக்கவே' விரும்பியதாக அவர் கூறும்போது, அந்த வாக்கியம் அத்திரைப்படம் எவ்வாறு அமைய வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார் என்பதை மட்டுமே நமக்கு உணர்த்துகிறதே தவிர, அதன் விசித்திரமான இடைவெளி (eccentric space), போலியான பார்வைக்கோடுகள் (false eyelines), அல்லது ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட வெட்டுகள் (cuts) குறித்து எதையுமே நமக்குச் சொல்வதில்லை. அத்திரைப்படம் 'முன்னோடிப் பரிசோதனை அலைக்கு (avant-garde) எவ்விதத்திலும் கடமைப்படவில்லை; முகத்தில் வெளிப்படும் ஆன்மாவை மட்டுமே தான் படம்பிடித்ததாக' அவர் பிடிவாதமாக மறுக்கும்போது, அந்த மறுப்பே ஒரு சுவாரசியமான தரவாக மாறுகிறது: 1928-ஆம் ஆண்டின் ஆகக்கடுமையான வடிவ வன்முறை கொண்ட ஒரு திரைப்படத்தை, அதன் படைப்பாளியே வெறும் புறத் தோற்ற யதார்த்தவாதம் (physiognomic realism) என்று விவரிக்கிறார்! டிரேயர் சொன்னதற்கும் அவரது திரைப்படங்கள் ஆற்றியதற்கும் இடையே நிலவும் இந்த இடைவெளி என்பது தீர்த்து வைக்கப்பட வேண்டிய ஒரு முரண் அல்ல; அதுவே அவரது ஆசிரியர் தன்மையின் மைய உண்மையாகும்.

இரண்டாவது விளைவு தத்துவார்த்தமானது. 'ஸ்கிரீன்' (Screen) சஞ்சிகையின் கோட்பாட்டு மரபிலிருந்து எழுதும் ஸ்டீவ் நோலன் இன்னும் ஆழமாகச் சென்று வாதிடுகிறார்: கூலிஷோவ் பரிசோதனைகள் (Kuleshov experiments), 'திரைப்படத்தை ஆசிரியரின் நோக்கத்தின் (authorial intent) அடிப்படையில் மட்டுமே அணுக முடியும் என்ற மாயையைத் தீர்க்கமாகத் தகர்த்துவிட்டன'.

அவரது தாக்குதல் இறையியல் திரைப்பட விமர்சனத்தை நோக்கியதே ஆயினும், அவரது கூர்மையான பார்வை இங்கேயும் பாய்கிறது: ஷாட்டுகளுக்கு இடையிலான இணைப்பிலேயே அர்த்தம் உற்பத்தியாகிறது என்றால், ஆசிரியர் என்பது தொடர்ச்சியாக நிகழும் சில வடிவ முடிவுகளுக்கான ஒரு பெயரே அன்றி வேறல்ல; மிக மோசமான சூழல்களில் - நோலன் உடைத்தெறியும் ‘கிறிஸ்து-உருவக’ (Christ-figure) விமர்சனங்களைப் போல- விமர்சகர் தனது சொந்த வாசிப்பைக் கலைஞரின் நோக்கமாக வெள்ளையடித்து மாற்றிக்கொள்ளும் ஒரு போலி உத்தியாகவே அது மிஞ்சுகிறது.

ஆசிரியர்-எதிர்ப்பாளர்களிடமிருந்து நான் விலகிச் செல்லும் புள்ளி இதற்கு அடுத்ததாக எழுகிறது. ஆசிரியர் தன்மை என்பது ஒரு கட்டுமானம் என்பதால் அது முற்றிலும் பொருளற்றது என்று அர்த்தமாகிவிடாது. டிரேயரைப் பொறுத்தவரை, அவரது வாழ்க்கை வரலாற்றுத் தொன்மமும் அவரது கலைப் படைப்புகளும் வெற்றுப் பிரமைக்கு அப்பாற்பட்டு ஓர் ஆக்கபூர்வமான உறவிலேயே இயங்கின: கலைஞரைப் பற்றிய அந்த ரோமாண்டிசிசக் கருத்தாக்கமே, 1943 அல்லது 1964-ஆம் ஆண்டின் டென்மார்க்கில் வேறு எந்தவொரு தயாரிப்புச் சித்தாந்தத்தாலும் அவருக்கு வழங்க முடியாத ஒன்றை வழங்கியது - அதாவது எவரும் விரும்பாத திரைப்படங்களை உருவாக்குவதற்கான ஒரு தார்மீக உரிமத்தை அது அவருக்கு வழங்கியது. போர்ட்வெல்லே கூட டிரேயரை ஷோயன் பேர்க்குடன் (Arnold Schoenberg) ஒப்பிட்டு இதை ஒப்புக்கொள்கிறார்; அவ்விருவருமே ‘அழகியல் நுகர்வின் சித்தாந்தரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பழக்கவழக்கங்களுக்கு எதிராக’ இயங்கினர்; மேலும் இருவரும் ‘அந்தச் சவாலை மதத்தின் அதிகாரத்தைக் கொண்டு நியாயப்படுத்த’ முனைந்தனர் (1981, 198). ஆசிரியர் தன்மை என்பது அப்படங்களின் விசித்திரத்திற்கான விளக்கம் அல்ல; மாறாக அது உருவாவதற்கான சாத்தியக் கூறுகளில் ஒன்று. ஆசிரியர் என்பது படைப்பின் இறுதி அர்த்தம் அல்ல; அப்படைப்பு உருவாவதற்கு வழிவகுத்த நிறுவன ரீதியான ஒரு புனைகதை (institutional fiction).

அதனால்தான் திரைப்பட ஆசிரியத்துவத்திற்கு டிரேயர் மிக ஆழமானதொரு வரம்பு-வழக்காக (limit case) அமைகிறார். அக்கோட்பாடு கோரும் அனைத்தையும் அவர் வாரி வழங்குகிறார்; ஆனால் அக்கோட்பாட்டால் வாசிக்கவே முடியாத திரைப்படங்களை அவர் பதிலுக்குத் தருகிறார். தனிமனித தரிசனத்தை மையமாகக் கொண்ட ஒரு விமர்சன முறை கெர்ட்ரூட் திரைப்படத்தை ஒன்று டிரேயரின் கருத்தியல்களின் உச்சக்கட்டத் தொகுப்பாகக் கருத வேண்டும், அல்லது முதுமையின் தளர்ச்சியால் விளைந்த தோல்வியாக ஒதுக்க வேண்டும் - ஆனால் அத்திரைப்படம் வெளிப்படையாக இவ்விரண்டுமே அல்ல. இதற்கு மாற்றாக அமைவது போர்ட்வெல்லின் வழிமுறையே: அதாவது நிறுவப்பட்ட ஒரு செவ்வியல் விதியோடு தொடர்ச்சியாக மோதும் ஒரு கலைப்பயணம்; இதில் ‘இந்தப் படங்களின் தனித்துவமான வடிவம், மரபான சினிமா விதிகளோடு நடத்தும் போராட்டத்திலிருந்தே உருவாகிறது. அந்த விதிகளை இயக்குநர் முற்றிலும் ஒதுக்கிவிடவில்லை; மாறாக, அவற்றை எதிர்த்து உடைத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகவே தன் படங்களுக்குள் கையாள்கிறார்” (1981, 5). மரபான சினிமா என்பது டிரேயருக்கு எதிரான ஒன்றல்ல; அதுவே அவரது படைப்புக்கான மூலப்பொருள்.

Swarnavel@thaiveedu.com

tg.theeban@gmail.com

# வண்ணங்களிலும் எழுத்திலும் தடம்பதிக்கும் ஓவியர் ஜீவா

கலைஞரைப் போற்றும் ஒரு சமூகம், தனது பண்பாட்டுச் செழுமையையும் மதிக்கின்றது என்றே பொருள்படும். அந்த வகையில், தமிழகத்தின் குறிப்பிடத் தக்க ஓவியரும் எழுத்தாளருமான ஜீவானந்தன் அவர் களுக்கு வழங்கப்பட்டுள்ள, 'சிவகுமார் கல்வி அறக் கட்டளை விருது' மகிழ்வுக்குரிய செய்தியாகும். நீண்ட காலக் கலைப்பணிக்குக் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம், அவரது படைப்பாற்றலையும் தொடர்ச்சியான உழைப்பை யும் தமிழ்ச் சமூகத்தின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வந்துள்ளது.

சென்னை தியாகராய நகரிலுள்ள அகரம் அறக்கட்டளை அலுவலகத்தில், 2026 ஒக்ரோபர் 11-ஆம் நாள் நடை பெற்ற சிவகுமார் கல்வி அறக்கட்டளையின் நாற்பத் தேழாவது ஆண்டு விழாவில், ஒரு இலட்சம் ரூபா பொற் கிழியுடன் ஜீவானந்தன் மதிப்பளிக்கப்பட்டார். கல்விக்கு உதவிக்கரம் நீட்டும் நிகழ்வில், ஓவியக் கலைக்காக வாழ்வை அர்ப்பணித்த ஒருவரும் மதிப்பளிக்கப் பட்டமை சிறப்புக்குரியது. இளையோர் கல்விக்கு உதவும் அகரம் அறக்கட்டளை, கலை வளர்க்கும் கலைஞரையும் போற்றி மதிப்பளிப்பது பெருமைக்குரியது.

‘ஓவியர் ஜீவா’ என்று அறியப்படும் ஜீவானந்தனின் கலைப் பயணம், கோவையின் ஓவியச் சூழலுடன் நெருங்கிய தொடர்புடையது. திரைப்பட விளம்பர ஓவியங்களை உரு வாக்கிய தந்தை வேலாயுதத்தின் பணிச்சூழல், அவரது தொடக்ககாலக் கலைப்பயிற்சிக்குக் களமாக அமைந் தது. சட்டம் பயின்றிருந்தபோதும், ஓவியத்தையே தனது வாழ்வுப் பணியாகத் தேர்ந்தெடுத்த அவரது முடிவு, கலை யின்மீது கொண்டிருந்த ஆழமான ஈடுபாட்டைப் புலப் படுத்துகின்றது.

நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம், அக்ரிலிக், மின்னோ வியம் எனப் பல்வேறு ஊடகங்களில் இயங்கியுள்ள அவர், நூல்களின் அட்டைப்படங்கள் வழியாகவும் இலக்கிய இதழ்களின் ஓவியங்கள் வழியாகவும் வாசகர்களைச் சந் தித்துள்ளார். எழுத்தையும் ஓவியத்தையும் இணைக்கும் இத்தகைய பங்களிப்புகள், ஒரு நூலை வாசிப்பதற்கு முன்னரே அதன் உணர்வுலகிற்குள் வாசகரை அழைத் துச் செல்லக்கூடியவை. தமிழ்ப் பதிப்புலகில் ஓவியர் களின் பங்களிப்பைப் பேசும்போது, இத்தகைய உழைப் பையும் நினைவுகூர வேண்டும்.

ஜீவானந்தனின் ஆளுமை ஓவியத்துடன் நிறைவுபெற்று விடுவதில்லை. திரைப்படத்தை ஆழ்ந்து இரசித்து, அதன் அழகியலையும் வெளிப்பாட்டு முறைகளையும் எழுத்தில் பகிர்ந்துகொள்ளும் விமர்சகராகவும் அவர் விளங்கு கின்றார். அவரது ‘திரைச்சீலை’ நூல், 2010-ஆம் ஆண் டுக்கான தேசியத் திரைப்பட விருதுகளில், திரைப்படம்

குறித்த சிறந்த நூல் பிரிவில் சிறப்புக் குறிப்புக்கான அங்கீகாரத்தைப் பெற்றது. 2011-இல் அறிவிக்கப்பட்ட இந்த விருது, அவரது எழுத்துப்பணிக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க மதிப்பாகும்.

ஒரு காட்சியை உருவாக்கும் ஓவியரின் அனுபவமும், உருவாக்கப்பட்ட காட்சியை வாசிக்கும் விமர்சகரின் பார்வையும் அவரிடம் சந்திக்கின்றன. இத்தகைய சந்திப்பு, கலையைப் படைப்பதற்கும் அதனைப் புரிந்துகொள்வதற்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துகின்றது. ஓவியமும் திரைப்படமும் இலக்கியமும் தனித்தனித் தளங்களாக இருந்தாலும், அவற்றுக்கிடையே உரையாடலை நிகழ்த்தும் ஆளுமைகள் நமது கலைச்சூழலுக்கு அவசியமானோர் ஆவர். ஜீவானந்தனின் பன்முகச் செயற்பாடு அந்தத் தேவையை நினைவூட்டுகின்றது.

கடந்த ஆண்டு தமிழக அரசின் கலைமாமணி அங்கீகாரத்தைப் பெற்ற அவருக்கு, இவ்வாண்டு கிடைத்துள்ள சிவகுமார் கல்வி அறக்கட்டளை விருது மேலும் மகிழ்வூட்டுகின்றது. அம்புலிமாமா சங்கர், ராமு, ஜெயராஜ், மாயா, மணியம் செல்வன் போன்ற ஓவியர்கள் ஏற்கெனவே மதிப்பளிக்கப்பட்ட வரிசையில் ஜீவானந்தனும் இணைந்திருப்பது, அவரது கலைப்பணிக்குச் செலுத்தப்பட்ட பொருத்தமான போற்றுதல் ஆகும்.

விருது பெறும் அத்தருணம் ஒரு கலைஞருக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தருகின்றது. அதேவேளை, அந்தக் கலைஞரின் படைப்புகளை மீண்டும் பார்க்கவும் அவரது நூல்களை வாசிக்கவும் சமூகத்துக்கு ஒரு வாய்ப்பையும் வழங்குகின்றது. ஜீவானந்தனுக்குக் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம், இளைய தலைமுறையினர் ஓவியத்தையும் கலைவிமர்சனத்தையும் ஆர்வத்துடன் அணுகுவதற்கான தூண்டுதலாக அமையவேண்டும். கலைஞர்களின் உழைப்பை அறிந்துகொள்வதும் அவர்களது படைப்புகளுடன் உறவாடுவதும் பாராட்டின் தொடர்ச்சியாக அமைவதே சிறப்பு.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும் இச்செய்தி மகிழ்ச்சியளிக்கின்றது. மொழியோடு சேர்ந்து ஓவியம், இலக்கியம், திரைப்பட ரசனை ஆகியவற்றையும் அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்குண்டு. ஜீவானந்தன் போன்ற பன்முகக் கலைஞர்களின் பயணங்களைப் பகிர்ந்துகொள்வது, தமிழ்ப் பண்பாட்டின் படைப்புச் செழுமையை இளையோருக்கு உணர்த்த உதவும். அத்தகைய அறிமுகங்கள் புதிய கலை ஆர்வங்களுக்கு விதையாகவும் அமையக்கூடும்.

வண்ணங்களால் காட்சியையும் எழுத்தால் சிந்தனையையும் வளப்படுத்திவரும் ஜீவா நந்தன் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தாய்வீடு தெரிவித்துக்கொள்கின்றது.

அவரது படைப்புப் பயணம் தொடர்ந்து புதிய எல்லைகளைத் தொடட்டும். தமிழ்க் கலைச்சூழல் அவரது பங்களிப்புகளால் மேலும் செழிக்கட்டும்!

■ ■ ■

பொன்னையா விவேகானந்தன்

# ஓவியர் மரூாட்ஸ்கி மருது அவர்களுக்கு இயல் விருது

ஒரு சமூகத்தின் பண்பாட்டு முதிர்ச்சியை, அது உரு வாக்கும் படைப்புகளைக் கொண்டும், அப்படைப்புகளை உருவாக்குவோரை அது எவ்வாறு மதிக்கின்றது என்பதைக் கொண்டும் அறிந்துகொள்ளலாம். படைப்பாளியின் உழைப்பை அடையாளங்கண்டு, அவரது பங்களிப்பை வாசகர் முன்னிலையில் பெருமையுறச் செய்வது பொறுப்பு மிக்க சமூகப்பணி. கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம், இப்பணியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. அதன் அண்மைய விருது விழாவும், தமிழ்ப் படைப்புலகின் பன்முக ஆற்றல்களை ஒருங்கே மதிப்பளிக்கும் நிகழ்வாகவும் சிறப்பாகவும் அமைந்தது.

கல்வியாளர், எழுத்தாளர், வாசகர், விமர்சகர், கொடை யாளர் ஆகியோரின் ஆதரவுடன் 2001-ஆம் ஆண்டு ரொறன்ரோவில் தொடங்கப்பட்ட இவ்வமைப்பு, தமிழ் இலக்கியத்தை உலகளாவிய தளத்தில் வளர்ப்பதையும் படைப்பாளரைத் தொடர்ந்து ஊக்குவிப்பதையும் நோக்க மாகக் கொண்டுள்ளது. மொழிபெயர்ப்புகளை ஊக்குவித்தல், ஆய்வுகளுக்கு ஆதரவளித்தல், நூல் வெளியீடுகள், சொற்பொழிவுகள், பயிலரங்குகள் நடத்துதல், இளம் ஆய்வாளரை ஊக்குவித்தல் போன்ற பணிகள் அதன் செயற்பாட்டு விரிவைக் வெளிப்படுத்தகின்றன.

புலம்பெயர் வாழ்வில் இத்தகைய அமைப்புகளின் தேவை மேலும் அதிகரிக்கின்றது. பொருளாதார நிலைப்பாட்டை அடைந்த ஒரு சமூகம், தனது மொழிக்கும் படைப்புச் சிந்தனைக்கும் நிலையான ஆதரவுத்தளங்களை உருவாக்க வேண்டும். அந்த வகையில், இலக்கியத் தோட்டத்தின் தொடர்ச்சியான செயற்பாடு பாராட்டத் தக்கது. தமிழகம், ஈழம், புலம்பெயர் நாடுகள் எனப் பிரிந்திருக்கும் படைப்புலகங்களைப் பொதுவான இலக்கிய உரையாடலுக்குள்

பேராசிரியர்
பெருமாள் முருகன்

கொண்டுவருவதும் இலக்கியத்தோட்டத்தின் இலக்குகளுள் ஒன்று.

2026 ஒக்ரோபர் 18-ஆம் நாள் நடைபெற்ற விழாவில், 2025-ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. எழுத்தாளரும் பேராசிரியரும் மொழியியல் ஆய்வாளருமான பெருமாள் முருகன் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார். நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, வட்டாரமொழி ஆய்வு எனப் பல துறைகளில் இயங்கிவரும் அவரது பங்கேற்பு, விழாவின் இலக்கியப் பரிமாணத்துக்குப் பொருத்தமானதாக அமைந்தது.

ஒரு வட்டாரத்தின் வாழ்வையும் மொழியையும் உலக வாசிப்புக்குக் கொண்டுசெல்லமுடியும் என்பதைப் பெருமாள் முருகனின் படைப்புப் பயணம் உணர்த்துகின்றது. அவரது படைப்புகள், பல மொழிகளில் வெளியாகியிருப்பதும் இதற்குச் சான்றாகும். ஏற்கெனவே 2011-ஆம் ஆண்டு இலக்கியத் தோட்டத்தின் அல்புனைவு விருதைப் பெற்ற அவர், இம்முறை முதன்மை விருந்தினராக இணைந்தமை, அமைப்புக்கும் படைப்பாளிகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான உறவையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்விழாவின் சிறப்புக்குரிய அங்கமாக, ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளருக்கான, ‘அ. முத்துலிங்கம் இயல் விருது’ வழங்கப்பட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஓவியம், விளக்கப்படம், துணி வடிவமைப்பு, உயிரூட்டுப்படம், அரங்க அமைப்பு உள்ளிட்ட பல்வேறு கலைத்தளங்களில் இயங்கிவரும் மருதுவின் பங்களிப்பு விரிவானது. குறிப்பாக, நவீன தமிழ் இலக்கியத்துக்கான தனிச் சிறப்பு மிக்க காட்சிமொழியை உருவாக்கியதில் அவருக்குச் சிறப்பான இடமுண்டு.

ஓவியர்
டிராட்ஸ்கி மருது

மருதுவின் ஓவியங்கள் கதையின் காட்சிகளை எடுத்துக்காட்டுவதோடு நின்றுவிடுவதில்லை. அவை வாசகருக்குப் புதிய பொருள்கோடல்களைத் திறந்துவிடுகின்றன. எழுத்துக்கும் ஓவியத்துக்கும் இடையே நிகழும் இத்தகைய படைப்புரையாடலை அங்கீகரிப்பதாக இவ்விருதைக் கொள்ளலாம். இலக்கியத்தின் வளர்ச்சியில் காட்சிக்கலை ஆற்றும் பங்களிப்பையும் இத்தேர்வு முன்னிலைப்படுத்துகின்றது. தமிழ்ப் பண்பாட்டு வேர்களுடன் நவீன வெளிப்பாட்டு முறைகளை இணைத்த அவரது நீண்ட பயணத்துக்கு இது பொருத்தமான மதிப்பளிப்பாகும்.

புனைவுக்கான விருதை, ‘நெருப்பில் வளர்பவை’ சிறுகதைத் தொகுப்புக்காக, பா. திருச்செந்தாழை பெற்றார். வர்த்தக உலகம், பெருநகர வாழ்க்கை, மனித உறவுகள் ஆகியவற்றின் நுட்பங்களை அவரது கதைகள் அணுகுவதாக விழா மலர் எடுத்துரைக்கின்றது. பரிவர்த்தனைகளின் பின்னால் இயங்கும் மனித மனங் களையும், அன்றாட வாழ்வின் மறைவான கணக்குகளையும் இலக்கியக் க வ ன த்துக்குக் கொண்டுவரும் எழுத்துக்கான அங்கீகாரமாக இத்தேர்வைப் பார்க்கலாம்.

பா. திருச்செந்தாழை

அல்புனைவுப் பிரிவில் இருவருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. ‘ஒரு தூக்குக் கைதியின் வாக்குமூலம்’ நூலுக்காக, தூக்கு செல்வமும், ‘வைகறை வாசகன் பதிவுகள்’ நூலுக்காக, மருத்துவர் சங்கரசரவணனும் தெரிவுசெய்யப்பட்டனர். அனுபவப் பதிவும் அறிவுப் பகிர்வும் கொண்டிருக்கும் வெவ்வேறு ஆற்றல்களை இவ்விரு தேர்வுகளும் வெளிப்படுத்துகின்றன.

நீண்ட சிறைவாழ்வின் அனுபவங்களைப் பதிவு செய்யும் செல்வத்தின் நூல், பொதுவெளியில் அரிதாகக் கேட்கப்படும் குரலுக்கு இடமளிக்கின்றது. குற்றம், தண்டனை, மனித மாற்றம், சமூகத்தின் பொறுப்பு ஆகியவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கான வாய்ப்பை இத்தகைய எழுத்துகள் ஏற்படுத்துகின்றன. ஒரு மனிதரின் அனுபவத்தை வாசிப்பது, அவரைச் சூழ்ந்த அமைப்புகளையும் மீளாய்வு செய்வதற்கு வழிவகுக்கின்றது.

தூக்கு
செல்வம்

சங்கர சரவணனின் நூல், அனுபவங்கள், ஆளுமைகள், இலக்கண இலக்கிய அறிமுகங்கள் உள்ளிட்டவற்றை எளிதில் அணுகக்கூடிய மொழியில் வழங்குகின்றது.

ஆழமான வாசிப்பை அடுத்த தலைமுறையினரிடம் பகிர்ந்து கொள்ளும் முயற்சிக்கு வழங்கப்பட்ட ஊக்கமாக அவரது விருதைக் கருதலாம். அறிவைச் சேர்ப்பதுடன், அதை வாசகரிடம் கொண்டுசேர்ப்பதும் முக்கியமான இலக்கியச் செயலே.

மருத்துவர்
சங்கர சரவணன்

கவிதைக்கான விருதை, 'காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இரண்டு செயலிகள்' தொகுப்புக்காக, கவிஞர் சிவராசா சிவ கருணாகரன் எனும் கருணாகரன் பெற்றார். போருக்குப் பின்னரும் முடிவுறாத காத்திருப்பு, இழப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது துயரம் ஆகியவற்றைப் பேசும் கவிதைகளுக்கான இவ்வங்கீகாரம் முக்கியமானது. சமூகத்தின் நினைவிலிருந்து மறைந்துபோகக் கூடிய அனுபவங்களை இலக்கியம் தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது என்பதை இத்தேர்வு நினைவூட்டுகின்றது.

கவிஞர்
சிவராசா
கருணாகரன்

மொழியாக்க விருது கீதா சுகுமாரனுக்கு வழங்கப்பட்டது. பா. அகிலனின் 'கொடியில் கிடந்து உலரும் புன்னகை' கவிதைகளை A Smile Drying on a Vine என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமைக்காக அவர் மதிப்பளிக்கப்பட்டார். தமிழில் எழுதப்படும் அனுபவங்கள், பிறமொழி வாசகர்களைச் சென்றடைவதற்கு மொழிபெயர்ப்பாளர்களின் படைப்பாற்றல் அவசியமானது. குறிப்பாக, கவிதையின் உணர்வையும் பண்பாட்டுப் பின்னணியையும் மற்றொரு மொழியில் உயிர்ப்பித்தல் தனித்திறன் வேண்டுகின்ற பணியாகும்.

விருதுகளின் பெறுமதி, அவை வழங்கப்படும் தருணத்தையும் கடந்து நிலைக்கவேண்டும். விருதுபெற்ற நூல்களை அறிமுகப்படுத்தும் வாசகர் சந்திப்புகள், விமர்சன உரையாடல்கள், இளையோருக்கான வாசிப்பு நிகழ்வுகள் ஆகியவற்றுடன் இப்பணி தொடரும்போது அதன் சமூகப்பயன் பெருகும். தேர்வுகளுக்கான இலக்கியக் காரணங்களை விரிவாகப் பொதுவெளியில் பகிர்வதும் வாசிப்புப் பண்பாட்டை வலுப்படுத்தும்.

இவ்வாண்டின் தேர்வுகள் காட்சிக்கலை, புனைவு, சிறை அனுபவம், அறிவுப் பகிர்வு, போரின் நினைவு, மொழிபெயர்ப்பு ஆகிய பல தளங்களை முன்னிலைப்படுத்தியுள்ளன. இத்தகைய பன்முகப் பார்வையே விழாவின் குறிப்பிடத்தக்க சிறப்பாக அமைகின்றது.

கீதா
சுகுமாரன்

விருதாளர்களைப் பற்றிய முன்மொழிவுகளை வழங்கியோரும் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்தனர். விழாவை நேரியவகையில் நெறிப்படுத்திய அமைப்பாளர்கள் அனைவும் பராட்டுக்கும் நன்றிக்கும் உரியோர் ஆவர்.

படைப்பாளிகளை மதிப்பளிக்கும் இலக்கியத்தோட்டத்தின் பணியுடன், அவர்களது படைப்புகளை வாசிக்கும் சமூகத்தையும் வளர்த்தெடுப்பதில் இலக்கியத் தோட்டத்தின் பயணம் தொடர்ந்து செழிக்கட்டும் என தாய்வீடு வாழ்த்துகின்றது.

vivekanandan.p@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

**E-mail: info@thaiveedu.com** **Tel: +94 70 423 7523** **Tel: +1-416-857-6406**

வே. தினகரன்

# பில் காஸ்பி: பெருங்கலைஞனின் வீழ்ச்சி

tg.theeban@gmail.com

இருபதாம் நூற்றாண்டின் அமெரிக்க நகைச்சுவை மற்றும் தொலைக்காட்சித் துறையில் பில் காஸ்பி ஒரு பொற்கால மனிதராகத் திகழ்ந்தார். (William Henry Cosby Jr.) வில்லியம் ஹென்றி காஸ்பி ஜுனியர் (12 ஜுலை 1937) அமெரிக்க நகைச் சுவை நடிகர் மற்றும் தயாரிப்பாளர் ஆவார். தொலைக்காட்சி நிகழ்ச்சித்துறையில் பல முக்கிய சாதனைகளைப் படைத்த இவர், மக்களின் அன்பைப் பெற்று 'அமெரிக்காவின் தந்தை' என்று கொண்டாடப்பட்டார். வெறும் சிரிப்பிற்காக மட்டுமல்லாது, சமூகச் சிந்தனைகளையும் குடும்பப் பெறுமானங்களையும் மேடைக்குக் கொண்டுவந்த இவரது தனித்துவமான பாணி வெகுஜன மக்களை பெரிதும் கவர்ந்தது. இருப்பினும், இத்த கைய மகத்தான புகழின் உச்சத்தில் நீண்டகாலம் இருந்த அவருக்கு, வாழ்க்கையின் பிற்பகுதியில் ஒரு பெரும் வீழ்ச்சி யும் அதிர்ச்சியும் காத்திருந்தன. 89 வயதாகும் இவரது வாழ்க்கை வரலாறு, நமக்கு பல முக்கியமான பாடங்களைக் கற்றுத் தரு கின்றது.

பில் காஸ்பி 1937 ஜுலை 12 அன்று அமெரிக்காவின் பில டெல்பியாவில் குறைந்த வருவாய் ஈட்டும் உழைக்கும் வர்க்கக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை கடற்படையில் பணி யாற்றினார்; தாய் ஊதியமில்லா மற்றும் குறைந்த ஊதிய வீட்டுப் பணிகளைச் செய்து குடும்பத்தின் முதன்மைப் பராம ரிப்பாளராக இயங்கினார். கறுப்பின உழைக்கும் வர்க்கச் சமூ கத்தின் பொருளாதார நெருக்கடிகளையும் வர்க்க ஏற்றத்தாழ் வுகளையும் நேரடியாக எதிர்கொண்ட சூழலிலேயே இவரது சிறுபாராயம் அமைந்தது. பாடசாலைப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு அமெரிக்கக் கடற்படையில் இணைந்த இவர்,

> ***I Spy (1965 - 1968) - இத்தொடரில் நடித்ததன் மூலம், 1960-களில் அமெரிக்கத் தொலைக்காட்சியின் வாராந்திர நாடகத் தொடரொன்றில் முதன்மைப் பாத்திரத்தில் நடித்த முதல் ஆபிரிக்க-அமெரிக்கக் கலைஞர் என்ற வரலாற்றுச் சாதனையைப் பில் காஸ்பி படைத்தார். தீவிரமான இன ஒதுக்கல் நிலவிய அக்காலகட்டத்தில், இக்கதாபாத்திரம் அமெரிக்க ஊடகத்துறையில் இன-சமத்துவப் பிரதிநிதித்துவத்திற்கான ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.***



அங்குள்ள பயிற்சி மையங்கள் வாயிலாகத் தனது உயர்நிலைப் பள்ளிக்கு இணையான கல்வியைப் பெற்றார். பின்னர் டெம்பிள் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு உதவித்தொகையுடன் உயர்கல்வியைத் தொடர்ந்தார். 1972-இல் முதுநிலைப் பட்டத்தையும், 1977-இல் மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தையும் (Ed.D) பெற்றார். 1964-இல் கமீல் ஹாங்க்ஸ் என்பவரை மணந்தார். இவர்களுக்கு எரிகா, எரின், எனிஸ், என்சா மற்றும் ஈவின் என ஐந்து குழந்தைகள் பிறந்தனர். 1997-இல் இவரது ஒரே மகனான எனிஸ் காஸ்பி, வழிப்பறிக் கொள்ளைச் சம்பவமொன்றில் சுட்டுக்கொல்லப்பட்ட துயரத்தை இக்குடும்பம் எதிர்கொண்டது.

## கலைத்துறைப் பங்களிப்புகள்:
## ஸ்டாண்ட்–அப் நகைச்சுவை:

1961-இல் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள 'ஹங்கரி ஐ' (Hungry i) உணவகத்தில் நண்பர்களின் தூண்டுதலால் பில் காஸ்பி தனது மேடை நகைச்சுவை (Stand-up Comedy) பயணத்தைத் தொடங்கினார். அன்றாட வாழ்வியல் அவதானிப்பு நகைச்சுவை (Observational Comedy) மற்றும் உரையாடல் பாணியில் தனது கலைப் படைப்புகளை நிகழ்த்திய இவர், குழந்தைப் பருவம் மற்றும் குடும்ப உறவுகள் போன்ற உலகளாவிய பொருள்களை மையமாகக் கொண்டார். பெரும்பாலான நேரங்களில் மேடையின் மையத்தில் அமர்ந்தவாறே நிகழ்ச்சியினை நடத்தினார்; நகைச்சுவையை வலியுறுத்த வேண்டிய தருணங்களில் மட்டும் எழுந்து நிற்கும் தனித்துவமான முறையைக் கையாண்டார். தனது கலைப் பங்களிப்பிற்காக 8 முறை கிராமி விருதுகளை வென்று சாதனை படைத்தார். இவரது 'ரஸ்ஸல், மை பிரதர், வித் ஹூம் ஐ ஸ்லெப்ட்' (Russell, My Brother, Whom I Slept With) என்ற நகைச்சுவை ஆல்பம், 'ஸ்பின்' (Spin) இதழால் 'மேடை நகைச்சுவையின் தலைசிறந்த படைப்பு' எனப் போற்றப்பட்டது.

## தொலைக்காட்சித் துறைப் பங்களிப்புகள்:

I Spy (1965 - 1968) - இத்தொடரில் நடித்ததன் மூலம், 1960-களில் அமெரிக்கத் தொலைக்காட்சியின் வாராந்திர நாடகத் தொடரொன்றில் முதன்மைப் பாத்திரத்தில் நடித்த முதல் ஆபிரிக்க-அமெரிக்கக் கலைஞர் என்ற வரலாற்றுச் சாதனையைப் பில் காஸ்பி படைத்தார். தீவிரமான இன ஒதுக்கல் நிலவிய அக்காலகட்டத்தில், இக்கதாபாத்திரம் அமெரிக்க ஊடகத்துறையில் இன-சமத்துவப் பிரதிநிதித்துவத்திற்கான ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இத்தொடரில் வெளிப்படுத்திய தன் திறம்பட்ட கலைப் பங்களிப்பிற்காக இவர் மூன்று முறை எம்மி (Emmy) விருதுகளை வென்று சாதனை படைத்தார். Fat Albert and the Cosby Kids (1972 - 1985) - தான் வளர்ந்த உழைக்கும் வர்க்கக் கறுப்பினச் சமூகச் சூழலையும் குழந்தைப் பருவ நட்புகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்த அனிமேஷன் தொடரைப் பில் காஸ்பி உருவாக்கி, தயாரித்து, தொகுத்து வழங்கினார். சிறுவர் கல்வி, சமூக விழுமியங்கள் மற்றும் வர்க்கச் சூழலை எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பாடங்களைக் கற்பிப்பதை நோக்கமாக்கிக் கொண்ட இத்தொடரில், காஸ்பி நேரலையில் தோன்றி ஒவ்வொரு கதையின் நீதியையும் விளக்குவார். மஷ்மவுத், டம்ப் டொனால்ட் போன்ற கதாபாத்திரங்கள் பிரபலமானவை.

The Cosby Show (1984 - 1992) - 1980-களின் மிகவும் பிரபலமான தொலைக்காட்சி நகைச்சுவைத் தொடரான இதில், மகப்பேறு மருத்துவர் கிளிஃப் ஹக்ஸ்டபிள் பாத்திரத்தில் நடித்தார். தொடர்ச்சியாகப்

பல ஆண்டுகள் முதலிடத்தில் இருந்த இத்தொடர், தொழில்முறைத் தகுதியும் பொருளாதாரத் தன்னிறைவும் பெற்ற ஆபிரிக்க-அமெரிக்கக் குடும்பத்தின் நேர் மறையான வாழ்வியலை முதன்மை ஊடகங்களில் காட்சிப்படுத்தியது. அத்துடன், கறுப்பினக் கலை மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பரவ லாக்கவும் வழிகோலிய இத்தொடர், NBC நிறுவனத்தை வணிக ரீதியாக முதன்மை நிலைக்கு உயர்த்தியது. சிறுவர் கல்வியை மையமாகக் கொண்ட The Electric Company கல்வித் தொடர், The Cosby Mysteries, Cosby (1996 - 2000), சிறுவர்களின் இயல்பான உரையாடல்களை வெளிப்படுத்திய Kids Say the Darndest Things (1998 - 2000) ஆகிய நிகழ்ச்சிகளும் இவரின் குறிப்பிடத் தக்க கலைப் பங்களிப்புகளாகும். இக்காலப்பகுதியில் இவர் கலைத் தளத்தில் தொடர்ச்சியாக இயங்கி வந்தார்.

### திரைப்பட வாழ்க்கை:

Uptown Saturday Night (1974), Let's Do It Again (1975), A Piece of the Action (1977), Ghost Dad (1990) உள்ளிட்ட திரைப்படங்களில் பில் காஸ்பி நடித்தார். கறுப்பின நடிகர்கள் முதன்மைப் பாத்திரங்களில் தோன்றி, உழைக்கும் வர்க்க மற்றும் நடுத்தர வர்க்கச் சமூக வாழ்வியலை மைய ஊடகங்களில் பிரதிநிதித்து வப்படுத்த இத்திரைப்படங்கள் முக்கியக் களங்களாக அமைந்தன.

### பிற கலைப் பங்களிப்புகள்:

கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கும் மேலாக Jell-O Pudding Pops மற்றும் Coca-Cola போன்ற சர்வதேசப் வணிகப் பொருட்களின் தூதராகச் செயற்பட்டார். முதன்மை ஊடக வணிக விளம்பரங்களில் ஒரு கறுப்பினக் கலைஞர் தொடர்ந்து முதன்மைப் முகமாகச் செயற்பட்டது, அக்காலகட்டத்தின் ஊடக வர்த்தக அமைப்பில் நிலவிய இனப் பாகுபாடுகளைக் கடந்து பெற்ற ஒரு முக் கியத்துவமாகப் பார்க்கப்பட்டது. 1986-இல் வெளியான Fatherhood உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார். பெற்றோர் வளர்ப்பு, குடும்பக் கட்டமைப்பு மற்றும் பாலின உறவுகள் குறித்த தனது அவதானிப்புகளை இந்நூல்களில் பதி வுசெய்திருந்தார். எனினும், இவரின் நூல்களில் வெளிப்பட்ட குடும்ப விழுமி யங்கள், பிற்பாலத்தில் இவர் எதிர்கொண்ட பால்நிலை நீதி சார்ந்த விமர்சனங்க ளின்போது தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

### இசைப் பங்களிப்புகள்:

Silver Throat: Bill Cosby Sings (1967) போன்ற இசை ஆல்பங்களை வெளியிட்ட இவர், ஜாஸ் (Jazz) இசையின் மீது ஆழ்ந்த ஈடுபாடு கொண்டி ருந்தார். கறுப்பினப் பண்பாட்டு வெளிப்பாடான ஜாஸ் இசையைத் தனது மேடைப் படைப்புகளிலும் ஒருங்கிணைத்தார். இக்கலைப் பங்களிப்புகள் மூலம் அமெரிக்க வெகுஜன ஊடகத் தளங்களில் கறுப்பினப் பண்பாட்டுப் பாரம்பரி யங்களைப் பரவலாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்தார். மே 20, 1983-இல் வெளியான Bill Cosby: Himself என்ற மேடை நகைச்சுவைத் திரைப்படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. பில் காஸ்பி மற்றும் ஜேம்ஸ் பி. ஹெர்ரிங் தயாரிப்பில், காஸ்பியின் இயக்கத்தில் வெளியான இப்படம், மே 1981-இல் கனடாவின் ஒன்டாரியோவிலுள்ள ஹாமில்டன் பிளேஸில் நடைபெற்ற நான்கு நிகழ்ச்சிகளின் தொகுப்பாக 105 நிமிட நீளத்தில் அமைந்தது.

காஸ்பி தனது தனித்துவமான உரையாடல் பாணியில் நகைச்சுவை வழங்கியி ருப்பார். பெற்றோராகும் அனுபவங்கள், திருமண வாழ்க்கை, தந்தை மற்றும் தாய், பல் மருத்துவர் அனுபவம் (மயக்க மருந்து கொடுக்கப்பட்ட நோயாளியின் பேச்சுத் தடுமாற்றத்தை 'மஷ்மவுத்' பாணியில் பிரபலமாகப் பின்பற்றி நகைச் சுவையை வழங்கியிருப்பார். இப்படம் Rotton Tomatoes தளத்தில் 83% மதிப் பீட்டு புள்ளி பெற்றது. Rolling Stone இதழ் 2015-இல் வெளியிட்ட '25 சிறந்த ஸ்டாண்ட்-அப் ஸ்பெஷல்கள்' பட்டியலில் 7-வது இடம் பெற்றது. 1984-இல் 26-

வது கிராமி விருதுகளில் சிறந்த நகைச்சுவை ஆல்பத்திற்கான பரிந்துரையைப் பெற்ற இப்படைப்பு, 1989-இல் 350,000 ஹோம் வீடியோவில் பிரதிகள் விற்பனையாகி முதலிடம் பிடித்தது. பிற்காலத்தில் இவர் வயதுசார் பார்வைச் சவால்களை எதிர்கொண்ட போதிலும், கலைத் தளத்தில் தனது முத்திரையைத் தொடர்ச்சியாகப் பதித்து வந்தார். எனினும், குடும்ப விழுமியங்களை மையமாகக் கொண்ட இவரின் படைப்புகள், பிற்காலத்தில் இவர் எதிர்கொண்ட பால் நிலை நீதி சார்ந்த விமர்சனங்களின்போது தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## விருதுகள் மற்றும் கௌரவங்கள்:

பில் காஸ்பி தனது கலைப் பயணத்தில் பல உயரிய விருதுகளை வென்று சாதனை படைத்தார். சிறந்த நகைச்சுவை ஆல்பத்திற்காக 1965 முதல் 1970 வரை தொடர்ச்சியாக 6 முறை உட்பட மொத்தம் 8 'கிராமி' (Grammy) விருதுகளைப் பெற்றார். I Spy தொடருக்காக மூன்று முறையும் (1966 - 1968), 'தி காஸ்பி ஷோ' தொடருக்காக இரண்டு முறையும் (1985, 1986) என 5 Golden Globe விருதுகளை வென்றார். The Cosby Show தொடருக்காக 1985, 1986 Daytime Emmy Awards 2 தடவைகள், Fat Albert and the Cosby Kids (1981), Little Bill (2004) Awards: விருதுகள் 12 தடவைகள் மேலும், சிறுவர் கல்வி மற்றும் பொழுதுபோக்குத் தொடர்களுக்காக 2 Daytime Emmy விருதுகளையும், 12 People's Choice (1985 - 1992 வரை தொடர்ச்சியாக Favorite Male TV Performer) விருதுகளையும் பெற்றார்.

அமெரிக்கப் பண்பாட்டுத் தளத்தில் இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக 1998-இல் 'கென்னடி சென்டர் ஆனர்ஸ்' (Kennedy Center Honors), 2002-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் 'விடுதலைப் பதக்கம்' (Presidential Medal of Freedom), 2003-இல் 'பாப் ஹோப் மனிதநேய விருது', 2009-இல் அமெரிக்க நகைச்சுவைக்கான 'மார்க் ட்வைன் பரிசு' மற்றும் 2010-இல் அமெரிக்கக் கடற்படை நினைவகத்தின் 'லோன் சைலர் விருது' ஆகிய உயரிய கௌரவங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. மேலும், உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களால் 72 கௌரவ கலாநிதிப் பட்டங்களும் இவருக்கு அளிக்கப்பட்டன.

## குற்றச்சாட்டுகள்:

2000-களின் நடுப்பகுதியில் தொடங்கி, 2014-இல் சர்வதேச ஊடகப் பரப்பில் தீவிரமான கவனத்தைப் பெற்ற பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள் பில் காஸ்பியின் பொது வாழ்வியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. 60-க்கும் மேற்பட்ட பெண்கள் இவர் மீது பாலியல் துன்புறுத்தல் மற்றும் போதைப்பொருள் கொடுத்து பாலியல்த் தாக்குதல் நடத்தியதாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். பெண்களை வசப்படுத்துவதற்காக 'குவாலூட்ஸ்' (Quaaludes) மாத்திரைகளைப் பெற்றதை காஸ்பி முந்தைய சிவில் வழக்கின் வாக்குமூலத்திலும் ஒப்புக்கொண்டிருந்தார். இததைத் தொடர்ந்து, டெம்பிள் பல்கலைக்கழக ஊழியரான ஆண்ட்ரியா கான்ஸ்டாண்டிற்கு போதைப்பொருள் கொடுத்துப் பாலியல் தொந்தரவு செய்த வழக்கில் 2018-இல் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, இவருக்கு 3 முதல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், 2021 ஜூனில் பென்சில்வேனியா உச்ச நீதிமன்றம் தொழினுட்பக் காரணங்களைச் சுட்டிக்காட்டி 2018-ஆம் ஆண்டின் தண்டனையை ரத்து செய்து காஸ்பியை விடுவித்தது. 2005-இல் அப்போதைய மாவட்ட வழக்கறிஞர் புரூஸ் காஸ்டர் (Bruce Castor), ‘சிவில் வழக்கில் வாக்குமூலம் அளித்தால் குற்றவியல் வழக்குத் தொடரப்பட மாட்டாது’ என அளித்த உறுதியை நம்பியே, தனக்கு எதிராக வாக்குமூலம் அளிக்க மறுக்கும் அரசியலமைப்பு உரிமையை (Fifth Amendment Right) காஸ்பி துறந்திருந்தார். ஆனால், 2015-இல் புதிதாகப் பொறுப்பேற்ற அரசு வழக்கறிஞர் கெவின் ஸ்டீல் (Kevin Steele) அதே வாக்குமூலத்தைக் குற்றவியல் வழக்கில் முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தினார். முன்னாள் வழக்கறிஞரின் உறுதிமொழியை மீறி வழக்குத் தொடர்வது அரசியலமைப்புச் சட்ட நடைமுறைக்குக் (Due Process) எதிரானது எனத் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், காஸ்பியின் தண்டனையைச் செல்லாததாக்கி அவரை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டது.

சட்ட ரீதியான இத்தொழினுட்ப விடுதலை காஸ்பிக்குத் தண்டனையிலிருந்து விலக்களித்த போதிலும், இவர் மீதான சர்வதேச ஊடகங்களின் தார்மீகக் கேள்விகளைக் குறைக்கவில்லை. இக்குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மை காரணமாக, இவருக்கு வழங்கப்பட்ட 'கென்னடி சென்டர் ஆனர்ஸ்' (1998), 'மார்க் ட்வைன் பரிசு' (2009) ஆகிய உயரிய விருதுகள் 2018-இல் திரும்பப் பெறப்பட்டன. அமெரிக்க கடற்படையின் 'கௌரவ தலைமைப் படை அதிகாரி' (Honorary Chief Petty Officer) பட்டமும், 2002-ஆம் ஆண்டின் 'தொலைக்காட்சி விமர்சகர்கள் சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதும்' (TCA Career Achievement Award) 2014-இல் திரும்பப் பெறப்பட்டன. மேலும், 60-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களின் கௌரவ கலாநிதிப் பட்டங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், ஆஸ்கார் விருதுகளை வழங்கும் 'அகாடமி' (AMPAS) அமைப்பிலிருந்தும் இவர் 2018-இல் வெளியேற்றப்பட்டார்.

பில் காஸ்பி மீதான கடுமையான பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள் வெளிவந்ததைத் தொடர்ந்து, இவரின் கலைப் படைப்புகளை ரசிப்பது வெகுஜன மக்களுக்குப் பெரும் மன உளைச்சலையும் சங்கடத்தையும் ஏற்படுத்தும் அனுபவமாக மாறியுள்ளது. அதிகார பலம் மற்றும் புகழைப் பயன்படுத்தி நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இக்குற்றச்சாட்டுகள், கலைத் துறையில் பால்நிலை நீதி (Gender Justice) மற்றும் பாதுகாப்பு குறித்தான தீவிரமான விவாதங்களை ஊடகத் தளங்களில் உருவாக்கியுள்ளன.

இவரின் மேடைப் படைப்புகள் குறித்து 'வால்ச்சர்' (Vulture.com) ஊடகம் குறிப்பிடுகையில், ‘இப்படைப்பைப் படைப்பாளியிடமிருந்து தனியாகப் பிரித்துப் பார்த்து ரசிப்பது இனி சாத்தியமற்றது’ எனக் கருத்துரைத்துள்ளது. அதேபோன்று, 'ரோலிங் ஸ்டோன்' (Rolling Stone) இதழ், ‘களங்கப்படுத்தப்பட்ட இந் நகைச்சுவைக் கலைஞரின் எந்தவொரு படைப்பையும் பார்ப்பது கிட்டத்தட்ட இயலாத ஒன்று’ என விமர்சித்துள்ளது. குடும்ப விழுமியங்களையும் உழைக்கும் வர்க்க வாழ்வியலையும்

மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இவரின் கலைப் படைப்புகள், பிற்கால வாழ்வில் எழுந்த பால்நிலை நீதி மீறல்களால் தார்மீக ரீதியாகக் கடுமையான கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

## தற்போதைய நிலை:

1972-இல் நடந்ததாகக் கூறப்படும் பாலியல் அத்துமீறல் சம்பவம் தொடர்பாக, டோனா மோட்சிங்கர் (Donna Motsinger, தற்போது வயது 84) என்பவர் கலிபோர்னியா மாநிலத்தின் சாண்டா மோனிகா நீதிமன்றத்தில் பில் காஸ்பிக்கு எதிராகச் சிவில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

> **“ பில் காஸ்பி மீதான கடுமையான பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள் வெளிவந்ததைத் தொடர்ந்து, இவரின் கலைப் படைப்புகளை ரசிப்பது வெகுஜன மக்களுக்குப் பெரும் மன உளைச்சலையும் சங்கடத்தையும் ஏற்படுத்தும் அனுபவமாக மாறியுள்ளது. ”**

இதேவேளை, நெவாடா மாநிலத்தில் காஸ்பிக்கு எதிராகத் தொடரப்பட்ட சிவில் வழக்கில், அம்மாநில உச்ச நீதிமன்றம் அண்மையில் ஒரு முக்கிய சட்டத் தீர்ப்பை வழங்கியது. அதன்படி, நெவாடா மாநிலச் சட்டப் பிரிவுகளின் கீழ், ஒரு நபரைக் கட்டாயப்படுத்தி மூன்றாம் நபருடன் உடலுறவில் ஈடுபட வைப்பது 'பாலியல் ஊடுருவல்' (Sexual Penetration) என்ற குற்றவியல் வரையறைக்குள் வராது என நீதிமன்றம் விளக்கமளித்தது.

டோனா மோட்சிங்கரின் வழக்கின் ஒரு பகுதியாக, பில் காஸ்பி தனது மற்றும் அவரது மனைவி கமீல் காஸ்பியின் கடந்த இரண்டாண்டுகளுக்கான நிதி நிலவர அறிக்கைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த 12 ஆண்டுகளில் தனது மனைவிக்கோ அல்லது குடும்பத்தினருக்கோ அவர் மாற்றிய சொத்துகள் தொடர்பான முழுமையான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் கையளிக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் ஊடகத் தளத்திற்கும் பொதுச் சமூகத்திற்கும் ஒரு முக்கியமான தார்மீகப் பாடத்தைக் கற்றுத் தருகின்றன. ஒரு கலைஞரின் படைப்பாற்றலுக்கும் அவரது தனிப்பட்ட ஒழுக்கத்திற்கும் நேரடியாகத் தொடர்பில்லை என வாதிடப்பட்ட போதிலும், சமூகம் வழங்கும் அங்கீகாரத்திற்கும் மதிப்பிற்கும் அக்கலைஞர் முழுமையான தார்மீகப் பொறுப்பும் கடப்பாடும் உடையவர் என்பதை இது உணர்த்துகிறது. பில் காஸ்பியின் மேடை நகைச்சுவைத்திறனை இன்னும் பலர் பாராட்டியபோதிலும், அவர் இழைத்த தீவிரமான குற்றங்களை இப்பாராட்டுகளால் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. 'கலையைக் கலைஞனிடமிருந்து தனியாகப் பிரித்துப் பார்க்க முடியுமா?' என்ற தார்மீகக் கேள்வி, இன்றைய உலகளாவிய சமூக நீதிப் பரப்பில் ஒவ்வொருவருக்குள்ளும் எழ வேண்டிய அவசியத்தை இச்சம்பவங்கள் வலியுறுத்துகின்றன.

பிரபலங்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றும் போக்கு ஆபத்தானது. பிரபலம் என்பது ஒரு கவர்ச்சியான முகமூடி; அதன் பின்னணியில் நிகழ்பவற்றைச் சமூகம் எப்போதும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய வேண்டும். 'அமெரிக்காவின் தந்தை' எனப் போற்றப்பட்ட ஒருவரே திரைக்குப் பின்னால் பல தசாப்தங்களாகப் பாலியல் வன்கொடுமைகளைச் செய்துவந்த சாத்தியக்கூறை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

பாலியல் வன்கொடுமைப் புகார்களைச் சமூகம் எப்போதும் தீவிரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். பல ஆண்டுகள் கழித்து ஒரு பெண் பேச முன்வருவதற்குப் பின்னால் - அச்சம், அவமானம், பிரபலத்தின் அதிகாரச் செல்வாக்கு மற்றும் சட்ட ரீதியான தடைகள் எனப் பல காரணங்கள் இருக்கலாம். 2017-இல் தீவிரமடைந்த #MeToo இயக்கம், பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் துணிவுடன் குரல்கொடுக்கக் கதவுகளைத் திறந்தது. இதன் விளைவாகவே பல தசாப்தகாலப் பழைய குற்றச்சாட்டுகளும் வெளிச்சத்திற்கு வந்தன.

ஊடகங்களின் பொறுப்புணர்வு முதன்மையானது. காஸ்பி விவகாரத்தில், 2000-களின் நடுப்பகுதியிலிருந்தே சில பத்திரிகை

யாளர்கள் இக்குற்றச்சாட்டுகளைத் தீவிரமாக வெளிக்கொணர முயன்றபோதிலும், பல பிரதான ஊடகங்கள் 2014 வரை இவற்றை ஒதுக்கியே வைத்திருந்தன. இன்று சமூக ஊடகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குரல்கொடுக்க உதவினாலும், பில் காஸ்பி விவகாரத்தில் உறுதிப்படுத்தப்படாத போலித் தகவல்களும் அதிகளவில் பரப்பப்படுகின்றன என்பதில் தெளிவு வேண்டும்.

தமிழ்ச் சமூகப் பின்னணியில், இச்சம்பவங்கள் ஆழமான சிந்தனைக்குரியவை. நமது சமூகத்திலும் பிரபலங்கள், தலைவர்கள் மற்றும் கலைஞர்கள் பலர் செல்வாக்குச் செலுத்துகின்றனர். அவர்களை மதிக்கின்ற அதேவேளையில், அவர்களின் தவறுகளை மறைப்பதற்கோ அல்லது அவர்களின் புகழுக்காகப் பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை ஒடுக்குவதற்கோ அனுமதிக்கக் கூடாது. நீதியான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், விளிம்புநிலை மனிதர்களின் குரல்களுக்குச் செவிமடுக்கவும், குற்றவாளிகள் எத்துணை சக்திவாய்ந்தவர்களாக இருப்பினும் அவர்களைக் கேள்வி கேட்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

பில் காஸ்பி ஒரு சிக்கலான வரலாற்றுக் குறியீடு. அவர் ஒரு புறம் கலைத்துறையில் புரட்சியை ஏற்படுத்திய மாபெரும் சாதனையாளர்; ஆபிரிக்க-அமெரிக்கக் கலைஞர்களுக்குப் புதிய கதவுகளைத் திறந்துவிட்டவர்; The Cosby Show மூலம் ‘அமெரிக்காவின் தந்தை’ எனப் புகழப்பட்டவர்; மேடை நகைச்சுவையில் புதிய பாணியை உருவாக்கி 8 'கிராமி' விருதுகளை வென்றவர். மறுபுறம், 60-க்கும் மேற்பட்ட பெண்களின் வாழ்வியலைச் சிதைத்த குற்றச்சாட்டுகளுக்கு உரியவர். இதனால் அவரது கலை மரபும் புகழும் மீளமுடியாதவாறு களங்கமடைந்துவிட்டன.

இவரின் கலைப்பங்களிப்புகளைப் பாராட்டும் பலரும், இவர் மீதான குற்றச்சாட்டுகளின் தீவிரத்தை மறக்க முடியாத சூழலில், பில் காஸ்பி என்பவர் சாதனைக்கும் சர்ச்சைகளுக்கும் இடைப்பட்ட ஒரு சிக்கலான அடையாளமாகவே நீடிக்கிறார்.

‘மகத்தான கலைஞர், மகத்தான மனிதராக இருக்க வேண்டியசியமில்லை’ என்பதே பில் காஸ்பியின் வாழ்வியல் உணர்த்தும் முதன்மைப் பாடமாகும். ஒரு நபரின் கலைத்திறனை அங்கீகரிக்கும் அதேவேளையில், அவரது குற்றங்களை மன்னிக்கவோ கடந்து செல்லவோ முடியாது. பில் காஸ்பி என்ற பெயர், இனி எப்போதும் கலைச் சாதனையின் உச்சத்திற்கும், தார்மீக வீழ்ச்சியின் ஆழத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் சின்னமாகவே நிலைத்திருக்கும். இக்கதையின் உண்மையான பாதிக்கப்பட்டவர்கள் அந்த 60-க்கும் மேற்பட்ட பெண்களே; அவர்களில் பலர் இன்றும் அந்தப் பாதிப்பிலிருந்து மீளப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சமூகம் மறந்துவிடக் கூடாது.

thinakaran.v@thaiveedu.com

இக்பால் அலி

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் ஆழமான தடம் பதித்த கீர்த்திமிக்க அரசியல நிஞரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், கவிஞருமான எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் நெருங்கிய நட்பைப் பெற்றவர் எம். எம். ஸுஹைர் ஆவார். இலங்கையின் சட் டத்துறையில் உயரிய தகைமையான ஜனாதிபதி சட்டத்தரணி எனும் அந்தஸ்தை எட்டிய முதுபெரும் சட்டவல்லுநராகவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மலேசியாவுக்கான இலங்கை முன்னாள் உயர்ஸ்தானிகராகவும் விளங்கிய இவர், பல்வேறு துறைகளிலும் ஆற்றல்மிக்க ஆளுமை யாகத் திகழ்ந்தார். ஊடகம், சமூகவியல், சட்டம், அரசியல் ஆகிய தளங்களில் இவர் ஆற்றிய பங்க ளிப்புகள் இலங்கைச் சமூக வரலாற்றில் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

தமது சமூகத்தின் எதிர்காலம் குறித்த தொலைநோக்குச் சிந்தனையுடன் செயற்பட்ட அவர், கொழும்பில் வாழ்ந்த இளம் சிறார்களின் எதிர்கால நலனையும் கருத்திற்கொண்டு, தாம் வாழ்ந்த சூழலில் மார்க்கக் கல்வி நிறுவனமொன்றைத் தோற்றுவித்தார். அத்துடன், பத்து ஆண்டுகளாக புதுமைக் குரல் என்னும் மாத இதழையும் வெளியிட்டார். அவர் தலைமை தாங்கி நடத்திய பாமிஸ் சமூக சேவை அமைப்பின் வெளியீடாக, பாமிஸ் என்னும் பத்திரிகை சுமார் ஆறு ஆண்டுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது. அதன் ஆங்கிலப் பதிப்பின் ஆசிரியராகவும் அவர் கடமையாற்றினார். இவ்வாறு சமூகத்தின் மத்தியில் அவர் ஏற்படுத்திய பல்வேறு தாக்கங்களும் ஆற்றிய பணிகளும் இன்றைய தலைமுறையினரால் பெரிதும் நினைவுகூரப்படாத வரலாற்றுப் பதிவுகளாக உள்ளன.

1983 ஜுலைக் கலவரம் தொடர்பில் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட ஜனாதிபதி விசாரணைக் குழுவில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான எஸ். சர்வா னந்தா (தலைவர்), எஸ்.எஸ். சகபந்து, எம்.எம். ஸுஹைர் ஆகியோர் இடம் பெற்றனர். யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டமை உள்ளிட்ட கலவ ரத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், இழப்புகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதில் இக்குழு ஈடுபட்டது.

# சட்டம், ஊடகம் மற்றும் ராஜதந்திரத் தளங்களில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். ஸுஹைர்

prasadbatti@gmail.com

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பணியாற்றிய எம்.எம். ஸுஹைர், அந்நிறுவனத்தின் ஊடாக நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம், மொழி, சமயம், கலை, விளையாட்டு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மக்களைச் சென்றடைவதில் பங்களித்தார். அந்நிறுவனத்தின் தலைமைப் பதவியை வகித்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராகவும் அவர் குறிப்பிடப்படுகிறார். இனத்துவக் கலாசாரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவதிலும் நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவத்தை மேம்படுத்துவதிலும் அவர் ஆற்றிய பங்களிப்புகள், அவரது வாழ்வையும் பணியையும் மதிப்பிடுவதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

தகவல், கல்வி மற்றும் குடும்பம் சார்ந்த பொழுதுபோக்கு ஆகியவற்றில் தனது பார்வையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறந்த நிகழ்ச்சிகளை வழங்குவதே SLRC-யின் நோக்கமாகும். தேசிய தொலைக்காட்சி வலையமைப்பான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 15 பிப்ரவரி 1982 அன்று தொடங்கப்பட்டது; 1986-இல் தனது ஸ்டுடியோ மற்றும் ஒளிபரப்பு வசதிகளை விரிவுபடுத்தியது; மேலும், ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து பெற்ற மூன்று மானிய உதவித் திட்டங்களின் கீழ் 1998-இல் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெரும்பாலான அசல் உபகரணங்களைப் புனரமைத்தது.

மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பும் இந்நிறுவனத்தின் தலைவராக, சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எம். எம். ஸுஹைரை முதன்முதலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்தார். இந்நியமனத்துக்கு அப்போது பெரும்பான்மைச் சமூகத்தினரில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் மனமுடைந்த ஸுஹைர், தமது ஆதங்கத்தை ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தினார். அதற்கு, இத்தகைய எதிர்ப்புகள் வழிப்போக்கர்களின் பிதற்றல்கள் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவற்றைப் பொருட்படுத்தாமல் தொலைக்காட்சி சேவையை மேலும் மேம்படுத்தி மக்களிடையே அதன் வரவேற்பை அதிகரிக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டார்.

ஸுஹைர் அவர்களிடம் ஊடக அனுபவமும், டிஜிட்டல் ஊடகத் தொழில் நுட்பமும் ஆழமான அறிவும் பரந்துபட்டது. பத்து வருடங்கள் புதுமைக்குரல் இதழியல் நடத்திய அனுபவம், ஊடகம் பற்றிய விரிவான, பன்முகமான பார்வை அவரிடம் காணப்பட்டன. தரமான ஊடகப் பணி, அர்ப்பணிப்புடன் செயல்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் கலைஞர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் ஆகியவர்களுடைய பங்களிப்புடன் அரச தொலைக்காட்சியினை மக்கள் மத்தியில் ஜனரஞ்சகத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் ஸுஹைரிடம் இயல்பாகவே காணப்பட்டன. அதை ஜனாதிபதி சந்திரிகா நன்கு அறிந்திருந்தார். ஆதலால்தான் ஸுஹைர் தொடரில் ஆரம்பத்தில் எழுந்த இனவாத ரீதியிலான விமர்சனங்களை தூக்கி எறிந்து விட்டு தம் பணிகளைச் செய்யுமாறு அவர் உத்தரவு விட்டார்.

தொலைக்காட்சியில் புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதற்குத் துணைநின்ற எம்.எம். ஸுஹைர், கிரிக்கெட் ஒளிபரப்பின் மூலம் நிறுவனத்தை அதிக வருவாய் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதிலும் பங்களித்தார். நேத்திரா என்னும் தமிழ் அலைவரிசையை உருவாக்குவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. மேலும், ஒளிபரப்புத் துறையில் பயிற்சியும் புதிய அனுபவங்களும் பெறுவதற்காகப் பணியாளர்களைப் பல சர்வதேசத் தொலைக்காட்சி நிலையங்களுக்கு அனுப்புவதற்கான வழிகாட்டல்களையும் வழங்கினார். இவ்வாறு, ஒளிபரப்புத் துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கலைஞர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த அவர், தமது பணிக்காலத்தில் அவர்களின் தொழில்சார் வளர்ச்சிக்கும் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களித்தார்.

வெளிநாட்டுத் தொலைக்காட்சித் தொடர்களை ஒளிபரப்பிய இலங்கையின் முன்னோடித் தொலைக்காட்சி நிறுவனமாக ரூபவாஹினி விளங்கியது. அவற்றுள், சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட ஜப்பானியத் தொடரான ஓஷின் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும், 2012 நவம்பரில் ஒளிபரப்பப்பட்ட சுஜாதா தியானி (டே ஜாங் கி) என்னும் கொரியத் தொடரும் பிரபலமடைந்ததுடன், கொரிய வரலாற்றுத் தொடர்கள் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுவதற்கும் வழிவகுத்தது. எம். எம். ஸுஹைர் தலைமையேற்றிருந்த காலத்தில், இயற்கை அனர்த்



“புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதிலும் கிரிக்கெட் ஒளிபரப்பின் மூலம் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருவாயை அதிகரிப்பதிலும் பங்களித்தார். அதேவேளை நேத்திரா தமிழ் அலைவரிசையை உருவாக்குவதற்கான முயற்சிகளையும், பணியாளர்களின் சர்வதேசப் பயிற்சி மற்றும் தொழில்சார் வளர்ச்சியையும் ஊக்குவித்து, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.”

தங்கள் உள்ளிட்ட நாட்டின் முக்கிய நெருக்கடிகளை நாடளாவிய ரீதியில் பதிவுசெய்து, நம்பகத்தன்மையுடன் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ரூபவாஹினி முக்கிய பங்காற்றியது. இத்தகைய காட்சிப் பதிவுகள் நாட்டின் நிலைமைகளை உலகறியச் செய்து, சர்வதேச அனுதாபத்தையும் மனிதாபிமான உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்குத் துணைநின்றன. இப்பங்களிப்பு இலங்கையின் ஒளிபரப்பு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது.

2004 டிசம்பர் 26 அன்று இலங்கையைத் தாக்கிய சுனாமிப் பேரழிவில் 30,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், சுமார் ஒன்றரை மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர். இப்பேரிடரின்போது, ரூபவாஹினியின் தலைவராக இருந்த எம்.எம். ஸுஹைர், அனர்த்தம் தொடர்பான அவசரச் செய்திகளை நாடளாவிய ரீதியில் நேரடியாக ஒளிபரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன்மூலம், உள்நாட்டு மக்களும் சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் உடனடியாக நிவாரணப் பணிகளிலும் மனிதாபிமான உதவிகளிலும் ஈடுபடுவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தார். பேரழிவைத் தொடர்ந்து ஏற்பட்ட உளவியல் பாதிப்புகள், தொற்றுநோய் அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட நெருக்கடிகள் குறித்த தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் ஊடகத்தின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

இக்காலப்பகுதியில் ரூபவாஹினியின் ஒளிபரப்புப் பிரிவுகளை மேற்பார்வை செய்த எம்.எம். ஸுஹைர், குறிப்பாகச் செய்திப் பிரிவின் ஊடாகச் சுனாமிப் பாதிப்புகள், அகதிகளின் மீள்குடியேற்றம், பாலங்களின் புனரமைப்பு, சர்வதேசத் தொண்டு நிறுவனங்களின் மனிதாபிமானப் பணிகள் ஆகியவற்றை விரிவாக மூன்று மொழிகளிலும் ஒளிபரப்புவதற்கு வழிகாட்டினார். இதனால், சுனாமி நிலவரம் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வதற்கான முக்கிய ஊடகமாக ரூபவாஹினி விளங்கியது. இச்செயற்பாடுகள் அவரது மேற்பார்வைத் திறனையும் நிர்வாக ஆளுமையையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஊழியர்களை மனம் நோகச் செய்யாமல் பணியாற்றச் செய்யும் பண்பும், நேர்மை, நிதானம் ஆகியனவும் அவரது நிர்வாகத்தின் சிறப்பம்சங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

சுனாமிக் காலப்பகுதியில், ஆங்கிலச் செய்திப் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றிய விஜய திசாநாயக்க, தமிழ் செய்திப் பிரிவின் ஓய்வுநிலைப் பணிப்பாளர் யூ.எல். யாகூப், தற்போதைய தமிழ்ச் செய்திப் பிரிவின் பணிப்பாளர் சி.பி.எம். சியாம், லண்டனில் வசிக்கும் கிருபாகரன் உள்ளிட்டோர் ஊடகப் பணியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர். சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களின் உண்மை நிலவரங்களை உலகறியச் செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை அவ்வப்போது நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவும் எம்.எம். ஸுஹைரின் தலைமைத்துவமும் வழிகாட்டலும் துணைநின்றன.

தனியார் தொலைக்காட்சிகள் நம்பகமான செய்திகளை ஒளிபரப்பினாலும், நெருக்கடியான காலங்களில் அரச ஊடகங்களின் செய்திகளை மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பர் என்பதை ஸுஹைர் நன்கு உணர்ந்து செயற்பட்டார். பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சமூகப் பொறுப்புணர்வு மிக்க நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒளிபரப்புவதற்கான வழிகாட்டல்களை வழங்கியதில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

அரச ஊடகம் என்ற வகையில், ஆளும் தரப்பின் அரசியல் செல்வாக்கிற்கு உட்பட வேண்டிய சூழல் ரூபவாஹினிக்கு இருந்தபோதிலும், ஸுஹைரின் அரசியல் மற்றும் சமூக நோக்குகள் அதன் செயற்பாடுகளில் ஓரளவு நடுநிலைத் தன்மையைப் பேணுவதற்கு வழிவகுத்தன. இதனால், பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட மக்களிடையேயும் ரூபவாஹினி மீதான பார்வையாளர் நம்பிக்கை அதிகரித்தது. அவரது வழிகாட்டலில், அரச தொலைக்காட்சிச் சேவை மொழித்திறன், அரசியல் அறிவு, சமூகப் புரிதல், கலைத்துறை அறிவு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, மும்மொழிகளிலும் தனது பணியை முன்னெடுத்தது.

“அரச ஊடகம் என்ற வகையில், ஆளும் தரப்பின் அரசியல் செல்வாக்கிற்கு உட்பட வேண்டிய சூழல் ரூபவாஹினிக்கு இருந்தபோதிலும், ஸுஹைரின் அரசியல் மற்றும் சமூக நோக்குகள் அதன் செயற்பாடுகளில் ஓரளவு நடுநிலைத் தன்மையைப் பேணுவதற்கு வழிவகுத்தன”

இந்தப் புதுப்பொலிவுடன், விளையாட்டுத்துறை, சமையற் கலை, நாட்டு நடப்பு விவகாரம், செய்திப் பிரிவு, சமயம், கலை. கலாசாரம், இலக்கியம் பொழுது போக்கு அம்சங்கள் என நாடு முழுவதும் தனக்கென பல இலட்சக் கணக்கான வாசகர் வட்டத்தைத் தேடி வைத்திருந்தனர். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், ஒளிபரப்பாளர்கள், அறிவிப் பாளர்கள், படப்பிடிப்பாளர்கள், கலைஞர்கள் தமது தொலைக்காட்சியினுடைய ஆளுமைகளை ஒளிபரப் புக் கலைக்குப் புதிய இரத்தம் பாய்ச்சி அதை மேன்மை படுத்துவதற்கான உந்து சக்தியாகவும் ஸுஹைர் விளங் கினார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஸுஹைர் அவர்கள் கடமையாற்றிய காலத்தில் பல சவால்களை எதிர்கொண்டார். அரச செய்திகளுக்கு வழங்கப்படும் முக் கியத்துவத்தைப் போலவே எதிர்க்கட்சித் தலைவரின் செய் திகளுக்கும் உரிய இடமளிக்க வேண்டும் என்ற இதழியல் அறம் மற்றும் நடுநிலையான நிலைப்பாட்டில் உறுதியாகச் செயற்பட்டார். 2005-ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ முதன்முதலில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, ரூபவாஹினி தொலைக்காட்சி அவருக்குக் கூடுதல் பிரசார வாய்ப்புகளை வழங்கியதாக எழுந்த சர்ச்சை தொடர்பில், அப்போதைய ஊடகத்துறை அமைச்சரான அநுர பண்டாரநாயக்கவிற்கும் ஸுஹைருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இவ்விடயம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கவனத்திற்கும் சென்றது. இதன்போது, அரச ஊடகத்தின் விதிமுறைக ளுக்கும் தேர்தல் சட்டங்களுக்கும் உட்பட்டே தாம் தொழில் முறையோடு செயற்பட்டதாக ஸுஹைர் விளக்கமளித்தார். அவரது நேர்மை, தொழில்சார் நாணயம், விடாமுயற்சி, கடின உழைப்பு ஆகிய பண்புகளை நன்கு அறிந்திருந்த ஜனாதிபதி, அவர் மீதான குற்றச்சாட்டைப் பெரிதாகக் கரு தவில்லை.

தொலைக்காட்சித் துறையில் தனித்துவமான பார்வையைக் கொண்டிருந்த ஸுஹைர், கிரிக்கெட் ஒளிபரப்பின் மூலம் இளைஞர்களையும் கிரிக்கெட் ஆர்வலர்களையும் ரூபவா ஹினியுடன் ஈர்த்ததுடன், விளம்பர வருவாயைப் பெருக்குவ தற்கும் வழிவகுத்தார். இதன் மூலம் தொலைக்காட்சி ஒளி பரப்புக்கு அவர் புதிய பரிமாணத்தை வழங்கினார்.

ஈழத்தின் இதழியல் வரலாற்றில் அறிஞர் சித்திலெப் பையின் முஸ்லிம் நேசன் பத்திரிகை, முஸ்லிம்களின் உரிமைக் குரலாகவும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் வெளிவந்தது. இதே நோக்கில், ஸுஹைர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு புதுமைக் குரல் பத்தி ரிகை சுமார் பத்தாண்டுகள் கொழும்பில் வெளிவந்தது. சமயச் சீர்திருத்தத்தையும் சமூக விழிப்புணர்வையும் முன் னிறுத்திய இப்பத்திரிகையின் மூலம் முஸ்லிம் சமூக எழுச் சிக்கு ஸுஹைர் பங்களித்தார். 1869-ஆம் ஆண்டு இலங்கை மலாய் முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட அலாமத் லங்காபுரி உள்ளிட்ட முஸ்லிம் பத்திரிகைகளின் வரலாற் றிலும் இத்தகைய இதழியல் முயற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நவீன தொழில்நுட்ப, போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த காலத்தில், முக்கியமான ஆளுமை களை நேரில் சந்தித்துப் பேட்டி கண்டு வெளியிடுவது பெரும் முயற்சியாக இருந்தது. இத்தகைய சூழலில், கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸை நேரில் சந்தித்து ஸுஹைர் மேற்கொண்ட நேர்காணல் அவரது இதழியல் அர்ப்பணிப் புக்குச் சான்றாகும். இத்தகைய முயற்சிகள் முஸ்லிம் சமூ கத்தின் நவீன கல்வி மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு வலு சேர்த்தன.

இன்றைய மார்க்கக் கல்வியிலும் உலகக் கல்வியிலும் சிறந்து விளங்கும் ஜாமியா நளீமியாவின் உருவாக்கத் திற்கான சிந்தனை விதைகளைத் தூவியவர்களில் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் குறிப்பிடத்தக்கவர். 1941-ஆம் ஆண்டு முஸ்லிம் மித்திரன் பத்திரிகையில் நவீன சவால் களை எதிர்கொள்ளக்கூடிய கல்வி நிறுவனம் உருவாக வேண்டு மென வலியுறுத்திய அவர், புதுமைக் குரல் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலும் நவீன சவால்களை எதிர்கொள்ளக்கூடிய முஸ்லிம் கல்விமான்களை உரு வாக்க வேண்டியதன் அவசியத்தை

“ **ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலை வராக ஸுஹைர் அவர்கள் கடமையாற்றிய காலத்தில் பல சவால்களை எதிர்கொண் போதும். அரச செய்திகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைப் போலவே எதிர்க்கட்சித் தலைவரின் செய்திகளுக்கும் உரிய இடம ளிக்க வேண்டும் என்ற இதழியல் அறம் மற்றும் நடுநிலையான நிலைப்பாட்டில் உறு தியாகச் செயற்பட்டார்** ”

எடுத்துரைத்தார்.கொழும்பு முஸ்லிம்களின் சமூக நலன் சார்ந்த விடயங்களைத் தாங்கி மாதந்தோறும் வெளிவந்த புதுமைக் குரல், கவிதை, சிறுகதை, இலக்கியம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு இடமளித்தது. ஸுஹைரின் முஸ்லிம் அரசியல், சமூகச் சீர்திருத்தக் கட்டுரைகளும் நேர்காணல்களும் முஸ்லிம் சமூகத்தின் அறிவுசார் வளர்ச்சியைப் பதிவுசெய்யும் முக்கிய உள்ளடக்கங்களாக அமைந்தன.

1985–1991 காலப்பகுதியில் பாமிஸ் என்னும் பெயரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இதழ் வெளிவந்தது. இதன் ஆங்கில ஆசிரியராக எம். எம். ஸுஹைரும், தமிழாசிரியராக மறைந்த என்.எம்.எம். றஸீனும் பணியாற்றினர். பாமிஸ் அமைப்பின் தலைவராகவும் ஸுஹைர் செயற்பட்டார். உலகப் புகழ் பெற்ற பலஸ்தீன அரசியல் கேலிச்சித்திரக் கலைஞரான நாஜி அல்-அலியின் படைப்புகளை இலங்கைக்கு அறிமுகப் படுத்தியதில் இவ்விதழுக்குப் பங்குண்டு. பலஸ்தீன மக்களின் துயரங்களையும் அவலங்களையும் சித்தரித்த அவரது கேலிச்சித்திரங்கள் ஈழத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தின. குறிப்பாக, கிழிந்த ஆடையுடன், காலணிகளின்றி, கைகளைக் கட்டிய நிலையில் சித்தரிக்கப்பட்ட ஹன்சலா சிறுவன் உலகப் புகழ்பெற்ற குறியீட்டுப் படிமமாக விளங்கினான். இவ்விதழில் செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் இலக்கியப் படைப்புகள் வெளிவந்ததுடன், அதில் வெளியான கேலிச்சித்திரங்கள் பின்னர் நூலாகவும் தொகுக்கப்பட்டன.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் நண்பராக விளங்கியவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர் ஆவார். தன் தோழனை நாட்டின் நாடாளுமன்றத்தில் அரசியல் ரீதியாகச் செயற்பட வைக்க வேண்டும் என்ற நோக்கில், அஷ்ரஃப் அவர்கள் ஸுஹைரின் இல்லத்திற்கு நேரில் சென்று தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கினார். இதன் அடிப்படையில், 1994 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் மக்கள் கூட்டணியின் (People's Alliance) தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு, நாட்டின் சட்டவாக்கத் துறையில் எம்.எம். ஸுஹைர் பணியாற்றித் தனது இதழியல் மற்றும் அரசியல் பங்களிப்பை வழங்கினார்.

### கல்வி வாழ்க்கை:

முஹம்மது முஹம்மது ஸுஹைர் 11-ஆம் தேதி ஜூன் 1947-இல் வெலிகமையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியினை வெலிகம பாடசாலையில் கல்வி பயின்வர். பின்னர் ஸுஹைர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கல்வி பயின்றார், அங்கு 1965-இல் க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். 1968-இல் இலங்கை சட்டக் கல்லூரியில் சேர்ந்த அவர், அங்கு 'ஆசியா ஃபவுண்டேஷன்' (Asia Foundation) புலமைப்பரிசிலைப் பெற்றார். 1970-இல் சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்ற அவர், 1972-இல் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதிவு செய்துகொண்டார்.

அக்காலத்தில் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாகவும் பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் பணியாற்றிய பி. ராமநாதன் அவர்களின் ஊக்குவிப்பினால், ஸுஹைர் 1973-ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாக இணைந்தார். ஏறத்தாழ பத்து ஆண்டுகள் அரச சேவையில் ஈடுபட்ட அவர், முதல் ஐந்து ஆண்டுகள் சிவில் பிரிவிலும், அடுத்த ஐந்து ஆண்டுகள் குற்றவியல் பிரிவில் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாகவும் அரச தரப்பு வழக்கறிஞராகவும் பணியாற்றினார். சிவில், குற்றவியல் வழக்குகளில் அரசின் சார்பில் ஆஜரானதுடன், உயர் நீதிமன்றத்தில் கொலை வழக்குகளிலும், மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் குற்றவியல் மேன்முறையீட்டு வழக்குகளிலும் வாதாடினார். 1983-ஆம் ஆண்டு சிரேஷ்ட அரச சட்டத்தரணி பதவியிலிருந்து விலகி, மீண்டும் தனியார் சட்டத் தொழிலில் ஈடுபட்டார். 2001-ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். 2004 முதல் 2005-வரை ஸாஹிரா கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவராகவும், அதே காலகட்டத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அரசுக்குச் சொந்தமான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஸுஹைர் மீண்டும் நியமிக்கப்பட்டார். 2006 முதல் 2012-வரை ஈரானுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய அவர், போரின் முக்கியமான கட்டத்தில், சலுகை நிபந்தனைகளில் எரிபொருளைப் பெறுவதற்கான கடன் வசதியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார். அப்போதைய ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நெஜாத் தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, வட்டியற்ற எரிபொருள் திட்டத்தைப் பெற்றுக்கொடுத்தார். இதன் மூலம், 2008 ஆகஸ்ட் மாதமளவில் 675 மில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்த நிதி உதவி இலங்கைக்குக் கிடைத்தது. நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த இலங்கை அரசாங்கத்துக்கு அவர் ஆற்றிய இவ்வுதவி குறிப்பிடத்தக்கது. 'காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது' என்ற திருக்குறளுக்கு ஏற்ப, அரசதந்திரத் துறையில் பங்களிப்பாற்றிய ஸுஹைர், தற்போது முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் விழிப்புணர்வையும் முன்னிறுத்திச் செயற்படும் சூறா கவுன்சிலின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

சட்டத்துறை, ஊடகத்துறை, கல்வித்துறை, அரசதந்திரம் ஆகிய பல்வேறு தளங்களில் பணியாற்றிய எம். எம். ஸுஹைர், தமது அறிவையும் அனுபவத்தையும் பொதுநலப் பணிகளுக்குப் பயன்படுத்தியவர் ஆவார். அரச சட்டத்தரணியாகத் தொடங்கிய அவரது தொழில்முறைப் பயணம், ஜனாதிபதி சட்டத்தரணி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர், மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மற்றும் ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் ஆகிய பொறுப்புகள் வரை விரிவடைந்தது. குறிப்பாக, நாட்டின் நெருக்கடியான காலகட்டத்தில் ஈரானுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்பு அவரது அரசதந்திர அனுபவத்தை வெளிப்படுத்துகிறது. இவற்றுடன், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் விழிப்புணர்வையும் முன்னிறுத்திய அவரது செயல்பாடுகள், அவரைச் சர்வதேச அளவில் ஒரு பல்துறை ஆளுமையாக அடையாளப்படுத்துகின்றன.

Iqbal.ali@thaiveedu.com



## மறக்க முடியாத ஆளுமை: சமூக, அரசியற் செயற்பாட்டாளர்

# சி.அ. யோதிலிங்கம்

- எஸ்.கே. விக்னேஸ்வரன் -

'மனிதர்களது உலகவாழ்வில் எதுவுமே நிச்சயமானவை அல்ல' என்பதுதான் இந்த உலகின் பெருமையே என்பதை நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் உலகு' என்று இரத்தினச் சுருக்கமாக தனது குறளில் சொல்லியிருப்பான் வள்ளுவன். கூடவே முட்டையிலிருந்து குருவி அதன் ஓட்டை உடைத்துக்கொண்டு பறந்துவிடுவது போன்றது தான், உடம்புக்கும் உயிருக்குமான உறவு என்றும் சொல்லியிருப்பான் அவன். நண்பரும் சமூக அரசியற் செயற்பாட்டாளருமான, நண்பர்களால் சோதி மாஸ்ரர்' அல்லது 'சோதிவாத்தி' என்று உரிமையுடன் அழைக்கப்பட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர், சட்டத்தரணி சி.அ. யோதிலிங்கம் அவர்களது எதிர்பாராத மரணச் செய்தியைக் கேட்டபோது, நான் மேற்சொன்ன குறள்கள் மீண்டுமொருமுறை என்னை இடித்துரைப்பதுபோல் நினைவுக்கு வந்தன.

உண்மையில் அவரது இழப்பு சற்றும் எதிர்பாராத ஒன்று. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் அவர் தனது எழுபதாவது அகவையை முடித்துக் கொண்டு, அடுத்த வயதில் காலடி வைத்தபோது, கடந்த ஜனவரி போல, அடுத்த ஜனவரியிலும் நேரில் சந்திப்போம் என்று நான் சொல்லியிருந்தேன். கொழும்பு, கொட்டாஞ்சேனை 'நல்லாயன் கல்லூரியில்' ஆசிரியாக இருந்துகொண்டே பகுதி நேரமாக சட்டக் கல்வியையும் மேற்கொண்டு சித்தியெய்தி சட்டத்தரணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட அவர், தனது ஆசிரியப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும், ஒரு சட்டத்தரணியாகச் செயற்படும் நோக்குடன் யாழ். நோக்கித் திரும்பியிருந்தார். உரும்பிராய் சந்தியிலிருக்கும் 'தியாகி சிவகுமாரன்' சிலைக்கு அருகாக இருக்கும் ஒரு இரண்டுமாடிக் கட்டடத்தின் மேல்மாடி அவரது சட்ட ஆலோசனைக்கான அலுவலகமாக இருந்தது. அது அவரிடம் சட்ட ஆலோசனைகளுக்காக வரும் வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் காரியாலயமாகவும், அது தவிர்ந்த நேரங்களில் அவரது நண்பர்களை சந்தித்து சமகால அரசியல், நூல்கள் சம்பந்தமாக உரையாடும் மையமாகவும் இயங்கி வந்தது. நான் இலங்கை செல்லும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரு தடவையாவது அவரிடம்

prasadbatti@gmail.com

சென்று சந்திப்பதையும், உரையாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தேன். கடந்த ஆண்டு சற்று வித்தியாசமாக, எனது பிறந்த ஊரான 'அம்பனில்' இருந்த எனக்குச் சொந்தமான காணியையும் வீட்டையும் எனது சகோதரிக்கு வழங்குவதற்குத் தேவையான சட்டரீதியான வேலைகளை அவரைக் கொண்டு செய்வித்தும் இருந்தேன். மிகவும் நிதானமாகவும் சிரத்தையுடனும் கையில் எடுத்த வேலைகளை அமைதியாகச் செய்து முடிக்கும் அவரது பாணி, அவருக்கு நிறைய வாடிக்கையாளர்களை ஈட்டிக் கொடுத்திருந்ததை நான் கண்டு அவரைப் பாராட்டியுமிருந்தேன்.

கொழும்பில் அரசியல் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே, இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலமைப்புகள், அவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டங்கள், நாட்டில் இனரீதியான பிளவுகளை வளர்த்தெடுப்பதில் அவை கொண்டிருந்த பங்கு ஆகியவை குறித்து அவர் ஆய்வுகளை மேற்கொண்டு, எழுதியும் பேசியும் வந்தார். இப்பணிகள் அவரது மாணவர்களுக்கு மட்டுமன்றி, அன்றைய சமூகத்திற்கும் பயனுள்ளவையாக அமைந்தன. இதன் மூலம் அவர் வெறுமனே ஓர் ஆசிரியராக மட்டுமன்றி, அரசியலமைப்பு மற்றும் சட்டவாக்கம் தொடர்பான விடயங்களைத் தொடர்ந்து ஆய்வுசெய்து, விவாதித்து, எழுதி, அவை தொடர்பான நூல்களை வெளியிட்டு வந்த ஒரு செயற்பாட்டாளராகவும் உருவெடுத்தார்.

வாசித்தல், உரையாடல், அரசியல் கூட்டங்களிலும் விவாதங்களிலும் பங்கேற்றல் எனத் தொடர்ந்து இயங்கிவந்த அவர், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை பயனளிக்காத நிலையில் இவ்வளவு விரைவாகக் காலமாவார் என்பதை அவருடன் பழகிய எவராலும் நம்பமுடியாதிருந்தது. ஏனெனில், இறுதிக்காலம் வரை தனது பணிகளிலும் சமூகச் செயற்பாடுகளிலும் வயது சார்ந்த தடுமாற்றங்கள் எதுவுமின்றி, தெளிவாகச் சிந்திக்கவும் உரையாடவும் கூடியவராகவே அவர் விளங்கினார். அந்த வகையில், அவரது மறைவு எதிர்பாராத பேரிழப்பாகவே அமைந்தது. வள்ளுவர் கூறிய 'நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்ற குறளில் வெளிப்படும் நிலையாமையின் உணர்வை ஒத்ததாகவே இந்த இழப்பை நான் உணர்கிறேன்.

அமைப்புடனான தொடர்புகளின்போதே, 'ரமணி' என்ற பெயரில் அவரை முதன்முதலாகச் சந்தித்ததாக நினைவு. அப்போது அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவராக இருந்ததை அறிந்திருந்தேன்.

ஆயினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவரை 'யோதிலிங்கம்' என்ற பெயரில் சந்தித்தது, விடுதலைப் புலிகளால் விஜிதரன் என்ற மாணவன் கடத்திச் செல்லப்பட்டதற்கு (1986) எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களின்போதுதான். அப்போது இடம்பெற்ற ஊர்வலங்கள், மாணவர்களுக்கான பொதுக்கூட்டங்கள் எனப் பல்வேறு வடிவங்களில் எதிர்ப்புப் போராட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. அந்தப் போராட்டங்களின் மாணவத் தலைவர்களில் ஒருவராக யோதிலிங்கம் அறியப்பட்டிருந்தார். மாணவர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பெழுச்சி உருவாகியிருந்த, மிகுந்த நெருக்கடியான காலகட்டம் அது.

விஜிதரனின் விடுதலையைக் கோரி மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும், பின்னர் ஆசிரியர்களின் தலையீட்டுடன் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதும் வரலாறு. ஏற்கனவே விஜிதரன் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுவிட்டான் என்ற செய்தி தெரியவந்திருந்தது. அது ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து மாணவர்கள் முற்றாக விடுபடாத நிலையிலும், சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவுக்கு வந்தது. ஆனால், அந்த நிகழ்விலும் எதிர்ப்புப் போராட்டங்களிலும் உண்ணாவிரதத்திலும் பங்கேற்ற முக்கியமான மாணவர்களைத் தேடித் தண்டிக்கும் முயற்சியை விடுதலைப் புலிகள் கைவிடவில்லை. குறிப்பாக, ரயாகரன், விமலேஸ்வரன் ஆகிய மாணவர்கள் மீது தமது வன்மத்தைக் காட்டுவதில் அவர்கள் தீவிரமாக இருந்தனர். ரயாகரன் கைது முயற்சியிலிருந்து தப்பியதுடன், உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்று அதனை முன்னின்று நடத்திய மாணவன் விமலேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டதும் இடம்பெற்றன. இவ்வாறான அதிர்ச்சிகரமான சம்பவங்கள் நிறைந்த காலகட்டமாக அது அமைந்தது. அப்போது மாணவர் போராட்டங்களின் தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்ட யோதிலிங்கமும் உயிர் தப்பியவர்களில் ஒருவர் என்றே சொல்ல வேண்டும்.

•

நண்பர் யோதிலிங்கம் அவர்களை நான் முதன்முதலில் சந்தித்தது எண்பதுகளின் நடுப்பகுதியில் என்று ஞாபகம். 1983 இனக் கலவரத்திற்குப் பின்னர், வடக்கு, கிழக்கு முழுவதும் வாழ்ந்த இளைஞர்களை அரசியலின்பால் ஈர்த்த அரசியல் விவாதங்களும் உரையாடல்களும் தீவிரம் பெற்றிருந்த காலம் அது. 1984 இறுதியில், அங்கு செயற்பட்டு வந்த கிராமிய உழைப்பாளர் சங்கம் என்ற

பல்கலைக்கழகக் காலத்தில் அவர் அப்போதைய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் (EPRLF) தொடர்புடையவராக இருந்தார். எனினும், பின்னர் அவ்வமைப்பின் முற்றுமுழுதான இந்திய ஆதரவுப் போக்கில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அதிலிருந்து விலகினார். இதனால், அவ்வமைப்பினரால் ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து தப்புவதற்காகக்

கரந்துறையும் நிலைக்குத் தள்ளப்பட்ட தாஸ், செழியன் ஆகிய சக தோழர்களுடன் இணைந்து, சிலகாலம் நாட்டை விட்டு வெளியேறித் தமிழ்நாட்டில் இரகசியமாகத் தங்கியிருந்தார். அக்காலத்தில், மதுரையில் இயங்கிவந்த தமிழர் தகவல் நிலையத்துடனும் சிலகாலம் இணைந்து செயற்பட்டார். பின்னர், இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி நிலைமை ஓரளவுக்குச் சுமுகமடைந்ததைத் தொடர்ந்து இலங்கைக்குத் திரும்பி, கொழும்பில் ஆசிரியர் பணியில் இணைந்துகொண்டார். அதற்குப் பின்னரான சில ஆண்டுகள் அவருக்கும் எனக்குமிடையில் தொடர்புகள் இல்லாத காலமாக அமைந்தன.

•

1990-இல் 'மேர்ஜ்' (MIRJE) அமைப்பின் அனுசரணையுடன், கவிஞர் சேரனை ஆசிரியராகக் கொண்டு 'சரிநிகர்' இதழ் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியபோது, அவருடனான எனது தொடர்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அவர் அவ்விதழின் ஆர்வமுள்ள வாசகராக இருந்ததுடன், அதில் எழுதுவதில் ஆர்வம்கொண்ட தனது மாணவர்களையும் எழுதுவதற்கு ஊக்குவித்து வந்தார். அவ்வாறு 'சரிநிகர்' இதழுடன் இணைந்த மாணவர்களில் ஒருவர்தான் இன்று பரவலாக அறியப்படும் எழுத்தாளர் சரவணன்.

பின்னாளில், யோதிலிங்கமும் சிலகாலம் 'சரிநிகர்' இதழின் பகுதிநேர ஆசிரியர் குழு உறுப்பினராகவும் கட்டுரையாளராகவும் செயற்பட்டார். அக்காலத்தில் அவர் தொடர்ச்சியாக எழுதிய பல கட்டுரைகள் இன்றுவரை நூல் வடிவம் பெறவில்லை. குறிப்பாக, 'பரந்தாமன்', 'செம்பாட்டான்' ஆகிய புனைபெயர்களில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரைகளும், பின்னர் 'இலங்கையின் அரசியலமைப்புகளும் இனப்பிரச்சினையும்' என்ற தலைப்பில் எழுதிய நீண்ட வரலாற்று ஆய்வுக் கட்டுரைத் தொடரும் இதுவரை நூலுருப் பெறவில்லை.

யோதிலிங்கம் அவர்களின் எழுத்துகள், அரசியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கும், சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையின் அரசியல் வரலாற்றையும், இனரீதியான ஒதுக்கல் போக்குகள் நாட்டின் அரசியல் பண்பாட்டைப் படிப்படியாக எவ்வாறு மாற்றியமைத்தன என்பதையும் அறிய விரும்புவோருக்கும் தெளிவான விளக்கங்களை வழங்குகின்றன. இன முரண்பாடுகளை வளர்க்கும் வகையில் சட்டங்களும் கொள்கைகளும் எவ்வாறு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதையும், அவற்றின் விளைவாகத் தோன்றிய உள்நாட்டுப் போர்களையும் நாடு எதிர்கொண்ட சமூக இழப்புகளையும் விரிவாக ஆராய விரும்புவோருக்கும் அவரது எழுத்துகள் பயனுள்ள பல தகவல்களை உள்ளடக்கியுள்ளன. அவரது பார்வையில், வரலாறு என்பது வெறுமனே தகவல்களின் தொகுப்பல்ல; கடந்தகாலத் தவறுகளையும் போதாமைகளையும் அடையாளம் கண்டு, அவற்றிலிருந்து பாடங்களைக் கற்று, மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திப்பதற்கான அடிப்படையாகும். இந்த நிலைப்பாட்டில் அவர் எப்போதும் உறுதியாக இருந்தார்.

கருத்து ரீதியாக அவருக்கும் எனக்குமிடையில் பல விவாதங்கள் நடந்திருக்கின்றன. அரசியல் ரீதியான அவரது பல முடிவுகள், அபிப்பிராயங்களுடன் நான் முரண்பட்டிருக்கிறேன். அவர் அவைபற்றிப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. இறுதியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலை நிராகரிப்பதாகவும் அதேவேளை ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை அத்தேர்தலில் நிறுத்துவதாகவும் ஒரு கருத்தை அவர் முன்வைத்தபோது நான் அதில் முரண்பட்டிருந்தேன். ஆனால், அவர் அதுபற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அதற்காக என்னுடனான உறவிலும் எத்தகைய விரிசலையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, எமது கருத்து வேறுபாடுகளுக்கும் விவாதங்களுக்கும் அப்பால் எங்களுக்கிடையிலான நட்பு தொடர்ந்து வந்திருக்கிறது. கருத்து மாறுபாடுகள் இருந்தபோதிலும், அவற்றைக் கடந்து நட்புறவைப் பேணக்கூடிய மனிதராக அவர் விளங்கினார். அவரது அரசியல் வரலாற்று அறிவிலும் கற்பித்தல் பணியில் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பிலும் எனக்கு மிகுந்த மதிப்பிருந்தது. அவர் உண்மையிலேயே மறக்க முடியாத ஓர் ஆளுமை என்பதில் ஐயமில்லை.

யோதிலிங்கம் அவர்கள் எழுதிய அரசியல் வரலாறு, அரசியல் அமைப்பியல், அரசியல் சிந்தனை நூல்வரிசை என்று தொடர்ச்சியாக எழுதிய 50-க்கும் மேற்பட்ட நூல்களில் பெரும்பாலானவை இளவயதினரை முன்வைத்து எழுதப்பட்டாலும் பிறருக்கும் பயனுள்ள சிறு நூல்களாகும் 'சமூக விஞ்ஞான ஆய்வு மையம்' என்ற அவரது அமைப்பின் வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூல்கள் வாசிப்புக்கு வசதியான சிறு நூல்களாகவும் மலிவு விலையில் கிடைக்கக்கூடியதாகவும் அமைந்திருப்பது அவற்றின் இன்னொரு சிறப்பாகும், இவற்றில் அநேகமான நூல்களின் பிரதிகள் 'நூலகம்' இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் தொடர்பாக அவரைப் போன்று தீவிரமாகவும் அர்ப்பணிப்புடனும் தொடர்ச்சியாக எழுதி வந்தவர்கள் மிகச் சிலரே. யோதிலிங்கம் தனது இறுதிக்காலம் வரை, தான் எழுத வேண்டுமென நம்பிய விடயங்கள் தொடர்பாகத் தொடர்ந்து எழுதி வந்தார். அரசியல் கற்கும் மாணவர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை அனைவருக்கும் பயன்படக்கூடிய பல நூல்களையும் கட்டுரைகளையும் பிரசுரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அண்மையில், 'எழுநா' இதழில் '1991 - 2009: ஈழப் போராட்டத்தின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும்' என்ற தலைப்பிலான தொடரை அவர் எழுதி வந்தார். அவரது மறைவுச் செய்தியைக் கேட்டதும், 'எழுநா' இதழில் வெளிவந்துகொண்டிருந்த அந்தத் தொடருக்கு இனி என்னவாகும் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. இதையடுத்து, 'எழுநா' அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அது குறித்து விசாரித்தேன். அவர்கள் அளித்த பதில் எனக்கு வியப்பையும் நம்பமுடியாத ஆச்சரியத்தையும் அளித்தது. ஆம், அந்தத் தொடரை முழுமையாக எழுதி முடித்த பின்னரே, தொடராக வெளியிடுவதற்காக அவர் அதனை 'எழுநா'விடம் கையளித்திருந்தார்.

ஆம். அது தான் யோதிலிங்கம்!. அவரது இழப்பு நம்பமுடியாத ஒரு பேரிழப்பு.

vickneaswaran.sk@thaiveedu.com

# சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை

## காலத்தின் சாட்சியாக வாழ்ந்த ஆளுமை

**- மா. சித்திவினாயகம்-**

எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான திரு. சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள், 2026 செப்ரெம்பர் 26-ஆம் நாள் கனடாவில் காலமானார். நெடுந்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் - வேலாச்சிப்பிள்ளை இணையரின் அன்பு மகனான இவர், 97 ஆண்டுகள் இப்புவியில் வாழ்ந்து, தமது அறிவாலும் அனுபவத்தாலும் உழைப்பாலும் சமூகத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்.

விளிம்புநிலை மக்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் குரலாக ஒலித்தவர் கணபதிப்பிள்ளை. அவர்களது உரிமைகளுக்காக அமைதி வழியில் தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்த இவர், எந்தவோர் அதிகார அமைப்புக்கும் அஞ்சாமல், உண்மைகளை யும் சமூக அநீதிகளையும் துணிச்சலுடன் வெளிப்படுத்திய ஆற்றல்மிக்க எழுத்தாளராகத் திகழ்ந்தார்.

கொழும்புத் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய இவர், தொழிற்சங்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். தொழிலாளர் உரிமைகள் மீதான அக்கறையுடன், தமது பணிக்காலம் முழுவ தும் உழைத்த இவர், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றின் மூலம் தமது சிந்தனைகளையும் சமூகப் பார்வையையும் வெளிப்படுத்தினார். இவரது எழுத்துகள், நூல்களிலும் இதழ்களிலும் வெளிவந்து வாசகர்களைச் சென்றடைந்தன.

தீவகப் பகுதியின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்த இவர், 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்டு, தீவகக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தமது பங்களிப்பை வழங்கினார். இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட சமூக, அரசியல் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக, இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தமது அரசியற் பயணத்தை முன்னெடுத்தார். வாழ்நாளின் இறுதிவரை தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளில் உறுதியுடன் இருந்தார்.

நெடுந்தீவின் அடையாளமாகவே வாழ்ந்த கணபதிப்பிள்ளை அவர்களின் வரலாற்றுப் பங்களிப்புகளில் முக்கியமானது, 1970-களில் வெளியான இலங்கையின் தீவுகள் பற்றிய வரலாற்று ஆவணமான 'சப்ததீவு' நூலில் இவர் எழுதிய நெடுந்தீவு குறித்த ஆய்வுச்செறிவுமிக்க கட்டுரை. நெடுந்தீவின் வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் பதிவு செய்த அந்த ஆக்கம், பிற்கால வரலாற்று ஆய்வுகளுக்கு முக்கிய மூல ஆவணமாக அமைந்தது.

புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்த காலத்திலும் அவரது சமூகப் பணி தொடர்ந்தது. எற்ரோபிக்கோ முதுதமிழர் மன்றம், நெடுந்தீவு ஒன்றியம் உள்ளிட்ட தமிழர் நலன்பேண் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். கனடாவிலிருந்து வெளிவரும் 'தாய்வீடு', 'நம்நாடு' போன்ற இதழ்களிலும் கட்டுரைகள் எழுதி, தமது சிந்தனைகளைத் தொடர்ந்து பகிர்ந்துகொண்டார்.

பழகுவதற்கு இனியவராகவும், அனைவரையும் மதித்து அன்புடன் வரவேற்கும் பண்பாளராகவும் விளங்கிய இவர், தமது எழுத்தாலும் செயற்பாடுகளாலும் பலரது மதிப்பையும் அன்பையும் பெற்றார்.

கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு ஒரு தனிமனிதரின் இழப்பு மட்டுமல்ல; நெடுந்தீவின் வரலாற்றையும் சமூக அனுபவங்களையும் ஆழமாக அறிந்திருந்த ஒரு மூத்த அறிவுக் களஞ்சியத்தை இழந்த துயருமாகும். அவரது அறிவையும் அனுபவத்தையும் சமூக மாற்றத்துக்காக இன்னும் விரிவாகப் பயன்படுத்தியிருக்கலாமே என்ற ஆதங்கமும் எஞ்சியிருக்கிறது.

இவர் வாழ்ந்த காலத்தின் சாட்சியாகவும், சமூக நீதிக்காகக் குரல்கொடுத்த எழுத்தாளராகவும், நெடுந்தீவின் வரலாற்றுப் பதிவாளராகவும் கணபதிப்பிள்ளை அவர்களின் பங்களிப்புகள் என்றும் நினைவுகூரப்படும்.

sithivinayagam@thaiveedu.com

வே. விவேகானந்தன்

# முதலாம் உலகப் போரில் வீரமரணம் அடைந்த ஈழத்தமிழ் மகன் ரிச்சர்ட் ஐயாத்துரை

**1914** ஜூலை 28 முதல் 1918 நவம்பர் 11 வரை உலகை உலுக்கிய முதலாம் உலகப் போர், மானுட வரலாற்றின் மிக மோசமான பேரழிவுகளில் ஒன்றாகப் பதிவானது. பிரித்தானியப் பேரரசின் காலனித்துவப் பிராந்தியமாக இருந்த இலங்கையிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களும் தன்னார்வலர்களும் இப்போருக்காகத் திரட்டப்பட்டனர். இவ்வாறு தன்னார்வலர்களாக இணைந்தவர்களுள் ரிச்சர்ட் ஐயாத்துரை வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராகக் கருதப்படுகின்றார்.

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டின் சங்கானையில், சமூகப் பொருளாதார வளம் மிக்க கந்தப்பா ஜேம்ஸ் ஐயாத்துரை - எஸ்தர் அன்னப்பிள்ளை (Esther Annapillai) இணையருக்கு மூத்த மக னாக 1890-ஆம் ஆண்டு ரிச்சர்ட் ஐயாத்துரை பிறந்தார். தமது மகனுக்கு உயர்தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த பெற்றோர், அவரைக் கண்டி டிரினிட்டிக் கல்லூரியில் (Trinity College) சேர்த்தனர். பாடசாலைப் பருவத்திலேயே கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் ஒருசேர மிளிர்ந்தார்.

முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்தபோது பிரித்தானிய அரசு தனது காலனித்துவ நாடுகளில் இருந்து, போர் படைகளின் பல்வேறு தரங்களுக்கும் தொண்டர்களாகப் பணிபுரிய ஆளணிகளைச் சேர்த்தது. இலங்கையில் இருந்து றோயல் கல்லூரி கொழும்பு, சென்ட். தோமஸ் கல்லூரி மவுன்ட்லேவனியா, Trinity College கண்டி, சென்ட். ஜோசப் கல்லூரி கொழும்பு, Kingswood College கண்டி போன்ற பிரபல கல்லூரிகளில் பயின்ற பழைய மாணவர்கள் ஆர்வத்துடன் இணைந்து கொண்டனர். அவ்வாறு கண்டி Trinity College-இல் படித்து இணைந்தவர்களில் ஒருவர்தான் ரிச்சர்ட் ஐயாத்துரை. ஐந்து ஆண் சகோதரர்களுக்கும் இரண்டு பெண் சகோதரிகளுக்கும் மூத்தவராகப் பிறந்த ரிச்சர்ட் ஐயாத்துரை, போர்க் களத்துக்குப் போவதைப் பெற் றோர் முழுமையாக விரும்பாவிட்டாலும், மகனின் விருப்பத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

1915-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐயாத்துரை உட்பட, பிரித்தானியா சார்பாக போர்க்களத்தில் தொண்டர்களாகப் பணிபுரிய விரும்பிய குழுனரை ஏற்றிக் கொண்டு பிரான்சியக் கப்பலான SS Villa De La Ciotat பிரித்தானியா நோக்கிப் புறப்பட்டது. இக்கப்பலில் இன, மத, நிற, மொழி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து 'இலங்கையர்' என்ற ஒற்றைச் சொல்லில் எல்லோரும் ஒன்றிணைந்து பயணித்தனர். அக்கப்பல் மத்திய தரைக் கடல் பகுதியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது ஜேர்மன் கடற்படையின் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளாகி கடலில் மூழ்கியது. பலர் மரணத்தைத் தழுவிய போதிலும், ஐயாத்துரையும் அவருடன் பயணித்த சிலரும் உயிர் தப்பினர். இவர்களைக் காப்பாற்றிய பிரித்தானியக் கடற்படை பாதுகாப்பாக பிரித்தானியாவுக்கு அழைத்துச் சென்றது. சிறிது காலத்தின் பின்னர் அவரும் அவரது குழுவினரும் பிரான்சுக்கு (France) அழைத்துச் செல்லப்பட்டனர். ஐயாத்துரை பிரான்சிலே ஜேர்மனிக்கு எதிரான பல்வேறு போர்க்களங்களிலும் பிரித்தானியா சார்பாகப் பங்குபற்

tg.theeban@gmail.com

றினார். இறுதியாக ER. Freeman தலைமை தாங்கிய 23-வது படைப்பிரிவில் இணைந்து கொண்டார். இப்படைப் பிரிவில் கனடா, ஐக்கிய அமெரிக்கா, சீனா, இலங்கை, எகிப்து, போன்ற பல்வேறு நாடுகளிலிருந் தும், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், தொழிலாளர்கள், கல்லூரி மாணவர்கள், போர்வீரர்கள் எனப் பல தரப்பினரும் காணப்பட்டனர். 1916-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை Somme என்ற இடத்தில் கடும் போர் நடைபெற்றது.

1917-ஆம் ஆண்டு Vimy Ridge, Bourlon Wood ஆகிய பகுதிகளிலும் போர் விரிவடைந்தது. அதே ஆண்டு நவம்பர் மாதம் 20-ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் நான்காம் திகதி வரை பிரான்சின் வடக்கே Bourlon Wood பகுதியில் Cambrai போர்க்களத்தில் நடைபெற்ற கடும் போரில் பிரான்சியப் படைகள், ஜேர்மன் படைகளைத் தோற்கடித்து அப்பகுதியைத் தம்வசப்படுத்தின. இப்போரில் ஜேர்மனின் ஊடுருவித் தாக்குதலுக்குள்ளான (German sniper) Lance-Corporal ரிச்சர்ட் ஐயாத்துரை டிசம்பர் மூன்றாம் திகதி 1917-ஆம் ஆண்டு வீரமரணம் அடைந்தார். மேற்படி போரில் காணாமல் போனோர், போர்க் கைதிகளாகப் பிடிபட்டோர், காயமடைந்தோர், அடையாளம் காணப்பட முடியாதோர், இறந்தவர்கள் எனப் பல வகைப்பட்ட படை வீரர்களில் ரிச்சர்ட் ஐயாத்துரை அடையாளம் காணப்பட முடியாதோர் பிரிவில் பதியப்பட்டார். மீண்டும் அப்பகுதியைக் கைப்பற்றிய ஜேர்மனி, அடையாளம் காணப்பட முடியாதவர்களின் உடல்களை, அவை காணப்பட்ட இடத்திலேயே அடக்கம் செய்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அறிவித்தது.

John D Ellis என்பவர் ரிச்சர்ட் ஐயாத்துரை பற்றி 'A Very Gallant Man': Lance-Corporal Richard Aiyadurai of the Royal Fusiliers' என்னும் தலைப்பில் விவரமாக ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் இவரது மரணம் குறித்து 23-ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி A Lieutenant - Colonel ER Freeman எழுதிய கடிதக் குறிப்பொன்றினைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

'Whilst firing at the enemy, lance Corporal Aiyadurai was sniped through the head and killed instantly. He was a very gallant man. He set a fine example to all ranks on account of his cleanliness, smartness, cheeriness. I felt his loss very keenly as I had grown very fond of him. He died the death of a brave soldier. He was buried on the battlefield.'

ரிச்சர்ட் ஐயாத்துரையின் வீரமரணத்திற்குப் பின்னர், முதலாம் உலகப் போரில் அவராற்றிய மகத்தான பங்களிப்பையும் தியாகத்தையும் கௌரவிக்கும் வகையில் பிரித்தானிய அரசாங்கம் 'British War Medal 1914 - 1919', 'Victory Medal' மற்றும் 'WW1 Ceylon Volunteer Service Medal' ஆகிய உயரிய பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தது. அத்துடன், தாயகத்தையும் குடும்பத்தையும் பிரிந்து யுத்தகளத்தில் தன்னுயிரை ஈந்த மகனின் அர்ப்பணிப்பைக் கௌரவிக்கும் முகமாக, அவரது தந்தையாரான கந்தப்பா ஜேம்ஸ் ஐயாத்துரை அவர்ளுக்கு 1918 டிசம்பர் மாதத்திற்கும் 1920 ஜனவரி மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரித்தானிய அரசினால் நிதியுதவியும் (இராணுவ இழப்பீட்டுத் தொகை) வழங்கி வைக்கப்பட்டது.

ரிச்சர்ட் ஐயாத்துரை வீரமரணமடைந்த பிரான்சின் கேம்பிராய் (Cambrai) போர்க்களத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் உட்பட பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, இலங்கை ஆகிய நாடுகளில் நிறுவப்பட்டுள்ள முதலாம் உலகப் போர் வரலாற்று நினைவுத் தூபிகளில் இவரது பெயர் பொறிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக, தாயகமான இலங்கையில் 1936-ஆம் ஆண்டு தியத்தலாவை இராணுவ முகாமில் (Diyatalawa Garrison) நடைபெற்ற சிறப்பு நிகழ்வின் போது, ரிச்சர்ட் ஐயாத்துரையின் உருவப் படம் உத்தியோக பூர்வமாகத் திரைநீக்கம் செய்யப்பட்டு அவரது வரலாற்றுத் தியாகத்திற்கு இராணுவக் கௌரவம் அளிக்கப்பட்டது.

முதலாம் உலகப் போரின்போது வீரமரணம் அடைந்த இலங்கையர்களுக்கான நினைவுத்தூபி 1923-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அப்போதைய மகா தேசாதிபதி சேர். வில்லியம் மனிங் அவர்களால் காலிமுகத்திடலில் நிறுவப்பட்டது. அதில் முதலாம் உலகப் போரின் போது பிரித்தானிய சாம்ராச்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்த ஆண்கள் பெண்கள் உட்பட 450 பேரின் பெயர்கள் அகர வரிசையில் இடம்பெற்றிருந்தன எனவும், பின்னர் கனத்தை மயானத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் சாதாரண படைவீரர்களின் பெயர்கள் தவிர்க்கப்பட்டு, இராணுவப் பதவித் தரவரிசையின் அடிப்படையில் வெறும் 48 உயர் அதிகாரிகளின் பெயர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்ற ஒரு விமர்சனமும் உண்டு.

முதலாம் உலகப் போரின்போது தாயகப் பகுதியைத் தாண்டி, பிரித்தானிய மலாயா (British Malaya) மற்றும் சிங்கப்பூரில் வாழ்ந்துவந்த புலம்பெயர் ஈழத்து தமிழர்களும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்கள் தங்களுக்குள் நிதி திரட்டி, 2,250 ஸ்டெர்லிங் பவுண் பெறுமதியான Curtiss Canada ரகப் போர் விமானம் ஒன்றை விலைக்கு வாங்கி, அதற்கு 'The Jaffna' எனப் பெயரிட்டு 1915 டிசம்பர் 22 அன்று பிரித்தானிய அரசிற்கு முறைப்படி வழங்கித் தமது ஆதரவைப் பதிவுசெய்தனர்.

உலகப் போர்களில் உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் வாழும் மக்கள் ஒவ்வோர் ஆண்டும் 11-ஆம் மாதம், 11-ஆம் திகதி, காலை 11 மணிக்கு (Remembrance Day) அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்நாளில், முதலாம் உலகப் போரின் கொடுரமான போர்க்களத்தில் தன்னுயிரை ஈந்து, வரலாற்றுப் பக்கங்களில் ஈழத் தமிழர்களின் சான்றாண்மையைப் பதிவுசெய்த லான்ஸ் கார்ப்பரல் ரிச்சர்ட் ஐயாத்துரையின் தியாகத்திற்கும் நாம் மதிப்பளித்து நினைவேந்துவோமாக.



vivekananthan.v@thaiveedu.com

# குடிசை வீட்டில் கம்யூனிஸ்ட் MLA

நெல்லை ஜெயசிங்

‘அரசியல் என்பது ஆடம்பர வாழ்க்கைக்கான பாதையல்ல: அது, உழைக்கும் மக்களுக்கு பணி யாற்றும் பாதை’ என்ற எண்ணத்தை, தனது எளிமையான வாழ்க்கையின் வழியில் உலகிற்கு உரக்கச் சொன்னவர்களில் ஒருவராக உயர்ந்து நிற்பவர், தமிழ்நாட்டின் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியின், இந்திய பொதுவுடமைக்கட்சி சட்டமன்ற உறுப்பினர், தோழர் க. மாரிமுத்து அவர்கள்.

இன்றைய இந்திய அரசியல் களம், பெரும்பாலான அரசியல்வாதிகளின் சொர்க்க பூமியாகிக்கொண்டி ருக்கிறது. ஆடம்பரமான வாழ்க்கை, விதம் விதமான விலை உயர்ந்த வாகனங்கள், பொருளாதார வளம், பணக்குவியல், அதிகார பலம், என அரசியல்வாதிகள் வாழும் இந்திய நாட்டில், 2021-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சட்டமன்ற உறுப்பினராக இருந்துவரும், தோழர் மாரிமுத்து அவர்கள், இத்தருணம் வரை வாழ்ந்து வருவது ஒரு ஓலைக்குடிசை வீட்டில்.

எளிமையின் சிகரமாக வாழ்ந்து மறைந்த தோழர் நல்லகண்ணு அவர்களின் வழியில், ஒடுக்கப்பட்டவர் களின் அபிலாசைகளை பிரதிபலிப்பதே எனது அரசியல் எனக் கூறும் தோழர் மாரிமுத்து அவர்கள், திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம், காடுவாகுடி எனும் சிறு கிராமத்தில், 1973-ஆம் ஆண்டு பிறந்தார். அவரது பெற்றோர்களான கண்ணு, தங்கம்மாள் இருவரும் விவசாய தொழிலாளர்களாவர். வறுமை வாட்டிய போதும், கற்றலை கைவிடாத மாரிமுத்து அவர்கள், வணிகவியல் துறையில் பட்டம் பெற்றவராவார்.

prasadbatti@gmail.com

பொதுவுடமை இயக்கத்தின் மீது ஈர்ப்பு கொண்டு, தனது இருபத்தோராவது வயதில், 1994-ஆம் ஆண்டு CPI (Communist party of India) என்ற பொதுவுடமைக் கட்சியில் இணைந்து, முழுநேர கட்சிப் பணியாளராகத் தன்னை பிணைத்துக்கொண்டார். இக்காலப்பகுதியில் மக்களின் பிரச்சினைகளில், களத்தில் இறங்கி செயல்படுபவராக இருந்தார். சட்டமன்ற உறுப்பினராவதற்கு முன்னர் நீண்ட காலம் கட்சிப் பொறுப்புகளையும் ஏற்றிருந்தார். குறிப்பாக கொட்டூர் ஒன்றியச் செயலாளராகவும், மாநில நிராவாகக் குழுவிலும் இடம்பெற்றிருந்தார். உழைக்கும் விவசாய மக்களின் போராட்டங்களோடு நீண்டகாலம் தொடர்பில் இருந்துள்ளார். சாதாரண குடும்ப பிண்ணனியில் வளர்ந்த தோழர் மாரிமுத்து அவர்கள், உழைக்கும் மக்களின் வாழ்க்கையை நேரடியாக அறிந்தவர். அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளை நன்கு புரிந்து கொண்டவர். மக்களோடு வாழ்வது ஒரு அரசியல் முழக்கம் அல்ல. அது ஒரு நடைமுறை எனக் கூறுவது அவரது தனிச் சிறப்பாகும். 'ஒடுக்கப்பட்டவர்களின் அபிலாசைகளை பிரதிபலிப்பதே எனது அரசியல்' என்கிறார் தோழரான மாரிமுத்து.

மாணவர் பருவத்தில் மாணவர் பெருமன்றம் நிறுவி அவர்களின் நலன் மேம்பட உறுதுணையாக இருந்த தோழர், பின்னாளில் இளைஞர் பெருமன்றம் அமைத்து அவர்களை அரசியல்மயப்படுத்துவது மட்டுமல்லாமல், பின்னாளில் அவர்களின் எதிர்கால நலன் கருதி தொழிற்பயிற்சி மையங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதிலும் முக்கிய பங்கும் வகித்துள்ளார்.

## அவரது துணைவியார்:

தோழர் மாரிமுத்து அவர்களின் அரசியல் சார்ந்த மக்கள் பணிக்கு அவரது துணைவியார் ஜெயசுதா அவர்கள், மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறார். தோழரின் போராட்ட வாழ்க்கையை சரிவர புரிந்து கொண்டவராக அவரது துணைவியார் அனைத்து வகையிலும் உறுதுணையாக, எந்தவிதமான இடையூறும் விளைவிக்காமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவரும் விவசாயத் தொழிலாளி ஆவார். இதனால், அவரது குடும்ப வாழ்க்கை வசதியானதாக இருந்தது இல்லை.

வயல்வெளி உழைப்பும், எளிமையான வாழ்க்கையுமே அவர்களின் வாழ்வாதாரம். தனது கணவர் சட்டமன்ற உறுப்பினரானபின்பும் குடும்ப தலைவியாகத் தினசரி வாழ்க்கையின் தேவை கருதி குத்தகை நிலத்தில் விவசாயம் செய்வதுடன் 'மகாத்மா காந்தி நூறு நாள் வேலை' திட்டத்தின் கீழ் கூலி வேலைக்கு செல்கின்றமை ஆச்சரியமளிக்கும் உண்மை நிகழ்வாகும். இந்தியாவிலேயே சட்டமன்ற உறுப்பினரின் மனைவியானவர், நூறு நாள் வேலைக்கு செல்கிறார் என்பது இவராக மட்டுமே இருக்க முடியும்.

சட்டமன்ற உறுப்பினராகக் கணவர் இருந்த போதும் எந்தவித ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆசைப்படாத திருமதி மாரிமுத்து அவர்கள், அரசு கொடுத்த எரிவாயு அடுப்பு இருந்த போதும், விறகு அடுப்பை பெருமளவில் உபயோகப்படுத்தி வருவதாகவும் கூறுகிறார். குடும்பத்தின் மேலதிகச் செலவு மற்றும் இரு பிள்ளைகளின் கல்விச்செலவுக்கு, வீட்டில் ஆடு, மாடு, கோழி வளர்த்து வருவதாகவும் அவரது துணைவியார் குறிப்பிடுகிறார்.

> சட்டமன்ற உறுப்பினராகக் கணவர் இருந்த போதும் எந்தவித ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆசைப்படாத திருமதி மாரிமுத்து அவர்கள், அரசு கொடுத்த எரிவாயு அடுப்பு இருந்த போதும், விறகு அடுப்பை பெருமளவில் உபயோகப்படுத்தி வருவதாகவும் கூறுகிறார். குடும்பத்தின் மேலதிகச் செலவு மற்றும் இரு பிள்ளைகளின் கல்விச் செலவுக்கு, வீட்டில் ஆடு, மாடு, கோழி வளர்த்து வருவதாகவும் அவரது துணைவியார் குறிப்பிடுகிறார்.

## ஓலைக்குடிசையில் தொடங்கிய வாழ்க்கை:

2021-ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்ற தேர்தலின் போது CPI கட்சி சார்பில் தோழர் மாரிமுத்து அவர்கள், திருத்துறைப்பூண்டி தொகுதியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோது, அவரது பின்புலத்தை அறிந்த பலரும் அதிர்ச்சியடைந்தனர். அவரது எளிமையான வாழ்க்கை, குடிசை வாழ்க்கை அதற்கு காரணமாகும். அவரது குடிசை வீட்டை கருத்தில் கொள்ளாத அப்பகுதி மக்கள், அவரது தூய்மையான எளிய வாழ்க்கையை நேரில் கண்டு, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தனர். அவரது அப்பழுக்கற்ற நேர்மையான அரசியல் செயல்பாடு காரணமாக, 2026 தேர்தலிலும் அவரையே மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர்.

தற்போதைய தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும், ஆடம்பர மற்றும் வசதியான வீடுகளில் வாழ, இரண்டாம் முறையும் திருத்துறைபூண்டி சட்டமன்ற உறுப்பினராகியுள்ள தோழர் மாரிமுத்து அவர்கள், அன்றும் இன்றும், தொடர்ந்து குடிசை வீட்டில் வாழ்ந்து வருவது அரசியல்வாதிகளுகளுக்கு அதிர்ச்சி தரும் செய்தியாகும். அரசியல்வாதிகள் கோடிகளில் புரள, இவர் மட்டும் MLA ஆக அரசியலில் அடியெடுத்து வைத்த பிறகும், அவர் தனது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவில்லை.

2021 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பும் அவர் ஓலைக்கூரை கொண்ட சிறிய குடிசை வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். அவரது தற்போதைய குடிசை வீட்டின் நீளம் 21 அடி, அகலம் 9 அடி எனக் கூறப்படுகிறது. வயல்வெளி உழைப்பும்,

எளிய வாழ்க்கையுமே அவரது குடும்பத்தின் வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. அவரது அரசியல் பயணமானது அதிகாரத்தை நோக்கி இல்லாமல், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை மக்கள், அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளோடு இணைந்த நெடும் பயணமாக அமைந்திருந்தது. அரசியலுக்காக அவர் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை.

சட்டமன்றத்தில் ஏராளமான கோடிஸ்வரர்களும், இலட்சாதிபதிகளும் நிறைந்து காணப்படும் நிலையில், 2026 தேர்தலின் போது அவரால் அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், குடிசை வீடு, நிலம் உட்பட மொத்த சொத்து மதிப்பு ஏழு இலட்சம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2021 தேர்தலின் போது அவரது வீடு, நிலம், சொத்து மதிப்பு 3.30 இலட்சம் என இருந்தது. ஐந்து வருடத்தில் சந்தை மதிப்பு கூடியபோது இவரது வீடு, நிலம் ஏழு இலட்சமாக கூடியதேயன்றி, அவரது சொத்து அதிகரிப்பு என்பது, அவரது அரசியல் நடவடிக்கையால் வந்தது அல்ல. அவரது தேர்தல் செலவுக்கு மக்கள் பணம் திரட்டி கொடுத்திருக்கிறார்கள். சிறுவர், சிறுமியர் தங்களின் உண்டியல் சேமிப்பை மனமுவந்து வாரி வழங்கி இருக்கிறார்கள்.

அவருக்கான MLA (Member of the Legislative Assembly) ஊதியமும்கூட கட்சியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே அவருக்கு கிடைக்கும். முழுமையாக கிடைப்பதில்லை. அவர் எந்தவிதமான கையூட்டும் பெறாத நேர்மையான அப்பழுக்கற்ற அரசியல்வாதி, அதன் காரணமாகவே அவர் ஆடம்பரம் எதுவும் இல்லாது, இயல்பாக குடிசை வீட்டில் வாழ்ந்து வருகிறார். அதை அவர் கௌரவக் குறைவானதாக நினைத்ததும் இல்லை.

கடந்தகால புயல் ஒன்றின் போது அவரது மாவட்ட விவசாய மக்களின் வீடுகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின. தோழர் மாரிமுத்து அவர்களின் குடிசை வீடும் பாதிப்புக்குள்ளாகியது. அதை முழுமையாக சீரமைக்கக்கூடிய பொருளாதார வசதி அவரிடம் இருக்கவில்லை. இக்கட்டான அத்தருணத்தில் அவரது வீட்டை சீரமைப்பதற்கு  ஒரு அறக்கட்டளை அமைப்பு, 50000 பணத்தை வழங்கியது. ஆனால், அதைவிட அவசரமாக உதவி தேவைப்பட்ட மற்றொரு கிராமத்தவருக்கு அப்பணத்தை வழங்கினார் என்பதாக செய்தி ஆதாரங்கள் பதிவு செய்துள்ளதுடன், தோழர் மாரிமுத்து அவர்களும், நேர்காணல் ஒன்றில் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுபோன்ற நெகிழ்ச்சி தரும் நிகழ்வுகள், அவரது அரசியல் கொள்கைகளையும், அவர் வாழ்ந்து வரும் தனிப்பட்ட எளிமையான வாழ்க்கை முறையையும், புரிந்துகொள்ள உதவும் நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. சாதாரண விவசாய குடும்பத்தில் இருந்து வந்த ஒருவர், சட்டமன்ற உறுப்பினராக உயர்ந்த பின்னரும் தனது பழைய வாழ்க்கைச் சூழலைத் தொடர்வது அரிதான விடயமாகும். பதவி உயர்ந்தது. ஆனால், வாழ்க்கை முறை சிறிதளவும் மாறவில்லை. பொருளாதார நிலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. அவரது குடும்பத்திற்கு குறிப்பிடத்தக்க சொத்து எதுவும் சேரவில்லை. 'மக்களும், கட்சியுமே தனது சொத்து' என்பதை எல்லா நேர்காணலிலும் அவர் கூறிவருவதைக் காணலாம்.

இன்றைய அரசியல்வாதிகளில் பெரும்பாலோர், அரசியலை வருமானம் தரும் தொழிலாக மேற்கொள்ள, இவரோ அதனை மக்கள் சேவையாக நினைத்து செயல்பட்டு வருவதைக் காணலாம். 'இயல்பான வாழ்க்கை வாழனும், அதிக ஆசை கூடாது' இது எப்போதும் அவர் உதிர்க்கும் பொன்மொழி. இதற்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர் தோழர் மாரிமுத்து அவர்கள். கடந்த ஓகஸ்ட் மாதம் 'மதிமுகம்' தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய பரிசளிப்பு விழா ஒன்றில், இவரது எளிமையை கௌரவிக்கும் வகையில், எளிமையின் சிகரம் தோழர் நல்லகண்ணு பெயரில் இவருக்கு நினைவுப் பரிசொன்று வழங்கப்பட்டது. அப்போது இவருக்கு வலதுபுறம் பெருந்தொகையுடன் ஒரு பணப்பெட்டியும், இடதுபுறம் ஒரு அரிவாளும் வைக்கப்பட்டு, அவர் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என நிகழ்ச்சி நெறியாளர் கூறிய அடுத்த நொடி, எந்த பதட்டமும், சலனமும் இன்றி,  வலது புறத்து பணப்பெட்டி பக்கம் திரும்பாது, இடதுபுறத்து அரிவாளை மட்டும் எடுத்துக் கொண்ட தோழர் மாரிமுத்துவின் செயல் கண்டு, பார்வையாளர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். இவ்வாறு  இவரின் எளிமையான செயல்பாட்டை வெளியில் மக்கள் வியந்து பார்ப்பதைப் போன்று, சட்டமன்றத்துக்கு உள்ளேயும் அவரது செயல்பாடு வியப்பூட்டுவதாக இருந்து வருவதைக் காணலாம்.

தற்போதைய தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்தவர்களில் 90 வீதத்தினர் முற்றிலும் புதியவர்கள். அரசியல் அனுபவம் அற்றவர்கள். இவர்கள் மத்தியில் தோழர் மாரிமுத்து ஆற்றும் உரை அனைவரது கவனத்தையும் ஈர்த்து வருவதுடன் புதியவர்களுக்குப் பாடமாகவும் அமைந்து வருகிறது.

மானிய கோரிக்கை உட்பட எந்த ஒரு விவாதமாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட விடயம் தொடர்பாக துள்ளியமாக பேசக்கூடியவர். கையில் எந்தவிதக் குறிப்பும் இல்லாமல், புள்ளி விபரங்களுடன் உரையாற்றக்கூடியவர். விடய ஞானத்துடன், எளிய நடையில் பேசுவதை சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வியப்புடன் பார்த்து வருகின்றனர். சட்டமன்ற சபாநாயகர், துணை சபாநாயகர், அமைச்சர்கள் எனப் பலரும் இவரது உரை கேட்டு வியந்து பாராட்டி வருகின்றனர்.

தனது தொகுதி மக்களின் குறைகளைக், கோரிக்கைகளை மிகத்தெளிவாக எடுத்துக் கூறும் வலிமை பெற்றவர். கட்சியின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு மக்களின் பிரச்சணைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு காணக்கூடியவர். மக்கள் விரோதச் செயல்பாடுகளில் சமரசம் செய்துகொள்ள முன்வராத போராளி.

பொதுவுடமைக்கட்சியில் இணைந்தது முதல் இன்றைய நாள் வரையிலான அவரது பணி, முழுமையாக மக்கள் சார்ந்ததாகவே இருந்து வருகிறது. நேர்மையும்,  எளிமையும் பொதுவுடமைக்கொள்கையின் அடையாளம். அதனை அச்சுப்பிசகாது கடைப்பிடித்து வாழ்ந்து வருபவர் தோழர் மாரிமுத்து. அதிகார வேட்கை, பணத்தேவை, புகழ் போதை என எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல், தோழர் நல்லகண்ணு காட்டிய வழியில், எளிமையின் சிகரமாக தமிழ் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தோழர் மாரிமுத்து அவர்கள்.



jeyasingh@thaiveedu.com

# 50 மா சேதுங்

## மாவோவை உருவாக்கிய சீனா

மீநிலங்கோ தெய்வேந்திரன்

**அறிமுகக் குறிப்புகள்:**

**1910**-ஆம் ஆண்டில்,

பதினாறு வயதான மாவோ சேதுங் தனது கல்வியைத் தொடர ஷாவோஷான் (Shaoshan) என்ற தனது சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறினார். கிராமப்புற ஹுனான் (Hunan) பகுதியின் பசுமையான மலைகள், நெல் வயல்கள், கண்டிப்பான தந்தையின் அதிகாரம், கிராமத்துப் பள்ளியின் குறுகிய உலகம் ஆகியவற்றை அவர் விட்டுச் சென்றார். தான் எந்த அரசியல் பாதையைப் பின்பற்றப் போகிறோம் என்பது அவருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. அவர் மார்க்ஸின் எழுத்துக்களைப் படித்திருக்கவில்லை, எந்தவொரு புரட்சிகரக் கட்சியிலும் இணைந்திருக்கவில்லை. தன்னை சீனாவின் எதிர்காலத் தலைவராகக் கற்பனை செய்து பார்த்திருக்கவும் இல்லை. ஷாவோஷானுக்கு அப்பால் உள்ள உலகில், வீட்டில் கிடைக்காத அறிவு ஏதோ ஒன்று இருக்கிறது என்று நம்பிய ஒரு துடிப்பான இளைஞராகவே அவர் இருந்தார்.

அவர் நுழைந்த சீனா சிதைந்து கொண்டிருந்தது. பதினேழாம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்து வந்த சிங் (Qing) வம்சம் வீழ்ச்சியின் விளிம்பில் இருந்தது. துறைமுகங்கள், புகையிரதங்கள், வணிகச் சலுகைகள், முக்கிய நகரங்களின் சில பகுதிகள் ஆகியவை வெளிநாட்டு சக்திகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஜப்பான் போரில் சீனாவைத் தோற்கடித்து தைவானைக் கைப்பற்றியிருந்தது. கிராமப்புறக் குடும்பங்கள் வாடகை, கடன் மற்றும் வரிச் சுமைகளால் திண்டாடின. கிளர்ச்சிகள் நாட்டை உலுக்கியிருந்தன. பேரரசு அரசாங்கத்தால் சீனாவைப் பாதுகாப்பதோ அல்லது சீர்திருத்துவதோ இயலாததாகத் தோன்றியது. இத்தகைய நெருக்கடியான சூழலில்தான் மாவோ பிறந்தார். பிற்காலத்தில் அவரது அரசியலை வடிவமைத்த பிரச்சினைகளான வெளிநாட்டு ஆதிக்கம், கிராமப்புற வறுமை, பலவீனமான அரசாங்கம், நிலப்பிரபுக்களின் அதிகாரம், தேசிய ஒற்றுமையின் அவசியம் ஆகியவை அவருக்கு வெறும் கோட்பாட்டு ரீதியான கேள்விகளாக இருக்கவில்லை. அவை அவர் வளர்ந்த உலகின் ஒரு பகுதியாகவே இருந்தன.

prasadbatti@gmail.com

இதனால்தான், மாவோவின் பிற்கால உரைகளைப் படிப்பதன் மூலம் மட்டும் அவரைப் புரிந்துகொள்ள முடியாது. அவரது கருத்துக்கள் கார்ல் மார்க்ஸ் அல்லது விளாடிமிர் லெனினின் படைப்புகளிலிருந்து முழுமையாக உருவானவை அல்ல. அவை சீனாவின் தேசிய அவமானம், கிராமப்புற மக்களின் துயரங்கள், முடியாட்சியின் வீழ்ச்சி, ஆரம்பகாலக் குடியரசின் தோல்வி, நாட்டை மீண்டும் கட்டியெழுப்பத் துணிந்த ஒரு புதிய தலைமுறையின் தாக்கம் ஆகியவற்றிலிருந்து வளர்ந்தன. மாவோ சீனாவை மாற்றுவதற்கு முன்பே, சீனா மாவோவை மாற்றியது.

## முழங்காலிட வைக்கப்பட்ட ஒரு மாபெரும் நாகரிகம்:

மாவோ 1893-இல் பிறந்தார், ஆனால் அவரது தலைமுறையை வடிவமைத்த நெருக்கடி நிலை அதற்கு வெகு காலத்திற்கு முன்பே தொடங்கிவிட்டிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், சீனா வெளிநாட்டுப் பேரரசுகளிடமிருந்து தீவிரமான, ஆக்கிரமிப்புத்தன்மை கொண்ட அழுத்தங்களை எதிர்கொண்டது. சீனச் சந்தையில் அதிக அணுகலைப் பெறவும், பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலிருந்த இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட அபினியின் மூலம் கிடைத்த இலாபகரமான வர்த்தகத்தைப் பாதுகாக்கவும் பிரிட்டன் உறுதியாக இருந்தது. அந்த வர்த்தகத்தைத் தடுக்க சீன அதிகாரிகள் முயன்றபோது, பிரிட்டன் இராணுவ வலிமையைப் பயன்படுத்தி பதிலடி கொடுத்தது. முதல் அபினிப் போர் 1842-இல் சீனாவின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது. நான்ஜிங் ஒப்பந்தத்தின் கீழ், பிரிட்டனின் வர்த்தகத்திற்காகத் தனது துறைமுகங்களைத் திறக்கவும், இழப்பீடு வழங்கவும், ஹாங்காங்கை விட்டுக் கொடுக்கவும் சீனா கட்டாயப்படுத்தப்பட்டது. பிற வெளிநாட்டு சக்திகளும் இதே போன்ற சலுகைகளைக் கோரின. மேலும் பல போர்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்குப் பிறகு, வெளிநாட்டினர் சிறப்பு வணிக உரிமைகளைப் பெற்றனர்; சீன நகரங்களில் சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்; பல சந்தர்ப்பங்களில், சீன நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டு வாழ்ந்தனர்.

இந்த ஒப்பந்தங்கள் சீனாவில் ‘சமமற்ற ஒப்பந்தங்கள்’ என்று அழைக்கப்பட்டன. அவை வர்த்தகத்தை மட்டும் ஒழுங்குபடுத்தவில்லை. சீனாவின் நிலப்பரப்பு, பொருளாதாரம், சட்ட அமைப்பு ஆகியவற்றின் மீதான சீனாவின் கட்டுப்பாட்டைக் குறைத்தன. ஒரு காலத்தில் தன்னை ஒரு மாபெரும் நாகரிகத்தின் மையமாகக் கருதிய ஒரு நாடு, வெளிநாட்டு அரசாங்கங்களால் மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்பட்டு, அவர்களுக்குக் கீழ்ப்படியும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்தத் தோல்விகள் ஆழ்ந்த உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தின. நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நாகரிகம், ஒரு காலத்தில் தொலைதூர, நாகரிகமற்றவை என்று கருதப்பட்ட நாடுகளுக்கு முன்னால் ஏன் இவ்வளவு பலவீனமானதாக மாறியது என்று பல சீன அறிஞர்களும் அதிகாரிகளும் கேள்வி எழுப்பத் தொடங்கினர். சிலர் காலாவதியான நிறுவனங்களைக் குறை கூறினர். வேறு சிலர் பேரரசின் ஊழல், இராணுவ பலவீனம் அல்லது பழைய மரபுகளின் தாக்கம் ஆகியவற்றைக் காரணமாகக் காட்டினர். இன்னும் சிலர், மேற்கத்திய நாடுகளின் அறிவியல், தொழில் மற்றும் அரசியல் அமைப்புகளிடமிருந்து சீனா பாடம் கற்க வேண்டும் என்று கருதினர்.

இந்த நெருக்கடி வெளிநாட்டுத் தலையீட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சீனா மிகப் பெரிய உள்நாட்டுக் கிளர்ச்சிகளாலும் உலுக்கப்பட்டது. 1850 முதல் 1864 வரை நீடித்த ‘தாய்பிங் கிளர்ச்சி’ (Taiping Rebellion), மனித வரலாற்றிலேயே மிகக் கொடிய மோதல்களில் ஒன்றாக உருவெடுத்தது. அது நாட்டின் பெரும் பகுதிகளைச் சீரழித்ததுடன், ‘சிங்’ அரசின் பலவீனத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. வறுமை, இன மோதல்கள், மத இயக்கங்கள், பேரரசு ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு ஆகியவற்றால் தூண்டப்பட்ட பிற கிளர்ச்சிகளும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், ஒரு புதிய ஆபத்து தோன்றியது. மெய்ஜி மறுசீரமைப்புக்குப் பிறகு வேகமாகத் தொழில்மயமான ஜப்பான், 1894 - 1895-ஆம் ஆண்டு நடந்த முதல் சீன-ஜப்பானியப் போரில் சீனாவைத் தோற்கடித்தது. கொரியாவின் மீதான ஜப்பானிய செல்வாக்கை அங்கீகரிக்கவும், தைவானைக் கைவிடவும் சீனா நிர்பந்திக்கப்பட்டது. இந்தத் தோல்வி குறிப்பாக அவமானகரமானதாக இருந்தது. ஏனெனில் சீன மேட்டுக்குடியினர் வரலாற்று ரீதியாக ஜப்பானை, சீன நாகரிகத்திலிருந்து அதிகம் கற்றுக்கொண்ட ஒரு நாடாகவே கருதி வந்தனர். ஜப்பான் இப்போது சீனாவை விட வலிமையானதாகவும் நவீனமானதாகவும்

சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் தோன்றியது. சீனாவின் பலவீனத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, வெளிநாட்டு சக்திகள் கூடுதல் பிரதேசங்கள், புகையிரத உரிமைகள், சுரங்கச் சலுகைகள் மற்றும் வர்த்தக நன்மை களைக் கோரின. சீன செய்தித்தாள்களும் அரசியல் எழுத்துக்களும் அந்நாட்டைத் துண்டுகளாக வெட்டப்படும் ஒரு தர்பூசணி யாகச் சித்தரிக்கத் தொடங்கின. ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் ஆகிய அனைத்தும் தமக்கென சொந்த செல்வாக்கு மண்டலங்களைத் தேடின.

நூற்றாண்டின் இறுதியில், பாக்ஸர் கிளர்ச் சியில் மக்கள் கோபம் வெடித்தது. பாக் ஸர்கள் வெளிநாட்டு நிறுவனங்களையும், வெளி ஆதிக்கத்துடன் தொடர்புபடுத்திய சீனக் கிறிஸ்தவர்களையும் தாக்கினர். 1900-இல், எட்டு வெளிநாட்டு சக்திகளின் கூட்டணி வட சீனாவை ஆக்கிரமித்து, பெய் ஜிங்கைக் கைப்பற்றி, கிளர்ச்சியை நசுக் கியது. வெளிநாட்டுப் படைகள் கொள்ளை யிலும் வன்முறையிலும் ஈடுபட்டதால், அர சாங்கம் மற்றொரு அவமானகரமான உடன் படிக்கையை ஏற்க நிர்பந்திக்கப்பட்டது. சீனா ஒரு பெரும் இழப்பீட்டைச் செலுத்த வேண்டியிருந்ததுடன், மூலோபாய முக்கி யத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒரு நிரந்தர வெளிநாட்டு இராணுவ இருப்பை அனும திக்கவும் நேர்ந்தது.

இதுதான் மாவோ பிறந்த உலகம். ஆழ்ந்த நாகரிக உணர்வு கொண்ட ஒரு நாடு, ஆனால் தனது இறையாண்மையைப் பாதுகாக்க இயலாத ஒரு அரசு. இந்த அவ மானங்களின் நினைவுகள் மாவோவின் வாழ்நாள் முழுவதும் சக்திவாய்ந்தவை யாகவே இருந்தன. பிற்காலத்தில் அவர் சீனா 'எழுந்து நிற்பது' பற்றிப் பேசியபோது, வெளிநாட்டுப் படைகளையும், திணிக்கப் பட்ட ஒப்பந்தங்களையும், தேசிய அதிகா ரத்தின் இழப்பையும் கண்ட தலைமுறையி னரையே அவர் வேண்டிக்கொண்டார். மாவோவின் தேசியவாதம் அவரது சோசலி சத்திற்குப் பதிலாக அமையவில்லை. இரண்டும் ஒன்றாகவே வளர்ந்தன. தனது சமூக அமைப்பை மாற்றியமைக்காமல் சீனா உண்மையான சுதந்திரத்தை அடைய முடியாது என்றும், வெளிநாட்டு ஆதிக்கத் திலிருந்து சீனா தப்பிக்காவிட்டால் சமூகப் புரட்சி வெற்றிபெற முடியாது என்றும் அவர் நம்பத் தொடங்கினார்.

## கிராம வாழ்க்கை, கிளர்ச்சி, ஒரு புதிய சீனாவிற்கான தேடல்:

மாவோவின் பிறந்த இடமான ஷாவோஷான், ஷாங்காயின் வெளிநாட்டுச் சலுகைகள் மற்றும் பெய்ஜிங்கின் அரசியல் போராட்டங்களிலிருந்து வெகு தொலைவில் இருந்தது. ஆயினும்கூட, வரி விதிப்பு, இராணுவ ஆட்சேர்ப்பு, மாறிவரும் சந்தைகள், அரசாங்க நிறுவனங்களின் பலவீனம் ஆகியவற்றின் மூலம் தேசிய நெருக்கடி கிராமப்புற ஹுனானை எட்டியது. மாவோவின் தந்தை, மாவோ யிச்சாங், கடின உழைப்பு, விவசாயம், தானிய வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் வறுமையிலிருந்து உயர்ந்திருந்தார். அவர் கண்டிப்பானவராகவும், நடைமுறைக்கு ஏற் றவராகவும், குடும்பத்தின் பொருளாதார வெற்றியில் அக்கறை கொண்டவராகவும் இருந்தார். மாவோவின் தாய், வென் கிமெய், தனது கருணை மற்றும் தாராள குணத்திற்காக நினைவுகூரப்படும் ஒரு பக் தியுள்ள பௌத்தர் ஆவார். அவரது கண் டிப்பான தந்தைக்கும் இரக்கமுள்ள தாய்க்கும் இடையிலான வேறுபாடு அவர் மீது ஒரு நீடித்த தாக்கத்தை ஏற்படுத் தியது.

மாவோ பின்னர் தனது குடும்ப வாழ்க்கையை அமெரிக்கப் பத்திரிகை யாளர் எட்கர் ஸ்னோவிடம் விவரித்தார். அந்த விவரங்களை 'சீன வானில் ஒரு சிவப்பு நட்சத்திரம்' (Red star over China) என்ற நூலில் காணலாம். மாவோ தனது தந்தையுடனான அடிக்கடி ஏற்பட்ட மோதல்களை நினைவுகூர்ந்து, அந்தப் போராட்டங்களை தனது எதிர்ப்பின் ஆரம் பகாலப் பாடங்களாகச் சித்தரித்தார். ஒருமுறை, குறிப்பாகக் கடுமையான ஒரு மோதலுக்குப் பிறகு, இளம் மாவோ தான் ஒரு குளத்தில் குதித்து விடுவதாக மிரட் டினார். இறுதியில் அவரது தந்தை விட்டுக் கொடுத்துப் பின்வாங்கினார். வெளிப்ப டையான எதிர்ப்பு மட்டுமே ஆதிக்க அதி காரத்தைச் சமரசம் செய்துகொள்ள நிர்பந் திக்கும் என்றும், அதே சமயம் முழுமையான அடிபணிதல் மேலும் மேலும் ஒடுக்குவதற்கே தூண்டுதலாக அமையும் என்றும் மாவோ இதன்மூலம் தெளிவான முடிவுக்கு வந்தார். இந்தக் கதையை ஒரு புரட்சியாளரை உருவாக்கிய ஒரே நிகழ் வாகக் கருதக்கூடாது. குடும்பச் சண்டைகள் ஒரு அரசியல் வாழ்க்கையை விளக்கிவிடாது. ஆயினும், அதிகாரம்



தானாக முன்வந்து சரணடைவதில்லை என்பதை ஆரம்பத்திலேயே கற்றுக்கொண்ட ஒருவராக, மாவோ பிற்காலத்தில் தன்னை எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதை அந்த நினைவு வெளிப்படுத்துகிறது.

மாவோவின் குழந்தைப் பருவம், கிராமப்புற ஏற்றத்தாழ்வுகளின் யதார்த்தங்களையும் அவருக்கு வெளிப்படுத்தியது. அவரது சொந்தக் குடும்பம் ஓரளவு வசதியாக வாழ்ந் தாலும், பல அண்டை விவசாயிகள் பசியின் விளிம்பில் வாழ்ந்தனர். மோசமான அறுவடை, நோய் அல்லது கடன் காரணமாக ஒரு குடும்பம் தனது நிலத்தை இழக்க நேரிட்டது. குத்தகை விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்தவற்றில் பெரும் பகுதியை நில உரிமையாளர்களிடம் ஒப்ப டைத்தனர். உள்ளூர் அதிகாரிகளும் வரி வசூலிப்பவர்களும் மேலும் சுமைகளை சுமத்த முடிந்தது. கல்வி, குறிப்பாக ஏழைக் குடும்பங்களுக்கும் பெண்களுக்கும் குறைவாகவே இருந்தது.

பாரம்பரிய கிராமியக் கல்வி, செவ்வியல் நூல்களை மனப்பாடம் செய்வதில் கவனம் செலுத்தியது. இந்தப் போதனைகளில் பெரும்பாலானவை உயிரற்றவை என்று மாவோ கருதினாலும், கிளர்ச்சியாளர்கள், போர்வீரர்கள் மற்றும் அநியாய ஆட்சியாளர் களுக்கு எதிரான சவால்கள் பற்றிய பிரப லமான கதைகளை அவர் ரசித்தார். சீனாவின் அதிகாரபூர்வ வரலாறுகள் பெரும் பாலும் பேரரசர்களையும் அதிகாரிகளையும் போற்றின. ஆயினும் அதன் நாவல்களும் நாட்டுப்புற மரபுகளும் மற்றொரு நினைவைப் பாதுகாத்தன. அவை அதிகா ரத்தை எதிர்த்த கொள்ளையர்கள், கிளர்ச்சி செய்த விவசாயிகள் மற்றும் பலவீனர் களைப் பாதுகாத்த நாயகர்கள் பற்றிய நினைவுகள்.

இளம் வயதில், மாவோ படிப்படியாக நவீன அரசியல் எழுத்துகளை அறிந்துகொண்டார். சீனா புதிய கல்வி, அரசாங்கம், இராணுவ அமைப்பு முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பிய சீர்திருத்தவாதி களைப் பற்றி அவர் படித்தார். ஜார்ஜ் வாஷிங்டன், நெப்போலியன், முதலாம் பீட்டர் மற்றும் தேசிய மாற்றத்துடன் தொடர்புடைய பிற ஆளுமைகளின் பதிவுகளால் அவர் ஈர்க் கப்பட்டார். சன் யாட்-சென்னின் புரட்சிகர இயக்கமும் அவரைக் கவர்ந்தது. 1911 புரட்சி தொடங்கியபோது, மாவோ ஹுனான் மாகாணத்தின் தலைநகரான சாங்ஷாவில் படித்துக்கொண்டிருந்தார். கிளர்ச்சி விரைவாகப் பரவியது. சிங் வம்சம் வீழ்ச்சிய டைந்தது. மாவோ பல மாதங்களுக்கு ஒரு புரட்சிகர இராணுவத்தில் சேர்ந்தார். பல இளம் சீனர்களைப் போலவே, பேரரசரின் வீழ்ச்சி தேசிய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று அவர் நம்பினார்.

அந்த நம்பிக்கைகள் நீடிக்கவில்லை. புதிய சீனக் குடியரசுக்கு ஒரு நிலையான அரசியல் அடித்தளம் இல்லை. சன் யாட்-சென்னுக்குப் பதிலாக யுவான் ஷிகாய் ஆட்சிக்கு வந்தார். அவர் அதிகாரத்தை மையப்படுத்த முயன்ற ஒரு இராணுவத் தலைவரானார். பின்னர் தன் னைத்தானே பேரரசராக ஆக்கிக்கொள்ள முயன்றார். 1916-இல் யுவானின் மரணத் திற்குப் பிறகு, நாடு மேலும் பிளவுபட்டது. போட்டிப் போர்ப்பிரபுக்கள் மாகாணங் களைக் கட்டுப்படுத்தி, தங்கள் சொந்த இரா ணுவங்களைப் பராமரித்தனர். பெய்ஜிங்கில் இருந்த அரசாங்கங்கள் பதவிகளையும் அமைச்சகங்களையும் கொண்டிருந்தன. ஆனால் வரையறுக்கப்பட்ட பிராந்தியங்க ளுக்கு அப்பால் பெரும்பாலும் பயனுள்ள அதிகாரம் இல்லாமல் இருந்தன.

மாவோவின் தலைமுறை முடியாட்சி வீழ்வதைக் கண்டிருந்தது. ஆனால் பழைய சமூக அமைப்பு பல வடிவங்களில் நீடித்தது. நிலப்பிரபுக்களின் அதிகாரம் நிலைத்தி ருந்தது. வெளிநாட்டுச் சலுகைகள் தொடர்ந்தன. அரசியல் அமைப்புகள் பலவீ னமாக இருந்தன. பேரரசின் அதிகாரிக ளுக்குப் பதிலாக இராணுவத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர். ஆனால் சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையின் மீது சிறிதளவே கட்டுப்பாட்டைக் கொண்டிருந் தனர். இதிலிருந்து கிடைத்த பாடம் கடுமை யானது. ஒரு பேரரசரை அகற்றுவது மட்டும் சீனாவை மாற்றுவதற்குப் போதுமானதல்ல என்பதே அப்பாடம்.

இந்த ஆண்டுகளில், மாவோ தனது கல்வியைத் தொடர்ந்தார். மாணவர் அரசி யலில் ஈடுபட்டார். அவர் சாங்ஷாவில் உள்ள ஒரு ஆசிரியர் கல்லூரியில் பயின்றார். அங்கு அவர் வரலாறு, தத்துவம், அரசியல் சிந்தனை ஆகியவற்றில் விரிவாக வாசித்தார். நாட்டின் நிலைமை குறித்த தனது அதிருப்தியைப் பகிர்ந்து கொண்ட மற்ற இளைஞர்களுடன் அவர் நட்பை ஏற்ப டுத்திக் கொண்டார். 1918-இல், மாவோவும் அவரது கூட்டாளிகள் பலரும் இணைந்து புதிய மக்கள் ஆய்வுக் கழகத்தை நிறுவினர். அதன் உறுப்பினர்கள் தனிநபர்களையும் சமூகத்தையும் எவ்வாறு மாற்றியமைக்கலாம்

என்பது குறித்து விவாதித்தனர். அவர்களில் சிலர் பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முக்கிய நபர்களாக ஆனார்கள்.

மாவோ உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருந்தார். மற்ற மாணவர்களையும் தங்கள் மனதைப் போலவே உடலையும் வலுப்படுத்த ஊக்குவித்தார். அவர் நீண்ட தூரம் நடந்தார், ஆறுகளில் நீந்தினார், கிராமப்புறங்களில் பயணம் செய்தார். இந்தப் பயணங்கள் அவரை வகுப்பறைக்கு அப்பாற்பட்ட சூழல்களுக்கு அறிமுகப்படுத்தின. அவர் கிராமங்களைப் பார்த்தார், கிராமப்புற மக்களுடன் பேசினார், மேலும் சீர்திருத்தம் குறித்த அறிவார்ந்த விவாதங்களுக்கும் பெரும்பான்மையினரின் கடினமான வாழ்க்கைக்கும் இடையிலான இடைவெளியைக் கவனித்தார். இந்தக் கட்டத்தில், மாவோ இன்னும் மார்க்சியத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. அவர் தாராளவாத, அராஜகவாத, தேசியவாத, சோசலிச எழுத்தாளர்களைப் படித்தார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, அவர் தனிநபர் சுதந்திரம் மற்றும் உள்ளாட்சி சுய-ஆட்சி ஆகிய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். தன் தலைமுறையைச் சேர்ந்த பலரைப் போலவே, அவரும் ஒரு நிலையான கோட்பாட்டைப் பின்பற்றுவதை விட, அதைத் தேடிக் கொண்டிருந்தார்.

## மாணவர் கிளர்ச்சியாளரிலிருந்து கம்யூனிஸ்ட் அமைப்பாளர் வரை:

1918-இல், மாவோ பெய்ஜிங்கிற்குப் பயணம் செய்தார். சீனாவின் தலைநகரம் அறிவுசார் மற்றும் அரசியல் விவாதங்களின் மையமாக மாறிக்கொண்டிருந்தது. பெக்கிங் பல்கலைக்கழகத்தில், அறிஞர்களும் மாணவர்களும் குடும்பம், கல்வி, மொழி, அதிகாரம் பற்றிய பழைய கருத்துகளை கேள்விக்குட்படுத்திக் கொண்டிருந்தனர். புதிய கலாசார இயக்கம், அறிவியல், ஜனநாயகம் மற்றும் சீனாவைப் பின்னுக்குத் தள்ளுவதாக நம்பப்பட்ட சமூக மரபுகளிலிருந்து விடுபட அழைப்பு விடுத்தது. மாவோ பல்கலைக்கழக நூலகத்தில் உதவியாளராக ஒரு வேலையைப் பெற்றார். அந்த வேலை மதிப்புமிக்கதாக இல்லை. அவர் செய்தித்தாள்களையும் பருவ இதழ்களையும் நிர்வகிக்க உதவினார். நன்கு அறியப்பட்ட பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு மத்தியில் சமூக ரீதியாக முக்கியத்துவம் அற்றவராக இருந்தார். ஆயினும், அது அவரை சீனாவின் மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் சிந்தனையாளர்களில் சிலருக்கு அருகில் வைத்தது.

அந்த நூலகம், மார்க்சியத்தின் ஆரம்பகால முக்கிய சீன மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரும், பிற்காலத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இணை நிறுவனருமான லி டாஷாவோவால் இயக்கப்பட்டது. மற்றொரு செல்வாக்கு மிக்க நபர், தீவிர சிந்தனைக்கான இதழான ‘நியூ யூத்’ இன் ஆசிரியரான சென் டுக்சியு. இவர்கள் இருவரும் சீனாவின் நெருக்கடிக்கு நிர்வாக சீர்திருத்தத்தை விட மேலான ஒன்று தேவை என்றும் அதன் அரசியல், பொருளாதார, சமூக அடித்தளங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டனர். முன்னணி அறிவுஜீவிகள் தன்னை பெரும்பாலும் கண்டுகொள்ளவில்லை என்று மாவோ பின்னர் நினைவு கூர்ந்தார். அவர் ஹுனானைச் சேர்ந்த ஒரு இளம் மாகாணவாசி, ஒரு கீழ்நிலைப் பதவியில் இருந்தார். ஆனால் அவர் தன்னைச் சுற்றியிருந்த வாதங்களைப் படித்தார், கேட்டார், உள்வாங்கிக் கொண்டார். பெய்ஜிங் அவரது அரசியல் உலகத்தை விரிவுபடுத்தியது.

முதலாம் உலகப் போர் அப்போதுதான் முடிவடைந்திருந்தது. அந்த மோதல் ஐரோப்பாவைச் சிதைத்து, பல பேரரசுகளைப் பலவீனப்படுத்தியிருந்தது. அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் தேசிய சுயநிர்ணயம் பற்றிப் பேசினார். போருக்குப் பிந்தைய உடன்படிக்கை தங்கள் உரிமைகளை அங்கீகரிக்கக்கூடும் என்று காலனித்துவப்படுத்தப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் நம்புமாறு அவர் ஊக்குவித்தார். சீனா நேச நாடுகளின் பக்கம் சேர்ந்திருந்ததுடன், ஜெர்மனி ஆக்கிரமித்திருந்த ஷான்டாங் பகுதிகளில் சீனாவின் கட்டுப்பாட்டை வெற்றி பெற்ற நாடுகள் மீட்டெடுக்கும் என்று எதிர்பார்த்தது. மாறாக, 1919 ஆம் ஆண்டு வெர்சாய்ஸ் உடன்படிக்கை, ஷான்டாங்கில் ஜேர்மனியின் சலுகைகளை ஜப்பானுக்கு மாற்றியது. பல சீனர்களுக்கு, இது மேற்கத்திய வாக்குறுதிகளின் வரம்புகளை வெளிப்படுத்தியது. சுதந்திரம் மற்றும் தேசிய சுயநிர்ணயம் பற்றிப் பேசிய சக்திகள், சீனாவின் நலன்களைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தன.

1919 மே 4 அன்று, இந்த முடிவை எதிர்த்து பெய்ஜிங்கில் மாணவர்கள் கூடினர். ஆர்ப்

பாட்டங்கள் மற்ற நகரங்களுக்கும் பரவின. தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர், வணிகர்கள் தங்கள் கடைகளை மூடினர், ஜப்பானியப் பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன. மாணவர் போராட்டமாகத் தொடங்கிய ஒன்று, ஏகாதிபத்தியம், சீன அரசாங்கத்தின் பலவீனம் ஆகியவற்றிற்கு எதிரான ஒரு பரந்த தேசிய இயக்கமாக மாறியது. ‘மே 4 இயக்க’மானது மாவோவின் தலைமுறையினரை உருமாற்றியது. அது தேசிய அளவிலான எதிர்ப்பை, கலாசார, அரசியல், சமூக மாற்றங்களுக்கான கோரிக்கைகளுடன் இணைத்தது. இளம் செயல்பாட்டாளர்கள் குடும்ப அமைப்பிலிருந்த பழைய படிநிலைகள், பெண்களின் அடிமை நிலை, மனப்பாடம் செய்வதை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை ஆகியவற்றை எதிர்த்துக் கேள்வி எழுப்பினர். உயர்குடி மேல்தட்டு வர்க்கத்தினரைத் தாண்டிச் சாதாரண மக்களிடமும் கருத்துகள் சென்றடையும் வகையில், அன்றாடப் பேச்சுவழக்கில் எழுதுவதை அவர்கள் ஊக்குவித்தனர்.

ஹுனான் மாகாணத்தில் ‘மே 4 இயக்க’ (May Fourth Movement) நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதிலும், தீவிரப் போக்குடைய வெளியீடுகளுக்குப் பங்களிப்பதிலும் மாவோ உதவினார். மாகாண அரசியல், கல்வி, பெண்களின் சுதந்திரம், மக்கள் பங்கேற்பின் அவசியம் ஆகியவை குறித்து அவர் எழுதினார். அக்காலகட்டத்தில் நிகழ்ந்த மிகவும் குறிப்பிடத்தக்க சம்பவங்களில் ஒன்று, கட்டாயத் திருமணத்திற்கு உட்படுத்தப்பட்ட ஒரு இளம் பெண்ணின் தற்கொலை ஆகும். இது பெண்கள் தங்கள் சொந்த வாழ்க்கையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதை மறுத்த சமூக அமைப்பை மாவோ கடுமையாகச் சாட வழிவகுத்தது. குடும்பம், திருமண நடைமுறைகள், பரந்த சமூகம் ஆகியவை ஒன்றிணைந்து அப்பெண்ணுக்குத் தப்பிப்பதற்கான எந்த வழியையும் இல்லாமல் செய்துவிட்டன என்று அவர் வாதிட்டார். இத்தகைய அனுபவங்கள் புரட்சி குறித்த மாவோவின் புரிதலை விரிவுபடுத்தின. அரசியல் மாற்றம் என்பது ஆட்சியாளர்களை மாற்றுவதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. அது குடும்பம், பள்ளி, கிராமம் மற்றும் ஆண்-பெண் உறவுகள் ஆகியவற்றிலும் ஊடுருவ வேண்டும் என்று அவர் கருதினார்.

இக்காலப்பகுதியில், ரஷ்யப் புரட்சி ஒரு புதிய மாதிரியை முன்வைத்தது. 1917-இல், போல்ஷிவிக்குகள் பழைய ஆட்சியை வீழ்த்தி, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பெயரால் நிர்வகிக்கப்படும் ஒரு அரசை நிறுவுவதாக அறிவித்தனர். சீனாவைப் போலவே ரஷ்யாவும் பெரும் கிராமப்புற மக்கள் தொகையைக் கொண்ட ஒரு பரந்த நாடாக இருந்தது. மேலும், மேற்கு ஐரோப்பாவின் முக்கியத் தொழில்வளம் மிக்க நாடுகளுடன் ஒப்பிடுகையில், அது பொருளாதார ரீதியாகப் பின்தங்கியிருந்தது. நாட்டின் பலவீனமான நிலையிலிருந்து மீள்வதற்கான வழியைத் தேடிக்கொண்டிருந்த இளம் சீனர்களுக்கு, பிரித்தானியா அல்லது பிரான்ஸின் படிப்படியான நாடாளுமன்ற வளர்ச்சி முறையை விட, ரஷ்யாவின் அனுபவமே மிகவும் பொருத்தமானதாகத் தோன்றியது.

மாவோ படிப்படியாக மார்க்சியத்தை நோக்கி நகர்ந்தார். அவரை ஈர்த்தது வெறும் கோட்பாடு மட்டுமல்ல. வெளிநாட்டு ஆதிக்கம், வர்க்க ஏற்றத்தாழ்வு, நிலப்பிரபுக்களின் அதிகாரம், பலவீனமான தேசிய அரசு, தொழிலாளர்கள்-விவசாயிகளின் துயரம் என சீனாவின் பல்வேறு நெருக்கடிகளை மார்க்சியம் ஒன்றிணைப்பதாகத் தோன்றியது. அத்துடன், கருத்துக்களை அரசியல் நடவடிக்கைகளாக மாற்றுவதற்கான ஒரு அமைப்பையும் (அதாவது புரட்சிகரக் கட்சியையும்) அது வழங்கியது. 1921-இல், சிறிய கம்யூனிஸ்ட் குழுக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சீன கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினர். ஹுனான் மாகாணத்தின் பிரதிநிதியாக மாவோ இதில் கலந்துகொண்டார். அந்தக் புதிய கட்சி மிகச் சிறியதாக இருந்தது, அதன் எதிர்காலமும் நிச்சயமற்றதாகவே இருந்தது. சீனாவின் மக்கள் தொகை 50 கோடியை (அரை பில்லியன்) நெருங்கிக்கொண்டிருந்த நிலையில், கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை அவர்களின் முதல் மாநாட்டின் போது இருபதுகளில் மட்டுமே இருந்தது.

தொடக்ககால கம்யூனிஸ்டுகள் நகர்ப்புறத் தொழிலாளர்கள் மீதே தங்கள் கவனத்தை அதிகம் செலுத்தினர். மாவோ ஹுனானில் தொழிலாளர் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தார். கட்சி அமைப்புகளை உருவாக்க உதவினார். போர்வீரர் ஆதிக்கத்தையும் (warlordism) வெளிநாட்டு ஆதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டுவர இரு தரப்பினரும் விரும்பியதால், கம்யூனிஸ்ட் கட்சி சன் யாட்-சென்னின் தேசியவாதக் கட்சியுடன் (குவோமின்டாங்) ஒரு கூட்டணியை அமைத்தது.

தொடக்கத்தில் அந்த கூட்டணி நம்பிக்கைக்குரியதாகத் தோன்றியது. சுன் அவர்களின் மறைவுக்குப் பிறகு, சியாங் கை-ஷேக் (Chiang Kai-shek) மிக வலிமைமிக்க தேசிய வாதத் தலைவராக உருவெடுத்தார். 1927-இல், தேசிய வாதப் படைகள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் திரும்பின. ஷாங்காய் மற்றும் பிற இடங்களில், கம்யூனிச அமைப்பா ளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப் பதாகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். அந்தக் கூட்டணி சிதைந்து உள்நாட்டுப் போர் மூண்டது. 1927-இல் நிகழ்ந்த வன்முறை மாவோவின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தது. நகர்ப்புற கம்யூனிச அமைப்புகள் சிதைக்கப்பட்டன. ஹுனான் மாகா ணத்தில் ஏற்கனவே விவசாயிகளின் சங்கங்கள் குறித்து ஆய்வு செய்து வந்த மாவோ, மீண்டும் கிராமப்புறங்களை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பினார். பல கட்சித் தலை வர்கள் விவசாயிகளை அரசியல் ஒழுக்கமற்றவர்களாகவும், அவர்களின் நடவடிக்கைகளை வரம்பு மீறியவையாகவும் கருதினர். ஆனால் மாவோ வேறுவிதமாகப் பார்த்தார். நிலப் பிரபுக்கள், குலத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் உள்ளூர் அதிகாரத்தை ஒரு பெரும் மக்கள் கூட்டம் சவால் செய்யத் தொடங்கியிருப்பதை அவர் கண்டார்.

ஹுனானில் நடைபெற்ற விவசாயிகளின் இயக்கம் குறித்த தனது 1927-ஆம் ஆண்டு அறிக்கையில், கிராமப்புற எழுச் சியின் வலிமையை மாவோ ஆதரித்துப் பேசினார். புரட்சி என்பது கண்ணியமான அல்லது கவனமாக நிர்வகிக்கப் படும் ஒரு நிகழ்வு அல்ல என்று அவர் வாதிட்டார். தலைமு றைகளாக ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை ஆண்டவர்க ளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்போது, அதன் விளைவு தவிர்க்க முடியாமல் சீர்குலைவை ஏற்படுத்துவதாகவே அமையும். இந்தக் கண்ணோட்டம் மாவோவின் அரசியல் பாதையில் மையமான ஒன்றாக மாறியது. ஐரோப்பா அல்லது ரஷ்யாவின் அனுபவங்களை அப்படியே நகலெ டுப்பதன் மூலம் சீனாவின் புரட்சியில் வெற்றிபெற முடியாது என்று அவர் உறுதியாக நம்பினார். அது கிராமப்புறங்களை நோக்கி நகர்ந்து, விவசாயிகளை ஒருங்கிணைத்து, அரசின் உடனடி அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட ஆயுதமேந்திய தளங்களை உருவாக்க வேண்டியிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார்.

## தொடரும் குறிப்புகள்:

மாவோ பிறப்பிலேயே ஒரு மார்க்சியவாதியாக இருக்க வில்லை. கம்யூனிசத்தை நோக்கிய அவரது பயணம் ஒரு நேர்கோட்டில் அமையவில்லை. அவர் பல்வேறு அறிவுசார், அரசியல் தளங்களைக் கடந்து வந்தார். ஒரு பாரம்பரிய கிராமப்புறக் குடும்பத்தில் வளர்ந்த அவர், செவ்வியல் இலக்கியங்களை வாசித்தார். 1911-ஆம் ஆண்டுப் புரட்சியை ஆதரித்தார். தாராளவாதம் மற்றும் அராஜக வாதம் ஆகியவற்றை ஆராய்ந்தார், 'புதிய கலாசார இயக்கம்', 'மே 4 இயக்கம்' ஆகியவற்றில் பங்கேற்றார்; இறு தியாகவே படிப்படியாக மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டார். இக்கட்டங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்த காரணி சீனாவின் நெருக்கடி நிலையாகும். சீன நிலப்பரப்பிற்குள் அந்நியப் படைகள் நுழைவது, முடியாட்சி வீழ்வது, குடியரசு தோல்வியடைவது, போர்ப் பிரபுக்களால் நாடு துண்டாடப்ப டுவது ஆகியவற்றை நேரில் கண்ட ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர் மாவோ. சீன நிலப்பரப்பின் மீதான ஜப்பானின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், மேற் கத்திய அரசுகள் தேசிய சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவதை அவர் கவனித்தார். பெய்ஜிங்கில் நிகழ்ந்த அரசியல் மாற் றங்கள், கிராமப்புறச் சமூகங்களின் வறுமையையும் அதிகா ரமின்மையையும் மாற்றுவதில் பெரிய அளவில் உதவ வில்லை என்பதையும் அவர் கண்டார். இத்தகைய அனுப வங்களிலிருந்து, மாவோ தனது எஞ்சிய வாழ்க்கையை வடி வமைத்த பல முடிவுகளுக்கு வந்தார்.

சீனாவுக்குத் தேசிய ஒற்றுமை தேவைப்பட்டது. ஆனால் சமூக மாற்றம் இல்லாத ஒற்றுமை பழைய ஏற்றத்தாழ்வு களையே தக்கவைத்திருக்கும். அதற்குச் சுதந்திரம் தேவைப்பட்டது. ஆனால் அந்நிய சக்திகளைச் சார்ந்திருப் பதன் மூலம் அந்தச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியாது. அதற்கு நவீன அறிவு தேவைப்பட்டது. ஆனால் வளர்ச்சிக்கான பொருள் ஐரோப்பாவைப் போலப் பின்பற் றுவது மட்டுமல்ல. அதற்குப் புரட்சி தேவைப்பட்டது. ஆனால் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருந்த விவசாயிகளைப் புறக்கணித்தால் அந்தப் புரட்சி தோல்விய டையும். மாவோவை உருவாக்கிய சீனா என்பது இதையே குறிக்கிறது. அது ஏகாதிபத்தியத்தால் அவமானப்படுத்தப் பட்ட அதே வேளையில், எதிர்ப்பின் மரபுகளைப் பெரும ளவில் கொண்டிருந்த ஒரு சீனாவாக இருந்தது. அது ஒரு பழமையான நாகரிகத்தைக் கொண்டிருந்தாலும், அரசியல் கட்டமைப்பு சரிந்து கொண்டிருந்த நாடாக இருந்தது. அங்கு நவீன தொழிற்சாலைகளும் பல்கலைக்கழகங்களும் இருந்தன. ஆயினும் பெரும்பாலான மக்கள் கிராமங்க ளிலேயே வாழ்ந்தனர். அது ஒரு பேரரசரை வீழ்த்தியி ருந்தது. ஆனால் சுரண்டலையோ, அந்நியத் தலை யீட்டையோ அல்லது அரசியல் பிளவுகளையோ அது முடி வுக்குக் கொண்டுவரவில்லை.

1927-இல் மாவோவின் பதில் இன்னும் முழுமையடையாத ஒன்றாகவே இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சிறியதாகவும், பிளவுபட்டதாகவும், வன்முறையால் தொடர்ச்சியாக ஒடுக் கப்பட்டுக் கொண்டும் இருந்தது. அதன் நகர்ப்புறச் செயற் றிட்டம் பெரும் தோல்வியைச் சந்தித்திருந்தது. கட்சிக்குள் மாவோ தனது நிலையை இன்னும் உறுதிப்படுத்திக்கொள் ளவில்லை. சீன விவசாயிகள் ஒரு புரட்சிகர இயக்கத்தின் அடித்தளமாக அமைய முடியும் என்ற வாதம் அவரிடம் இருந்தது. ஆனால், வெற்றி பெறுவதற்கான தெளிவான வழிமுறை அவரிடம் அப்போது இல்லை. ஆயுதமேந்திய கிளர்ச்சிகள், கிராமப்புறத் தளங்கள், இராணுவத் தோல்விகள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளான அரசியல் போராட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகவே அந்தப் பாதை உருவாக்கப்படவிருந்தது. இறுதியில், அது மாவோவையும் அவரது ஆதரவாளர்களையும் இருபதாம் நூற்றாண்டின் மிக அசாதாரணமான பயணங்களில் ஒன்றை நோக்கி இட்டுச் செல்லவிருந்தது.



meenilankco@thaiveedu.com

பொ. கருணாகரமூர்த்தி

# மழைக்கண்

சமகால இலக்கியச் சூழலில் படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்குமிடையே பரஸ்பரம் இருவேறு அதிருப்திகளும் ஏமாற்றங்களும் நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. இலக்கியத்தின் தரத்தையும் அதன் நகர்வையும் தீர்மானிக்கும் முதன்மைச் சக்திகளாக விளங்கும் இவ்விரு தரப்பினரும், சமகாலத்தில் ஒருவித தேக்கநிலையைச் சந்தித்துள்ளமை இலக்கியப் பரப்பில் பரவலான விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.




முதலாது அதிருப்தியானது, காத்திரமான மற்றும் கலைத்துவப் பெறுமதிமிக்க படைப்புகளைத் தரக்கூடிய ஆளுமைகள் சமகாலத்தில் எதிர்கொண்டு வரும் மந்தநிலை சார்ந்ததாகும். தீவிர இலக்கியப் பரப்பில் கனதியான பங்களிப்பை வழங்கிய பல படைப்பாளிகள், தற்போது தங்களது எழுத்துப் பணிகளைக் குறைத்துக் கொண்டுள்ளனர். இதற்குத் தனிநபர் சார்ந்த காரணங்கள் மட்டுமே அடிப்படையல்ல; மாறாக, சமகால நுகர்வுப் பண்பாட்டுச் சூழல், வாழ்வாதார நெருக்குவாரங்கள், குடும்பப் பொறுப்புகள் மற்றும் அவர்களுக்கு உகந்த இலக்கியச் சூழல் அமையாமை போன்ற புறக்காரணிகளே அவர்களை மௌனத்தை நோக்கித் தள்ளுகின்றன. இத்தகைய ஆற்றல்மிக்க ஆளுமைகள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ எழுதுவதைத் தவிர்த்துக்கொள் வது இலக்கியப் பரப்பில் ஒரு பெரிய இடைவெளியைத் தோற்றுவிக்கின்றது.

இரண்டாவது ஆதங்கம், வாசகர் தரப்பின் மீதானது. இன்று சமூக வலைத்தளங்களும் காட்சியூடகங்களும் வாசகர்களின் மடிக்கணினியிலும் அலைபேசியிலும் தகவல்களை மிக எளிதாகக் கொண்டு சேர்த்துவிடுகின்றன. எதையும் தேடிப் போய் வாசிக்கும், ஆராயும் பழக்கம் இதனால் அருகி வருகிறது. இதன் விளைவாக, மிகச் சாதாரணமான வணிகத் திரைப்படங்களின் கதாநாயகி பெயர் முதல் சண்டைப் பயிற்சியாளர்களின் பெயர்கள் வரை அக்குவேறாக ஆணிவேறாகத் தெரிந்து வைத்திருக்கும் இன்றைய தலைமுறைக்கு, தங்களின் சமகாலத்தில் எழுத வந்திருக்கும் புதிய எழுத்தாளர்களைப் பற்றியோ, அவர்களின் காத்திரமான படைப்புகளைப் பற்றியோ எந்தவொரு பிரக்ஞையும் இருப்பதில்லை. எளிய நுகர்வுப் பொருட்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, சிந்தனையைத் தூண்டும் இலக்கியங்களுக்குக் கொடுக்க அவர்கள் தவறிவிடுகிறார்கள். இந்த இரண்டு குறைபாடுகளுக்கும் (வாசகர்களின் தேடி வாசிக்காமை மற்றும் நல்ல படைப்பாளிகள் கவனிக்கப்படாமை) மிகச் சிறந்த உதாரணத்தை அண்மையில் நடந்த சென்னை 2026 புத்தகக் கண்காட்சியில் காண முடிந்தது.

tg.theeban@gmail.com




புத்தகக் கண்காட்சியில் வாசகர்கள் அவசியம் படிக்க வேண்டிய சமகாலத்தின் முக்கிய வரவுகளாகப் பரிந்துரைக்கப்பட்டதால் ஈர்க்கப்பட்டு, செந்தில் ஜெகன்நாதன் எழுதிய 'மழைக்கண்', 'அனாகத நாதம்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் வாசிக்கப்பட்டன. இவ்விரு நூல்களும் 'சொற்றுணை' எனும் புதிய பதிப்பகத்தின் வாயிலாக வெளியீடு செய்யப்பட்டுள்ளன. 'மழைக்கண்' ஜனவரி 2024-இலும், 'அனாகத நாதம்' டிசம்பர் 2025-இலும் வெளிவந்துள்ளன. புதிய பதிப்பகமாக இருப்பினும், அழகிய அச்சுத் தரத்தோடு நூல்கள் வெளிவந்திருப்பது பதிப்புலகில் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

வாழ்க்கையில் நம் குடும்பத்திலுள்ள அம்மா, அப்பா, சகோதரங்கள், உறவுகள், எம்முடன் சேர்ந்து பணிபுரிவோர், அயலவர்களென ஒவ்வொரு மனிதர்களும் எம் வாழ்வின் நிகழ்வுகளைப் பாதிக்கிறார்கள்; மாற்றியமைக்கிறார்கள். அவர்களோடான ஊடாட்டத்தில் அமையும் வினோதமான தருணங்களையும் அனுபவங்களையும் கலைத்துவத்துடன் பதிவு செய்யும்போது அவை இலக்கியங்களாகப் பரிணமிக்கின்றன. சிறுகதை களின் முன்னோடிகளான ப்ரான்ஸ் கஃப்காவினதும், அன்ரன் செக்கோவினதும் படைப்புகளைக் கூர்ந்து நோக்கும்போது அவர்கள் தம் சூழலிலேயே வாழ்ந்தவர்களையே பாத்திரங்களாகத் தம் புனைவுகளில் வடித்துள்ளமை தெரிகிறது. செந்தில்கூடத் தன் கிராமத்து வாழ்க்கையிலான குடும்பத்து உறவுகளையும், சினிமாவில் புகுந்த பின்னால் அவ்வுலகின் பகைப்புலத்தில் உலவும் மனிதர்களின் வாழ்க்கையையும் அதிகம் தன் புனைவுகளில் காட்சிப்படுத்தி அவர்களின் கதைகளையே சொல்ல விழைகின்றார்.

இத்தொகுப்பின் தலைப்புக் கதையாகிய மழைக்கண், ஓர் எளிய விவசாயக் குடும்பத்தின் வாழ்வியல் பின்னணியில் மிக எதார்த்தமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகளைக் கொண்ட ஒரு சிறிய குடும்பத்தின் ஒட்டுமொத்தச் சுமைதாங்கியாக விளங்கும் ஒரு தாயைச் சுற்றியே இக்கதை நகர்கிறது. அவர்கள் அப்போகம் பயிரிட்டிருந்த பருத்தித் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஏதோவொரு பூச்சியோ அல்லது விஷ ஜந்துவோ அந்தத் தாயைக் கடித்துவிடுகிறது. அதை யாரும் நேரில் பார்க்கவில்லை என்றாலும், கடித்த இடத்தில் ஏற்படும் வீக்கமும் நமைச்சலும் அவளது நிலையை மோசமாக்குகின்றன. ஆரம்பத்தில் செய்யப்படும் எளிய கைவைத்தியங்கள் பலனளிக்காமல் போகவே, மேற்கொண்டு சிகிச்சைக்காகப் பிறவூர் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அக்குடும்பத்திற்கு ஏற்படுகிறது. அங்கும் நிம்மதி கிடைப்பதில்லை; ஸ்கேனிங், இரத்தப் பரிசோதனைகள் எனப் பலவாறாக அலைக்கழிக்கப்பட்டும், நோய் இன்னதென்று துல்லியமாகக் கண்டறிய முடியாமல் அக்குடும்பம் தவிக்கிறது. ஒருபுறம் தாயின் உடல்நிலை குறித்த அச்சமும் மருத்துவமனை அலைச்சல்களும் வாட்ட, மறுபுறம் பருவம் தவறிவிடாமல் வயல்காட்டில் பருத்தியைப் பயிர் செய்து, தங்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொருளாதார நெருக்கடி. இவ்விரண்டிற்கும் இடையே அக்குடும்பம் படும் அவஸ்தைகளும், வாழ்வியல் அல்லாடல்களும் கதையில் மிக உயிர்ப்புடன் சித்தரிக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பிலுள்ள 'எவ்வம்' என்ற சிறுகதை, வாழ்வின் விளிம்புநிலை இருண்மைகளை மிகக் காத்திரமாக வெளிப்படுத்துகின்றது. சந்தைத் திடல்களிலும் திருவிழாக் களங்களிலும் 'வை ராஜா வை!' எனக் கூவி, மக்களின் பலவீனமான மனநிலையைப் பயன்படுத்திச் சூதாட வைக்கும் திரவியம் எனும் பாத்திரத்தின் வழியே இக்கதை நகர்கின்றது. ஏமாற்றிச் சுருட்டும் பணத்தில் மது அருந்தியும் வயிறு வளர்த்தும் வாழும் ஒரு பொறுப்பற்ற தந்தைக்கு மகனாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக, அவனது சிறுவயது மகனான 'பச்சை' என்பவன் அவனுடன் நிழல்போல அலைந்து திரிய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றான். அவன் வயதுக்கு மீறிய திறமையோடு கிரிக்கெட் விளையாடக்கூடிய அசாத்திய ஆற்றல் படைத்தவன். ஆனால், திரவியமோ அவனை விளையாட அனுமதிக்கவே மாட்டான். தன் சூதாட்டக் களங்களில் பச்சையைத் துணையாக வைத்திருக்கவே அவன் விரும்புகிறான். அப்படி அழைத்துச் செல்லும் இடங்களிலும் கூட, அந்தச் சிறுவனுக்குச் சரியாகச் சாப்பிடக் கூட எதுவும் வாங்கிக் கொடுக்காத சுயநலக்காரன் அவன். சுயநலமே உருவான திரவியம் ஒருபுறம், அவனது கொடுமைகளுக்குப் பலியாகும் பச்சையின் அம்மாவும் அக்காவும் மறுபுறம் என, அக்குடும்பத்தின் பரிதாபகரமான கதையையே 'எவ்வம்' விவரிக்கிறது.

இக்கதையின் உச்சகட்டக் கொடுமை என்பது, அந்தச் சூதாட்டங்கள் முடிவடையும் இரவுகளில்தான் அரங்கேறுகிறது. ஆட்டம் முடிந்ததும் கண்மண் தெரியாமல் குடித்துவிட்டுப் போதையில் சுருண்டு கிடக்கும் அல்லது சட்டவிரோதச் சூதாட்டத்தால் காவல்துறையினரிடம் அடி உதை பட்டு நிலைகுலைந்து கிடக்கும் திரவியத்தை, அந்த நள்ளிரவில் கையைப் பிடித்துத் தூக்கி, பேருந்திலேற்றிப் பத்திரமாக ஊருக்குக் கூட்டிவர பச்சை படும் அவஸ்தைகளும் அலைச்சல்களும் வாசகரின் நெஞ்சைப் பிசையக் கூடியவை. ஒரு சிறுவனின் நிர்கதியான அந்தப் போராட்டத்தைச் செந்தில் ஜெகன்நாதன் நம் கண்முன்னே காட்சிரூபமாகக் கடத்தியுள்ளார்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'நெருநல் உள்ளொருத்தி' எனும் சிறுகதை, பெண்களின் அகப் போராட்டத்தைப் பேசும் ஒரு காத்திரமான படைப்பாகும். ராமஜெயம் - பூங்கொடி தம்பதியரின் மூன்றாவது ஆண் குழந்தை, குழந்தைப்பேறற்ற ராமஜெயத்தின் சகோதரி வேணிக்குத் தத்துக் கொடுக்கப்படுகின்றது. இச்சூழலில், ராமஜெயம் விபத்தொன்றில் உயிரிழக்க, இரு குழந்தைகளுடன் வறுமையின் தீவிர நிலைக்குத் தள்ளப்படுகிறாள் பூங்கொடி. கூலி வேலைகள் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்பத்தை நகர்த்தக் கடினமாக உழைக்கும் நிலையில், திருமணமாகி பன்னிரண்டு ஆண்டுகளின் பின் கர்ப்பமடையும் வேணி, தத்துப் பிள்ளையை கொஞ்சக் காலத்திற்குப் பராமரிக்குமாறு பூங்கொடியிடம் கோருகின்றாள். ஏற்கனவே வறுமையில் தவிக்கும் சூழலில், இக்கோரிக்கையை பூங்கொடி எதிர்கொள்ளும் முறையும், தாய்மைக்கும் வறுமைக்கும் இடையிலான அவளது உளவியல் போராட்டமுமே இக்கதையின் மையப் பொருளாக அமைகின்றது.

சமகால வர்த்தக மற்றும் தீவிர இலக்கியச் சஞ்சிகைகளில் வெளியாகிப் பரவலான கவனிப்பைப் பெற்ற செந்தில் ஜெகன்நாதனின் ஒன்பது சிறந்த சிறுகதைகள் இம்மழைக்கண்' தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இரு காத்திரமான சிறுகதைத் தொகுப்புகள் மூலம் தமிழிலக்கியப் பரப்புக்குத் தன்னை ஒரு முக்கியமான ஆளுமையாக அவர் அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார். சிறுகதைகளில் முதிர்ச்சியான தடத்தைப் பதித்துள்ள செந்தில் ஜெகன்நாதன், தற்போது தனது அடுத்த கட்டப் பாய்ச்சலாகப் புதிய புதினம் (நாவல்) ஒன்றை எழுதும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார். அதுமட்டுமன்றி, சமகாலத் தமிழ் சினிமா இயக்கத்திலும் அவர் தடம் பதித்து இயங்கத் தொடங்கியுள்ளார் என்ற செய்தி அவரது பன்முக ஆளுமையை உணர்த்துகிறது.

‘மழைக்கண்’ நூலில் எழுத்தாளரான ஜெயமோகன் தனது அணியுரையில் இத்தொகுப்பைப் பற்றி மிக உயர்வாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் விவரித்திருப்பதைப் போன்றே, மனித வாழ்வின் அரியவையும், விநோதமானவையுமான பல நுட்ப மான வாழ்வியல் தருணங்களே செந்தில் ஜெகன்நாதனின் கதைகளில் முதன்மையான பேசுபொருட்களாக அமைந்துள் ளன. சாதாரண மனிதர்களின் அன்றாடப் பாடுகளுக்குள் மறைந்திருக்கும் விசித்திரங்களையும், உணர்வுப் போராட் டங்களையும் மிக அலாதியான மொழியில் வாசகருக்குக் கடத்துவதில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள மற்றுமொரு கதை ‘அன்பின் நிழல்’. இதில் வரும் அப்பா கதாபாத்திரம், கிராமத்து மனிதர் களுக்கே உரிய பிடிவாதமும், சுயமரியாதையும், தனித்து வமான ‘கெத்தும்’ நிறைந்த ஒன்றாகச் செதுக்கப்பட்டுள்ளது. வெளியில் கரடுமுரடாகத் தெரிந்தாலும், உள்ளே ஊற்றெ டுக்கும் பேரன்பைக் கொண்ட அந்தத் தந்தையின் பாத்திர வார்ப்பு வாசகர்களை வெகுவாகக் கவரக்கூடியது. இக் கதையை வாசித்து மனமார்க்கமடைந்த கதைசொல்லியும் எழுத்தாளருமான பவா செல்லத்துரை, தனது புகழ்பெற்ற கதைவாசிப்பு நிகழ்வொன்றில் இக்கதையைப் பற்றி மிகவும் நெகிழ்ந்து பாராட்டியுள்ளார். ‘செந்தில் ஜெகன்நாதனின் இந்த அப்பா பாத்திரவார்ப்பில் நான் என் சொந்தத் தந்தை யையே கண்டேன்’ என்று அவர் நெஞ்சம் நெகிழ்ந்து இயம் பியது, இக்கதையின் பாத்திரப் படைப்பு எவ்வளவு அசாத்தி யமான எதார்த்தத்தைக் கொண்டது என்பதற்கான ஆகச் சிறந்த சான்றாகும்.

செந்தில் ஜெகன்நாதன் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராதலால், விவசாயம் சார்ந்த அத்தனை நுட்பங் களும் அவரது கதைகளில் அப்பட்டமாகப் பிரதிபலிக்கின் றன. நிலத்தைத் தயார் செய்வது, விதைப்பது, களை எடுப் பது, பூச்சி மேலாண்மை மற்றும் அறுவடை வரை விவசாயத் தின் அத்தனை செய்நேர்த்திகளும், அது சார்ந்த வாழ்வியல் நடப்புகளும் தகவல்களும் அவரது படைப்புகளில் இயல் பாக நிரவிக்கிடக்கின்றன. குறிப்பாக, இத்தொகுப்பின் தலைப் புக் கதையான மழைக்கண் கதையில், பருத்திச் செய்கை யைத் தன் உயிர் மூச்சாக நேசிக்கும் ஒரு சாதரண விவசா யக் குடும்பத்து அம்மாவே மையப் பாத்திரமாகப் படைக்கப் பட்டுள்ளார். வெறும் தொழில் என்ற எல்லையைக் கடந்து, நிலத்தோடும் பயிரோடும் உணர்வுபூர்வமாகப் பிணைந்தி ருக்கும் ஒரு கிராமத்துப் பெண்ணின் சித்திரத்தை மண்ணின் மணத்தோடு செந்தில் இதில் வார்த்தெடுத்துள்ளார்.

ஒவ்வொரு படைப்பாளியும் தன் மனவேக்காடுகளை, கனவு களை, ஆசைகளை வார்த்தைகளாக்கிப் பரப்பி வைப்பது தானே இலக்கியமாகப் பரிமளிக்கிறது. அந்த வகையில், செந்தில் ஜெகன்நாதன் நிஜத்தில் சாத்தியப்படாத எதையும் புனைவாக்கி வாசகரை ஏமாற்ற விரும்புவதில்லை. (இதற்கு விதிவிலக்காக, அவரது அனாகத நாதம்’ தொகுப்பில் வரும் கடைமுகம்’ என்ற கதையைக் குறிப்பிடலாம்). தேவையற்ற வார்த்தை ஜாலங்களைத் தவிர்த்துவிட்டு, நடைமுறையில் புழக்கத்திலுள்ள எளிய வாழ்வியல் சொற்களால் தன் கதை களை நெய்வது இவரது ஆகச்சிறந்த தனித்துவமாகும். நாம் தினமும் கடந்து போகக்கூடிய மிகவும் இயல்பான மனி தர்களே, நமக்கு நன்கு பரிச்சயமான எதார்த்தப் பகைப்புலங் களில் செந்திலின் கதைகளில் பாத்திரங்களாக உலவுகின் றனர். அதனாலேயே இக்கதைகள் வாசகருக்கு மிக நெருக் கமான அனுபவத்தைத் தருகின்றன.

மொழிநடையில் இத்தனை எளிமையைக் கையாளும் செந் தில் ஜெகன்நாதன், ஏனோ சில கதைகளுக்கான தலைப்பு களைச் சூடுவதில் மட்டும் சற்றே கடினமான 'பரிசோதனை முயற்சிகளில்' ஈடுபடுகிறார். எவ்வம்' (துன்பம் / எவ்விதத்தி லுமானது), காகளம்' (புள்ளோசை), ‘அனாகத நாதம்’ (உரா யாமல் ஆன்மாவிலிருந்து பிறக்கும் இசை) போன்ற தலைப் புகள் சாதாரண வாசகருக்குச் சற்றே புதிர்த்தன்மை வாய்ந்த வையாகவும், அகராதியைத் தேட வைப்பவையாகவும் அமைந்துள்ளன. அனாகத நாதம் என்பது ஒரு வடமொழி யிலான கூட்டுச் சொல். கதையின் நடை எளிய தமிழில் புனையப்பட்டிருக்கும் போது, தலைப்புகள் மட்டும் இத்த கைய தொல்சொற்களாகவோ அல்லது பிறமொழிச் சொற் களாகவோ அமையும் போது, சாதாரண மொழியறிவுடைய தற்கால வாசகருக்கு இவை சட்டென்று புரிந்துவிடுவதில்லை. இங்கு நாம் வரலாற்றிலிருந்து ஒரு முக்கிய உதாரணத்தைக் கவனிப்பது பொருத்தமாக இருக்கும். 1970-களில் நடிகை சாவித்திரி, நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வைத்து ‘பிராப்தம்’ (1971) என்றொரு திரைப்படத்தைத் தயாரித்து இயக்கினார். வணிக ரீதியாக அந்தப் படம் பெரும் தோல்வி யைத் தழுவியது. அந்தத் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்தபோது, எளிய ரசிகருக்குப் புரியாத அப்படத்தின் 'பிராப்தம்' என்ற வட மொழித் தலைப்பும் ஒரு முக்கியக் கார ணம் என்று அன்றைய திரைத்துறையினரால் பேசப்பட்டது. கதைத் தலைப்பு எம்மொழியில் வேண்டுமானாலும் இருக் கட்டும்; ஆனால், அதன் அர்த்தம் சாதரண வாசகருக்கோ அல்லது ரசிகருக்கோ புரியாத பட்சத்தில், அது படைப் பிற்கே ஒரு 'விஷப்பரீட்சையாக' முடிந்துவிடும் வாய்ப்புள் ளது என்ற எச்சரிக்கையைச் செந்தில் ஜெகன்நாதனின் இத் தலைப்புப் பரிசோதனைகளும் நமக்கு நினைவூட்டுகின்றன.

ஆசிரியர் செந்தில் ஜெகன்நாதனுக்குத் தான் சொல்ல வரும் செய்தியை வாசகருக்குத் தெளிவாகக் கடத்திவிடும் அசாத் தியத் திறமை இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனாலும், அவரது நூல்களில் ஆங்காங்கே காணப்படும் எழுத்துப் பிழைகளும், இலக்கண வழுக்களும் தீவிர வாசகரைச் சற்றே முகம் சுளிக்க வைக்கின்றன. அவருக்கு இன்னும் 'னகர-ணகர' (ன/ண), 'ளகர-ழகர' (ள/ழ) மயக்கம் இருக்கிறதோ அல்லது அவை தற்செயலான தட்டல் வழுக்களோ தெரிய வில்லை; ஆனால், ‘பண்டங்கள் இரைந்து கிடக்கும்’ (இறைந்து), ‘காய்ந்த சறுகுகள்’ (சருகுகள்), ‘நகக்கீரல்கள்’ (கீறல்கள்), ‘மெருகேரி இருந்தாள்’ (மெருகேறி) எனப் பல சொற்களில் பிழைகள் ஆங்காங்கே மண்டியிருப்பதை வாசிப் பில் காண முடிகிறது.

இந்த எழுத்துப் பிழைகளைக்கூட ஒருவாறு சகித்துக்கொண்டு கடந்து சென்றாலும், அடிப்படைத் தமிழ் இலக்கண விதி களையே சிதைக்கும் பன்மை-வினைமுற்று வழுக்களை அவ் வளவு எளிதாகக் கடந்து செல்ல முடிவதில்லை. ஒரு வாக்கி

யத்தின் எழுவாயோ அல்லது செயற்படுபொருளோ பன்மையில் அமைந்தால், அதன் வினைமுற்றும் பன்மையிலேயே அமைய வேண்டும் என்பது மாறாத தமிழிலக்கண விதியாகும். ஆனால், இத்தொகுப்புகளில் ‘கண்கள் தளும்பி நின்றது’, ‘பார்த்துக் கொண்டிருந்தது’, ‘விழிகள் விரிந்தது / கலங்கியது’, ‘பல மாதங்கள் ஆகியிருந்தது’, ‘உதடுகள் துடித்தது’ மற்றும் ‘சொதப்பல்கள் நிகழ்ந்தது’ என்று பன்மை எழுவாய்களுக்குப் பொருத்தமில்லாமல் ஒருமை வினைமுற்றுகளைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். இவை முறையே நின்றன, கொண்டிருந்தன, விரிந்தன / கலங்கின, ஆகியிருந்தன, துடித்தன மற்றும் நிகழ்ந்தன என்று பன்மையிலேயே அமைந்திருக்க வேண்டும். இக்காலச் செம்மை நோக்கர்களுக்கும் (Proof readers) இவ்வழுக்கள் கண்ணில் படுவதில்லை என்பதும், இன்று பல முன்னணி எழுத்தாளர்களின் நூல்களிலும் இத்தகைய வழுக்கள் விரவிக் கிடக்கின்றன என்பதும் கசப்பான எதார்த்தம்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளில் ஆன்மீகம் சார்ந்த காட்சிகளினூடே பல்வேறு ஆன்மீகத் தலங்கள் சித்தரிக்கப்பட்டுள்ள. எனினும், கதைகளில் வரும் அம்மா, பாட்டி போன்ற முதன்மைப் பெண் பாத்திரங்களை ‘அவள் வந்தாள்’, ‘போனாள்’ என்று ஒருமையில் விளித்து எழுதுவது வாசகருக்குச் சற்றே நெருடலைத் தருகிறது. பெண் பாத்திரங்களை இப்படி ஒருமையில் விளிக்கும் போக்கு சென்ற நூற்றாண்டின் பிராமண மற்றும் மேட்டிமைச் சாதி எழுத்தாளர்களோடு ஆரம்பித்து வளர்ந்தவொரு பழக்கமாகும். இன்றைய நவீன எழுத்தாளர்களோ அல்லது புலம்பெயர் எழுத்தாளர்கள் எவரோ இப்போது பெண்களை அப்படி ஒருமையில் எழுதுவதில்லை; மதிப்பிற்குரிய பன்மையிலேயே விளிக்கிறார்கள். செந்தில் ஜெகன்நாதனும் வரும் காலங்களில் இம்மாற்றம் பற்றிச் சிந்திக்கலாம்.

சிறுகதைகளில் ஆழமான தடம் பதித்து, தற்போது புதிய புதினம் (நாவல்) மற்றும் சினிமா இயக்கத்திலும் கால்பதித்துள்ள செந்தில் ஜெகன்நாதனின் வரவு தமிழ் இலக்கிய உலகிற்குப் புதிய இரத்தம் பாய்ச்சியுள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அரியவையும் விநோதமானவையுமான வாழ்வியல் தருணங்களை எளிய சொற்களால் நெய்யும் இவரது புனைவாற்றல் பாராட்டுக்குரியது. எனினும், 'சொற்றுணை' போன்ற புதிய வெளியீட்டகங்கள் வரும் காலங்களில் இத்தகைய இலக்கண வழுக்களைக் களைந்து மொழிச் செம்மையோடும், வாசகரைத் தள்ளி வைக்காத எளிய தமிழ்த் தலைப்புகளோடும் நூல்களைக் கொண்டு வர வேண்டும். காட்சியூடக மோகத்தில் மூழ்கியிருக்கும் இன்றைய வாசகர்கள், இத்தகைய காத்திரமான புதிய படைப்பாளிகளைத் தேடிப் பிடித்து, விமரிசித்து வாசிப்பதே சமகால இலக்கியத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் ஆரோக்கியமான பணியாகும்.

karunaharamoorthy.p@thaiveedu.com

தாமரைச்செல்வி

# ‘மாயோள்’

## நான்கு தலைமுறைப் பெண்களின் நூற்றாண்டு கால வரலாற்று ஆவணம்

**மாயோள்:**

மாயி என்னும் மாயோள்.

இக்கதையின் முதல் தலைமுறைப் பெண். தமிழை நேசிக்கும் அவள் தாத்தா தன் பேர்த்திக்கு வைத்த அழகான பெயர். கரிய நிறமுடைய அழகி. இந்த அழகிய பெயர் நற்றிணையின் முந்நூற்று எழுபத்தியோராவது பாடல் வரிகளிலிருந்து பெறப்பட்டிருக்கிறது. ‘மாயோள் இருந்த தேஎம் நோக்கி - மாமை நிறம் உடையவள் இருந்த தென்திசை நோக்கி’.

தமிழ்நாட்டில் உள்ள திருச்சி மாவட்டத்தில் உள்ள பொன்மலை எனும் கிராமத்தில் முருகையாபிள்ளை, வேலம்மாள் தம்பதிகளுக்கு இரண்டாவது மகளாக 1922-ஆம் ஆண்டு பிறந்த பெண் மாயோள். அவள் ஆரம்பித்து வைத்த வரலாறு நாலு தலைமுறையாகத் தொடர்கிறது. இந்த நான்கு தலைமுறைப் பெண்களின் வரலாற்றையும் வாழ்வனுபவங்களையுமே இந்த ‘மாயோள்’ பேசுகின்றது. மருத்துவர் வாசுகி சித்திரசேனன் அவர்கள் ‘வாசி’ என்ற புனைபெயரில் படைத்த உணர்வுச் சித்திரம் இந்நூல். இது புனைவா, அபுனைவா, அல்லது வரலாற்று ஆவணமா? எதற்குள் தன் எழுத்தை வாசுகி சித்திரசேனன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் என்பதை வாசிக்கும் ஒவ்வொரு வரும் தமக்குத் தாமே தீர்மானித்துக் கொள்ளலாம். ஏனெனில், இவை எவற்றுக்குள்ளும் வரையறுக்க முடியாத வித்தியாசமான வடிவில் கதை சொல்லல் இருக்கிறது. ஒரு குடும்பத்தின் நான்கு தலைமுறைப் பெண்களின் நூற்றாண்டு வரலாறு இங்கே முந்நூற்றைம்பது பக்கங்களிலும் நிரம்பிக் கிடக்கின்றது. நூல் இரண்டு பாகங்களாக வெளிவந்திருக்கிறது.

பிரிஸ்பேனில் வசிக்கும் மருத்துவர் வாசுகி சித்திரசேனன் விபத்து மற்றும் அவசர சிகிச்சை நிபுணர். இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் நிறைந்த வாசிப்பாளரும் கூட. நல்ல கவிதைகளையும் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதி வருபவர். நாட்டார் கலைகளிலும் தோட்டக்கலையிலும் ஆர்வம் கொண்டவர். ‘தமிழ்நதி’, குயீன்ஸ்லாந்து தமிழ் மன்றம், மற்றும் ‘தோழி’ அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளராகவும் அவுஸ்திரேலிய தமிழ் கலை இலக்கிய சங்கத்தின் குயீன்ஸ்லாந்து உறுப்பினராகவும், கொரியா சர்வதேச அமைதித் தூதுவராகவும் (UPF) இருந்து கொண்டு சமூகத்துக்கும் இலக்கியத்திற்குமான பல பணிகளைப் புரிந்து வருபவர்.




அவரது முதலாவது நாவல் இது. தன் வாழ்வில் தனக்கு சகலமுமாய் இருந்து தன்னை கல்வியிலும் சமூக சிந்தனையிலும் ஆற்றல் மிக்க பெண்ணாக வளர்த்தெடுத்த தன் தந்தையின் இருபதாவது நினைவு நாளில் அவருக்கான அர்ப்பணமாக இந்நூலைக் கொணர்ந்திருக்கிறார். இப்படி ஒரு நூலை எழுத நேர்ந்த

prasadbatti@gmail.com

காரணங்களை தனது முன்னுரையில் நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார். அவற்றில் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.

‘பெண் என்பவள் பெரும் ஆற்றல் நிறைந் தவள். உலகையே அறத்தின் பாதையில் வழிநடத்தும் வல்லமை வாய்ந்தவள். அவ ளது முழு ஆற்றலும் வாழ்க்கையில் வெளிப் படவேண்டும். பாட்டி, அம்மா, நான், என் தங்கை மற்றும் எம் புதல்விகள் யாவருமே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். எங்கள் ஆண்கள் அப்பா வாக, தாத்தாவாக, அண்ணனாக, தம்பியாக, மைத்துனராக, அன்புக் கண வராக, புதல்வர்களாக எங்களைப் பிரகா சிக்க வைத்தார்கள்.’

அவரின் இந்தக் கூற்று குடும்பத்தின் ஆண்கள் பெண்களை நடத்தும் விதத் தைக் கொண்டாடும் விதமாக அமைந்தி ருக்கிறது. அழகான பல தருணங்களை எமக்கு அறிமுகப்படுத்துகிறது... இந்த நான்கு தலைமுறைப் பெண்களின் அறி முகம் அந்த அந்தக் காலத்தையொட்டி அழகாக பதிவு செய்யப்படுகிறது.

மாயி என்னும் மாயோள். அவள் நாற்பதுக ளிலேயே படிப்பின் பெறுமதி உணர்ந் தவள். குடும்பத்தை அழகாக நிர்வகிக்கத் தெரிந்தவள். கணவனின் கஷ்ட நஷ்டங் களில் கூடவே இருந்து தோள் கொடுத் தவள். அன்பின் வடிவமான அவளின் வாழ் க்கை அற்புதமான உணர்வுகளை உள்ள டக்கியது.

**ஆதிரை:**

அறுபதுகளிலே பேராதனை பல்கலைக்க ழகப் பட்டதாரி. அறிவு சார்ந்த சிந்தனை களுடன் மாயி சண்முகத்தால் வளர்க் கப்பட்டவள். அவளுக்கு கை கொடுத்து உயரம் தொட வைத்த நடேசனை காத லித்து திருமணம் செய்தவள். திருக் குறள் ஒலிக்க தமிழ்மறை முழங்க வர லாற்றுப் பேராசிரியர் கார்லோ குண சேகரா தலைமையில் அவர்களின் சீர் திருத்தத் திருமணம் நடந்திருந்தது. எத்தனையோ மாணவர்களை கல் விமான்களாக உருவாக்கும் ஆசிரிய பணியில் கணவருடன் இணைந்து பயணித்தவர்.

**வாணி:**

இந்நாவலின் கதை சொல்லி. சுட் டித்தனமும் குறும்பும் கொண்ட பெண் ணாக வளர்ந்தவள். கல்வியின் மேன்மை புரிந்து மருத்துவராக உயர்ந்தவள். அவளின் அறிவும் ஆற்றலும் கல்விக்கு மட்டும் பயன்படவில்லை. இந்த சமூக மேம் பாட்டுக்காக செயற்படவும் உறுதுணையாய் இருந்தது. அவள் பிறந்து வந்த சூழல் அவளை ஆசீர்வதித்தது. சிறுவயதிலிருந்து தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா ஆகியோரால் விதைக்கப்பட்ட விதையினால் இன்று விருட்சமாக வளர்ந்து நிற்பவள்.

இதே தலைமுறையில் வாணியின் தங்கை வானதியும் இணைந்து கொள்கிறாள். அவளின் பண்பும் வாழ்வும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்றாகிறது. படிப்பில் அதிகம் ஆர்வம் இல்லாவிட்டாலும் இயற் கையை நேசிக்கும் இனிய குணம் கொண்டவள். மனிதர்களோடு வாஞ்சை யோடு பழக விரும்புபவள். குடும்பத்தை அழகாக நிர்வகித்து வாழ்க்கையை இனி தாய் நகர்த்திச் செல்பவள்.

**நவிரா:**

மலையின் உச்சி அளவு உயரம் தொட வேண்டும் என்று வாணி சுந்தரால் பெயர் வைக்கப்பட்டு துருதுருவெனும் இயல் போடு வளர்ந்த புத்திசாலிப் பெண். கட்டட நிர்மாணத்துறையில் பட்டம் பெற்றவள். பள்ளிகள், வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள் நிறுவுவதில் பிரசித்தி பெற்ற நிறுவனத்தில் பணி புரிபவள். கல்வியுடன் சேர்த்து நடனம், பாட்டு என்று பல கலைக ளையும் தன் வசப்படுத்தியவள். சுற்றுச் சூழலில் மிகுந்த அக்கறை கொண்டவள். எதிர்காலத்தில் தனது சுய நிறுவனத்தை ஆரம்பித்து நடத்துவதை கனவாக வரித்தி ருப்பவள். அவுஸ்திரேலியாவில் வாழ்ந் தாலும் தனது அடையாளம் என்ன என்பதில் தெளிவுள்ள இன்றைய தலைமுறைப் பெண்.

இந்த நான்கு தலைமுறைப் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களின் விப ரிப்பில் சமூக நடப்புகளும் கூடவே இணைந்து கொள்கின்றன. முதலாவது உலகமாக யுத்தம் தொடங்கி இன்றைய பிரிஸ்பேன் வாழ்வு வரை பல வரலாற்றுப் பதிவுகளை காணக்கூடியதாக இருக்கிறது. பொன்மலைக் கிராமத்தில் 1922-ஆம் ஆண்டு மாயி பிறப்பதுடன் ஆரம்பிக் கிறது இக்கதை. படிப்பில் ஆர் வமுள்ள பெண்ணாக வளர் கிறாள். சண்முகத்துடனான சந்திப்பு அவள் வாழ்வின் முக்கிய திருப் பமாக அமைகிறது. நாற்பதுகளில்

> **“**
> **‘கல்வி கற்ற சமுதா யத்தைத் தாண்டிக் கப்பலேறி வந்து கல்வியே கேள்விக் குறியாக இருந்த ஒரு சமுதாயம் இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழர்கள். அவர்களுடைய வளர்ச்சி எந்த ஒரு திசைகாட்டியும் இல்லாமல் தனிமனித முயற்சியாகவே இருந் திருக்கிறது. அவர் களும் தமிழர்கள்தான். அவர்கள் பிரச்சினையும் தமிழர் பிரச்சினைதான் என்பதை ஏனையோர் ஏற்றுக் கொண்டது மில்லை. ஒருவேளை அவர்களுக்காக அனைத்துத் தமிழர் களும் அன்றே குரல் கொடுத்திருந்தால் இன்றைய நிலை வந்திருக்காதோ?**
> **“**

தமிழகத்தில் நடந்தேறிய அரசியல் நகர்வுகளிடையே சண்முகம் கொள்கைப் பிடிப்புள்ள மனிதராக நமக்கு அறிமு கமாகிறார். தஞ்சாவூர் மாவட்டத்தின் அறந்தாங்கியைச் சேர்ந்த மூக்குடி கிராமத்தில் வாழ்ந்த வசதி மிக்க மிராசு தாரர் குடும்பத்தைச் சேர்ந்தவர். கம்யூனிசத்தின் மீதான ஈர்ப்பு காரணமாக அக்கட்சியில் இணைந்து செயற்பட்டவர். பிரிட்டிஷ்காரர் இந்திய மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர். அதனால் ஏற்பட்ட தலைமறைவு வாழ்க்கை அவர் வாழ்வையும் புரட்டிப் போட்டது. அன்றைய நாட்களின் அரசியல் போக்குகள் கதையினூடே கலந்து பேசப்படுகிறது. தமிழ்நாட்டிலே இருக்க விடாமல் அவரும் அவருடைய குடும்பமும் அலைக் கழித்தபோது அத்தனை சொத்து சுகங்களையும் விட்டு மாயி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு இலங்கைக்கு கப்பலில் பயணமாகிறார். அறந்தாங்கியில் தொடங்கிய வாழ்வு இலங்கையின் கண்டி, டீன்ஸ்ட்டன், தெல்தெனியா என்று தொடர்கிறது. அடுத்தடுத்த பரம்பரை உருவாகிறது.

இக்கதையில் பெண் கல்வியின் அவசியம் பற்றி ஒவ்வொரு தலைமுறையிலும் பேசப்படுகிறது. அதை ஆண்கள் வலியு றுத்துவதுதான் அழகான விஷயமாகத் தெரிகிறது. 1936-ஆம் ஆண்டிலேயே ஒரு தந்தை தன் பதினான்கு வயது மகளை அழைத்து ‘நீ அம்மாவுக்கும் அக்காவுக்கும் துணையாக இருந்து சமைக்கிறாயா அல்லது மேலே தொடர்ந்து படிக்கப் போகிறாயா?’ என்று கேட்பது எத்தனை பெரிய விஷயம்...

மாயியின் தந்தை முருகையாபிள்ளை தன் பரம்பரைக்கு கல்வியின் அவசியத்தை விதைத்த பிதாமகராகத் தெரிகிறார். தொடர்ந்து சண்முகம், நடேசன், சுந்தர் என பெண்களைப் போற்றும் நல்மனம் படைத்த ஆண்களின் தரி சனமும் எமக்கு கிடைக்கிறது. ஒவ்வொரு தலைமுறைப் பெண்களாலும் மட்டுமல்ல ஆண்களாலும் கூட பெண்கல் வியின் முக்கியத்துவம் பற்றி பேசப்படுவது சமூகத்துக்கு அவசியமான விஷயமாக பார்க்க முடிகிறது.

இந்நாவலின் களம் ஆரம்பத்தில் தஞ்சாவூர் மாவட்டமாக இருந்தாலும் இலங்கையின் மலையகமே கதையின் களமாக அதிகளவில் மாறுகிறது. எத்தனையோ கனவுகளோடு கப்பலேறி வந்தவர்கள்... புதிய நிலம் வாழ்வு தரும் என்ற நம்பிக்கை கலைந்து போக இன்று வரைக்கும் வறுமை யோடும் இயலாமையோடும் அவர்கள் வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கிறது. அவர்களின் கையறு வாழ்வின் நூற்றாண்டு கால வரலாறும் சேர்ந்தே இங்கு பதிவு செய்யப் பட்டிருக்கின்றது. அவர்களின் வாழ்வு பற்றிய கவலையும் ஆதங்கமும் நாவல் எங்கும் எழுத்துகளில் பொதிந்து கிடக் கின்றன.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய முனைவர் சந்திரிகா சுப் பிரமணியன் அவர்கள் பதிவு செய்த ஒரு விஷயம் மிகவும் ஆழமானது. ‘இன்று இலங்கைத் தமிழர்கள் என்றால் போராட்டக் காலகட்டத்துக்கு பிறகு தெரிந்த தமிழர்கள்தான். ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை, என்றைக்கு இந்தியத் தமிழர் இலங்கைக்குள் வந்தனர் அன்றே தொடங் கியது என்பதை அறிந்தவர் அதிகமில்லை.’அத்தோடு, அவர் இன்னொன்றையும் குறிப்பிடுகிறார்.

‘கல்வி கற்ற சமுதாயத்தைத் தாண்டிக் கப்பலேறி வந்து கல்வியே கேள்விக் குறியாக இருந்த ஒரு சமுதாயம் இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழர்கள். அவர்களுடைய வளர்ச்சி எந்த ஒரு திசைகாட்டியும் இல்லாமல் தனிமனித முயற்சி யாகவே இருந்திருக்கிறது. அவர்களும் தமிழர்கள்தான். அவர்கள் பிரச்சினையும் தமிழர் பிரச்சினைதான் என்பதை ஏனையோர் ஏற்றுக் கொண்டதுமில்லை. ஒருவேளை அவர்க ளுக்காக அனைத்துத் தமிழர்களும் அன்றே குரல் கொடுத்தி ருந்தால் இன்றைய நிலை வந்திருக்காதோ? ‘இந்த ஆதங்கம் இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்றே நம்புகிறேன். வாசுகி சித்திரசேனன் ஒரு குடும்பத்தின் பரம்பரை வரலாற்றைப் பற்றி மட்டுமே இங்கு எழுதியிருக்கவில்லை. அவர் தனது கண்கள் பார்த்த திசையில் இருக்கும் மலையகத்தின் நலிந்து போய் வாழும் மக்களின் கதைகளையும் சேர்த்துத்தான் பதிவு செய்திருக் கிறார். அவர்களுக்கான நியாயங்களை வேண்டும் ஆதங்கம் அவரின் எழுத்துக்களில் பிரதிபலிக்கிறது. இருநூறு வரு டங்கள் ஆனபின்பும் கூட மேம்படாத அவர்கள் வாழ்க்கை பற்றிய துக்கம் அவரின் வரிகளுக்கிடையில் புதைந்து கிடக் கின்றது.

எளிமையான கதை சொல்லும் முறைமை இவருக்கு வாய்த்தி ருக்கிறது. சின்னச் சின்ன வசனங்களில் சொல்ல வந்ததை ஆழமாக சொல்லி விடும் திறன் பாராட்டுக்குரியது. முந்நூற் றைம்பது பக்க நாவலை எங்கேனும் அலுப்போ சலிப்போ ஏற்படா வண்ணம் எழுத இவரால் முடிந்திருக்கிறது. ஒவ்வொரு தலைமுறைப் பெண்களின் கதைகளையும் வடிவ மைத்த விதமும் அதை எந்த விதக் குழப்பமுமின்றி எழுத்தில் தந்ததும் இவரது எழுத்தாளுமைக்கு ஒரு உதார ணமாகிறது. இவரது முதலாவது நாவல் இது எனும் போது வியப்பே எழுகிறது. அதுவும் ஒவ்வொரு தலைமுறை வரலாற் றிலும் சமகால அரசியலையும் சமூகச் சூழலையும் இணைத்து எழுதி வந்திருப்பது எழுத்தாளரின் சமூக அக்க றைக்கு சான்றாக உள்ளது. தஞ்சாவூரில் உள்ள அரசியல் நிகழ்வுகளில் ஆரம்பித்து இலங்கை அரசியல் நிகழ்வுகள் வரை பேசப்படுகிறது. மக்களின் அலைக்கழிவுக்குக் காரணமான சமகால அரசியல் நிகழ்வுகள், இலங்கையில் தமிழருக்கு எதிராக கொழுந்து விட்டு எரிந்த இனக்கலவரம், அதன் விளைவுகள் என கதையினூடே பொருத்தமான முறையில் வந்து சேர்ந்து கொள்கின்றன.

தமிழகத்திலிருந்து வந்து இலங்கையின் மலையகத்தை வாழ்விடமாக கொண்டு வாழ்ந்த நான்கு தலைமுறையின் வரலாறு, இங்கே காலத்தின் ஆவணமாக தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கிறது. பெண்களைக் கொண்டாடும் ஆண்களைக் கொண்ட குடும்பத்தின் அறிமுகம் இனிய பல அனுபவங்களை நமக்கு வழங்குகிறது. அவர்களின் சந்தோஷம், துக்கம், பெருமிதம் என அத்தனை உணர்வுக ளோடும் பங்கு கொள்ள எம்மையும் கை பிடித்து அழைத்துச் செல்கிறது. வாசி என்னும் வாசுகி சித்திரசேனன் அவர்க ளுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

thamaraichelvi@thaiveedu.com

# சரசோதிமாலை மூலமும் உரையும்

# நூலாய்வு

**- சுபாஷினி துவராஜ்**

‘சரசோதிமாலை’ என்பது இலங்கையில் எழுந்த முதல் தமிழ் நூல். இது இலக்கியம் சார்ந்து அல்லாமல் சோதிடம் சார்ந்துள்ளது. பொ.ஆ. பி 1310-ஆம் ஆண்டு இரண்டாம் பண்டித பராக்கிரமபாகுவின் ஆணையின் பெயரில் போசராச பண்டிதரால் எழுதப்பட்டு அரங்கேற்றம் கண்டுள்ளது. சரசோதி மாலையில் மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள வாழ் வியல் கூறுகளை சோதிடத்துடன் இணைத்து ஒவ்வொரு விடய மும் மிகத்துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது. இதில் மொத்தம் தொளாயிரத்து முப்பத்து நான்கு பாடல்கள் எழுதப்பட்டுள் ளன. இலங்கையின் முதற்தமிழ் நூலாக சரசோதிமாலை காணப் பட்ட போதிலும் சரசோதிமாலை மூலத்துக்கான சரியான ஓர் உரையின்றி காணப்பட்டது, தமிழ் உலகில் ஒரு பெரும் வெற் றிடமாகும். அதனை நிவர்த்தி செய்யும் முகமாக ‘சரசோதி மாலை மூலமும் உரையும்’ என்ற நூல் வெளிவந்துள்ளது மிகச்சிறப்பான விடயம் என்றால் மறுப்பதற்கில்லை.

‘சரசோதிமாலை மூலமும் உரையும்’ என்ற நூல் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்து இன்று கனடாவில் வசித்து வருகின்றார். இவர் தாவரவியலில் தனது உயர்படிப்பை பேராதனைப் பல் கலைக்கழகத்தில் முடித் துள்ளார். மேலும் தனது கலாநிதி பட்டத்தினையும் தாவர வியல் துறையிலே இலண்டனில் முடித்துள்ளார். இவ்வாறாக தனது படிப்பை விஞ்ஞானத் துறையிலே தொடர்ந்துள்ளார். இருப்பினும், இவர் தமிழ் மொழியில் பல நூல்களை எழுதியி ருப்பதுடன் இலங்கையின் முதல் தமிழ் நூலான சரசோதி மாலைக்கு உரையையும் எழுதியுள்ளார். அந்தவகையில் சரசோதிமாலைக்கு உரை எழுதுவது என்பது இலகு வான காரியம் அன்று. சோதிடம் சார்ந்த பூரண அறிவு, தமிழ் சார்ந்த அறிவு, பல நூலறிவு என்பன இன்றி இந்நூலுக்கு உரையினை எழுதிவிட முடியாது. ஆசிரியரின் தமிழ்ப்பற்று, வாழையடி வாழையாக வந்த சோதிடம் மற்றும் மருத்துவம் சார்ந்த அறி வினையும் இந்நூலுடாக நாம் காணமுடிகின்றது.

‘சரசோதிமாலை மூலமும் உரையும்’ என்ற நூல் தாய்வீடு பதிப்பகத்தினூடாக இவ்வாண்டு வெளியிடப்பட்டுள்ளது. வீர கேசரி ஞாயிறு இதழில் தொடர்ச்சியாக சரசோதிமாலை மூலத் துக்கான உரை வெளிவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. சர சோதிமாலை மூலநூலினை நோக்குகின்ற போது மொத்தம் தொளாயிரத்தி முப்பத்து நான்கு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. மூலமும் உரையும் என்ற நூலிலும் தொளாயிரத்து முப்பத்து நான்கு மூலப்பாடல்களும் சந்திபிரிக்கப்பட்டு நூலாசிரியரால் எழுதப்பட்டுள்ளது. இப்பாடல்கள் சந்திபிரிக்கப்பட்டு சரசோதி மாலை மூலமும் உரையும் என்ற நூலில் காணப்படுவது பாடல்களை நாம் இலகுவாக விளங்கிக்கொள்ள உதவுகின் றது. இந்நூலிலுள்ள பாடல்கள் பன்னிரண்டு படலங்களாக மூலத்தில் பிரிக்கப்பட்டுள்ளதுபோல் இந்நூலிலும் பிரிக்கப் பட்டுள்ளன. அவையானவை சோடகருமப் படலம், ஏர்மங் கலப் படலம், அரசியற் படலம், யாத்திரைப் படலம், மனை செயற் படலம், தெய்வ விரதப் படலம், குணாகுணப் படலம், சுபாசுபப் படலம், நாழிகைப் படலம், சாதகப் படலம், நட்சத் திரதெசைப் படலம் என்பனவாகும்.

சரசோதிமாலை நூலில் முதல் இரண்டு பாடல்களும் விநாயக வணக்கம், திருமால் வணக்கமாக அமைந்துள்ளன. அதனைத் தொடர்ந்து பாயிரம் பன்னிரண்டு பாடல்களில் பாடப்பட்டுள் ளது. ‘சரசோதிமாலை மூலமும் உரையும்’ நூலில் சரசோதி மாலையின் பத்தாவது படலமான நாழிகைப் படலத்திற் முதற்பாடல் தவிர்ந்த ஏனைய பதின்மூன்று பாடல்களுக்கும் ஆசிரியரால் உரை எழுதப்படவில்லை. இது சார்ந்த வினா வினை நூலாசிரியரிடம் வினாவுகின்றபோது நாளிகைப் படலம் நேரம் சார்ந்த கணிதத்துடன் தொடர்புறுகின்றது எனவும், அது

tg.theeban@gmail.com

சார்ந்த மிகத் துல்லியமான உரையினைத் தன்னால் எழுத முடியவில்லை. அத்தோடு, தற்காலத்தில் சோதிடம் சார்ந்த அறிவுடையவர்களிடம் வினாவியும் அதற்கான சரியான உரை கிடைக்கவில்லை என்கிறார். மேலும், இறுதிப்படலமான நட்சத்திரதெசைப் படலத்தில் 'கால சக்கர தெசை' என்ற தலைப்பின் கீழ் வரும் தொளாயிரத்து இருபத்து ஓராவது பாடல்; 'முந்து நாட் புநர்தம் அத்தம்' என்ற பாடலில் இருந்து தொளாயிரத்து முப்பத்து நான்கு வரையான பதினான்கு பாடல்களுக்கான விளக்கம் சூடாமணி உள்ளமுடையான் என்னும் சோதிட நூலில் இருந்து பெற்றுக் கொண்டதாக ஆசிரியர் நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

சரசோதிமாலை முதற்படலமாக சோடகருமப் படலம் விளக்குகின்றது. இதில் கருப்பதானம், புங்ஸ்வனம், சீமெந்தம், சூதிகாக் கிருகப்பிரவேசம், சாதக கருமம், பஞ்சாயுதம் தரித்தல், நாமகரணம், நாமாட்சரம், பாலூட்டல், கன்னவேதனம், சூரியன், சந்திரன், பசுக்காணல், சோறூட்டல், கிரகபலி, அரைஞாண் ஆடை அணிவித்தல், முடிகளைதல், வித்தியாரம்பம், உபநயனம், வேத நோன்பு, வேதம் படித்தல், சமாவர்த்தனம், திருமணத்திற்கான பத்து பொருத்தம் பார்த்தல் என ஒரு கரு உருவாகுதல் முதல் திருமணம் வரையிலான விடயங்கள் கூறப்படுகின்றன. ஏர்மங்கலப் படலத்தில் 'பூமிப்பிரவேசம்' (விவசாயி ஒருவர் வயலில் கால் வைத்தல்) தொடக்கம் பூமிக்கிரகணம் (கழனி வசமாதல்) வரை விவசாயிக்குத் தேவையான அனைத்து விடயங்களும் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது படலமாக பலகருமப்படலம் விளங்குகின்றது. அதில் கொள்ளல் விற்றல், பசு வாணிகம், கன்று ஈனும் பலன், நவவஸ்திரந் தரித்தல், ஆபரணம் பூணல், அமுதநிலை, சதாபிடேகம், வைத்தியம், கிரியைகள், சாந்தி போன்ற பல்வேறு விடயங்கள் கூறப்படுகின்றன.

நான்காவது படலம் அரசியற்படலம். ஒர் அரசர் முடிசூடுவதில் தொடங்கி அவர் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதில் பராக்கிரமபாகு மன்னன் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. "பராக்கிரமபாகுவுடன் போர்புரியும் திறமையுடைய மேன்மை மிக்க மன்னரே முடிசூடுவதற்கான தகுதி உடையோராவர்" எனவும் கூறப்படுகின்றது. ஐந்தாவது யாத்திரைப் படலம். அதில் யாத்திரைகள், யாத்திரை செல்லும் திசைகளின் பயணங்களும் பலன்களும் சுபகுணம், அசுபசகுணம் துர்நிமித்தம் யாத்திரை, நாற்கால் விலங்கு யாத்திரை, பறவை யாத்திரை, யுத்த யாத்திரை, சந்திர சூரிய கார நலம், பந்தராகு, இராகுப் பாய்ச்சல், பெயர் வலி, புறநடை போன்ற விடயங்கள் பேசப்பட்டுள்ளன. ஆறாவது படலமாக மனைசெயற் படலம் விளங்குகின்றது. பூ பரீட்சை அதாவது மண் பரிசோதனை செய்தலில் இருந்து தூண்நடல், சுவர் நடல், வழி கிணறு, கிணறு குளம் வெட்டல், கரைகட்டல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஏழாவது தெய்வ விரதப் படலம். இதில் பல்வேறு விரதங்கள், பண்டிகைகள் அவை கொண்டாடப்பட்ட நாள், கொண்டாடப்பட்ட முறை தொடர்பாகப் பேசப்பட்டுள்ளன. சித்திரகுத்தர் விரதம், விநாயக சதுர்த்தி, கிருஸ்ண ஜயந்தி, அனந்த விரதம், மாளையம், கேதாரவிரதம், நவரத்திரி, கந்த சஷ்டி, தீபாவளி, விநாயக சஷ்டி, ஆதிரை விரதம், மகாமகம், சிவராத்திரி, பூரணை, அமாவாசை விரதம் எனப் பல விரதங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

எட்டாவதாக குணாகுணப் படலம் காணப்படுகின்றது. இதில் நல்லவை செய்வதற்கான நேரம், தவிர்க்க வேண்டிய நேரங்கள், கிரகங்கள் சேருகின்றபோது நேரப்பலன்கள், நேரகாலங்களில் நாம் செய்யும் காலங்களின் பலன்கள் என்பன கூறப்பட்டுள்ளன. ஒன்பதாவதாக சுபாசுபப் படலம். இதில் கிரக பலன்கள், கிரக பலிதம், பிறை இலக்கணம், பிறை தொழ, தானங்கள், மழைக்குறி, கிரகம் சார் பலன்கள், கிரகம் சாரா பலன்கள், பல்லி ஓந்தி விழுகுறிகள், வருடப்பிறப்புக் கிரியைகள், கனாவின் பலாபலன்கள் தொடர்பாக விளக்குகின்றது. பத்தாவது படலமாக நாளிகை படலம் காணப்படுகின்றது. முதலாவது பாடலிற்கு மட்டுமே இவ்நூலாசிரியரால் உரை எழுதப்பட்டுள்ளது. பதினொராவது படலமான சாதகப் படலத்தில் இராசி அங்கம், இராசி வடிவம், நிறம், தீக்கோள்களின் இயல்பு, இராசி குணம் எனப் பல விடயங்கள் காணப்படுகின்றன. இறுதிப் படலமாக நட்சத்திரதெசைப் படலம் விளங்குகின்றது. இதில் மகாதெசாபலம், காலசக்கர தெசை, சோதிடன் இலக்கணம் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

'சரசோதிமாலை மூலமும் உரையும்' நூலின் தொடக்கத்தில் அணிந்துரையைத் தொடர்ந்து நூலாசிரியரால் எழுதப்பட்ட முன்னுரை காணப்படுகின்றது. இம்முன்னுரை முடிவில் ஆசிரியர் இந்நூலினை எழுதுவதற்கு தான் கற்ற ஏனைய நூல்களின் பெயரை கடைக்குறிப்பு என்னும் தலைப்பின் கீழ் வழங்கியுள்ளார். பொதுவாக நூல்களில் காணப்படுவது போல துணை நூல்களை இறுதியில் சேர்க்காது தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். மேலும், செய்யுள்களின் உரையினை நோக்குகின்றபோது பல்வேறு தனிப்பட்ட சிறப்பம்சங்களைக் காண முடிகின்றது. உரைநடையானது தூய தமிழில் மிக இலகுவான சொற்களில் வாசகர்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

மூலநூல் ஆசிரியர் போசராச பண்டிதர் செய்யுள்களை எழுதும்போது 'சிங்கத்தின் முன்னே சிறுமுயல் ஒன்று செல்வதைப் போலவே எனது முயற்சியும், பெரும் தவத்தில் மிக்கவராகிய பண்டைய முனிவர்கள் கூறியுள்ளதை நன்கு ஆராய்ந்தே கூறியுள்ளேன்' என்கிறார். அவரின் கூற்றினூடாக போசராச பண்டிதரும் எழுந்தவாரியாக அன்றி பலவற்றை ஆராய்ந்து கற்றறிந்தே எழுதியுள்ளார் என்பதைப் புரிய முடிகின்றது. அது போலவே எமது உரையாசிரியரும் உரை எழுதுகின்ற போது பலநூல்களையும் கற்று தனது அறிவினைக் கொண்டு உரையினை எழுதியுள்ளார். ஆசிரியர் உரையினை எழுதும் போது பல நூல்களை ஒப்பிட்டும் நோக்கியுள்ளார். இதற்குத் தக்கசான்றாக நூலிடையே ஆசிரியர் பலவற்றை எடுத்துக் காட்டியுள்ளார். 188-வது பாடலில் 'கையெரி புநர்தம் சோதி கடையின் நாள்' எனும் பாடலின் கீழ் "சரசோதிமாலை அச்சுப்பிரதியில் 'கையரி' என்று தரப்பட்டுள்ளது. விதானமாலை, செகராசசேகரமாலை ஆகிய சோதிட நூல்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது 'கையரி' என்பது தவறாகவும் 'கையெரி'

என்பதே சரியானதாகவும் காணப்படுகின்றது. ‘கையெரி (கை + ஏரி) என்பதற்கு அத்தம் (கை) கார்த்திகை (ஏரி) என்று பொருள் காணலாம்”என ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது, அவர் செய்யுளை எவ்வளவு கவனமான அணுகியுள்ளார் என்பதை இது எடுத்தியம்புகின்றது.

செய்யுள்களின் தலைப்பினை அவதானிக்கும்போது சோதிடம் சார்ந்ததாகக் காணப்படுவதால் மூலநூலில் பெரும்பாலும் வடமொழித் தலைப்புக்களே இடப்பட்டுள்ளன. ஆனால், உரையாசிரியர் உரையினை எழுதும் போது மூலநூலில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புக்களை அவ்வாறே குறிப்பிட்டதோடு, அவற்றின் கீழ் அவற்றிற்கு தமிழினையும் அடைப்புக் குறியினுள் எழுதியுள்ளார். இது தமிழ் வாசகர்களுக்கு இலகுவான விதத்தில் தலைப்பினை வைத்தே விடயத்தை விளங்க உதவுகிறது. இதனை விட உரையிலே வடமொழி எழுத்துக்களைத் தவிர்த்ததுடன், சொற்கள் ஆரம்பத்தில் ர, ல வரிசையில் தொடங்குகின்றபோது அவற்றிற்கு முன்பு இ, உ போன்ற எழுத்துக்களையிட்டு ஆரம்பித்துள்ளமையையும் காணமுடிகின்றது. வாழ்வியல் சடங்குகள், கடைப்பிடித்த பண்டிகைகள், நோன்புகள் அவர்களின் நம்பிக்கைகள் போன்றவற்றையும் இந்நூல் பறைசாற்றியுள்ளது. அவற்றில் சிலவற்றின் மாற்றத்தினையும் உரையின் கீழ் ஆசிரியர் காட்டியுள்ளார். இன்று நாம் ‘தீபாவளி’ என அழைப்பதை ‘தீபாவலி’ என நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எழுதப்பட்ட காலத்தில் தீபாவலி முன்னோர்களின் நினைவாகக் கொண்டாடப்பட்டு இருப்பதையும் உரையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரசோதிமாலை நூல் இலங்கையின் முதற்தமிழ் நூலாக மட்டுமின்றி அது எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையினை எமக்குப் பறைசாற்றியுள்ளது. எமது முன்னோர்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளார்கள், அவர்களது நம்பிக்கைகள், சடங்குகள், கடைப்பிடித்த பண்டிகைகள் நோன்புகள் பற்றிய விபரங்கள், அரசியல், உழவுத் தொழில் போன்ற பலவற்றை இந்நூல் நுணுக்கமாக எடுத்தியம்புகின்றது. இத்தகைய ஒரு பொக்கிசமான நூலுக்கு பல ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் இவ்வாண்டு முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களால் உரையெழுதப்பட்டிருப்பது தமிழுலகத்திற்கு அவர் செய்த ஒரு பெரும் பணியாகும். எதிர்வரும் காலத்தில் இந்நூலின் நாளிகைப் படலத்திற்கும் உரை எழுதப்பட வேண்டும். சூரிய, சந்திரன் உள்ளவரை ‘சரசோதிமாலை மூலமும் உரையும்’ என்னும் நூல் தமிழ் உலகிற்குப் பயனுடையதாக அமையும் என்பதோடு நூலாசிரியரின் புகழும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

subashini.t@thaiveedu.com

மல்லியப்புசந்தி திலகர்

# மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

prasadbatti@gmail.com

## முப்பது ஆண்டுகள் நிறைவும் முன்னோக்கிய நகர்வும்

இலங்கையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது 'உலகத் தமிழாராய்ச்சி மாநாடு' ஒரு வரலாற்றுப் பிரளயத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றது எனலாம். 1974 ஆம் ஆண்டு ஜனவரி 3 முதல் 9 வரை பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த 4-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடுதான் இலங்கையில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடாகும். இம் மாநாட்டின் நிறைவு நாளான ஜனவரி 10 அன்று இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்த கொடூரச் சம்பவமும், அதனால் எழுந்த அரசியல் பேரதிர்வும் ஈழத் தமிழ் வரலாற்றில் மிக முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தின. அத்தகைய பெரும் கொந்தளிப்புகளை ஏற்படுத்திய மாநாடுகளுக்கு மத்தியில், எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி 'மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு' ஒன்று 1997 ஆம் ஆண்டு அமைதியான முறையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் செயற்பாட்டுக் குழுவில், அப்போதைய மத்திய மாகாணக் கல்வி (தமிழ்), இந்து கலாசார அமைச்சராக இருந்த வீ. புத்திரசிகாமணி காப்பாளராகவும், அவரது பிரத்தியேகச் செயலாளரும் இலக்கிய மதியுரைக் குழுவின் தலைவருமான டி. வீ. மாரிமுத்து தலைவராகவும், எழுத்தாளரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான அந்தனி ஜீவா செயலாளராகவும் செயற்பட்டனர். இக்குழுவின் செயற்குழு உறுப்பினர்களாகக் கலாநிதி துரை மனோகரன், கவிஞர் சு. முரளிதரன், திருமதி நளாயினி சுப்பையா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பத்தனை ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற இந்த மாநாட்டின் இறுதியில் மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. அத்தகைய நூல் 1997-ஆம் ஆண்டு முதல் பதிப்பையும், 2007-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பையும் கண்டுள்ளது. அந்த நூலுக்கு முன்குறிப்பு எழுதியுள்ள காப்பாளரான அமைச்சர் வீ.புத்திரசிகாமணி பின்வருமாறு தனது கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

"மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் முதல் கட்ட வேலைகளின் பூர்த்தியே இந்நூல் வெளியீடாக அமைகின்றது. இம் மாநாடு நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், எதிர்கால ஆய்வுகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் ஒரு தொடக்கமாக அமைகின்றது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கது. எமது மக்களைப் பற்றிய ஆராய்ச்சியை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நடத்தி முடித்துவிட முடியாது. எமது மொழியின் இலக்கண, இலக்கிய மரபுகளும் அவற்றையொட்டிய கலாசார, பண்பாட்டு, பழக்கவழக்கங்களும் மிகவும் தொன்மையானவை. இத்தமிழாராய்ச்சி முயற்சிகளுக்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் ஒன்றிணைந்து எமக்கு வழங்கிய ஆதரவை நோக்குமிடத்து, எமது ஆராய்ச்சியின் வேகத்தையும் ஆழத்தையும் அதிகரித்து, பரந்த நோக்கில் உணர்வுபூர்வமாக மேலும் பல கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றை நடத்துவதற்கு ஏற்றதொரு சூழல் உருவாகியிருப்பதைக் காணமுடிகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டு குழுவுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பேற்றT.V.மாரிமுத்து அவர்கள் அமைச்சர் வீ.புத்திரசிகாமணி கல்வி கற்ற நுவரெலியா புனித திரித்துவ கல்லூரியின் அதிபராகவும் பின்னர் நுவரெலியா கல்வி

வலயத்தின் அதிகாரியாகவும் (Circuit Education Officer) கடமையாற்றியவர். அதனால் T.V.மாரிமுத்து எனும் அவரது பெயரையே மாற்றி CEO மாரிமுத்து என விளிக்கும் மரபு ஒன்று தோன்றி இருந்தது. அவரது பணி ஓய்வுக்குப் பின்னர் மத்திய மாகாண சபையில் இலக்கிய குழு மதியுரை ஞராகவும் அமைச்சரின் செயலாளராகவும் பணியாற்றியதோடு பின்னாளில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நுவரெலியா பிரதேச சபைத் தலைவராகவும் மக்கள் பணி யாற்றியுள்ளார். அவர் எழுதியிருக்கும் அறிமுகக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“புலம்பெயர்ந்த இந்தியர்களைப் பற்றிய கருத்தரங்குகள் மொரிசியஸ், ஹொங்கொங் போன்ற நாடுகளில் நடைபெற்றுள்ளன. இலங்கை இந்தியர்களின் நிலையைக் கருத்திற் கொள்ளும்போது, இத்தகைய ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் சர்வதேச முக்கியத் துவம் பெற்றுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவேதான், எமது சிந்தனையில் உதித்த மலை யகத் தமிழாராய்ச்சி மாநாட்டை, எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அமைச்சர் கௌரவ வீ. புத்திரசிகாமணி அவர்கள் இந்து கலாசார, தமிழமைச்சின் மதியுரைக் குழுவின் மூலம் ஏற்பாடு செய்திருப்பதைத் தமிழ் மக்கள் அனை வரும் பாராட்டுகின்றனர். பல வரலாற் றாசிரியர்கள் ஆரிய, ரோம, கிரேக்க, இந்திய, சீனப் பண்பாடுகள் மற்றும் நாகரிகங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, எமது மொழியைப் பேசும் மக்களின் நாகரிகமும் பண்பாடும் சிறந்த அம்சங் களைக் கொண்டிருப்பதாகக் கருது கின்றனர்.

**“ மலையகச் சமூகத்தைச் சாராத பிறராலேயே மலையகம் பற்றிய பிரதான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வந்த காலம் மாறி, இன்று மலையகப் பின்பு லத்தைக் கொண்டவர்களே தம்மைப் புறநிலை யிலிருந்து நோக்கும் மனப்பக்குவத்தையும் முதிர்ச்சியையும் பெற்றுள்ளனர். இதுவே கல்வி தரும் கொடையாகும். இவ்வளர்ச்சி படிப்படியாக உருவான ஒன்றாகும். ”**

பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர் களும் வெளிநாடுகளில் பல ஆய்வு களை மேற்கொண்டு பாராட்டுப் பெற்ற வர்களும் சமூக உணர்வுடன் இம்மா நாட்டில் தமது பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளனர். இந்த முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடித்த பின்னர், ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒருமுறை இத்தகைய ஆய்வு களை முன்னெடுத்து, உலக அரங்கில் மலையகத் தமிழா ராய்ச்சிக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, பல்கலைக் கழக மூத்த அறிஞர்களின் ஆலோசனைகளுடன் இயங்கும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டுச் செயலகம் ஒன்றை அமைக்கவும் எண்ணியுள்ளோம். இத்திட்டத்தை வெற்றிகர மாகச் செயல்படுத்துவதற்கு, மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு ஒரு முன் னோட்டமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவ் வாய்வுக் கட்டுரைத் தொகுதி வருங்காலத் தலைமுறையின ருக்கு ஒரு வரலாற்று ஆவணமாக அமையும்.”

மேற்படி கருத்தை வெளிப்படுத்தும் தி.வே.மாரிமுத்து பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி. அவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் சமகால பல்கலைக்கழக நண்பர். அந்த நட்பின் நிமித்தமும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் மலையகம் குறித்த கரிசனை நிமித்தமும் மாநாட்டின் இறுதிநாள் அமர்வுக்கு அவரை தலைமையேற்ற அழைத்துள்ளார்.

அந்த வகையில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி இந்த கட்டுரைத் தொகுப்பு நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். “பண்பாட்டு விழாக்கள், இலக்கிய விழாக்கள் என விழா நிலைப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தி வந்த ஈழத்தின் ஒரு பிரதான பிரதேசத்தில், ஒரு ‘தமிழாராய்ச்சி’ மாநாடு ஒன்றினை நடத்தி அதன் முதல் அறுவடையாக வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு இது.

‘ஆராய்ச்சி’ / ‘ஆய்வு’ எனத் தொடங் கும்போது, சில விடயங்களைக் காய்தல் உவத்தலின்றி, விருப்பு வெறு ப்புகளுக்கு இடமளிக்காமல், புறநி லையுடன் நோக்கி உண்மையைத் தேடும் முயற்சி ஆரம்பமாகின்றது. ஆய்வுபூர்வமாக எடுத்துரைக்கப்படும் விடயங்களை உன்னிப்பாக நோக்கும் மனநிலை ஏற்படாவிட்டால், ஆய்வு முயற்சிகள் நிகழ்வதற்கு இடமில்லை. இவ்வாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள வர்களுள் மலையகத்தைச் சேர்ந்த புலமைசார் அறிஞர்கள் இடம்பெற்றி ருப்பது மிகவும் முக்கியமான அம்ச மாகும்.

மலையகச் சமூகத்தைச் சாராத பிறரா லேயே மலையகம் பற்றிய பிரதான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வந்த காலம் மாறி, இன்று மலையகப் பின்புலத்தைக் கொண்ட வர்களே தம்மைப் புறநிலையிலி ருந்து நோக்கும் மனப்பக்குவத் தையும் முதிர்ச்சியையும் பெற்றுள் ளனர். இதுவே கல்வி தரும் கொடையாகும். இவ்வளர்ச்சி படிப்படியாக உருவான ஒன்றாகும். அண்மையில் உதயம் நிறுவனத்தினர் மேற்கொண்ட ஆய்வு போன்ற கூட்டுநிலை முயற்சிகளும், பல தனிநிலை ஆய்வாளர்களின் முயற்சிகளும் இதன் பின்ன ணியில் அமைந்துள்ளன. குறிப்பாக, மலை யகப் பின்புலத் திலிருந்து வந்து இன்று பேராசிரியர்களாக வளர்ந்துள்ளவர் களின் பங்களிப்பு இவ்விடயத்தில் முத ன்மை பெறுவது இயல்பானதாகும்.

எனினும், இவ்வாய்வு வளர்ச்சி பல்கலைக்கழக மட்டத்தில் மட்டுமே நிகழ்ந்தது எனக் கூற முடியாது. பல்கலைக்கழகங் களைச் சாராதவர்களாக இருந்தாலும், முறைசார்ந்த ஆய்வுப் பயிற்சியுடைய சிலரும் இதில் பங்களித்துள்ளனர் (எ.கா., ப. மாணிக்கம்). இலக்கியம், வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் ஆய்வு நூல்களை எழுதியவர்களும் (எ.கா., சாரல் நாடன்), வரலாறு, பொருளியல் ஆகிய துறைகளில் பயிற்சிபெற்றவர்களும் (எ.கா., வ. தேவராஜ், மு.

நித்தியானந்தன்) இவ்வாய்வுப் பணியில் ஈடுபாடு காட்டியுள்ளனர். இவர்களுடன் அரசுசாரா நிறுவனங்களின் பின்னணியைக் கொண்டவர்களும் பத்திரிகையாளர்களும் (எ.கா., சிவம்) இவ்வாய்வுப் பணி வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளனர்.

இன்று இத்துறையில் முன்னணியில் நிற்கும் பேராசிரியர்கள், ஆய்வாளர்களின் ஆய்வுகள் இங்கு இடம்பெறுகின்றன. இந்த ஆய்வு வளர்ச்சிக்கு உறுதுணையாக இலங்கைத் தமிழர்களான புலமையாளர்களும் இருந்து வந்துள்ளனர், இருந்து வருகின்றனர் என்பதாகும் இந்த மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு சாட்சியமளித்தது.

மலையகத் தமிழாராய்ச்சி என்பது பன்முகத் தன்மையும் பல்துறைச் சங்கமப் போக்கும் கொண்ட ஆய்வுச் செயற்பாடாகும். இது மலையக மக்களின் இலக்கியத்தை மட்டுமன்றி, மலையக மக்கள் யாவர், அவர்களை வரையறுப்பதற்குத் தற்போது பயன்படுத்தப்படும் வரைவிலக்கணங்களின் பொருத்தப்பாடு, அவர்களது மொழி வழக்குகள், பண்பாட்டுக் கூறுகள், பழக்கவழக்கங்கள், சமூக அமைப்பு, தொழில்கள், பொருளாதார அபிவிருத்தி, சமூக வளர்ச்சி மற்றும் மாற்றங்கள், அவர்களது கண்ணோட்டங்கள் எனப் பல்வேறு விடயங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

இவ்வாய்வுகளைத் தமிழ்மொழியிலேயே முதன்மையாக மேற்கொள்ள முற்படுவது மற்றொரு முக்கிய அம்சமாகும். ஆங்கிலம் எந்நிலையிலும் எமக்குப் புறமொழியாகவே அமைகின்றது. அதன் பயன்பாடும் பயிற்சியும் எம்மிடையே ஒருவகையான புறநோக்குப் பார்வையை உருவாக்குவது வியப்புக்குரியதன்று. ஆங்கிலவழிக் கல்வி கற்றவர்களுக்குச் சில வேளைகளில் அதுவே சிந்தனை மொழியாகவும் அமைந்துவிடுகின்றது. சிறிதளவிலாவது தம்மை ஆய்வுப் பொருளிலிருந்து அந்நியப்படுத்தக்கூடிய ஆங்கிலமொழி வழியை விடுத்து, தாய்மொழியான தமிழிலேயே காய்தல் உவத்தலற்ற ஆய்வை மேற்கொள்வது, எமது உளவளர்ச்சியையும் தமிழ்மொழியின் பயன்பாட்டு வளர்ச்சியையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

மலையகத் தமிழரின் பிரச்சினைகள் குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள் அடங்கிவிடுகின்றன என்ற மனப்பதிவு வெளியுலகில் நிலவுகின்றது. இதற்குத் தொழிற்சங்கங்களின் மேலாதிக்கமும் ஒரு காரணமாகும். மலையகச் சமூக அமைப்பு, அதன் பிரச்சினைகள், பெண்களின் நிலை குறித்த விழிப்புணர்வு ஆகியன இன்னும் போதிய அளவில் வெளிப்படுத்தப்படவில்லை. பெருந்தோட்டத் தொழில்துறையுடன் தொடர்புடைய வாழ்க்கையின் யதார்த்தங்களும் முழுமையாக வெளிக்கொணரப்படவில்லை. அண்மையில் துரைவி நிறுவனத்தினர் மலையகத்தைப் பற்றிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்க முயற்சியாகும். இதேபோன்று மலையகக் கவிதைத் தொகுதியொன்றும் வெளியிடப்பட வேண்டும். இவற்றுக்கு மேலாக, மலையகம் தொடர்பான எழுத்துகள் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பணிகளை முன்னெடுப்பதற்கான அடிப்படைத் தேவையாக மலையகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கான நிரந்தர நிறுவனக் கட்டமைப்பு அமைகின்றது. எனவே, 1997 டிசம்பர் 13-ஆம் திகதி நடைபெறவிருந்த விழாவில் இத்தகைய அமைப்பு நிறுவப்படுவது அவசியமாகும்.”

> **“மலையகத் தமிழாராய்ச்சி என்பது மலையக மக்களின் இலக்கியத்தை மட்டுமன்றி, மலையக மக்கள் யாவர், அவர்களை வரையறுப்பதற்குத் தற்போது பயன்படுத்தப்படும் வரைவிலக்கணங்களின் பொருத்தப்பாடு, அவர்களது மொழி வழக்குகள், பண்பாட்டுக் கூறுகள், பழக்கவழக்கங்கள், சமூக அமைப்பு, தொழில்கள், பொருளாதார அபிவிருத்தி, சமூக வளர்ச்சி மற்றும் மாற்றங்கள், அவர்களது கண்ணோட்டங்கள் எனப் பல்வேறு விடயங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.”**

மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூலில் பன்னிரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் மு. சின்னத்தம்பியின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்த இந்தியர்களும், வெளிநாடுகளில் இந்திய சமூகங்களும்: ஓர் ஒப்பீட்டுக் கண்ணோட்டம், பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜாவின் இலங்கை வாழ் (இந்திய வம்சாவளி) மலையகத் தமிழரின் வரலாற்றின் ஆரம்பம் பற்றிய சில குறிப்புகள், மா. செ. முக்கையாவின் இலங்கையில் மலையகத் தமிழ் மக்களின் கல்வி நிலை: அதன் வளர்ச்சியும் போக்கும், பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் மலையக மக்களின் கல்விப் பிரச்சினைகளும் எதிர்பார்ப்புகளும், பெ. முத்துலிங்கத்தின் அடிப்படை உரிமைகளும் இந்திய வம்சாவளி மக்களும் ஆகியவை மலையக மக்களின் வரலாறு, கல்வி மற்றும் உரிமைகள் தொடர்பான விடயங்களை ஆராய்கின்றன.

அத்துடன், வி. ரி. தமிழ்மாறனின் மலையகத் தமிழரின் அரசியலும் சமூக அசைவியக்கமும், ஏ. எஸ். சந்திரபோஸின் மலையகத் தமிழரின் சமூகப் படையாக்கம், மாத்தளை பெ. வடிவேலனின் மலையக நாட்டார் வழக்காற்றியல், தெளிவத்தை ஜோசப்பின் மலையக இலக்கியத்துக்குக் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு, அந்தனி ஜீவாவின் மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு, சாரல் நாடனின் மலையகம் பற்றிய ஆங்கில ஆக்கங்கள், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மலையக மக்கள் இலக்கியம் ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இவை மலையக மக்களின் அரசியல், சமூக அமைப்பு, நாட்டார் மரபு, இலக்கியம் மற்றும் பண்பாடு சார்ந்த பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன.

2007-ஆம் ஆண்டு, அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வீ. புத்திரசிகாமணி, இக்கட்டுரைகள் அடங்கிய நூலைத் தனது சொந்தச் செலவில் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார். அதற்காக மாண்புறும் மலையகம் என்னும் தலைப்பில் எழுதிய குறிப்பில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

“மலையகத் தமிழாராச்சி மாநாட்டின் கட்டுரைகள் அடங்கிய இந் நூலின் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அன்று அமைச்சராக இந்நூலை தமிழாராச்சி மாநாட்டில் வெளியிட்டபோதே பலரும் இந்நூல் அவர்களுக்கு கிடைக்கவில்லையென வருத்தம் தெரிவித்தனர். அவர்களும் இவ்விரண்டாம் பதிப்பு பற்றி அறிந்து மகிழ்வர். மலையக தமிழாராச்சி மாநாட்டின் பின் அதற்கென நிரந்தர கட்டிடமும், காப்பகமும் கட்டியெழுப்ப அடிக்கல் நாட்டினேன். ஒருசிலரின் தூய்மையற்ற அரசியல் போக்கினால் அதை செய்யமுடியவில்லை. ஆனால் தற்போது ஓரிரு இடங்களில் காப்பகங்கள் இருப்பதாக அறிகிறேன். எனினும் நிச்சயமாக எனக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது எனது எண்ணத்தை நிச்சயம் நிறைவேற்ற அனைவரது ஆசியும், ஆதரவும் கிடைக்க வேண்டும்.”

வீ. புத்திரசிகாமணி அவர்களின் அரசியல் தலைமைத்துவமே மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் அடிப்படை ஆதாரமாக அமைந்திருந்தது என்பது மேற்குறிப்பிட்ட குறிப்பின் மூலம் தெளிவாகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய வாய்ப்பு அவருக்கு மீண்டும் அமையவில்லை; எதிர்காலத்தில் அமையக்கூடும். அதேவேளை, இத்தகைய ஆய்வு முயற்சிகள் அரசியல் தலைமைகளில் மட்டுமே தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

த. வே. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்தகைய தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு மலையகப் புலமையாளர்களுக்கு உரியது. அவர்கள் இத்தகைய முயற்சியை முன்னெடுத்திருந்தால், அரசியல் தலைமைகளும் நிச்சயமாக ஊக்கமளித்திருக்கும். எனவே, இங்கு நிகழ்ந்திருப்பது மலையகப் புலமை மரபின் பின்னடைவாகவே கருத வேண்டியுள்ளது. எனினும், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. முதலாவது மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன. இன்று மலையகத்தில் புதிய தலைமுறையினரிடையே புலமை மரபு வேரூன்றியுள்ளதுடன், உலகளாவிய தொடர்புகளும் விரிவடைந்துள்ளன. ‘மலையகம் 200’ என்ற அடையாளத்துடன் மலையகம் குறித்த எழுச்சியும் விரிவடைந்துள்ளது. இத்தகைய பின்னணியில், இரண்டாவது மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கான முன்னெடுப்பைக் கையில் எடுக்க வேண்டியது இன்றைய இளம் மலையகத் தலைமுறையினரின் முக்கிய பணியாகும்.

thilagar@thaiveedu.com

tg.theeban@gmail.com

பால. சிவகடாட்சம்

# தமிழில் மருத்துவ நூல்களின் தோற்றத்துக்கு வழிவகுத்த

## ஈழத் தமிழ் ஆயுள்வேத நூல்கள் பகுதி -1

தற்போது வழக்கில் உள்ள பாரம்பரியத் தமிழ் மருத்துவ நூல்களை ஆராயும்போது, தமிழில் மருத்துவ அறிவை முறையாக நூல் வடிவில் பதிவு செய்யும் முதல் முயற்சிகள் யாழ்ப்பாண இராச்சியக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக் கலாம் என்பதற்கான ஆதாரங்கள் புலப்படுகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் ஆயுள்வேதம் பல நூற்றாண் டுகளாக சமஸ்கிருதத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சிய டைந்தது. அதன் அடிப்படைச் செவ்வியல் நூல்களான சரக சம்ஹிதை, சுஷ்ருத சம்ஹிதை போன்றவை அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே இயற்றப்பட்டன. பின்னர், இந் நூல்களின் கருத்துகளையும் முன்னோடி மருத்துவ மரபுக ளையும் ஒருங்கிணைத்து வாக்பட்டர் இயற்றிய அஷ்டாங்க ஹிருதய சம்ஹிதை, இந்தியா முழுவதும் ஆயுள்வேதக் கல் விக்கான முக்கியப் பாடநூலாக விளங்கியது.

தமிழகத்திலும் நீண்டகாலமாக சமஸ்கிருதமே மருத்துவக் கல்வியின் மொழியாக விளங்கியது. பெரும்பாலும் சமஸ் கிருத மொழியறிவு பெற்ற பிராமணர்களே அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். பிராமணர் அல்லது பிராமண கலப்பினத்தவர்களே அங்கீகாரம் பெற்ற மருத்து வர்களாகப் பணிபுரிந்தனர். ஆயுள்வேத மருத்துவ முறைப் படி சிகிச்சை வழங்கிய மருத்துவமனைகள் ஆதுலசாலை என்னும் பெயரில் அரசு ஆதரவுடன் இயங்கின.

விக்கிரமசோழனின் ஆட்சிக்காலத்தில் (பொது ஆண்டு 1121) திருவாவடுதுறையில் இயங்கிய மருத்துவக் கல்வி நிலையம் ஒன்றில் அஷ்டாங்க ஹிருதய சம்ஹிதை கற்பிக்கப்பட்டதாக அக்காலக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. இந்நூலாசி ரியர் சமஸ்கிருதத்தில் வாக்பட்டர் என்றும், பிராகிருதத்தில் வாகடர் என்றும் அறியப்பட்டார். தமிழகத்தில் இவரது நூல் 'வாகடம்' என்ற பெயரால் பரவலாக அறியப்பட்டது.

திருக்குறள் உரையாசிரியர்களுள் ஒருவரான காளிங்கர் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக எண்ணப்படுகிறார்.

> ***'உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்***
> ***கற்றான் கருதிச் செயல்'***

என்னும் திருக்குறளுக்கு உரையெழுதும்போது கற்றான் என்பதற்கு 'வாகடம் முதலான நூல்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தோன்' எனக் காளிங்கர் விளக்கம் தந்துள்ளார். இவர் 'வாகடம்' என்று தனி ஒரு மருத்துவ நூலையே குறிப்பிட் டுள்ளார் என்பது தெளிவு. எனினும், வாகடரின் நூல் பெற்று விட்ட பிரசித்தி காரணமாக, காலப்போக்கில் 'வாகடம்' என் பது மருத்துவ நூல் எதனையும் குறிக்கும் பொதுப் பெயரா யிற்று. பின்னாளில் ஈழத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகர மாலை என்னும் சோதிடநூல் மருத்துவக்கலையினை 'வாக டக்கலை' என்றே குறிப்பிட்டுள்ளது.

தென்னிந்தியாவில், சமஸ்கிருத அறிவும் பிராமண சமூகப் பின்னணியும் இல்லாதவர்களும் மருத்துவத் தொழிலில் ஈடுபடத் தொடங்கியபோது, அவர்களுக்கு மூல சமஸ்கிருத ஆயுள்வேத நூல்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதில் கட்டுப்பாடுகள் இருந்தன. இதனால், மூல நூல்களுக்கான உரைநூல்கள், சுருக்க நூல்கள் மற்றும் விளக்க நூல்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

வைத்திய சிந்தாமணி, குணபாடம், ரோக நிதானம் போன்ற பெயர்களில் இத்தகைய நூல்கள் தோன்றின. இந்நூல்களுக்கு தன்வந்தரி, அகத்தியர் போன்ற போன்ற பண்டைய முனிவர் களே ஆசிரியர்களாகக் கூறப்பட்டாலும், அவை உண்மை யான ஆசிரியர் பெயர்களா என்பது கேள்விக்குரிய விடயம்.

தமிழகத்திலும் பிற தென்னிந்திய மாநிலங்களிலும் மேற்படி நூல்கள் கிரந்த எழுத்தில் ஓலைச்சுவடிகளாக மருத்துவரி டையே பரவின. சமஸ்கிருத நூல்களைப் பதிவு செய்யப் பயன் படுத்தப்பட்ட எழுத்துமுறையாக கிரந்தம் விளங்கியது. சமஸ் கிருத மொழியில் உள்ள நூல்களைக் 'கிரந்தம்' எனக் குறிப் பதற்கு இதுவே காரணம்.

தமிழ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் அதுகாலவரை வட மொழியில் பயிலப்பட்டுவந்த ஆயுள்வேதம் மற்றும் சோதிடம் முதலான கற்கை நெறிகள் தொடர்பான நூல்களைத் தமிழ் மொழியில் உருவாக்க வேண்டும் என்ற முயற்சிகள் பல நூற்றாண்டுகளாகத் தோன்றவில்லை.

பொது சகாப்தத்தின் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின் னர், யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த ஆரியச் சக்

கரவர்த்தி மன்னர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் இலக்கிய உருவாக்கத்திலும் குறிப்பிடத்தக்க அக்கறை காட்டினர். இவர்களில் சிங்கைச் செகராசசேகரன் முக்கியமான ஒருவராக அறியப்படுகிறார்.

இவர் ஆயுள்வேதம் சோதிடம் தொடர்பான நூல்களைத் தமிழ் மொழியில் ஆக்குவிப்பதற்குப் பெருமுயற்சி எடுத்தார் என்பதை யாழ்ப்பாண வைபவமாலை என்னும் உள்ளூர் வரலாற்று நூல் ஒன்று வலியுறுத்துகின்றது.

பொது ஆண்டு 1736-இல் மயில்வாகனப் புலவரால் யாழ்ப்பாண வரலாற்றைக் கூற இயற்றப்பட்ட நூல் யாழ்ப்பாண வைபவமாலை ஆகும். இந்நூலில் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகரனது சமகாலத்தவராகிய சிங்கைச் செகராசசேகரன் தமிழறிஞர்களை ஒன்றிணைத்து தமிழ்மொழியில் நூல்களை இயற்றச் செய்ததோடு, தானும் சில நூல்களை இயற்றினார் என்னும் விபரம் தரப்பட்டுள்ளது. மயில்வாகனப்புலவர் சிங்கைச் செகராசசேகரனை சிங்கைப் பரராசசேகரனின் உடன்பிறந்த சகோதரன் எனக் குறிப்பிடுகிறார். எனினும், இந்தப் பதிவில் வரலாற்று ஆய்வாளர்களிடையே ஒத்த கருத்து இல்லை. மயில்வாகனப்புலவர் தரும் தகவல்களின்படி சிங்கைப் பரராசசேகரன் என்பவன் பொது ஆண்டுக்குப் பின் 1500-க்குச் சமீபமாக யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னன் ஒருவன் என்பதை ஊகிக்கமுடிகின்றது.

தமிழை வளர்க்கும் அறிஞர்களுக்கு செகராசசேகரன் பொன்னிறைந்த காளாஞ்சி, கெண்டிகை மற்றும் பொன்னாபரணங்கள் போன்ற பரிசுகளை வழங்கி புலவர்களை ஊக்குவித்ததான் என்று செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலை இயற்றிய புலவர் புகழ்ந்து கூறுகிறார். அந்த நாட்களில் மருத்துவமும் சோதிடமும் நெருங்கிய தொடர்புடைய கலைகளாகக் கருதப்பட்டன. 'ஆயுள்வேதரும் காலக்கணிதரும்' கூடி வாழ்ந்த பட்டினப்பாக்கத்துத் தெருவீதி ஒன்று பற்றி சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் குறிப்பிட்டிருப்பதை நோக்கலாம்.

***'ஆயுண்மறையுடன் அறிய நற் சோதிடம்***
***பாய்திரை கடலுட் பலவும் உணர்ந்தோன்'***

என்று சிங்கைச் செகராசேகரன் புகழப்பட்டவன். இம்மன்னன் இக்கலைகள் தொடர்பான நூல்களைத் தமிழில் ஆக்குவதற்கு ஊக்கம் அளித்துள்ளான் என்பதில் வியப்பு இல்லை. இவன் காலத்தில் தோன்றிய சோதிட நூல்களுள் ஒன்றான செகராசசேகரமாலை இம்மன்னனை மணவை ஆரியவரோதயன் என்று குறிப்பிடுகின்றது.

***'மன்னர் மன்னு செகராச சேகரமன் மணவை யாரிய வரோதயன்***
***பன்னு செந்தமிழ் வளம்பெறற்குதவு பரிசி லங்கவரி சித்தியாம்***
***பொன்னின் மிஞ்சியகளாஞ்சி கெண்டிகை பொலன் கலம் பிறவுமாம்பரி***
***சின்னமுள்ள தொகையாவும் இவ்விதி சிறந்தறிந்து ரைசெய் சேயிழாய்'***

மணவையாரியன், தேவையர்கோன் என்னும் பெயர்கள் யாழ்ப்பாண மன்னர்கள் இராமேஸ்வரத்தைத் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்ததையே குறிக்கின்றது. 'ஆரியவரோதயன்' என்பதை மன்னனது இயற்பெயராகக் கொண்டு இம்மன்னனை 14-ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் ஒருவனாக ஆய்வாளர் சிலர் அடையாளம் காட்டியுள்ளனர். எனினும், 'ஆரிய வரோதயன்' என்பதை 'ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையினரின் வரத்தால் உதித்தவன்' என்றும் பொருள் கொள்ளலாம்.

தற்போது கிடைக்கப்பெறும் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் மற்றும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில், பொது ஆண்டுக்குப் பின் 1300 முதல் 1600 வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்களில் பெரும்பான்மையினர் தமிழ்மொழி பேசினாலும், சமஸ்கிருத அறிவு பெற்றோர் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்துள்ளனர் என்பதை ஊகிக்க முடிகின்றது.

தமது தமிழ்க் குடிமக்களின் நலன் கருதி மருத்துவ அறிவைத் தமிழில் வழங்கவேண்டிய தேவை யாழ்ப்பாண மன்னரால் உணரப்பட்டிருக்கலாம். சிங்கைச் செகராசசேகரனின் ஆதரவுடன் 'வாகடம் தமிழ் செய்யும்' முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

***'பாதி மாதுமை பாகனார் அருளிய***
***தீதிலா வாகடம் செந்தமிழ் செய்திட...'***

என்று செகராசசேகரம் கூறுகிறது. ஆயுள்வேதக் கல்வி ஒரு குறிப்பிட்ட சாதியினரின் உரிமை அல்ல; அறிவு உள்ளவர்கள் கற்கவும் பயிற்றுவிக்கவும் முடியும் என்ற கருத்தை செகராசசேகரம் வெளிப்படுத்துகிறது.

***'அஞ்சன விழியினாளே ஆயுரு வேத நீதி***
***வஞ்சகர் கற்க வேண்டா மாறிலாப் பிணியினோர் தம்***
***நெஞ்சினால் உணரவென்றால் தேறிடார் நினைக்க வேண்டா***
***எஞ்சிய ஞானம் உள்ளார் யாவரும் பயிற்றலாமே.'***

'எஞ்சிய ஞானம் உள்ளார் யாவரும் பயிற்றலாமே' என்ற கருத்து ஆயுள்வேத மருத்துவ அறிவைப் பரந்த சமூகத்திடம் கொண்டு செல்லும் நோக்கைக் காட்டுகிறது. அக்கால சமூகச் சூழலைக் கருத்தில் கொண்டால், மருத்துவ அறிவை அனைவரிடமும் கொண்டு செல்லும் முன்னோடியான கல்விச் சிந்தனை இக்காலத்தில் இருந்தது எனக் கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத அறிவு குறைவாக இருந்த வேளாண்குடியினரும் ஆயுள்வேத வைத்தியர்களாக செயற்பட்டதாக அறியமுடிகின்றது. இதனால், மருத்துவ அறிவின் மொழிமாற்றத்துடன் அதன் சமூக அணுகலும் முக்கியமானதாகிறது.

பிராமண அரச குடும்பத்தைச் சேர்ந்த செகராசசேகரன், பரராசசேகரன் என்போர் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களுடன் இரத்த உறவு கொண்டிருந்த

பரநிருசிங்க முதலி என்பவர் புகழ்பெற்ற மருத்துவராக விளங்கியதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மன்னர்களின் ஆதரவின் பின்னணியில், செகராசசேகரம் என்னும் தமிழ் மருத்துவ நூலும், பின்னர் அதன் விரிவான வடிவமாக பரராசசேகரம் என்னும் நூலும் ஆக்கம் பெற்றதாகக் கருதமுடியும். பதினாறாம் நூற்றாண்டு அல்லது அதற்கு முன்னர் தோன்றியிருக்கக்கூடிய இந்நூல்கள் தமிழ் மருத்துவ இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையாகத் தோன்றுகின்றன.

சமஸ்கிருதத்தில் இருந்த மருத்துவ அறிவைத் தமிழில் எடுத்துரைப்பதே தமது முக்கிய நோக்கம் என்பதை பரராசசேகரத்தின் முன்னுரைப் பாடல்கள் மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

**தாரணியோர் மிகப்புகழ் தன்வந்தரி செய்த**
**தகவுடைய சீர்த்தி பெறும் ஆயுள்வேதப்**
**பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்**
**பெட்புடைய தமிழ்ப்பாவால் பேசும் வண்ணம்**

பரராசசேகரம்

**முந்தை மாமுனிவரான் மொழி கிரந்தமாம்**
**அந்தநூல் என்னறி வளவிற்றாகுமோ**
**சிந்தையில் அருள்சிறி தூண்ட தாகலின்**
**இந்தநூல் தமிழினாற் சில வியம்புகேன்**

பரராசசேகரம்

இங்கு ‘வாகடம்’ என்பது வாக்பட்டரின் அஷ்டாங்க ஹிருதயம் என்ற ஒரே நூலை மட்டுமே குறிப்பதாகக் கொள்ள வேண்டியதில்லை. மாறாக, அக்காலப் பயன்பாட்டில் வாகடம் என்பதை ‘மருத்துவ நூல்’ என்ற பொதுப்பொருளில் வழங்கப்பட்ட சொல்லாகப் புரிந்துகொள்வதே பொருத்தமானதாகும். ஏனெனில், செகராசசேகரம் தோன்றுவதற்கு முன்னரே தமிழில் மருத்துவ நூல்கள் பரவலாக இருந்திருந்தால், ‘சமஸ்கிருத மருத்துவ நூல்களைத் தமிழில் செய்கிறோம்’ என்ற ஆசிரியர்களின் இக்கூற்று தனது பொருத்தத்தை இழந்துவிடும்.

இருப்பினும், செகராசசேகரம் மற்றும் பரராசசேகரம் ஆகிய நூல்களின் ஆசிரியர்கள், தமக்கு முன்னரே அகத்தியர் தமிழில் மருத்துவ நூல்களை இயற்றியதாகக் குறிப்பிடுகின்றனர்.

**நம்பனம்மைக்கு ரைத்தனன் நந்திகேட்டு**
**இம்ப வாகட நூலை இயம் பிடக்**
**கும்பமாமுனி தான் செய்த**
**செம்பொன் ஒன்றில் அணிபல செய்வர் போல்**
**செய்ய பாவலர் செந்தமிழ் மிக்கையால்**
**நொய்யச் சொல்லி நுவன்றதென் போலவாம்**
**பைய வாருதி தன்னை எறும்பது**
**கையி னாற்கரை சேருவ போலவாம்**

என்று செகராசசேகரமும்

**வேதன் முன் வகுத்த ஆயுள் வேதத்தில் வகுத்துச் சொன்ன**
**கோதிலா வியல்பினாலே குறுமுனி யருளிச் செய்தான்**
**ஆதலிற் றமிழினாலே அறிந்தவர் அறிந்துரைத்த**
**மூதுரை வாகடத்தின் முறைமையை மொழியுமாறே**

என்று பரராசசேகரமும் கூறுகின்றன.

அகத்தியரைத் தமிழ் முனிவராகப் போற்றும் மரபு உறுதியாக நிலைபெற்ற பின்னரே இந்நூல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. தமிழுக்கு இலக்கண நூலை அகத்தியர் இயற்றியதாகப் பின்னாளில் உருவான மரபை ஒட்டியே இவ்வாறு கூறப்பட்டிருக்கலாம். எனவே, அகத்தியரின் பெயரால் வழங்கப்படும் இக்குறிப்புகள் வரலாற்றுச் சான்றுகளாக அல்லாமல், அக்கால இலக்கிய மரபின் வெளிப்பாடாகவே கருதப்பட வேண்டும். கும்பமுனி எனப்படும் அகத்தியரால் ஆக்கப்பெற்ற எந்த ஒரு தமிழ் நூலையும் இன்று காணமுடியாது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

Sivakadadcham@thaiveedu.com

# போருக்குப் பிந்தைய ‘தேசப்பற்று’ இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல்

ஆங்கிலத்தில் நீரா விக்கிரமசிங்க
தமிழாக்கம் ச. சத்யதேவன்

## நடைமுறையில் தேசியப் பழமரபு: போட்டிகளும் கருத்து வேறுபாடுகளும்

கல்விசார் நூல்களிலும் ஆய்விதழ்களிலும் தொழில்முறை வரலாற்றாசிரியர்களால் பதிவுசெய்யப்பட்டு, பல்கலைக்கழக மாநாடுகளில் துறைசார் அறிஞர்களுக்கு மத்தியில் மட்டுமே விவாதிக்கப்பட்ட ‘கடந்த காலம்’ என்ற கருத்தாக்கம், இன்று பரந்த ஜன நாயகப் பொதுவெளியில் ‘தேசியப் பழமரபாக’ வடிவம் பெற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வரலாற்றை இவ்வாறு தேசியப் பழமரபாக மாற்றுவது என்பது - ஒரு குறிப்பிட்ட அறிஞர்களுக்கு மட்டுமேயான தனித்துவ ஆய்வு நடைமுறையிலிருந்து, தொல்லியல் தளங்களைப் பார்வையிடுதல், புதிய விளக்கங்களை அளித்தல் மற்றும் முக்கியமாக அவற்றின் நிர்வாகம், பாதுகாப்பு போன்ற பொதுச் செயல்பாடுகளின் ஊடாக, அதனை ஒரு ‘வெகு ஜனப் பொது நிகழ்த்துகையாக’ (Public Performance) மாற்றுவதைக் குறிக்கின்றது.

### இடங்களில் மோதும் கருத்தியல்கள்: வரலாற்றுத் தளங்களின் அர்த்தங்கள் குறித்த போட்டி:

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) ஒரு முக்கிய வணிக முயற்சிதான் ‘இராமாயணப் பாதை’ (Ramayana Trail) ஆகும். இத்திட்டம், இந்திய இதிகாசமான இராமாயணத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 52 வரலாற்றுத் தளங்களுக்கு (இராவணனால் சீதை சிறைவைக்கப்பட்டதாகக் கூறப்படும் அசோக வனம் உட்பட) சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்கின்றது. இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை 2007-ஆம் ஆண்டில், இராமாயணத்தின் ‘உண்மையான வரலாற்று அனுபவத்தைத்’ தேடி வரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்குடன் இந்த வணிகப் பாதையைத் தொடங்கியது. 2009-இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சுமார் 4,000 இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கு வருகை தந்தனர்; அன்றிலிருந்து இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இருப்பினும், இலங்கையின் புகழ் பெற்ற கல்வி நிறுவனமான ‘ரோயல் ஏசியாட்டிக் சொசைட்டி’, குறிப்பாக அதன் தலைவரான சுசாந்த குணதிலக்க (Susantha Goonatilake), முற்றிலும் வணிகக் காரணங்களுக்காக, எந்தவொரு அறிவியல்

prasadbatti@gmail.com

பூர்வமான வரலாற்று ஆதாரமும் இல்லாத ஒரு வெறும் ‘புனைகதைப் பாதையை’ அரசு புத்துயிர்ப்புச் செய்வதை மிகக் கடுமையாக எதிர்க்கின்றார். அவர் அன்றைய சுற்றுலாத்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் இப் பாதையைப் பின்வருமாறு கண்டிக்கின்றார்:

‘இராமாயணப் பாதை என்பது முற்றிலும் ஒரு வரலாற்று வக்கிரமும், எதிர்காலத்தில் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு விடுக்கப்படும் பெரும் ஆபத்துமாகும். இராமன் மற்றும் இராவணன் இத்தீவில் வாழ்ந்ததற்கான எவ்வித வரலாற்று அல்லது தொல்லியல் ஆதாரங்களும் இலங்கையில் இல்லை.’

மேலும், சுற்றுலாத்துறையானது ஏமாறக்கூடிய வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நுகர்வுக்காகப் போலியான கல்வெட்டுகளையும் வரலாற்றுத் தளங்களையும் புனைவதாக ரோயல் ஏசியாட்டிக் சொசைட்டியின் தலைவர் சுசாந்த குணதிலக்கவினால் கண்டிக்கப்பட்டது.

ஆதார அடிப்படையிலான வரலாற்று ஆய்வைப் பாதுகாப்பதைத் தாண்டி, ரோயல் ஏசியாட்டிக் சொசைட்டி இந்த இராமாயணப் பாதையைக் கண்டித்ததற்குப் பின்னால் வேறு சில ஆழமான ‘தேசியவாதக் கவலைகளும்’ உறைந்துள்ளன. அவற்றுள் பின்வருவன முதன்மையானவை:

- இந்திய செல்வாக்கு குறித்த அச்சம்: தீவினுள் இந்திய கலாசார மற்றும் அரசியல் செல்வாக்கு மீண்டும் வலுவடைந்து விடுமோ என்ற அச்சம்.
- பூர்வீக இருப்புச் சார் முரண்பாடு: இராமாயணக் கதை வரலாற்று ரீதியாக உண்மையானது என இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது விஜயனின் வருகைக்கும் (சிங்கள இனத்தின் தோற்றம்), பௌத்தத்தின் வருகைக்கும் முந்தைய காலத்திலேயே இலங்கையில் ஒரு வலிமையான ‘இந்திய / இந்துப் பூர்வீக இருப்பு’ நிலவியதைத் தார்மீக ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் உறுதிப்படுத்திவிடும் என்ற கவலை.

இலங்கையின் முன்னணித் தமிழ் வரலாற்று அறிஞரான பேராசிரியர் சி. பத்மநாதனின் நிலைப்பாடு, இத்திட்டம் குறித்து ஒட்டுமொத்த கல்விச் சமூகத்தின் பொதுவான அறிவியல் பார்வையைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

‘நான் இராமன் என்ற பாத்திரத்தின் வரலாற்று உண்மைத் தன்மையைச் சந்தேகிக்கவில்லை. ஆனால், இலங்கையில் காட்டப்படும் இந்தத் தொல்லியல் தளங்களுக்கும் அந்த இந்திய இதிகாசத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இவற்றை இணைப்பதற்கான எந்தவொரு அறிவியல்பூர்வமான ஆதாரமும் இருப்பதாக நான் கருதவில்லை. ஒருபோதும் வரலாற்றையும் இலக்கியப் புனைவையும் ஒன்றாகக் கலக்கக் கூடாது.’

இந்தியாவில் நிலவும் சூழலைப் போலன்றி - அதாவது அங்கு ‘இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையும்’ (ASI), பாரதிய ஜனதா கட்சி (BJP) மற்றும் சங் பரிவாரங்கள் போன்ற வலதுசாரி அரசியல் சக்திகளால் ஆதரிக்கப்படும் பிரபலமான வரலாற்று மன்றங்களும் தங்களின் அரசியல் தேவைகளுக்காகப் பல நேரங்களில் ஒன்றிணைந்து கூட்டுச் செயல்பாடுகளில் ஈடுபடுவதைப் போலன்றி - இலங்கையில் கல்விசார் வரலாற்றாசிரியர்கள் இத்தகைய அரசியல் புனைவுகளைத் தீவிரமாக எதிர்த்து நிற்கின்றனர்.

இலங்கையில், தீவிரத் தேசியவாத அடையாளத்தைக் கொண்ட வரலாற்றாசிரியர்கள் கூட, தங்களின் அரசியல்-கருத்தியல் தேவைக்கு முரணான சில கடந்த காலக் கூற்றுக்களை ‘முறையான அறிவியல்பூர்வமான அறிவு அல்ல’ என்று கூறித் தகுதி நீக்கம் (Invalidate) செய்கின்றனர்.

இலங்கையின் ‘இராமாயணப் பாதை’ சர்ச்சை எதனை உணர்த்துகிறது எனில் - ஆளும் வர்க்கத்திற்குப் பயனுள்ளதான, அதேநேரம் அவர்களின் அதிகாரக் கட்டமைப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாத கட்டுக்கதைகளை மட்டுமே வடிகட்டித் தேர்ந்தெடுக்கும் பணி, ‘தேசபற்றுத் தேச-அரசின்’ அதிகாரபூர்வப் பாதுகாவலர்களினாலேயே முன்

னெடுக்கப்படுகின்றது என்பதாகும். இவர்கள் தங்களது மேலாதிக்கப் பார்வைக்கு அமைந்திடாத மாற்றுத் தேசியப் பழமரபுக் கதையாடல்களை நிராகரிப்பதற்காக, தங்களுக்குச் சாதகமான 'நேர்மறைவாத வரலாற்று' (Positivist History) ஆதாரங்களைப் பட்டியலிடச் சிறிதும் தயங்குவதில்லை.

## இடங்கள் மற்றும் நிலப்பரப்புகள் மீதான கருத்தியல் போட்டி (Contesting Landscapes and Sites):

தேசியப் பழமரபு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லை வரை, நிகழ்காலத்தில் நிலவும் கலாசார மற்றும் சமூகப் பதற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலாசார நிறுவனங்களாலும் மேல்தட்டு உயரடுக்கினராலும் திட்டமிட்டு உருவாக்கப்படும் ஒரு 'வரலாற்றின் பொது இணக்கப் பதிப்பை' (Consensus Version of History - அதாவது, அரசாங்கமும் அதிகார வர்க்கமும் தங்களுக்குச் சாதகமாகச் சமூகத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரையும் ஏற்றுக்கொள்ள வைப்பதற்காக உருவாக்கும் பொது உடன்பாடான வரலாற்று வடிவம்) சமூகத்தில் பரப்பும் செயல்முறையாகும்.

இருப்பினும், இதே தேசியப் பழமரபு என்பது ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை/சிறுபான்மைக் குழுக்களால் தங்களின் செயலற்ற நிலையைத் தாண்டி, தம்மீது திணிக்கப்பட்ட விழுமியங்களை எதிர்த்துச் சவால் செய்வதற்கான ஒரு தற்காப்பு வளமாகவும் பயன்படுத்தப்படலாம். அத்தகைய சூழலில், இது கடந்த காலப் பொருள்களை மாற்று வழிகளில் மீள்பரிசீலித்து விளக்குவதற்கும் (Re-interpretation), மக்களும் வரலாற்றுப் பொருட்களும் எவ்வாறு உணரப்படுகின்றனர் என்ற மேலாதிக்கக் கட்டமைப்பைச் சவால் செய்வதற்குமான ஒரு முற்போக்கான கருவியாக மாறுகின்றது. இது புதிய அடையாளங்களைச் சமூக வெளியில் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துவதற்கான ஒரு தளமாகவும் அமைகின்றது.

குறிப்பிட்ட வரலாற்றுத் தளங்களும் நிலப்பரப்புகளும் இத்தகைய முரண்பட்ட, வேறுபட்ட கூற்றுகள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் கருத்தியல் போர்க்களங்களாக மாறுகின்றன. மனிதர்களின் கூட்டு நினைவாற்றலுக்கு (Collective Memory) எப்போதுமே ஒரு காட்சிப் படிமமோ, பௌதிகப் பொருளோ அல்லது ஒரு குறிப்பிட்ட குறியீட்டு வெளிப்பாடோ அவசியப்படுகின்றது; அதுவே அந்த நினைவிற்கு அர்த்தத்தை வழங்குகின்றது. நிலப்பரப்புகளின் தனித்துவமான விசித்திர சக்தி எங்குள்ளது எனில், அவை நம் கண்களுக்குத் தெரியும் பௌதிகப் பொருள் வடிவங்களாக (Material Forms) இருப்பதில்தான்.

இவற்றின் இந்த 'பௌதிகத் தன்மை' (Materiality) காரணமாக, இவை கடந்த கால வரலாற்றின் அரசியல் சார்பற்ற வெறும் 'நடுநிலைத் தடயங்கள்' (Neutral Traces) போல நமக்குத் தோற்றமளிக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரை, இத்தகைய வரலாற்று நிலப்பரப்புகளின் அரசியல் தோற்றம் குறித்து அரிதாகவே கேள்விகள் எழுப்பப்படுகின்றன; மாறாக, அவை காலப்போக்கில் கேள்விகளுக்கப்பாற்பட்ட 'இயற்கைமயப்பட்ட உண்மைகளாக' (Naturalized) மாற்றப்பட்டுவிடுகின்றன.

உதாரணமாக, 'அனுராதபுரம்' என்பது ஒரு 'புனித நகரம்' என்ற கருத்தாக்கத்தையும், அந்த அந்தஸ்திற்கான அதன் வரலாற்று உரிமையையும் இங்கு எவராலும் மறுக்க இயலாது. ஆனால், அந்த நிலப்பரப்பை உண்மையில் அத்தகைய புனித அமைவிடமாக வடிவமைத்த, அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட மற்றும் சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்ட ஆதிக்கச் செயல்முறைகள் (Socially Conditioned Processes) தந்திரமாக மறைக்கப்பட்டுவிடுகின்றன.

போருக்குப் பிந்தைய இலங்கை அரசு, பல்வேறு அதிகாரபூர்வப் பிரகடனங்கள் மூலம் ஒரு 'மகிமை பொருந்திய ஒற்றையாட்சித் தேசியப் பாரம்பரியத்தை' (Monolithic National Heritage) ஒருங்கிணைப்பதில் மிக உறுதியான, தீவிரமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

## கந்தரோடை (கதுறுகொட) சர்ச்சை: வடக்கின் பௌத்தமயமாக்கல்:

இதற்கு மிகச் சமீபத்திய உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 'கந்தரோடை' (Kandarodai) என்ற வரலாற்றுத் தளம் குறிப்பிடப்படுகின்றது. இங்கு 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல வட்ட வடிவக் கற்கட்டமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது பொ.ஆ.மு. இரண்டாம் ஆயிரமாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த ஒரு 'பெருங்கற்காலத் தளம்' (Megalithic Site) ஆக இருக்கலாம் எனத் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், 2009-இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, தென்னிலங்கை யாத்ரீகர்கள் பெருமளவில் இந்த இடத்தைப்

**இடத்தின் பெயர் 'கதுறுகொட' என அதிகாரபூர்வமாகச் சிங்களமயமாக்கப் படுவதுடன், அங்குள்ள வட்டக் கட்டமைப்புகள் அனைத்தும் பௌத்த 'தூபிகள்' எனப் புதிய அர்த்தங்களுடன் மறுவடிவமைக்கப்படுகின்றன.**

பார்வையிடத் தொடங்கினர். காலப்போக்கில் இந்த இடத்தின் பெயர் ‘கதுறுகொட’ என அதிகாரபூர்வமாகச் சிங்களமயமாக்கப்படுவதுடன், அங்குள்ள வட்டக் கட்டமைப் புகள் அனைத்தும் பௌத்த ‘தூபிகள்’ எனப் புதிய அர்த்தங்களுடன் மறுவடிவமைக்கப்படுகின்றன. வட பகுதியின் ‘பௌத்த கடந்த காலத்துடனான’ இந்தத் திட்டமிட்ட மறு-இணைப்பின் மூலம், ஒட்டுமொத்தத் தமிழ் தேசியவாத வரலாற்றுத் தர்க்கமும் (Tamil Nationalist Narrative) மிகக் கடுமையான சவாலுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

இன்று, இரு வேறுபட்ட சமூகங்கள் இந்த இடத்தின் கலாசார அர்த்தத்தைத் தங்களுக்குச் சாதகமாக உரிமை கோரிப் போராடும்போது, அது அவர்களுக்கிடையேயான இனப் பதற்றத்தை மேலும் தீவிரமாக்குகின்றது. ‘இராமாயணப் பாதை’ விவகாரத்தைப் போலன்றி, கந்தரோடையில் உள்ள இந்தத் தூபிகள் ஒரு ‘பௌத்த கடந்த காலத்தின்’ பௌதிக ரீதியான உறுதியான சான்றாதாரங்களாகப் பெரும்பான்மை யினரால் முன்வைக்கப்படுகின்றன. மேலும், அந்த இடத்தை ‘கதுறுகொட’ என்று பெயரிடும் ஒரு பிந்தைய காலக் கல்வெட்டின் மூலம் இவ்வாதங்கள் மேலும் வலுப்படுத்தப் படுகின்றன.

‘பௌத்த சாசனம் என்பது பண்டைய காலம் தொட்டே இந்தத் தீவு முழுவதையும் உள்ளடக்கியதாக இருந்தது’ என்ற சிங்களத் தேசியவாதிகளின் மேலாதிக்கக் கூற்றுக்கு இத்தளம் பெரிதும் துணைநிற்கின்றது. அங்குள்ள தூபிகள் பொ.ஆ.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள்ளது; இது இந்தோனேசியாவின் உலகப் புகழ்பெற்ற ‘போரோபுதூர்’ (Borobudur) பௌத்த தூபிகளின் காலகட்டத்தை ஒத்ததாகும்.

மறுபுறம், தமிழ் வரலாற்று அறிஞர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இத்தகைய பௌத்த எச்சங்களை, ‘பண்டைய பௌத்த பிக்குகளின் அடக்க நினைவுச் சின்னங்கள் (Burial Monuments) மற்றும் பழைய பெருங்கற்காலப் பண்பாட்டின் பௌத்தமயமாக்கப்பட்ட வடிவங்கள்’ என்று விவரிப்பதுடன், இவை பண்டைய காலங்களில் வடக்கில் ‘தமிழ் பௌத் தர்கள்’ வாழ்ந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் என்பதையும் ஒப்புக்கொள்கின்றனர்.

ஆயினும், சிங்களத் தேசியவாத நாடாளுமன்ற உறுப்பினரும் பிக்குவுமான எல்லாவல மேதானந்த தேரர், பல தசாப்த கால உள் நாட்டுப் போரினால் ‘அசுத்தமடைந்ததாகக்’ கருதப்படும் (சிறுபான்மையினர் செறிந்து வாழும்) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளிலுள்ள பௌத்தத் தொல்லியல் இடங்களை மீட்டெடுக்கும் அதிகாரபூர்வப் பணிக்குத் தலைமை தாங்குகின்றார். அவரது ஆய்வு நூல் அனுராதபுரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள இத்தகைய பௌத்த தளங்களை விரிவாகப் பட்டியலிடுகிறது.

2009-இல் போர் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, ‘தேசப் பற்றுள்ள அரசு’ வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த பாரம்பரியத்தின் தடயங்களைப் புதுப்பிப்பதிலும், புதிய விகாரைகளைக் கட்டுவதிலும் பாரிய அரச நிதியை முதலீடு செய்வதாகவும்; அதேவேளை, தமிழர்கள் காலங்காலமாகப் பேணிவந்த பூர்வீக இந்துப் பாரம்பரியத் தளங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதாகவும் தமிழ் மக்கள் உணர்கின்றனர்:

‘கந்தரோடை போன்ற இடங்களில் புத்தர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது, பண்டைய ஈழத்துத் தமிழர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதற்கான வரலாற்றுச் சான்றாகும். ஆனால், தென்னிலங்கைச் சிங்கள வர்கள் இந்தத் தொல்பொருட்களைத் தங்களுக் குரியதாகக் காட்டி, தமிழர்களின் பூர்வீகத் தாயகப் பகுதிகளைச் சிங்களப் பௌத்தப் பகுதிகளாக ஆக்கிர மித்து உரிமை கோருகின்றனர்.’

இதற்கு மறுப்பாக, தமிழர்கள் தங்களின் கருத்துகளைப் பரப்புவதற்குக் காட்சி ஊடகங்களையும் புதிய இணையத் தளங்களையும் பயன்படுத்தி, கந்தரோடையில் நிலவுவது ஒரு ‘பூர்வீகப் பெருங்கற்காலத் தமிழ் நாகரிகமே’ என்ற வலுவான வாதங்களை முன்வைக்கின்றனர்.

### குரகல (ஜைலானி) சர்ச்சை: சூஃபி சன்னதி VS பௌத்த விகாரை

மற்றொரு கடுமையான புவிசார்-அரசியல் மோதல் வலயத் தலமாகத் திகழ்வது ‘குரகல’ (Kuragala) எனப்படும் ‘ஜைலானி சூஃபி சன்னதி’ (Jailani Sufi Shrine) ஆகும். இது பலாங்கொடைக்குத் தென்மேற்கே 22 கிலோமீட்டர் தொலை வில் அமைந்துள்ள ஒரு பௌதிக நிலப்பரப்பாகும். இப் பகுதி முற்றிலும் சிங்களப் பெரும்பான்மை மக்களைக் கொண்டிருப்பதுடன், இலங்கையின் முன்னணி அரசியல் வம்சங்களில் ஒன்றான ‘ரத்வத்தே’ (Ratwatte) குடும்பத்தின் பூர்வீகக் கிராமமாகவும் அறியப்படுகின்றது.

முஸ்லிம்களின் நம்பிக்கையின்படி, இப்பகுதி மாபெரும் சூஃபி ஞானியான ‘ஷேக் முஹியதீன் அப்துல் காதிர் ஜீலானி’

**ஜைலானி என்பது உண்மையில் ஒரு பண்டைய பௌத்த துறவறத் தளம் என்றும், அதன் தொல்லியல் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சிங்களத் தேசியவாத அமைப்புகள் உரிமை கோருகின்றன.**

(பொ.ஆ.பி. 1166) அவர்களின் ஆன்மீக வழிபாட்டுடன் தொடர்புடைய புனிதத் தலமாகும். அவர் 'ஆடம்ஸ் பீக்' (Adam's Peak) நோக்கிய தனது யாத்திரையின்போது, குரகலாவில் உள்ள இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற குகைக்கு வருகை தந்து, அங்கு சுமார் 12 ஆண்டுகள் கடுமையான தியானத்தில் (Chilla) இருந்ததாக நம்பப்படுகின்றது. இத்தளம் 1875-இல் காடுகளுக்கு நடுவே மீண்டும் கண்டறியப்பட்டது; அதனைத் தொடர்ந்து, பலாங்கொடை முஸ்லிம் வர்த்தகச் சமூகத்தினரால் 1890-ஆம் ஆண்டு முதல் அங்கு வருடாந்தக் கொடியேற்றத் திருவிழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தளம் மூன்று பெரிய இயற்கைப் பாறை அமைப்புகளால் ஆனது. அவற்றுள் ஒன்று 'கப்பல் மலை' என்று அழைக்கப்படுகின்றது; ஏனெனில், அது ஒரு கப்பலின் முன்பகுதியை ஒத்த வடிவம் கொண்டதாகும். அதன் அடிவாரத்தில் 1922-இல் ஒரு திறந்தவெளி மசூதி கட்டப்பெற்றது.

இருப்பினும், 1970-களின் தொடக்கத்திலிருந்து, இக்குகைத் தளத்தில் பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'பிராமி கல்வெட்டுகள்' காணப்படுவதைச் சுட்டிக்காட்டி, ஜைலானி என்பது உண்மையில் ஒரு பண்டைய பௌத்த துறவறத் தளம் என்றும், அதன் தொல்லியல் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சிங்களத் தேசியவாத அமைப்புகள் உரிமை கோரத் தொடங்கின.

அரசு இத்தேசியவாதக் கூற்றுகளுக்கு அதிகாரபூர்வமாக ஒப்புதல் அளிக்கின்றது. அதன் வெளிப்பாடாக, மத்திய கலாசார நிதியம் (CCF) அந்த சூஃபி ஞானி தியானம் செய்த குகைக்குச் சற்று மேலே ஒரு புதிய சிறிய பௌத்த தூபியைக் கட்டுவதற்கு அனுமதி வழங்குகின்றது. ஜைலானி பள்ளிவாசலின் அறங்காவலர்கள் நீதிமன்றத்தை நாடி, அப்பௌத்த கட்டுமானத்தின் உயரத்தைக் கட்டுப்படுத்தும் அமைச்சரவை உத்தரவுகளைப் பெறுவதில் தற்காலிகமாக வெற்றி பெற்ற போதிலும், அரச தொல்பொருள் திணைக்களம் 'குரகல என்பது ஒரு பண்டைய பௌத்த விகாரையின் தளம்' என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கும் பிரம்மாண்டப் பெயர் பலகையை அங்கு நிறுவுகின்றது.

குரகல தளம் இன்றும் அவ்வப்போது இன-மத மோதல்களுக்கான ஒரு தீவிரமான பதற்றக் களமாக ஊடகங்களில் பரிணமித்து வருகின்றது. இதேபோன்றதொரு கடுமையான மத மோதல், இக்கட்டுரை எழுதப்படும் இதே கால கட்டத்தில், தம்புள்ளை புனித நகர வளாகத்திற்குள் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டதாகக் கூறப்படும் முஸ்லிம் மற்றும் இந்து வழிபாட்டுத் தலங்களை அகற்றுமாறு கோரி பெரும்பான்மையினரால் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. (2012-ஆம் ஆண்டு தம்புள்ளை புனித நகர அறிவிப்பைத் தொடர்ந்து, அங்கு பல தசாப்தங்களாக நிலவிய பள்ளிவாசல் மற்றும் பிள்ளையார் கோவில் ஆகியவற்றை அகற்றுமாறு சிங்களப் பௌத்த துறவிகளின் தலைமையில் தீவிர ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடுகின்றது.)

## புதிய அவசரமும் காலனித்துவ மரபும்:

இலங்கையின் வரலாற்று நினைவுச் சின்னங்களும் தளங்களும் இன்று புதிய அரசியல் அர்த்தங்களால் திட்டமிட்டு மீள்-நிரப்பப்படுகின்றன (Re-invested with new meanings). கடந்த காலத்திலும் இத்தகைய உரிமைக்கோரல்கள் நிலவியபோதிலும், சமூகங்களுக்கிடையேயான அதிகார உறவுகள் முற்றிலும் ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமாக மறுவரையறை செய்யப்பட்டுள்ள தற்போதைய போருக்குப் பிந்தைய சூழலில், இப்போக்கு ஒரு புதிய அரசியல் அவசரத்துடன் அரங்கேற்றப்படுகின்றது. ஒவ்வொரு சிறுபான்மைச் சமூகமும், 'தேசப்பற்றுள்ள அரசின்' விழிப்புணர்வோடு கண்காணிக்கும் அதிகாரப் பார்வையின்கீழ், பிற சமூகங்களின் சகிப்புத்தன்மையின் எல்லைகளைச் சோதித்துப் பார்க்கும் எதார்த்த நிலையே இன்று நிலவுகின்றது.

முறையாகக் கட்டமைக்கப்பட்ட ஒரு 'மரபுரிமையைப் பாதுகாத்தல்' (Heritage Conservation) மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில அறிவியல் அளவுகோல்களின்படி அதனை மீட்டெடுப்பது (Restoration) என்ற கருத்தாக்கம், அடிப்படையில் 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய ஒரு மேற்கத்தியக் கோட்பாடாகும். இலங்கையைப் பொறுத்தவரை, இக்கோட்பாடு காலனித்துவ ஆட்சிக்காலத்தில் எச்.சி.பி. பெல் (H.C.P. Bell) என்ற முதலாவது தொல்பொருள் ஆணையாளரின் கீழ், தொல்பொருள் ஆய்வு மற்றும் காலனித்துவ தொல்லியல் (Colonial Archaeology) துறையின் வழியாகவே நாட்டிற்குள் பிரவேசித்தது. பின்காலனித்துவக் காலத்திலும் இந்தக் கொள்கைகளே அரசால் தொடர்ந்து தீவிரமாகப் பின்பற்றப் பட்டு வருகின்றன.



ஒவ்வொரு சிறுபான்மைச் சமூகமும், 'தேசப்பற்றுள்ள அரசின்' விழிப்புணர்வோடு கண்காணிக்கும் அதிகாரப் பார்வையின்கீழ், பிற சமூகங்களின் சகிப்புத்தன்மையின் எல்லைகளைச் சோதித்துப் பார்க்கும் எதார்த்த நிலையே இன்று நிலவுகின்றது.

### வெனிஸ் சாசனமும் 'உண்மைத்தன்மை' பற்றிய முரண்பாடும் (The Venice Charter and the Conflict of Authenticity):

வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் '1964-ஆம் ஆண்டின் வெனிஸ் சாசனம்' (Venice Charter 1964) என்பது உலகளாவிய ரீதியில் ஒரு முதன்மையான கோட்பாட்டுச் சட்டகமாக விளங்குகின்றது. சர்வதேசத் தொல்பொருள் தளங்களின் முகாமைத்துவத்தை வழி காட்டும் இவ்வாவணத்தின் முன்னுரை, அத்தசாப்தத்தில் நிலவிய கடந்த காலம் பற்றிய உலகளாவிய அடிப்படைக் கருத்துக்களைப் பின்வருமாறு பிரதிபலிக்கின்றது:

'மானுட விழுமியங்களின் பொதுவான ஒருங்கிணைப்பு குறித்தும், அவற்றின் ஒருமைப்பாடு குறித்தும் மனிதகுலம் ஒட்டுமொத்தமாக மேன்மேலும் விழிப்புணர்வு பெற்று வருகின்றது; அத்துடன், பண்டைய நினைவுச் சின்னங்களை ஒரு பொதுவான உலகப் பாரம்பரியமாகக் கருதுகின்றது. எனவே, எதிர்காலச் சந்ததியினருக்காக அவற்றைச் சிதையாமல் பாதுகாப்பதற்கான கூட்டுப் பொறுப்பு உலக ளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வரலாற்றுத் தளங் களை அவற்றின் 'உண்மைத்தன்மை' மாறாமல், அவற்றின் முழுமையான வரலாற்றுச் செழுமையுடன் அடுத்த தலைமுறையிடம் கையளிப்பது நமது முதற்கடமையாகும்.'

சர்வதேச விதிகளில் வலியுறுத்தப்படும் இந்த 'உண்மைத்தன்மை' (Authenticity) என்ற கோட்பாட்டிலும், வரலாற்று நினைவுச் சின்னங்களை மீட்டெடுக்கும்போது இந்த அம்சத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்ற புள்ளியிலும்தான், உலகளாவிய விழுமியங்களை நிலை நிறுத்தும் சர்வதேச நிறுவனங்களுக்கும் (UNESCO / ICOMOS), அந்நினைவுச் சின்னங்களின் மீது தங்களுக்கு ஆன்மீகபூர்வமான 'வாழும் உரிமை' (அத்தளங்களை வெறும் தொல்பொருள் எச்சங்களாகப் பார்க்காமல், தொடர்ச்சியான ஆன்மீக / வழிபாட்டுச் செயல்பாடுகளுக்கு உரிய இடமாகப் பயன்படுத்தும் உரிமை) உண்டு என நம்பும் உள்ளூர் தரப்பினருக்குமிடையே ஆழமான விளக்க வேறுபாடுகள் (Divergent Interpretations) தோன்றுகின்றன.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், ஒரு வரலாற்று நினைவுச் சின்னத்தை அது கடந்த காலத்தில் எப்படி இருந்ததோ (தொல்பொருள் சிதைவுகளுடன்) அப்படியே அறிவியல் பூர்வமாகப் பாதுகாப்பதற்கும், கடந்த கால நாகரிகங்களின் பிரம்மாண்டத்தை நிரூபிப்பதற்காக அந்தத் தளத்தை மக்கள் நுகரக்கூடிய ஒரு 'வாழும் வழிபாட்டுத் தலமாக' (Living Heritage Site) மாற்றுவதற்கும் இடையே உள்ள முரண் பாடுகள் சமரசம் செய்ய முடியாதவையாக மாறுகின்றன.

ICOMOS அமைப்பைச் சேர்ந்த ஜெயதிஸ்ஸ ஹேரத் இப்போக்கை மிகவும் வெளிப்படையாகத் தற்காத்துப் பேசுகிறார்:

'...எங்களைப் பொறுத்தவரை, ஒரு தளத்தைச் சிதைவுகளோடு பௌதிகமாகப் பாதுகாப்பதற்கும் (Preservation - ஒரு தளம் கண்டெடுக்கப்பட்ட நிலையிலேயே மேலும் சேதமடையாமல் பௌதிக ரீதியாகப் பாதுகாப்பது), அதன் அசல் அமைப்பு மாறாமல் பேணுவதற்குமிடையே (Conservation - அத்தளத்தின் வரலாற்றுத் தன்மையும் அசல் வடிவமும் சிதையாமல் முறைசார்பாகப் பராமரிப்பது) தெளிவான வேறுபாடு உண்டு; எனவே, நாங்கள் அத்தளத்தை அதன் 'கடந்த கால மகிமைக்கு' மீளமைப்பதிலேயே (Restoration - அத்தளம் பழங் காலத்தில் எப்படி இருந்ததோ அதே தோற்றத்திற்கு மீண்டும் கட்டி எழுப்புவது) முதன்மையாகக் கவனம் செலுத்து கின்றோம். தொல்பொருள் தளங்களை எவ்வித மாற்றமு மின்றி, அவை கண்டெடுக்கப்பட்ட சிதைந்த நிலையிலேயே அப்படியே விட்டுவிட வேண்டும் என்று வாதிடும் சில தூய் மைவாதிகள் இருக்கக்கூடும்; ஆனால், சமூகப் பயன்பாட் டிற்காக அவற்றை மீளமைக்க சில பணிகளைச் செய்தே ஆக வேண்டும். உதாரணமாக 'ருவான்வெலிசாய' தூபியை எடுத்துக் கொள்ளுங்கள்; அது முன்பு இப்படி ஒரு முழுமையான வடிவத்தில் இருக்கவில்லை. இன்று அது இந்த உன்னத வடிவில் காட்சியளிப்பதற்குக் காரணம் நாங்கள் மேற்கொண்ட பிரம்மாண்ட மறுசீரமைப்புப் பணிகளே ஆகும். இந்த மறுசீரமைப்பின் காரணமாகவே இன்று லட்சக் கணக்கான மக்கள் அதனை ஒரு வாழும் வழிபாட்டுத் தலமாகப் பயன்படுத்த முடிகிறது.'

### தலதா மாளிகை குண்டுவெடிப்பும் 'வாழும் பாரம்பரியத்தின்' அரசியலும்:

கண்டியில் அமைந்துள்ள ஸ்ரீ தலதா மாளிகை, பௌத்த சமூகத்தால் புத்தரின் புனித தந்ததாதுவை உள் ளடக்கியதாக ஆழமாக நம்பப் படும் ஒரு புனிதத் தலமாகும்.



**பௌத்த பிக்குகளைப் பொறுத்தவரை, பரவலாகக் காணப்படும் நடைமுறையான - பண்டைய தொன்மையான செங்கல் தூபிக ளுக்கு முழுமையாக வெள்ளைச் சுண்ணம் பூசி, அவற்றை நாட்டின் ஏனைய நவீன தூபிகளைப் போலப் பளபளப்பாக மாற்றுவதோ ஒரு தவறான செயலன்று; மாறாக, அது மத ரீதியான ஒரு புண்ணியச் செயல்பாடாகும்**

இக்கோவில் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மன்னர் முதலாம் விமலதர்மசூரியனால் (1592 - 1604) கட்டப்பட்டது. இன்று இத்தளம் மல்வத்த மற்றும் அஸ்கிரிய ஆகிய இரு பிரதான பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் ஆன்மீகக் கட்டுப்பாட்டிலும், 'தியவதன நிலமே' என்ற உத்தியோகபூர்வப் பொதுப் பாதுகாவலரின் நிருவாகத்திலும் இயங்கி வருகின்றது.

1998-ஆம் ஆண்டில், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) குண்டுவெடிப்புத் தாக்குதலில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் முன்பக்கப் பகுதி கடுமையான சேதங்களுக்கு உள்ளானது. அதன் பின்னர், அதனை அரசு மீட்டெடுத்த விதம் என்பது, 'மறுசீரமைப்பு' (Restoration) என்ற கோட்பாட்டை உள்ளூர் ஆளும் வர்க்கமும் நிறுவனமயப்பட்ட மத அமைப்புகளும் எவ்வாறு புரிந்து வைத்துள்ளன என்பதற்கான மிகத் துல்லியமான உதாரணமாகும். குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, அங்கு முற்றிலும் புதிய கூரை ஓடுகள் வேயப்படுகின்றன; புதிய சந்திரவட்டக் கற்கள் பதிக்கப்பட்டன; அத்துடன் முற்றிலும் புதிய மரச்செதுக்கல்களும் செய்யப்பட்டன. அறிவியல் பூர்வமாகப் பார்த்தால், இத்தகைய புதிய சேர்த்தல்கள் அனைத்தும் பழைமையான ஆதாரத்தை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பேண வேண்டும் என்ற 'வெனிஸ் சாசனத்தின்' விதிகளுக்கு முற்றிலும் முரணானவைகளாகும்.

இங்குதான் இரு வேறுபட்ட சித்தாந்த அணுகுமுறைகள் நேருக்கு நேர் மோதிக்கொள்கின்றன.

- உலகப் பாரம்பரிய அணுகுமுறை (World Heritage Approach): வரலாற்றுத் தளங்களை மேலும் நுகர்வு சார்ந்த மாற்றங்களுக்கு உள்ளாக்காமல், அவற்றைக் கடந்த காலத்தின் நிலையான, காலத்தால் உறைந்த பௌதிகப் பொருட்களாக (Frozen in time) அப்படியே பேண வேண்டும் என இது வாதிடுகின்றது.
- துறவறப் பௌத்த பார்வை (Monastic Perspective): தூபிகளும் பௌத்தத் தளங்களும் வெறும் தொல்பொருள் காட்சிப் பொருட்கள் அல்ல; மாறாக, அவை தொடர்ந்து மாற்றமடையக்கூடியதும் அன்றாடச் சடங்குகளுடன் தொடர்புடையதுமான ஒரு 'வாழும் பாரம்பரியம்' (Living Heritage) ஆகும் என இது முன்வைக்கின்றது.

எனவே, பௌத்த பிக்குகளைப் பொறுத்தவரை, தலதா மாளிகையை நவீன கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தியாவது அதன் பழைய காட்சி வடிவத்திற்கு மீளக் கொண்டுவருவதோ, அல்லது இலங்கையில் பரவலாகக் காணப்படும் நடைமுறையான - பண்டைய தொன்மையான செங்கல் தூபிகளுக்கு முழுமையாக வெள்ளைச் சுண்ணம் பூசி, அவற்றை நாட்டின் ஏனைய நவீன தூபிகளைப் போலப் பளபளப்பாக மாற்றுவதோ ஒரு தவறான செயலன்று; மாறாக, அது மத ரீதியான ஒரு புண்ணியச் செயல்பாடாகும் (Merit-making activity).

### பிரேமதாசவின் தங்க விதானமும் தார்மீக அதிகாரமும்:

இதேபோன்றதொரு கோட்பாட்டு முரண்பாடு 1986-ஆம் ஆண்டில் எழுந்தது. அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாச, தலதா மாளிகையின் மூலஸ்தானச் சன்னதியின் மீது பிரம்மாண்டமான 'தங்க விதானம்' ஒன்றை அமைக்கும் திட்டத்தை உத்தியோகபூர்வமாக முன்மொழிந்தார். எனினும், இத்திட்டம் அன்றைய இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட கல்விசார் நிபுணர்களால் மிகக் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது.

அந்நிபுணர்கள் தங்களின் அறிவியல் ஆய்வறிக்கையில்: 'புதிதாகச் சேர்க்கப்படவுள்ள இத்தங்க விதானத்தின் அதிகப்படியான கட்டடப் பாரம், பழைமையான கட்டடத்தின் அடித்தளப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவது மட்டுமன்றி, அக்கோவிலின் வரலாற்றுப் 'பழைமையையும்' (Antiquity) உண்மைத்தன்மையையும் (Authenticity) சிதைத்துவிடும்' என்று சுட்டிக்காட்டினர். கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்குப் பிறகு, இக்கோவில் வளாகத்தில் எவ்விதப் புதிய கட்டடச் சேர்க்கைகளும் செய்யப்படவில்லை என்ற வரலாற்று உண்மையே, அதன் தொன்மையையும் புனிதத்துவத்தையும் பன்னாட்டு ரீதியில் நிறுவியிருந்தது என்பதையும் அவர்கள் தங்களின் வாதமாக முன்வைத்தனர்.

இருப்பினும், கல்விசார் நிபுணர்களின் அறிவியல் பூர்வமான ஆட்சேபனைகளையும் மீறி, அரசின் உத்தியோகபூர்வப் பிரதிநிதியான பிரதமரின் தீர்மானமே இறுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 1987 டிசம்பர் 31 அன்று, சுமார் 20 மில்லியன் ரூபாய் அரச நிதியில் அமைக்கப்பட்ட அப்பிரம்மாண்டமான தங்க விதானத்தைப் பிரதமர் பிரேமதாச திறந்துவைத்தார்.

இலங்கையின் பௌத்த 'மகா சங்கம்', பழைமையின் அசல் தன்மையைப் பற்றிய தொல்லியல் விதிகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கவில்லை. மாறாக, மகாவம்சத்தின் மகிமைமிக்க கடந்த கால அரசர்களைப் போல, பௌத்த சாசனத்தின் மறுமலர்ச்சிக்காகப் பிக்குகளுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றிய ஒரு 'சுதேச ஆட்சியாளரின் வரலாற்றுச் சிறப்பாகவே' பிரேமதாசவின் இந்நடவடிக்கையைப் பாராட்டி ஏற்றுக்கொண்டது.

மூலக்கட்டுரை Economic & Political Weekly (EPW) ஆய்விதழில் (ஒக்ரோபர் 26, 2013, தொகுதி: XLVIII, இதழ்: 43) 'Producing the Present: History as Heritage in Post-War Patriotic Sri Lanka' எனும் தலைப்பில் பிரசுரமானது. முன்னதாக, இதே தலைப்பிலான ஆய்வுரை ஜூலை 2012-இல் இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் (International Centre for Ethnic Studies - ICES) வெளியிடப்பட்ட ICES Research Papers தொடரின் 2-ஆம் இலக்க ஆய்வறிக்கையாகவும் (Research Paper No: 2) வெளிவந்தது. இங்கு பிரசுரமாகியுள்ளது Economic & Political Weekly (EPW) ஆய்விதழில் வெளியான மூலக்கட்டுரையின் கருத்துகள், வாதங்கள் மற்றும் கோட்பாட்டு அணுகுமுறைகளைப் பேணிக்கொண்டு, தமிழின் மொழிநடை மற்றும் வாசிப்புச் சூழலுக்கு ஏற்ப மொழிபெயர்த்துத் தொகுக்கப்பட்ட தழுவல் தமிழாக்கமாகும்.

sathiyathevan.s@thaiveedu.com

# ஊருக்கு ஊர் அபின் கடை

## 1908 அபின் சட்டமூலமும் காலனித்துவ வருமானத்தின்

# போதை அரசியலும்

என். சரவணன்

tg.theeban@gmail.com

இன்று இலங்கையில் ஹெரோயின், ஐஸ் போதைப் பொருள் பற்றிய செய்திகள் இல்லாத நாளே இல்லை. அதேவேளை கஞ்சா வளர்ப்பைச் சட்டபூர்வமாக்குவது பற்றிய விவாதமும் சூடுபிடித்திருக்கிறது. ஆனால் சரியாக 118 ஆண்டுகளுக்கு முன்னர் இதே இலங்கையில் அரசாங்கமே உரிமம் வழங்கி, ஏலத்தில் விற்று, ஊருக்கு ஊர் அபின் கடைகளைத் திறந்து வைத்திருந்தது என்பது பலருக்குத் தெரியாது. அந்தக் கடைகளிலிருந்து வந்த வருமானம் நகரசபைகளின் வரவு செலவுத் திட்டங்களைத் தாங்கி நின்றது. அந்தக் கடைகளை மூடுவதற்கு 1908-இல் கொண்டுவரப்பட்ட ‘அபின் சட்டமூலம்’ (The Opium Bill) தொடர்பான அரச ஆவணங்கள் இன்று வாசிக்கும்போது வியப்பையும் கோபத்தையும் ஒருசேரத் தருகின்றன.

111 பக்கங்கள் கொண்ட இந்த ஆவணத் தொகுப்பில் லண்டன் குடியேற்றநாட்டு அலுவலகத்துக்கும் கொழும்பு ஆளுநருக்கும் இடையிலான கடிதங்கள், 1907 அபின் குழுவின் அறிக்கை, மாவட்டம் மாவட்டமாக அபின் அடிமைகளின் கணக்கெடுப்பு, வைத்தியர்களின் சாட்சியங்கள், சட்டநிரூபண சபையின் உபகுழு அறிக்கை, 1909 வெதராளைகள் (நாட்டு வைத்தியர்) ஆணைக்குழுவின் விசாரணைகள் என்பன அடங்கியுள்ளன. ஒரு காலனித்துவ அரசு எப்படி ஒரு போதைப்பொருளை வருமான மூலமாக வளர்த்தெடுத்தது, பின்னர் உள்நாட்டு எதிர்ப்பும் பிரித்தானிய நாடாளுமன்ற அழுத்தமும் சேர்ந்த போது எப்படிப் பின்வாங்கியது என்பதை இந்த ஆவணங்கள் துல்லியமான எண்களோடு பதிவுசெய்துள்ளன.

### அபின் இலங்கைக்கு வந்த வழி:

இலங்கையில் கசகசாச் செடி (poppy) ஒருபோதும் பயிரிடப்படவில்லை. இங்கு பாவிக்கப்பட்ட அபின் முழுவதும் இறக்குமதி செய்யப்பட்டதே. சிங்களத்திலும் தமிழிலும் அது ‘அபின்’ என்றே அழைக்கப்பட்டது. 16-ஆம் நூற்றாண்டு சிங்களச் செய்யுள் மருத்துவ நூலான ‘யோகரத்னாகர’விலேயே அதற்கான மிகப் பழைய குறிப்பு உண்டு. போர்த்துக்கேயர் காலத்தில் கண்டி அரசர் கொட்டியாரம் ஊடாக அபின் இறக்குமதி செய்தார். ஒல்லாந்தர் காலத்தில் சூரத், வங்காளம் ஆகிய இடங்களிலிருந்து அபின் வந்தது. மருந்துக்காகவும் அரச குடும்பத்தினர், செல்வந்தர்களின் தேவைக்காகவும் மட்டுமே அது சிறிய அளவில் புழங்கியது.

பிரித்தானியர் 1796-இல் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியபோது அபின் இறக்குமதிக்கு இறாத்தல் ஒன்றுக்கு 20 ரிக்ஸ்டொலர் சுங்கவரி விதித்தனர். 1908-ஆம் ஆண்டின் பணப் பெறுமதியில் அது 45 ரூபா வரை வரும் என ஜோன் பேர்கியூசன் கணக்கிட்டார். இவ்வளவு கடுமையான வரியுடன் கிராமத்து வெதராளை ஒருவர் அபின் வாங்கியிருக்க முடியாது. அன்று இறக்குமதியான அபின் பிரித்தானியப் படையிலிருந்த மலாய்ச் சிப்பாய்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இராணுவ மருத்துவமனைகளுக்குமே போனது என்பது பேர்கியூசனின் முடிவு.

பின்னர் வரி படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1840-இல் இறாத்தலுக்கு 1 ஷில்லிங் ஆனது. வரி இவ்வளவு குறைந்தும் 1840 முதல் 1850 வரை இறக்குமதி அதிகரிக்கவில்லை. 1840-இல் 1,562 இறாத்தல், 1846-இல் 711 இறாத்தல், 1850-இல் 852 இறாத்தல் மட்டுமே இறக்குமதியானது. 1806 - 1807 காலப்பகுதியில் ஆளுநர் தோமஸ் மெயிட்லண்ட் கொழும்பில் சூரியன் மறைந்தபின் பொலிஸ் அனுமதியின்றி அபின் புகைப்பதைத் தடைசெய்திருந்தார். அன்று அபின் புகைத்தவர்கள் பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்த வெளிநாட்டவர்களே. கிராமங்களுக்கு அபின் இன்னும் வந்துசேரவில்லை.

‘உரிமம் பெற்ற கடைகளானவை இருக்கின்ற தேவையை மட்டும் நிறைவுசெய்வதில்லை. அவை அந்தப் போதைப்பொருளுக்கான சுவையைச் செயற்கையாக உருவாக்குகின்றன’ என்று பர்மாவின் லெப்டினன்ட் ஆளுநராக இருந்த சார்ள்ஸ் எய்ட்சிசன் சொன்ன வாசகம் இந்த ஆவணங்களில் திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டப்படுகிறது. இலங்கையின் அனுபவம் இதற்கு அச்சொட்டான உதாரணம். எந்தச் சிங்கள அல்லது தமிழ்க் கிராமமும் தமது ஊரில் அபின் கடை திறக்கும்படி கேட்டதற்கான ஒரு சான்றுகூட இல்லை என்றும், கடை திறப்பதற்கு முன்னர் கிராம மக்களின் விருப்பம் ஒருபோதும் கேட்கப்படவில்லை என்றும் 1907 குழு வெளிப்படையாக எழுதியது.

## அபின் வாடகை: ஏலத்தில் விற்கப்பட்ட போதை:

அபின் விற்பனை முறை சாராய வாடகை முறையை (arrack renting) ஒத்தது. ஒவ்வொரு பகுதியிலும் அபின் விற்கும் ஏகபோக உரிமை ஏலத்தில் விற்கப்பட்டது. அதிக தொகை கேட்டவருக்கு உரிமம். அவ்வளவு பணத்தைக் கொட்டி உரிமம் வாங்கியவர் அதனை மீட்டு இலாபம் பார்க்கவேண்டுமானால் புதிய வாடிக்கையாளர்களைப் பிடிக்கவேண்டும். கிராமத்து ஆண்களையும் பெண்களையும் இதுவரை அபினைத் தொடாதவர்களையும் வாடிக்கையாளர்களாக்குவதே அவரது தொழில் தர்க்கம். புதிய உரிமங்களுக்கான கோரிக்கை மக்களிடமிருந்து அல்ல, அபின் வாடகைக்காரர்களிடமிருந்தே வந்தது என்று குழு கண்டறிந்தது.

## முதல் அபின் கடை: சிலாபம், 1850:

1850-இல் தான் இலங்கையில் ‘அபின் கடை’ ஒன்று இருந்ததற்கான முதல் பதிவு கிடைக்கிறது. அது சிலாபத்தில் இருந்தது. யாருடைய அனுமதியுடன் அது திறக்கப்பட்டது என்று 1907 குழுவினாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. ஏறத்தாழ 1860-இல் அம்பாந்தோட்டையில் இரண்டாவது கடை திறக்கப்பட்டது. அபின் கடைகளைத் திறப்பதற்குச் சட்டபூர்வ அனுமதி வழங்கிய முதல் சட்டம் 1867-ஆம் ஆண்டின் 19-ஆம் இலக்க கட்டளைச் சட்டம். 1868-இல் கொழும்பில் 4 கடைகளும் கண்டியில் 4 கடைகளும் திறக்கப்பட்டன. 1890-இல் கடைகளின் எண்ணிக்கை 31. 1897-இல் 56. 1907-இல் 65. வடமத்திய மாகாணத்தில் முதல் கடை 1902-இல் திறக்கப்பட்டது. வடமாகாணத்தில் 1906-இல் திறக்கப்பட்டதாக அறிக்கை முதலில் குறிப்பிட்டபோதும், அது 1885-இலேயே திறக்கப்பட்டது என்று பின்னர் திருத்தப்பட்டது.

பேர்கியூசன் தசாப்தம் தசாப்தமாகத் தொகுத்த சராசரி ஆண்டு இறக்குமதி கடைகளுக்கும் நுகர்வுக்கும் இடையிலான உறவைத் தெளிவாகக் காட்டுகிறது. கடைகளே இல்லாத 1840 - 1850 காலத்தில் ஆண்டுக்குச் சராசரி 1,170 இறாத்தல். 1851 - 1860-இல் 5,693 இறாத்தல். 1871 - 1880-இல் 10,651 இறாத்தல். 1891 - 1900-இல் 15,373 இறாத்தல். 1901 - 1908-இல் 20,434 இறாத்தல். முதல் கடை திறந்து அரை நூற்றாண்டுக்குள் அபின் இறக்குமதி ஏறத்தாழ 17 மடங்கு உயர்ந்தது.

1893-இல் கிராமப்புற உரிமங்களால் அரசுக்குக் கிடைத்த வருமானம் 4,100 ரூபா. 1906-இல் அது 69,119 ரூபாவாக உயர்ந்தது. நகர சபைகளும் உள்ளூராட்சிச் சபைகளும் 1893-இல் 37,380 ரூபா பெற்றன. 1906-இல் அது 122,187 ரூபா. இறக்குமதியான 18,885 இறாத்தலுக்கு 2 ரூபா வீதம் சுங்கவரியாக 37,770 ரூபா பொது வருமானத்துக்குச் சென்றது. 1907-இல் சுங்கவரி இறாத்தலுக்கு 4 ரூபாவாக இரட்டிப்பாக்கப்பட்ட பின்னரும் ஏகபோக உரிமைக்கான ஏலத்தொகைகள் அதிகரித்தன. கடத்தல் அபின் பெருமளவில் புழங்குவதையே இது காட்டுவதாகக் குழு சந்தேகித்தது. 1870-இல் 11 கடைகள் இருந்தபோது இறக்குமதி 12,449 இறாத்தல். 1890-இல் கடைகள் 31-ஆக மூன்று மடங்கானபோதும் இறக்குமதி 12,807 இறாத்தல் மட்டுமே. அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கத் துறைமுகங்களில் அபின் கடத்தலைத் தடுக்கச் சிறப்பு அதிகாரிகள் இருந்தபோது, இலங்கைச் சுங்கத்தில் எந்த விசேட முன்னெச்சரிக்கையும் இருக்கவில்லை.

1906-இல் கணக்காய்வாளர் நாயகம் எப்.ஆர். எல்லிஸ் எழுதிய குறிப்பு அபின் வியாபாரத்தின் உள் செயற்பாடுகளை அம்பலப்படுத்துகிறது. இலங்கையின் முழு அபின் வியாபாரமும் ‘இரண்டு மூன்று சிறு கும்பல்களின்’ கைகளில் இருந்தது. ஒருவகை மாபியாவின் ஆளுகைக்குள் அது அகப்பட்டிருந்தது. இரண்டு மூன்று மொத்த வியாபாரிகளும் 20 - 30 சில்லறை வியாபாரிகளுமே முழு நாட்டுக்குமான விநியோகத்தைக் கட்டுப்படுத்தினர். எவ்வளவு கடத்தப்படுகிறது,



THE OPIUM BILL.

The Sub-Committee, having carefully revised the Draft Ordinance, suggest the amendments shown in the accompanying copy of the Bill.

2. The more important of the recommendations of the Sub-Committee are the following :—

(a) Provision has been made for allowing opium to be dispensed as a medicine, on the prescription of registered medical practitioners, by dispensers specially authorized for the purpose by the Principal Civil Medical Officer.

(b) Registered medical practitioners are allowed to dispense opium as a medicine, in the course of their practice, in quantities not exceeding the amount to be taken during forty-eight hours.

(c) Penalties are provided for registered medical practitioners who dispense opium without regard to these restrictions.

(d) More stringent penalties have been provided for the illegal importation, sale, and possession of opium.
of opium.

(e) The possession of hypodermic syringes is allowed on the certificate of a registered medical practitioner.

(f) The schedule of medicinal preparations has been amended so as to include chlorodyne and similar preparations.

3. The Sub-Committee have carefully considered the suggestion that provision should be made to enable practitioners of native medicine to dispense opium, but the Sub-Committee have been unable to devise any method of giving effect to this suggestion, which will not at the same time provide a ready means for evading the stringency of the Bill.

HUGH CLIFFORD.
ALFRED G, LASCELLES.
W. H. JACKSON.
W. M. ABDUL RAHIMAN.
J. FERGUSON.
A. KANAGASABAI.
(Subject to Rider.)
GILES F. WALKER.

Legislative Council Chamber,
Colombo, November 17, 1908.

என்ன விலைக்கு இறக்குமதியாகிறது, என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று அரசுக்கு எதுவுமே தெரியாது என்றும், அரசு இந்த வியாபாரம் பற்றி 'முழு அறியாமையில்' இருப்பதாகவும் அவர் எழுதினார். இலைகளால் ஆன கடினமான ஓட்டுக்குள் பாகு போன்ற திரவமாக, உருண்டைகளாக அபின் இறக்குமதியானது. சுங்கவரி கணக்கிடும்போது அந்த ஓட்டின் நிறைக்குக் கழிவு (tare) வழங்கப்பட்டது. அந்தக் கழிவு பல ஆண்டுகளாக அளக்கப்படாமல் 'மரபுவழி'யாகவே தீர்மானிக்கப்பட்டு வந்தது. ஓட்டின் தடிப்பை வியாபாரிகள் குறைத்திருந்தால் அரசு பல ஆண்டுகளாக ஏமாற்றப்பட்டிருக்கும். ஓட்டை அளந்துபார்க்கச் சுங்க அதிகாரி முயன்றபோது வியாபாரிகள் பலவாறு எதிர்ப்புக் காட்டினர். அபினை எடுத்தபின் அந்த ஓட்டை அவித்துத் தரங்குறைந்த அபின் தயாரிக்கப்பட்டதையும், சில்லறை வியாபாரிகள் தம்மிடமிருந்த முழுக் கையிருப்பையும்விட அதிகமாக விற்றதாகக் கணக்குகள் காட்டியதையும் எல்லிஸ் பதிவுசெய்தார். கடைக்குள்ளேயே அபினை உட்கொள்வதை அன்றைய விதிமுறைகள் தடைசெய்திருந்ததால், வாங்கியவர் அதனை வீட்டுக்குக் கொண்டுசென்றார். வீட்டில் குடும்பத்தவர்களும் அயலவர்களும் சுவைத்துப் பார்க்க அது வழிவகுத்தது என்றும் அவர் எச்சரித்தார்.

## 1893 மனு: சிங்களவரும் தமிழரும் ஒன்றாக:

அபின் கடைகளுக்கு எதிரான உள்நாட்டு எதிர்ப்பு 1893 டிசம்பரில் கொழும்பில் நடந்த பெரும் பொதுக்கூட்டத்துடன் ஒரு வடிவம் பெற்றது. அபின் விற்பனைக்குக் கட்டுப்பாடுகள் வேண்டி சட்டநிருபண சபைக்கு அனுப்பப்பட்ட மனுவில் 13,957 சிங்களவர்களும் 11,878 தமிழர்களும் 1,265 பறங்கியர்களும் 265 ஐரோப்பியர்களும் 465 ஏனையோரும் கையெழுத்திட்டனர். எழுதத் தெரிந்தவர்களின் கையெழுத்துகள் மட்டுமே பெறப்பட்டன. 1901-ஆம் ஆண்டின் நஞ்சுகள் கட்டளைச் சட்டம் அபினை நஞ்சுப் பட்டியலில் சேர்த்திருந்தபோதும், அபின் கடைகளுக்கென தனிச் சட்டம் இருந்ததால் அது மௌனமாக விலக்களிக்கப்பட்டிருந்தது. நஞ்சு என்று ஏற்றுக்கொண்ட ஒன்றையே அரசு உரிமம் கொடுத்து விற்றது.

இந்த மனுவின் பின் இரண்டு ஆண்டுகள் அரசு எதுவுமே செய்யவில்லை. 1897 நவம்பர் 15-இல் ஆளுநர் வெஸ்ட் ரிட்ஜ்வேயின் அரசு அபின் சுங்கவரியை 2 ரூபாவாக இரட்டிப்பாக்கியது. அதே சட்டம் பங் (bhang), கஞ்சா என்பவற்றின் இறக்குமதியை முற்றாகத் தடைசெய்தது. 1898 -இல் தெரிவுக்குழு புதிய உரிமங்களைக் கட்டுப்படுத்தப் பரிந்துரைத்தபோதும் 1898 ஓகஸ்டில் 56-ஆக இருந்த கடைகள் 1906 இறுதியில் 65-ஆகப் பெருகின. பௌத்த மகாநாயக்கர் ஹிக்கடுவே சிறீ சுமங்கல தேரரும் சட்ட நிருபண சபையின் சிங்களப் பிரதிநிதி எஸ்.சி. ஒபேசேகரவும் அபின் கடைகளை மூடும்படி கோரியிருந்தனர். பௌத்த மறுமலர்ச்சி, மதுவொழிப்பு இயக்கம் ஆகியவற்றுடன் இந்தக் கோரிக்கை இணைந்திருந்தது. ஆனால் 1893 மனுவில் சிங்களவருக்கு நிகராகத் தமிழர்களும் கையெழுத்திட்டிருந்தனர் என்பது இது ஒரு மதக் கோரிக்கையாக மட்டும் சுருங்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

## லண்டன் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி:

1907 ஏப்பிரல் 15-இல் பிரித்தானிய பொதுமக்கள் சபையில் கலாநிதி ரதபோர்ட் இலங்கை அபின் பற்றிக் கேள்வி எழுப்பினார். 1850-இல் 1,000 இறாத்தலாக இருந்த இறக்குமதி 1905-இல் 20,000 இறாத்தலாக எப்படி உயர்ந்தது என்று

> மாவட்ட அதிகாரிகள், மருத்துவர்கள், தோட்ட முகாமையாளர்களின் பதில்களின்படி அபின் பழக்கம் 'கீழ் வர்க்கங்களிலும் உழைக்கும் வர்க்கங்களிலும்' பரவியிருந்தது. சுமை தூக்கும் கூலிகள் உடல் வலியை மரக்கச் செய்வதற்காகவே அபின் உண்டனர்.

அவர் கேட்டார். குடியேற்ற நாடுகளுக்கான உதவிச் செயலாளராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் அந்த எண்களை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ தன்னால் முடியாது என்று பதிலளித்தார். பத்து நாட்களில் குடியேற்ற நாடுகளுக்கான செயலாளர் எல்ஜின் பிரபு ஆளுநர் ஹென்றி பிளேக்குக்கு எழுதிய கடிதத்தில் 'எப்போதும் அதிகரித்துச் செல்லும் அளவில் அபின் இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதை எப்படி நியாயப்படுத்த முடியும் என்று எனக்குப் புரியவில்லை' என்று குறிப்பிட்டார். 1907 ஜூன் 12-இல் பிரதான சிவில் மருத்துவ அதிகாரி அலன் பெரியின் தலைமையில் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. எஸ்.சி. ஒபேசேகர, எப்.சி. லூஸ், ஜோன் பேர்கியூசன், ஆர். மொரிசன் ஆகியோர் அதன் உறுப்பினர்கள். மொரிசன் இடையில் இறந்ததால் ஸ்டான்லி போயிஸ் நியமிக்கப்பட்டார். 3 மாதங்களில் அறிக்கை தரக் கேட்கப்பட்ட போதும், மாவட்டங்களிலிருந்து தரவுகள் வந்துசேரத் தாமதமானதால் 1907 டிசம்பர் 6-இல் தான் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

செயலாளர் எல்ஜின் பிரபு

## 19,847 அபின் அடிமைகள்:

முழு இலங்கையிலும் 19,847 பேர் அபினுக்கு அடிமையாகியிருந்ததாக அரச கணக்கெடுப்பு காட்டியது. கொழும்பு நகருக்கு 697 பேர் மட்டுமே காட்டப்பட்டது 'உண்மையைவிட மிகவும் குறைவு' என்று குழுவே குறிப்பிட்டது. களுத்துறை மாவட்டத்தில் 3,240 பேர். குருநாகல் மாவட்டத்தில் 2,186 பேர். காலி மாவட்டத்தில் 1,921 பேர். சிலாபம் மாவட்டத்தில் 1,325 பேர். ஆனால் நுவரெலியாவில் 13 பேர், திருகோணமலையில் 67 பேர், மட்டக்களப்பில் 378 பேர். முல்லைத்தீவு, தீவுப்பகுதி, மன்னார் ஆகியவற்றில் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்திலேயே இருந்தது. அபின் கடைகள் அதிகம் திறக்கப்பட்ட மேல், தென், வடமேல் மாகாணங்களின் கரையோரக் கிராமங்களிலேயே பழக்கம் குவிந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் அபின் உண்பது 'மிக அரிது' என்றும், 'யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளியாட்களே அபின் புகைக்கிறார்கள்' என்றும் 1909-இல் ஒரு யாழ்ப்பாண வைத்தியர் சாட்சியமளித்தார். அதேவேளை கல்முனையில் தமிழ், முஸ்லிம் கூலித் தொழிலாளர்கள் அபின், கஞ்சா, கசகசா விதை கலந்த தூள்களுக்கு அடிமையாகியிருந்தனர். 'அதிகரிப்பு முக்கியமாக ஏழைகள் மத்தியிலேயே நடக்கிறது' என்று அந்த அறிக்கை எச்சரித்தது. அங்கு உரிமம் பெற்ற கடை இல்லாததால் விற்பனை இரகசியமாக நடந்தது. காத்தான்குடியிலும் சட்டவிரோத விற்பனை இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன.

மாவட்ட அதிகாரிகள், மருத்துவர்கள், தோட்ட முகாமையாளர்களின் பதில்களின்படி அபின் பழக்கம் 'கீழ் வர்க்கங்களிலும் உழைக்கும் வர்க்கங்களிலும்' பரவியிருந்தது. சுமை தூக்கும் கூலிகள் உடல் வலியை மரக்கச் செய்வதற்காகவே அபின் உண்டனர். பங்களா வேலையாளாக இருந்த 38 வயது திடகாத்திரமான தமிழர் ஒருவர் இருமலும் கடும் பலவீனமுமாக உருக்குலைந்தவராக மாறினார். ஊர்த்தலைவராக இருந்த வசதியான சிங்களக் கிராமவாசி ஒருவர் தமது நிலத்தையும் வேலையையும் புறக்கணித்து மெலிந்துபோனார். 'இந்தப் போதை என்னைக் கொல்கிறது, ஆனால் அந்த ஆசையை என்னால் எதிர்க்கமுடியவில்லை' என்று அவர் ஒப்புக்கொண்டார். இருமலுக்காக அபின் பரிந்துரைக்கப்பட்ட தமிழ்த் தோட்டக்காரர் ஒருவர் இரண்டு ஆண்டுகளுக்குள் பரிதாபமாக இறந்தார். உணவுக்கே போதாத வருமானம் கொண்ட கூலியிடமிருந்து கலப்பட அபின் உணவையும் பறித்துக்கொண்டது. ஒருபக்கம் தோட்டப் பொருளாதாரம் கூலியின் உடலை உறிஞ்சியது. மறுபக்கம் அதே காலனித்துவ அரசு அந்த உடலின் வலியை மரக்கச் செய்யும் போதையை ஏலத்தில் விற்று வருமானம் ஈட்டியது.

## ஆளுநரின் இனவாதமும் வருமானக் கவலையும்:

1907 குழு உரிம முறையைக் கைவிடுவது, எல்லாக் கடைகளையும் மூடுவது, இறக்குமதியையும் விற்பனையையும் அரச ஏகபோகமாக்குவது, பதிவுசெய்த வயதுவந்த போதை அடிமைகளுக்கு மட்டும் அரச மருந்தகங்களில் அபின் வழங்குவது, காலப்போக்கில் மருத்துவத் தேவை தவிர்ந்த பாவனையை முற்றாகத் தடைசெய்வது ஆகிய பரிந்துரைகளை முன்வைத்தது. இதற்கு முன்மாதிரியாக ஜப்பானையும் அமெரிக்க ஆட்சியிலிருந்த பிலிப்பைன்ஸையும் குழு சுட்டிக்காட்டியது. 4 கோடி 70 இலட்சம் மக்கள்தொகையில் 80,000 சீனர்கள் வாழ்ந்தபோதும் ஜப்பான் மருத்துவத் தேவை தவிர்ந்த அபின் பாவனையைத் தடைசெய்து அதனைக் கண்டிப்பாக அமுல்படுத்தியது. இலங்கையில் அன்று 26 சீன ஆண்களும் 13 சீனப் பெண்களுமே இருந்தனர். ஆகவே 'சீனர்களின் பாரம்பரியப் பழக்கம்' என்ற சாக்கு இலங்கைக்குப் பொருந்தாது என்பது அக்குழுவின் வாதம். 1908 ஏப்பிரல் 14-இல் ஆளுநர் ஹென்றி மக்கலம் எல்ஜின் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில், குழுவின் சிவில் உறுப்பினர்கள் அனைவரும் அபினுக்கு எதிரான கடும் நிலைப்பாடு கொண்டவர்கள் என்பதால் அறிக்கையின் முடிவு 'முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது' என்று குறைப்பட்டார். மூத்த மருத்துவர்களின் சாட்சியங்கள் 'அச்சப்படுவதற்கு அதிக நியாயம் தரவில்லை' என்றும் எழுதினார். ஆயினும் பரிந்துரைகளை ஏற்பதற்கு அவர் முன்வைத்த காரணம் இது: 'பெரும்பாலான சீனர்கள் பெரிய தீய விளைவுகள் இன்றித் தொடர்ந்து அபின் உட்கொள்ளமுடியும். ஆனால்

நுகர்வோர் பழுப்பு இனங்களில் (brown races) ஒன்றைச் சேர்ந்தவரானால், அபின் பழக்கம் ஏறத்தாழ எப்போதும் அளவுமீறலுக்கும் உடல், ஒழுக்கச் சீரழிவுக்கும் இட்டுச்செல்கிறது.'

அரை நூற்றாண்டு காலம் அரசே கடைகளைத் திறந்து போதையை விற்ற வரலாறு ஆளுநருக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை. 'பழுப்பு இனங்களின்' உடலும் ஒழுக்கமும் பலவீனமானவை என்ற இனவாதக் கோட்பாடே சீர்திருத்தத் துக்கான நியாயமாக்கப்பட்டது. அதே கடிதத்தில் அவர் வருமான இழப்பு பற்றியும் கவலைப்பட்டார். நகரசபைகளுக்கு 1909-இல் 75 சதவீதமும் 1910-இல் 50 சதவீதமும் 1911-இல் 25 சதவீதமும் இழப்பீடு வழங்க அவர் முன்மொழிந்தார். அரச ஏகபோகம் வந்தால் மலிவான கடத்தல் அபினால் நுகர்வு உண்மையில் அதிகரிக்கலாம் என்றும் எச்சரித்தார். 1908 மே 13-இல் குரு பிரபு இதற்கு ஒப்புதல் வழங்கினார்.

### சட்டமூலம்: கனகசபையின் மாற்றுக் கருத்து:

1908 நவம்பர் 5-இல் சட்டநிரூபண சபை சட்டமூலத்தை ஆராய ஓர் உபகுழுவை நியமித்தது. குடியேற்றநாட்டுச் செயலாளர் ஹியூ கிளிபர்ட், சட்டமா அதிபர் ஏ.ஜி. லசெல்ஸ், பிரதான சுங்க அதிகாரி டபிள்யூ.எச். ஜக்சன் ஆகியோருடன் சிவில் உறுப்பினர்களாக டபிள்யூ.எம். அப்துல் ரஹ்மான், ஜோன் பேர்கியூசன், ஏ. கனகசபை, ஜெல்ஸ் வோக்கர் ஆகியோர் அதில் இடம்பெற்றனர். உபகுழு நவம்பர் 17-இல் சமர்ப்பித்த அறிக்கை சட்டமூலத்தின் முக்கிய திருத்தங்களைப் பட்டியலிடுகிறது. பதிவுசெய்த மருத்துவர்கள் 48 மணித்தியாலங்களுக்குத் தேவையான அளவுக்கு மேற்படாமல் அபினை மருந்தாக வழங்கலாம். சட்டவிரோத இறக்குமதி, விற்பனை, உடைமைக்குக் கடுமையான தண்டனைகள். மருத்துவச் சான்றிதழ் இருந்தால் மட்டுமே தோலடி ஊசி வைத்திருக்கலாம். வரம்புகளை மீறும் மருத்துவர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. குளோரோடைன் போன்ற அபின் கலந்த மருந்துகளும் கட்டுப்பாட்டுப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. ஆனால் சுதேச வைத்தியர்களுக்கு அபின் வழங்கும் கோரிக்கையை உபகுழு நிராகரித்தது.

இதற்கு எதிராக டபிள்யூ.எம். அப்துல் ரஹ்மானும் ஏ. கனகசபையும் 1908 நவம்பர் 18-இல் ஒரு மாற்றுக் குறிப்பை (rider) இணைத்தனர். சுதேச வைத்தியர் தமது பகுதியின் உள்ளூராட்சிச் சபைத் தலைவரிடம் விண்ணப்பித்து, சபையின் சுதேச உறுப்பினர்களின் ஆலோசனையுடன் சான்றிதழ் பெறலாம் என்று அவர்கள் முன்மொழிந்தனர். மருத்துவர்கள் வழங்கக்கூடிய அளவை 48 மணித்தியாலத்திலிருந்து 72 மணித்தியாலமாக உயர்த்தவேண்டும் என்றும் கோரினர். கிராமப்புற மக்களில் பெரும்பான்மையினருக்கு அன்று மேற்கத்திய மருத்துவம் கிட்டவில்லை. சுதேச மருத்துவ முறையை முற்றாகப் புறக்கணித்து மேற்கத்திய மருத்துவத்துக்கு மட்டும் அபின் உரிமையை வழங்கும் சட்டம் காலனித்துவ ஆதிக்க அதிகாரத்தின் இன்னொரு வடிவமாகவே இருந்திருக்கும். அதனை முதலில் சுட்டிக்காட்டியவர்கள் ஒரு தமிழ் உறுப்பினரும் ஒரு முஸ்லிம் உறுப்பினரும்.

அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்காக 1909 செப்ரெம்பர் 18-இல் சட்டமா அதிபர் லசெல்ஸ் தலைமையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. எஸ்.சி. ஒபேசேகர, கலாநிதி டபிள்யூ.ஜி. வான் டோர்ட், கலாநிதி எச்.எம். பேர்னாண்டோ, முன்னாள் அத்தபத்து முதலியார் சொலமன் செனவிரத்ன ஆகியோரும்

> **“910 அபின் கட்டளைச் சட்டத்துடன் அபின் கடை முறை முடிவுக்கு வந்தது. அரசு இறக்குமதியைத் தனதாக்கியது. போதை அடிமைகள் 'பதிவு செய்த நுகர்வோராக' அரச அதிகாரிகளிடம் குறிப்பிட்ட அளவு அபின் பெற்றனர். வெதராளைகள் பதிவுசெய்யப்பட்டனர். 1929-ஆம் ஆண்டின் 17-ஆம் இலக்க நஞ்சுகள், அபின், அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம் இந்த முறையை உள்வாங்கியது.”**

அதில் இருந்தனர். நாடெங்கும் 3,815 வெதராளைகள் தொழில்செய்தனர். அபின் ஒருபோதும் தனியாக வழங்கப்ப டுவதில்லை. மாத்திரைகள், தூள்கள், இலேகியங்களில் 100-இல் 1 முதல் 50-இல் 1 வரையான விகிதத்திலேயே அது கலக்கப்பட்டது. வயிற்றுளைவு, வயிற்றோட்டம், வாந்திபேதி, வாதம், நீரிழிவு ஆகிய நோய்களுக்கே அது பயன்பட்டது. நிறையின் அலகு 'கழஞ்சு'. ஓர் இறாத்தலுக்கு 96 கழஞ்சு. அதைவிடச் சிறிய அளவுகள் மஞ்சாடி விதைகளால் அளக் கப்பட்டன. அவர்கள் ஆண்டுக்குப் பயன்படுத்திய அபின் 'வியக்கத்தக்க அளவு குறைவு' என்றும், பெரும்பாலானவர் களுக்கு ஆண்டுக்கு 8 அவுன்ஸ் போதுமானது என்றும் ஆணைக்குழு கண்டது. வயிற்றுளைவு வைத்தியத்தில் பெயர் பெற்ற டி.பி. அத்திகலகூட ஆண்டுக்கு ஏறத்தாழ 2 இறாத் தல் மட்டுமே பாவித்தார். 1906-இல் இறக்குமதியான 18,885 இறாத்தலில் அரச மருத்துவமனைகளும் கொழும்பின் பெரிய மருந்து நிறுவனங்களும் பயன்படுத்தியது ஏறத்தாழ 411 இறாத்தல் மட்டுமே. இந்தியாவிலிருந்து உரிமம் பெற்ற வியா பாரிகளின் கூட்டுடன் அபின் கடத்தல் நடப்பதாகவும் ஆணைக் குழு பதிவுசெய்தது. கற்றாழை கலந்த அபினை வெதராளை களுக்கு வழங்கும் யோசனையையும் ஆணைக்குழு நிரா கரித்தது. நூல்களில் சொல்லப்பட்ட சூத்திரங்களிலிருந்து விலகாத வெதராளைகள் கலப்பட அபினை ஏற்கமாட்டார் கள், வற்புறுத்தினால் கடத்தல் அபினை நாடுவார்கள் என் பது அதன் காரணம். பெருங்காயத்தைக் கலக்கலாம் என்ற இன்னொரு யோசனைக்கு, அது சில தமிழ்க் கறிகளின் சேர்மானப் பொருளே என்று ஆணைக்குழு பதில் எழுதியது.

1910 அபின் கட்டளைச் சட்டத்துடன் அபின் கடை முறை முடிவுக்கு வந்தது. அரசு இறக்குமதியைத் தனதாக்கியது. போதை அடிமைகள் 'பதிவு செய்த நுகர்வோராக' அரச அதி காரிகளிடம் குறிப்பிட்ட அளவு அபின் பெற்றனர். வெதரா ளைகள் பதிவுசெய்யப்பட்டனர். 1929-ஆம் ஆண்டின் 17-ஆம் இலக்க நஞ்சுகள், அபின், அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம் இந்த முறையை உள்வாங்கியது. இன்றும் நடைமுறையிலுள்ள அந்தச் சட்டத்தில் 'பதிவுசெய்த நுகர் வோர்' என்பது 1910 அபின் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர் என்றே வரையறுக்கப்பட்டுள்ளது. 5 வாரத் தேவைக்கு மேல் வைத்திருக்கக்கூடாது, 6 மாதங்கள் தொடர்ந்து அபின் பெறாவிட்டால் பதிவு இரத்து, அபின் புகைப்பதற்கோ உண்பதற்கோ இடம் கொடுப்பது குற்றம் என்ற விதிகளும் அதில் உள்ளன. இறக்குமதியான அபின் மருதானையிலுள்ள அரச அபின் களஞ்சியத்துக்கே செல்ல வேண்டும் என்றும் அதன் ஒழுங்குவிதிகள் கூறுகின்றன. பதி வுசெய்த நுகர்வோர் காலப்போக்கில் இறந்து போக, புதிய வர்கள் பதிவுசெய்யப்படாமல் அந்த முறை இயல்பாகவே மறைந்தது. 1983-இல் வைத்தியர் சி.ஜி. உரகொட எழுதிய போது, போதை அடிமைகளுக்கு அபின் வழங்குவது முற் றாக நின்றுவிட்டிருந்தது. அனுமதிப்பத்திரம் பெற்ற ஆயுர் வேத வைத்தியர்களுக்கு மட்டுமே மாவட்ட மருத்துவமனை கள் ஊடாக அபின் வழங்கப்பட்டது. ஆண்டுக்குச் சராச ரியாக 150 கிலோகிராம் மட்டுமே இந்தியாவிலிருந்து இறக்கு மதியானது.

## இன்று இந்த ஆவணம் சொல்வது:

1908 அபின் சட்டமூல ஆவணங்கள் வெறும் சட்ட வரலாறு அல்ல. ஒரு அரசு தனது வருமானத்துக்காக மக்களின் உடல் களை எப்படிச் சந்தையாக்கியது என்பதன் பதிவு அது. 1850-க்கு முன் இலங்கைக் கிராமங்களில் அபின் பழக்கம் என்ற ஒன்று இருக்கவில்லை. அரசு கடைகளைத் திறந்தது. ஏகபோக உரிமைகளை ஏலத்தில் விற்றது. வாடகைக்கா ரர்கள் வாடிக்கையாளர்களை உருவாக்கினர். நகரசபைகள் அந்த வருமானத்தில் வாழப் பழகின. 57 ஆண்டுகளில் கிட் டத்தட்ட 20,000 அடிமைகள் உருவானார்கள். அவர்களில் பெரும்பாலானோர் கூலிகளும் விவசாயிகளும் ஏழைகளும். கடைகளை மூடுவதற்கு உள்நாட்டு மக்களின் 1893 மனு போதவில்லை. லண்டன் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழவேண்டியிருந்தது. அப்போதும் ஆளுநர் தேடிய நியாயம் 'பழுப்பு இனங்களின்' பலவீனம் என்ற இனவாதமே.

இன்னொரு பக்கம் இந்த ஆவணம் எதிர்ப்பின் வரலாற்றை யும் பதிவுசெய்கிறது. 1893-இல் சிங்களவரும் தமிழரும் ஒரே மனுவில் கையெழுத்திட்டனர். 1908-இல் கனகசபையும்

**மதுசாரம், போதைப்பொருள் தகவல் நிலையம் போன்ற அமைப்புகள் கஞ்சாக் கைத்தொழிலின் பின்னாலுள்ள வர்த்தக நலன்கள் பற்றியும் உள்நாட்டுப் பாவனை அதிகரிக்கும் அபாயம் பற்றியும் எச்சரிக்கின்றன. ஆதரவாளர்கள் மருத்துவப் பயன்பாடு, ஏற்றுமதி வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை முன்வைக்கின்றனர். ஏற்றுமதிக்கு மட்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், உள்நாட்டில் கஞ்சா வைத்திருப்பதும் பயிரிடுவதும் தொடர்ந்தும் குற்றமாகவே இருக்கிறது.**

அப்துல் ரஹ்மானும் சுதேச மருத்துவத்தின் உரிமைக்காக மாற்றுக் குறிப்பு எழுதினர். அந்தக் குரல்கள் இல்லாமல் 1910 சீர்திருத்தம் நடந்திருக்காது.

## அபினிலிருந்து கஞ்சாவுக்கு:

1897-இல் இறக்குமதியே தடைசெய்யப்பட்ட கஞ்சா இன்று சட்டபூர்வ ஏற்றுமதிப் பயிராக மாறும் நிலையில் இருக்கிறது. 1961-ஆம் ஆண்டின் 31-ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டம் ஆயுர்வேத வைத்தியர்கள் அபினையும் கஞ்சாவையும் மருந்துத் தயாரிப்புக்குப் பெற வழிசெய்கிறது. ஆனால் அரச ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் அந்தக் கஞ்சாவைப் பெரும்பாலும் பொலிஸ் கைப்பற்றல்களிலிருந்தே பெற்றுவருகிறது. ஏறத்தாழ 16,000 பதிவுசெய்த ஆயுர்வேத வைத்தியர்கள் இருக்கின்றனர்.

2023 வரவுசெலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுமதிக்கான கஞ்சா உற்பத்தி பற்றி ஆராய நிபுணர் குழுவை அறிவித்தார். இராஜாங்க அமைச்சர் டயனா கமகே கஞ்சாத் துறைக்கு 200 கோடி அமெரிக்க டொலர் முதலீடு வரும் என்று வாக்களித்தார். 2025 ஒகஸ்டில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 37 விண்ணப்பங்களிலிருந்து 7 வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏற்றுமதிக்காக மட்டும் கஞ்சா பயிரிட அனுமதி வழங்கியது. ஒவ்வொருவரும் குறைந்தது 50 இலட்சம் டொலர் முதலிடவேண்டும். 20 இலட்சம் டொலர் உத்தரவாதப் பணத்தை மத்திய வங்கியில் வைப்பிலிடவேண்டும். மீரிகமவில் முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான 64 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. உரிமம் 6 மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும். விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்படும். உள்நாட்டுச் சந்தைக்கு விதையோ இலையோ 'கசியக்கூடாது' என்று அரசு உறுதியளித்தது. அந்நியச் செலாவணி ஈட்டுவதே நோக்கம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

இந்த முடிவுக்கு எதிர்ப்பும் இருக்கிறது. மதுசாரம், போதைப் பொருள் தகவல் நிலையம் (ADIC) போன்ற அமைப்புகள் கஞ்சாக் கைத்தொழிலின் பின்னாலுள்ள வர்த்தக நலன்கள் பற்றியும் உள்நாட்டுப் பாவனை அதிகரிக்கும் அபாயம் பற்றியும் எச்சரிக்கின்றன. ஆதரவாளர்கள் மருத்துவப் பயன்பாடு, ஏற்றுமதி வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை முன்வைக்கின்றனர். ஏற்றுமதிக்கு மட்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், உள்நாட்டில் கஞ்சா வைத்திருப்பதும் பயிரிடுவதும் தொடர்ந்தும் குற்றமாகவே இருக்கிறது.

1908 ஆவணங்கள் இந்த விவாதத்துக்குச் சில கேள்விகளை முன்வைக்கின்றன. அன்று அபின் வருமானத்தில் வாழப் பழகிய காலனித்துவ அரசு போல, 2022 வங்குரோத்து நிலைக்குப் பின்னர் அந்நியச் செலாவணி தேடும் அரசு இன்று கஞ்சாவை நோக்குகிறது. அன்று ஏகபோக உரிமை சில கும்பல்களின் கைகளில் இருந்தது. இன்று 50 இலட்சம் டொலர் முதலிடக்கூடிய வெளிநாட்டு நிறுவனங்களுக்கே அனுமதி கிடைக்கிறது. அதேவேளை மொனராகலை, அம்பாறைக் காடுகளில் கஞ்சா பயிரிடும் ஏழை விவசாயி தொடர்ந்தும் குற்றவாளியாகவே நடத்தப்படுகிறான். 'கசிவு' பற்றிய அச்சமும் புதிதல்ல. உரிமம் பெற்ற வியாபாரிகளின் கூட்டுடனேயே கடத்தல் நடந்ததாக 1909 ஆணைக்குழு பதிவுசெய்திருந்தது. வெதராளைகளுக்கு முறையான வழங்கல் இல்லையென்றால் அவர்கள் சட்டவிரோதச் சந்தையை நாடுவார்கள் என்று அதே ஆணைக்குழு எச்சரித்தது. இன்றும் ஆயுர்வேத வைத்தியருக்குக் கிடைக்கும் கஞ்சா பொலிஸ் கைப்பற்றிய சரக்கே.

மறுபக்கம், 1910 சீர்திருத்தம் முழுத் தடையையல்ல, கட்டுப்படுத்தப்பட்ட பதிவு முறையையே தேர்ந்தெடுத்தது. போதை அடிமைகளைக் குற்றவாளிகளாக்காமல், மருத்துவத் தேவையை மறுக்காமல், புதிய நுகர்வோர் உருவாவதைத் தடுத்து, பல தசாப்தங்களில் அபின் பழக்கத்தை இல்லாமல் செய்தது. கஞ்சா பற்றிய இன்றைய விவாதம் வருமானத்தை மட்டுமன்றி அந்த அனுபவத்தையும் கணக்கில் எடுக்கவேண்டும். இலாபம் யாருக்குப் போகிறது, விலை கொடுப்பது யார், ஒழுங்குவிதிகளை யார் கண்காணிக்கிறார் என்ற கேள்விகளுக்கு 118 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த ஆவணங்கள் பதில் தேடத் தொடங்கியிருந்தன.

இன்று இலங்கையின் போதைப்பொருள் பிரச்சினை பற்றிப் பேசும்போது, அது 'சமூகச் சீரழிவு' என்றும் 'இளைஞர்களின் ஒழுக்கக்கேடு' என்றும் மட்டுமே பேசப்படுகிறது. ஆனால் போதையின் பின்னால் எப்போதும் ஒரு பொருளாதாரம் இருக்கிறது. இலாபம் பெறுபவர்களும் அதற்கான விலையைக் கொடுப்பவர்களும் வேறுவேறு வர்க்கங்கள். 118 ஆண்டுகளுக்கு முன் ஊருக்கு ஊர் திறக்கப்பட்ட அபின் கடைகளின் கதை சொல்லும் பாடம் அதுதான்.

sarawanan.n@thaiveedu.com

# அகத்தின் காலனித்துவமயமாக்கலும் 'மற்றமை'யின் அரசியலும்

– எ.ழக்கவி

## முன்னுரைக் குறிப்புகள்:

- காலனித்துவம் என்பது நிலத்தின் மீதான ஆக்கிரமிப்பு மட்டுமல்ல; அது காலனிப்படுத்தப்பட்டவரின் அறிவையும் மொழியையும் அகப்பரப்பையும் தாழ்த்திப் பார்க்கும் மேற்கத்திய மையவாதத்தின் உளவியல் வடிவமாகும்.
- 'மற்றமை' (Otherness) என்ற கருத்தாக்கத்தின் வழியே கிழக்கத்திய சமூகங்கள் எப்படி 'பின்தங்கியவை' அல்லது 'நாகரிக மற்றவை' எனத் திட்டமிட்டுச் சித்திரிக்கப் பட்டன?
- தமிழ்ச் சூழலில், மேற்கத்திய கல்வி முறைகளும் மதிப்பீடுகளும் நமது சொந்த மெய்யியல் பார்வைகளை எவ்வாறு அந்நியப்படுத்தின என்பதன் மீதான விமர்சனப் பார்வை.

காலனித்துவம் என்பது நிலப்பரப்புகளை ஆக்கிரமிப்பதும், பொருளாதார வளங்களைச் சுரண்டுவதும் மட்டுமல்ல; அது மனிதரின் ஆழ்மனம் மற்றும் சிந்தனை மரபுகளை அடிமைப்படுத்தும் ஒரு பன்முகச் செயல்முறையாகும். பௌதிகக் காலனித்துவம் முடிவுக்கு வந்த பிறகும், அது விட்டுச் செல்லும் 'அகத்தின் காலனித்துவமயமாக்கல்' (Colonization of the Consciousness) சமூகம் மீதான தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்துகிறது. இக்கட்டுரை, எட்வர்ட் செய்த்தின் (Edward Said) 'ஓரியண்டலிசம்' (Orientalism) மற்றும் 'மற்றமைப்படுத்துதல்' (Othering) கோட்பாடுகளின் துணையுடன், கிழக்கத்திய சமூகம் மற்றும் தமிழ்ச் சூழலில் அறிவுசார் காலனித்துவம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதை ஆராய்கிறது. மெக்காலே கல்வி முறை மற்றும் மேற்கத்திய மையவாதக் கண்ணோட்டங்கள் எவ்வாறு நமது தொன்மையான அறிவு முறைகளை 'மற்றமைப் படுத்தி' விளிம்பிற்குத் தள்ளின என்பதையும், அகவிடுதலையின் முதல் படியாக சுயத்தை மீட்டெடுப்பதன் அவசியத்தையும் இக்கட்டுரை விரிவாகப் பேசுகிறது.

## வெளிகளிலிருந்து அகங்களுக்கு நகரும் ஏகாதிபத்தியம்:

வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டும்போது, காலனித்துவம் என்பது நிலங்களை ஆக்கிரமிப்பதும், நாட்டின் இயற்கை வளங்களைச் சுரண்டுவதும், ராணுவப் பலத்தால் எல்லைகளை நிர்ணயிப்பதுமாக மட்டுமே ஆரம்பத்தில் கட்டமைக்கப்பட்டிருந்தது. ஆனால், பௌதிகக் காலனித்துவம் தனது இராணுவத் தளங்களை மூடிக்கொண்டு வெளியேறிய கணத்தோடு அதன் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிடுவதில்லை. மாறாக, அது விட்டுச் செல்லும் மிக ஆபத்தான மற்றும் அழியாத சுவடு மனிதரின் 'அகம்' (Consciousness) சார்ந்த அடிமைத்தனமாகும். இதுவே 'அகத்தின் காலனித்துவமயமாக்கல்' என்று அழைக்கப்படுகிறது.

ஒரு சமூகம் தனது தாய்மொழியிலிருந்தும், நிலம் சார்ந்த வரலாற்று நினைவுகளிலிருந்தும், பாரம்பரிய மெய்யியல் மரபுகளிலிருந்தும் அந்நியப்பட்டு, தன்னை ஒடுக்கியவரின் பார்வையிலிருந்தே (The Colonizer's Gaze) தன்னைத் தானே மதிப்பிடத் தொடங்கும் போதே, அந்த அக ஆக்கிரமிப்பு முழுமை பெறுகின்றது. காலனித்துவத்தின் இக்கடைசி ஆயுதம் மிக நுட்பமானதாகும். அது ஒடுக்கப்பட்ட சமூகத்தின் சிந்தனைக்குள் ஊடுருவி, அவர்களது சொந்த அடையாளத்தையே அவர்களுக்கு ஒரு வெட்கத்திற்குரிய விடயமாக மாற்றியமைக்கின்றது. இத்தகைய அகவயச் சிறையை உடைத்தெறிவதே பின்காலனியக் (Post-colonial) கோட்பாடுகளின் முதன்மையான கடமையாகும்.

## எட்வர்ட் செய்த்தின் 'ஓரியண்டலிசம்', 'மற்றமைப்படுத்துதல்':

அறிவுசார் காலனித்துவத்தின் வேர்களை அறுத்து ஆராயும்போது, எட்வர்ட் செய்த்தின் Orientalism கோட்பாடு மிக முக்கியமான திறவுகோலாக அமைகிறது. மேற்கு உலகமானது கிழக்கை (Orient) எப்படி எதிர்கொண்டது?

கிழக்கினை ஒரு பகுத்தறிவற்ற, நிலையற்ற, உணர்ச்சிவசப்படக்கூடிய, எப்போதும் மேற்கின் 'ரட்சிப்புக்கு' ஏங்கிக்கிடக்கும் ஒரு விசித்திரமான வெளியாகவும் சமூகமாகவும் மேற்கு கட்டமைத்தது.

இந்தக் கட்டமைப்பின் வழியாக கிழக்கு உலகம் ஒருபோதும் தன் சொந்தக் குரலில் பேச அனுமதிக்கப்படவில்லை; மாறாக, மேற்கின் சார்பாகப் பேசும் 'பேச்சாளர்கள்' மூலமாகவே அது வரையறுக்கப்பட்டது. இதுவே 'மற்றமைப்படுத்துதல்' என்ற கோட்பாடாகும்.

மேற்கே 'மையம்' (Centre) என்றும், கிழக்கே 'மற்றமை' அல்லது 'விளிம்பு' (The Other / Margin) என்றும் அதிகாரபூர்வமாகப் பிரிவினைகள் கோரப்பட்டன.

தமிழ்ச் சூழலில், நமது தொன்மையான அறிவு முறைகள், சித்த மருத்துவம், மெய்யியல் விவாதங்கள், மற்றும் உள்ளூர் மரபுசார் வடிவங்கள் எவ்வாறு காலாவதியானவை, மூடநம்பிக்கைகள் அல்லது 'பழைமைவாதமானவை' என்று திட்டமிட்டு ஓரம்கட்டப்பட்டன என்பதை சையத்தின் பார்வையில் நாம் பார்த்தாக வேண்டும். மேற்கத்திய அளவுகோல்களுக்குள் பொருந்தாதவை அனைத்தும் 'பிற்பட்டவை' முத்திரை குத்தப்பட்டதன் மூலமாக, தமிழரின் அகவெளியில் ஆழமான தாழ்வு மனப்பான்மை விதைக்கப்பட்டது.

## காலனித்துவக் கல்வி முறைமையும் சிந்தனை அடிமைத்தனமும்:

இந்த அக ஆக்கிரமிப்பைத் தடையின்றித் தொடர காலனித்துவ அரசுகள் கையில் எடுத்த மிகச்சிறந்த கருவி கல்வி முறைமையாகும். மெக்காலே பிரபுவால் தெற்காசியாவில் விதைக்கப்பட்ட கல்வி முறை அல்லது அதன் தொடர்ச்சியாக உருவான நவீன கல்வி நிறுவனங்கள், ஒரு சமூகத்தை அதன் வேர்களிலிருந்து அறுத்துத் தள்ளும் தொழிற்சாலைகளாகவே மாறின.

இந்தக் கல்வி முறை தமிழ்ச் சமூகத்திற்கு எதைக் கற்றுக்கொடுத்தது? தன் சொந்த மண்ணின் வரலாற்றை விட, ஐரோப்பிய வரலாற்றை உயர்வாக நினைக்கச் செய்தது. தன் தாய்மொழியில் சிந்திப்பதைக் காட்டிலும், அந்நிய மொழியில் சரளமாகப் பேசுவதே அறிவின் உச்சம் என்ற மாயையை உருவாக்கியது.

இதன் விளைவாக, கல்வி கற்ற ஒரு தமிழர் தன் சொந்த மக்களிடமிருந்தும், அவரது நிலத்தின் யதார்த்தங்களிலிருந்தும் விலகி, மேற்கத்திய சிந்தனைச் சட்டகத்திற்குள்ளேயே (Western Epistemological Framework) சிந்திக்கும் ஒரு 'கருஞ்சரும வெள்ளை முகமூடியாக' மாற்றப்பட்டார். அறிவின் மீதான இந்த ஏகாதிபத்திய ஆதிக்கம், நமது சிந்தனைத் திறனையே மழுங்கடித்து, நம்மை நமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக மாற்றியது.

## அகவிடுதலையின் முதல் படியும் சுயத்தின் மீட்சியும்:

காலனித்துவம் கட்டியெழுப்பிய இந்த மாபெரும் பேய்த்திரை விலகவேண்டுமென்றால், பௌதிக விடுதலையைவிட ஆழமான ஒரு ஆன்மீக மற்றும் அகவய விழிப்புணர்வு தேவைப்படுகிறது. தன்னை 'மற்றவராக' (The Other) அல்லது தாழ்ந்தவராகப் பார்க்கும் மேற்கின் பார்வையைத் தூக்கியெறிவதே அகவிடுதலையின் தொடக்கப் புள்ளியாகும்.

தன் சொந்த மொழியின் ஒலிகளிலும், சொற்களிலும் சிந்திக்கத் தொடங்குவது.

தனது நிலத்தின் துயரங்களையும், நினைவுகளையும், மெய்யியல் ஆழங்களையும் அந்நியக் கண்ணாடி வழியாகப் பாராமல், தன் சொந்தக் கண்களால் பார்ப்பது.

சுய அடையாளத்தை மீட்டெடுப்பதன் மூலமாக, அறிவுத்துறையில் அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்து ஒரு 'சுயாதீனமான மனிதரை' (De-colonized Subject) உருவாக்குவதே பிந்தையகாலச் சிந்தனையின் இறுதி இலக்காகும்.

காலனித்துவம் விட்டுச்சென்ற அறிவுசார் மற்றும் உளவியல் தடைகளை உடைத்தெறிவது தமிழ்ச் சமூகத்தின் தற்கால வரலாற்றுக் கடமையாகும். எட்வர்ட் செய்த்தின் வழியிலான அறிவுசார் விமர்சனமும், அகத்தின் சுயாட்சியை மீட்டெடுக்கும் மெய்யியல் தேடலும் இணைந்தால் மட்டுமே, உண்மையான பிந்தையகால விடுதலை சாத்தியமாகும். அந்நியக் கண்ணாடிகளைக் கழற்றிவிட்டு, தன் சொந்த மண்ணின் ஆன்மாவோடும் தாய்மொழியினோடும் தன்னைப் பிணைத்துக்கொள்ளும் போதே ஒரு சமூகம் தனது பூரண விடுதலையை எட்ட முடியும்.

eelakavi@thaiveedu.com



# திருகோணமலை மாநாடும்
## ஈழத்தமிழரின் அறவழிப் போராட்டக் கவிதைகளும்

- சி. ரமேஷ் -

1956-ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து, திருகோணமலையில் தமிழர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. திருகோணமலைப் பெரிய மைதானத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் சுமார் முப்பதாயிரம் தமிழ் மக்கள் திரண்டதாகக் குறிப்பிடப் படுகிறது. இம்மாநாட்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் பாதயாத்திரையும், மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குப் பாதயாத்திரையும் மேற்கொள்ளப் பட்டன. இவ்வாறு வடக்கு, கிழக்கு தமிழர்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட இப்பயணம், வெறுமனே ஒரு அரசியல் எதிர்ப்புப் பேரணியாக அல்லாமல், தமிழ்மொழி உரிமை, அரசியல் சமத்துவம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க அறவழிப் போராட்ட மாக அமைந்தது.

**திருகோணமலை நோக்கிய பாதயாத்திரையும் பண்டாரநாயக்காவின் நிலைப்பாடும்:**

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிய பாதயாத்திரை 11.08.1956 அன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்திலிருந்து தொடங் கியது. இதேவேளை, கிழக்கு மாகாணத் தமிழரசுக் கட்சியி னரின் திருகோணமலை நோக்கிய பாதயாத்திரை ஓகஸ்ட் மாதம் 13-ஆம் திகதி தென்கோடியில் அமைந்துள்ள திருக்கோவிலிலிருந்து புறப்பட்டது. அங்கிருந்து வந்த பாதயாத்திரைக் குழுவினருக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் செ. இராஜதுரையும் தலைமை தாங்கினர்.

பாதயாத்திரை தொடங்குவதற்கு முன்னர், செல்லையா இராஜதுரை தான் எழுதிய 'தீர்க்கத்தரிசி செல்வநாயகம்' என்னும் நூலை ஏலத்தில் விடப்போவதாக அறிவித்தார். அதன்படி, நூலின் ஆரம்ப ஏலவிலை ரூபா 5/- என நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இந்நூலை ஸி.எஸ். பூபால-ரத்தினம் ரூபா 105/-க்கு ஏலத்தில் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வு, பாதயாத்திரை ஓர் அரசியல் நடவடிக்கையாக மட்டுமன்றி, அதனுடன் தொடர்புடைய பொதுமக்களின் ஆர்வத்தையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் நிகழ் வாகவும் அமைந்தது.

இப்பாதயாத்திரையில் பங்கேற்ற எஸ்.ஜே.வி. செல்வ நாயகம், தமிழ்மொழியின் உரிமையை நிலைநாட்டு வதற்காகவே திருகோணமலை நோக்கிய இப்பயணத்தை மேற்கொண்டதாகத் தெரிவித்தார் என சுதந்திரன் (19.08.1956) செய்தி பதிவு செய்கிறது. தமிழ் மக்களின் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டமை, சிங்க ளத்தை மட்டும் அரசகரும மொழியாக்கியமை போன்ற அரசியல் அநீதிகளுக்கு எதிரான கண்டனத்தின் வெளிப் பாடாகவே இப்பாதயாத்திரை அமைந்தது. இதன் மூலம் மொழியுரிமைக் கோரிக்கை, தமிழர்களின் பரந்த அரசியல் உரிமைப் போராட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தமை புலப்படுகிறது.



prasadbatti@gmail.com

### பண்டாரநாயக்காவின் நிலைப்பாடு:

திருகோணமலை மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக, 09.08.1956 அன்று பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா திருகோணமலைக்கு விஜயம் செய்தார். அங்கு ஜயசுமணராம பௌத்த ஆலயத்தில் சிங்கள மக்களைச் சந்தித்து உரையாற்றியபோது, திருகோணமலையில் நடை பெறவிருந்த தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். அவரது உரை யில், மாநாட்டைத் தடைசெய்வதற்குப் பதிலாக அது நடைபெறுவதற்கு அரசாங்கம் அனுமதிப்பதாகவும், அதற்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

### அவரது உரையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன:

- ‘திருகோணமலையில் நடைபெறும் தமிழரசுக் கட்சி மாநாடு என்னுடைய அனுமதியுடனும் என்னுடைய பாதுகாப்புடனும் நடைபெறுகிறது.’
- திருகோணமலை மாநாட்டைத் தடை செய்வதற்காக இராணுவம் பலாத்காரத்தைப் பயன்படுத்தினால், ‘பண்டார நாயக்கா தமிழரைச் சுட்டுக் கொல்கிறான்’ என்றல்லவா சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் கூச்சலிடுவார்கள்.’
- ‘மாநாட்டைத் தடை செய்வது ஜனநாயகத்திற்கு முரணா னது. அவ்வாறு செய்தால் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதற்கு எதிர்க்கட்சியினருக்கு ஒரு வாய்ப்பளிப்ப தாகிவிடும்.’
- ‘நான் திருகோணமலை மாநாட்டிற்குத் தடை உத்தரவு போட்டால், அவ்வுத்தரவு பலிக்காது என்பது எனக்குத் தெரியும். என்னுடைய அதிகாரத்தை அலட்சியம் செய்து தமிழரசுக் கட்சியினர் எப்படியும் மாநாட்டை நடத்தித் தீர்வார்கள்.’
- ‘நான் தடையுத்தரவு போட்டிருந்தாலும் அது வெற்றியளித்திருக்காது. வவுனியாவிலும் மட்டக்கள ப்பிலும் இருந்து மக்கள் தடையை மீறி மாநாட்டிற்கு நிச்சயம் சென்றிருப்பார்கள். அவ்வளவு பேரையும் கட்டுப்படுத்துவதற்கு 20,000 படைவீரர்கள் என் கையில் இருந்தால்தான் முடிந்திருக்கும்.’

பண்டாரநாயக்காவின் இக்கூற்று, திருகோணமலை மாநாட்டின் பரவலான மக்கள் ஆதரவையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்து ள்ளது. குறிப்பாக, மாநாட்டைத் தடைசெய்வது ஜனநாயகத் துக்கு முரணானது என அவர் வெளிப்படையாகக் குறிப்பி ட்டதுடன், வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து பெருந் தொகையான மக்கள் திருகோணமலையை நோக்கி வருவதைத் தடுக்க முடியாத நிலையும் இருந்ததை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனால், திருகோணமலை மாநாடு தனியொரு கட்சியின் அரசியல் நிகழ்வாக மட்டும் அமையாமல், தமிழ்மொழி உரிமை மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பரந்த மக்களெழுச்சியின் வெளிப்பாடாக உருவெடுத்திருந்தமை தெளிவாகிறது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து மக்கள் ஒன்றிணைந்தமை, தமிழ் மக்களின் அரசியல் கோரிக் கைகள் பிராந்திய எல்லைகளைக் கடந்து ஒரு கூட்டு அரசியல் உணர்வாக உருவாகியிருந்ததையும் எடுத்துக் காட்டுகிறது.

மேலும், பண்டாரநாயக்காவின் உரையில் காணப்படும் ‘20,000 படைவீரர்கள்’ என்ற குறிப்பு, மாநாட்டைத் தடைசெய்யும் முயற்சி நடைமுறையில் எவ்வளவு கடின மானதாக இருந்திருக்கும் என்பதை அவர் உணர்ந் திருந்ததை வெளிப்படுத்துகிறது. அதேவேளை, மாநாட் டைத் தடைசெய்தால் அது அரசாங்கத்தின் மீது ஜனநாயக விரோதப் போக்குக்கான குற்றச்சாட்டை ஏற்படுத்தும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். எனவே, மாநாடு

நடைபெறுவதற்கு அனுமதியளித்தது ஒருபுறம் ஜனநாயக நடைமுறையைப் பேணும் முயற்சியாகவும், மறுபுறம் வளர்ந்து வந்த தமிழர் அரசியல் எதிர்ப்பை நிர்வகிக்கும் அரசியல் உத்தியாகவும் புரிந்துகொள்ள முடிகிறது.

இவ்வகையில், திருகோணமலை நோக்கிய பாதயாத்திரைகளும் மாநாடும் 1956-ஆம் ஆண்டில் ஈழத் தமிழர்களிடையே உருவாகியிருந்த மொழியுரிமை மற்றும் அரசியல் உரிமை உணர்வின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் மக்கள் திருகோணமலை நோக்கி மேற்கொண்ட பாதயாத்திரை, தமிழர் அரசியல் ஒற்றுமையின் குறியீடாகவும், அறவழிப் போராட்டத்தின் வலிமையான வெளிப்பாடாகவும் அமைந்தது. தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பாகப் பிரதமருக்குக் கடிதங்கள், தந்திகள், விண்ணப்பங்கள் எனப் பல்வேறு வழிகளில் முறையிடப்பட்டும் உரிய பயன் கிடைக்காத நிலையில், 1956-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இவ்வறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தின் உணர்வையும் நோக்கத்தையும் அக்காலக் கவிதைகள் சிறப்பாகப் பதிவு செய்தன. குறிப்பாக முருகையனின் ‘வாருங்கள் சட்டம் மறுக்க’, மாபாடியின் ‘எட்டி நடந்திடடா!’ ஆகிய கவிதைகள், பாதயாத்திரையின் அரசியல் நோக்கத்தையும் மக்களின் எழுச்சி மனநிலையையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இம்மாநாட்டை ஜி.ஜி. பொன்னம்பலம், சுந்தரலிங்கம், எதிர்மன்னசிங்கம் போன்ற தலைவர்கள் எதிர்த்த போதிலும், மாநாடு திட்டமிட்டபடி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் 1956-ஆம் ஆண்டில் தமிழர் அரசியல் உணர்வில் ஏற்பட்டிருந்த தீவிரத்தையும், மொழி யுரிமைக் கோரிக்கையை மக்கள் இயக்கமாக மாற்றியிருந்த சூழலையும் அறிந்துகொள்ள முடிகிறது.

## ‘வாருங்கள் சட்டம் மறுக்க’ எழுச்சிக்கான அறைகூவல்:

முருகையனின் ‘வாருங்கள் சட்டம் மறுக்க’ என்னும் கவிதை, திருகோணமலைப் பாதயாத்திரைக்கான ஓர் அறைகூவலாக அமைகிறது. தமிழ் அன்னையின் கால்களில் சங்கிலிகள் பூட்டப்பட்டு, அவளது உரிமைகளைப் பறிக்கும் வகையில் ஒன்றன்பின் ஒன்றாகச் சட்டங்கள் இயற்றப்படுவதை உருவகப்படுத்தும் கவிஞர், அவற்றை எதிர்த்து தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எழுச்சியுடன் போராட வேண்டும் என அழைப்பு விடுக்கிறார்.

*‘மற்றவர் தங்கள் மொழியை, எங்கள்*
*வாய்க்குட் திணித்து விழுங்கச் செய்தல்*
*முற்றும் முடியுமென் றெண்ணினாராம்!*
*மூளைப் பிசகன்று வாய்க்கொழுப்பு.*
*சற்றும் இவை அளியர் அவர்க்குச்*
*சாற்றி விழேர் குரல் ஒன்றிலே*
*வற்றி விட வில்லை எங்கள் மானம்*
*வாருங்கள் சட்டம் மறுக்க இன்றே!’*

இவ்வரிகளில் பிறமொழித் திணிப்புக்கு எதிரான மறுப்புணர்வு, இனமானப் பாதுகாப்பு, கூட்டுப் போராட்ட உணர்வு ஆகியவை ஒருங்கிணைந்து வெளிப்படுகின்றன. குறிப்பாக ‘வற்றிவிடவில்லை எங்கள் மானம்’ என்ற தொடரின் வழியாக, அரசியல் அடக்குமுறையால் தமிழர்களின் தன்மான உணர்வு அழிந்துவிடவில்லை என்பதைக் கவிஞர் வலியுறுத்துகிறார். எனவே, இக்கவிதை மொழியுரிமைப் போராட்டத்திற்கான கவிதை வடிவிலான அரசியல் அறைகூவலாகக் கருதத்தக்கது.

## ‘எட்டி நடந்திடடா!’ போராட்டத்தின் வீர உணர்வு:

தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் நோக்கில், திருகோணமலைப் பாதயாத்திரையின்போது ‘மாபாடி’யால் இயற்றப்பட்ட ‘எட்டி நடந்திடடா!’ என்னும் கவிதை, அக்காலத் தமிழரின் போராட்ட உணர்வைத் தீவிரமாக வெளிப்படுத்தும் படைப்பாகும். இயற்கையில் தோன்றும் பெருஞ்சீற்றத்தை அரசியல் சூழலுக்கான உருவகமாகக் கொண்டு கவிதை தொடங்குகிறது. வானில் மேகங்கள் இடித்து, மின்னல்கள் வாள்களைப் போல் சுழல, பெருமரங்கள் வளைந்து கொடுக்கும் காட்சிகள், தமிழ் மொழிக்கும் தமிழர் வாழ்வுக்கும் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடியை உணர்த்தும் குறியீடுகளாக அமைகின்றன.

*‘கொடியை உயர்த்திடு! குமுறும் உளத்தொரு*
*குரலை எழுப்பிடுவாய்!*
*கொலைவரு வித்திடு கருவிக ளுக்குமெம்*
*கொடு! சிறை வைத்திடுவோர்*
*தடிகொ டடித்திடு வரெனில் நகைத் திடு!*
*தரையில் உருட்டிடினும்,*

“ இயற்கையில் தோன்றும் பெருஞ்சீற்றத்தை அரசியல் சூழலுக்கான உருவகமாகக் கொண்டு கவிதை தொடங்குகிறது வானில் மேகங்கள் இடித்து, மின்னல்கள் வாள்களைப் போல் சுழல, பெருமரங்கள் வளைந்து கொடுக்கும் காட்சிகள், தமிழ் மொழிக்கும் தமிழர் வாழ்வுக்கும் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடியை உணர்த்தும் குறியீடுகளாக அமைகின்றன ”

*தமிழ்குழிவுற்றிடு தலைஅழிவுய்த்தவன*
*தளைஉடை பட்டகல*
*நடநட! வெற்றியுன் அடிதொட ரத்தகும்!*
*நகரடை நெடுநோடா!’*

வடிவப் புதுமையோடு எழுதப்பட்ட இக்கவிதையின் மையத்தில், அடக்குமுறைக்கு அஞ்சி பின்வாங்காமல் போராட்டத்தில் உறுதியாக நிற்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. சிறை, தாக்குதல், வன்முறை போன்ற அச்சுறுத்தல்களைக் கண்டு அஞ்சாது முன்னேறுமாறு கவிஞர் இளைஞர்களைத் தூண்டுகிறார். ‘இளம்புலியே’ என இளைஞர்களை அழைப்பதன் மூலம் அவர்களிடம் வீர உணர்வையும் போராட்டத் துணிவையும் உருவாக்குகிறார். வழியில் எதிர்ப்படும் தடைகளைச் சிறுநரிகளாக உருவகப் படுத்துவதன் மூலம், அச்சுறுத்தல்களால் தமிழர் போராட்டம் தளராது என்பதையும் வலியுறுத்துகிறார்.

அத்துடன், ஆறுகளை மறித்து அணைகள் கட்டி, வயல்வெளிகளை வளப்படுத்தி, மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய தாய்நிலமே தமிழர்களின் இலட்சியம் என்பதையும் கவிதை சுட்டுகிறது. இதனால் மொழியுரிமைப் போராட்டம் வெறும் மொழிசார் கோரிக்கையாக மட்டுமன்றி, நிலம், வாழ்வுரிமை, சமூகப் பாதுகாப்பு, அரசியல் உரிமை ஆகிய வற்றோடு இணைந்த ஒரு பரந்த விடுதலைக் கற்பனையாக இக்கவிதையில் விரிவடைகிறது.

இக்கவிதையின் வரலாற்றுப் பெறுமதி, 1956-ஆம் ஆண்டின் ஆரம்பகாலத் தமிழர் அறவழிப் போராட்டங்களின் உணர்ச்சியையும் அரசியல் கொந்தளிப்பையும் பதிவு செய்தி ருப்பதில் அமைந்துள்ளது. மொழிப்பற்றையும் தாய்நிலப் பற்றையும் ஒன்றிணைத்து, உரிமையிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களிடையே எழுச்சியையும் எதிர்ப்பு ணர்வையும் உருவாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. எனினும், இக்கவிதையைப் பிற்கால ஆயுதப் போராட்டங்களின் நேரடி முன்னோடியாகக் கருதுவதைவிட, பின்னாளில் வலுப்பெற்ற எதிர்ப்புக் கவிதை மரபின் தொடக்ககால வெளிப்பாடுகளில் ஒன்றாகக் காண்பதே வரலாற்றியல் நோக்கில் பொருத்த மானதாகும்.

## ‘திருமலைக்குரல்’ அரசியல் விழிப்புணர்வின் பாடல் வடிவம்:

09.09.1956 அன்று சுதந்திரன் பத்திரிகையில் தமிழரின் வரலாற்றுப் பதிவாக வெளிவந்த ‘திருமலைக்குரல்’ என்னும் பாடல் தொகுப்பு, திருகோணமலைப் போராட்டத்தின் அரசியல் உணர்வுகளை மக்களிடம் எடுத்துச் சென்ற முக்கியமான இலக்கிய முயற்சியாகும். இது ‘திருமலைக்கு அழைப்பு’, ‘தமிழன் சபதம்’, ‘காக்கை விடு தூது’, ‘இறைவணக்கம்’ ஆகிய பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

அறப்போராட்டக் காலத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இப்பாடல்கள் இயற்றப்பட்டன. அக்காலத்தில் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற திரைப்படப் பாடல்களின் மெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இப்பாடல்கள், எளிய மொழியிலும் பரிச்சயமான இசைநடையிலும் மக்களைச் சென்றடைந்தன. இதன் மூலம் மொழியுரிமை, கூட்டாட்சி, அறவழிப் போராட் டம் போன்ற அரசியல் கருத்துகள் பொதுமக்களின் அன்றாட உணர்வோடு இணைக்கப்பட்டன.

### திருமலைக்கு அழைப்பு:

‘திருமலைக்கு அழைப்பு’ என்னும் பாடல், தமிழர்களின் வீர வரலாற்றையும் அறப்போராட்ட மரபையும் நினைவூட்டி, திருகோணமலை நோக்கிய பாதயாத்திரையில் மக்கள் இணைந்துகொள்ளுமாறு அழைக்கிறது. சிங்கள மொழித் திணிப்பினால் தமிழ் மொழிக்கும் தமிழர்களின் இருப்புக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தலை எடுத்துரைக்கும் இப்பாடல், தமிழ ன்னையின் பெருமையைப் பாதுகாக்க இளைஞர்கள் துணிவுடன் எழ வேண்டும் என்ற உணர்வைத் தூண்டுகிறது.

### தமிழன் சபதம்:

இதனைத் தொடரும் ‘தமிழன் சபதம்’ என்னும் பாடல், தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் முன்னிறுத்தி, அதனைப் பாதுகாப் பதற்கான தமிழர்களின் உறுதியை வெளிப்படுத்துகிறது. சுயநல அரசியலால் தாய்மொழி பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும், மொழியின் உரிமையைப் பாதுகாக்கத் தியாக மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என்பதையும் இப்பாடல் வலியுறுத்துகிறது. இதனால் மொழிப்பற்று, இனமான உணர்வு, தற்காப்பு உணர்வு ஆகியவை ஒரே கருத்தியல் தளத்தில் இணைக்கப்படுகின்றன.

### காக்கை விடு தூது:

தமிழ் இலக்கியத்தின் மரபுவழித் ‘தூது’ வடிவத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ‘காக்கை விடு தூது’, அப் போதைய பிரதமர் பண்டார நாயக்காவிடம் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை எடுத்துரைக்குமாறு காக்கையைத் தூதுவனாக அனுப்புகிறது. திருகோணம லையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டிருக்கும் போராட்டச் சூழலை எடுத்துக்காட்டி, சிறுபான்மை

“ *சிறை, தாக்குதல், வன்முறை போன்ற அச்சுறுத்தல்களைக் கண்டு அஞ்சாது முன்னேறுமாறு கவிஞர் இளைஞர்களைத் தூண்டுகிறார். ‘இளம்புலியே’ என இளைஞர்களை அழைப்பதன் மூலம் அவர்களிடம் வீர உணர்வையும் போராட்டத் துணிவையும் உருவாக்குகிறார்.* ”

மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதன் விளைவுகள் சாதகமாக அமையாது என்பதையும் எச்சரிக்கிறது. அதே வேளை, நாட்டில் அமைதியும் சமத்துவமும் நிலவுவதற்கு கூட்டாட்சி ஆட்சி அவசியம் என்ற அரசியல் கோரிக்கையையும் முன்வைக்கிறது.

*‘பரந்த வானில் பறந்து செல்லும் காக்கையாரே*
*பண்டாவிடம் விரைந்து செல்வாய் - காக்கையாரே*
*நீயுமங்கு சென்றுவிட்டால் - காக்கையாரே*
*நீதி தன்னை எடுத்துரைப்பாய் - காக்கையாரே*

*பல சிறந்த குணம்படைத்து - காக்கையாரே*
*பார்த்து வாழச் சொல்லிவாராய் - காக்கையாரே*
*கூட்டு ஆட்சி தேவையென்று - காக்கையாரே*
*குரலெழுப்பிச் சொல்லி வாராய் - காக்கையாரே*

*திருமலையில் நீந்தமிழர் - காக்கையாரே*
*திரண்டார் என்று செப்பிவாராய் - காக்கையாரே*
*தீமை செய்தால் தீமையுண்டு - காக்கையாரே*
*தெளிவுடனே கூறிவாராய் - காக்கையாரே’*

இப்பாடலின் சிறப்பு, பாரம்பரியத் தூது இலக்கிய வடிவத்தைத் தற்கால அரசியல் தேவைக்குப் பயன்படுத்தியிருப்பதில் அமைந்துள்ளது. இலக்கிய மரபும் சமகால அரசியலும் இங்கு ஒன்றிணைகின்றன. காக்கை ஒரு தூதுவராக மட்டுமன்றி, தமிழர்களின் நியாயத்தை அதிகாரத் தரப்பிடம் எடுத்துச் செல்லும் குறியீடாகவும் அமைகிறது.

## இறைவணக்கம்:

‘திருமலைக்குரல்’ தொகுப்பின் இறுதிப் பகுதியாக அமையும் ‘இறைவணக்கம்’, பெரும்பான்மை அரசியலின் விளைவாகச் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் குறித்து இறைவனிடம் முறையிடுகிறது. அதிகாரப் பலத்தின் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் அரசியல் சூழல் மாறி, தமிழர்கள் அமைதியாகவும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய நிலை உருவாக வேண்டும் என்பதே இதன் அடிப்படைக் கோரிக்கையாக அமைகிறது. இதற்குக் கூட்டாட்சி ஆட்சி ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகிறது.

1956-ஆம் ஆண்டு திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மாநாடு, தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிரான தமிழர்களின் அரசியல் எதிர்ப்பில் ஒரு முக்கியமான நிகழ்வாக அமைந்தது. இம்மாநாடு மொழியுரிமையை மட்டும் முன்வைத்த ஒன்றாக அமையாமல், தமிழ் மக்களின் அரசியல் சமத்துவம், பிராந்திய உரிமை, கூட்டாட்சி, சுயநிர்ணய உரிமை ஆகிய பரந்த கோரிக்கைகளையும் வெளிப்படுத்தியது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து மக்கள் பாதயாத்திரையாகத் திரண்டு வந்து மாநாட்டில் பங்கேற்றமை, தமிழர்களிடையே உருவாகியிருந்த அரசியல் ஒற்றுமையையும் உரிமை உணர்வையும் வெளிப்படுத்தியது.

முருகையனின் ‘வாருங்கள் சட்டம் மறுக்க’ மக்கள் எழுச்சிக்கான அறைகூவலாகவும், மாபாடியின் ‘எட்டி நடந்திடடா!’ போராட்டத் துணிவையும் முன்னேற்ற உணர்வையும் ஊட்டும் கவிதையாகவும் அமைந்தன. ‘திருமலைக்குரல்’ பாடல்கள், எளிய மொழி, பரிச்சயமான இசைமெட்டு, மரபுவழி இலக்கிய வடிவங்கள் ஆகியவற்றின் துணையுடன் சிக்கலான அரசியல் கோரிக்கைகளைப் பொதுமக்களிடம் கொண்டு சென்றன. ‘ஈழத் தமிழர் இடர்’ வரலாற்றுணர்வையும் இன ஒற்றுமையையும் வலியுறுத்தியது. எனவே, திருகோணமலை மாநாட்டைச் சுற்றி உருவான இக்கவிதைகள் அரசியல் நிகழ்வுகளின் பிரதிபலிப்புகளாக மட்டுமன்றி, அந்நிகழ்வுகளை மக்களின் உணர்வாக மாற்றிய இலக்கிய ஊடகங்களாகவும் விளங்குகின்றன. மொழியுரிமை, தாய்நிலப் பற்று, அரசியல் சமத்துவம், கூட்டாட்சி, இன ஒற்றுமை, அறவழிப் போராட்டம் ஆகிய கருத்துகளை ஒருங்கிணைத்த இக்கவிதைகள், 1950-களின் ஈழத் தமிழரின் அரசியல் மனநிலையைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

எனினும், இம்மாநாட்டின் உடனடி அரசியல் விளைவாக தமிழர்களின் கோரிக்கைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தனிச் சிங்களச் சட்டத்தின் நடைமுறையால் உருவான மொழிசார் பாகுபாடுகளும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இனமோதல்களும் தமிழ் மக்களின் அரசியல் பாதுகாப்பின்மையை மேலும் தீவிரப்படுத்தின. இதனால், 1956-ஆம் ஆண்டின் திருகோணமலை மாநாடு ஒரு குறிப்பிட்ட அரசியல் கோரிக்கையின் முடிவைக் குறித்த நிகழ்வாக அல்லாமல், தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்ற தொடக்கப் புள்ளியாக முக்கியத்துவம் பெற்றது.

குறிப்பாக, அறவழிப் போராட்டத்தின் மூலம் தமது உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கையிலிருந்து, அரசியல் உரிமைகளுக் கான நீண்டகாலப் போராட்டத் தேவையை உணரும் நிலைக்கு தமிழ்ச் சமூகம் நகர்ந்தது. இதன் தொடர்ச்சியாக மொழியுரிமை, பிராந்தியத் தன்னாட்சி, கூட்டாட்சி, சுயநிர்ணயம் போன்ற கோரிக்கைகள் தமிழர் அரசியலில் மேலும் வலுப்பெற்றன. எனவே, திருகோணமலை மாநாட்டின் வரலாற்றுப் பெறுமதி அதன் உடனடி அரசியல் வெற்றியில் மட்டுமன்றி, ஈழத் தமிழர்களின் அரசியல் சிந்தனையையும் கூட்டு இனவுணர்வையும் வடிவமைத்த வரலாற்றுச் செயல்முறையில் அமைந்துள்ளது.

இவ்வகையில், திருகோணமலை மாநாடு 1956-ஆம் ஆண்டின் அரசியல் நிகழ்வாக மட்டும் நோக்கப்பட வேண்டியதல்ல. அது மொழி, நிலம், அரசியல் அதிகாரம், சமத்துவம், சுயநிர்ணயம் ஆகிய கேள்விகளை ஒருங்கிணைத்த தமிழர் அரசியல் வரலாற்றின் முக்கியமான கட்டமாகும். அதனைச் சுற்றி உருவான பாதயாத்திரைகள், மக்கள் ஒன்றுகூடல்கள், அரசியல் உரைகள் மற்றும் போராட்டக் கவிதைகள் அனைத்தும் இணைந்து, 1950-களில் உருவெடுத்த ஈழத் தமிழரின் உரிமை அரசியலுக்கு வலுவான வரலாற்று மற்றும் இலக்கிய அடித்தளத்தை அமைத்தன என்பதே இம்மாநாட்டின் மையப் பெறுபேறாகக் கொள்ளலாம்.



ramesh.s@thaiveedu.com

கிருங்கை சேதுபதி

# குவளைக்கண்ணன் கூட்டுவித்த அருளுறவு

இறைவன் தன் நெஞ்சுக்கு உகந்த அடியாரிடம் சொன்னாராம்: 'அருளால் எவையும் பார்.' என்று. அவரோ, அதனை அறியாதுவிட்டுவிட்டுத் தன் அறிவாலே பார்த்தா ராம்; விளைவு, 'இருளான பொருளைக் கண்டது அல்லால் கண்ட தன்னையும் காணாது' போக்கியதாய்ப் புலம்புகின் றார். அவர் சொல்லும் அறிவு பேரறிவாகிய மெய்யறிவு இல்லை; உலகியல் சார்ந்த சிற்றறிவு.

***அருளால் எவையும்பார் என்றான் - அத்தை***
***அறி யாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்***
***இருளான பொருள் கண்ட தல்லால் - கண்ட***
***என்னையும் கண்டிலன் என்னேடி தோழி***

*ஆனந்தக் களிப்பு - 13*

என்று அனுபவம் புலப்படப் பாடிய அவர் சராசரி மனிதர் அல்லர்; 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் தெய்வ அருட்கருணைசெய்யாய் பராபரமே' என்று இறை வனை வேண்டியதோடு, 'அன்பர் பணிசெய்யஎனை ஆளாக் கிவிட்டுவிட்டால், இன்பநிலைதானே வந்துஎய்தும்' என்றும் உலகிற்கு உறுதி கூறியவர்; ஆணாய்ப் பிறந்தாலும் அனைத்துயிரும் தன்னுயிர் போல் பேணும் தாயுமானவர்.

இருளானது தன்னைக் காண்பவரையும் மறைக்கும் தன்மை யது. அறிவானது குறைபாடுடையது. அருள் மட்டும்தான் அனைத்திலும் நிறைவுடையது. அதனை அன்பு பெற் றெடுத்த குழந்தை என்கிற திருக்குறள், அன்பை, அகத்து உறுப்பு என்றும் தெளிவுறுத்துகிறது. அடைக்கும் தாழ் அன்புக்கு இல்லை. அன்பின் பெருக்கானது பிறர் துன்பம் கண்டு பொறாது கண்ணீர் வடிக்கும். நெஞ்சில் ஈரம் இருந் தால்தான் விழியில் நீர் சுரக்கும். அருளுடைமை என்றே தனி அதிகாரம் படைக்கிறார் திருவள்ளுவர். அதற்கு, 'அரு ளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை' என்று விளக்கம் கொடுக்கிறார் மணக்குடவர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிட வைப்பது அருள். அத்தகையோரை அருளாளர்கள் என்று உலகு போற்று கிறது. 'அன்பே சிவம்' என்பதை அறிவால் அல்ல, உணர் வால் உள்வாங்கிக் கொண்டு செயலால் சிறந்தவர்கள் அவர்கள்.

அந்த வரிசையில் பாரதிக்குக் குருவாய் வந்தவர்தான் கோவிந்தசாமி. அவர் சொல்கிறார்:

***ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;***
***எப்போதும்அருளை மனத்(து) இசைத்துக் கொள்வாய்;***

மனம் நினைக்குந் தொழிலை உடையது. அருளை நினைப் பது போதாது; இசைக்க வேண்டுமாம். இது பாரதி கூற்று. இசை எப்போது வரும்? மனம் இசைந்தால்தான் வரும். எதனோடும் ஒத்திசைவு கொள்ளவில்லை எனில், மனம்

ஏற்காது; மறுதலிக்கும். ஒப்புக்குச் செயல்படும் மனதால் ஒரு பயனும் இல்லை. ஒத்து இசைந்து ஒழுகினால்தான் உறு பயன் கிட்டும். எனவே, சிவனைக் காணவேண்டும் எனில், எப் தும் மனமானது அருளை இசைத்துக்கொண்டே இருக்க வேண்டுமாம். அருள்வடிவான இறைவன் ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவன்; அவன் ஓசை ஒலியெலாம் ஆனவனும் அல்லவா ?

ஈரம் சரி. அடுத்துவரும் தொடரில் வீரம் வருகிறது. வீரம் என்பது ஈரத்தின் முதிர்ச்சி. ஈரமில்லாத வீரம் இயற்கைக்கு முரணானது; அறத்துக்கு அடுக்காதது. எளிவந்த கருணை யாளரான இறைவனுக்கு அது கருதியே அத்தனை ஆயுதங் களை நம்முன்னோர் உடன் அமைத்துக் காட்டியிருக்கிறார் கள். சிவனுக்கும் சக்திக்கும் சூலம் எதற்கு? முருகனுக்கு வேலும், கணபதிக்கு பாச, அங்குசமும் எதற்கு ? பத்து அவ தாரங்கள் எடுத்த பரந்தாமனுக்குச் சங்கும் சக்கரமும் ஏன்? ஆபத்தில் இருந்து காப்பது அருளின் மற்றொரு பரிமாணம். ‘அறத்துக்கே அன்பு சார்பு என்பவர் அறிவிலார்’ என்று துணிந்து சொல்கிற திருக்குறள், ‘மறத்துக்கும் அஃதே துணை’ என்கிறது.

ஈரமில்லா வீரம் கோழைத்தனம். வீரமில்லாத ஈரம் போலித் தனம். ஈரமும் வீரமும் மனத்தின் இருபக்கங்கள். இறைநெறி காட்டிய அருளாளர்கள் அனைவரும் எல்லாவித இன்னல்க ளையும் உறுதி கொண்டு எதிர்த்தார்கள்; நன்மைகொண்டு வரப் போராடினார்கள். அவர்களின் நெஞ்சங்களில் இறை வன் வீரத்தின் பேருருவாய்த் திகழ்ந்திருக்கிறான். அத்தகு வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்; காணவேண்டும் என்று கருதினாயானால், ‘எப்போதும் வீரமிக்க வினைகள் செய்வாய்’ என்று கட்டளையிடுகிறார் கோவிந்தசாமி. இதில், ‘வீரமிக்க செயல்கள் செய்வாய்’ என்பது குருவின் வாசகம்; ‘எப்போதும்’ என்பது கவியின் வாசகம். ‘வீர சுதந்திரம் வேண்டி நின்றவர்’ அவர். வேறொன்றும் கொள்வாரோ ?

இத்தகு ஈரமும் வீரமும் கொண்ட நெஞ்சம் பரந்தபான்மையு டையது; குறுகிய மதச் சட்டகங்களுக்குள் பரம்பொருளை அடக்க ஒப்பாதது.

***பேர்உயர்ந்த ஏஹோவா அல்லா நாமம்***
***பேணும்அவர் பதமலரும் பேணல் வேண்டும்***

(64)

என்று குருவின் வாசகத்தைக் கொண்டு பாரதி பாடுகிறார். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாவை, பேர் உயர்ந்த ஏஹோவாவை மட்டும் அல்ல, அத்தகு திருநாமங்களைப் பேணித் துதிக்கிற அடியார்களின் பாத மலர்களையும் பேணவேண்டும் என்பது உபதேசம். ஏன் ?

மேல் விளக்கம் தருகிற அற்புதப் பாடல்கள் இரண்டும் அடுத்து வருகின்றன.

இவை, உலகளாவிய நிலையில் அருள் உணர்த்தும் பாடல் கள். அருளால், இறைவனை அணுகும் மரபுபேணும் பாடல் கள்; பிடிவாதமாகப் பேதம் வளர்ப்பவர்களுக்கு மத்தியில் அனைத்து மதங்களுக்கும் அடிநாதமாக விளங்கும் உண் மையை உரத்து ஒலிக்கும் பாடல்கள். இவற்றைப் பரந்த மனதோடும் விரிந்த பார்வையுடனும் அணுக வேண்டும். விசா லப் பார்வையால் விளங்கிக் கொள்ள வேண்டிய கொள்கை விளக்கப் பாடல்கள் இவை.

***பூமியிலே, கண்டம்ஐந்து, மதங்கள் கோடி!***
***புத்த மதம், சமண மதம், பார்ஸி மார்க்கம்***
***சாமி என யேசு பதம் போற்றும் மார்க்கம்,***
***ஸநாதன மாம் ஹிந்து மதம், இஸ்லாம், யூதம்,***
***நாமம்உயர் சீனத்துத் ‘தாவு’ மார்க்கம்,***
***நல்ல ‘கண்பூசி’ மத முதலாப் பார்மேல்***
***யாம்அறிந்த மதங்கள் பல உளவாம்அன்றே;***

***(65)***

இந்த ‘யாம்’ குருநாதர் கோவிந்தசாமியும், சீடர் பாரதியும் ஒன் றிணைந்த ‘யாம்’. அடுத்துவரும் அடியை மனம் கொள்ளு மாறு பிடித்துவைத்துக் கொண்டால், இந்த யாமில் நாமும் இணைந்துகொள்ள முடியும். அதுவே நம்மை இணைத்துக் கொண்டும் விடும்.

இந்தப் பாடலில் சொல்லப்பட்ட மதங்கள் யாவினுக்கும் உள் புதைந்த கருத்(து)இங் குஒன்றே.

அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்கிற அனுபவம் மிக்க அருள் தொடர் இது.

இம்மதங்கள் பற்பல; மார்க்கமும் வெவ்வேறு. இவை புறத் தோற்றங்கள். அவற்றுக்கு உள்ளே புதைந்திருக்கிற கருத்து ஒன்றே ஒன்றுதான். அதனை, ‘உள் புதைந்த கருத்து’ என்று உரத்துச் சொல்கிறார்கள் குருவும் சீடரும். அங்கங்கே வேறு வேறாகத் தெரிந்தாலும், விளங்கிக் கொள்ளப்பட்டாலும், இந் தியாவில் - தமிழ்கூறு நல்லுலகத்தில், ‘ஒன்றே’ என்பதற்கு முன் ‘இங்கு’ என்ற சொல்லை இடுகிறது, பாரதியின் கவியுளம்.

அணி செய் காவியம் பல கற்று, அவற்றுள் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணத் தெரிந்தவர் பாரதி. அதுபோல், பணிந்தி ருந்து பக்தி நெறிநின்று ஒழுகிப் பெற்ற அனுபவத்தில் திளைத்தவர் கோவிந்தசாமி. அதனால்தான், இருவரும் ஒரே குரலில்,

***பூமியிலே வழங்கி வரும் மதத்துக் கெல்லாம்***
***பொருளினை நாம்இங்(கு)எடுத்துப் புகலக் கேளாய்;***
***என்று நம்மை நோக்கி உபதேசிக்கிறார்கள்.***
***சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே;***
***தத்வமஸி; தத்வமஸி; நீயே அஃதாம்;***
***பூமியிலே நீ கடவுள்இல்லைஎன்று***
***புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை;***
***சாமி நீ அம் மாயை தன்னை நீக்கி***
***ஸதாகாலம் 'சிவோஹ'ம்என்று ஸாதிப்பாயே***

***(66)***

தத்துவச் செறிவும் தனித்துவ எளிமையும் கொண்டு சாமானிய மனிதரும் உணர்ந்து கடைப்பிடிக்கும் சமய ஒழுக்கத்தைத் தமிழுக்கு வழங்கிய சிறப்பு, இந்தப் பாடலுக்கு உண்டு.

இந்தப் பாடல், பாரதி பாடியது என்றாலும், இது கோவிந்தசாமி கூற்றாக வெளிவந்தது. இதற்கான ரிஷி மூலம் வங்காளத்தில் இருக்கிறது. இராமகிருஷ்ண பரமஹம்சர் அனுபவித்துப் பெற்ற அறம்சார் ஆன்மிக உபதேசத்தின் மற்றொரு வடிவம் இது.

புதுவையில் பாரதியைச் சந்தித்து ஆட்கொண்ட குருநாதர் கோவிந்தசாமிக்கும் வங்காளத்துத் தட்சிணேஸ்வரத்திற்கும் தொடர்பிருக்கிறது. இந்த முக்கூட்டுப் பரிமாணத்தின் வெளிப்பாடுதான் முன் சொன்ன பாடல்கள்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். பாரதியைப் பற்றித் தெரிந்த நம்மில் பலருக்கு இந்தக் கோவிந்தசாமி யார் என்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இருவரையும் கூட்டுவித்த குவளைக் கண்ணன் சொல்கின்றார்:

கோவிந்தஸ்வாமி புதுச்சேரியிலே பிறந்தவர்; யாதவ குலத்தினர்; அவருடைய சகோதரர் தளவாய் லக்ஷ்மண பிள்ளையென்பவர் போலீஸில் உயர்ந்த உத்தியோகம் பார்த்து வந்தார். கோவிந்தஸ்வாமி வடநாட்டு யாத்திரை செய்தவர்; ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் இருந்துவந்த தக்ஷிணேசுவரர் கோயிலில் பலகாலம் இருந்தார். பிறகு அங்கிருந்து சந்தனநகர் (Chandernagore) முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டுப் புதுச்சேரிக்கே வந்து சேர்ந்தார்.

புதுச்சேரியில் கரடிக்குப்பத்துக்குப் (இப்போது அதன் பெயர் கருவடிக்குப்பம்) போகும் வழியில் ஓர் இடம் உண்டு. அங்கே தனிமை ஆட்சி புரிந்தது. அவ்விடத்திலே ஒரு குளமும் அதன் கரையிலே பரதேசிகள் தங்குவதற்குரிய அன்னக்காவடி மடம் ஒன்றும் இருக்கின்றன. சித்தானந்த ஸ்வாமி கோயில் என்ற ஆலயம் ஒன்றும் இருக்கிறது. அதைத் தான் பாரதியார் 'சித்தாந்தசாமி திருக்கோயில்' என்று பாடியிருக்கிறார்.

அன்னக்காவடி மடத்திலே ஒரு பரதேசி ஊருக்குள்ளே காவடி எடுத்துச் சென்று அன்னப் பிக்ஷை வாங்கிக்கொணர்ந்து மடத்திலேயுள்ள பரதேசிகளுக்கு இட்டுவந்தார். அந்த மடத்திலே தான் கோவிந்தஸ்வாமி தங்கியிருந்தார்.

எனக்குப் பரதேசிகளென்றால் பைத்தியம் அதிகம். எவ்வளவோ துறவிகளை என்னுடைய இளமை தொடங்கிப் பார்த்து அவர்களோடு பழகியிருக்கிறேன். அவர்களுக்குள் கோவிந்தஸ்வாமியும் ஒருவர். நான் அவரோடு ஸம்பாஷிக்கும் காலங்களில் பாரதியாரைப் பற்றிப் பேசுவேன். அவர் சக்திவெறிபிடித்தவர் என்பதைச் சொன்னேன் 'அப்படிப்பட்டவரைப் பார்க்கவேண்டும்' என்று அவர் சொன்னார்.

'மாலை வேளைகளில் இந்த இடத்துக்கு அவர் வருவார். அப்போது பார்க்கலாம்' என்று நான் சொல்லியிருந்தேன்.

இப்படி, குவளைக்கண்ணன் கூறியதன் தொடர்ச்சியாகத்தான், பாரதி - கோவிந்தசாமி சந்திப்பு நிகழ்ந்தது. அதன் நீட்சியாகத்தான் அன்னாரின் சித்தாற்றலைப் பற்றி, பாரதி நன்கு அறிந்துகொண்டு அவரைக் குருவாக ஏற்றுக்கொள்கிறார். அதற்கு முன்னதாகவே, அருட்சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்து, உபதேசமும் ஆசியும் பெற்று, அவரைக் குருநாதராக ஏற்றுக் கொண்டவர் பாரதி. அவர்தம் குருவான சுவாமி விவேகானந்தர் பற்றியும், அவருக்கும் குருநாதரான ஸ்ரீ ராமகிருஷ்ணர் பற்றியும் விரிவாக அறிந்திருந்தவர் பாரதி. அவர்கள் குறித்துத் தம் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பதிவிட்டும் இருக்கிறார்.

அவற்றின் பிழிவாகவும் தெளிவாகவும் கோவிந்தசாமி கூறிய கருத்துரை, காலம் கருதி பாரதியின் பாடலாக, பாரதி அறுபத்தாறில் உருப்பெற்றிருக்கின்றது. இதற்குப் பின்னர் அவர் மேலும் பாட என்ன நினைத்திருந்தாரோ, தெரியவில்லை. அதுபோல், இவ்வுபதேசத்தை நல்கிய கோவிந்தசாமியும் என்னவானார் என்பதும் தெரியவில்லை.

'கோவிந்தசாமி சித்தர் புதுவையில் 1918 வரை நடமாடி வந்திருப்பதற்கான தடயங்கள் தெரியவருகிறது. பின்னர் அவர் எங்கு சென்றார், என்ன ஆனார் என்று எவருக்கும் தெரியவில்லை. இந்தப் புதுச்சேரிச் சித்தரைப் பற்றி பாரதியார் கவிதைகளில் மட்டுமே அறிய முடிகின்றது' என்று இவர் குறித்து எழுதி முடிக்கிறார் சி.எஸ். முருகேசன். (பாரதி கண்ட சித்தர்கள் - 2000)

ஒருவேளை, குவளைக் கண்ணன் வாழ்கிற காலத்தில் அவரிடம் கேட்டிருந்தால் சொல்லியிருப்பாரோ என்னவோ? காரணம் அவர்தானே பாரதியையும் கோவிந்தசாமியையும் கூட்டுவித்தவர். இப்படி, கோவிந்தசாமி, குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்துச்சாமி ஆகிய சித்தமார்க்கச் சாமிகளைப் பற்றிப் பாடிய 'பாரதி அறுபத்தாறி'ல், குவளைக் கண்ணனையும் பாரதி இணைத்துப் பாடியதற்குக் காரணம் இருக்குமே? தேடிக் கண்டடைய வேண்டிய தேவை இருக்கிறது.

sethupathi@thaiveedu.com

**“ பழியை நீக்கிக்கொள்வதற்காக இறக்கக் கருதுகின்றவனுக்கு அதனால் மேலும் பழிவிளையுமே அல்லாது பழிநீங்காது. ஏற்பட்ட இடருக்காக, பழிக்காக மனம் சோர்ந்து இறப்பதைவிட அதற்காகப் போராடினால் ஒருவேளை இடர் நீங்கலாம், பழி தீரலாம் என்ற உளவியல் கருத்தைக் கம்பர் இச்செய்யுளில் இலக்குவன் வாயிலாக எமக்கு எடுத்துரைக்கின்றார். ”**

சென்ற மாத இதழில் கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தின் ஒன்பதாவது படலமாகிய அயோமுகிப் படலத் தின் இறுதிப்பகுதி எடுத்து வரப்பட்டது. அதில், அயோமுகி யால் தூக்கிச் செல்லப்பட்ட இலக்குமணன் அவளிடமிருந்து விடுபட்டுவந்த செய்திகளைக் கம்பனின் கவி நயத்தோடு சுவைத்து மகிழ்ந்தோம். இவ்விதழில் ஆரணியகாண்டத்தின் 10-ஆவது படலமாகிய கவந்தப் படலமும், 11-ஆவதும் இறு திப் படலமுமாகிய சவரிபிறப்பு நீங்குபடலமும் எடுத்துவரப் படுகின்றன.

கவந்தப் படலம் சில பிரதிகளில் கவந்தன் வதைப்படலம் என்றும், கவந்தன் படலம் என்றும் காணப்படுகின்றது. அயோ முகியின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர் இராம இலக்கு மணர்கள் தொடர்ந்து சீதையைத் தேடிச் செல்கின்றார்கள்.

***நிலம்பொறையிலதெனநிமிர்ந்தகற்பினாள்***
***நலம்பொறை கூர்தருமயிலைநாடியே***
***அலம்புறுபறவையுமழுவவாமெனப்***
***புலம்புறுவிடியலிற் கடிதுபோயினர்***

*கம்ப. ஆரணிய.1138*

நிலம்பொறைஇலதுஎன - நிலவுலகம் கூடப் பொறுமை இல் லாதது என்று சொல்லும் வண்ணம், நிமிர்ந்தகற்பினாள் - உயர்ந்த கற்பினையுடையவளும், பொறைநலம் கூர்தரு - பொறுமைக் குணம் மிகுந்திருக்கின்றவளும், மயிலைநாடியே - மயில் போன்ற சாயலை உடையவளுமான சீதையைத் தேடி, அலம்புஉறுபறவையும் அழுவம்ஆமென - இவர்களைப் பார்த்து இரக்கம் கொண்டு பறவை இனங்களும் அழுது, புலம்புறு விடியலிற் கடிதுபோயினர் - புலம்பி ஒலி செய்கின்ற விடிகா லையில் விரைந்து செல்கின்றனர்.

விடிகாலையிலே பறவைகள் கூவி ஒலிப்பது இயல்பாக நிகழ் வது. ஆனால் அப்பறவைகள், துயரத்தோடு செல்கின்ற இராம இலக்குமணர்கள் இருவரையும் பார்த்து இரங்கி அழுகின் றன என்பதாகக் கம்பர் கூறியுள்ளது தற்குறிப்பேற்ற அணிநய மாகும். அகழ்வாரைத் தாங்கும் நிலம்கூட நடுக்கம்கொண்டு நிலை குலைவதும், எரிமலையாய் வெடித்துச் சிதறுவதும் உண்டு. ஆனால் சீதையின் பொறுமையோ ஒருபோதும் தளம் புவதில்லை எனக் குறிக்க, நிலம்பொறை இலது என நிமிர்ந்த கற்பினாள் எனக் கூறும் கம்பரின் கருத்துச் சிறப்பையும் இச் செய்யுளில் காண்கின்றோம்.

அவர்கள் அவ்வாறு செல்லும் வழியில், கவந்தன் என்பவன் வாழுகின்ற காட்டுப் பகுதியை அடைகின்றார்கள். முனிவர் ஒருவரின் சாபத்தினால் கவந்தன் தனது தலையை வயிற் றினுள் அமையப் பெற்றவன். எறும்பு முதல் யானை ஈறாகக் கிடைக்கின்ற அத்துணை உயிரினங்களையும் தனது வயிற் றுக்குள் போட்டு உண்டு அழிக்கக்கூடியவன். அத்தகைய கவந்தனின் கைகளில் இராம இலக்குமணர்கள் அகப்படுகின் றார்கள். அவர்களை அவனது கைகள் சூழ்ந்தபோது அரக்கர் சேனை தம்மைச் சூழ்ந்து கொண்டதாக அவர்கள் எண்ணுகி றார்கள்.

***தேமொழிதிறத்தினாலரக்கன் சேனைவந்து***
***ஏமுறவளைந்ததென் றுவகையெய்தினர்***
***நேமிமால் வரைவரநெருக்குகின்றதே***
***ஆமெனலாயகைம் மதிட்குளாயினர்***

*கம்ப. ஆரணிய. 1144*

அரக்கன் சேனைவந்து - இராவணனுடைய சேனையானது வந்து, ஏமுறவளைந்தது என்று - தம்மைச் சுற்றிவளைத்துக் கொண்டது என்று, நேமிமால் வரைவரநெருக்குகின்றதே ஆம் எனல் - சக்கரவாளம் என்னும் பெரிய மலையொன்று வரவரத் தம்மை நெருக்குகின்றது என்று சொல்லும்படியாக, ஆயகை மதிட்குள் ஆயினர் - கவந்தனின் கைகளாகிய மதிலுக்குள் சிக்கிய இருவரும், தேமொழிதிறத்தினால் - தேன் போன்ற இனிய பேச்சையுடைய சீதையின் நிமித்தமாக, உவகை எய்தினர்- மகிழ்ச்சிகொண்டார்கள், கவந்தனது கைகளிரண்டும் அவர் களைச் சுற்றிவளைக்க அரக்கர் படைவந்து தம்மை வளைத்

துக் கொண்டன என்று எண்ணிக்கொண்ட இராம இலக்குமணர் அதற்காக வருந்தாமல், சீதை இருக்குமிடத்துக்கு வந்து விட்டோம், அவளை மீட்டுவிடலாம் என்று களிப்படைகிறார்கள் என்பதாகக் கம்பர் சித்திரிக்கின்றார். சக்கரவாள மலை என்பது உலகத்தைச் சூழ்ந்துள்ள கடலைச் சுற்றிலும் எல்லையாக வட்டமாக மதில்போல அமைந்துள்ள பெரியமலை எனப் புராணங்களில் சொல்லப்படுகின்றது. அதனைக் கவந்தனின் கைகளுக்குக் கம்பர் உருவகப்படுத்தியுள்ளார்.

முரசொலி, சங்கொலி போன்றவை ஒலிக்காமையால் அது அரக்கர் படையில்லை என இலக்குமணன் தெளிந்துகொள்கிறான். பெரிய நாகமொன்று வாலோடு தலைசேரத் தம்மை வளைத்துக்கொண்டதோ என்று ஐயுறுகிறான். இருவரும் தம்மை விடுவித்துக்கொண்டு சிறிது தூரம் உள்ளே சென்று மலை நின்றதுபோலக் காணப்பட்ட கவுந்தனின் எதிரே நிற்கிறார்கள். அப்போது அவர்கள் கண்ட கவுந்தனின் தோற்றத்தைக் கம்பர் 9 செய்யுள்களிலே வருணிக்கின்றார். இரண்டு சூரியன்களை மேருமால் வரையில் பதித்துவைத்தாற் போல கொதிக்கும் கண்களோடு வயிற்றின் நடுவில் உள்ள கடல் போலும் பெரிய வாயையுடையவனுமாக அவன் தோற்றமளித்தான். மந்தர மலையைக் கடைவதற்குக் கயிறாகக் கொண்ட வாசுகிப் பாம்பின் இரு பகுதிகளும்போல அவனது கைகள் காணப்பட்டன.

***வெய்யவெங் கதிர்களைவிழுங்கும் வெவ்வராச்***
***செய்தொழிலிலைதுயில் செவியின் றொள்ளையான்***
***பொய்கிளர் வன்மையிற் புரியும் புன்மையோர்***
***வைகுறுநரகையும்நகும்வயிற்றினான்***

*கம்ப. ஆரணிய. 1154*

வெய்யவெங்கதிர்களை விழுங்கும் வெவ்வரா - வெவ்வியதும், வெம்மையானதுமான ஒளிவீசும் சூரிய சந்திரர்களை விழுங்கும் கொடிய இராகு கேது ஆகிய பாம்புகள், செய்தொழில் இலை - செய்யும் தொழில் இல்லாமல், துயில் செவியின் தொள்ளையான் - தூங்குதற்குரிய காதுகளின் பெரிய தொளைகளை உடையவனும், பொய்கிளர் வன்மையிற் புரியும் புன்மையோர் - மிக்க கொடுமையினால் பொய் முதலிய பாவங்களைச் செய்கின்ற அற்ப குணமுடையவர்கள், வைகுறுநரகையும் - போய்த் தங்குகின்ற நரகத்தையும், நகும்வயிற்றினான் - தனக்கு ஒப்பாகாது என்று நகைக்கும்படியான கொடு வயிற்றையுடையவன் என கவந்தனை கம்பர் வருணிக்கின்றார்.

பொய் போன்ற பாவங்களைச் செய்யும் உயிர்கள் நரகத்தில் விழுந்து வருந்துதலிலும், இவனுடைய வயிற்றில் உயிரோடு விழுங்கப்பட்ட உயிர்கள் தவிக்கின்றன என்பது கம்பரின் வருணனை. சந்திர சூரியர்களையும் விழுங்க வல்லவன் என்பதைக் குறிக்க, இராகு கேதுக்களுக்கே செய்தொழில் இல்லாமல், பெரும் பிலம் போன்ற இவனது செவித் துளைகளுக்குள் அவை கிடந்து தூங்குகின்றன என்னும் கம்பரின் கற்பனை வளத்தை இச்செய்யுளில் காண்கிறோம்.

சிகரத்தை இழந்த மேருமலை போன்று தலை வயிற்றுக்குள் அமிழ்ந்துபோயிருக்கின்ற கவந்தனை இராம இலக்குமணர்கள் காண்கிறார்கள்.

***நீர்புகுநெடுங்கடலடங்குநேமிசூழ்***
***பார்புகுநெடும்பகுவாயைப் பார்த்தனர்***
***சூர்புக லரியதோரரக்கர் தொன்மதில்***
***ஊர்புகுவாயிலோவிதுவென் றெண்ணினார்***

*கம்ப. ஆரணிய. 1158*

நீர்புகுநெடுங்கடல் அடங்கு - பேராறுகள் வந்து விழப்பெறுகின்ற பெரிய கடல்கள் சூழப்பெற்ற, நேமிசூழ் - சக்ரவாளமலையினால் சூழப்பெற்ற, பார்புகு - இந்தப் பூமியே நுழையும் படியான, பகுநெடும் வாயைப் பார்த்தனர் - நீண்ட பிளந்த அவனது வாயை இருவரும் பார்த்தார்கள். சூர்புக லரியது - தேவர்களாலும் உட்செல்ல முடியாத, ஓர் அரக்கர் தொன்மதில் - அரக்கர்களின் ஒரு பெரிய மதில் சூழ்ந்த, ஊர்புகு வாயிலோ இது என்று எண்ணினார் - அவர்களின் ஊருக்குள் புகுவதற்காக அமைக்கப்பட்ட வாசலோ இது என்று எண்ணினார்கள் என்பது பொருள். கடலடங்கும் நேமி சூழ் பாரும் புக வல்லவாய் என்றும், சூர்புகல் அரியதோர் அரக்கர் தொன்மதில் ஊர்புகுவாயிலென்றும், கவுந்தனுடைய வாயைப் பார்த்து இருவரும் வியந்து நின்றதைத் தொடர்ப்பு உயர்வுநவிற்சியணியில் கம்பர் வருணித்திருக்கின்ற நயத்தைக் காண்கின்றோம்.

தாங்கள் பார்ப்பது, கிடைக்கக்கூடிய எல்லாவற்றையும் விழுங்க வல்லதான பூதமோ என்று எண்ணி இராமன் இலக்குமண னைப் பார்த்து மன முடைந்து சிலவற்றைக் கூறுகின்றான்.

***தோகையும் பிரிந்தனளெந்தைதுஞ்சினான்***
***வேகவெம் பழிசுமந் துழல வேண்டலேன்***
***ஆகலின் யானினியிதனுக் காமிடம்***
***ஏகுதியீண்டுநின் றிளவலேயென்றான்***

*கம்ப. ஆரணிய. 1161*

தோகையும் பிரிந்தனள் - மயில் போன்ற சாயலையுடைய சீதையும் பிரிந்து போய்விட்டாள், எந்தைதுஞ்சினான் - அவளது நிமித்தமாகப் போரிட்டு எமது தந்தை போன்ற சடாயுவும் இறந்து போய்விட்டான். வேகவெம் பழிசுமந்து உழல வேண்ட லேன் - இவ்வாறு மனம் அழியும்படி கொடுமையான பழியைச் சுமந்து அலைவதற்கு நான் விரும்பவில்லை. ஆகலின் யான் இனி இதனுக்கு ஆம் இடம் - ஆதலினால் இப்பொழுதே நான் இந்தப் பூதத்திற்கு இரையாகிப் போகின்றேன். ஏகுதிஈண்டு நின்று இளவலே என்றான் - இளையவனே நீ இங்கிருந்து தப்பி ஊருக்கு மீண்டு செல்வாயாக என்று இராமன் இலக்கு வனிடம் கூறுகின்றான்.

இளவலே! சீதையையும் மாற்றான் கவர்ந்து சென்றுவிட்டான். அவளை மீட்க முயன்ற தந்தையாகிய சடாயுவும் இறந்துவிட் டார். ஏற்பட்ட இந்தப் பெரும் பழிகளைத் தாங்கிக்கொண்டு இவ்வுலகில் அலைந்து வாழ விரும்பவில்லை. ஆகவே இப் பூதத்திற்கு நான் உணவாவேன். நீ ஊருக்குத் திரும்பிச் சென்றுவிடு என்று இராமன் சொல்ல. உனக்குப் பணிசெய்ய வந்து, நீ இடர்ப்படும்வேளையில் உன்னை விட்டுச் செல்வது அறமாகாது என்று இலக்குவன் பலவாறு மறுத்துரைக்கின்றான்.

***கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணார் கிளர்போரில்***
***தோட்டார் கோதைச் சோர்குழல் தன்னைத் துவளாமல்***
***மீட்டானென்னும் பேரிசைகொள்ளான் செருவெல்ல***
***மாட்டான் மாண்டானென்றபின் மேலும் வசையுண்டோ***

*கம்ப. ஆரணிய. 1171*

கேட்டார் கொள்ளார் - இச்செயலைக் கேட்டவர்கள் அதனைச் சரியானதென்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், கண்டவர் பேணார் - இதைப் பார்த்தவர்கள் விரும்பமாட்டார்கள், தோட்டார் கோதைச் சோர்குழல் தன்னை - இதழ்கள் நிறைந்த பூமாலை யைச் சூடிய தாழ்ந்த கூந்தலையுடைய சீதையை, துவளாமல் - வருந்தவிடாமல், கிளர்போரில் மீட்டான் என்னும் - எழுந்த போரிலே மீட்டுக்கொண்டான் என்று சொல்லத்தக்க, பேரிசை கொள்ளான் - பெரும்புகழைப் பெறமாட்டாதவன், செருவெல் லமாட்டான் - போரிலே வெல்ல முடியாதவன், மாண்டான் என்றபின் மேலும் வசையுண்டோ - இறந்தான் என்று சொல் லப்பெற்ற பின்னால் அதனினும் வேறுபழி இருக்கிறதா? என்று இலக்குவன் இராமனிடம் கேட்கின்றான்.

பழியை நீக்கிக்கொள்வதற்காக இறக்கக் கருதுகின்றவனுக்கு அதனால் மேலும் பழி விளையுமே அல்லாது பழி நீங்காது. ஏற்பட்ட இடருக்காக, பழிக்காக மனம் சோர்ந்து இறப்பதை விட அதற்காகப் போராடி இறந்தால்கூட ஒருவேளை இடர் நீங்கலாம், பழி தீரலாம் என்ற உளவியல் கருத்தைக் கம்பர் இச்செய்யுளில் இலக்குவன் வாயிலாக எமக்கு எடுத்துரைக் கின்றார்.

இலக்குவனின் அறிவுறுத்தலோடு கவந்தனை நோக்கி முன்னே செல்கின்றார்கள். கவந்தன் அவர்களைப் பார்த்து, ‘நீங்கள் வீரர்களாய் இருந்தும் தீவினையால் என் கையில் அகப்பட் டுக் கொண்டீர்களே! நீங்கள் யார்?’ எனக்கேட்டு அவர்களைப் பிடித்து விழுங்கச் சென்றவனின் வலது தோளை இராமனும், இடது தோளை இலக்குவனும் வெட்டி வீழ்த்துகின்றார்கள். இரு தோள்களும் வெட்டி வீழ்த்தப்பட்ட நிலையில், கவந்தன் தனது கொடூரமான தோற்றம் மாறி நல்வடிவத்துடன் வான்வெ ளியில் தோன்றுகிறான். அப்போது அவன் இராமனைத் திரு மாலாக நோக்கித் துதிப்பதைப் பல செய்யுள்களிலே கம்பர் தருகின்றார்.

tg.theeban@gmail.com

***காண்பார்க்குங் காணப் படுபொருட்கும் கண்ணாகிப்***
***பூண்பாய்போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்***
***மாண்பாலுலகைவயிற்றொளித்துவாங்குதியால்***
***ஆண்பாலோபெண்பாலோஅப்பாலோஎப்பாலோ?***

*கம்ப. ஆரணிய. 1181*

காண்பார்க்கும் - உலகத்தில் காண்கின்றவர்களுக்கும், காணப் படுபொருட்கும் - காணப்படுகின்ற பொருள்களுக் கும், கண்ணாகி - கண்ணைப் போல ஆதாரமாக இருந்து, பூண்பாய்போல் நிற்றியால் - எல்லாப் பொருள்களிடத்தும் பற் றுள்ளவன் போல் தோன்றுகின்றாய் என்றாலும், யாதொன்றும் பூணாதாய் - அவற்றிடமிருந்து யாதொரு நன்மை தீமையை யும் பெறுகின்றாயில்லை, மாண்பால் உலகை - மிகுந்த சிறந்த குணத்தினால் இந்த உலகத்தை, வயிற்றுஒளித்துவாங் குதியால் - பிரளயகாலத்தில் உனது வயிற்றில் அடக்கி அழிந் துவிடாதபடி வைத்திருந்து அப்பிரளயம் நீங்கியவுடனே வெளிப் படுத்தினாய், ஆண்பாலோபெண்பாலோஅப்பாலோஎப்பாலோ - அதனாலே நீ ஆணா, பெண்ணா, ஆண் பெண் இரண்டுமற் றவனா, அல்லது வேறுபகுப்பிற் சேர்ந்தவனா என்று வியந்து துதிக்கின்றான்.

எப்போதும் இயங்கு திணைப்பொருள், நிலைத்திணைப்பொருள் ஆகிய எல்லாப் பொருள்களிடத்தும் எள்ளினுள் என்னை யைப் போலத் பொருந்தியிருக்கும் இறைவனான இவன் ஆண், பெண், மற்றும் இரண்டுமற்ற தன்மையும் இல்லாதவனாக வேறு எப்பகுப்பு உடையவனோ என்று கேட்பதாகப் பாடியி ருக்கின்றார். இவ்வாறு வானவெளியில் தனது இயல்பான தோற்றத்தோடு நின்று வணங்கிய கவந்தனை இராமன் பார்த்து நீ யாரென்று வினவுகிறான்.

***சந்தப்பூ ணலங்கல் வீரதனுவெனுநாமத் தேனோர்***
***கந்தர்ப்பன் சாபத் தாலிக் கடைப்படுபிறவிகண்டேன்***
***வந்துற்றீர் மலர்க்கைதீண்டமுன்னுடைவடிவம் பெற்றேன்***
***எந்தைக்குமெந்தைநீரேயிசைப்பதுகேண்மினென்றான்***

*கம்ப. ஆரணிய. 1190*

சந்தம்பூண் அலங்கல் வீர - அழகிய அணிகலன்களையும், மாலையையும் அணிந்த வீரனே! தனுஎனும் நாமத்தோன் ஓர் கந்தர்ப்பன் - நான் தனு என்னும் பெயரையுடைய ஒரு கந்தர் வனாவேன், சாபத்தால் இக்கடைப்படுபிறவிகண்டேன் - தூல சிரசு என்னும் முனிவனது சாபத்தால் இந்த இழிந்த பிறப்பை அடைந்தேன், வந்துற்றீர் மலர்க்கைதீண்ட - இங்கு வந்த டைந்த உங்களது தாமரை மலர்கள் போன்ற கைகள் தீண் டிய மாத்திரத்தில், முன்னுடை வடிவம் பெற்றேன் - என்னு டைய முன்னைய வடிவத்தைப் பெற்றேன். எந்தைக்கும் எந்தை நீரே இசைப்பது கேண்மின் என்றான் - எனது தந்தைக்குத் தந்தை போன்றவர்களாகிய நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள் என்கிறான்.

முதல் நூலான வான்மீகத்தில் கவந்தன் சாபம் பெற்ற கதை சொல்லப்படுகிறது. அழகிய வடிவமுடைய இவன் கோரமான வடிவத்தைக் கொண்டு பலரையும் அச்சுறுத்தி வருகையில் தூலசிரசு என்னும் முனிவர் உணவுக்காக வைத்திருந்தகாய் கிழங்குகளைக் கவர்ந்து சென்றான். முனிவர் அதனால் சின மடைந்து அவனுக்கு இந்தக் கோர உருவமே என்றுமே நிலைக் கக் கடவது என்று சாபமிட்டார். பின்னர் அவன் அவரிடம் இரந்து கெஞ்சிக்கேட்டபோது, இராமபிரான் வந்து அவனது கைகளைத் துணிக்கும்போது அவனது நல்லுருவம் மீண்டும் கிடைக்கும் என்று சாபவிமோசனம் அருளினார். பின்னர் அவன் கடுந்தவம் செய்து நீண்ட வாழ்நாளைப் பெற்று, அத னால் ஏற்பட்ட செருக்கினால் இந்திரனை எதிர்க்க. அவன் தனது வச்சிரப்படையால் கைகளை வயிற்றுக்குள்ளும் தலையை மார்புக்குள்ளும் அழுத்தித் தள்ளிவிட்டதால் இந்த உரு வத்தைப் பெற்றான் என்று அக்கதையில் சொல்லப்படுகிறது.

நல்லுருவம் பெற்ற கவந்தன் வானத்தில் தோன்றி, சுக்கிரீவனு டன் நட்புக்கொண்டு பகை ஒழிக்குமாறு கூறி அவன் இருக் கும் இடத்தையும் காட்டி அவர்களைத் தொழுது வாழ்த்தி விடைபெற்றுச் செல்கிறான். பின்னர் இராம இலக்குமணர்கள் அன்றிரவு மதங்காச்சிரமம் என்னுமிடத்தை அடைகின்றார் கள். அத்துடன் கவந்தன் படலம் முற்றுப்பெறுகிறது. தொடர்ந்து ஆரணிய காண்டத்தின் இறுதிப்படலமாகிய சவரி பிறப்புநீங்குபடலம் 9 செய்யுள்களுடன் சிறுபடலமாக வருகிறது.

பெருந்தவம் இயற்றிக்கொண்டிருந்த சவரி என்பாள் தான் வசிக்கும் மதங்காச்சிரமத்துக்கு இராமஇலக்குமணர்கள் வரு கின்ற செய்தியை முன்னரே அறிந்து, அவர்கள் வந்தவுடன் தான் தேர்ந்தெடுத்துச் சேர்த்து வைத்திருந்த கனி வகைகளை அவர்களுக்குக் கொடுத்து உபசரிக்கின்றாள்.

***ஈசனும் கமலத்தோனும் இமையவர் யாருமெந்தை***
***வாசவன் தானுமீண்டுவந்தனர் மகிழ்ந்துநோக்கி***
***ஆசறுதவத்திற் கெல்லையணுகியது இராமற்காய***
***பூசனைவிரும்பியெம்பாற் போதுதியென்று போனார்***

*கம்ப. ஆரணிய. 1199*

எந்தை - எமது தலைவனே! ஈசனும் கமலத்தோனும் இமைய வர் யாரும் - சிவபிரானும், பிரம்மனும், தேவர்கள் யாவரும், வாசவன் தானும் ஈண்டுவந்தனர் மகிழ்ந்துநோக்கி - இந்தி ரனும் இங்கு வந்து மகிழ்ச்சியுடன் என்னைப் பார்த்து, ஆசறு தவத்திற்கு எல்லைஅணுகியது - உனது குற்றமற்ற தவத்தின் காலத்துக்கு எல்லை வந்துவிட்டது, இராமற்காய பூசனைவி ரும்பி - சிறிதுகாலம் இங்கேயிருந்து இராமன் இங்கே வருகின் றபோது அவருக்கான பணிகளை விரும்பிச் செய்துவிட்டு, எம்பாற் போதுதி என்று போனார் - எமது உலகத்துக்கு வரு வாயாக என்று கூறிப்போனார்கள் என அவர்களுக்குக் கூறு கின்றாள். அவளின் விருந்தோம்பலுக்கு இராமன் நன்றி கூறு கின்றான். இராம இலக்குமணர்களுக்குப் பணிவிடை செய்த பின்னர் சவரி அவர்களுக்குச் சுக்கிரீவன் இருக்குமிடத்தைக் கூறிவிட்டுத் தீயினுள் புகுந்து தவத்தின் மகிமையினால் தனது பிறப்பை ஒழித்து நற்கதியடைகிறாள். பின்னர் இராம இலக்குமணர்கள் பம்பைப் பொய்கையை அடைகின்றார்கள். இத்துடன் சபரி பிறப்புநீங்குபடலமும், ஆரணிய காண்டமும் நிறைவு பெறுகிறன. அடுத்த இதழில் கிட்கிந்தாகாண்டத்தின் முதலாவது படலத்துடன் இணைந்துகொள்வோம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 133

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | | ■ | ■ | ■ |
| | ■ | | ■ | | ■ | ■ | ■ | 4 | |
| | ■ | | ■ | | ■ | 5 | | ■ | ■ |
| | ■ | | ■ | | ■ | | ■ | 6 | |
| 7 | | ■ | 8 | | | | | ■ | ■ |
| | ■ | ■ | ■ | ■ | ■ | | ■ | ■ | 9 |
| ■ | 10 | | | ■ | 11 | | | | |
| 12 | ■ | ■ | ■ | 13 | | | ■ | ■ | ■ |
| | ■ | 14 | ■ | ■ | ■ | ■ | 15 | ■ | 16 |
| 17 | | | | | | | | | |

## தமிழ்வலை-133 வினா

### இடமிருந்து வலம்

1 ஈரானிய அதிபர் (4-3)

4 ஏங்கு

5 விலங்கு

6 கோழை

7 செவிலி

8 பழைய மங்கையர் விளையட்டு

10 சொத்து

11 புகழேந்திப் புலவரின் படைப்பு

13 ஒருவகை வாத்தியம்

17 இலங்கையில் ஓர் ஊர்

### மேலிருந்து கீழ்

1 சிந்துவெளி நாகரிக நகரம்

2 மரஞ்செடிகொடி

3 பழம்பெரும் பின்னணிப் பாடகர்

5 இருப்புப்பாதை

9 மணிவண்ணன் எனும் புனை பெயர் கொண்ட எழுத்தாளரின் முதலெழுத்துகள்

11 அடியெடுத்துவை

12 பெருமை

14 ஓர் உலக வல்லரசு

15 தேசம்

16 ஒருவகை விலங்கு

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 132-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | 2 கு | 3 த | ற் | 4 பொ | ரு | ட் | ட | ன் | று |
| 5 வ | ரு | க | ■ | ரு | ■ | ■ | ■ | ■ | ■ |
| ர | ■ | ர | ■ | ளி | ■ | 6 பே | தை | ய | ர் |
| த் | ■ | ம் | ■ | ய | ■ | மி | ■ | ■ | ■ |
| 7 தி | கை | ■ | 8 க | ல் | ■ | ங் | ■ | 9 ம | ரை |
| ன | ■ | 10 நா | ■ | ■ | 11 மீ | கா | ம | ன் | ■ |
| 12 சா | 13 ப | வி | 14 மோ | ச | ன | ம் | ■ | ன | ■ |
| 15 மி | கை | ■ | த | ■ | ம் | ■ | ■ | ரா | ■ |
| ■ | 16 வ | ட | க | ம் | ■ | 17 பு | ர | ட் | சி |
| ■ | ர் | ■ | ம் | ■ | ■ | வி | ■ | சி | ■ |

## தமிழ்வலை-132 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ
நேசன் சபாராணி, பிரான்ஸ்
குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
கனகலட்சுமி, ரொறன்ரோ.
வடிவேல் நாகமணி, ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**உமா கதிர்,** ஏஜெக்ஸ்,

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

# துறையொன்றும் இல்லை

பஞ்சகல்யாணி

‘வெண்டிக்காயை இப்படி அள்ளிக் கொண்டு போறேல்லை, வாலை முறித்து முத்தலோ பிஞ்சோ என்று பார்த்து வாங்கவேணும்’ என்றவரைக் கடைக்காரனும் அஞ்சனாவும் ஒரே நேரத்தில் திரும்பிப் பார்த்தனர். மெலிந்த வயதான ஓர் ஐயா. படித்தவராக இருக்க வேண்டும். தலையில் தொப்பி, கைக்கடிகாரம், கையில் எண்பதுகளில் பாவனையிலிருந்த வயரால் பின்னிய பை. பையிலிருந்து தினசரிப் பத்திரிகை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. தான் ஏதும் அதிக பிரசங்கித்தனமாகக் கதைத்துவிட்டேன் என நினைத்தாரோ என்னமோ மேலும் கதைக்காமல் நின்று கொண்டிருந்தார்.

‘இல்லை, முன்பு எல்லாம் பார்த்துப் பார்த்து என் அப்பாதான் செய்வார். எனக்கு எது எங்க இருக்கென்று தெரியாது. சந்தை, கடைக்கு ஒருநாளும் போகேல்ல. அப்பா கிட்டடியில மோசம் போனாற் பிறகு நான்தான் எல்லாம் செய்கிறேன்’ என்ற அர்ச்சனாவைப் பார்த்த முதியவர் ‘எல்லாம் பழகலாம்’ என்று உற்சாகப்படுத்திவிட்டுச் சைக்கிளில் தொங்கி ஏறி உழக்கத் தொடங்கினார்.

‘இவர் ஆளொரு போக்கு, கட்டவுமில்லை, பென்சனை எடுத்துக் கொண்டு தனியத்தான் இருக்கிறார், எண்பது வயசுக்கு மேல வரும்’ என்றார் கடைக்காரன்.

‘அப்படியோ ?’ என்றாள் அர்ச்சனா.

வீட்டில அம்மாவுக்கு ஒத்தாசையாக வேலை செய்யிறது. அலுவலகத்திற்குப் போய் வாறது, சந்தை தெருவுக்குப் போறது என்று தொடர்வேலைகளால் உடலும் மனமும் களைத்துப் போயிருந்தாள் அர்ச்சனா. எனக்கொரு தம்பியோ தங்கச்சியோ இருந்திருக்கலாம் என்று அடிக்கடி ஆதங்கப்பட்டாள். நண்பர்கள் உறவினர்களுடன் கதைப்ப தற்கெல்லாம் இப்ப நேரம் கிடைப்பதில்லை. நூலகம் சென்று கதைப் புத்தகம் எடுத்தே மாசக்கணக்காகிவிட்டது. தெருவில் போகும் போதே தெய்வங்களுக்கு ஒரு சலூட் அடிக்கும் நிலை.



அப்பாவின் மறைவிற்குப் பின் தனித்துவிடப்பட்டது போல் ஓர் உணர்வு அர்ச்சனாவை அலைக்கழித்தது. அப்பாவிடம் அடிக்கடி வந்து போவோரெல்லாம் காணாமற் போயினர். உறவினர்களும் கண்டுகொள்ளவில்லை. அப்பாவின் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள அலைந்ததோடு அம்மாவும் வீட்டுக்குள் முடங்கிவிட்டார்.

சரி, பாற்சபைக்குப் போய்ப் பாலை எடுத்துக் கொண்டு வருவோம் என்று மோட்டார் சைக்கிளில் ஏறினாள். பாற் சபையில், கடையில் சந்தித்த அதே முதியவர் பால் வாங்கிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் ஏதோ இனம் புரியாத சந்தோசம் அர்ச்சனாவிற்கு. இவருக்கு அப்பாவை விட ஒரு பத்துப் பதினைஞ்சு வயசு கூடவா இருக்கும். திட காத்திரமாக இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டு 'நீங்களும் இங்கையோ பால் வாங்கிறது ?' என்று கேட்டாள். 'ஓ! நீங்களோ ? இந்தப் பாற்சபை தொடங்கின காலத்தில இருந்து இங்கைதான் பால் வாங்கிறன். நான் மச்சம் மாமிசம் சாப்பிடுறேல்லை, இதுதான் எனக்கு ஆதாரம், என்ர இரவுச் சாப்பாடு' என்று சிரித்தார் அவர்.

'அப்ப வீட்டில சமைக்கிறேல்லயோ ?' என்றாள் அர்ச்சனா. 'வீட்டில நான் மட்டும்தான், விரும்பியபடி வாழ்ந்து கொள்கிறேன். புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. வாசிக்கின்றேன். வாசிப்புப் பசியைக் கொன்றுவிடுகிறது. நீங்கள் வாசிப்பதில்லையோ ?' என்றார் அரச்சனாவிடம்.

'நானும் வாசிப்பேன், ஆனால்...' என்றிழுத்த அரச்சனாவை இடைமறித்து, 'உங்களிற்கு விரும்பிய புத்தகங்கள் என்னிட மிருந்தால் தரமுடியும். இங்கு பாற்சபையில் கொடுத்து விட்டால் எடுப்பீர்கள்தானே ?' என்றார் அவர்.

'நான் ஒரு முறை உங்கள் வீட்டிற்கு வந்து புத்தகங்களைப் பார்க்கிறேன்' என்றாள் அர்ச்சனா. 'சரி, வரலாம்' என்றார் அவர். ஒரு சனிக்கிழமை மாலை, அவர் கொடுத்த குறிப் பின்படி அவருடைய வீட்டைச் சேர்ந்தாள் அர்ச்சனா. வீட்டுக் கேற்றடியில் பெரிய பாத்திரத்தில் இருந்த தண்ணீரை மாடொன்று குடித்துக் கொண்டிருந்தது. மோட்டார்சைக்கிள் சத்தத்திற்கு எட்டிப் பார்த்தார் அவர்.

'உள்ளே வாங்கோ' என வரவேற்றார். 'இது எங்கட மூதாதையர் வாழ்ந்த வீடு, நாற்சார் வீடென்று சொல்றது. ஒரு காலத்தில அம்மான்ர ஆக்களெல்லாம் கூட்டுக் குடும் பமாக வாழ்ந்த இடம். கடைசியாக அம்மாக்கு சீதனம் எழுதினது. நாங்கள் நாலு பிள்ளைகள். எல்லாரும் கலியாணம் கட்டி வெளிநாட்டில. நான் கட்டேல்ல. எங்கட அப்பா ஒரு சர்வாதிகாரி. அப்பாவிடம் அம்மா பட்ட கொடு மைகளைப் பார்த்து நான் கலியாணத்தை வெறுத்தேன்' என்றார் அவர்.

'அப்படி அல்ல, நீங்கள் கலியாணம் செய்து ஒரு பெண்ணைக் கொடுமைப்படுத்தாமல் சந்தோசமாக வைத்திருந்திருக்கலாம்' என்றாள் அர்ச்சனா. 'சரிதான், காலம் கடந்துவிட்டது, இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம். புத்தக அலுமாரி திறந்துள்ளது, பாருங்கள்' என்றார்.

'உண்மையைச் சொல்லப் போனால் நான் வாசிக்கிறதை விட்டுப் பல மாதங்கள் ஆகிறது. நான் வந்ததெல்லாம் புத்தகம் பார்க்க அல்ல. ஒரு தனி ஆளாக எப்படி வாழ்கிறீர்கள் என்று பார்ப்பதற்காகத்தான்' என்றாள் அர்ச்சனா.

'அதெல்லாம் பார்த்துக் கண்டு பிடிக்கேலாது மகளே, தூக்கமின்றி வானத்தைப் பார்த்துக் கொண்டு முற்றத்தில் கிடந்த நாட்கள், தாயை நினைத்துக் கண்ணீர் விட்ட நாட்கள், என்னைக் காதலிப்பதாகக் கூறிய பெண் புற்றுநோய் வந்து இறந்த துன்பம், எத்தனையோ பேரோடு வாழ்ந்து இன்று தனிக்கட்டையாக வாழும் துன்பம் என்று பல துயரங்கள் நிறைந்ததுதான் என் வாழ்க்கை. இருந்தாலும் நான் என்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. எனக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. எனது அன்றாட காரியங்களைச் செவ்வனே செய்கிறேன். சைக்கிள் ஓடுகிறேன். வாசிக்கிறேன். இவற்றை நினைத்து நான் சந்தோசப்படலாம்தானே.

நீ சின்னப்பிள்ளை. இனித்தான் உலகை அறியப் போகிறாய். நல்லதை நினை. நல்லது நடக்கும்' என்றார் அவர். 'நிச்சயமாக, உங்களுடன் கதைத்தது மன ஆறுதலாக இருக்கிறது. அடுத்த கிழமை வருவேன்' என்று விடை பெற்றாள் அர்ச்சனா.

மீண்டும் ஒரு சனிக்கிழமை. முற்றத்தில் இருந்து பனங்காய் கரைத்துக் கொண்டிருந்தார் அவர். வெளியே மாடுகள் காவல் நின்றன. அவை அவருடைய மாடுகள் அல்ல. அர்ச்சனாவைக் கண்டதும் அவரது முகம் பிரகாசமாகியது. 'உண்மையைச் சொல்லப் போனால் உங்களைக் காணும் போதெல்லாம் குதூகலிக்கும் மனம், உங்களைக் காணாவிட்டால் சோர்ந்து போகிறது. நான் உங்களில் தங்கி வாழப் பழகிவிடுவேனோ என்று எனக்கொரு பயம். எனவே நீங்கள் இங்கு வருவதைக் குறைக்க வேண்டும். குறையொன்றும் இல்லைத்தானே ?' என்றார் அவர்.

'இல்லை' என்று கண்களைத் துடைத்தாள் அர்ச்சனா.

Panchakalyany@thaiveedu.com

மா. சித்திவினாயகம்

# முளையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 20

tg.theeban@gmail.com

இந்துமாப் பெருங்கடலின் பேரலைகள் வானுயர உயர்ந்தும், சுருண்டும் வந்து மோதும் அந்த தனித்த நெடுந்தீவுக் கரைக்காற்றில், எப்போதும் உப்பின் மணமும், சுதேசி மக்களின் உழைப்பின் வியர்வையும் கலந்திருக்கும். உயிர்த்துடிப்போடு எப்போதுமிருக்கிற புண்ணியபூமி.

அந்த நெடுந்தீவு மண்ணின் வீரம் நிறை சிங்கங்களுக்கான வரலாற்றை சிங்கங்கள் எழுதவில்லை. வந்தேறிய வெள்ளைய வேட்டைக்காரர்கள் தான் தம் வரலாறாக எழுதிக் கொண்டிருந்தார்கள்.

அன்றைய நாட்கள் வெள்ளையக் காலனித்துவத்துள் நோலன்துரை என்கின்ற கொடூரப் பேயின் பெருவாட்சியில் அந்த மண் தன் ஆன்மாவையும், நீதியையும் இழந்து, கண்ணீர்க் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தது.

'சூள்' என்ற சொல்லுக்குச் சபதம், வஞ்சினம் அல்லது உறுதிமொழி என்றெல்லாம் பல பொருள்கள் இருந்தாலும் நெடுந்தீவில் இச்சொல் கடலோரத்தில் பொழுது போக்காக மீன்பிடிக்கின்ற ஒரு வீர விளை யாட்டு. காய்ந்த பனையோலைகளையும், துணிகளையும் ஒன்றாக கட்டி நின்றெரியும் விதமாக, நுட்பமான பந்தமாக்கி அதன் மேற்பகுதியை எரிய விடுவார்கள். கடல்மீன்கள் ஒளி நோக்கி ஓடிவர அவற்றைப் பெரிய கரப்புகளால் குத்தியோ, மீன்கொத்தும் சிறு நுனி வளைந்த கத்திகளால் குத்தியோ எடுக்கிற வித்தையது. அதைவிடவும் சிலர் ஓலைகளை வளைத்து நாரினால் வரிந்து பின்னப்பட்ட வாயொடுங்கிய கூண்டுகளை செய்து கடலில் வைப்பார்கள். அதற்குள் நுழையும் மீன்களுக்கு அது மீளமுடியாச் சிறைக்கூடு.

அன்றைக்கு முத்தரும், செல்வனும் நெடுந்தீவு மேற்குக் கரையில் சூள் கொழுத்தப் புறப்பட்டார்கள். தென் மேற்குக் கரையில் தான் மீன் புழக்கம் அதிகம். அங்குதான் வெள்ளையர்கள் தென்கிழக்கு 'குயிந்தா' எனப்படும் குயின்ரவரைப் போன்ற கிங் ரவரை கட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த ரவர்கள் வந்தேறும் வெள்ளையர்க்கான கலங்கரை வழிகாட்டிகள்.

வாயினில் புல்லாங்குழலை வைத்து இசைத்தபடியே முத்தரோடு வந்த செல்வன்,

என்ன அப்பு அநியாயம்? எங்கட பாட்டையும், கூத்தையும் அசிங்கம் எண்டு இந்த வெள்ளைக் காரப் பயலுகள் தூத்துறாங்கள். அவங்கட சமயத்தையும், பாட்டுகளையும் மட்டுந் தான் நாங்க கேக்கணுமாமே?

இந்த நெடுந்தீவுக் காத்துல வாழுற கலைகளையெல்லாம் அழிச்சுப்போட்டு, அவங்கள்

கொண்டுவந்த ஏதோவொரு கோணல் பாட்டையும் ஹார்மோ னியத்தையையும் தான் கேக்க வேணும் எண்டு ஊருக்குள்ள சவுக்கால அடிக்கிறாங்கள். இந்த மண் என்னத்துக்காக இப்படிச் சீரழியுது அப்பு? என்றான்.

முத்தரோ கடலைப் பார்த்தபடி, வாயிற் குதப்பிய வெற்றி லைச் சாற்றைத் துப்பிவிட்டு... தம்பி... ஒரு காலத்துல நீதியும் நேசமும் நிறைந்த இந்த நெடுந்தீவு தெய்வம்போல வாழ்ந் தது. இப்ப கிடக்கிற கிடப்பப் பாரேன். முட்டாளின் கைக்கு அதிகாரம் போனா முதலாவது என்ன நடக்கும் தெரியுமோ? அவன் இந்த மண்ணில இருக்கிற அறிவாளிகளையும், ஞான வான்களையும் தேடித் தேடி, அவங்கள குடும்பம் குடும்பமா சித்திரவதை செய்து நாசப்படுத்துவான். ஏன்னா, ஞானம் இருக்கிறவன் கேள்வி கேப்பான். கேள்வி கேக்கிறவனைக் கண்டா இந்த மூடர் கூட்டத்துக்குப் பயம்!

மெய்தானப்பு... நீங்க சொல்றது மெத்தச் சரி. இந்தப் பரியாரி கதிரவேலரையே நேத்து அந்தப் பாழாப்போன வெள்ளை யன் கசையால அடிச்சு குதிரையில தெருத்தெருவா இழுத் திட்டுப் போறான். உங்களைத் தவிர ஒரு பயல் வாய் திறக் கேல்ல... ஊருக்குள்ள இருக்கிற பெரிய பெரிய மனிசனெல் லாம் இன்னைக்குத் தல குனிஞ்சு நிக்கிறாங்கள்.

முத்தர் தன் கையில் இருந்த சூள் பந்தத்தின் ஒளியில் செல் வனை ஏறிட்டுப் பார்த்தார். அதுமட்டுமா தம்பி நடக்குது? அப்படி ஞானவான்களை அழிச்சுப்போட்டு, தனக்குக் கீழ்ப்ப டிஞ்சு வால் ஆட்டுற மூடர்களைத் தேடிப் பிடிச்சு அதிகா ரத்துல இவங்கள் உக்கார வைச்சிருக்கிறாங்கள். ஏன்னா, அவங்கள் அடிமைகள். அவனுகளுக்குச் சொந்தமா யோசிக் கத் தெரியாது, சொன்னதைச் செய்வானுக. கடைசியில என் னாகும்? மூடர்களினால ஆளப்படுற ஒரு பெருஞ் சுடுகாடா இந்த தீவு மாறும். இந்த வெள்ளைக்காரன் ஆளுற பூமி முழுக்க இதான்டா நெலமை.

அப்ப... இந்த நிலத்துக்கு விடிவே இல்லையா அப்பு? எங்கட சனங்கள் ஏன் இதையெல்லாம் பாத்துக்கிட்டு சும்மா இருக் குறாங்கள்?

செல்வனின் கண்கள் கலங்கின. கடலில் இருந்து வீசிய குளிர்ந்த காற்று அவனின் உள்ளக் கொதிப்பை ஆற்றவில்லை.

நெஞ்சைத் தடவிய முத்தர் சொன்னார் தம்பி, நெருக்குவா ரங்களுக்குள கிடந்து தவிச்சு, காலம் காலமா அடிமைப்பட் டுக் கிடக்கிற சனங்கள் உதுகள்... அவங்கள் டக்குனு மாற் றங்களை விரும்புறவங்கள் இல்லை தம்பி. அவங்கள் எந்தத் துன்பத்துக்குள்ளும் அப்படியே வாழப் பழகிக்கிட்டாங்கள். 'அன்னியர் ஆட்சி ஆபத்தானது, எங்கட மண்ணை வெள் ளையன் அழிக்கப்போறாங்கள்' எண்டு எவனாவது குரல் கொடுத்தா, அவங்களை இந்த வந்தேறி வெள்ளயர்கள் முத லாவதா களையெடுத்துடுறாங்கள். அப்பிடிப் பேசுவதே குற் றமென்கிறது அவன் சட்டம், இப்பிடியே மறுக்கப்பட்ட நீதி யால இப்ப சனம் சடம்போல மௌனமாகிப் போச்சு தம்பி!'

ஓம் அப்பு... நேற்று நோலனிட்ட நியாயம் கேக்கப் போனப்ப, எங்க சனத்தை அங்கிருந்த வெள்ளையர்களும், அவங்க ளின்ர உள்ளூர் அடிமைகளும் பேசின பேச்சை என்னால தாங்க முடியலயண...'

அதைக் கேட்ட முத்தர் ஆவேசமாக 'அட போடா தம்பி! அந்த விதண்டாவாத வெள்ளையர்களிட்டபோயா நியாயத்தை எதிர்பார்ப்பாய்? கொலைகாரன் எப்படியப்பா நீதவானா வான்? அவங்ககிட்ட இருந்து எந்த நீதியையும் ஒருகாலமும் பெறவியலாது. இந்த வந்தேறிகளால தான் எங்கட மகத்தான தீவு முழுக்கச் சுரண்டப்பட்டது, எங்கட மானமெல்லாம் கெட் டது. எங்கட மூதாதையர்கள் வைச்சிருந்த அறிவார்ந்த அனு பவ ஞானத்தை, வாகடங்களை மருத்துவ குறிப்புகளை யெல்லாம் திருடிட்டு, இன்னைக்கு பிழையான வரலாறுகளை எழுதி வச்சிருக்கிறான் இந்த வெள்ளைக்காரன்.'

அப்போது கடலிலிருந்து பலத்த காற்று வீச, சூள் பந்தத்தின் சுடர் படபடவென எரிந்தது. 'அதுமட்டுமில்ல அப்பு... இப்ப வெல்லாம் ஒரு குடும்ப வீட்டுக்குள்ளயும் நிம்மதி இல்லை. புருசனும் பெண்சாதியும் அடிபட்டுக் கிடக்குறாங்கள். எங்கட ஊர்ல முந்தியெல்லாம் இப்படி ஒரு நாளும் இருந்ததில் லையே அப்பு? இந்த மண்ணுக்கு என்னதான் நடக்குது?' என்று தழுதழுத்த குரலில் கேட்டான்.

முத்தர் சொன்னார் கலிகாலம் அதான்டா தம்பி கொடுமை! ஆணையும் பெண்ணையும் எதிரெதிரா நிப்பாட்டி, ஆண் காலில் பெண்ணைப் போட்டுச் செருப்பாக்கி மகிழ்கிற ஈனப் புத்தி எங்கட நெடுந்தீவு மக்களுக்கு என்றும் இருக்கவில் லைடா தம்பி! இது இந்த பார்ப்பனர்களும், வெள்ளையர் களும் எங்கட மண்ணுல விதைச்ச நச்சு வினை! நல்ல கலை களோடும், உயர்ந்த வைத்தியங்களோடும், ஆணும் பெண் ணும் சமமா, நேசமா வாழ்ந்த சுதேசிச் சனங்களை இவங்கள் 'காதும் காதும் வச்சது போல' போதனை எண்ட பேரில சத்த மில்லாமக் கொல்றாங்கள்.

செல்வன் கேட்டான் ஆமா அப்பு... பல்லவி, அநுபல்லவி, சரணம் எண்டெல்லாம் சமஸ்கிருதம் உள்ளே நுழையுறதுக்கு முதல்லயே... 'எடுப்பு, தொடுப்பு, முடிப்பு' எண்டு எங்கட பாட்டுக்கு அழகாய்ப் பேர் சூட்டிய வம்சம் எல்லோ அப்பு எங்கட வம்சம்!'

கண்களில் ஒரு பெருமித வெளிச்சத்தோடு சொன்னார் முத் தர் 'நல்லாச் சொன்னாய் தம்பி! எங்கட நெடுந்தீவாருடைய அறிவு, அத்தனையிலும் பிரகாசித்திருந்தது. சொல்லப் போனால் எங்கட வீட்டுப் பொம்பளைகளும், ஆம்பிளைய ளும் தோட்டத்துல வெங்காயக் கூடு பின்னுறப்பக் கூட... ஓலையை எப்படி எடுத்து, எப்படித் தொடுத்து, எப்படி முடிக் கோணும் எண்ட வாழ்வியல் ஞானத்தை கைகளுக்குள்ள வச்சிருந்தவங்கள். பாட்டிலும் சரி, வாழ்க்கையிலும் சரி... எடுத்து, தொடுத்து, முடிக்கத் தெரிஞ்ச மகத்தான சனங் களடா நாங்க. எங்கட அந்த அறிவார்ந்த அனுபவ ஞானத் தைத்தான் இந்த வந்தேறிகள் இன்னைக்கும் சுரண்டுறாங் கள்.'

செல்வன் கேட்டான் 'அப்பு... இந்தத் தனித்துப்போன நெடுந் தீவுக்கெண்டு ஒரு தனிச்ச வரலாறு இருக்குத்தானே அப்பு?'

பெருமிதத்துடன் புன்னகைத்த முத்தர் ஏன் இல்லை தம்பி! இந்தத் தீவோட சொந்தக்காரங்களே சூரியனும் சந்திரனும் தான்டா. அவைகள் உதிப்பதும் மறைவதும் இந்தத் தீவுக் குள்ள மட்டுந்தான் எண்டு எங்கட சனங்கள் நம்புவினம். உல கத்தின்ர ஒரு சின்னத் துண்டுப் பகுதியா நெடுந்தீவை இங்கி ருக்கும் யாரும் என்னைக்குமே நெனச்சுப் பாத்ததில்லை.

இதுதாண்டா அவங்களுடைய பேருலகம்!

அன்னிய ஆபிரகாமிய மதங்களோ, அராபியர்களோ இல்லை இந்துத்துவ வேத மரபுகளோ இங்க காலடி வைக்கிறதுக்கு எத்தனையோ காலத்துக்கு முன்னாடியே, நடுகல் வச்சு கும் பிட்டவங்கடா எங்கட முன்னோர்கள்! இயற்கையைத் தான் அவங்கள் தெய்வமா, வழிகாட்டியா வணங்கினாங்க.'

உண்மைதானப்பு என்றபடி செல்வன்... அதனால தான் எங் கட மண்ணில பிற மதத்துல இருக்குற மாதிரி மூடத்தனமான சடங்குகள் எதுவும் பிறக்கல போல?' என்றான் சிரித்தபடி.

முத்தர் ஆழமாக யோசித்தபடியே 'அங்கதான்டா தம்பி எங்கட முன்னோர்களோட பகுத்தறிவு நிக்குது! 'தீப்பாய்ந்த அம்மன்' எண்டோ, இல்லாட்டி 'சதி' என்று பொம்பளைகளை உயிரோட உடன்கட்டை ஏத்துற கொடூர வழக்கம் இந்த மண் ணுல என்றைக்குமே இருந்ததில்லை தம்பி. மதத்தோட பேரால அப்பாவிச் சிறுமிகளை இழுத்துட்டு வந்து, அவங்கட வாழ்க்கையை நாசமாக்கி, பொட்டுக் கட்டி கண்டபடி கட்டற்ற பாலுறவை வச்சு... மனுசரட உடம்புக்கும், மனசுக் கும் நோய் உண்டாக்குற எந்தவொரு ஈனப் புத்தியையும் எங்கட ஆதி மூதாதையர்கள் இங்க வச்சிருக்கேல்லை!'

முத்தருக்கு மூச்சிரைத்தது...

'பொட்டுக் கட்டுறதோ, தேவதாசி முறைகளோ, ஏன்... பொம் பளைகளட மார்பிற்கு வரி போடுற அந்த அசிங்கமான வரி முறைகளோ இந்தத் தீவுல எட்டியும் பாராத நாட்கள் தான், எங்கட முன்னோர்கள் வாழ்ந்த நாட்கள்! ஆனா பின்னாட் களில தான் அந்த மூட நம்பூதிரிகளும், பார்ப்பனர்களும், இந்த வந்தேறிய வெள்ளையர்களும், அரேபியர்களும் வந்து எங்கட சனங்களைப் பதம் பாத்திட்டாங்கள் தம்பி. எங்கட கடவுளுக்கே தெரியாத மொழிகளில பூசைமுறைகள் வந்த தெல்லாம் இவங்களால பிற்காலத்துல நடந்ததுதான். சுய மாக, தன் சொந்தக் கால்ல நிமிர்ந்து நின்ற பூமிடா இந்த தீவு என்ற முத்தரின் கண்களில் ஆயிரம் சூரியன் ஒன்றாய் ஒளிர்ந் தது.

செல்வன் உணர்ச்சி பெருக்கோடு, தன் கையில் இருந்த புல் லாங்குழலை இறுகப் பற்றியபடியே. 'ஓம் அப்பு... இப்படி யொரு சுயமானமிக்க பூமியைச் சூறையாட விட்டுட்டு, இன் னைக்கு நாங்க வீதியில நின்னு நீதி கேட்டு அலையுறோம். யாரிடம் நீதி கேக்குறோம்? எங்கட நீதியை மறுத்தவனிடமே நீதி கேக்குறதுதான் எங்கட இன்றைய காலத்தின் சாபக்கே டாய்ப் போச்சப்பு! இந்த வந்தேறி வெள்ளையருக்கு எதிரா நாங்க போராடியே தீர வேணும் அப்பு. இல்லையென்றா... எங்கட இந்தத் தீவு, இவங்களட வாரிசுகளுக்கான ஊராகப் போயிடும்... எங்கட ஊர் இல்லாமப் போயிடும் அப்பு!'

செல்வனின் தீர்க்கதரிசனமான பேச்சைக் கேட்டு வியந்த முத்தர் அவன் முகத்தைத் தீர்க்கமாகப் பார்த்துச் சொன் னார் தம்பி செல்வா... இந்த நெடுந்தீவின் ஒவ்வொரு மனிதர் முகத்திலும் ஓராயிரம் கதைகளுண்டுடா தம்பி! சோகமும் துயரமும் இங்க அலை அலையா வந்து அடிச்சாலும், அந் தக் கதைகளினால வாழ்வதுதான் இந்த உலகம். அந்த ஓரா யிரம் கதைகளினால் ஆனதுதான் எங்கட வரலாறும் வாழ்வும்!

இந்த வந்தேறி வெள்ளையன் எங்கட உடம்பை வேணா சவுக்கால அடிக்கலாம், ஆனா எங்கட முகங்கள்ல இருக்கிற வரலாற்றுக் கதைகளை இவனால மட்டுமல்ல எவனாலும் அழிக்க முடியாது.'

முத்தர் செல்வனின் தோளைத் தட்டியபடியே சொன்னார்,

'அதனாலதான் சொல்றேன் தம்பி... நீ உன் இசையான குழலை, யாழை உசத்திப் பிடி. மூடர்களின் கூட்டம் நாட் டைப் பாழ் படுத்தலாம், கோணல் பாட்டால இந்த மண்ணை மயக்கப் பாக்கலாம். ஆனா, நெடுந்தீவோட மண்ணுக்குள்ள புதைஞ்சு கிடக்கிற எங்கட முன்னோர்களின் இரத்தமும், நீதியும், முந்தின தமிழ் மரபு இசையும், எங்கட சனங்களின் முகத்துல இருக்கிற கதைகளும் ஒரு நாளைக்கு விழிச்சு எழும். அன்னைக்கு இந்த மூடர்களின் அதிகாரச் சுவடு இல் லாம அழியும். உன் பாட்டை நிப்பாட்டாத தம்பி!'

கதைத்துக் கதைத்து அவர்கள் கடலின் ஆழமற்ற நீருள் நடந்து நடந்து சூள் கொழுத்தி மீன் பிடித்தபோது,

அதல், கிளிமீன், ஊதா, கணவாய், நண்டு, ஓரா என ஆழ் கடலில் வாழாத அதிசய மீன்கள் அவர்களிடம் சிக்கியது. அவர்களது மீன்பறிகள் அவற்றால் நிரம்பி வழிந்தது.

கடல் அலைகள் கரையை முட்டி மோதிப் பின்வாங்கும் சத்தம், நெடுந்தீவின் இரவுப் பொழுதை இன்னும் உக்கிர மாக்கியது. அந்தப் பெருந் தீவில் மின்விளக்குகள் கிடை யாது. ஆனால், வானில் மிதக்கும் சந்திரனும், விண்மீன் களும் அந்த மண்ணுக்குத் தேவையான ஒளியை வாரி இறைத் துக் கொண்டிருந்தன. தீவு மக்களுக்குச் சூரியனும் சந்தி ரனும்தான் காலக் கணக்கு. பிறப்பிற்கும், இறப்பிற்கும் அவர் கள்தான் வாழ்வின் சாட்சிகள்.

மீன்பிடித்த பறிகளோடு அவர்கள் வீடு திரும்பும் வழியில் முதியவள் நாகம்மாள் தன் குடிசையின் வாசலில் அமர்ந்து, கடலையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவளது சுருக் கங்கள் விழுந்த முகத்தில் ஓராயிரம் கதைகள் உறைந்து கிடந்தன. அந்த ஊரில் கடந்த ஐம்பது வருடங்களாகப் பிறந்த அத்தனை குழந்தைகளையும் தன் கரங்களால் ஏந்தி,

இந்த பூமிக்கு வரவேற்றவள் அவள்தான். நெடுந்தீவின் மூத்த மருத்துவச்சி.

அப்போது, இருளுக்குள் இருந்து மூச்சிரைக்க ஓடிவந்தான் ஒருவன்.

'அக்கா... அக்கா... சீக்கிரம் வாங்க! வள்ளிக்குக் குடமுடையும் வலி வந்திடிச்சு. துடிச்சுப் போறா...' என்று பதறினான்.

நாகம்மாள் மெதுவாக எழுந்து தன் இடுப்பில் கட்டியிருந்த சுருக்குப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். அதில் சில பச்சிலைகளும், காலம் காலமாகக் கைமாறி வந்த மருத்துவ ரகசியங்களும் இருந்தன.

'பயப்படாதடா தம்பி... கொத்தித் தெய்வம் கைவிடாது,' என்று ஆசுவாசப்படுத்தியபடி அவனுடன் நாகம்மா வேகமாக நடந்தாள்.

நடக்கும் வழியில் பனைகளின் நிழல்கள் பேய்களைப் போல ஆடிக்கொண்டிருந்தன.

அவர்களைப் பின்தொடர்ந்தனர் முத்தரும் செல்வனும்...

ஆபிரகாமிய மதங்களின் சிலுவைகளும், புதிய வழிபாட்டுத் தலங்களும் தீவின் எல்லையில் முளைக்கத் தொடங்கியிருந்த காலம் அது. ஆனால், நெடுந்தீவில் வாழ்ந்த ஆதி மனிதர்களுக்குத் தங்களின் முன்னோர்களின் நடுகற்களும், கொத்தித் தெய்வமுமே எல்லாமும் ஆக இருந்தன.

வள்ளியின் குடிசைக்குள் நுழையும்போதே அவளது முனகல் சத்தம் நெஞ்சை அறுப்பதாக இருந்தது. பிரசவ வலி அவளைப் பிழிந்தெடுத்தது. தீவில் நவீன வைத்தியசாலையோ, வெள்ளையர்களின் மருந்துகளோ கிடையாது. நாகம்மாள் வள்ளியின் அருகே அமர்ந்து, அவளது நெற்றியைத் தடவினாள். வேர்வையில் நனைந்திருந்த வள்ளியின் வயிறு, புதியதொரு ஜீவனைப் பிரசவிக்கத் துடித்துக் கொண்டிருந்தது.

மணித்துளிகள் நகர நகர, வள்ளியின் நிலைமை மோசமானது. அவளது பலம் குறைந்து கொண்டே வந்தது. மூச்சுக் காற்று பலவீனமடைவதைக் கண்ட நாகம்மாளின் உள்ளம் முதன்முறையாகப் பதறியது.

நாகம்மாள் சட்டென்று எழுந்து, குடிசைக்கு அருகேயிருந்த தானே வளர்ந்து கொண்டிருந்த விசித்திரமான முகமுடைய உயரக் கல்லை நோக்கிக் கைகளைக் குவித்து நின்றாள். அதுதான் 'கொத்தித் தெய்வம்'. பிள்ளைப் பேற்றின் காவல் தெய்வம். அந்தத் தீவின் ஆதிப் பாட்டன்மார்கள் வணங்கிய தெய்வம்.

'தாயே... கொத்தித் தெய்வமே... இந்தத் தீவோட செழுமை உன் கையிலதான் இருக்கு. இந்த உலகத் துண்டுல நாங்க தனிச்சு நின்னாலும், எங்களைக் காக்க நீ இருக்கேன்னு நம்புறோம். இந்த தாயையும், பிள்ளையையும் பிரிச்சிடாதே தாயே...' என்று உருகி வேண்டியபின் தன் சுருக்குப் பையிலிருந்த ஒரு விசேட மூலிகைச் சாற்றை எடுத்து வள்ளியின் நாக்கில் தடவினாள்.

மறு கணமே, குடிசைக்கு வெளியே ஒரு பெரும் காற்று வீசியது. பனை மரங்கள் ஓலமிட்டன. கடல் அலைகள் கரையை நோக்கி ஆக்ரோஷமாக முழங்கின.

அடுத்த சில நிமிடங்களில், அந்த ஒற்றைக் குடிசையின் இருளைக் கிழித்துக் கொண்டு, ஒரு புதிய உயிரின் அழுகுரல் ஒலித்தது! ஆண் குழந்தை.

நாகம்மாள் குழந்தையையும், தாயையும் இணைத்த தொப்பிள் கொடி வெட்டி மருந்திட்டாள்.

வள்ளி களைப்புடன் புன்னகைக்க, நாகம்மாள் அந்தக் குழந்தையைத் தன் கைகளில் ஏந்தினாள். குழந்தையின் கண்கள், குடிசைக்குள் விழுந்த நிலவொளியில் பிரகாசித்தன.

வெளியே இதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்தர் பெருமிதத்துடன் உள்ளே வந்து, நாகம்மாளைப் பார்த்துச் சொன்னார் அம்மா... தங்களின் வெள்ளையப் பிள்ளைகளே இனி இந்த மண்ணில் பிறக்க வேண்டும் என்கிற அயோக்கிய வெள்ளையன் ஆகட்டும், வேற எவன் வேணா வரட்டும்... ஆனா இந்த நெடுந்தீவோட உயிரையும் மானத்தையும் காப்பது நம்ம கொத்தித் தெய்வமும், இந்த மண்ணோட மனித நம்பிக்கைகளும் உங்களைப் போன்ற மனிதர்களின் வீரமும் தான்,' என்று

நெடுந்தீவு மனிதர்களுக்கே சொந்தமான சூரியன் ஒன்றை உயிர்ப்பித்த மகிழ்வோடு அதைக் கேட்டு நாகம்மா சிரித்தாள்.

அப்போது செல்வன் தன் கையில் இருந்த புல்லாங்குழலை இறுக்கமாகப் பற்றியபடி, கண்கள் சிவக்க விண்மீன்களைப் பார்த்துச் சூளுரைத்தான்: 'அந்த நோலனையும், அவன் வந்தேறிகளுக்காகக் கட்டுகிற கிங் கோபுரத்தையும் இந்த மண்ணிலிருந்து அழிக்காமல் நான் ஓயமாட்டேன்!'

நெடுந்தீவின் கடற்காற்றில் அந்தச் சூள் ஒரு பெரும் புரட்சிக்கான விதையாய் எதிரொலித்தது.

(தொடரும்...)

sithivinayagam@thaiveedu.com

tg.theeban@gmail.com

*(லெய்லா அபூலேலா 1964-இல் எகிப்தின் கெய்ரோவில் எகிப்திய தாய்க்கும் சூடானிய தந்தைக்கும் பிறந்தார். ஆறு வயதில் சூடானுக்குக் குடிபெயர்ந்தார். இப்பொழுது ஸ்கொந்தலாந்திலுள்ள அபர்டீனில் வசிக்கிறார். ஆங்கிலத்தில் எழுதுகிறார். சூடானிலுள்ள காட்டூன் நகரத்தில் வளர்ந்தவர். 1985-இல் பொருளியலில் காட்டூன் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். பின் லண்டன் ஸ்கூல் ஒஃவ் இகனோமிக்சில் எம்எஸ்சி பட்டம் பெற்றார். 1990-இல் ஸ்கொந்லாந்துக்கு புலம்பெயர்ந்தார். புனைவுகள், கட்டுரைகள், நாடகங்கள் எழுதியுள்ளார். நல்ல கதைசொல்லி. முஸ்லிம் பெண்களின் அக வாழ்வியல்களையும் அடையாளங்களையும் புலம்பெயர்தலைகளைப் பற்றியும் இஸ்லாமிய ஆத்மீகத்தையும் பற்றி எழுதிவருகிறார். இந்தக் கதைக்காக 1999 ஆண்டில் ஆபிரிக்க எழுத்துக்கான முதன் முதலாக உருவாக்கப்பட்ட கெயின்ஸ் பரிசைப் பெற்றார். இவர் எழுதி வெளிவந்த நூல்கள். The Translator, Minaret, Lyrics of Alley, The Kindness of Enemies, River Spirit ஆகியவை. பலநாடகங்களை பிபிசி-க்காக எழுதியுள்ளார். இவருக்கு Scottish Book Awards, Saltire Fiction Book of the Year, PEN Pinter Prize ஆகியவை கிடைத்துள்ளன. இவரின் உரைநடையை ஜே.எம்.குட்சிய, பென் ஒக்றி, அலிசிமித் போன்றோர் பாராட்டியுள்ளனர்.)*

# அருங்காட்சியகம்

**லெய்லா அபூலேலா      தமிழில்: என்.கே. மகாலிங்கம்**

முதலில் ஷாடியா அவனுடைய குறிப்புகளைக் கேட்பதற்குப் பயப்பட்டாள். அவன் போட்டிருந்த காதணிகள் அவளைப் பயமுறுத்தின. அவன் தன்னுடைய நீண்ட தலைமுடியை முடித்து றபர் பட்டையால் கட்டியிருந்தான். ஒரு ஆண், காதணிகள் அணிந்திருந்ததையோ நீண்ட தலைமுடியை வைத்திருந்ததையோ அவள் ஒருபோதும் கண்டதில்லை. அப்படியே கடும் குளிரையும் கடும் மழையையும் அவள் கண்டதில்லை. வெள்ளியால் செய்யப்பட்ட காதணிகளை அவன் போட்டிருந்தான். அது அவள் மேற்குலகில் கண்ட விநோதமான விசயம். கலாசார அதிர்ச்சி. வகுப்புகள் நடக்கும்போது கரும்பலகைகளில் வெண்கட்டியால் கிறுக்கப்பட்டிருந்த எழுத்துகளிலிருந்து தன் கண்களை எடுத்து அவனுடைய காதணிகளைப் பார்த்தாள். பலவேளைகளில் அவளுக்குப் பாடங்கள் எதுவும் புரியவில்லை. குறியீடுகள் மட்டும் பரிச்சயமானவை போல இருந்தன. ஆனால் குறியீடுகள் எல்லாம் எப்படி பொருந்திவருகின்றன? எப்படி வாய்ப்பாடுகள் இந்த முடிவுக்கு அவற்றைக் கொண்டு வருகின்றன? என்பன அவளுக்குப் புரியவில்லை. அவளுடைய அறியாமையும் வரப்போகிற தேர்வுகளும் அவளுக்குப் பயங்கரமான எண்ணங்களைக் கொடுத்தன. அதிலிருந்து அவள் ஓடிவிட விரும்பினாள். அவனுடைய நீண்ட தலைமுடியின் நிறம் மங்கலான மஞ்சளும் பழுப்பும் சேர்ந்தது. அவளுடைய குழந்தைப் பருவத்தில் அவளிடமிருந்த ஒரு பொம்மையை அது நினைவூட்டியது. இளவயதில் பொம்மையின் தலைமுடியை மணிக்கணக்காக சீவிக்கொண்டும் தடவிக் கொண்டும் இருப்பாள். அப்படியான நீண்ட நேரான தலைமுடி தனக்கும் இருக்கவேண்டும் என்று அவள் விரும்பினாள். அவள் சொர்க்கத்திற்குப் போனால் அப்படியான முடி கிடைக்கும் என்று நினைத்தாள். அவள் ஓடும்போது அவளுக்குப் பின்னால் அது பறக்கும். தலையைக் குனிந்தால் பட்டுத்துணிபோல முன்னால் விழுந்து புல்லில் கிடக்கும் மலர்களை எல்லாம் கூட்டி அள்ளும். அவன் எழுதும் போதும் திரும்ப கரும்பலகையை நிமிர்ந்து பார்க்கும்போதும் அவனுடைய குதிரைவால் கொண்டை அசைவதைப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவளிடமிருந்த பொம்மை பல ஆண்டுகளுக்குப் பின் அவள் மனதில் சடுதியாக அப்படியே படம் போல தோன்றியது. தான் பாடத்தில் கவனம் செலுத்தாது எதையும் கற்காது பகற்கனவுகண்டுகொண்டிருப்பதை உணர்ந்து வருத்தம் அடைந்தாள்.

தவணையின் ஆரம்பத்தில் எம்.எஸ்சி புள்ளியியல் வகுப்புகள் தொடங்கின. அப்போது பயங்கரமான அலையில் அலைக்கழித்து அடிபட்டவள் போல தன்னை உணர்ந்தாள். விரிவுரை வகுப்பறைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் வழி தவறிச் சென்றாள். ஒளிநகல் இயந்திரத்தை இயக்க முடியாமல் தடுமாறினாள். நூலகத்தில் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளால் எதையும் கேட்கவோ

சாப்பிடவோ பார்க்கவோ முடியவில்லை. அவளுடைய கண்கள் அச்சத்தால் பிதுங்கின. குளிரால் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அவளுடைய பாடநெறிகளுக்கு சில அடிப்படையான அறிவு இருக்கவேண்டியிருந்தது. அது அவளிடம் இருக்கவில்லை. அதனால் அவள் தத்தளித்தாள். அவளைப் போலவே மற்ற ஆபிரிக்கா மாணவர்களும், இரண்டு துருக்கிய மாணவிகளும், ப்றூணையிலிருந்தவந்த மாணவர்களும் தடுமாறினார்கள். குட்டையான, வட்ட முகமுடைய அசாஃபா என்ற எதியோப்பிய மாணவன், தன் ஆழமான குரலில் தங்கள் மூன்றாம் உலகப் பதற்றங்களை மோசமான ஸ்கொட்டிஸ் தாழ்வாரங்களில் தங்களுக்குள் குசுகுசுத்தார்கள். பதற்றத்துடன் சிரித்தார்கள். 'கடந்த ஆண்டு, ஒரு நைஜீரிய மாணவன் இதே பாடத்தில் சித்தி பெறமுடியாததால் தன் மணிக்கட்டை வெட்டி தற்கொலை செய்துகொண்டான்,' என்று கதைத்தனர்.

'அவர்களும் நாங்களும்,' என்று நினைத்துக் கொண்டாள், அவள். சிலர் நன்றாகக் கற்று சித்தியடைவார்கள். சிலர் வளைந்து நெளிந்து வியர்த்து சாதாரணமாகச் சித்தியடைவார்கள். இரண்டும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட குழுக்கள். அசாஃபா தாராளகுணமும் புத்திசாலியும்; அவன் தான் எங்களில் வயதிலும் மூத்தவன். அவன் சாய்ந்து ஷாடியாவின் காதில் குசுகுசுத்தான். 'அந்த ஸ்பானிஷ் மாணவி நல்லவள். மிகவும் நல்லவள்,' என்றான். அவனுடைய கண்கள் ஷாடியா வின் கண்களிலும் பார்க்கச் சிவந்து பிதுங்கின. அவன் ஒவ் வொரு நாள் இரவும் தன் பயங்களை பல்கலைக்கழக மதுக்கடையில் மது வருந்தித் தணித்துக் கொண்டான். அவள் அழுது தணித்துக் கொண்டாள். அவர்களுடைய நாடுகள் ஆபிரிக்காவில் அடுத்தடுத்து இருந்தன. ஆனால் அவன் ஒருபோதும் சூடானுக்குப் போனதே இல்லை. ஷாடியாவும் எதியோப்பியாவுக்குப் போனதே இல்லை. 'ஆனால் நாங்கள் அபெர்டீனில் சந்தித்தோம்!' இந்தச் செய்தியை அவள் அறிந்தபோது கடுமையாக கெக்கெலித்துச் சிரித்தாள். கூட்டுப் பயம் பரவசத்தைக் கொடுத்தது.

'அந்த மாணவன் பிறையன் முதல்தரமானவன்,' என்றான் அசாஃபா.

'காதணிகள் அணிந்தவனா ?'

சிரித்துக் கொண்டே, அசாஃபா காதணிகள் அணியாத தன் காதுகளைத் தொட்டுப் பார்த்தான். 'காதணிகளுக்கும் அதற்கும் தொடர்பே இல்லை. அவன் இந்தமுறை தேர்வில் முதல் இடம் பிடிப்பான். அவன் இந்த பல்கலையில் இளங்கலை படித்தான். வகுப்பில் முதல் வகுப்பில் சித்தியடைந்துள்ளான். அது அவனுக்கு பலவித அனுகூலத்தையும் கொடுத்திருக்கிறது. அவனுக்கு எல்லா விரிவுரையாளர்களையும் தெரியும். இந்த கல்வி அமைப்பைப் பற்றியும் தெரியும்.'

அப்படித்தான் பிறையனிடம் அவனுடைய கடந்த ஆண்டு குறிப்புகளைக் கேட்கவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு வந்தது. கணிதத்தில் வாய்ப்பியல் செயல்பாட்டு முறையியலிலும் காலத் தொடரணியிலும் தன்னுடைய பின்னணி அறிவைப் பெருக்கிக் கொண்டால் ஒவ்வொரு நாளும் புதிதாகக் கற்கப் போகும் பாடங்களைக் கற்கமுடியும் என்று எண்ணினாள். அவனை அணுகமுடியுமா என்று அவனைக் கவனித்தாள். அடக்கமான மலேசிய மாணவர்களுக்குப் பக்கத்தில்

அவன் எந்தவித ஆசாரமற்றவனாகக் காணப்பட்டான். விரிவுரையாளர்களுடன் மரியாதை அற்று முணுமுணுத்துக்கொண்டும் சாய்ந்துகொண்டும் பேசினான். அவர்களும் தன்னுடன் சமமானவர் போல அவர்களுடன் கதைத்தான். சில முட்டாள்த்தனமான செயல்களைச் செய்தான். ஒரு கடதாசித் துண்டை குப்பைத் தொட்டியில் வீசவேண்டுமானால் அதை ஒரு பந்து போலக் கசக்கி குப்பைக் கூடையைக் குறிபார்த்து வீசினான். அது கூடைக்குள் விழாவிட்டால் தனக்குள் எதையே பேசி சபித்துக் கொண்டான். அவனைமுதிர்ச்சியற்றவன் என்றே அவள் நினைத்தாள். ஆனால் அவன் மட்டுந்தான் அந்தப் பாடத்தை எளிதாகப் புரிந்துகொள்கிறான் என்றும் தெரிந்தது.

வெளிநாட்டு மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட பளபளப்பான கையேட்டில் ‘பிரித்தானியர்களின் புகழ்பெற்ற மரபான, அதிகம் பேசாதிருத்தலை’ விளங்கப்படுத்தி இருந்தார்கள். அத்துடன், அவர்களுக்கு நாங்கள் நன்றியுடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்றும் சாடையாகக் குறித்தும் காட்டியிருந்தார்கள். ஏனெனில் பிரித்தானியாவுக்குக் கீழ் உள்ள நாடுகள் உபசரிப்பில் அத்தனை திறமானவர்கள் அல்ல என்பதையும் சொல்லியிருந்தார்கள். சிற்றுண்டிச்சாலையில் அசாஃபாவுடனும் மற்றவர்களுடன் கோப்பி குடித்துக் கொண்டிருந்தாள். அங்கே ‘ஸ்கொட்லாந்தரின் விருந்தோம்பல்’ வித்தியாசமானதாக இருந்தது. மலேசிய மாணவனான பதிர் கண்களைச் சிமிட்டிக் கொண்டு குசுகுசுத்தான். ‘நேற்று எங்கள் அறை யன்னல்கள் உடைக்கப்பட்டிருந்தன. இன்று என்னுடைய மனைவி வெளியேபோக அச்சப்படுகிறாள்.’

‘திருடர்களா ?’ என்றாள் ஷாடியா. அவளுடைய கண்கள் மற்றவர்களுடைய கண்களிலும் பார்க்கப் பெரிதாக விரிந்திருந்தன.

‘இனவாதிகள்,’ என்றாள் துருக்கிய மாணவி. அவளுடைய உதட்டுச் சாயம் நயமாக இருந்தது. அவளின் உதட்டிலிருந்து சொற்கள் வெள்ளிகள் போல உருகிவழிந்தன. ஐஸ் போல.

எல்லோரும் அமைதியாக இருக்கும்போது மதிநுட்பமான ஒரு செய்தி அசாஃபாவிடம் இருந்து அமைதியாக வந்தது. ‘இவர்கள் தான் இந்த உலகத்தின் உரிமையாளர்கள் என்று நினைக்கிறார்கள்...’ அவர்களைச் சுற்றி இறந்த நைஜீரிய மாணவனின் ஒளிவட்டம் இருக்கிறது. அவர்கள் ஒருபோதுமே காணாத அந்தச் சகோதரனை நினைத்து வெட்கப்படுகிறார்கள். அவன் அவர்களைப் பலகீனமாக்கிவிட்டான். நிலைகுலையச் செய்துவிட்டான். சிற்றுண்டிச்சாலையில் பிறையன் அவர்களுடன் ஒருபோதுமே அமர்ந்ததில்லை. அவர்களும் அவனுடன் ஒருபோதும் அமர்ந்திருந்ததில்லை. அவன் தனியாகவே இருந்தான். சிலவேளைகளில் உள்ளூர் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தான். ஷாடியா அவன் முன்னால் போனபோது அவன் முறுவலிக்கவில்லை. ‘இவர்கள் விசித்திரமானவர்கள்... ஒருநாள் முகமன் கூறுவார்கள். அடுத்தநாள் அப்படிச் செய்யமாட்டார்கள்...’

ஒரு வெள்ளிக்கிழமை பின்மதியம் அனைவரும் நேரியல் மாதிரிகள் வகுப்பைவிட்டு வெளியேறும்போது அவள் துணிந்து பிறையனுடன் கதைத்தாள். அவனுடைய கன்னத்திலும் நெற்றியிலும் கரும் புள்ளிகள் இருந்தன. அவளிலும் பார்க்க உயரமாக இருந்தான். அவன் எங்கோ போவதற்காக அவசரப்படுபவன் போலவும் இருந்தான். அவனுடைய கணிப்பானை அதன் உறைக்குள் வைத்தான். பேனையை தன் பைக்குள் வைத்தான். அவள் அவனுடைய குறிப்புக்களைக் கேட்டாள். அவன் போட்டிருந்த கண்ணாடிக்குப் பின்னால் அவனுடைய நீலநிறக்கண்களில் வாழ்க்கையில் ஒருபோதுமே காணாத வெறுமையான பார்வையைக் கண்டாள். இந்த ஆச்சரியம் எல்லாம் எதற்காக ? அவள் ஒரு பூச்சி என்று அவன் நினைத்தானா ? அவளும் பேசுவாள் என்பதைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டானா ?

அவளுடைய கேள்விக்குப் பதிலாக அவனிடமிருந்து வார்த்தைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்த ஒருவித முணுமுணுப்புத்தான் பதிலாக வந்தது. அவன் திடுக்கிட்டுப் போனான். தன் கதிரையை மேசைக்குள் தன் காலால் தள்ளிவிட்டான்.

‘மன்னிக்கவேணும் ? என்ன கேட்டாய் ?’

ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியாக்கி மெதுவாகக் கேட்டான். ‘திங்கட்கிழமை எல்லாவற்றையும் உனக்குத் தருகிறேன்.’

‘நன்றி.’ அவன் பேசிய ஆங்கிலத்திலும் பார்க்க அவள் நல்ல ஆங்கிலம் பேசினாள்! பரிதாபம். அவன் முற்றாகவே பரிதாபமாகக் காட்சியளித்தான். அவன் ஒரேயொரு சட்டையையே ஒவ்வொரு நாளும் அணிகிறான். அதில் சாம்பலும் வெள்ளையும் கலந்த கோடுகள் இருந்தன.

•

வார இறுதிகளில் ஷாடியா விடுதியைவிட்டு வெளியே போனதில்லை. வீட்டிலிருந்து நீண்டதூர தொலைபேசி வந்தால் ஒழிய. வேறெவருடனும் பேசியதும் இல்லை. காட்டூன் நகரில் வியாழக்கிழமை இரவு நடந்தது நினைவில் இருக்கிறது. அன்று ஃப்றீட்டுடன் ஒரு திருமண விழாவுக்குப் போகவேண்டியிருந்தது. அவனுடைய சிவப்புநிற மேர்சிடிஸ் காரில் சென்றார்கள். அல்லது அவனுடைய சகோதரிகளுடன் கிளப்புக்குச் சென்றார்கள். அங்கே நீச்சல் குளத்தடியில் ஐஸ் போட்ட லெமனட் பானம் அருந்திக் கொண்டிருந்தார்கள். பரிசாரர்கள் வெள்ளை உடையில் இருந்தார்கள். சிலவேளைகளில் சிலர் இரவில் நீச்சல் குளத்தில் நீந்தினார்கள். சுழி ஓடினார்கள். மேலே வானம் இருண்டிருந்தது. இங்கே, இந்த நாட்டில் வார இறுதி நாட்களான சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் ஷாடியா தன் ஆடைகளையும் தலைமுடியையும் கழுவினாள். தலைமுடியைக் கழுவுவது அவளைச் சோர்வடையச் செய்தது. சூடான இடுக்கியால் தலைமுடியை நிமிர்த்திய பின்னும் ஈரப்பதமான காலநிலை தலைமுடியை மீண்டும் சுருளச் செய்தது. அதனால் நிமிர்த்துவதைக் கைவிட்டு ஒரேயடியாக கொண்டையாகக் கட்டிக் கொள்வாள். முகத்திலிருந்து பின்னால் இழுத்துக் கட்டுவாள். சுருண்ட முடியை ஊசியாலும் வஸ்லின் பூசியும் அமர்த்தி வைத்திருந்தாள். அந்தப் பாணி அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளுடைய நெளிமுடியும் கண்களும் பெரிதாகத் தெரிந்தன. தாழ்வாரத்தின் முடிவில் இருந்த குளியல் அறையில் இருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் இப்படி எழுதி இருந்தது. ‘இந்த முகம் தான் எச்ஐவி நோய் உள்ளவர்களின் முகம்.’ இந்தக் கண்ணாடியைப் பற்றி தன் சகோதரிக்கு எழுதியிருந்தாள், அந்நியமானது போலவும் பரபரப்பானதொன்று போலவும் எழுதியிருந்தாள். இடதுபக்கத்தால் கார் ஓட்டுவது போன்றது அது. ஆனால் தன் அழகை காட்டூன் நகரில் விட்டுவந்துவிட்டதுபோல அந்தக் கண்ணாடி காட்டுகின்றது என்பதை அவள் எழுதவில்லை.

வார இறுதி நாட்களில் தான் செலவுசெய்த ஸ்ரேளிங் பவுண் பணத்தின் தொகையை எழுதிவைப்பாள். அந்தப் பணம் தன்

சொந்த நாட்டில் ஒரு குடும்பத்தையே பராமரிக்கப் போது மானது. இவ்வளவு செலவு செய்தும் தேர்வில் தோல்வி அடைந்து பட்டம் பெறாமல் வெறுமனே போகப் போகிறாள் என்பதைப் பற்றி எண்ணினாள். குற்றவுணர்வு அந்த நகரத் தில் உள்ள குளிரைப் போல அவளை வாட்டியது. அந்தக் குற்றவுணர்வு பல இடங்களில் இருந்து வந்தது. ஒருநாள் காலை பிரார்த்திக்க மறந்துபோனாள். பஸ் நிறுத்திற்குப் போனபின்புதான் பிரார்த்திக்க மறந்து போனது நினைவுக்கு வந்தது. அந்தநாட் காலை அவள் காணும் கொடுங்கனவுகள் போல அவள் மனதில் விரிந்தது. ஆடைகள் அணியாமல் வீதி யில் இறங்கி நடப்பதைப் போன்ற மனநிலையை அடைவாள்.

மாலையில் பாடத்திட்டத்தில் உள்ள பல்பரிமாண அளவீட் டைப் பார்த்துக்கொண்டிருக்கையில் முன் மண்டபத்திலிருந்த அந்தத் தொலை பேசி அழைப்பு வந்தது. அதை எடுக்க ஓடிப் போனாள். ஃப்றீட்டின் மகிழ்ச்சியான வாழ்த்து அழைத்தது. 'ஷாடியா, அம்மாவும் சிறுமிகளும் உன்னுடன் கதைக்க விரும்பு கிறார்கள்.' அவனுடைய அம்மாவின் பிரியமான பேச்சு வந் தது. 'நீ இருக்கும் இடத்தில் கடும் குளிர் என்று சொல்கிறார் கள்...'

ஷாடியாவுக்கும் ஃப்றிட்டுக்கும் நிச்சயதார்த்தம் முடிந்திருந் தது. ஃப்றீட் ஒரு பொதியுடன் வந்திருந்தான். செவின்அப் உரி மைச் சொத்துரிமையும் கடதாசி ஆலையும், அவன் கட்டும் பெரிய வீடும் அவனுக்குச் சொத்துகளாக இருந்தன. அத்து டன் அவனுடைய சகோதரிகளும், கணவனை இழந்த தாயும் அவனுக்கு இருந்தார்கள். ஷாடியா அவர்கள் எல்லாரையும் சேர்த்து மணம் முடிக்கப் போகிறாள். அது அவளுடைய தாயை மகிழ்விக்கும். அவளுடைய தாயின் துர்ப்பாக்கிய நிலைமைக் குப் பின் அவள் மகிழ்ச்சியாய் இருக்க உரிமை உடையவள். அவளுடைய கணவன் இன்னொரு பெண்ணை எடுப்பதற் காக அவளை விட்டுச் சென்றுவிட்டான். அதனால் அவள் ஆறு பெண் பிள்ளைகளை வளர்த்தெடுக்கவேண்டிய நிலைக்கு ஆளாகி இருந்தாள். அவளுடைய தாய்க்காக அனைவரும் பரிதாபப்பட்டார்கள். ஆறு பெண் பிள்ளைகளையும் படிப் பித்து மணம் முடித்துக் கொடுக்கவேண்டும். ஆண்டவன் தாராள மனம் படைத்தவன். ஒவ்வொரு பெண்ணும் மற்றவர்க ளிலும் பார்க்க அழகானவர்கள். அத்துடன் கெட்டிக்காரர் களும். ஒருத்தி பல் வைத்தியர், இன்னொருவர், மருந்தாளர், கட்டடக் கலைஞர். அத்துடன் அவர்கள் நன்னடத்தை உள்ள வர்களாகவும் இருந்தார்கள்.

'நாங்கள் இப்பொழுதுதான் வீட்டைப் பார்த்துவிட்டு வருகி றோம். அது நல்லபடியாக நடந்துவருகிறது. இப்பொழுது தரைகளில் ஓடுகளைப் பதிக்கிறார்கள...' என்று சொல்லிக் கொண்டிருந்தான், ஃப்றீட்.

'நல்லது, நல்லது,' என்றாள் அவள். அவளுடைய குரல் அன்று முழுவதும் எவருடனும் பேசாதிருந்ததால் அவளுக்கே அந்நி யமாக இருந்தது.

'குளியலறைகள் அம்மாவுக்கும், சிறுமிகளுக்கும் எங்களுக் கும் ஒரேமாதிரியான நிறத்தில் இருந்தால் அவற்றின் ஓடுக ளுக்கு விலையில் கழிவு எடுக்கலாம். சிறுமிகள் நீலம் பிடிக் கும் என்று சொல்கிறார்கள்.' அவனுடைய குரல் ஒரு கண்டத் திலிருந்து இன்னொரு கண்டத்திற்கு மைல் கணக்கில் எதி ரொலித்தது.

'நீலநிறம் நல்லது. ஓம், எல்லாவற்றையும் ஒரே நிறத்தில் எடுங்கள்.'

அவன் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறான், ஒரு வீட்டை அல்ல. தரைத் தள அடுக்குமாடியில் தன் தாய்க்கும், சகோதரிகள் மணம் முடிக்கும்வரை அடுக்குமாடி வீடுகளும் கட்டுகிறான். முதலாம் மாடி அவனுக்கும் ஷாடிக்கும். ஷாடியா அவனுக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டபோது அவன் ஒரு பணக்காரனின் மகன். 7அப் உரிமைக்கும் கடதாசி ஆலைக் கும் சொந்தக்காரன். கடதாசி ஆலையில் பெண்களின் மாத விடாய்த் துண்டுகள் செய்வதற்கான ஏகபோக உரிமையை எடுத்திருந்தார்கள். ஃப்றீட்டின் சகோதரிகளுக்கு மாதவிடாய்த் துண்டுளை வாங்கவேண்டிய அவசியமே இருக்கவில்லை. வீட்டில் தாராளமாக பெட்டிக்கணக்கில் இளஞ்சிவப்பு நிறத் துண்டுகள் இருந்தன. உடனடித் தயாரிப்புக்கள். ஃப்றீட்டின் தந்தை எதிர்பாராத வகையில் நிச்சயதார்த்த விருந்து முடிந்து சில நாட்களில் மாரடைப்பால் இறந்துபோனார். அந்த விருந் திற்கு மட்டும் ஹில்ரன் ஹோட்டலில் ஐந்நூறு விருந்தினர்கள் வந்திருந்தார்கள். இப்பொழுது ஷாடியா அந்த பணக்கார னையே மணம் முடிக்கப் போகிறாள். 'நீயொரு அதிர்ஷ்ட சாலிப் பெண்,' என்றாள் அவளுடைய தாய். ஷாடியாதன் கண்களில் சவர்க்காரத்தைத் தேய்த்திருந்தாள். அழுதாள். அப்பொழுது ஃப்றீட் அவனுடைய தந்தை இறந்ததற்காக அவள் அழுகிறாள் என்று நினைத்தான்.

தொலைபேசியில் வகுப்புப் பாடங்களைப் பற்றியோ தன் பதற்றங்களைப் பற்றியோ கதைப்பதற்கு நேரமோ இடமோ கிடைக்கவில்லை. ஃப்றீட்டுக்கு அவளுடைய படிப்பில் ஆர் வம் இருக்கவில்லை. அவன் சொன்னான், 'உன்னை வெளி நாட்டில் கல்விகற்க அனுப்புவதற்கு நான் பரந்த மனப் பான்மை உடையவன். மற்ற ஆண்கள் என்றால் அதைச் செய் திருக்கமாட்டார்கள்...' அவளுடைய தாய் தான் அவள் படிக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தாள். பிரித்தானிய நாட் டில் முதுகலைப்பட்டம் எடுக்கவேண்டும் என்பதிலும் மணம் முடித்த பின் ஒரு தொழில் செய்யவேண்டும் என்றும் தாய் விரும்பினாள். 'அப்படிச் செய்தால் உன் மாமியார் உன்னை மதிப்பாள். அவர்களிடம் பணம் இருக்கிறது. உன்னிடம் ஒரு பட்டம் இருக்கும். என்னைப் போல நீயும் இருக்காதே. நான் உன் அப்பாவை மணம் முடிப்பதற்காக என் படிப்பை நிறுத் தினேன். இப்போ...' பல உரையாடல்கள் அப்படித்தான் கசப் புடன் முடிந்தன. 'என்னைப் போல எவரும் துன்பப்படக் கூடாது.' அப்போது ஷாடியா கவலையால் தலையைக் குனிந் துகொள்வாள். இரவில் அவளுடைய தாயார் நித்திரையில் தேம்பி அழுவாள். அது அவளையும் தங்கைகளையும் துயி லில் இருந்து எழுப்பிவிடும்.

நீண்டதூர தொலைபேசி அழைப்புகளில் அவளுடைய கவலை களைப் பகிர்ந்துகொள்வதற்கு இடமிருக்கவில்லை. ஸ்கொத் லாந்தின் காலைநிலை பற்றிக் கதைக்கவும் நேரமிருக்க வில்லை. ஃப்றீட்டின் உருவத்தைப் பற்றி நினைத்துப் பார்த் தாள். தாராளமாக வியர்த்துக் கொட்டும் உடம்பு, வயிறு சட்டைப் பொத்தான்களை தெறிக்கவைக்கும் அளவுக்குத் தள்ளிக் கொண்டிருக்கும். அடிக்கடி அவனுடைய உடம்பைப் குறைக்கும்படி அவள் நச்சரித்திருக்கிறாள். அது நடைபெற வில்லை. அவனுடைய தாயின் உணவு மிகவும் ருசியானது. அவனுடைய சகோதரிகளும் அதிக எடை போட்டிருந்தார்கள். நீண்டதூர தொலைபேசி அழைப்பில் காட்டுன் நகரத்தில்

நிகழும் வம்புகளை வானொலி நாடகங்களைக் கேட்பது போலக் கேட்டுக் கொண்டிருப்பாள்.

திங்கட்கிழமை எதுவும் பேசாமல் பிறையன் இரண்டு கோப்புறைகளை மேசையின் குறுக்காக அவளிடம் தள்ளிவிட்டான், அவளிடம் கிட்ட வரவோ அவளோடு கதைக்கவோ விரும்பாதவன் போல. 'நான் அவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டேன், நீ வந்து பண்பாகத் தராவிட்டால்,' என்று சொல்லவேண்டும் என்று விரும்பினாள். ஆனால் அதனால் புண்பட்டும் 'மிக்க நன்றி' என்றாள். அவளிடம் பண்பாடு இருந்தது. அவள் பண்பாட்டுடன் வளர்க்கப்பட்டிருந்தாள்.

அறையில், அவள் தன் மேசையில் இருந்து எங்குமே பார்த்திராத அவனுடைய தெளிவான கையெழுத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பக்கம் முழுவதும் அடர்த்தியற்று தெளிவாகக் குறிப்புக்கள் எழுதப்பட்டிருந்தன. அவை தெளிவாகவும் வட்ட வட்டமாகவும் எழுதப்பட்டிருந்தன. குழந்தைகளின் குறிப்புப்போல நேர்த்தியான குறிப்புகள். அவள் அழுதாள். எந்தக் காரணமும் இல்லாமல் அழுதாள். கண்ணீர்த் துளிகள் விழுந்து ஒரு பக்கத்தை நனைத்து மையைக் கறைபடித்தின. அத்துடன் ஒரு வாய்ப்பாட்டை வாசிக்க முடியாமல் அதை மங்கலுறச் செய்தது. அதை ஒரு ரிஸ்ஸியு தாளால் ஒற்றி எடுத்தாள். தாள் சிராய்த்து தாளை ஒளிபுகக் கூடியதாகியது. குறைபடித்தியதற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமா? அவள் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தபொழுது தண்ணீர் தெறித்துவிட்டது என்று சொல்வதா? அல்லது மழைபெய்து தாள் நனைந்துவிட்டது என்று சொல்வதா? அல்லது ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பதா? அவன் அதைக் கவனிக்கமாட்டான் என்று நினைத்தாள். அதற்காக அவள் தன்னையே கடிந்து கொண்டாள். ஒவ்வொருநாளும் ஒரே சட்டையை அணிவதைப் பற்றிக் கவலை கொள்ளாதவன். அவனைப் பற்றி ஏன் அவள் அதிகம் கவலைப்படுகிறாள். அவன் முதிர்ச்சியற்றவன். தனக்குள்ளே ஆழ்ந்து இருக்கும் ஓர் ஆளுமை. அவன் ஒருவேளை சிறியதொரு நகரத்திலிருந்து வந்திருக்கலாம். அவன் பெற்றோர்கள் ஏழைகளாக இருக்கலாம். தாழ்ந்த வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம். காட்டுனில் அப்படியானவர்களுடன் அவள் பழகியதில்லை. அவளுடைய தாய் மேல்தட்டினருடன் தான் அவள் பழகவேண்டும் என்று விரும்பினாள். அப்படி இல்லாவிட்டால் எப்படி அவளும் அவளுடைய சகோதரிகளும் நல்ல இடத்தில் மணம் முடிப்பார்கள்? அந்தக் குறிப்புகளைப் படிக்கவேண்டும். அவனுடைய கையெழுத்தைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிடவேண்டும். அவனுடைய கையெழுத்துக்கும் அவளுக்கும் எந்தவித தொடர்புமே இல்லை என்றெண்ணினாள்.

புரியாதது எது என்பதைப் புரிந்துகொண்டபிறகு அது மூடுபனியை நீக்கிவிடுதல்தான். கவனக்குவிதலுக்கு உள்ளான காட்சிகள் வந்தன, காணாமல் இருந்த துண்டுகள் அதனதன் இடங்களுக்குள் விழுந்தன. அதனால் எல்லாமே சரியாகிவிடுகின்றன. துண்டுதுண்டாகக் கிடந்தவை ஒன்றாகிவிட்டன. தெளிவற்ற ஒலி தெளிவாகிவிட்டது. கட்டியெழுப்ப ஒரு அடித்தளம் கிடைத்துவிட்டது. அவனுடைய குறிப்புகள்தான் அவளுக்குத் தேவையான அறிவுத்தளம். அது அவளிடம் இருந்த இடைவெளியை நிரப்பிவிட்டது. அவற்றை வாசித்து புரிந்து கொண்டாள். புரிந்துகொள்ள முடியாமல் போனவற்றை மட்டும் படிக்காமல் எல்லாவற்றையும் கவனமாக ஆழ்ந்து படித்தாள். உள்வாங்கியும் கொண்டாள். நன்றாகப் புரிந்துகொண்டாள். ஆழமாக அவள் மனதில் அது பதிந்துவிட்டது. இரவின் பின்பகுதி வரை படித்தாள். நேரத்தையும் இடத்தையும் மறந்தாள். இறுதியில் துயின்றபோது அவள் எப்சிலோனாகவும் கம்மாவாகவும் (கிரேக்க எழுத்துக் குறியீடுகள்) அவள் கனவில் வந்தன. அவளும் ஒரு மாறி ஆகினாள். தனித்தனி வெளி ஊடாக ஐ தன்மையில் இருந்து ஜே தன்மைக்கு சென்றாள். (அறிவியல் குறியீடுகளால் தன் நிலையை வர்ணிக்கிறாள்.)

அவனுடன் பேசுவதற்கு அவள் இயல்பானவளாகிவிட்டாள். அவனுடைய கையெழுத்தை வாசிப்பதற்கு நாட்கணக்காக மணிக் கணக்காக தன் நேரத்தைச் செலவிட்டதால் அவளுக்கு அவனைப் பற்றி ஒருவகையில் தெரியும் என்பது போலாகிவிட்டது. அவன் தன் கோவைகளை மேசையில் குறுக்காகத் தள்ளிவிட்டபோது அவள் உணர்ந்த அவமதிப்பையும் பல வேளைகளில் வணக்கம் சொல்லாததையும் அவள் மறந்துவிட்டாள்.

கணினி அறையில் புள்ளியியல் தொகுப்புக்கள் வகுப்பு முடிவடைந்தபோது அவனிடம் சென்று, 'குறிப்புக்கள் தந்ததற்கு நன்றி. அவை உண்மையில் உதவியானவை. அதனால் இனி நான் வகுப்பில் தோல்வி அடையமாட்டேன் என்று நினைக்கிறேன். தேர்ச்சி அடைவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது,' என்றாள். நித்திரை இன்றிப் படித்ததால் அவளுடைய கண்கள் உலர்ந்துபோயிருந்தன. அவள் களைத்துப் போயும் நன்றியுடையவளாகவும் இருந்தாள்.

அவன் தலையை ஆட்டி ஏற்றுக் கொண்டான். இருவரும் சிறிது நேரம் பேசினார்கள். வரிசைக் கோட்பாடான பொய்சோன் பரவலைப் பற்றிப் பேசினார்கள். அவனுடைய மனதில் எல்லாம் தெளிவாகவே பதிந்து இருந்தன. அவனுடைய மூளை கண்ணாடித் தகடுபோல தெளிவாக இருந்தது. அதில் எண்ணக்கருக்கள் எல்லாம் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் எழுதப்பட்டிருந்தன. அவளுடன் எளிதாகவும் இயல்பாகவும் கதைத்தான். இருந்தும் கல்களை ஒரு காலில் இருந்து மற்றக் காலுக்கு மாறிமாறி வைத்துக் கொண்டிருந்தான். அவள் கண்களைப் பார்ப்பதையும் தவிர்த்தான்.

'ஒரு கோப்பி குடிக்கப் போவோமா?' என்று கடைசியில் கேட்டான்.

அவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாள். அவன் உயரமானவன். நீலநிறக் கண்கள். அவர்களுடன் அவளுக்குப் பேசி பழக்கமில்லை. பின் ஒரு தவறைச் செய்தாள். கடந்த இரவு நித்திரை கொள்வதில் தாமதமாகியதால் அந்த தவறை அவள் செய்திருக்கலாம். அந்தத் தவறுக்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். அந்தத் தவறு ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு இட்டுச் சென்றது.

'உன்னுடைய காதணிகளை எனக்குப் பிடிக்கவில்லை,' என்றாள்.

அவனுடைய கண்களில் தெரிந்த கவனம் அங்கும் இங்கும் அலையவில்லை. அவன் தன் கையை காதுகள் வரை தூக்கி காதணிகளைத் தள்ளிவிட்டான். அவனுடைய காதுமடல் காதணிகள் இல்லாமல் சிவந்து வடுக்கள் உள்ளதாகத் தெரிந்தது. அவள் பயத்தினால் பெரிதாகச் சிரித்தாள். அவன் முறுவலிக்காததால் எதுவுமே சொல்லாததால் பயந்துபோய்ச் சிரித்தாள். தன் வாயைக் கையால் பொத்தினாள். தன் நெற்றியையும் கண்களையும் துடைத்தாள். ஒரு தவறைச் செய்துவிட்டாள். அதைத் திருத்துவதற்கு காலம் பிந்திவிட்டது. மேலும் ஒரு தவறைச் செய்தாள். இப்பொழுது கவனயீனமாக. பொறுப்பில்லாமல். 'உன்னுடைய நீண்ட தலைமுடியையும் எனக்குப்

பிடிக்கவில்லை.'
அவன் திரும்பி நடந்து சென்றுவிட்டான்.

•

அடுத்த நாட்காலை பலமாறிகள் பகுப்பாய்வு வகுப்பு நடந்தது. அவள் வகுப்புக்கு பிந்தி வந்தாள். ஓடியும் மழையில் நனைந்தும் வந்ததால் தலைமுடி கலைந்திருந்தது. பேராசிரியரின் பெயர் அவளுக்கு உறுதியாகத் தெரியவில்லை. மக் என்ற முன்னொட்டுடன் தொடங்கும் மூன்றுபேர்கள் இருந்தார்கள். அவர் முறுவலித்தார். எந்த மாற்றத்தையும் முகத்தில் காட்டவில்லை. எல்லா விரிவுரையாளர்களும் நிதானமானவர்களாவும் பண்பானவர்களாகவும் இருந்தார்கள். கம்பளி ஜக்கெற்றும் பளபளப்பான சப்பாத்துக்களும் அணிந்தவர்களாக இருந்தார்கள். அவள் சிலவேளை வியந்துபோய் சிந்தித்தாள். சிலவேளை பொருத்தமற்ற பிறையன் கல்விகற்று பேராசிரியராக வந்தால் என்ன மாதிரி இருப்பான் என்று வியந்தாள். அது அவளுடைய பிரச்சினை இல்லை.

மற்ற மாணவர்கள் பலரைப் போல வகுப்பில் ஒரே இருக்கையில்தான் அவள் இருந்தாள். பிறையன் ஒரு வரிசை முன்னால் இருந்தான். அதனால் தான் அவனுடைய தலைமயிரை எப்பொழுதும் அவளால் பார்க்க முடிந்தது. இன்று அவனுக்கு குதிரை வால் முடி இருக்கவில்லை. அதை வெட்டி விட்டிருந்தான்! அவனிடம் இருந்தது அவனுடைய கழுத்தும் சாம்பலும் வெள்ளையும் கலந்த கோடுகள் போட்ட சட்டை மட்டுந்தான்.

அவள் குறிப்புகளை எடுக்கவேண்டும். மாறுபட்ட பகுப்பாய்வில் மாறிகளின் நேரியல் சேர்க்கைகள் குழுக்களுக்கு ஒதுக்க அடிப்படையாக உள்ளன.

அவள் அடுக்குகள் மேல் அடுக்குகளாக உருவாக்கப்பட்டிருக்கிறாள். உள்ளே எங்கேயோ ஆழத்தில் வீணான பட்டையின் கீழ் உள்ள ஒரு அடுக்கில் சுவையின் சாரத்துடன் அவள் பிரகாசித்துக் கொண்டிருப்பாள். இன்னொரு அடுக்கில் அடக்கமாகவும் இதுதான் எனக்குக் கிடைத்தது என்றும் இருப்பாள். அவன் எனக்காக தலைமுடியை வெட்டி இருக்கிறான் என்று நினைத்தாள். அதற்கு அடுத்தபடியாக அவளிடம் வேறு அடுக்குகளும் இருக்கின்றன. அவை தெளிவான, மேல் மட்டத்தில் இருந்தன. பெரிதாகச் சிரித்தாள். ஒரு சிநேகிதியைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். என்ன செய்தாள் தெரியுமா? அதை நீங்கள் நம்பமாட்டீர்கள்...

எடையுள்ள மாறிகளின் சராசரியைக் கண்டுபிடியுங்கள்... எடைகள் குழுக்களுக்கிடையே சிறந்த பிரிப்புக்கு மதிப்பிடும் வகையில் மதிப்பிடப்பட வேண்டும்.

வகுப்பின் பின் அவளிடம் வந்து தீவிரமாகச் சிரிக்காமல் சொன்னான். 'நான் என் தலைமுடியை வெட்டிவிட்டேன்.'

அவளின் ஒருபகுதி சிரித்து சத்தம் போட்டுப் பாடியது. 'மடப் பொடியனே, மடப் பொடியனே. அது எனக்குத் தெரிகிறது. அதை என்னால் பார்க்க முடியாதா, என்ன?'

'இது நல்லாக இருக்கிறது,' என்றாள். அவள் மீண்டும் தவறாகச் சொல்லிவிட்டாள். அவளுடைய முகம் சிவந்துபோய் விட்டது. அவனுடைய எதிர்வினை என்னவென்று தெரியாமல் இருக்கும் என்பதற்காக தூரப் பார்த்தாள். அது அவனுக்கு நல்லாகத்தானே இருக்கிறது. இப்பொழுது அவன் பண்பார்ந்தவனாக இருக்கிறான்.

•

அவர்கள் இருவரும் கைகளில் கோப்பிக் குவளையைப் பிடித்துக் கொண்டு இருப்பதற்காக மேசை ஒன்றைத் தேடினார்கள். அப்போது அவள் பிறையனுக்குச் சொல்லி இருக்க வேண்டும், 'நாங்கள் போய் அசாவாவுடனும் மற்றவர்களுடனும் இருப்போம்,' என்று. தவறுகள் மேல் தவறுகள் விடுகிறாள். சிற்றுண்டிச்சாலையில் மறுபக்கத்தில் துருக்கிய பெண் அவர்கள் இருவரையும் ஒன்றாகக் கண்டு தன் நேர்த்தியான புருவங்களை உயர்த்தினாள். பதிர் ஷாடியாவின் கண்களைச் சந்தித்த பின் கண்களை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள். ஷாடியா பிறையனைப் பார்த்தாள். அவன் வித்தியாசமாக இருந்தான். குதிரைக் கொண்டை இல்லை, காதணிகள் இல்லை. எலுமிச்சை சாறை அவன் முகத்தில் இருந்த புள்ளிகளில் தடவி இருந்தால்... இன்னும் மாறி வேறுமாதிரி இருந்திருப்பான். அது அவளுடைய வேலை இல்லை. பத்ரினுடைய யன்னல் கண்ணாடியை உடைத்தவர்கள் பிறையன் போன்ற தோற்றமுள்ளவர்களாக இருக்கலாம். கடுமையான கண்களுடன் மூக்குக் கண்ணாடி இல்லாமல்... அவனை அவள் தள்ளிவிடவேண்டும். அவளை அவன் வெறுக்கச் செய்யவேண்டும்.

அவள் எந்த இடத்திலிருந்து வருகிறாள் என்று கேட்டான். அவள் அதைச் சொன்னபோது, 'அது எங்கே இருக்கிறது?' என்று கேட்டான்.

'ஆபிரிக்கா,' என்றாள் கேலியாக. 'அது எங்கே இருக்கிறது என்று தெரியுமா?'

அவனுடைய மூக்கும் கன்னங்களும் கண்ணாடியின் கீழ் சிவந்து போயின. நல்லது, நல்லது என்று நினைத்தாள். இப்போது அவளை அமைதியாக இருக்க அவன் விட்டுவிடுவான் என்று நினைத்தாள்.

'சூடான் ஆபிரிக்காவில் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் அது ஆபிரிக்காவில் சரியாக எங்கே இருக்கிறது?' என்றான்.

'வடகிழக்கில், எகிப்துக்குக் கீழே. நீ எங்கே இருந்து வருகிறாய்?'

'பீற்றர்ஹெட். இங்கிருந்து வடக்கே. கடற்புறம்.'

அபர்டீனுக்கு வடக்கே எதுவும் இருக்கிறது என்று நம்புவது கஷ்டம். அவர்கள் உலகத்தின் மிகமிக வடக்கு மூலையில் இருப்பதாக அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். கடற்புறம் என்பது சூரியக்குளிப்பும் மணல் நிறைந்த கடற்கரையும் என்பதாகவே அவள் கற்பனை செய்துகொண்டிருந்தாள். இப்பொழுது அப்படியல்ல என்பது அவளுக்குத் தெரிந்தது. இருண்ட வானமும் பழுப்பு நிறத்தில், கோபத்தில் எரிந்துவிழும் மக்களும் உள்ள இடமாக கரும்கல் பாறைகளில் நடுங்கிக் கொண்டிருப்பவர்களாக அவர்கள் இருக்கலாம்.

'உன்னுடைய தந்தை பீற்றர்ஹெட்டில் வேலை செய்கிறாரா?'

'ஓம்,'

அவள் பிபிசி உலக சேவையில் சரியான ஆங்கில உச்சரிப்பையும் மரபார்ந்த ஆங்கிலத்தையுமே கேட்டு வளர்ந்தவள். பிரித்தானியாவுக்கு வரவேண்டும் என்ற விருப்பம் இருந்தபடியால், ஆங்கிலம் பேசுபவர்கள் யேஸ் என்றுதான் சொல்வார்

கள். ஐ என்று சொல்லமாட்டார்கள்.

'உன்னுடைய அப்பா என்ன செய்கிறார் ?'

அவன் ஆச்சரியப்பட்டதுபோலத் தோன்றினான். 'என் அப்பா தச்சுவேலை செய்கிறார். மரங்களை இணைப்பவர்.'

ஃப்றீட் வீட்டில் வேலை செய்வதற்காக அப்படியானவர்களை கூலிக்குப் பிடிப்பான். அப்படியானவர்களை அவன் அப்படிச் செய், இப்படிச் செய் என்று சொல்லுவான்.

'உன்னுடைய அம்மா ?'

ஒருகணம் தாமதித்தான். கோப்பியில் சீனியை பிளாஸ்ரிக் கரண்டியால் கலக்கினான். பின் 'அவள் சாலையில் கடக்கும் காவலராக வேலை செய்கிறார்.'

ஷாடியா நக்கலான குறும் சிரிப்புடன் கோப்பிக் குவளையின் மேல் குனிந்து ஒருதரம் கோப்பியை உறிஞ்சினாள்.

'என் அப்பா ஒரு மருத்துவர், நிபுணர்,' என்றாள் பெருமையுடன். அவளுடைய தந்தை ஒரு மகப்பேறு மருத்துவர். இப்பொழுது அவருடைய மனைவியாக இருப்பவர் ஒருகாலத்தில் அவருடைய நோயாளியாக இருந்தவர். முன்பு ஷாடியாவின் சிநேகிதிகள் அவளுடைய தந்தையின் வேலையைப் பற்றி அபத்தமான நகைச்சுவைகளைச் சொல்லுவார்கள். அவளும் சிரிப்பாள். இப்பொழுது அதையோசிக்கையில் அவை அசிங்கமானவையாகத் தெரிகின்றன.

'என்னுடைய அம்மா ஒரு பெரியகுடும்பத்திலிருந்து வருகிறார். தேசத்தை ஆளும் குடும்பம். பிரித்தானியர்கள் எங்களை காலனியாக்காமல் இருந்திருந்தால் என்னுடைய அம்மா இன்று ஒரு இளவரசியாக இருந்திருப்பார்,' என்றாள் சற்று மிகைப் படுத்தி.

'ஓம், அதுதான் நீயும் ஒரு இளவரசி போல நடக்கிறாய்,' என்றான் அவன்.

எதையும் எளிதாக நம்பும் முட்டாள்த்தனமான சிறுவன்! கையால் நெற்றியைத் துடைத்துவிட்டுச் சொன்னாள். 'நான் போலித் தற்பெருமையும் இறுமாப்பும் கொண்டவள் என்றா நினைக்கிறாய் ?'

'இல்லை. அப்படி நான் நினைத்துச் சொல்லவில்லை...' அவன் கிழித்துக் கொண்டிருந்த சீனிப்பை அவன் கையிலிருந்து நழுவ அதினுள்ளிருந்த சீனித் துகள்கள் மேசையின் மேல் தெறித்தன. 'ஆ, மன்னிக்கவும்...' அவன் விழுந்த சீனியை அள்ள முயன்றபோது கோப்பி கிண்ணத்தை தட்டிவிட்டான். அதிலிருந்து கொஞ்சக் கோப்பி மேசையில் சிந்தியது.

அவள் தன் கைப்பைக்குள் இருந்து ஒரு ரிசுவை எடுத்து கொட்டப்பட்டிருந்த கோப்பியைத் துடைத்து எடுத்தாள். ஈர ரிசுவால் சீனித் துகள்களை ஒற்றி எடுப்பது எளிதாக இருந்தது.

'நன்றி,' என்று முணுமுணுத்தான். பின் இருவரும் சில நிமிசங்கள் அமைதியாக இருந்தார்கள். சிற்றுண்டிச்சாலை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இரைச்சலும், ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொள்ளும் சத்தமும், தட்டங்களின் சட்டிகளின் உரசல் சத்தமும் கேட்டன. காட்டூனில் ஃப்றீட்டுடன் தனியாக இருப்பதை அவள் தவிர்த்துவந்திருக்கிறாள். மற்றவர்கள் இருக்கும்போதுதான் அவர்கள் இருவரும் இருந்துள்ளனர். அதாவது, அவனுடைய குடும்பங்களும் அவர்களுடைய பல நண்பர்களும் இருக்கும்போது அவர்களும் இருந்துள்ளனர். அவர்கள் இருவரும் தனியாக இருந்தால் எப்படியாவது அவளுடைய தாயையோ சகோதரியையோ உடன் இருக்கச் செய்திருக்கிறாள். அவர்கள் பேசுவதை மற்றவர்கள் கேட்கும்படி பேசியிருக்கிறார்கள். அவர்கள் இருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்தே அவள் அவனுடன் பேசியிருக்கிறாள்.

பிறையன் பேசிக் கொண்டிருந்தான். றிவர் டீ நதியில் அவன் படகு வலிப்பதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். வார இறுதிகளில் அவன் படகு வலிக்கச் செல்லுவான். அவன் ஒரு படகு வலிக்கும் கிளப்பில் அங்கத்தவனாகவும் இருக்கிறான்.

மற்றவர்களை மகிழ்வடையச் செய்யும் கலையில் ஷாடியா பயிற்சி எடுத்திருக்கிறாள். மற்றவர்களை மகிழ்விப்பது அத்தனை சிரமமல்ல. மற்றவர்கள் சொல்வதுடன் உடன்படுங்கள். நீங்கள் மட்டும் உரையாடலில் ஆதிக்கம் செலுத்தாதீர்கள். உண்மை முழுவதையும் சொல்லாதீர்கள். மற்றவர்களுக்கு ஏற்றதைப் பேசுங்கள். ஆனால் இப்பொழுது அவனுடன் இந்த விதிகள் எல்லாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டிய தேவை அவளுக்கு இருக்கவில்லை.

அவள் சொன்னாள். 'நைல் நதி டீ நதியிலும் பார்க்க சிறந்தது. உங்களுடைய டீ நதியை நான் பார்த்திருக்கிறேன். அது நைல் நதியுடன் ஒப்பிட்டால் ஒன்றுமே இல்லை. அது நீரோடை போலவே இருக்கிறது. நைல் நதியில் இரண்டு இருக்கின்றன. நீல நைலும் வெள்ளை நதியும். அப்பெயர்கள் அவற்றின் நிறத்தினால் வந்தன. அவை தெற்கில் இருந்து வருகின்றன. இரண்டு வெவ்வேறான இடங்களில் இருந்து. அவை பல மைல்கள் பயணம் பண்ணி பல நாடுகளைக் கடந்து வருகின்றன. அவை ஒன்றாகச் சந்திக்கும் என்று தெரியாமல் வந்து சேர்கின்றன. அவை தனித்தனியாக ஓடுவதில் களைப்படைந்துவிட்டன என்று நினைக்கிறேன். காட்டூனில் ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தின் கீழ் அவை சந்திக்கின்றன. பாலத்தில் நின்று கீழேபார்த்தால் இரண்டு தண்ணீரும் கலப்பதைப் பார்க்கலாம்.

'உனக்கு வீட்டைவிட்டு வந்த ஏக்கம் வருவதில்லையா ?' என்று கேட்டான். கடலில் கலப்பதற்காக ஓடிக் கொண்டிருக்கும் நதியின் கதையைச் சொல்வதில் அவள் இப்போது களைத்துப் போனாள். இப்படி முன்னெப்பொழுதும் அவள் கதைத்தில்லை. எல்லாமே ஆடம்பர வார்த்தைகள். அப்போதுதான் அவன் அப்படிக் கேட்டான்.

'நான் தவறவிடவேண்டியவற்றை தவறவிடவில்லை. அவற்றுக்குப் பதிலாக தவறவிடமாட்டேன் என்பவற்றை தவறவிட்டிருக்கிறேன். காலையில் பள்ளிவாசலில் இருந்து முஸ்லிம்களின் அழைப்பான அசானை நான் தவறவிட்டிருக்கிறேன். உனக்கு அதைப்பற்றித் தெரியுமோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதைநான் தவறவிடுகிறேன். வைகறைப் பொழுதில் அந்த அழைப்புத் தூக்கத்தில் இருந்து என்னை எழுப்பி விடும். 'பிரார்த்தனை நித்திரையிலும் பார்க்கச் சிறந்தது,' என்று அது சொல்வது எனக்குக் கேட்கும். ஆனால் நான் நித்திரைக்குப் போய் விடுவேன். பிரார்த்தனை செய்ய நான் ஒருபோதும்

எழும்பியதே இல்லை.' அவள் மேசையின் மேல் இருந்ததன் கைகளைப் பார்த்தாள். அவளின் ஒப்புதல் வாக்கு மூலத்திற்கு அவனிடமிருந்து எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை. ஒரு சிறிய முறுவலிப்பு மட்டுந்தான். அத்துடன் அவன் கண்களில் ஒருவித வியப்பும் தென்பட்டது.

'நான் இஸ்லாத்தைப் பள்ளியில் படித்திருக்கிறேன். நான் மெக்காவுக்கும் ஒருமுறை பயணம் செய்திருக்கிறேன்,' என்றான். அவன் தன் உள்ளங்கைகளைத் திறந்து மேசையில் வைத்தான்.

'என்ன ?'

'ஒரு புத்தகத்தில்.'

'ஓ.'

கோப்பி குடித்து முடிந்துவிட்டது. இப்போது அவர்கள் போக வேண்டும். அடுத்த விரிவுரைக்கு முன்பு அவள் நூலகத்திற்குச் சென்று முந்தின தேர்வுத்தாள்களை ஒளிநகல் எடுக்க வேண்டும். அசாஃபா பலபயனுள்ள ஆலோசனைகளைச் சொல்லியிருந்தான். அவற்றை எங்கே காணலாம் என்பதையும் காட்டியிருந்தான்.

'உன்னுடைய மதம் என்ன ?' என்று அவனைக் கேட்டாள்.

'எனக்குத் தெரியாது. ஒன்றுமில்லை என்றுதான் நினைக்கிறேன்.'

'அது பயங்கரமானது! அது உண்மையில் பயங்கரமானது!' அவளுடைய குரல் மிகவும் பெரிதாகக் கேட்டது. அதில் அக்கறையும் தெரிந்தது.

அவனுடைய முகம் திரும்பவும் சிவந்தது. தான் வைத்திருந்த கரண்டியால் வெற்றுக் குவளையில் தட்டினான்.

எல்லாப் பணிவையும் விட்டுவிட்டு அவளை வெறுக்கச் செய். பதிர் அவளுடைய யன்னலை உடைப்பதற்கு முன்பு அப்படிச் சொல்லியிருந்தாள். மேற்கு நாட்டில் உள்ளவர்கள் இஸ்லாத்தை வெறுக்கிறார்கள் என்றும் சொல்லியிருந்தாள். எழுந்து போவதற்காக எழுந்துநின்றபோது அவள் சாதாரணமாகச் சொன்னாள். 'அப்படியானால் நீ ஏன் ஒரு முஸ்லிமாக மாறக் கூடாது ?'

அவன் தோள்களைக் குலுக்கினான். 'நான் மெக்காவிற்குப் பயணம் செய்வதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எனக்கு அந்தப் புத்தகத்தின் மீதுதான் ஆர்வம் இருக்கிறது.'

அவளுடைய கண்கள் கண்ணீரால் நிரம்பின. அவன் எழுந்து நின்றபோது அவனுடைய முகம் தெளிவற்றுத் தெரிந்தது. மேற்கில் இஸ்லாத்தை வெறுக்கிறார்கள். இவன்... 'கோப்பி வாங்கித் தந்ததிற்கு நன்றி,' என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள். ஆனால் அவன் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

'ஷாடியா, ஷாடியா,' என்று அவள் பெயரை பிழையாக உச்சரித்து அழைத்தான். இரண்டு அசைகளுக்குப் பதிலாக மூன்று அசைகள் போட்டு அழைத்தான். 'ஆபிரிக்காவைப் பற்றி இங்கே ஓர் அருங்காட்சியகம் இருக்கிறது. நான் அதற்கு முன்பு ஒருநாளும் போனதில்லை. நாளைக்கு நானும் நீயும் போவோமா ?'

குற்றம் செய்தவளுக்கு நித்திரை வருவதில்லை. நிம்மதியும் இல்லை. அவள் வரமாட்டேன் என்று சொல்லியிருக்கவேண்டும். என்னால் போக முடியாது. படிக்கவேண்டிய வகுப்புப் பாடங்கள் அதிகம் இருக்கிறது. குற்றம் செய்தவளுக்கு நித்திரை வரவில்லை. இன்னொரு கண்டத்திலிருந்து பழைய நினைவுகள் வந்துகொண்டிருந்தன. தந்தையின் புதிய மனைவி. அவள் தாயிலும் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறாள். கவலைகளும் குறைவு. ஷாடியா தந்தையைப் பார்க்கப் போனால் தந்தையின் புதிய மனைவி கிளாஸ் குவளையில் பழச்சாறு கொடுப்பாள். அதில் குளிரான தோடம்பழச் சாறும், கொய்யாப் பழச் சாறும் கலந்திருக்கும். அவை வெயிலுக்கு இதமாகவும் இருக்கும். ஷாடியாவின் தந்தை அவளின் தாயை விவாகரத்துச் செய்ய விரும்பவில்லை. அவர்களை விட்டுப் போகவும் விரும்பவில்லை. அவருக்கு இரண்டு மனைவிகள் தேவை. விவாகரத்தல்ல. ஆனால் அவளுடைய தாய் பெருமை பிடித்தவள். அவள் செல்வம் தேய்ந்துகொண்டுபோகும் குடும்பத்திலிருந்து வந்தவள். ஆனால் அந்தக் குடும்பத்திற்கு நல்ல 'பெயர்' இருந்தது.

அருங்காட்சியகத்திற்குத் தான் வருவதாகச் சொல்லியிருந்த போதிலும் நாளை அங்கே அவள் போகத் தயாராக இல்லை. தனக்குத் திருமணத்திற்கு நிச்சாயார்த்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று பிறையனுக்கு அவள் போகிறபோக்கில் சாதாரணமாகச் சொல்லியிருக்கவேண்டும். அவளிடமிருந்து அவன் என்னத்தை எதிர்பார்க்கிறான் ? ஐரோப்பியர்களுக்கு வெவ்வேறான விதிகள் இருக்கின்றன. திடீர் திடீரென மாறும் பழக்கவழக்கங்களும் உள்ளன. ஃப்றீட்டுக்கு இது தெரியவந்தால்... அவளுடைய இரகசியமான எண்ணங்கள்... அவளும் தன் தந்தையைப் போன்ற ஒரு துரோகி. தன் தந்தை தந்திரமானவர் என்று தாய் சொல்லியிருக்கிறாள். சில வேளைகளில் ஷாடியாவும் தந்திரமானவள் தான். ஃப்றீட்டுடன் காரில் செல்லும்போது அவள் வேண்டுமென்றே சொல்லுவாள். 'மளிகைக் கடையில் நிற்கவேண்டும். வீட்டுக்குச் சில சாமான்கள் வாங்க வேண்டும்.' மளிகைக் கடையில் அவள் வாங்கிய சாமான்கள் எல்லாவற்றுக்கும் அவன் பணம் கொடுப்பான். 'இல்லை, இல்லை நீ கொடுக்கத் தேவையில்லை, நீ மிகவும் தாராளமாக எங்களுக்குச் செலவு செய்கிறாய், அது சரியில்லை, நீ பணத்தைக் கொடுத்து, என்னை சங்கடப்படுத்துகிறாய்.' ஆனால் அந்தக் காசை மிச்சம் பிடித்து அந்தப் பணத்தில் அவள் தாய்க்கு ஒரு சட்டையும் நகப்பூச்சும், ஒரு சஞ்சிகையும், இறக்குமதி செய்யப்பட்ட அப்பிள்களும் வாங்குவாள்.

●

அவள் தன்னுடைய மேசையைவிட்டு, அறையைப் பூட்டிவிட்டு ஒரு சனிக்கிழமை வெளியே போவது அந்நியமானதாக இருந்தது. அப்போது முன் மண்டபத்தில் உள்ள தொலைபேசி மணி அடித்தது. அது ஃப்றீட்டிடமிருந்து வந்திருந்தது. அவள் இப்பொழுது எங்கே போகிறாள் என்பது அவனுக்குத் தெரிந்தால்... குற்றவுணர்வு அவித்த முட்டை மாதிரி நெஞ்சில் அடைப்பதுபோல அடைத்துவிட்டது. பெரிய விறைத்த முட்டை.

'ஷாடியா, குளியலறைக்கு சில பொருட்களை வாங்கிவா. தண்ணீர் பைப்பும் துவாய்கள் தொங்கும் கம்பிகளும் என்னென்ன தேவை என்ற பட்டியலையும் காசையும் அனுப்புகிறேன்.

'என்னால் முடியாது. என்னால் முடியாது.'

'ஏன் உன்னால் முடியாது என்று சொல்கிறாய்? பெரிய கடைக்குப் போனால் அங்கே எல்லாவற்றையும் வாங்கலாம்...'

என்னால் முடியாது. அந்தப் பொருட்களை எல்லாம் எங்கே வைப்பது, எப்படி அனுப்புவது என்று எனக்குத் தெரியாது.'
மறுபக்கத்தில் தொலைபேசியில் சரசர என்ற உரசல் சத்தம் கேட்டது. யாரோ ஒருவர் குசுகுசுப்பதையும் அவளால் கேட்க முடிந்தது. ஃப்ரீட்டின் கவனம் கொஞ்ச நேரம் சிதறியது. இந்தப் பகல் நேரத்தில் அவன் வேலையில் இருப்பான். கண்ணாடிப் போத்தல்களில் தெளிவாக நுரைத்துப் பொங்குகிற திரவம் நிரம்பிக் கொண்டிருக்கும். 7அப் என்று ஆங்கிலத்திலும் அரபு மொழியிலும் கருமையான பச்சை நிறத்தில் எழுதப்பட்டிருக்கும்.

'இங்கே கிடைக்காத நல்ல பொருட்களை அங்கே உன்னால் வாங்க முடியும். தங்கநிறம் நல்லது. அது மற்ற நிறங்களுடன் பொருந்திவரும்...'

தங்கம், தங்க ஆசனம்!

'தங்கக் கோப்பைகளில் உணவு உண்பவர்கள் நரகத்தில் எரியப் போகிறார்கள். நீ தங்க ஆசனத்தில் அமரப் பார்க்கிறாய்!'

அவன் சிரித்தான். அவன் தன் காரியங்களை தன் வழியில் சாதிப்பவன். எளிதாக அச்சுறுத்தப்படமாட்டான். 'என்னுடன் பகிடியா விடுகிறாய்?'

'இல்லை.'

அமைதியான குரலில் 'தொலைபேசிச் செலவு ஏறிக் கொண்டிருக்கிறது,' என்றான்.
அவளுக்குத் தெரியும். அவளை அவன் போக அனுமதிக்கப் போவதில்லை. அவளால் அந்த விசயத்தை நன்றாகச் சமாளிக்கவும் முடியவில்லை. அந்த நெருக்கடியை அவளால் சமாளிக்க முடியவில்லை. அந்த நைஜீரிய மாணவன் போல.

'ஷாடியா, அது தங்கநிறம் மட்டுந்தான். தங்கம் அல்ல. ஆனால் அழகானவை.'

'அல்லா எங்கள் எல்லாரையும் தண்டிக்கப் போகிறார். இது சரியில்லை.'

'எப்போதிருந்து நீ இப்படியான மதப் பற்றாளினியாக மாறினாய்!'

•

பிறையன் அருங்காட்சியகத்தின் படிகளில் அவளுக்காகக் காத்திருந்தான். விநோதமான சாம்பல் நிற வீதிகள். கார்கள் பின் மதியத்திலும் கூட முகப்பு விளக்குகளைப் போட்டுக் கொண்டு ஓடுகின்றன. அவன் வேறொரு சட்டை அணிந்திருந்தான். கடற்படையினர் அணியும் நீல நிறத்தில் ஜக்கட்டும் அணிந்திருந்தான். அவளைப் பார்க்காமல் அவன் சொன்னான். 'நீ வரமாட்டாய் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.'

அருங்காட்சியகத்திற்குப் போவதற்கு அனுமதிக் கட்டணம் இல்லை. அனுமதிச் சீட்டுக்களைத் கொடுக்கும் ஊழியனும் அங்கே இல்லை. பிறையனும் ஷாடியாவும் மென்மையான நீலநிறத் தரை விரிப்புக்களில் நடந்துகொண்டிருந்தார்கள். ஷாடியாதான் அணிந்திருந்த சப்பாத்துக்களைக் கழற்றி வைத்துவிடலாமா என்று கூட எண்ணினாள். அப்படி மிருதுவாக அவை இருந்தன. அவர்கள் முதலில் பார்த்தது விக்ரோறியன் காலத்து ஒரு மனித உருவத்தை. அந்த உருவம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தது. அவனைச் சுற்றி ஆபிரிக்காவிலிருந்து அவன் எடுத்து வந்த பொருட்கள் இருந்தன. பொருட்கள் நிரம்பிய றங்குப் பெட்டிகளும், கிளாஸ் இழுவறையின் மேல் பரப்பிய பழைய வரைபடமும் இருந்தன. எல்லா வெளிச்சமும் இந்த இழுவறையிலிருந்தும் மற்ற கிளாஸ் பெட்டிகளிலிருந்தும் தான் வந்தன. அந்த வெளிச்சம் மெழுகுப் பூச்சுத் தரையில் மினுமினுத்தது. ஷாடியா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனுடைய மெல்லிய வைக்கோல் பிடி போன்ற உண்மையான தலைமுடி, அவனில் தெரிந்த உறுதியான வெளிப்பாடு, அவன் குந்தியிருந்த நிலை என எல்லாவற்றையும் பார்க்கும்போது ஒருவித அருவருப்பு வந்தது. வெளியே சென்றிருந்த ஒரு கதாநாயகன், சுமைகளுடன் திரும்பிவந்திருந்தான். அவர்களுக்கு தான் கொண்டுவந்திருந்த சரக்குகளைக் காட்டுவதற்காக இங்கே இருக்கிறான்.

பிறையன் எல்லாப் பெட்டிகளிலும் இருந்த அருங்காட்சிப் பொருட்களை மனச்சாட்சிப்படி பார்த்துக் கற்றுக் கொண்டிருந்தான். சுவர்களில் இருந்த சுவரொட்டிகளை வாசித்தான். அவள் அவனை பின் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தபோது அவன் உண்மையில் கல்வியில் ஆர்வமுடையவன் என்பதைக் கண்டுகொண்டாள். அதனால் தான் அவன் தன் இளங்கலை வகுப்பில் மிகத் திறமையாக கல்வி கற்றிருக்கிறான். அவன் ஒவ்வொன்றையும் பார்க்கும்போது அவனுடைய முகத்தில் தோன்றிய வெளிப்பாடுகளைக் கவனித்தாள். அவள் சுவரொட்டிகளில் எழுதியிருந்த தகவல்களை மிகவும் சிரமப்பட்டுத்தான் புரிந்துகொண்டாள். அவளுக்கு தன் கல்வித்திட்டத்திற்கு அப்பாலான எதையும் வாசித்துப் பல காலமாகி இருந்தது. இருந்தும் அவள் சிரமப்பட்டுப் புரிந்துகொள்ளமுயன்றாள். அதிலிருந்த சொற்களை தனக்குள்ளே சொல்லிப் பார்த்தாள். தன் இதழ்களை அசைத்து. '18-ஆம் 19-ஆம் நூற்றாண்டுக் காலங்களில், வடகிழக்கு ஸ்கொத்லாந்து திறமையான மற்றும் அர்ப்பணிப்புள்ள ஆளுமைகளால் சமமற்ற தாக்கத்தை உலக வரைபடத்தில் உண்டாக்கியிருந்தது. பேரரசிற்குச் சேவை செய்ததில் அவர்கள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். சிலவற்றைக் கொடுத்தார்கள்; பலரின் வாழ்க்கையை மாற்றினார்கள், அவர்களும் மாறினார்கள். தங்களுக்குக் கிடைத்த பெறுமதியான பொருட்களுடனும் அனுபவத்துடனும் நாட்டுக்கு அடிக்கடி திரும்பிவந்தார்கள்.'

பெறுமதியான பொருட்களை அங்கே பார்த்தார்கள். பல ஆண்டுகள் கழிந்த பின்னும் அவை அப்படியே பாதுகாக்கப் பட்டிருந்தன. அவளுடைய கண்கள் இடங்களும் காலமும் மாறி இருந்த வெவ்வேறான பொருட்களை மேலோட்டமாகப் பார்த்தன. இரும்பாலும் செம்பாலும் செய்யப்பட்ட சிறிய சிலைகள் இருந்தன. அவளுடைய எவையும் அங்கிருக்கவில்லை. அவள் வீட்டில் இருந்த எவையும் அங்கிருக்கவில்லை. அவள் தவறவிட்ட எவையும் அங்கிருக்கவில்லை. இங்கே ஐரோப்பாவின் பார்வை தெரிந்தது. ஆபிரிக்காவைப் பற்றிய அவர்களின் தேய்வழக்குகள் இருந்தன. விறைத்த, ஒற்றைப்படையான தேய்வழக்குகள்.

அவள் மங்கலான ஒளியையும் அடங்கிய மௌனத்தையும் அங்கே எதிர்பார்க்கவில்லை. ஷாடியாவையும் பிறையனையும் தவிர ஒருகைப் பெட்டியுடன் ஒருத்தனும், குறிப்புகள் எடுத்துக் கொண்டு ஒரு பெண்ணும் மட்டுந்தான் அங்கே நின்றார்கள். வேறெவராவது கண்ணுக்குத் தெரியாமல் இரண்டாம் தளத்தில் நின்றிருக்கலாம். குளிரூட்டியின் சத்தத்தைப் போல மின்சாரமோ மின்விளக்குகளின் சூடோ இரைந்துகொண்டிருந்தது. வெளி உலகைத் துண்டித்த யன்னல் இல்லாத விமானத்தில் இருப்பது போன்ற உணர்வை அது ஷாடியாவுக்குக் கொடுத்தது.

'அவனைப் பார்த்தால் உன்னைப் போல இருக்கிறான், இல்லையா?' என்று அவள் பிறையனுக்குச் சொன்னாள். அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் முதல் ஆண்டில் இறந்த ஒரு இராணுவ வீரனின் உருவப்படத்தின் முன் நின்றுகொண்டிருந்தார்கள். அவனுடைய கண்களின் நிறமும் தலைமுடியின் நிறமும் அப்படி அவளைச் சொல்ல வைத்தன. அதற்கு பிறையன் பதில் அளிக்கவுமில்லை. அதை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. உடன்படவும் இல்லை. அவன் தலைப்புகளை வாசிப்பதில் கவனமாக இருந்தான். அந்த உருவப்படத்தை அவள் திரும்பவும் பார்த்த போதுதான் தவறாகப் புரிந்ததை உணர்ந்துகொண்டாள். அவன் கண்களில் இருந்த வலிமையும் எண்ணப்பாடும் பிறையனிடம் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு வலுவான தன்னம்பிக்கை இருந்தது.

எடின்பேர்க்கில் படித்த புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பவர்களின் வாழ்க்கை வரலாறுகளை வாசித்துப் பார்த்தால் தெரியவருவது என்னவென்றால் அவர்களுக்கு ஆபிரிக்காவுக்கு என்ன எடுத்துச் செல்லவேண்டும் என்று தெரிந்திருந்தது. மருத்துவம், துணிவு, கிறிஸ்தவம், வர்த்தகம், நாகரிகம். என்ன திரும்பக் கொண்டுவர வேண்டும் என்றும் தெரிந்திருந்தது. நீல நதியாலும் சாம்பசி நதியாலும் நீர் வார்க்கப்பட்டு உண்டாக்கப்பட்ட பருத்தி.

அவள் பிறையனுக்குப் பின்னால் நடந்துகொண்டிருந்தாள். அவனுடைய மனவொன்றிப்பையும் ஆர்வத்தையும் உணர்ந்த பின், 'புகைப்படத்தில் நாங்கள் ஒன்றாக இருப்பது அத்தனை அழகாக இருக்காது,' என்று நினைத்தாள்.

பப்பிரஸ் கடதாசிச் சுருள்கள், வெண்கலப் பானைகள் உள்ள ஒரு கண்ணாடிப் பெட்டியின் மேல் தளத்தை தொட்டாள். பின் தன் நெற்றியாலும் மூக்காலும் அந்தக் குளிர்ந்த கிளாசை அழுத்தினாள். அவளால் அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் புக முடிந்தால் அங்கே அவள் நல்லதொரு காட்சிப்பொருளாக ஆகமாட்டாள் என்று நினைத்தாள். அதற்கு அவள் சரியானவள் அல்ல. அவள் மிகவும் நவீனமானவளும் கூட. அத்துடன் தலைக்குள் அதிக எடையுள்ள கணிதமும் நிறைந்திருந்தது.

தரைவிரிப்பும் அதன் நீலப் பச்சை நிறமும் அவளைக் கவர்ந்தன. அவள் அந்த அருங்காட்சியகத்திற்கு வந்தது சூரியவொளியையும் நைல் நதியின் படங்களையும் எதிர்பார்த்துத்தான். அவை அவளுடைய வீடு பற்றிய ஏக்கத்தைக் குறைத்து, ஆறுதலைத் தரும் என்பதற்காகத்தான். ஏதாவது ஒரு செய்தியும் கிடைக்கலாம். செய்திகள் தனக்காக அல்ல. தன்னைப் போன்றவர்களுக்காக அல்ல. மேற்கு ஆபிரிக்காவிலிருந்து ஒரு கடிதம். 1762-இல் எழுதப்பட்டது ஒரு கடிதம் இருந்தது. ஒரு தொழிலாளியிடமிருந்து ஸ்கொத்லாந்திருந்து முதலாளிக்கு எழுதப்பட்டிருந்தது. ஐரோப்பியப் பொருட்களை ஆபிரிக்கர்களுக்கு விற்று வாங்கும் ஒரு தொழிலாளி எழுதியது. சுதேசிகளுக்கு நான் சொல்வதைப் புரிந்துகொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மொழி பெயர்ப்பாளரை வைத்துச் சொன்னாலும் கூட. அவர்கள் ஏதாவது கொண்டுவரவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு என்னைப் பார்த்து அவர்கள் நன்றாகச் சிரித்து, தங்கள் நாட்டை விரும்பும் நல்லதொரு மனிதன் நான் என்று சொல்கிறார்கள்...

நான் என் நாட்டை அதிகம் நேசிக்கிறேன். அவள் இங்கே இருக்கவேண்டியவள் அல்ல. இங்கே அவளுக்கு ஒன்றுமே இல்லை. பள்ளிவாயில் தூபிகளையும், நைல் நதியில் மிதக்கும் படகுகளையும் மனிதர்களையும் பார்க்க வந்திருந்தாள். தன் தந்தையைப் போன்ற மனிதர்களை. அவருடைய மருத்துவமனையிலிருந்த காத்திருப்பு அறையில் கர்ப்பம் தரித்த பெண்களுக்கு மத்தியில், நெஞ்சில் வலியுடன் இருந்தாள். ஏனென்றால் இன்னும் சில நிமிசங்களில் அவரைப் பார்க்கப் போகிறாள். அவருடைய அறை, குளிரூட்டி, புகை பிடிக்கும் சுக்கானின் மணம், வெள்ளைநிற மேல்சட்டை. அவரை அவள் கட்டிப்பிடித்தபோது அவர் வாயில் இருந்து லிஸ்றறீன் மணம் வந்தது. அவருக்கு அவளுடைய வயதோ, என்ன படிக்கிறாள் என்பதோ தெரியாது. காரணம், அவருக்கு ஆறு பெண் பிள்ளைகள். எப்படி எல்லாவற்றையும் நினைவில் வைத்திருப்பது. அவருடைய தடுமாற்றம் அவளுக்கு சுதந்திரத்தை அளித்தது. விளையாட அனுமதி கிடைத்தது. கேலிசெய்ய இடம் கிடைத்தது. அவருடைய மருத்துவமனையை இரகசியமாகவே சென்று பார்த்தாள். தாய்க்குப் பொய் சொல்லிவிட்டு. அவள் தன் தாயைவிட தந்தையையே அதிகம் நேசித்தாள். அவளுடைய தாய் தான் அவளுக்கு சகலதும் செய்தாள். அவள் அறையைச் சுத்தம் செய்தாள். பர்தா என்ற சஞ்சிகையைப் பார்த்து ஆடைகளை தைத்தாள். ஷாடியாவுக்கு இப்போது வயது இருபத்தைந்து. ஆனால் அவள் தாய் தான் அவளுடைய ஆடைகளையும் காற்சட்டைகளையும் மார்புக் கச்சைகளையும் கூட கையால் துவைத்தாள்.

'அவர்கள் ஏன் அங்கே சென்றார்கள். அவர்கள் ஏன் பயணம் செய்தார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது,' என்றான் பிறையன். கடைசியில் அவன் கதைத்தான். அவன் அப்படித் தீவிரமாகக் கதைத்ததை அவள் முன்பு கண்டதில்லை. அவன் தாழ்ந்த குரலில் சொன்னான். 'அவர்களுக்கு இந்த இடத்தைவிட்டுச் செல்லவேண்டும்...'

'பயங்கரமான காலநிலையிலிருந்து தப்ப வேண்டும்...' அவனைக் கேலி செய்தாள். அவனை மட்டம் தட்டவேண்டும். அவளுடைய வரலாற்றை அவமானப்படுத்திய ஏகாபத்தியவாதிகள். ஆனால் அவனுடைய கண்களில் அவர்கள் நாயகர்கள்.

அவன் அவளைப் பார்த்தாள். 'தப்பிச் செல்ல...' அவன் திரும்பவும் சொன்னான்.

'அவர்கள் தங்கள் நன்மைக்காகச் சென்றார்கள். போனதால் நன்மை அடைந்தார்கள்,' என்றாள்.

'நானும் இங்கிருந்து போய்விடவேண்டும்,' என்றான்.

அவன் தன்னுடைய உள்ளங்கைகளை மேசையில் விரித்து வைத்துச் சொன்னதை நினைத்துக் கொண்டாள். 'மெக்கா விற்கு ஒரு பயணம் செய்திருக்கிறேன்.' அவன் குரலில் ஒரு பெருமை இருந்தது.

'நான் படிப்பதற்கு வேறெங்கவது சென்றிருக்க வேண்டும். புதியதொரு இடம். தெற்கில் ஒரு இடம்,' என்றான்.

அவளைப் போல அல்லாமல் அவன் ஒரு சமவெளியில் நின் றுகொண்டிருக்கிறான். ஒரு பிரித்தானிய பல்கலைக்கழத்திலி ருந்து ஒரு கடதாசியில் எம்.எஸ்சி பட்டம் என்று எழுதியதைப் பெறுவதற்காக போராடிக் கொண்டிருக்கிறாள். அவனுக்கோ அந்தக் கல்வி ஒரு தொடர்ச்சிதான்.

'வந்து பார்,' என்று அவன் அவளின் தோள்களைத் தொட் டான். அவளை அப்படித் தொட்டவர்கள் எவரும் இல்லை. அவள் தாயிடம் இருந்து விடைபெற்ற பின் அப்படித் தொட்ட வர்கள் எவரும் இல்லை. இந்தநாட்டில் பல மாதங்கள் இருந் திருக்கிறாள். ஒருவரும் அவளைத் தொட்டதில்லை.

அவள் தன் கையை அவனிடமிருந்து இழுத்தெடுத்த பின் மாடிப் படிகளில் விரைவாக ஏறிச் சென்றாள். அவள் காலடி யில் உலோகப் படிகள் சத்தமிட்டன. அடுத்த மாடிக்கு ஏறி ஓடினாள். அங்கே வரிசையாக துவக்குகள் அவளை நோக்கி திரும்பி இருந்தன. பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த ஸ்கொத்லாந்துப் பேரரசின் சேவையிலிருந்த துவக்குகள் அவை.

வெள்ளி நிறத்தில் இருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது அழுக்குநிறச் சாம்பலாகிவிட்டது. முன்பு தூர தேசத்தில் சூரிய னின் கீழ் அது அழகாக ஒளிர்ந்துகொண்டிருந்திருக்கவேண்டும். அவளை அவர்கள் வெடிவைத்து தகர்த்தெறிந்தால் அவள் எங்கே பறந்துபோய் விழுவாள்? ஒரு யன்னல் வழியாக வெறு மையான வானம் தெரிந்தது. கம்பளி உடைகள் பல அடுக்கு களில் அணிந்திருந்தபோதிலும் அவள் நடுங்கினாள். நரகம் கொழுந்துவிட்டெரிவது மட்டுமல்லாமல் அதன் ஒரு பகுதி உறையும் குளிராகவும் இருக்கிறது. கடினமான ஐசாகவும் உறைபனியாகவும் இருக்கிறது. ஸ்கொத்லாந்தின் குளிர் காலத் தில் உலகத்தில் காணமுடியாத இந்தக் காட்சிகளும் இருக் கின்றன. அவற்றை உங்கள் எலும்புகளில் கூட உணரமுடியும்.

அங்கே ஒரு வாங்கு இருந்தது. அதில் இருந்துகொண்டாள். இந்த மாடியில் வேறு எவரும் இல்லை. அவள் தன்னந்தனி யாக, காட்டு மிருகங்களின் ஓவியங்களுடனும் சுவர்களில் எழுதப்பட்ட சொற்களுடனும் இருந்தாள். ஓர் இராசதந்திரி 1903-இல் எதியோப்பியாவில் வேலை செய்தார். அது அசாஃபா பிறப்பதற்கு முன்பு. சிங்கங்களைப் பார்ப்பதற்காகப் பயணம் செய்வது மிகவும் திருப்திதரக்கூடிய ஒன்று. அது பயனுள்ள தும் கூட. நாங்கள் முகாமுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தோம். ஆச்சி சொன்னது போல இதுவே ஆபிரிக்காவின் நாங்கள் பார்த்தவற்றில் சிறந்தது. உண்மையான ஆபிரிக் காவின் காடு. அங்கே நாங்கள் வேட்டை மிருகங்களையும் சமவெளிகளையும் கண்டோம். அவற்றில் கலைமான்களின் கூட்டங்கள் எங்கும் தெரிந்தன.

'ஷாடியா அழாதே.' அவன் இன்னும் அவளுடைய பெயரை பிழையாகவே உச்சரித்தான். காரணம், அவனுக்கு அதைச் சரியாக எப்படி உச்சரிப்பதென்பதை அவள் சொல்லிக் கொடுக்கவில்லை.

வாங்கில் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். அவன் போட்டிருந்த நீலநிற ஜக்கெற், துவக்குகளையும் கலைமான் களின் படங்களையும் மறைத்தது. அவள் எளிதாகவே அழுது விடக்கூடியவள் என்பதை அவனுக்கு விளங்கப்படுத்த வேண் டும். அவன் அதைப்பற்றி முகத்தில் எச்சரிக்கையைக் காட்ட வேண்டிய அவசியமில்லை. அவன் தன் சங்கடமான குரலில் 'ஏன் அழுகிறாய்?' என்று திரும்பவும் கேட்டான்.

அது அவனுக்குத் தெரியாது. அவனால் அதைப் புரிந்து கொள்ளமுடியாது. அவன் தவறுசெய்கிறான். அதற்கு மாற்று ஒன்றும் இல்லை...

'இந்த அருங்காட்சியகத்தில் எல்லாரும் பொய் சொல்கிறார் கள். அவர்களை நம்பாதே. அவை எல்லாமே பிழை. அங்கே காடுகளும் கலைமான்களும் அல்ல மக்களும் வாழ்கிறார் கள். கணினிகளும் கார்களும் இருக்கின்றன. ஆபிரிக்காவில் 7அப்பும் இருக்கிறது. சிலரிடம் தங்கத்தால் செய்யப்பட்ட நீர்க் குழாய்களும் குளியலறைக்குள் இருக்கின்றன... நான் உன்னு டன் இங்கே இருக்கக் கூடாது. நீ என்னுடன் கதைக்கக் கூடாது...'

'அருங்காட்சியகமும் மாறும், நானும் மாறுவேன்,' என்றான்.

அவனுக்குத் தெரியாது, அதுவொரு செங்குத்தான பாதை என்று. அதைக் கடக்க அவளுக்கு அதற்கான மனவுறுதி இல்லை. அவனால் அதைப் புரிந்து கொள்ளமுடியாது. பல விசயங் கள், ஆண்டுகள், நிலப்பரப்புக்கள், வளைகுடாக்கள் இருக் கின்றன கடப்பதற்கு. அவளுக்கு மனத் தைரியம் இருந்தால் அவற்றை அவனுக்கு விளங்கப்படுத்தி இருப்பாள். களைக் காமல் செய்திருப்பாள். அவனுக்கு இன்னுமொரு மொழி யைக் கற்பித்திருப்பாள். கணிதத்திலுள்ள எப்சிலோனைப் போன்ற, கம்மாவைப் போன்ற வளைந்த எழுத்துகளை கற் பித்திருப்பாள். வலப்பக்க மிருந்து இடப்பக்கம் எழுதி வாசிக் கப்படும் சொற்களை அவனுக்குக் காட்டியிருப்பாள். அவள் அருங்காட்சியகத்தில் தைரியமானவளாக இருந்திருந்தால், உண்மையில் தைரியசாலியாக இருந்திருந்தால் உண்மை யில் அவனை மெக்காவுக்கு அழைத்துச் சென்றிருப்பாள். புத் தகத்தில் மட்டும் காட்டியிருக்கமாட்டாள்.

mahalingam.k@thaiveedu.com

## தாய்வீடு இதழ் இலங்கையில் கிடைக்குமிடங்கள்...

### மட்டக்களப்பில்...

பிரசாத் சொக்கலிங்கம்
ஆரையம்பதி
71 648 6666

வி. மைக்கல் கொலின்
மட்டக்களப்பு
77 433 8878

ஜிப்ரி ஹாசன்
ஒட்டமாவடி
76 973 5350

பாத்திமா புத்தக நிலையம்
ஏறாவூர்
77 080 7787

### அம்பாறையில்...

எம். ஐ. முஹம்மட் சாக்கீர்
சம்மாந்துறை
77 160 7490

நிரோஜன் சதாசிவம்
தம்பிலுவில்
77 785 0825

பேஜஸ் புத்தக நிலையம்
அக்கரைப்பற்று
74 239 7395

### யாழ்ப்பாணத்தில்...

எஸ். சத்தியதேவன்
யாழ்ப்பாணம்
77 729 4287

சஜீலன்
மல்லாகம்
77 669 8386

தானா விஷ்ணு
இமையாணன், வடமராட்சி
74 007 3200

புக் லாப்
சேர். பொன். இராமநாதன் வீதி
(யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு எதிரில்)
யாழ்ப்பாணம்
77 128 5749

எங்கட புத்தகங்கள்
18/2, திருவடி நிழல்
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
77 378 8795

குயின்சி புக் சொப்
271, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
77 226 8486

### கொழும்பில்...

மல்லியப்புசந்தி திலகர்
கொழும்பு
71 120 8061

### மலையகத்தில்...

அருணாசலம் லெட்சுமணன்
நாவலப்பிட்டி
77 165 4372

அருள்கார்க்கி
பண்டாரவளை
77 519 4817

### கிளிநொச்சியில்...

சிந்தனா ஓட்டோ பாட்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
76 459 1459

கிளி மக்கள் அமைப்பு
கிளிநொச்சி
77 134 3832

### அஞ்சலில் பெறுவதற்கு...

பிரசாத் சொக்கலிங்கம்
71 648 6666

எஸ். சத்தியதேவன்
77 729 4287

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

**CSC Credit Solution Centre**
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000

BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.

# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

HOMELIFE GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017

**Vela Subramaniam**
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

**Our passion is to solve your tax problems:**

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

**Shawn Y. Sarvaa, CPA, CGA**
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

**TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM**

| VANCOUVER | TORONTO | CALGARY |
|---|---|---|
| 604 398 7272 | 647 219 3110 | 403 879 7272 |


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
Life100
Are you getting Million Dollar advice

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC. BROKERAGE

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.

Agazon
2468 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Ave, Suite 210, Toronto ON M1P 4S6


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX NORTH REALTY
LATHAN VARATHARAJAH
Broker Owner